# தி/ இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

(தேசிய பாடசாலை)

திருக்கோணமலை




# 125 வது ஆண்டு விழா மலர்

## 1897-2022

வெளியீடு

**பழைய மாணவர் சங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின்

# 125 வது ஆண்டு விழா மலர்

1897 - 2022

## ஏற்றிவிட்ட ஏணியாய்...

நூற்றி இருபத்தைந்தாவது அகவையில்
நுழையும் எம்நுண் அறிவுக்கூடம்,
ஏற்றிய ஏணியாய் எம்இதயத்தில்
என்றும் இறவாமல் நிலைபெற்று,
போற்றி புகழ்பெறும் கல்விக்கூடமாய்
புனித பூமிதனில் விளங்கி,
ஈற்றில், ஈடுஇணையற்ற கல்லூரியாய்
இமயம் தொட்டு நிற்கிறது.

- வெளியீடு -
பழைய மாணவர் சங்கம்
இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | 125வது ஆண்டு விழா மலர் |
| வெளியீடு | : | பழைய மாணவர் சங்கம் |
| உரிமை | : | தி/ இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி |
| பிரதிகள் | : | 500 |
| தாள் | : | 80gsm |
| பக்கங்களின் எண்ணிக்கை | : | xxxii + 316 |
| பதிப்பாசிரியர் | : | சண் பாரதிநாதன் |
| அச்சகம் | : | SS DIGITAL'S - திருக்கோணமலை |

| | | |
|---|---|---|
| Title | : | 125th Anniversary Malar |
| Published by | : | Old Boys Association |
| Copy Right | : | T/R.K.M. Sri Koneswara Hindu College |
| Copies | : | 500 |
| Paper | : | 80 gsm |
| Number of pages | : | xxxii + 316 |
| Editor | : | Shan Barathinathan |
| Press | : | SS DIGITAL'S - Trincomalee |

**Sponsored by G.C.E O/L Batch - 1975**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

இந்த மலர் வெளியீடு தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வர இந்துக்கல்லூரியின் 125 வது நிறைவை ஒட்டி மலர்கிறது.

புனித பூமி திருக்கோணமலையின் மண்பெருமைக்கு மாண்பு சேர்த்த, முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளார் பாதத்துளிபட்ட பெரும்பேற்றை அவர் இரண்டு வருடங்கள் (1928 - 1930) அதிபராய் இங்கு சேவை செய்ததால் பெற்ற பேறு கல்லூரியின் வளர்ச்சி மூலம் உணரலாம்.

மாற்றத்தை இயற்கையாய் கொண்ட இன்றையகல்வி புலம் பலபட விரிந்துள்ளமை உன்னற்பாலது. புதியன புகுதலும் பழையன கழிதலும் வழு அல்ல. ஆயினும் கல்வியின் உண்மையான அடிப்படை எமது எதிர்கால சந்ததியினரை அறிவு, ஆரோக்கியம் மிக்கவராய் வளர்ப்பது மட்டுமன்றி மேலான உள்ளத்தின் வளர்ச்சியையும் சேர்த்து வளர்த்தெடுப்பதில் தான் உளது என்பது மறுக்கமுடியாத உண்மை.

கல்லூரியின் கல்விச்சேவை மேலும் ஒளி பெறட்டும்! நல்லதோர் இளைய சமுதாயத்தை வளர்த்தெடுக்கும் இக்கல்லூரி நீடு நிலைத்து வளர, எம்பெருமான் கோணேசரின் திருவருளும் எம் குருநாதர் சுவாமி சின்மயானந்தரின் குருவருளும் நிறைந்திடுக.

"அவரின் கருணையும் நல்லாசியும் நம்மூலமாக நம்மைச்சுற்றியுள்ள இந்த உலகிற்குப் பரவட்டும்"

- சுவாமி சின்மயானந்தர்

Mahima

இறை பணியில்,
பிரம்மச்சாரிணி மஹிமா சைதன்யா
இலங்கை சின்மயா மிஷன்
திருக்கோணமலை.
18 ஏப்ரல் 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேதாகமமாமணி"
சிவஸ்ரீ. சோ. இரவிச்சந்திரக் குருக்கள்
சமாதான நீதவான்
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
(பிரதமகுருவும் ஆதீனகர்த்தாவும்)
திருக்கோணமலை
தொ.பே. 026 - 2222760
026 - 2224680
websit: www.trincopathirakali.com

உ

"VERHAKAMAMAMANI"
Siva sri.S.Ravichchandira kurukkal
JUSTICE OF THE PEACE (J.P)
SRI PATHIRAKALIAMBAL THEVASTHANAM
(Chief Incumbent & Chief Priest)
Trincomalee

........../ .........../ 20.........

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ. சோ. இரவிச்சந்திர குருக்களின்

## ஆசியுரை

1897ல் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி 125 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து விழாவாக கொண்டாடுவதை திருமலை மாவட்ட மக்களாகிய நாம் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.

இக்கல்லூரியானது விளையாட்டுதுறை விஞ்ஞானதுறை, பொறியியல்துறை, இசை துறை போன்ற பல்வேறு துறைகளில் முன்னோடியாக நிகழ்கின்றது. இவற்றை எடுத்துக் காட்டும் வகையில் உலகளாவிய ரீதியில் சட்ட அறிஞர்கள், பொறியலாளர்கள், வைத்தியர்கள் விஞ்ஞான பட்டதாரிகள் போன்ற பதவிகளை வகிப்பவர்கள் இக்கல்லூரியில் கல்விகற்று வெளிவந்த மாணவர்கள் ஆவார்கள். இவர்கள் கல்லுரிக்கு மட்டும் அன்று இலங்கை திருநாட்டிற்கே பெருமை சேர்ப்பவர்களாவார்கள்.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அதிபர்கள், ஆசிரியர்கள் அயராது உழைத்து கல்லூரியை சிறந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளார்கள். அத்தகைய அதிபர்களில் ஒருவர் சுவாமிஜி விபுலானந்த அடிகள் ஆவார். சுவாமிஜி அவர்கள் 1925 ம் ஆண்டில் இருந்து நிர்வாகதுறை, ஆசிரியர், அதிபர் போன்ற பணிகளை 1961 வரை வகித்து வந்தார். சுவாமிஜி அவர்கள் சிறந்த பேச்சாளர், தமிழ் பண்டிதர் மற்றும் லத்தீன், சமஸ்கிருதம், ஆங்கிலம், கிரேக ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான துறையில் கல்விகற்கும் மாணவர்களுக்காக இரசாயனவியல் பாடத்தில் தொழில்நுட்ப அகராதிகளை தயாரித்தார். இவருடைய காலத்தில் கல்லூரி பரிமாண வளர்ச்சி கண்டது.

மென்மேலும் கல்லூரி வளர்ச்சி அடைந்து வருங்கால சந்ததியினர் சிறந்த மேதைகளாகவும், கல்விமான்களாகவும் உருவாக வேண்டும் என்று எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுடைய ஆசியும், அருளும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்கின்றேன்.

இவ்வண்ணம்

(ஆதீனகர்த்தா, பிரதமகுரு
சிவஸ்ரீ.சோ.இரவிச்சந்திர குருக்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனை நம்பி வாழ்
## ஆசியுரை

பகவான் ஸ்ரீ இராம கிருஷ்ணரின் நாமத்தைக் கொண்டு திருக்கோணேஸ்வரர் பூமியில் வெள்ளிடை மலைபோல் பிரகாசித்துக் கொண்டிருக்கும், பாடசாலைகளினுள் மணி மகுடம் எனப் போற்றப்படக்கூடிய இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியானது, தனது 125 ஆவது ஆண்டினைக் கொண்டாடும் இவ்வேளையில் அதன் வளாகத்தில் உள்ள விநாயகப்பெருமானை அர்ச்சிக்கும் பேற்றினைப் பெற்றதனை இட்டுயான் அகமகிழ்வெய்துகிறேன்.

இக்கல்லூரியானது பாடவிதான செயற்பாடுகளில் மட்டுமல்லாது இணைப்பாடவிதான செயற்பாடுகள் மற்றும் இன்னோரன்ன செயற்பாடுகளில் போதுமான அளவுபணியாற்றி கோட்டமட்டம், வலயமட்டம், மாவட்டம், மாகாணம், தேசியம் போன்ற மட்டங்களில் மாத்திரமன்றி சர்வதேச மட்டத்திலும் சாதனை புரிந்து வருவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது.

தொடர்ந்தும் மங்காது மகத்தானதாக அமைய வேண்டும் எனது விநாயகப் பெருமான் பாதகமலங்கள் பணிந்து ஆசிகூறிக் கொள்வதில் பேருவுகைவெய்துகிறேன்.

இங்ஙனம்
இறைபணியில்
வ.சிவகுமாரக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

கிழக்கிலங்கையில் புகழ் பெற்ற பாடசாலைகளில் ஒன்றான தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 125வது ஆண்டு விழா நிகழ்வுகள் எதிர்வரும் கார்த்திகை மாதத்தில் நடைபெறவுள்ளதாக அறிகிறோம். இந்நிகழ்வை முன்னிட்டு வெளியிடவுள்ள 125வது ஆண்டு சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி 1897ல் சுவாமி விவேகானந்தர் இலங்கைக்கு விஜயம் செய்து ஆன்மீக எழுச்சியூட்டினார். அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இலங்கை விஜயத்தின் 125ஆம் நிறைவாண்டு விழா நிகழ்வுகளை நாடுதழுவிய ரீதியில் நாம் ஓராண்டு காலம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இத்தருணத்தில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி தனது 125வது ஆண்டு விழாவைக் கொண்டாடுவது சிறப்பானதாகும்.

"சராசரி மக்களை அன்றாட வாழ்க்கைப் போராட்டத்திற்குத் தயார் செய்யும் கல்வி, நமது பண்பாடு, கலாசாரம் மாறாத கல்வி, ஒருவனைத் தன் சொந்தக்கால்களிலேயே நிற்கும்படி செய்யும் உண்மையான கல்வியே தேவை" என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

இலங்கைத் திருநாட்டில் இராமகிருஷ்ண மிஷனின் தொடக்கம் திருகோணமலையில் ஆகும். இராமகிருஷ்ண மிஷனின் கீழ் இயங்கிய 26 பாடசாலைகளில் ஒன்றாக ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி விளங்குவது இன்னொரு சிறப்பு அம்சமாகும்.

125வது ஆண்டு விழா நிகழ்வுகளைக் கொண்டாடவிருக்கும் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் நிகழ்வுகள் மற்றும் சிறப்பு மலர் வெளியீடு என்பன இனிதே நடைபெற வாழ்த்துகிறோம். அத்துடன் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அனைவருக்கும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதாதேவி, சுவாமி விவேகானந்தர் ஆகிய தெய்வத் திருமூவரின் நல்லாசிகளையும் வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி.

என்றும் மனிதகுல சேவையில்,

15.04.2022. (சுவாமி தக்ஷஜானந்தர் பொது முகாமையாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

இயற்கையழகும், அமைதியும் நிறைந்த சிவபூமியாம் திருக்கோணமலை நகரின் மையப்பகுதியில், அருள்மிகு கோணேஸ்வரப் பெருமானைப் பார்த்த வண்ணம் அமைந்துள்ள ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் 125ஆம் ஆண்டு நிறைவு விழாவினையொட்டி வெளியிடப்படும் வரலாற்று நூலுக்கு இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

சுவாமி விவேகானந்தரால் 1897ஆம் ஆண்டு ராமகிருஷ்ண மிஷன் தொடங்கப்பட்டு 125 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில் அந்த விழா தற்சமயம் உலகெங்கிலுமுள்ள ராமகிருஷ்ண மிஷன் கிளைகளில் கொண்டாடப்பட்டு வரும் வேளையில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் 125ஆம் ஆண்டு நிறைவு விழாவும் நடைறெ உள்ளது ஒரு தெய்வீகப் பொருத்தமே எனலாம்.

ஒரு ஸ்தாபனத்திற்கு 125 ஆண்டுகள் என்பது ஒரு நீண்ட பயணமே. அந்த நீண்ட பயணத்தின் பல்வேறு காலப்பகுதிகளில், அதன் வளர்ச்சிப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்களை நினைவுகூரல் அவசியம். அந்த வகையில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் இன்றைய மிக வளர்ந்த நிலைக்குத் தங்கள் உழைப்பை மிகுந்த பக்தியோடும், அர்ப்பணிப்போடும் வழங்கிய திருக்கோணமலை வாழ் ஊர்ப்பெரியோர்கள் ராமகிருஷ்ண மிஷனின் துறவியர் (தவத்திரு விபுலானந்த அடிகள் உட்பட), அதிபர்கள், ஆசிரியர்கள் என அனைவரையும் மிக்க நன்றியுடன் நினைப்பதோடு, அவர்களை வாழ்த்தி வணங்கவும் செய்கிறோம். இந்த நீண்ட காலப்பகுதியில் எத்தனை ஆயிரம் மாணவர்கள் இக்கல்லூரியில் பயின்றிருப்பார்கள், அவர்களுக்கு எத்தனை நூறு ஆசிரியர்கள் போதித்திருப்பார்கள் என்று நினைக்கும் போது பெருமிதமாக உள்ளது. இது ஒரு மகத்தான காரியம் அல்லவா!

ஒரு தேசம் அல்லது சமுதாயம் வகுப்பறையில்தான் உருவாகிறது எனக் கூறுவதுண்டு. அறிவுள்ள ஒழுக்கத்தில் நிலைபெற்ற மாணாக்கர்களை உருவாக்குவதில் ஆசிரியர் பங்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றியமையாதது என்பதில் ஐயமில்லை. அத்தகைய ஆசிரியர்கள் தங்களது கற்பிக்கும் திறமையால் மட்டுமின்றி தங்களது சீரிய வாழ்க்கையின் அடிப்படையில் தான் சிறந்த மாணாக்கர்களை உருவாக்க முடியும். "கல்வி என்பது வெறும் விடயங்களை மூளையில் திணிப்பதன்று. அது மாணவனது ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் வளர்ப்பது" எனும் சுவாமி விவேகானந்தரது கூற்றின் அடிப்படையில் சிறந்த ஆன்மிகப் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறையை இத்தனை ஆண்டுகளாகக் காத்து அவ்வழியில் மாணாக்கர்களை வளர்த்தெடுத்த இக்கல்லூரியின் முன்னாள் இன்னாள் அதிபர்களும், ஆசிரியர்களும் போற்றத்தக்கவர்கள். இதன் காரணமாகவே இக்கல்லூரி திருக்கோணமலை நகரின் முன்னோடி கல்வித்தாபனமாக என்றும் விளங்குகிறது.

125ஆம் ஆண்டு நிறைவு விழா நடைபெற உள்ள இத்தருணத்திலே, இன்று இப்பாடசாலையில் பணியாற்றும் அதிபர், ஆசிரியப் பெருமக்களுக்கும் இப்பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறையுடன் செயல்பட்டுவரும் ஏனைய நல்லோர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மென்மேலும் வளர்ந்து சிறந்த மாணவச் செல்வங்களை வளர்த்திட வாழ்த்துகிறோம்.

சுவாமி ஆத்மகனானந்தா

பொறுப்பாளர்

05.09.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**DIOCESE OF TRINCOMALEE**
**Rt. Rev. Dr. Christian Noel Emmanuel**
**Bishop of Trincomalee**

*Bishop's House,*
*Orr's Hill, Trincomalee,*
*Sri Lanka.*
*Tel.: +94 26 222 2677, Fax: +94 26 222 3238*
*Email: bishoptrincomalee@gmail.com*

I am pleased to write this message appreciating the services R.K.M. Sri Koneswara Hindu College render to the community for the last 125 years as it celebrates its 125th anniversary this year.

Education is a huge wealth that we gain and pass on to another. History of humankind has seen great educationists, Scientists, Medical experts, mathematicians and many other. No one is old enough to learn better. We keep learning till we die. "Intellectual growth should commence at birth and cease only at death" - Albert Einstein. If we are comfortably living in today's world it is because of the great peoples who made their contributions towards the development of humankind. Similarly, if we are facing manmade disasters, it is also because of the misuse of the knowledge of people in the past.

Founded in 1897 Hindu College had gone through interested and dedicated hands taking different names and developing slow and steady. Today as National School Hindu College has formed great men to take up important tasks in the community, Thus, it has served generations. It is one of leading schools in Trincomalee.

I congratulate past and present Principals, staff, students, parents and well wishers as they celebrate 125th anniversary. I also wish all those involved in School development success in all Jubilee activities.

I wish everyone God's numerous Blessings.

Rt. Rev. Dr. Christian Noel Emmanuel,
Bishop of Trincomalee.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R.Sampanthan
Member of parliament
Trincomalee
0112529787

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

176 Customs Road
Trincomalee
B 12 Mahagama Sekera
Mawatha
Colombo - 07

25th October 2022

I write to convey my very sincere Congratulations to T.R.K.M Sri Koneshwara Hindu College on it celebrating its 125" Anniversary on 1" November 2022. I am happy to hear a souvenir is to be ssued on that occasion.

T.R.K.M Sri Koneshwara Hindu College has played a leading role in the field of education in Trincomalee District ever since its inception

The college has achieved good results in competitive examinations held in the country and several students have been able to enter university for higher education.

Advancement in the field of education plays a crucial role in development. When Professionals are produced in an area, development of that area will increase. T.R.K.M Sri Koneshwara Hindu College has a crucial role to play in this regard.

Trincomalee will play a crucial role in the development in the whole country with all its potential for development. T.R.KM Sri Koneshwara Hindu College has a substantial role to play in this regard.

I am confident that responsibility will be discharged by this institution, and that this institution will continue to play a substantial role in the field of education and development. Through that process a significant contribution will be made towards the development of the Trincomalee District.

I wish to thank the Principal Teachers and Students for the role they play and convey my very best wishes to them for the future.

Thanking You

Yours Sincerely

R. Sampanthan

(R.SAMPANTHAN)
Member of Parliament
Trincomalee District



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 · +94112784846
isurupaya@moe.gov.lk · www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref.: ED/1/6/13/Tr/Ns

ඔබේ අංකය / உமது இல. / Your Ref.:

දිනය / திகதி / Date: 2022.10

## Message of Felicitation

I take this opportunity to extend my sincere appreciation to T/T/R.K.M Sri Koneswara Hindu College which is the best college in Trincomalee. It is an excellent educational institution that has earned recognition and appreciation from the community due to its immeasurable dedication. It is admirable that the school has made significant contribution throughout the 125 Years educational Journey and I also congratulate you for the accomplishments you have achieved in the modern science and technology

The school was founded by the great religious persons who laid a firm foundation by their dedicated service of the Ramakrishna mission. In 1961 the school was recognized as a government school, and it became a National school in 1993. With the great pleasure I appreciate the principal, deputy principals, Teachers, Students, OBA, Members of SDS and the well-wishers for the imperishable education with discipline, tradition and culture.

I wholeheartedly extend my blessings and felicitations on the launch of your souvenir

That may beautifully bloom with fragrance and fill its petals with the national and international achievements and recognition of your students by enthusiastically and passionately taking part in curricular, co-curricular and extra-curricular activities, upholding the honor prestige of your school, that will render them a broad emotional outlook with everlasting beauty and wealth.

Kithsiri Liyanagamagae
Director Of Education (NationalSchool Unit)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Ministry of Education, Eastern Province.

T/R.K.M. Sri Koneswara Hindu College is a leading National School in Trincomalee which produces disciplined citizens for the society and country. In addition, this school students also the shining stars in extracurricular activities especially in sports.

As an evident, the "**125th Anniversary of the College and the alumni"** is a mile stone of the school Curricular and Co-Curricular Activities. The principal, teachers, students, parents, old students well wishes & etc. as the community of the school interested in this event, but also most of the people of Trincomalee are also aware and given due concern to this important event.

Since, I wish all the members of the school community & people of Trincomalee who have shown keen interest & support for this event to be successful.

Thank you

H.E.M.W.G.Dissanayake,
Secretary,
Ministry of Education,
Eastern Province.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்லை, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ අංකය
எனது இல
My Ref.

දිනය
திகதி
Date



## Message

I'm extremely delighted to deliver this message on the occasion of 125th anniversary of R. K. M. Sri Koneswara Hindu College which has been a recognised educational institute in the Trincomalee District since 1897.

The school was established as a primary school by a group of social visionary Hindu people and facilitated both English and Tamil medium education. Many veteran Principals and teachers have maneuvered the school into success it has achieved at present. It is noteworthy that Swami Vipulananda has also served as a Manager and a Principal of this school.

R. K. M. Sri Koneswara Hindu College was proclaimed to be a National School in 1993 after the amalgamation of R. K. M. Hindu College and Sri Koneswara Vidyalayam. The school has proven its academic excellence through higher performance in national level examinations successively and the achievements in co curricular and extra curricular activities have been outstanding.

I commend the commitment and the tremendous service rendered by R. K. M. Sri Koneswara Hindu College's Principals, teachers and all the stakeholders of school development. Further, I wish R. K. M. Sri Koneswara Hindu College flourishes in educational fields and be successful in future endeavours.

M. N. Ranasinghe
Secretary
Ministry of Education



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாணக் கல்வித் திணைக்களம்**
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**Provincial Department of Education**

கிழக்கு மாகாணம், திருகோணமலை
නැගෙනහිර පළාත, ත්‍රිකුණාමලය
Eastern Province, Trincomalee
026-2222556, Fax: 026-2222871
www.eastpde.edu.lk

எனது இல
මගේ අංකය
My No } EP/20/01/29

திகதி
දිනය
Date } 18.11.2022

## வாழ்த்துச்செய்தி

கிழக்கு மாகாணத்தின் தேசிய பாடசாலைகளின் வரிசையில் முன்னனியில் திகழும் தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி வழங்கும் மகத்தான கல்விச் சேவைகள் நூற்றி இருபத்தைந்து (125) ஆண்டுகளைக் கடந்து இறுதிப் பகுதிக்கு காலடி எடுத்து வைக்கின்றமை எமது கல்விச் சமூகத்தை புளகாங்கிதம் அடையச் செய்கின்றது. இந்த வகையில் வருடாந்த ரீதியில் இந்துக்கல்லூரியின் சாதனைகள் மற்றும் கல்லூரியின் முக்கிய விடயங்களை சான்றுபடுத்தும் ஆவணமாக இச்சஞ்சிகையானது கல்லூரிச் சமூகத்தினரிடையே பகிரப்படுவது மேலும் பல வழிகளில் மாணவர்களை ஊக்கப்படுத்துகின்ற விடயமாக அமையும் என்பதில் ஐயமில்லை. இச்சஞ்சிகையானது கல்லூரியின் சாதனைகளை பலறியச் செய்து உவகை கொள்கின்ற வகையில் அமைய இருப்பது ஒரு வகையான சிறப்பு இத்தகைய சிறப்புப் பொருந்திய செயற்பாட்டிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைனிறேன்.

இன்றைய தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப விஞ்ஞான யுகத்தில் பாடசாலைகளின் பணியானது முன்னெப்போதும் இல்லாத வகையில் மிகவும் பரந்துபட்டதாகவும் சவால் நிறைந்ததாகவும் மாறியுள்ளது. இத்தகைய கால கட்டத்தில் இவ்வாறான சஞ்சிகையானது அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களதும் ஆக்கத்திறன் விருத்திக்கு வழி கோலுகின்றதென்பது கண்கூடே.

வெறுமனே அறிவை மட்டும் போதிக்கும் அல்லது வழங்கும் நிறுவனங்களாக பாடசாலைகள் இருந்து விட முடியாது. தொடர்பாடல் தொழில்நுட்ப அதீத வளர்ச்சி காரணமாக அனைத்தும் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலடியில் இருப்பது போன்றதொரு உணர்வு காணப்படுகின்றது. அதனால் வேகமாகவே நாம் பல கருமங்களை ஆற்ற வேண்டிய தேவை உள்ளது. இந்த மாற்றங்களை பாடசாலைகளும் நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையும் சமூகத்திடையே ஏற்பட்டுள்ளது.

இந்த வகையில் காலவோட்டத்தின் தன்மைக்கேற்ற வகையில் தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி வழங்கிவரும் சேவைகளும், பணிகளும் உண்மையில் பாராட்டுதற்குரியவை. இக் கல்லூரி கல்வி செயற்பாடுகளிலும் மற்றும் ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கி பல சாதனைகளை புரிய வேண்டுமென்று வாழ்த்துவதுடன் இம்மலர் சிறப்புடன் வெளிவர வேண்டும் எனவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி.நகுலேஸ்வரி புள்ளநாயகம்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## FELICITATION MESSAGE

It gives me immense pleasure in extending my felicitations on the event of celebrating the 125th anniversary of Sri Koneswara Hindu College, Trincomalee. Sri Koneswara Hindu College is a flagship of our fleet that assists our children to surpass the vast oceans of knowledge. Being a leading school that has rendered services for 125 years the school has enlightened the lives of thousands of children who serve Mother Land as worthy citizens at different capacities today.

In the fast-moving world of Technology, the students are also helped to adapt themselves with the 21st century educational goals. As Benjamin Franklin said, "Tell me something and I forget Teach me something and I remember, involve me in something and I learn". However education is about giving students the skills they need to succeed in this new world, and help them grow in confidence to practice the skills. With much information readily available to them, 21st century skills focus more on making sense of that information, sharing and using it in smart ways. Sri Koneswara Hindu College is in the right path to achieve this noble task of achieving the 21st century educational goals.

This College has also displayed remarkable performance in curricular and extracurricular activities contributing to the Education sphere producing intellectuals and professionals of various disciplines. In the field of sports this College has shown splendid achievements at national and international level competitions.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

May the spark of enthusiasm and zeal for selfless service to humanity be enkindled in the heart of every member of the Institution. May you be the beacon lights to guide the footsteps of those who will follow you in their quest for peace and happiness.

I take this opportunity to commend Mr.S.Pathmaseelan the Principal, the teachers, past students, school development committee and well - wishers of Sri Koneswara Hindu College Trincomalee for their highly dedicated and devoted service towards producing well- disciplined educated and a vibrant younger generation. On this glorious occasion I invoke God's Blessings on this institution and wish you all very best for the future progress and prosperity.

Sr.M.Nirosha A.C
Principal,
St. Mary's College,
Trincomalee.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கிழக்கு மாகாணத்தில் திருக்கோணமலை மாவட்டத்தில் நகர் மத்தியில் அறிவுப் பீடமாக விளங்கிக்கொண்டிருக்கும் தி/ ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி நூற்று இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

இக் கல்லூரியானது கல்வி, ஒழுக்கம், பண்பாடு, சமய விழுமியங்கள், முதலானவற்றை சமூகத்திற்குள் வித்தாக விதைத்து விருட்சமாக நிழல் பரப்பி நவீன கல்வித்துவத்தின் தேவைகளை அறிந்து பல பரிமாணங்களாக பரிணமித்துக் கொண்டு சாதனைகளைச் சரித்திரமாக்கி நிலை நிறுத்தும் ஒரு முன்னனிக் கல்வி நிறுவனமாக விளங்குகிறது.

தேசத்திற்கு தேவையான வல்லுனர்களை உருவாக்கி சமுதாயம் மலர்ச்சியடைவதற்கு தொண்டாற்றும் தொழில் நிறுவனமாக விளங்குவது பாடசாலைகள் ஆகும். சமுதாயம் எதிர்பார்க்கின்ற மானிட சமூகம் ஒன்றை பல் துறைகளின் ஊடாக உருவாக்கிக் கொண்டு வளர்ச்சிப் பாதையில் இக் கல்லூரி செயலாற்றுவது பாராட்டுக்குரியதாகும்.

திருக்கோணமலையில் கல்விப் பணியாற்றி உயர்ந்து நிற்கும் இந்துக் கல்லூரி முத்திரை பதித்து முன்னேறிக் கொண்டிருக்கிறது. இலங்கை தேசத்தில் மட்டுமல்ல சர்வதேசத்திலும் சாதனைகளை நிலைநிறுத்தி நிற்கும் இக்கல்லூரி தொடர்ந்து சவால்களை வென்று சாதனைகள் படைக்க வேண்டும். காண்பவர் அனைவரும் கையெடுத்து வணங்கும் கலைக்கூடமாக விளங்கி நிற்க வாழ்த்துகிறேன்.

திருமதி. L. ரவிராஜன்
(B.A, Dip in Education, Dip in Management, M.Ed)
அதிபர் (SLPS-I),
தி / ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி.
(தேசிய பாடசாலை)
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/T/St. Joseph's College
(National School - Sports School)
Power House Road, Trincomalee
Email: sjctco@gmail.com Phone : 026 2222036

It is heartening to accord that R.K.M. Hindu College is celebrating its 125th Anniversary jubilee celebration this year. As an institution journeying for 125 years has shown its generous service to the society. It had been founded in 1897 with the purpose of educating students with the values of Hinduism. We, the principal, staff and the students of T/T/St. Joseph's College join hands to congratulate you all with the prayer of praise to God on this remarkable occasion.

In the long journey of 125 years, as one of the leading educational institutions in Trincomalee, it has contributed much to the society by molding and transforming students who could live with good human principles. Further, this college has produced commendable achievements in education, sports and extracurricular activities.

On this happy occasion I express my greetings to all academic and non-academic staff of the college, past and present students and parents.

Congratulations on this special year of 125th Anniversary, and many wishes to embrace modernity and the challenges ahead in the 21st century for success.

May God bless you

Principal
T/T/St.Joseph's College
Trincomalee



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சகலா இந்துக் கல்லூரி வாழ்க

## விநாயகர் காப்பு

வேளமாமுகத்தோன் வினை தீர்க்கும் மாமருந்தோன்
கோளவடிவ வயிறோன், குறைதீர — ஆளும்
சித்தி விநாயகர் பெயரால் இந்துக்கல்லூரி புகழ
வித்தை தருவான் விரைந்து.

## தமிழ்த்தாய் அழைப்பு

பூமாலை வாடுமென்று பைந்தமிழை எடுத்துவந்து
பாமாலை நானுனக்கு சூடுகின்றேன் - பூமாரி
வந்துனக்கு பொழியும் இகிச கோணேஸ்வரா
இந்துக்கல்லூரி வரும் இசைந்து.

## வாழ்த்துப்பா

தென்றலது கை தடவும்
திங்களது குளிர் பரப்பும்
குன்றுமலை மேகத்திடை
கதிரவன் தன் ஒளிபரப்பும்
என்றும் முத்தான கடல் சூழ்ந்த
இயற்கை எழில் கோணமலை
நின்றே நற்கல்வி ஈனும்
இந்துக் கல்லூரி வாழ்க வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறொடு இருபத்தைந்து
அகவைகள் கடந்துவந்து
ஏரொடு வயல்காணும்
எழில் பசுமை வாழ்வியலை
கூரொடு முனை தாங்கும்
அம்புபோல் அறிவால் நல்கும்
சாறொடு தேனாய் இனிக்கும் - இதன்
சரித்திரம் சொல்லச்சொல்ல.

வேரொடு மரமாய்த் தாங்கும்
விருட்சங்கள் போல் எங்கும்
சீரொடு கல்வி கலை விளையாட்டு
சிறந்த நல் ஆளுமைப்பண்பு
தேரொடு சக்கரமதாய்
இந்து மத விழுமியமும்
பாரொடு நவீனத்துவம் கொண்டு
பார்போற்ற (இந்து) கல்லூரி வாழ்க.

கருவறைகள் வேறுபட்டாலும்
வகுப்பறையில் ஒன்றுபட்டேனும்
விருப்பமுடன் மதபேதமின்றி
சோதரராய் அன்பு பரிமாறி
உருக்கமுடன் கல்வி கற்றே
ஊக்கமுடன் வாழ்வை வெல்ல
நெருக்கமுடன் கல்வி தரும்
நெஞ்சகலா இந்துக்கல்லூரி வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

சந்தமுடன் சிந்துகவி வந்தமர எந்தனது
சிந்தைமிகு இந்துக்கல்லூரி வெல்க
பந்தமுடன் அறிஞர்கள் பெருமக்கள் சேர்ந்து
ஆக்கிய கல்லூரி வாழ்க வாழ்க
சொந்தமுடன் அதிபர்கள் ஆசிரியர் மாணவரொடு
பழைய மாணவர் சேவை வாழ்க
அந்தமுடன் - ஆதி இல்லா ஆண்டவன் அருளால்
என்றும் இந்துக்கல்லூரி வாழ்க வாழ்க.

கோணேஸ்வரா இந்துக்கல்லூரி வாழ்க வாழ்க
இராமகிருஷ்ண சங்க கோணேஸ்வரா இந்துக்கல்லூரி வாழ்க வாழ்க

ஆக்கம் : திருமலை சி.காண்டீபன்
சின்னவள்ளி மிருதங்க கலாமன்றம்
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 125ஆவது ஆண்டு விழா
# வாழ்த்துச் செய்தி

பெருந்தகை விபுலானந்த அடிகளாரால் வழிநடாத்தப்பட்டு, தொடர்ந்து வந்த அதிபர்கள், ஆசிரிய பெருந்தகைகளால் நூற்றிருபந்தைந்து ஆண்டுகளாக மிகச் சிறப்பாக நிர்வகிப்பட்டு இன்று கிழக்கிலங்கையின் மிக முக்கியமான தேசியகல்லூரியாக மிளிரும் இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துகல்லூரியால் வெளியிடப்படும் நூற்றியிருபந்தைந்தாவது ஆண்டு விழா இதழில், இந்துகல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பிரித்தானிய கிளையின் தலைவர் என்ற முறையில் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இத்தருணத்தில் மாணவர்களை நல்வழி நடத்தி, அறிவு செல்வம் புகட்டும் அதிபர், ஆசிரியர்களுக்கும் துணை நிற்கும் பெற்றோர்கள், பழையமாணவர்கள் , சங்கங்கள் எல்லோருக்கும் நன்றியினையையும் தெரிவித்துகொள்கிறேன்.

நன்றி

சண்முகநாதன் இளஞ்செழியன்

தலைவர்

பழைய மாணவர் சங்கம் - பிரித்தானிய கிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

உயர்ந்த விழுமியங்களைக் கொண்ட மாணவர்களை உருவாக்கும் பயன்தரு விருட்சம் போல் அகலக்கிளை பரப்பி ஓங்கி உயர்ந்து நிற்கும் எமது இந்துக்கல்லூரி அன்னைக்கு என் முதல் வணக்கம். உலகெங்கும் தன்மைந்தர்களைக் கொண்டு புகழ்பரப்பிக் கொண்டிருக்கிறது. இதற்காக 125 ஆண்டுகளில் இங்கே சேவை செய்த உள்ளங்களின் தியாகங்கள் எத்தகையதாக இருந்திருக்கும். அவையெல்லாம் நனவாகி இன்று கல்லூரி பொலிவுடன் திகழ்வது மிக்க மகிழ்ச்சியானதும், பார்க்கும் போதெல்லாம் அளவிலா இன்பமும் தருகிறது.

என் தியாகமாக இன்று கல்லூரி தனது 125 ஆவது ஆண்டு விழாவை எட்டிய எமது கல்லூரியின் அனைத்து தேவைகளையும் நிவர்த்தி செய்து இலத்திரனியல் கலாச்சாரத்துடன் கூடிய பூரணமான கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்கக் கூடிய வகையில் கல்லூரியைக் கட்டியெழுப்ப வேண்டிய சூழ்நிலையில் நாம் உள்ளோம். இந்துவின் புதல்வர்கள் என்ற உணர்வோடு ஒருமித்துச் செயற்படுவோம். இந்த வகையில் சிந்தை செயல் யாவும் இந்துவின் மேம்பாடே என அயராது உழைக்கும் எமது இந்துக் கல்லுரியின் சமூகத்தினருடன் ஒன்று சேர்ந்து பழைய மாணவர்களாகிய நாமும் பாடுபடுவோம்.

கல்லூரியின் சாதனைகள் சிறக்கவும், சாதனைகள் மேன் மேலும் உயரவும் எல்லாம் வல்ல கோணேசப் பெருமான், அருள்மிகு காளி அம்பாள், திருவடிகளை வணங்கி அவுஸ்ரேலியா இந்துக் கல்லூரி பழைய மாணவர் சார்பாக எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பஞ்சாட்சரநாதன் சடாட்சரன்
தலைவர்,
இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்,
அவுஸ்ரேலியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

(தேசிய பாடசாலை)

### அதிபரின் வாழ்த்துச்செய்தி

கிழக்கிலங்கை கல்வி வரலாற்றில் முக்கிய கல்லூரியாக எமது கல்லூரி 1897ஆம் ஆண்டு எமது சமூகத்தில் வாழ்ந்த சைவ பெரியார்களின் சிந்தனையால் உருவாக்கப்பட்ட கல்லூரி ஆகும். ஆரம்பகாலத்தில் தமிழ் மொழிப்பாடசாலையாக கோணேஸ்வரா வித்தியாலயமும், ஆங்கில மொழி பாடசாலையாக இந்துக்கல்லூரியும் கல்விச் செயற்பாட்டில் பங்களிப்புச செய்தது. பின்னரான காலப்பகுதியில் இரு பாடசாலைகளும் தமிழ் மொழியில் மாணவர்களிற்கு கல்வியை வழங்கி வந்துள்ளது.

எனினும், 1993ஆம் ஆண்டு தேசிய பாடசாலை என்ற எண்ணக்கரு வளர்ச்சியுற இரு பாடசாலைகளும் இணைந்து இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி என தனது பணியினை முன்னெடுத்து வருவதனை அனைவரும் அறிவர்.

எமது கல்லூரியின் வளர்ச்சியில் பல ஆசிரியர்கள், அதிபர்களது அர்ப்பணிப்பான சேவையை பாராட்டுகின்றேன். அந்த வகையில், சுவாமி விபுலானந்தர் அவர்கள் முகாமையாளராகவும், அதிபராகவும் கடமையாற்றியது மகிமைக்குரியது.

எமது கல்லூரியானது வெறுமனே கல்விப்பணியுடன் வரையறுத்து நிற்காது கலை, கலாச்சாரம், சமூகசேவை மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் முன்னெடுத்து பல சாதனைகளை படைத்து வருகின்றது. இதற்கு பல சான்றோர்கள், பழைய மாணவர்கள் எடுத்துக்காட்டாகும்.

கல்லூரியின் 125வது ஆண்டு விழாவை முன்னெடுக்க வேண்டும் என்ற வினா எழலாம். எனினும் நீண்ட வரலாற்றை கொண்ட கல்லூரி வரலாற்று விடயங்கள், சாதனைகள், என்பன கல்லூரியினை தொடர்ந்து எழுச்சியுடன் முன்னெடுக்க இத்தகைய செயற்பாடுகள் தூண்டுதலாக அமையும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சிந்தனை பலரது மட்டங்களிலும் காணப்பட்டமையினால் கல்லூரியில் அக்கறையோடு செயற்படும் முன்னாள் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர்கள், பழைய மாணவர் சங்க செயலாளர்கள், பாடசாலை முகாமைத்துவ குழு, ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளது சிந்தனையுடன் 125ஆவது ஆண்டு செயற்பாட்டுக்குழு அமைக்கப்பட்டு நாற்பத்தொரு செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தோம். இவற்றை சில பழைய மாணவர்கள் பிரிவு ரீதியாகவும், தனிப்பட்ட வகையிலும் ஒன்றித்து செயற்பட்டு இன்று இறுதி நிகழ்வின் சிறப்பம்சமாக 125ஆவது ஆண்டு விழா சிறப்பு மலர் வெளிவருவதனையிட்டு மகிழ்வடைகின்றேன்.

இச்சந்தர்ப்பத்தில் 125ஆவது ஆண்டு மலர் குழு செயற்றிட்டத்துக்கு பொறுப்பானவர்களும், இதற்கு மேலாக, வலயக்கல்விப்பணிப்பாளர், பொறியியலாளர், மாகாணக்கல்விப் பணிப்பாளர் மத்திய கல்வி அமைச்சின் செயலாளர், தேசிய பாடசாலைகள் பணிப்பாளர், பாடசாலை வேலைகள் பணிப்பாளர் அனைவருக்கும் நன்றிகள். மேலும், ஆசிச்செய்தி, வாழ்த்துச்செய்தி, ஆக்கங்களை வழங்கியவர்களுக்கும் நன்றிகள்.

இத்தகைய செயற்பாடு கல்லூரியின் வரலாற்று ஆவணமாகவும் மேம்படுவதற்குமான சான்றாக அமையும் என்றும் இவ் உயரிய பணியிற்கு ஒத்துழைப்பும், ஆலோசனையும் வழங்கிய அனைத்து உள்ளங்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

கல்விச் சேவையிலுள்ள
திரு.செ.பத்மசீலன்
- அதிபர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | இல |
|---|---|
| 1. பதிப்பாசிரியர் உரை. | 1 |
| 2. எமது ஸ்தாபகர்கள். | 3 |
| 3. எங்கள் வித்தியாசாலையில் என்றும் விபுலாநந்தம்... | 12 |
| 4. ஞானசிரோன்மணி பண்டிதர் வடிவேல் ஐயாவின் கல்வி கலாசார சமயச் சேவை மகத்துவம் | 19 |
| 5. இந்துக்கல்லூரி : அற்றைத் திங்கள் பசுமை நினைவுகள் | 24 |
| 6. கல்லூரி : நினைவழியாச் சித்திரங்கள். | 28 |
| 7. BOSS : அதிபர் க.சிவபாலன். | 37 |
| 8. தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் ஆளுமைகளும் அவர்களின் அர்ப்பணிப்பு சேவையும். | 44 |
| 9. நினைவில் நீங்கா ஸ்ரீ கோணேஸ்வரா இந்துவின் ஆசிரிய விற்பனர்கள். | 54 |
| 10. சவால்களை வென்ற அதிபர் திரு. செ.பத்மசீலன் அவர்கள். | 59 |
| 11. ஆரம்பப் பிரிவின் வளர்ச்சி மீதான ஒரு பார்வை. | 63 |
| 12. கல்லூரியின் தோற்றம் மற்றும் வளர்ச்சி மீதான ஒரு வரலாற்றுப் பார்வை. | 71 |
| 13. எண்எழுத்தோடு நற்பண்புகளையும் கற்றுத் தந்த திருக்கோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி. | 120 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. திருக்கோணமலை இராமகிருஷ்ண மிஷன் இந்துக்கல்லூரி மாணவன் ஒருவனின் ஏழாண்டு நினைவுத் துளிகள். 123

15. மலரும் நினைவுகள். 129

16. ஏற்றிவிட்ட ஏணியாய் என்றும் என் நெஞ்சில்.. 135

17. உயர்ந்து நிற்கும் எமது கல்லூரியின் உயர்தரக் கல்வியின் வளர்ச்சி பற்றிய ஒரு பார்வை. 138

18. A brief Biography of Trincomalee Hindu College Old Boy. 154

19. மாணவிகள் கற்ற காலம் மனதில் வந்த போது... 158

20. An Old Student of Trincomalee R.K.M. Hindu College, From April 1973 to April 1975 166

21. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி – என் நினைவில் ஒரு பக்கம். 169

22. வலிமிகுந்த நாட்களை வலிமை கொண்டதாய் மாற்றிய காலம் 172

23. இந்துவில் எனது சேவை அனுபவம் – இனிப்பும் கசப்பும். 175

24. Hello, Every One. 182

25. 1975 ம் ஆண்டு மாணவர்களின் சுவாரசியமான சம்பவங்களும் நினைவுத் தடங்களும். 183

26. வள்ளுவர் வாக்கால் மாணவர்களின் வாழ்வை மலரவைத்த திருமதி. இராசநாயகி கந்தையா. 189



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. பழைய மாணவர் சங்கத்தில் இணைந்து பணியாற்றிய சில சுவையான நினைவுகள். 191

28. தடம்பதித்து செல்லும் காலடிச்சுவடுகள். 199

29. விளையாட்டுத் துறையில் விருதுகள் வென்ற காலம். 202

30. உயர்தரம் தந்த உன்னத பள்ளி. 204

31. பரிசளிப்பு விழா 1979. 206

32. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சைப் பெறுபேறுகள் மீதான ஒரு கண்ணோட்டம். 213

33. கல்வி பொது சாதாரணதரப் பரீட்சையின் ஆய்வு (காலம் 2010 - 2020). 214

34. கல்வி பொது சாதாரண உயர்தரப் பரீட்சையின் பகுப்பாய்வு (காலம் 2010 - 2020). 216

35. இணைப்பாடவிதான அடைவு மட்டம் 217

01. 2017/2018 இணைப்பாடவிதான அடைவு மட்டம்

02. இணைப்பாடவிதான அடைவு மட்டம் கலை மற்றும் பாடங்கள்

03. இணைப்பாடவிதான அடைவு மட்டம் சகல துறைகள்

04. இணைப்பாடவிதான அடைவு மட்டம ஒலிம்பியாட் பல பிரிவுகளில்

05. விளையாட்டுத் துறை மற்றும் ஏனைய துறைகள்

06. பல பிரிவுகளில் அடைவு மட்டம்

07. சர்வதேச கணிதப்போட்டிகள் - சிங்கப்பூரில்

08. சர்வதேச கணிதப்போட்டிகள் - சுருக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. திருமலை இந்துக்கல்லூரி இரண்டாம் குழு சாரணியம். 230

37. 2022 ஆம் ஆண்டிற்கான கிறிஸ்தவ மன்ற பிரதிநிதிகள் 232

38. அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டிகள் 233

01. அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டிகள் - 2010.

02. அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டிகள் - 2011.

03. அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டிகள் - 2012.

04. அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டிகள் - 2013.

05. அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டிகள் - 2015.

06. அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டிகள் - 2015.

07. அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டிகள் - 2016

08. அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டிகள் - 2018

39. மனித குலத்தின் சேவைக்காக - சென் யோன்ஸ் அம்புலன்ஸ் 236

40. English Literature Union. 238

41. English Language and Drama Competition. 239

42. இலங்கையில் உயர்கல்வி சமாளிக்க முடியாத சவாலா? யதார்த்தங்களும் அனுமானங்களும். 241

43. இலங்கையில் இன்னியம். 249

44. முத்திரை வரலாறு. 256

45. Tamblegam. 261

46. பசுமை காப்போம். 268




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. உண்மையால் உயர்வு. 270

48. மாணவர்களுக்கான இணைய பாதுகாப்பு 272

49. மனிதனை வளப்படுத்துவதில் கலாசாரத்தின் பங்கு 275

50. நிகழ்நிலைக் கல்வியும் மாணவரின் அடைவும். 277

51. 2003 ல் ஆரம்ப இணையத்தள வடிவமைப்பு 282

52. நீர் வளம் பேணுவோம் 288

53. அரை நூற்றாண்டின் பின் அணிகலன் சூடியது ; முப்பெரியார் விழா. 290

54. Environmental Issues. 292

55. இந்துக் கல்லூரியில் பிரவாகமும் புத்தாக்கமும். 294

56. 1966 ஆம் ஆண்டின் கன்னி உள்ளக்கமலம் மலரிலிருந்து சில தகவல்கள். 295

57. சுவாமி விபுலாநந்தரின் சமூகப் பணி. 299

58. எமது தேசத்தை விழித்தெழச் செய்வோம். 301

59. நிறைவுற்ற மற்றும் நிறைவுறா செயற்றிட்டங்கள் 307




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம் (தேசிய பாடசாலை)
## (1937 - 2013) பவளவிழா சிறப்பிதழ்













### Past Principals



Swami Vipulananda (1925 - 1935)

















(SDS)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாசிரியர் உரை

திருகோணமலை இருந்து அருள்பாலிக்கும் திருக்கோணேஸ்வரம் மீது ஈர்ப்புக்கொண்டு, பல ரிஷிகள், சுவாமிகள் மற்றும் கல்விமான்கள் திருகோணமலைக்கு வருகை தருவது வழமை. இவ்வருகை, திருகோணமலையின் ஆன்மீக மற்றும் கல்வி வளர்ச்சிக்கு ஓர் உந்து சக்தியாக அமைகின்றது. சுவாமி விபுலாநந்த அடிகளார் தனது துறவறத்தினை முடித்துக்கொண்டு முதலில் பொறுப்பேற்றது எமது கல்லூரி என்பது, எம் ஊருக்கு கிடைத்த பெரும் பாக்கியம்.

ஒரு நீண்ட கால வரலாற்றினைக் கொண்டு இயங்கி வரும் இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, சில சைவபெரியார்களால் ஒரு சிறிய திண்ணைப் பள்ளிக்கூடமாக, 1897 ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. வரலாற்றின் மூலம் மெய்பிக்கப்பட்டுள்ளது. கல்லூரி தனது 125 வது ஆண்டு நிறைவில் தடம்பதித்து, தன்னை அழகுபடுத்திக் கொண்டு, மேலெழுந்து செல்லும் போக்கு, கல்விச் சமூகத்திற்கும், திருகோணமலைச் சமூகத்திற்கும், மனமகிழ்வை தருகிறது. இன்று எட்டுத் திக்கும் பரந்து வாழும் எண்ணற்ற கல்வியாளர்களின் உருவாக்கத்திற்கு வழிசமைத்து, நற்பெயர் பெற்று இயங்கும் இக்கல்லூரியின் சிறப்பும், பெருமையும் என்றும் வான்கொண்ட வளர்பிறையே.

125வது ஆண்டு விழா மலரானது, பல தசாப்த காலங்களாக இந்துக்கல்லூரியின் கல்வி வளர்ச்சிக்கும், பௌதீக வளர்ச்சிக்கும் அடியாதாரமாக இருந்த அனைத்து விடயதானங்களையும் ஆவணமாக வெளிக்கொணர்வதையும், கல்லூரியின் வளர்ச்சிக்கு, இதயசுத்தியோடும், அர்ப்பணிப்போடும் செயலாற்றிய திறன்மிக்க நல்லாசான்களை நினைவு கூர்வதையும், கருவாகக் கொண்டுள்ளது. இவ்வாக்கமானது மிகத் துல்லியமாக தகவல்களைத் திரட்டி, பல ஆளுமைமிக்க எழுத்தாளர்களால் படைக்கப்பட்டிருப்பதால், எதிர்காலக் கல்விச் சமூகத்தினருக்கு மிகவும் பயன்மிக்க ஆவணமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. பழைய மாணவர்களின் முழுப் பங்களிப்புடன் கொண்டாடப்படும் இந்நிகழ்வும், நிகழ்வையொட்டி வெளியிடப்படும் இரு ஆக்கங்களான, '125வது ஆண்டு விழா மலரும்', இந்துக்கல்லூரயின் வரலாறும் வளர்ச்சியும் என்ற மலரும் கல்லரியின் தகவல்கள் அனைத்தையும் தாங்கி வரும் பதிப்பாகும்.

எதிர்கால மாணவச் செல்வங்கள், கல்லூரி பற்றிய பெறுமதிமிக்க தகவல்களை அறிய விரும்பும் போது, இம்மலர் அவர்களுக்கு உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை. கல்லூரி தோன்றி, வேர் ஊன்றிய காலம் வரையிலான சகல தகவல்களும் இம்மலரில் அடக்கம். 'மாணவிகள் கற்ற காலம் மனதில் வந்த போது...' எனும் தலைப்பில் பெண்களின் கல்வியும், அவர்களின் துணிச்சல் மிக்க சாதனைகளும், ஆளுமைமிக்க எழுத்தாளரினால் இங்கு அழகாக வெளிக் கொணரப்பட்டுள்ளது. பெயர் பெற்ற நல்லாசான்களின் பெருமையும் இம்மலரில் சுட்டப்பட்டுள்ளது. அற்றை நாட்களில் அம்மாணவர்கள் கூடிக்குலாவிக் கற்ற பள்ளி வாழ்க்கை, இந்நூலின் மூலம், இற்றை நாட்களில் கற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாணவர்களுக்கு நல்விருந்தாய் அமைவதுடன், 'பிற்றை நிலை முனியாது, கற்றல் நன்றே!' எனப் புகட்டவும் இந்நூல் உதவும்.

விற்ற பொருள் வாங்க விலை கொடுக்கும் செல்வமும், உற்ற துணை காக்க ஓர்மம் கொள்ளும் வீரமும், கற்ற கல்விக்கு ஈடில்லை எனக் கூறும் கருத்தும் இம்மலரில் உண்டு. முற்றத்து மல்லிகை போல் முன் நிற்கும் இக் கல்லூரியின் வாசத்தை நுகர்ந்து, வாழ்வில் முன்னேறவும் இந்நூல் வழிகாட்டும்.

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வசிக்கும் பழைய மாணவர்களின் பங்களிப்பு மிகவம் பாராட்டுதலுக்குரியது. 125 வது ஆண்டு விழாவின் நாயகர்கள் பழைய மாணவர்கள் எனக்கூறுவதில் தவறேதுமில்லை. 125வது ஆண்டு விழாவினையொட்டி வெளியிடப்படவிருக்கும் இந்நூலுக்கு, பழைய மாணவர்களின் ஆதரவும் ஆலேசனைகளும் பயன்மிக்கனவாய் இருந்தன. பழைய மாணவர்களான, கலாநிதி..க.சரவணபவன் அவர்கள், எந்திரி..சி.சந்திரசொரூபன் அவர்கள், மற்றும் எந்திரி.க.விஜயகுமரகுரு அவர்கள் நல்கிய ஒத்துழைப்புகள், பாராட்டுதலக்குரியது. அனைத்து பழைய மாணவர்களுக்கும், பதிப்பாசிரியர் சார்பில் என் நன்றி உரித்தாகட்டும்.

இம்மலர் வெளியீட்டுக்கான முழு நிதிப்பொறுப்பினையும் ஏற்று, இம்மலரினை சிறப்பாக ஆக்குவதற்கு மனமுவந்து பெருமையுடன் சித்தம் கொண்ட, 1975 ம் ஆண்டு கல்வி பொது சாதாரணதர மாணவர்களுக்கும், குறிப்பாக அம்மாணவர்களில் ஒருவரான ப.கபிலன் அவர்களுக்கும் என் நன்றியினை, பதிப்பாசிரியர் என்ற முறையில் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் சகல வழிகளிலும் உதவி நல்கிய, மலர்க்குழு உறுப்பினர்களுக்கும் மற்றும் தகவல்கள் தந்துதவிய சிரேஷ்ட மாணவர்களான திரு.க. தயானந்தகுரு து. குலவீரசிங்கம் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகட்டும்.

வரலாற்றுத் தகவல்களை உறுதிப்படுத்தும் நோக்கில் கல்லூரி நிருவாகத்தை அணுகிய போது, தேவையான தகவல்களைத் தந்துதவிய அதிபர் திரு.செ.பத்மசீலன் அவர்களுக்கும், மற்றும் பிரதி அதிபர்களான திரு.வி.இராஜேந்திரன் அவர்களுக்கும், திரு. என்.பரமேஸ்வரன் அவர்களுக்கும், எனது நன்றியினைத் தெரிவிப்பதோடு, தகவல் சேகரிப்பில் ஈடுபட்ட முன்னாள் அதிபர் திரு.மா.இராசரெத்தினம் அவர்களுக்கும், என் நன்றியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன். அட்டைப் படவடிவமைப்பில் உதவிய, எமது கல்லூரி ICT ஆசிரியர் திரு.S.செந்தில்நாதன் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவிப்பதுடன், நன்றி கூறமறந்த நெஞ்சங்களுக்கும் நன்றி கூறி, பணிவுடன் விடைபெறுகின்றேன்.

**பதிப்பாசிரியர்:**
**சண் பாரதிநாதன்**
**மேனாள் செயலாளர்**
**பழைய மாணவர் சங்கம்**
**இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி**
**திருகோணமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லார் குணங்கள்
உரைப்பதும் நன்றே
அவரோடு இணங்கி இருப்பதும்
நன்று"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஸ்தாபகர்கள்

திருக்கோணமலை இராமகிருஷ்ண மிஷன் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி பத்தொன்பதாம் நூற்றாண்டின் மிகப் பிந்திய ஓர் ஆண்டில் 1897 இல் தொடங்கப்பட்டிருக்கின்றது. திருக்கோணமலை நகரில் வாழ்ந்த நல்லுள்ளம் படைத்த சில இந்துப் பெரியோர்களினால் ஒரு சிறிய பாடசாலையாக தொடங்கப்பட்ட இக்கல்வித்தாபனம் இன்று நூற்றிருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்து தேசிய அளவிலும், மாகாண, மாவட்ட நிலைகளிலும் புகழ் வாய்ந்த ஒரு கல்லூரியாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றது. தியாக சிந்தையுடன் பணிபுரிந்த ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவை காரணமாக இச்சிறிய பாடசாலை வரலாற்றில் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களைக் கடந்து வந்து இன்று ஒரு முன்னணிக் கல்லூரியாக சமூகத்திற்கு தனது கல்விச் சேவையை ஆற்றிக் கொண்டிருக்கின்றது.

இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சராக இருந்த கௌரவ சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா அவர்களது சகலருக்கும் இலவசக்கல்வி, தாய்மொழியில் கல்வி போன்ற புரட்சிகரமான விதப்புரைகள் காரணமாகவே இந்நாட்டில் கல்வி சனநாயகப்படுத்தப்பட்டது. 1940 களிலிருந்து ஏற்பட்ட கல்விப் பரவலாக்கல் நிலைமைகளுக்கு முன்னைய காலப்பகுதியில் குடியேற்ற ஆட்சி முறையின் கீழ் நாட்டில் காணப்பட்ட கல்வி நிலைமைகளை நோக்கும்போது கிராமங்களிலே காணப்பட்ட சுயமொழிப் பாடசாலைகளின் தரம் தாழ்ந்த நிலையிலேயே இருந்தது. நாட்டில் பெருந்தொகையாகக் காணப்பட்ட கிராமிய மற்றும் வசதி குறைந்த மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வி வாய்ப்புக்களோ, உயர்கல்வி வாய்ப்புக்களோ கிடைக்கவில்லை. பிரித்தானியருடைய ஆட்சியில் 19ம் நூற்றாண்டின் ஆரம்பக் காலத்திலிருந்து பல்வேறு மிசனறிக் குழுக்கள் கல்வி வழங்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தன. இந்த சமயக் குழுக்கள் நாட்டின் குறித்த பிரதேசங்களில் ஆங்கில மொழிப் பாடசாலைகளையும், சுயமொழிப் பாடசாலைகளையும் அமைத்து நடத்தினராயினும் அக்கால கட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்ட ஆங்கிலக் கல்வியை எல்லா மாணவர்களாலும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

உயர்கல்வி வாய்ப்புகளுக்காகவும், உத்தியோகத் தேவைகளுக்காகவும், சமூக மதிப்புக்காகவும் ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை உணர்ந்த உள்ளூர் சமூக, சமயத் தலைவர்கள் ஆங்கிலக் கல்வியை அளிக்கும் நோக்கில் சில பாடசாலைகளை ஆங்காங்கே ஆரம்பித்தனர். அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட ஒரு பாடசாலை தான் இன்றைய இந்துக்கல்லூரியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1897ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை, சமூகத்தில் மதிப்புடன் திகழ்ந்து கொண்டிருந்த இந்துப் பெரியார்களைக் கொண்ட ஒரு சபையினால் நிர்வகிக்கப்பட்டுக் கொண்டு வந்தது. இந்த முகாமையாளர் சபையில் காலத்திற்கு காலம் பின்வருவோர் இடம்பெற்றிருந்தனர்.

1. திரு.க.வல்லிபுரம்பிள்ளை முதலியார்
2. வழக்கறிஞர் ச.விஸ்வலிங்கம்
3. திரு.க.அருணாசலம்
4. திரு.எஸ்.சுப்ரமணியம்
5. திரு.இ.முருகுப்பிள்ளை
6. வழக்கறிஞர் எஸ்.தியாகராசா
7. திரு.வைத்திலிங்கம்

மேற்கூறப்பட்டவர்களே இக்கல்லூரியை தாபித்த பெரியோர்கள் ஆவர். அல்லாமல் இராமகிருஷ்ணமிஷனே இக்கல்லூரியைத் தாபித்தது என்ற தவறான கருத்து சமூகத்தில் பலரிடம் உள்ளது. கல்லூரியின் தொடக்க கால வரலாறு பற்றி கல்லூரியின் உள்ளக்கமலம் வருடாந்த சஞ்சிகைகளில் கட்டுரைகளாக எழுதப்பட்டிருந்தாலும் அந்த உண்மை சமூகத்திற்கு சரியாக சென்றடையவில்லை என்றே தோன்றுகின்றது. சில பாடநூல்களிலும் கூட, திருக்கோணமலை இந்துக்கல்லூரி இராமகிருஷ்ண மிஷனால் உருவாக்கப்படட ஒரு பாடசாலையாகவே தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது திருத்தப்பட வேண்டும்.

அத்துடன் கல்லூரியின் பெயரோடு இராமகிருஷ்ண மிஷன் என்ற சொற்கள் சேர்க்கப்பட்டுள்ளதனாலும் இக்கல்லூரி இராமகிருஷ்ண மிஷனால் உருவாக்கப்பட்டது என்ற எண்ணம் பொது மக்களுக்கு ஏற்படக் காரணமாக இருக்கலாம். 1993ம் ஆண்டில் இந்துக்கல்லூரியும், கோணேஸ்வர வித்தியாலயமும் ஒன்றிணைக்கப்பட்டு தேசிய பாடசாலையாக ஆக்கப்பட்ட போது கல்லூரியின் பெயரோடு இராமகிருஷ்ண மிஷன் என்ற பெயரை சேர்ப்பது அவசியமற்றது என்ற கருத்தை கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் அப்போதைய அதிபரும் கல்லூரியின் நிர்வாகிகளும், முப்பத்தியாறு வருடங்களாக இராமகிருஷ்ண மிஷனின் முகாமைத்துவத்தின் கீழிருந்து கல்லூரி பெற்ற மேன்மைகளை எந்நாளும் நினைவுபடுத்திக் கொள்வதற்காகவும், மிஷனுடன் ஆன்மீகத் தொடர்புகளை தொடர்ந்து பேணிக் கொள்வதற்காகவும் இராமகிருஷ்ண மிஷன் என்ற சொற்களை கல்லூரியின் பெயரோடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது கல்லூரிச் சமூகத்தின் விருப்பமாகும் என்பதை வலியுறுத்தினர். அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. இராமகிருஷ்ண மிஷன் என்ற சொற்கள் நீக்கப்படவில்லை தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் பெயர் இராமகிருஷ்ணமிஷன் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி என்றாகியது. ஆகவே இராமகிருஷ்ண மிஷன் என்கின்ற சொற்கள் கல்லூரியின் உத்தியோகபூர்வ பெயரோடு சேர்ந்திருப்பதன் காரணமாக இக்கல்லூரி இராமகிருஷ்ண மிஷனால் ஸ்தாபிக்கப்பட்டது என்ற கருத்தை யாரும் கொண்டிருக்க வேண்டியதில்லை. இராமகிருஷ்ணமிஷனால் மேன்மையடைந்ததை நன்றியோடு நினைவு கொள்வதற்காக அந்த சொற்களை கல்லூரி தனது பெயரோடு இணைத்துக் கொண்டு தொடர்ந்தும் பேணி வருகின்றது.

1897ம் ஆண்டில் ஒரு சிறிய பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு இருபத்தெட்டு வருடங்களுக்குப் பின்னர் 1925ம் ஆண்டில் இப்பாடசாலை சுவாமி விபுலானந்தர் அவர்களால் இராமகிருஷ்ண மிஷனுக்காக பொறுப்பேற்கப்பட்டது என்பதே உண்மையாகும். ஆகவே சுவாமி விபுலாநந்தர் அவர்கள் இந்துக் கல்லூரியை தாபிக்கவில்லை என்பது ஒரு வரலாற்று உண்மையாகும். முன்பு கூறப்பட்ட இந்துப்பெரியார்களே கல்லூரியின் தாபகர்கள் என்பது எல்லோராலும் தெளிவாக விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். சுவாமி விபுலானந்தர் அவர்கள் 1924ம் ஆண்டின் இறுதியில் திருக்கோணமலைக்கு வருகை தந்து மிஷன் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில், மேலே குறிக்கப்பட்ட முகாமையாளர் சபையிலிருந்தோர் பாடசாலையை இராம கிருஷ்ணமிஷனின் முகாமைத்துவத்திற்கு ஒப்படைப்பது என்று தீர்மானித்ததையடுத்து 01.06.1925 இல் பாடசாலையை சுவாமி விபுலானந்தரிடம் கையயளித்தனர் என்பது ஒரு வரலாற்றுப் பதிவாகும். நூற்றியிருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்து புகழ் பெற்ற ஒரு கல்வி நிறுவனமாக மிளிர்ந்து கொண்டிருக்கும் ஒரு கல்லூரியின் தொடக்க கால வரலாற்றை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தவறுகள் நேரக்கூடாது.

125 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்ட இப்பாடசாலையின் தாபகர்களான இப்பெரியார்களைப் பற்றி இன்றைய தலைமுறையினர் பெரிதாக அறிந்திருக்க மாட்டார்கள். ஆயினும் இவர்களுடைய உறவினர்கள், வழித்தோன்றல்கள், வாழ்விடங்கள் பற்றிய விபரங்களை தெரிந்து கொள்ளும் போது இப்பெரியார்களை இனம் கண்டு கொள்ள முடியும். இவர்களுடைய வழித்தோன்றல்கள் இன்றைய நிலையில் நான்காம் அல்லது ஐந்தாம் தலைமுறையினராகவே காணப்படுகின்றனர். அநேகமானோர் புலம்பெயர்ந்து வேறு நாடுகளுக்குச் சென்று விட்டனர். ஒரு சிலர் கொழும்பிலும் இன்னும் சிலர் திருக்கோணமலையிலும் வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு.க.வல்லிபுரம்பிள்ளை முதலியார்

பாடசாலையைத் தாபித்த பெரியோர்கள் முகாமையாளர் சபையாக இருந்து நிர்வாகம் செய்து வந்தார்கள். இந்த முகாமையாளர் சபையின் தலைவராக திரு.க.வல்லிபுரம்பிள்ளை முதலியார் அவர்கள் கடமையாற்றியுள்ளார். இவர் முல்லைத்தீவை பூர்வீகமாகக் கொண்டவர் எனக் கூறப்படுகின்றது. இவர் உள்ளூர் சபையின் (Load Board) செயலாளராக கடமையாற்றிருக்கின்றார். இவரது தந்தையார் கனகசிங்க முதலியார் ஆவார்.

இலங்கை சட்டவாக்க சபையின் திருக்கோணமலைத் தொகுதியின் பிரதிநிதியாக (1924 - 1930) தெரிவு செய்யப்பட்டவரும், இலங்கையின் முதலாவது அரச சபைக்கு (1931 - 1935) திருக்கோணமலை - மட்டக்களப்பு தொகுதியின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டவருமான திரு.எம்.எம்.சுப்பிரமணியம் அவர்கள், திரு.க.வல்லிபுரம் பிள்ளை முதலியார் அவர்களின் சகோதரியான அழகம்மா அவர்களை திருமணம் செய்து கொண்டார். திரு.எம்.எம்.சுப்பிரமணியம் அவர்களும் முதலியார் பரம்பரையைச் சேர்ந்தவரே. மயில்வாகன முதலியார் சுப்ரமணியம் என்பது இவரது முழுமையான பெயராகும். திரு.எம்.எம்.சுப்ரமணியம் அவர்களின் மகன்களில் ஒருவரான திரு.அ.அழகுராஜா அவர்களின் மகனாகிய திரு.அ.சிவலோகநாதன் அவர்கள் பின்னாட்களில் (1978 - 1989) இராம கிருஷ்ணமிஷன் இந்துக் கல்லூரியின் அதிபராக கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். திரு.எம்.எம்.சுப்ரமணியம் அவர்கள் வில்லூன்றி கந்தசாமி கோவில், வீரகத்திப் பிள்ளையார் கோவில் ஆகியவற்றின் அறங்காவலர் சபையின் முகாமையாளராகப் பணி செய்துள்ளார். அத்துடன் தனக்குச் சொந்தமான காணிகள் பலவற்றை கோவில்களுக்கு வழங்கியுள்ளார். திருக்கோணமலை இந்து மயானத்திற்கான காணியையும் இவரே கொடுத்திருந்தார்.

திரு.க.வல்லிபுரம்பிள்ளை முதலியார் அவர்களுக்கு மயில்வாகனம், குமாரசாமி ஆகிய இரு மகன்மாரும், சிவபாக்கிய சவுந்தரம்மா, தங்கநாச்சியார், சவுந்தரநாயகி அழகுபாக்கியம் ஆகிய மூன்று மகள்மாரும் இருந்தார்கள். இவர்களுடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் இந்துக் கல்லூரியில் கற்றிருக்கின்றனர். திரு.க.வல்லிபுரம்பிள்ளை முதலியாரின் ஐந்தாம் தலைமுறையைச் சேர்ந்த வாரிசுகள் சிலரும் இப்பொழுதும் கல்லூரியில் கற்றுக் கொண்டிருக்கின்றனர்.

## வழக்கறிஞர் ச.விஸ்வலிங்கம்

முகாமையாளர் சபையிலே இடம்பெற்றிருந்த இன்னுமொரு முக்கியமான உறுப்பினர் வழக்கறிஞர் விஸ்வலிங்கம் அவர்கள் ஆவார். இவருடைய தந்தையார் திரு.சரவணமுத்து, தாயார் திருமதி. அழகம்மா ஆவர். திருக்கோணமலை பிரதான வீதியில் லிங்க விலா என்ற வீட்டிலே இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தார். இவருக்கு கனகசபாபதி (பொதுச்சுகாதார பரிசோதகர்), பாக்கியதுரை (வழக்கறிஞர்), இராஜதுரை (நீதிமன்ற பிஸ்கால்), சிவானந்தம் (காசாளர், நகரசபை) ஜெகதீசன் ஆகிய ஐந்து மகன்மாரும், தையல்நாயகி, விசாலாட்சி நேசரத்தினம், சிவபாக்கியம், மகேஸ்வரி ஆகிய நான்கு மகள்மாரும் இருந்தனர்.

இவருடைய மூத்த மகனாகிய கனகசபாபதி என்பவருடைய மகன் தான் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் அவர்கள். வழக்கறிஞர் விஸ்வலிங்கம் அவர்களின் பேரப்பிள்ளைகளும் அவர்களின் வழித்தோன்றல்களும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழ்கின்றனர். சிலர் இந்துக்கல்லூரியில் கல்வி கற்றுள்ளார்கள். இவருடைய இன்னொரு மகன் திரு.சிவானந்தம் அவர்களின் மகன் திரு.சச்சிதானந்தம் அவர்கள் 1960களிலே இந்துக் கல்லூரியில் க.பொ.த சாதாரணதரம் வரை கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். திரு.சிவானந்தம் அவர்களுடைய மூத்தமகள் தட்சாயினி அவர்கள் திருக்கோணமலையின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சிவபாலன் அவர்களின் மகனாகிய வைத்தியர் வரதராஜன் அவர்களை திருமணம் செய்தார். வைத்தியர் வரதராஜனுக்கும் அவரது சகோதரர்களுக்கும் உரித்தான மின்சார நிலைய வீதியிலுள்ள 168 பேர்ச் பரப்பளவுள்ள காணியில்தான் இந்துக்கல்லூரியின் ஆரம்பபிரிவு வளாகம் இன்று இயங்கிக் கொண்டிருக்கின்றது. காணி உரித்தாளர்களுக்கு கல்வி அமைச்சின் மூலம் நஷ்டஈடு வழங்கி 2006ம் ஆண்டில் இந்துக்கல்லூரி இக்காணியை சுவீகரித்துக் கொண்டது.

இப்போதைய சட்டமா அதிபர் திரு.சஞ்ஜே இராஜரெட்ணம் அவர்களின் பேரனார் பிரபல வழக்கறிஞர் திரு.டி.இராஜரெட்ணம் அவர்கள் திருக்கோணமலை நகரசபையின் முதலாவது தலைவராக 1940ம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டிருந்தார். திரு.டி.இராஜரெட்ணம் அவர்களின் தாயார் திருமதி.துரையப்பா வன்னியனார், மனைவியின் தந்தையார் நொத்தாரிசு நடராஜபிள்ளை ஆகியோர் வழக்கறிஞர் விஸ்வலிங்கம் அவர்களின் சகோதர, சகோதரிகள் ஆவர்.

1897ம் ஆண்டில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போது வழக்கறிஞர் விஸ்வலிங்கம் அவர்கள் ஒரு பகுதி காணியை வழங்கியதாகவும், ஒரு கட்டிடத்தை அமைத்துக் கொடுத்ததாகவும் கூறப்படுகின்றது. இந்து மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியை புகட்டும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற கரிசனை கொண்டவராக இவர் இருந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. க.அருணாசலம்

திரு.அருணாசலம் அவர்களது தந்தையார் திரு.கதிரேசு அவர்கள் ஆவார். இவர் இராஜவரோதயம் வீதி 56ஆம் இலக்க இல்லத்தில் வாழ்ந்திருக்கின்றார். திரு.க.அருணாசலம் அவர்கள் தொழில் முறையில் ஒரு ஆயுர்வேத வைத்தியர் ஆவார். இவருக்கு மூன்று பெண் பிள்ளைகளும், இரண்டு ஆண்பிள்ளைகளும் இருந்தார்கள். மூத்த மகள் திரு.ஏரம்பு அவர்களையும், இரண்டாவது மகள் திரு.அருணாசலம் அவர்களையும், அடுத்த மகள் திரு. சிவகுருநாதன் அவர்களையும் திருமணம் செய்தார்கள். மகன்மாரில் மூத்தவர் திரு.சந்திரசேகரம், இளையவர் திரு.சிவபாதசுந்தரம் ஆவர்.

மூத்த மகன் திரு.சந்திரசேகரம் அவர்கள் இந்துக்கல்லூரியின் ஒரு புகழ்பூத்த மாணவராவர். ஆரம்ப, இடைநிலைக் கல்வியை இந்துக் கல்லூரியில் கற்று (1921-1931), கேம்பிரிட்ஜ் சீனியர் பரிட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றார். அதன் வழியாக இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் இலண்டன் பல்கலைக்கழக வெளிவாரி மாணவனாக இணைந்து பட்டப்படிப்பை மேற்கொண்டு 1937ம் ஆண்டில் திருக்கோணமலை மாவட்டத்தின் முதலாவது விஞ்ஞானப் பட்டதாரியாக தேறினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர் இந்துக் கல்லூரியிலேயே ஆசிரியராக நியமனம் பெற்று கடமையாற்றி, 1944இல் பாடசாலைப் பரிசோதகர் நியமனம் பெற்று, படிப்படியாக உயர்வுகள் பெற்று 1966இல் பிரதம கல்வி அதிகாரியாகியனார்.

திரு.க.அருணாசலம் அவர்கள் முகாமையாளர் சபையிலிருந்து பணியாற்றியதோடு சமூக வேலைகள் பலவற்றிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். 20.10.1939ம் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் கிழக்கு மாகாணத்தில் திருக்கோணமலை மாவட்டத்திற்குரிய தமிழ் பேசும் யூரர்களுக்கான பட்டியலில் திரு.க.அருணாசலம் அவர்களது பெயர் பதிவு செய்யப்பட்டிருப்பதை காணமுடிகிறது.

## திரு.எஸ்.சுப்பிரமணியம்

திரு.எஸ்.சுப்ரமணியம் அவர்கள் திருக்கோணமலை கச்சேரியில் காசாளராகக் கடமையாற்றியவர் ஆவார். இவருக்கு ஞானகணேசன், இராஜநாதன், முருகையா ஆகிய மகன்மார் இருந்தனர். இவர்களில் இளையமகன் திரு.முருகையா அவர்கள் சிறந்த உதைபந்தாட்ட வீரனாக இருந்தார். இள வயதிலேயே அவர் காலமாகி விட்டார். மூத்த மகன் திரு.ஞானகணேசன் அவர்களுக்கு சுப்ரமணியம், சுவாமிநாதன் ஆகிய மகன்மாரும், தையல்நாயகி, சீமந்தினி, தர்மசம்வத்தனி ஆகிய மகள்மாரும் இருந்தனர். இவர்களில் தையல்நாயகி அவர்களுடைய கணவர் திரு.ஆ.ஆ.ஜெயரெட்ணம் அவர்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபையில் பணிப்பாளராகக் கடமையாற்றியிருந்தார். இவர் இந்துக் கல்லூரியின் பழைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் என்பதோடு, கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராகவும் 1987 - 1992 காலப்பகுதியில் கடமையாற்றியிருந்தார். இவருடைய மகன்மார், மருமகன் என்போரும் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்களே.

திரு.ஞானகணேசன் அவர்களது மகன்மாராகிய திரு.சுப்ரமணியம், திரு.சுவாமிநாதன் ஆகியோரும் இந்துக் கல்லூரியிலேயே கற்றார்கள். திரு.எஸ்.சுப்ரமணியம் (முகாமையாளர் குழு) அவர்களது இன்னொரு மகனாகிய திரு.இராஜநாதன் அவர்கள் திருக்கோணமலை நகர சபையில் காசாளராக கடமையாற்றிருந்தார். இவருக்கு மகேந்திரன், லோகேந்திரன், ரவிவர்மன் ஆகிய மகன்மாரும் இருந்தனர். மகன்மார் மூவரும் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்களே. அவர்களில் ஒருவரான திரு.ரவிவர்மன் அவர்கள் இந்துக்கல்லூரியின் கனடா பழையமாணவர் சங்கக் கிளையின் செயலாளராகவும் கடமையாற்றியிருந்தார்.

திரு.எஸ்.சுப்ரமணியம் (முகாமையாளர் குழு) அவர்களின் துணைவியார் திருமதி.தையல்நாயகி அவர்கள் திருக்கோணமலைத் தமிழ் அறிஞர் திரு.தி.த.கனகசுந்தரம்பிள்ளை அவர்களின் சகோதரியாவார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் வித்தியாலயம் வீதியிலுள்ள றோஸ் பீல்ட் என்ற வீட்டிலேயே வாழ்ந்து வந்தனர். இதே வீட்டில் தான் பின்னாட்களில் சுவாமி விபுலானந்தர் அவர்களும் வாழ்ந்திருந்தார். திருக்கோணமலைக்கு வருகை தந்த சுவாமி விபுலானந்தர் அவர்கள் றோஸ் பீல்ட் என்றழைக்கப்படும் இந்த வீட்டில் தான் 1925ம் ஆண்டில் இராமகிருஷ்ணமிஷன் ஆச்சிரமத்தை அமைத்து செயற்பட்டார்.

## திரு. இ.முருகுப்பிள்ளை – நில அளவையாளர்

முகாமையாளர் சபையில் பிற்பட்ட காலத்தில் ஒருவராக இணைந்து திரு.இ.முருகுப்பிள்ளை அவர்கள் பணிபுரிந்துள்ளார். திரு.இராமலிங்கம் அவர்களின் மகனாக திருக்கோணமலையில் 1893ம் ஆண்டில் இவர் பிறந்தார். அரசாங்க நில அளவையாளராக கடமையாற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தின் அறங்காவலர்களில் ஒருவராகவும் இருந்தார். திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை புனருத்தாரணம் செய்து 1963ம் ஆண்டில் கும்பாபிஷேகத்தை நடாத்தி வைக்கும் கைங்கரியத்தில் இவர் மிகக் கரிசனையோடு பணியாற்றிருந்தார். 1930ம் ஆண்டிலேயே இராமகிருஷ்ண மிஷன் செயற்குழுவில் உறுப்பினராகச் சேர்ந்து பல ஆண்டுகள் தொண்டாற்றினார். மிஷன் சிறந்த முறையில் இயங்குவதற்கு பெரிதும் உதவினார்.

19ம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் (1897) தொடங்கப்பட்ட இக்கல்லூரியின் முகாமையாளர் சபையில் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு இளைய உறுப்பினராக இணைந்து திரு.இ.முருகுப்பிள்ளை அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றியிருக்கின்றார். கோவில்கள், பாடசாலைகள், சமய நிறுவனங்கள் என்பவற்றின் சீரான இயக்கம் தொடர்பான அக்கறையைக் கொண்டவராக இருந்தார். 1925ம் ஆண்டில் கல்லூரியை இராமகிருஷ்ண மிஷன் கையேற்ற பின்னரும் கல்லூரியின் வளர்ச்சிக்காக சுவாமி விபுலானந்தர் அவர்களுக்குத் துணையாக நின்று செயலாற்றியுள்ளார். இவர் திருக்கோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தின் முகாமைக் குழுவிலும் இருந்து பணியாற்றியுள்ளதாக சில குறிப்புக்களிலிருந்து அறிய முடிகின்றது.

வைத்தியர் கனகசபாபதி அவர்களின் மூத்த மகள் அன்னம்மா அவர்களை திரு.இ.முருகுப்பிள்ளை அவர்கள் திருமணம் செய்திருந்தார். மனைவியின் மறைவுக்குப் பின்னர் மனைவியின் இளைய சகோதரி கமலநாயகி அவர்களை திருமணம் செய்தார். இவர்கள் இருவரும் வைத்தியர் நமசிவாயம் அவர்களின் சகோதரிகள் ஆவர். வைத்தியர் நமசிவாயம் அவர்கள் 1950ம் ஆண்டுகளிலும் அதற்கு முன்னராகவும், திருக்கோணமலை நகரசபையின் உறுப்பினராகவும், உபதலைவராகவும் கடமையாற்றி இருக்கின்றார்.

திரு. இ.முருகுப்பிள்ளை அவர்களுக்கு தனலெட்சுமி, பத்மாவதி, சரோஜினி, மகேஸ்வரி ஆகிய நான்கு மகள்மாரும், பாலகிருஷ்ணன் என்ற ஒரு மகனும் இருந்தனர். திரு.மு.பாலகிருஷ்ணன் அவர்களும் அரசாங்க நில அளவையாளராகவே கடமையாற்றினார். திரு.இ.முருகுப்பிள்ளை அவர்களின் மகன், திரு.மு. பாலகிருஷ்ணன் அவர்களும், மருமக்கள் திரு.சிவசுப்பிரமணியம் (பிரதி பொது முகாமையாளர், மகாவலி அபிவிருத்திச் சபை), திரு.நவரெட்ணம் (நில அளவையாளர், ஆற்றுப் பள்ளத் தாக்குகள் அபிவிருத்திச் சபை) ஆகியோரும் திருக்கோணமலை இந்துக் கல்லூரியிலேயே கல்வி கற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தனது இறுதிக் காலத்தில் கொழும்பில் வாழ்ந்த திரு.இ.முருகுப்பிள்ளை அவர்கள் 19.05.1976இல் காலமானார்.

## திரு.தியாகராஜா – வழக்கறிஞர்

## திரு.வைத்திலிங்கம்

முகாமையாளர் சபையில் இடம்பெற்றிருந்ததாக குறிப்பிடப்பட்ட மேற்குறித்த இருவரைப் பற்றியும் தகவல்கள் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இவர்களுடைய குடும்ப உறவுகள், தொடர்புபட்டோர் பற்றி அறிந்து கொள்வதற்கு முயற்சித்த போதும் அது சாத்தியமாகவில்லை. வழக்கறிஞர் திரு. தியாகராஜா அவர்கள் குடும்பத்தினருடன் பருத்தித்துறை சென்று அங்கே வாழ்ந்தார் எனவும், நீதிமன்ற வழக்குகளுக்காக திருக்கோணமலைக்கு சில தடவைகள் வந்து சென்றுள்ளார் என்றும் அவருடைய இளைய சகோதரரான வழக்கறிஞர் இரட்ணசிங்கம் அவர்களும் நீதிமன்ற வழக்குகளுக்காக திருக்கோணமலைக்கு 1970களில் வந்து சென்றுள்ளார் என்றும் சில செய்திகளை மாத்திரமே அறிந்து கொள்ள முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே குறிப்பிடப்பட்ட முகாமையாளர் சபையின் உறுப்பினர்கள் யாவரும் நந்நோக்கத்துடன் பாடசாலையை சரியான திசையில் வழி நடாத்திச் சென்றார்கள். ஆசிரியர்கள் தன்னலமற்ற தியாக சிந்தையுடன் பணியாற்றினார்கள். இவையே இந்தப் பாடசாலையின் நிதானமானதும் உறுதியானதுமான வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

அந்த நாட்களிலே பாடசாலையில் மாணவர்கள் நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றும் செயற்பாடுகளும் இருந்தன. அவ்வாறு தயாரிக்கப்பட்ட "அல்லி - அருச்சுனா" என்ற நாடகம் மேடையேற்றப்படும் போது ஒரு மாணவனால் இயற்றப்பட்டு நாடகம் தொடங்குவதற்கு முன்னதாக பின்வரும் வணக்கப் பாடல் பாடப்பட்டது.

"திரிகோணமலை சேர் வளவை தினமும் எண்ணி
வருபவராம் சுப்பிரமணியச் சிறாப்பர், வைத்திலிங்கம்
பரிவொடு காத்திடு மனேஜர் வல்லிபுரம் பிள்ளை முதலி
குரவோர் தம் மலர்ப்பாதம் உகந்து கும்பிட்டேனே."

பாடசாலையை முகாமை செய்து கொண்டிருந்த பெரியோர்கள் சிலரின் பெயர்கள் இப்பாடலில் இடம்பெற்றிருப்பதைக் கவனிக்கலாம். நாடகத்தை தொடங்குவதற்கு முன்னதாக அவர்களை வணங்கும் வகையில் இப்பாடல் அமைந்திருக்கின்றது.

பாடசாலையைத் தாபித்து இருபத்தெட்டு வருடங்களாக அதனை முகாமை செய்த பெரியோர்களை கல்லூரி என்றும் நினைவில் வைத்திருக்கும். இந்த 28 வருட தொடக்க கால வரலாற்றை சமூகத்திற்கு தெளிவாக பதிய வைக்க வேண்டிய பொறுப்பை கல்லூரி நிர்வாகம் ஏற்று செயற்படுத்த வேண்டும்.

திரு.க.வல்லிபுரம்பிள்ளை முதலியார் அவர்களது தலைமையிலான முகாமையாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம் 01.06.1925 இல் சுவாமி விபுலானநந்தர் அவர்களிடம் கல்லூரி கையளிக்கப்பட்டது. இராமகிருஷ்ண மிஷன் சார்பில் சுவாமி அவர்கள் கல்லூரியைப் பொறுப்பேற்றார். சுவாமி அவர்களது ஆழ்ந்த அறிவின் திறத்தினாலும், கல்விப் பிரச்சனைகளின்பாலுள்ள அகன்ற அனுபவத்தினாலும், முற்போக்குடைய நேரிய சிந்தனையாலும் கல்லூரி துரிதமாக வளர்ந்து சென்றது.

1897இல் பாடசாலை தாபிக்கப்பட்ட காலத்தில் தமிழ்மொழி மூலத்தில் கல்வி போதிக்கப்பட்டதாயினும் சில வருடங்களின் பின்னர் ஆங்கில மொழி மூலத்திலும் கல்வி அளிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் இந்து ஆண்கள் தமிழ் பாடசாலை, இந்து ஆண்கள் ஆங்கில பாடசாலை என இரு பிரிவுகளாக ஒரே நிர்வாகத்தின் கீழ் இயங்கிக் கொண்டிருந்தது. தமிழ்ப்பாடசாலை, ஆங்கிலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை என மக்கள் சுருக்கமாக சொல்லிக் கொள்ளும் வழக்கம் இருந்தது. இந்த இரு பாடசாலைகளையுமே சுவாமி விபுலானந்தர் தாபகர்களிடமிருந்து 1925ம் ஆண்டில் பொறுப்பேற்றுக் கொண்டார். இராமகிருஷ்ண மிஷன் நிர்வாக காலத்திலும் இந்த இரு பாடசாலைகளும் தனித்தனிப் பாடசாலைகளாக தொடர்ந்து இயங்கின. கால ஓட்டத்தில் இந்து ஆண்கள் தமிழ் பாடசாலை இ.கி.மி. ஸ்ரீகோணேஸ்வர வித்தியாலயம் ஆகியது. இந்து ஆண்கள் ஆங்கில பாடசாலை இ.கி.மி. இந்துக்கல்லூரி ஆகியது.

சுவாமி விபுலானந்தர் அவர்களின் நேர்த்தியான வழிகாட்டலுடன் இராமகிருஷ்ண மிஷனின் நிர்வாகத்தில் இந்த இரு பாடசாலைகளும் மேன்மை பெற்றன. புதிய பரிமாணங்களுடன் முன்னேறிச் சென்றன. ஆகவே கல்விச் சமூகத்தில் எமது பாடசாலைகள் உயர் மதிப்பு பெறுவதற்குக் காரணமான சுவாமி விபுலாநந்தர் அவர்களையும் இராமகிருஷ்ண மிஷனையும் என்றும் நினைவில் கொள்ள வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது. அதே போன்று நூற்றியிருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பதாக எமது பிரதேச மக்களுக்கான கல்விச் சேவையை தொடக்கி வைத்த எமது தாபகர்களையும் போற்றி வணங்குவோம்.

**சி.தண்டாயுதபாணி,**
**முன்னாள் அதிபர்,**
**இ.கி.மி ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் வித்தியாசாலையில் என்றும் விபுலாநந்தம்....

திருவாகத் திகழும் திருக்கோணமலைக் குருவாக இருக்கும் கோணநாதப்பெருமானின் வரலாற்றுச் சிறப்புகளும், பெருமைகளும் என்றும் தனித்துவமானவை. ஆதிகாலந் தொட்டுத் திருக்கோணமலையின் அடையாளச் சின்னமாக திருக்கோணேஸ்வரர் ஆலயம் விளங்கி வருகிறது என்பது எம்மூருக்கு கிடைத்த மணிமகுடம். கி.பி. ஏழாம் நூற்றாண்டிற் வாழ்ந்தவரான பன்னிரு திருமுறைகளின் மூத்த நாயகன் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் பாடியருளிய திருத்தலமாக, திருக்கோணேஸ்வரர் ஆலயம் திகழ்கிறது.

திருக்கோணேஸ்வரர் கோவிலில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் பீடுடைய பெருமானும், நகர மத்தியிலிருந்து நல்லாட்சி புரியும் பத்திரகாளி அம்பாளும் திருக்கோணமலை மக்களின் வாழ்வோடு இரண்டறக்கலந்த இருபெரும் தெய்வங்கள். நிச்சயமற்ற எதிர்காலத்தின் நிதர்சனங்களைப் புரிந்து கொள்வதற்கு வாழ்க்கையெனும் ஓடத்திற்கு நம்பிக்கையெனும் துடுப்பு அவசியம். உறுதியான நம்பிக்கைக்கு உரமிடுவது தெய்வங்களின் அருளாசி என்பது மரபுவழி தொட்டு மக்கள் மனங்களிற் படிந்துள்ள இறுக்கமான படிமம்

திருக்கோணமலையின் அழகில் மனதைப் பறிகொடுக்காதோர் அரிதிலும் அரியர். வியக்க வைக்கும் இயற்கை எழில் விழிகளுக்கு விருந்து படைக்க... அங்கே மயக்கமின்றி மௌனமாகும் மானிடத்தின் இரசனைகள்... இயற்கை தந்த சீதனம் அதில் தான் எத்தனை எத்தனை நூதனம்... இறைவன் படைப்பிற் எல்லாமும் இரசனைக்கு உரியவையே..

துள்ளித்திரியும் மான்களும், தோகைவிரித்தாடும் மயில்களும்,

வெள்ளியில்லா விடியலும், விரிந்துகிடக்கும் நீலக்கடலும்,

அள்ளியெழும் அலைகளும், அடிவானத்துச் செந்நிறக்கோலமும்,

பள்ளிமுடித்த பறவைகளும், பகலவனை வரவேற்று நிற்க.

பட்டணத்தின் நடுவே நிமிர்ந்து நின்று பள்ளிக் காலப்பசுமை நினைவுகளை மீட்டிக் கொண்டிருக்கும் இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, 1897ம் ஆண்டு சில சைவபெரியார்களால் ஒரு சிறிய திண்ணைப் பள்ளிக்கூடமாக நிறுவப்பட்டமை வரலாற்று ஆய்வுகளில் இருந்து வடித்தெடுத்த நிதர்சனம்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் அறிஞர், கவிஞர், வீரன், அரசியலார்வலர் மற்றும் துறவி எனும் பல பரிமாணங்களை தன்னகத்தே கொண்டிருந்த ஒரு தனித்துவமான புலமையாளர். அடிகளார் நின்று செயலாற்றிய பரப்பு மிக விரிந்தது. சுவாமியின் தோன்றல், இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் வாழும் மக்களின் அறிவு வளர்ச்சிக்கு ஆதாரமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளாரின் பெற்றோர் தம்பிபிள்ளை எனும் திருநாமத்தை சுவாமிக்கு சூட்டியிருந்தனர். சிறுபராயத்தில் ஏற்பட்டிருந்த பிணி கதிர்காமக் கந்தனுக்கு நேர்த்தி வைத்ததன் விளைவால் நீர்த்ததால், மயில்வாகனன் எனும் நாமம் சூட்டப்பட்டது. சுவாமி அவர்களின் பன்முக ஆளுமையில் முகிழ்த்தெழுந்த பல்துறைசார் அறிவு, தமிழ் மக்களின் கல்வியில் ஓர் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது என்பது முரண்கொள்ளாக் கருத்து. அந்தந்தக் காலகட்டத்தில் கற்க வேண்டியதை கற்றுத்தேறி, அறிவிற் சிறந்த அடிகளாராய் மிளிர்ந்ததன் விளைவாற், சமூகத்தின் அறவியல், அறிவியல் வளர்ச்சிகட்கு அடிகளார் வழிகோலினார். குறுகிய காலத்துள் சுவாமி அவர்கள் ஆற்றிய பயன்மிகு பணிகள் பல.

இந்துக்கல்லூரியில் வியாபித்திருந்த விபுலாநந்தம், திருக்கோணமலை வாழ் மக்களின் கல்வி வளர்ச்சியில் ஓர் பாதையை உருவாக்கியதோடு, அம்மக்களை அதில் இலகுவாகப் பயணிக்கவும் வழி செய்தது. 1917ம் ஆண்டு தொடக்கம் 1922ம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகளின் வளர் கல்விக்கு அடிகளார் வழிகாட்டியிருந்தார். பின்னர், 1924 ம் ஆண்டில் சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ண சங்கத்தில் பிரபோதசைத்தன்யர் எனும் பிரமச்சரிய நாமம் பெற்று அதே ஆண்டில் சித்திரைப் பௌர்ணமி அன்று ஸ்ரீமத் சுவாமி சிவானந்த அடிகளாரினால் ஞானஉபதேசம் பெற்று, சுவாமி விபுலாநந்தர் எனும் துறவி நாமம் சூடினார்.

ஒரு புனித இளந்துறவியாக இலங்கை திரும்பிய அடிகளார், 1925ம் ஆண்டு ஆனி மாதம் முதலாம் திகதி இந்துக் கல்லூரியைப் பொறுப்பேற்றார். சுவாமியின் வருகைக்கு முன் இயங்கிய வித்தியாசாலையில் பல நல்லாசான்கள் கல்வியை வழங்கி வந்த போதிலும், கல்விக்கூடத்தின் தரம் ஆரம்பப் பிரிவுவரை மட்டுமே வளர்ந்திருந்தது என்பதை ஆய்வுகள் துலக்குகின்றன. அன்றைய வித்தியாசாலையை அங்கீகரிக்கப்பட்ட ஒரு உயர்தரக் கல்விக்கூடமாய் மாற்றி, வளர்க்க வேண்டும் என்ற சீரிய சிந்தனை சுவாமியின் உள்ளத்தில் உதித்ததன் விளைவால், வளர்ச்சிக்கான வளத்தேடலில் சுவாமியவர்கள் ஈடுபட்டிருந்தார்.

முதலில் வித்தியாசாலையின் காணிப் பரப்பை விரிவாக்க எண்ணிய சுவாமி அவர்கள் நல்லுள்ளம் கொண்ட திரு.வைத்திலிங்கம் எனும் அன்பர் அளித்த நன்கொடை மூலம் அருகில் இருந்த காணி ஒன்றினை வாங்கினார். பின்னர், அக்காணியில் கட்டடம் அமைப்பதற்கான நிதியினை தம்பலகாமத்தை சேர்ந்த செல்வந்தர் அளித்திருந்தார். இந் நிதியுதவியுடன் கல்லூரியின் இடப்போதாமைக்குத் தீர்வு கண்டார். இவ்வாறு வளர்கல்விக்கான பௌதீகவளப் பெருக்கத்தில் சுவாமி அவர்களின் அர்ப்பணிப்பு மேலோங்கியிருந்ததால், கல்லூரியின் பால் மக்களின் ஆர்வமும் மேலெழுந்தது. வித்தியாசாலையின் தரத்தினை உயர்த்தவதற்கு அடிகளார் பல பிரயத்தனங்கள் மேற்கொண்ட போதிலும், கல்வி அதிகாரிகள் விஞ்ஞான ஆய்வுகூட வசதியின்மையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டி, சுவாமியின் முயற்சிக்கு முற்றுப்பள்ளி வைத்தனர். கிழக்கிலங்கை மக்களின் வளர்கல்விக்கு ஒளியூட்டும் எண்ணமிகுதியில் இருந்த சுவாமிக்கு, நிதியின்மை தடைக்கல்லாயிற்று. ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு இதயசுத்தியோடும், அர்ப்பணிப்போடும் ஈடுபடும் போது இறைவனின் அருட்பார்வை கிடைக்கும் என்பதை மெய்ப்பிப்பது போல், இறக்கும் தருவாயில் இருந்த செல்வந்தர் கொறுக்காயன் சின்னத்தம்பி அவர்கள் மூலம் கிடைத்த ஒரு தொகைப்பணத்தினைக் கொண்டு, கல்லூரிக்கான விஞ்ஞான ஆய்வுகூடத்தினை நிறுவினார்.

சுவாமி அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் ஆசிரியர்களுக்கு ஓய்வில்லை புதுப்புது முறைகளை மாணவர்களுக்கு கற்பித்தல் வேண்டுமெனவும் அவ்வாறு ஆசிரியர்கள் புதிய உத்திகளையும், படிப்பித்தல் முறைகளையும் கற்காதிருந்தால் அது பழஞ்சரக்கு வியாபாரம் ஆகிவிடும் என சுவாமி அவர்கள் அடிக்கடி கூறுவதுண்டு. ஆசிரியர்களுக்கு இலகுவில் சினம் வருமானால் அது மாணவர்களின் நிலையை கவலைக்கிடமாக்கி விடும். ஒரு உத்தம ஆசிரியருக்குச் சினம் வராது. பொறுமை அவர்களுக்கு அழகு சேர்க்கும். அன்பு அனைவரையும் பிணைக்கும் ஆழ்ந்த கல்வியறிவு மரியாதையைக் கொண்டுவரும். இந்த உயரிய விழுமியங்கள் நிலவி நின்ற காலம், கல்லூரி மண்ணில் சுவாமியின் காலடிச்சுவடுகள் பதிந்திருந்த காலம்..

கல்லூரி மண்ணில் சுவாமியின் காலடிச்சுவடுகள்
கண்களில் இன்றும் காட்சியாய் வந்துநிற்க,
உள்ளூரின் வளர்கல்விக்கு உரமிட்ட உத்தமனாரை
உள்ளக்கமலத்தில் இருத்தி, உளமார நினைவுகூருவோம்.

சுவாமி அவர்களோடு அண்டியிருந்து அவருக்கு அணுக்கத் தொண்டர்களாக செயலாற்றிய ஏனைய புலமை படைத்த நல்லாசான்களையும் இத்தருணத்தில் நன்றியோடு நினைவு கூருதல், பழைய மாணவர்களாகிய எமக்கு கிடைத்த பெரும் பாக்கியமாகவே நாம் மனங்கொள்ளல் வேண்டும். வித்தகனுக்கு வித்தகன் சிறப்பு என்பதற்கு இணங்க, சுவாமியோடு இணைந்து தங்களது உழைப்பை நல்கியதன் பயனால் தான் இன்று இந்துக் கல்லூரி விரைவு வளர்ச்சி கண்டு, இமயம் தொட்டு நிற்கின்றது என்பது வெள்ளிடைமலை. சுவாமி அவர்களுடன் நடராஜானந்தா அடிகளார், புலவர் மா.பிதாம்பரம், பண்டிதர்கள் பெரியதம்பிப்பிள்ளை, பூபாலப்பிள்ளை போன்றோர்களை இங்கு சுட்டல் கடமை. சுவாமிக்கு பின்னர் அதிபராக பொறுப்பேற்ற ஆங்கிலக் கல்வியிற் புலமை பெற்றிருந்த பி.இராமசந்திரா அவர்களின் பங்களிப்பும் இக்காலத்தில் மேலோங்கிக் காணப்பட்டது. 1932 ஆண்டு கல்லூரி சிரேஷ்ட இடைநிலைத் தரத்திற்கு உயர, சுவாமி அவர்கள் அடித்தளமிட்ட விஞ்ஞான ஆய்வுகூடமே முதன்மைக் காரணமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிற்று. திருகோணமலை வாழ் மக்களின் அறிவு வளர்ச்சியில் பங்கம் ஏற்படக்கூடாது என்ற எண்ணமிகுதியில் என்றும் திளைத்திருந்த சுவாமியின் உழைப்பு வீண்போகவில்லை என்பதற்கு, இந்துக்கல்லூரியில் அடிகளார் கட்டிய இறுக்கமான கல்வித்தளக் கட்டுமானம் கட்டியங்கூறிற்று.

வித்தியாசாலையில் வீசிக்கொண்டிருந்த விபுலாநந்தம் எனும் தென்றல், ஒரு சமயம் காற்றாய் மாறிக் காரியம் சாதித்தது சுவாரசியமே. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் திருக்கோணமலையில் மேலோங்கியிருந்ததால் எம்மூர் மக்களின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களிலும் அது பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது. இப்போக்கினைத் தடுத்து நிறுத்துமாறு தன்னுடைய ஆசியர்களுடனும், மாணவர்களுடனும் கலந்தாலோசித்து, அதன் முடிவாக மகாகவிபாரதியின் பல நூல்களையும், சுவாமி விவேகாநந்தரின் நூல்களையும் மாணவர்களுக்கு வழங்கி, அவர்களின் வீர உணர்வுக்கு வித்திட்டதுடன், சமூக கட்டமைப்பிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, எம் கலை கலாசார விழுமியங்களின் காவலனாயும் நின்றார். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வருடாவருடம் சாம்ராஜ்ய தினம் (Empire Day) கொண்டாடுவது வழமை. இந்நிகழ்வில் விளையாட்டுப் போட்டிகள் முக்கிய இடம் பிடிப்பதுடன், அப்போட்டிகளின் பரிசில்களையும், பாராட்டுதல்களையும் ஒவ்வொரு வருடமும் ஆங்கிலப்பாடசாலைகள் தட்டிச்செல்வர். அன்றைய தினம், திருக்கோணமலை நகரம் அவர்களின் வெற்றிக்களிப்பில் மிதக்கும். இந்நிகழ்வு, இந்துக்கல்லூரி மாணவர்கள் மனதில் சோர்வினை ஏற்படத்தியிருந்ததை கண்ணுற்ற சுவாமி அவர்கள், ஆசிரியர்கள், மாணவர்களை அழைத்து, பல அறிவுறுத்தல்களை வழங்கியதுடன், மாணவர்களுக்கு உரிய விளையாட்டுப் பயிற்சிகளை வழங்கவும் அறிவுறுத்தினார்.

சாம்ராஜ்ய தினம் வந்தது, வழமைபோல் வெற்றிக்கனியை சுவைக்கும் நோக்கில் வழமையான வாத்தியக் கருவிகளின் ஆரவாரங்களுடன் ஆங்கிலப் பாடசாலைகள் அணிவகுத்தன. சுவாமியின் அறிவறுத்தலுக்கு அமைய சமய கலாசார பண்புகள் மேவிநிற்க, வெள்ளைநிற ஆடைகள் அணிந்து இந்துக்கல்லூரி மாணவர்கள் அணிவகுத்துச் சென்றனர். போட்டிகள் தொடங்கின ஒவ்வொரு போட்டியிலும் இந்துக்கல்லூரியின் பெயர் ஓங்கி ஒலித்தது. ஆங்கிலப் பாடசாலைகளின் ஆரவாரங்களை அமைதி மெல்ல மெல்ல அமிழ்த்தியது. இந்துக்கல்லூரி மாணவன் சம்பியனாகத் தெரிவானான். அம்மாணவவனை ஊர்வலமாகச் சுமந்து வந்த காட்சி எழுச்சியும், மகிழ்சியும் மிக்கதாய் பதிவாகியது. சுவாமி விதைத்த வீர உணர்வின் விளைச்சல், கல்லூரிச் சமூகத்திற்கும், திருகோணமலைச் சமூகத்திற்கும் மதிப்பையும், கௌரவத்தையும் வீரஉணர்வையும் வழங்கியது. இந்நிகழ்வு கல்லூரியின் பால் மக்கள் ஈர்க்கப்படுவதற்கு வழிகோலியதுடன், வளர்கல்வி பரம்பலுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவகுத்தது. இது சுவாமியின் வீரஉணர்வை வெளிக்காட்டி நின்றதுடன், அர்ப்பணிப்போடும், இதயசுத்தியோடும் செயலாற்றினால் எம்முயற்சியின் இலக்கையும் இடரின்றி எட்டலாம் என்பதையும் எடுத்துக்காட்டி நின்றது.

சுவாமியின் வீரஉணர்வு என்றும் உன்னதமானது, தனித்துவமானது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைத்தலைமைப் பேராசிரியராக பதவிவகித்த காலத்தில், 1932ம் ஆண்டு பட்டமளிப்பு விழா நடைபெற்றது. அது ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் என்பதால் ஆங்கிலேயரின் ஆட்சிக் கொடியான யூனியன் ஜக் (Union Jack) பல்கலைக்கழகத்திலும், பேராசிரியர்கள் இல்லங்களிலும் பறந்து கொண்டிருந்தது ஆனால், சுவாமி விபுலாநந்த அடிகளாரின் இல்லத்தில் மட்டும் சுதந்திரத்திற்காக போராடிக் கொண்டிருந்த இந்தியக் காங்கிரஸின் தேசியக் கொடி பறந்து கொண்டிருந்தது. பட்டமளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக ஆளுநர் அழைக்கப்பட்டிருந்தார். அச்சமயம், அங்கு வந்த பாதுகவலர்களிற் சிலர் சுவாமியின் இல்லத்தில் பறந்து கொண்டிருந்த இந்திய தேசியக்கொடியை இறக்கும் படி அதிகாரத்தோடு பணித்த போதும், இறக்காமல் மறுத்துச் சாதித்துக் காட்டிய வீரத்துறவியின் தேசப்பற்றும், சுதந்திர வேட்கையும், இன்றும் பெருமையுடன் பேசப்படுகின்றன. இந்திய சுதந்திரத்தின் வாயிலாக ஈழமும் சுதந்திரக்காற்றைச் சுவாசிக்க வேண்டும் என்ற தேசப்பற்று, அன்று அடிகளார் அடிமனதிற் வேரூன்றியிருந்தது.

விரிந்து வியாபித்து இருக்கும் வான்வெளியில் எவ்வாறு நிலவொளி பரவிக் காணப்படுகிறதோ அவ்வாறே சுவாமியின் ஆளுமையிற் பிறந்த அறிவொளியும் ஈழமண்டலத்திலும், சோழமண்டலத்திலும் பரவிக் காணப்பட்டது. தமிழ் நாட்டில் உயர்சாதிப் பிராமணர்களின் குரல் உயர்ந்திருந்த காலத்தில், சாதிகள் இல்லையெனச் சமத்துவம் பேசிய பாரதியின் கவிதைகள் புறக்கணிக்கப்பட்ட வேளையில், அடிகளார் பாரதியின் கவிதைகளின் கருத்தாழத்தைப் பல்கலைக்கழகத்திலும் பொது மேடைகள் ஊடாகவும் எடுத்துக்கூறி, அக்கவிதைகளுக்கு உயிர் கொடுத்துப் பின்னாளில் மகாகவி பாரதியார் என விளித்த தனிப்பெருமை விபுலாநந்த அடிகளாருடையது. இதே காலகட்டத்தில் தான் திருவேட்களம் எனும் தாழ்த்தப்பட்ட சேரிமக்கள் வாழ்ந்த பகுதிகளுக்கு நேரடியாக சென்று அம்மக்களின் வளர்கல்விக்கு வழிகாட்டினார். இவ்வாறான நற்சேவையில் சுவாமியவர்கள் இருந்த போது, உயர் சாதிப்பிராமணர்களினால் ஓரங்கட்டப்பட்டு, பல இன்னல்களுக்கும் முகம் கொடுத்திருந்தமை, ஓர் கசப்பான உண்மையே.

சுவாமி அவர்களின் பன்முக ஆளுமையில் விரிந்து கிடக்கும் விடயதானங்களில் சிலவற்றை இங்கு சுட்டல் சுவையானது. கல்விப்பணி, ஆசிரியப்பணி, சொற்பொழிவுப்பணி, ஊடகப்பணி, மொழிபெயர்ப்புப்பணி, கலைச்சொல் ஆக்கப்பணி, ஆய்வுப்பணி என்பன அவற்றுள் அடக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியின் கலைச் சொல்லாக்கப்பணி முதன்மையானது. 1936 ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற கலைச் சொல்லாக்க மகாநாட்டிற்கு தலைவராகவும், வேதியியல் கலைச்சொல் நூற்குழுவிற்கும் தலைவராகவும் செயலாற்றினர். இசைக்கு யாழ்நூல், இயலுக்கு எண்ணிலடங்காக் கவிநூல்கள், நாடகத்திற்கு மதங்கசூளாமணி எனும் இவ்வாக்கங்கள், அடிகளாரை ஏனைய துறவிகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டிய பிரிகோடு. பதிநான்கு ஆண்டுகளின் ஆய்வில் விளைந்த நித்திலம் யாழ்நூல். நோய்வாய்ப்பட்டு இயலாமல் இருந்த நேரத்திலும் யாழ்நூல் மீது கொண்டிருந்த தீவிரப்பற்றே, அடிகளாரை அரங்கேற்ற முன்றலுக்கு அழைத்துச் சென்றது. அரங்கேற்றம் முடிந்து இருபத்தெட்டாவது நாளில், சுவாமி அவர்கள் இறைபதம் எய்தினார்.

சுவாமியை பற்றி எழுதும் போது என் மனம் மேலும் தூய்மையடைந்ததை உணர்ந்தேன். நல்ல நூல்களை எழுதும் போதும், படிக்கும் போதும் மனம் தூய்மை அடையும் என்று சொல்கிறார்களே, அது இப்படித்தான் இருக்குமோ.... எழுதிமுடியும் தருணத்தை அண்மிக்கும் போது என் மனம் ஒன்றை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தது.

அதுதான்... இந்துக்கல்லூரியில் எழுந்து நிற்கும் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் திருவுருவச்சிலைக்கு தினமும் மலர்கள் வைத்து அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் தங்கள் நன்றிக்கடனை செலுத்தி வரவேண்டும் என்பதே. ஒரு பழைய மாணவனாக, என் பணிவான தாழ்மையான வேண்டுகோளும் அதுவே.

"மனித சக்தி அவன் மனதிலே தான் உள்ளது
வெளியில் ஒன்றுமில்லை
மனதில் ஏதாயினும் ஓர் உயர்ந்த நோக்கம் இருக்க வேண்டும்
வாழ்க்கை அதை நிறைவேற்றிச் செல்ல வேண்டும்."

(சுவாமி விபுலாநந்தர்)

சண் பாரதிநாதன்
முன்னாள் செயளாலர்
பழைய மாணவர் சங்கம்
இ.கி.ச.ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய மாணவர் சங்க செயற்குழு உறுப்பினர்கள்
## ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி



**Front row Left to right :** Mr.N.Kumanan, Mr.K.Rajanikanth, Mr.K.Rathan(Secretary), Mr.S.Pathmaseelan(President), Mr.V.Rajenthiran, Mr.V.Chandrapavan(Treasurer), Mr.M.J.Jeyakanth

**Standing Left to right :** A.Selventhiran, S.Premagithan, M.Vivekshan, I.Vimalathas, Eng.K.Hariprasath, D.B.Prashanthan, K.Umesh, P.G.Suresh

**Absentees :** Mr.K.Pulenthiran, Mr.N.Ratnavadivel, Mr.A.Achchuthan, Mr.V.Chandru,

## பாடசாலை அபிவிருத்தி சங்க செயற்குழு உறுப்பினர்கள்
## ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி



**Front row Left to right :** Mrs.T.Haritharan, Mr.S.Pulenthiran, Mr.S.Baladas(Secretary), Mr.S.Pathmaseelan(President), Mr.V.Rajenthiran, Mr.A.Nimalenthiran(Treasurer), Mr.B.Ketheeswaran.

**Standing Left to right :** Dr.P.Yasotharan, Mrs.T.Srikaran, Mr.P.Suthakaran, Mr.S.Saktheepan, Mr.Srineevasan, Mr. A.Jegatheesan.

**Absentees :** Mr.T.Sivasenthilnathan, Mr.N.Pratheepan, Mr.P.Vamathevan, Mr.P.Thavasithan, Dr.N.Darmenthiran, Eng.Thuvaragan, Audit Thampu Balasubramaniyam, M.Mohanenthiran.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நற்றாமரைக் கயத்தில் நல் அன்னம்
சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞான சிரோன்மணி பண்டிதர் வடிவேலு ஐயா அவர்களின் கல்வி கலாச்சார சமய சேவை மகத்துவம்

இந்து சமுத்திரத்தின் நித்திலமாம் இலங்கைத் திருநாட்டில் தமிழும் சைவமும் தழைத்தோங்க அரும்பெரும் பணியாற்றியவர்களுள் பண்டிதமணி சைவப்புலவர் இ.வடிவேல் ஐயா அவர்கள் முன்னிலை வகிக்கிறார். அன்னார் கிழக்கிலங்கையின் மட்டுமாநகரில் பிறந்து ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கப் பாடசாலையில் பயின்று அங்கேயே ஆசிரியராக பணிபுரிந்த காலத்தில் சுவாமி விபுலானந்தரினதும் மற்றும் ஸ்ரீ ராமகிருஷ்ண பெருந்துறவிகளினதும் அருள் ஆசிகளைப் பெற்றமை பிற்காலத்தில் சமய சமூகப் பணிகளில் ஈடுபடத் தூண்டுதலளித்தது. ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கப் பாடசாலையைத் தொடர்ந்து களுதாவளைத் தமிழ்ப்பள்ளி ஆசிரியராகவும் அதன் பின்பு திருக்கோணமலை இராமகிருஷ்ண சங்க இந்துக்கல்லூரியின் தமிழ் ஆசிரியராகவும் பின்னர் திருக்கோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபராகவும் கடமையாற்றி கல்வித்துறைக்குப் பல வருடங்களாகப் பெரும் பணியாற்றினார். ஐயா அதிபராகப் பணியாற்றிய காலத்தில் பாடசாலை சகல துறைகளிலும் மேலோங்கியிருந்தது.

சிறந்த எழுத்தாற்றலும் நா வண்மையும் கொண்ட புலவர் அவர்கள் தேவாரத் திருப்பதிகங்களைப் பண்ணோடு பாடுவதில் வல்லவர். இவரின் பல கதாப்பிரசங்கங்கள் இலங்கை வானொலியில் பல தடவைகள் ஒளிபரப்பப்பட்டு பலரின் பாராட்டையும் பெற்றது. கிழக்கிலங்கையிலேயே முதன்முதலாகத் திருவாசகம் முற்றும் ஓதுதலையும் ஆரம்பித்தபோது தொடர்ந்து பதின்மூன்று ஆண்டுகளாகச் செவ்வனே இந்நிகழ்வை நடாத்த அச்சாணியாகவிருந்து செயற்பட்டவர் ஐயா அவர்களேயாவார்.

ஞான சிரோன்மணி வடிவேல் ஐயாவின் ஒப்பிலா எழுத்தாற்றலை பறைசாற்றும் விதமாக அவரால் எழுதப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க பல நூல்கள் தமிழர்களாலும் சைவப் பெருமக்களாலும் பொக்கிஷமாக போற்றிப் பாதுகாக்கப் படுகின்றன. அவற்றில் ஒரு சில நூல்கள் பின்வருமாறு

1. திருக்கோணமலை மாவட்ட திருத்தலங்கள் - 1982
2. திருக்கோணமலை கோணேசர் கோயில் வரலாறு - 1984
3. சண்முகா சரணம் - 1986
4. திருக்கோணமலை அந்தாதி - 1990
5. திருமுறைப் பண்ணிசைத் திறனாய்வு - 1992
6. கோணேசர் கல்வெட்டு ஒரு கண்ணோட்டம் - 1993
7. சுவாமி விவேகானந்தரின் ஞானக்குரல் - 1994
8. திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும் -1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட நூல்களுள் மிகவும் முக்கியமான நூலாக கோணேசர் கல்வெட்டு ஒரு கண்ணோட்டம் கருதப்படுகிறது. திருமலையின் ஆரம்பகால வரலாற்றுச் சான்றுகளில் மிக முக்கியமானது கோணேசர் கல்வெட்டு ஆகும். இந்நூல் திருக்கோணமலை மக்களின் சமூக பாரம்பரியங்களையும் மொழி மரபுகளையும் கண்டறிய உதவுவதுடன் திருமலைச் சமூக வரலாற்றை எழுத முனைவோருக்கு ஓர் உசாத்துணை நூலாக கருதப்படுகிறது. கோணேசர் கல்வெட்டு போன்ற காலத்தால் முந்திய வரலாற்று இலக்கியங்களுக்கு உரை எழுதுவதற்கு தமிழ் மொழி அறிவு மட்டுமன்றி சாசன வழக்காற்று பயிற்சியும் ஆலய மரபுகள் தொடர்பான அறிவும் அவசியமானதாகும். அவ்வகையில் ஐயா வடிவேல் கல்வெட்டுப் பாடல்களின் பொருள்களையும் விளக்கங்களையும் கண்டறிய பல ஏடுகளைத் தேடி வாசித்து திருமலை வாழ் மூத்த குடிகளையும் அணுகி விளக்கங்களைப் பெற்றுக் கொண்டார். அவ்வகையில் அவருடைய படைப்புகள் அனைத்தும் காலத்தால் அழியாதவை என்றே கூற வேண்டும்.

மேலும் சைவப்புலவர் நூல்கள் மட்டுமன்றி ஆலயங்களிற்குப் பாடி வழங்கிய ஊஞ்சல் பாக்களும் உலகெங்கும் இன்றளவும் திருவிழாக் காலங்களில் பக்தியுடன் இசைக்கப்பட்டு வருகின்றன.

இவற்றுள் சில பின்வருமாறு

1. ஆலடி விநாயகர் கோயில் லெட்சுமி நாராயணர் திருவூஞ்சல்
2. அருள்மிகு இரத்தினசிங்கப் பிள்ளையார் திருவூஞ்சல்
3. கம்பெனிப் பிள்ளையார் திருவூஞ்சல்
4. கேதாரீஸ்வர கௌரியம்மன் திருவூஞ்சல் - காளிகோயில்
5. ஆரையம்பதி பரமநயினார் கோயில் திருவூஞ்சல்
6. கோணேசப் பெருமான் திருவூஞ்சல்
7. சுவிஸ் அடிஸ்வி திருமுருகன் கோயில் திருவூஞ்சல்

சைவப்புலவர் ஐயாவின் பல கட்டுரைகள் பல்வேறு பத்திரிகைகளிலும் கோவில் விழா மலர்களிலும் பிரசுரிக்கப்பட்டு பலராலும் போற்றப்பட்டன.

அவற்றில் முக்கியமானவையாக திகழ்பவை:

1. திருமந்திரத்தில் ஒரு மந்திரம்
2. திருமூலரும் திருமந்திரமும்
3. சிவ வழிபாடு
4. ரதோற்சவ தத்துவம்
5. வள்ளுவர் காட்டும் விருந்தோம்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இவை தவிர கோணேசர் கோவில் கும்பாபிஷேக மலர்களை 1963, 1980 ஆகிய ஆண்டுகளில் தனது நெறியாள்கையின் கீழ் சிறப்பான முறையில் உருவாக்கியதோடு வில்லூன்றி கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா மலருக்கு மலராசிரியர் பொறுப்பேற்று அம்மலரை நேர்த்தியாக அமைத்துக் கொடுத்தார். சைவமும் தமிழும் இரு கண்களாகக் கொண்டு செயற்பட்ட பண்டிதர் ஐயா திருக்கோணேஸ்வரர் ஆலய பரிபாலனசபை மற்றும் சிவயோக சமாஜத்தின் செயலாளராக ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகள் செயற்பட்டார். அது மட்டுமன்றி திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் போஷகராகப் பல ஆண்டுகள் பணி புரிந்தார். அத்தோடு வெருகல் வேல்நடை பஜனைக் குழுவிற்கும் தலைமை வகித்தார்.

இவரது சிறப்பு மிக்க தமிழ் மற்றும் சமயத் தொண்டினைப் பாராட்டி அரசும் இதர சமய இலக்கிய மன்றங்களும் பல விருதுகளையும் பட்டங்களையும் வழங்கி கௌரவித்தனர்.

அவையாவன:

1. சைவ சித்தாந்த சிகாமணி - 1976
2. கதாப்பிரசங்க வாரிதி - 1983
3. திருமுறைச் செல்வர் - 1988
4. ஞான சிரோன்மணி - 1933
5. கலைமாமணி - 1993
6. தேசிக மணி - 1996
7. கலாபூசணம் - 2002

பண்டிதர் இ.வடிவேல் அவர்கள் பன்முக ஆளுமை மிக்கவர். ஒரு ஆசிரியனாக, சைவநெறிப் பேச்சாளனாக, மிகச் சிறப்பான நாட்டாரியல், தமிழியல் அறிஞனாக விளங்கியவர். 13ம் நூற்றாண்டிற்குரியதாக கருதப்படும் கோணேசர் கல்வெட்டிற்கான உரை அவரால் தான் எழுத முடிந்தது. கோணேசர் கல்வெட்டு வழியாகவே திருக்கோணேஸ்வர வரலாறு பல புதிய ஆய்வுகளுக்கு வழி திறந்தது. திருக்கோணமலை மக்களின் வழக்காறுகளையும், ஆலய மரபுகளையும் வெளிக்கொணர்ந்த பெருமை அவரை சாரும். கோணேசர் கோயிலுக்கான குளக்கோட்டன், கயவாகு மன்னர்களது பணிகள், கோயில் மரபுகள் குறித்து அடிப்படை ஆதாரங்களை முன்வைக்கும் ஒரேயொரு ஏடு கோணேசர் கல்வெட்டேயாகும். மற்றொரு பார்வையில் 13ம் நூற்றாண்டிற்கு பின்னெழுந்த தமிழிலக்கிய மரபுகளுக்கான வழிகாட்டியாக கோணேசர் கல்வெட்டைப் பார்க்க முடியும். திருக்கோணமலை வரலாற்று ஆய்வுக்கு மட்டுமின்றி, நாட்டாரியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுக்கான தளத்தையும் கோணேசர் கல்வெட்டே திறந்து வைக்கின்றது. இதனால் திருக்கோணமலையின் சைவ மரபுகளை ஆராய முற்படும் ஒருவருக்கு கோணேசர் கல்வெட்டு ஒரு புதிய பரிணாமத்தை அளிக்கக் கூடியதாக உள்ளது. ஏன் சைவப் புலவர் இ.வடிவேல் அவர்களின் கருத்துரை ஆழமாக மதிக்கப்படுவதற்கு அவருக்கிருந்த மொழியறிவு மாத்திரமின்றி சைவ மரபுகளிலும், நாட்டாரியலிலும் அவர் கொண்டிருந்த புலமை முக்கியமானது. இதன் வழியாக தமிழியல் ஆய்வுக்கு புதிய பரிமாணத்தை அளித்தவர் பண்டிதர். தல இலக்கியங்களை ஆய்வுக்குட்படுத்துவதற்கு தமிழ் இலக்கிய அறிவும், சாசன வழக்காறு, நாட்டாரியல் மரபு என்பனவற்றுடன் சைவ நெறிப் புலமையும் அவசியமானது. இவை அனைத்தும் பண்டிதர் அவர்களிடம் கூடியிருந்தது. இங்கு அவருடைய இரு முக்கிய பார்வைகளை அழுத்தமாகச் சுட்டிக்காட்ட முடியும். கோணேசர் கல்வெட்டில் உட் செருகப்பட்டிருந்த பல போலிப் பாடல்களை கண்டறிந்து நீக்கியது. இரண்டாவது முதன் முதலாக கோணேசர் கல்வெட்டின் 50 பாடல்களுக்கும் அவர் எழுதிய உரைநடை விளக்கங்கள். இந்த இரண்டு முயற்சிகளையும் செய்யக் கூடிய ஆற்றல் பெற்றவர்கள் இல்லையென்றே கூறிவிடலாம். இந்த முயற்சியால் பாடல்களுக்கிடையே காணப்பட்ட முரண்பாடுகளும் குழப்பங்களும் தீர்க்கப்பட்டன. ஒரு சொல்லின் வேர்ச் சொல்லை அறிந்து அதன் வழியாக அச்சொல்லின் பாவனைக் காலத்தை அறிந்து இடைச்செருகலைக் கண்டறிவது மிகக் கடினமான பணி. அந்த ஆற்றலால் கவிராஜ வரதோயனார் பாடல் எது போலி உட்செருகல் எவை என பண்டிதர் பிரித்தறிந்தார். அத்தகைய மொழியாற்றல் மிக்கவர் அரிதிலும் அரிது.

ஏற்கனவே கோணேசர் கல்வெட்டை 1887 இல் வல்வை க.சின்னத்தம்பிப் புலவர், 1916 பொ. வைத்திலிங்க தேசிகர, 1950 அகிலேசபிள்ளை அளகக்கோன் ஆகியோரால் பதிப்பித்து வெளியிடப்பட்ட போதிலும் செய்யுள்களுக்கு யாரும் கருத்துரை எழுதவில்லை. இதுவரை கோணேசர் ஆலய மரபுகளும்,வரலாறுகளும் வாய்மொழியாகவே புழக்கத்தில் இருந்தது. இன்று பண்டிதர் அவர்கள் எழுதிய கருத்துரைகள், விளக்கவுரைகள் வெளிவந்த பின்னரேயே சைவ வழக்காறுகளையும், மரபுகளையும் பொது மக்களின் அறிவுக்கும் எளிதாக எட்டியிருக்கின்றன. கோணேசர் கல்வெட்டின் ஒவ்வொரு ஒற்றை வரிகளிலும் மரபுகளும் வழமைகளும் நிறைத் திருக்கின்றன. கோணேசர் ஆலயம் ஒரு வரலாற்றுச்சின்னம். ஒரு காலக்குறி ஆனால் அவை ஆலயத்தின் அடிப்படை நோக்கங்களுக்கு வெளியே உள்ள ஆய்வாளர்களுக்கு உரியவை. இன்னுமொரு பார்வையில் அவை அடிப்படை நோக்கங்களுக்கு புறம்பானவை. பண்டிதருடைய ஆய்வு ஆலயத்தின் மரபுகளையும் வழக்கங்களையும் ஆராய்வதை ஒற்றை நோக்காக கொண்டுள்ளது. இதுவே பண்டிதரை பொது மக்கள் கொண்டாடக் காரணமாகும். கோணேசர் ஆலய அழிந்த மரபுகளை மீட்டார் என்ற பெருமை அவருக்கும் மட்டும் உரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எழுதிய நூல்கள் பல. அவற்றுள் கோணேசர் கால்வெட்டு உரை சிறப்பானது என்றாலும் திருக்கோணமலை மாவட்ட திருத்தலங்கள் என்ற நூல் பண்பாட்டு வரலாற்றில் முக்கிய கவனம் பெற்றுள்ளது. திருக்கோணமலை சைவநெறி வளர்ச்சி குறித்து ஆராயும் மாணவனுக்கு பண்டிதர் விட்டுச் சென்றவை பொக்கிசங்கள்.

அமரர் திரு. வடிவேல் ஐயா அவர்களது வாழ்க்கை உண்மையில் மகத்துவம் மிக்கது. அவர் பழகுவதற்கு இனியவர் நற்பண்பாளர் இறைபக்தி நிறைந்த ஒரு மகான். தமது வாழ்நாள் முழுவதையும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் சைவநெறி தழைத்தோங்கவும் அர்ப்பணித்து இறுதிவரை பிரம்மச்சரியம் காத்து ஒரு நிறைவான வாழ்வினை வாழ்ந்தார். ஐயா தன்னிடமிருந்த கிடைத்தற்கரிய ஆயிரக்கணக்கான நூல்களை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும் சிவயோக சமாஜத்திற்கும் சக்தி நிலையத்திற்கும் மற்றும் இந்து இளைஞர் பேரவைக்கும் நன்கொடையாக வழங்கியதன் மூலம் இன்றைய தலைமுறையினருக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறார். அன்னார் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்து வருகின்றோம் என்பதே பெரும் பாக்கியமாகும். அவரது கல்வி, கலைச்சேவை என்றென்றும் அழியாது அவரது நூல்களின் வாயிலாக நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.

**மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**நன்றி**

**தொகுப்பு**

**கலாநிதி சஞ்ஜீவினி ஜெயசங்கர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்கல்லூரி : அற்றைத் திங்கள் பசுமை நினைவுகள்

**- வே. வரதசுந்தரம்**

ஒரு பாடசாலை பாடவிதானத்தில் உள்ள கல்வி, விளையாட்டு போன்ற துறைகள் சார்ந்த செயற்பாடுகளில் உயிர்ப்புடன் செயற்படும் அதேவேளை குடிதழிழீய, சமூகம் சார்ந்த செயற்பாடுகளிலும் ஈடுபடவேண்டும் என்பது நவீன கல்வி சிந்தனை. இதனை, "School is a miniature society" என்பார்கள். இந்த செயற்பாட்டுகளை எனது மாணவ பருவத்திலும், பின்னர் ஆசிரியர் தொழில் ஆற்றிய வேளையிலும் இந்துக்கல்லூரியில் கண்டமையை இன்று நினைவுகூறி இறும்பூதெய்துகிறேன்.

இந்துக்கல்லூரி வரலாற்றை பல்வேறு கோணங்களில், இனிய நடையில் எடுத்து இயம்பும் இந்நூலில் எனது மாணவ பருவ நினைவுகளை, இக்கல்லூரியில் ஆசிரியர் சேவையாற்றிய கால நினைவுகளை பகிர்ந்துகொள்வதில் பெரும்மகிழ்ச்சி.

சுவாமி இராமகிருஷ்ண சங்க முகாமைத்துவத்தின் கீழ் இயங்கிய இக்கல்லூரியில் சுவாமி இராமகிருஷ்ணர் போதித்த சமயமொழி, இன, கலாச்சார நல்லிணக்கதை காண்கிறேன். எனது மாணவப்பருவ காலத்தில் இக்கல்லூரியில் இந்துசமய, கிருஸ்தவ சமய, இஸ்லாம் சமய, பௌத்த சமய பிரார்த்தனைகள் நடைபெற்றதை கண்டு வியப்படைகின்றேன்.

1958ம் ஆண்டில் திருக்கோணமலை மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது. இதுகால்வரை பிரித்தானிய கடற்படைத்தளத்தில் தொழில்வாய்ப்புகள் இருந்தமையால் உயர்கல்வி பற்றி சிந்திக்காது இருந்தவர்கள், இப்போது பிரித்தானிய கடற்படை தளம் இலங்கை அரசினால் பொறுப்பேற்றதன் பின்னர் தங்கள் குழந்தைகளுக்கு உயர்கல்வி ஊட்டவேண்டிய அவசியத்தை உணர்ந்தனர். இத்தருணத்தில் அதிபராய் இருந்த திரு எஸ். அம்பலவாணர் இந்துகல்லூரியை உயர்கல்வியை நோக்கி நடைபோட சாரத்தியம் செய்தார்.


பல்வேறு நாடுகளில் பாராளுமன்ற ஜனநாயகம் குழி தோண்டி புதைக்கப்பட்டு மக்கள் மத்தியில் வெறுப்பு ஏற்பட்ட நிலையில் இன்று நாடுகளில் இளைஞர் பாராளுமன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இருபத்தோறாம் நூற்றாண்டு இச்செயற்பாட்டை தூரநோக்குடன் ஐம்பதுகளிலேயே ஆரம்பித்தது இந்துக்கல்லூரி. அக்காலத்தில் இந்துக்கல்லுரி பாராளுமன்றத்தின் சபாநாயகராக சிவானந்தம் சிவசேகரம், பிரதமராக து.சண்முகநாதன், அமைச்சர்களாக சந்திரசேகரம்பிள்ளை இராமசந்திரா, சித்தி அமரசிங்கம், இராஜசுந்தரம், எதிர்கட்சிதலைவராக ரங்கநாதன், எதிர்கட்சி செயலாளராக இக்கட்டுரையாளர் செயற்பட்டனர். பாடசாலைக் குறைபாடுகளை கண்டால் எதிர்கட்சியினர் அதிரடி கேள்விகணைகளை தொடுப்பர். அதைத்தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர்



சுவாமி சச்சிதானந்த யோகி



சுவாமி கெங்காதரானந்தா



ஆசிரியர் பொ.கந்தையா



திரு. எஸ். அம்பலவாணர்



ஆசிரியை பண்டிதை இராசநாயகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர்கள் அவற்றை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு சீர்செய்வர். இச்செயற்பாடுகளில் பாராளுமன்ற சம்பிரதாயம் பேணப்பட்டதை, பாரளுமன்ற ஜனநாயக உணர்வு மாணவர் மத்தியில் ஊட்டப்பட்டதை கண்டு வியப்படைகிறேன்.

இந்த நூற்றாண்டில் பல நாடுகளில் யோகாதினம் கொண்டாடப்பட்டு வருகிறது. சில வருடங்களுக்கு முன் ஐநாசபையும் யோகா தினத்தை பிரகடனஞ்செய்து ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. ஆனால் தூரநோக்குடன் எனது ஆசிரிய பெருமகன் பெரியதம்பி கணநாதபிள்ளையின் ஏற்பாட்டில் யோகா வகுப்புகள் ஐம்பதுகளிலே இந்துகல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டன. அவரது அழைப்பையேற்று சுவாமி சிவானந்தரின் சீடரான சச்சிதானந்த யோகியார் கல்லூரியில் ஆரம்பித்து வைத்தார். இந்த பசுமை நினைவு என்னை வியக்கவைக்கிறது.

திருக்குறளில் காணப்படும் விழுமிய சிந்தனைகள் உலகளாவிய பன்மொழி இலக்கியங்களில் கூட காணமுடியவில்லை என்பது பன்மொழி அறிஞர்களின் திடமான முடிபாகும். இத்தகைய வள்ளுவம் என்ற சிந்தனைகளை இந்துக்கல்லூரி மாணவர்களிடையே ஊட்டியதோடு மட்டுமல்லாது, அதனை திருக்கோணமலை மக்கள் மத்தியிலும் பரப்புவதில் எனது தமிழ் ஆசான், இந்துக்கல்லூரி தமிழ், கணித ஆசிரியர் கழகபுலவர் பெ.பொ.சிவசேகரனார் ஆர்வம் காட்டினார். மாணவர்களை அங்கத்தவர்களாக கொண்டு திருவள்ளுவர் கழகத்தை உருவாக்கினார். துரைசிங்கம் குலவீரசிங்கம், சந்திரசேகரம்பிள்ளை ஜெயச்சந்திரன், கு.செந்தில்வேல், நா.கணபதிபிள்ளை, வை.சோமாஸ்கந்தர், துரைராசா, ஆர்.சுப்பிரமணியம் இன்னும் பல இளைஞர்கள் இவ் இயக்கத்தில் துடிப்புடன் செயலாற்றினர். அக்காலத்து தமிழகத்து தமிழ் அறிஞர்கள் கவியோகி சத்தானந்த பாரதி, கி.வா.ஜகந்நாதன், கல்கி ஆகியோர் கலந்து கொண்ட திருக்குறள் மாநாட்டை திருக்கோணமலை நகரில் நடாத்தி பெரும் பணியாற்றினர். இந்த பசுமை நிகழ்வு வியப்பை தருகிறது.

இந்துக்கல்லூரி ஆசிரியர் பெ.பொ.சிவசேகரனர் அவரது இல்லமாம், "தனசக்தியில்" தவத்திரு குன்றகுடி அடிகளாரின் தலைமையில் தமிழகத்தில் இயங்கிய இளைஞர் அருள்நெறிமன்றத்தின் கிளையை நிறுவினார். இம்மன்றத்தில் இந்துக்கல்லூரி மாணவர்களான சி.சத்தியமூர்த்தி, க.சிவபிரகாசம், சின்னையா குருநாதன், இராசையா சோமசுந்தரம், கு.மாகலிங்கம், சிறினிவாசன், சின்னையா தம்பிராசா, வி.சந்திரதாஸ், பொ.ஜெகதீஸ்வரன், செல்லப்பா சோமசுந்தரம், இக்கட்டுரையாளர் ஆகியோர் ஸ்தாபக அங்கத்தவர்களாக விளங்கினர். தொண்டர் இ.சண்முகராசா இம்மன்ற பணிகளில் முன்னணியில் விளங்கினார். இம்மன்றத்தில் இந்துக்கல்லூரியின் ஆசிரியர்களான இராசநாயகி கந்தையா, பெ.கணநாதபிள்ளை ஆகியோர் தலைவர்களாக செயற்பட்டனர். இம்மன்றம் மாரியம்மன் கோவிலடியில் தெய்வசிகாமணி கல்வி நிலையத்தை நிறுவி கல்விப்பணி ஆற்றியது. மாணவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவியரை மத்தியவீதியில் இருந்த சுவாமி கெங்காதரானந்தா குடிலில் சனிகிழமைதோறும் பஜனை, சத்சங்த்தில் ஈடுபடுத்தி சுவாமி கெங்காதரரின் ஆசிகளை பெறச்செய்து மாணவர்களுக்கு இறைபக்தியை, குருபக்தியை ஊட்டினர்.

அத்தோடு இம்மன்றம் திருக்கோணமலை அரச மருத்துவமனைக்கு அருகாமையில் இருந்த வறுமையில் வாழ்ந்த நகரசுத்தி தொழிலாளர் குடியிருப்பில் முதியோர் கல்வி நிலையத்தை நடாத்தியது. இந்த கல்வி நிலையத்தில் சிங்கராசா சுப்பிரமணியம், மைக்கல் மாஸ்டர் இக்கட்டுரையாளர் ஆசிரியர்களாக பணிபுரிந்தனர். குப்பையாண்டி, முனியாண்டி, கோவிந்தன், இன்னும் சிலர் அம்முதியோர் கல்வி நிலையத்தின் மாணவர்களாக விளங்கினர். இப்பணி கண்டு என் உள்ளம் நெகிழ்கிறது, வியப்படைகிறது.

தமிழகத்தில் நாடகத்துறையில் புகழ்பூத்திருந்த முதுபெரும் நாடகத்துறை தந்தை டி.வி.கே.சண்முகம், அவர் தம்பியார் நகைச்சுவை நடிகர் சிவதானு ஆகியோர் திருக்கோணமலை நகருக்கு வருகைதந்த போது அதிபர் அம்பலவாணர் அவர்களை அழைத்து நாடகத்துறை பற்றி மாணவர் மத்தியில் உரையாட ஏற்பாடு செய்தார். இவ்வுரையாடல் மாணவர்களுக்கு நாடகத்துறையில் ஈடுபட உந்து சக்தியாக அமைந்தது. கல்லூரி நாடகங்களில் சந்திரசேகரம்பிள்ளை ஜெயச்சந்திரன் பாம்பு நடனம் ஆடியதும், ஆர்.சுப்பிரமணியம் பாரதியாராக நடித்ததும், இராசையா சோமசுந்தரம் ஔவையாராக நடித்ததும் எனது நினைவில் நிற்கின்றன. இதற்கு அப்பால் சென்று கல்லூரி மாணவர்களான விஸ்வலிங்கம், சச்சிதானந்தம், சித்தி அமரசிங்கம், ஏலேலசிங்கம் பல சமூக நாடகங்களை அரங்கேற்றியமை பசுமை நினைவாக உள்ளது.

கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் ஆசிரியராக இருந்த சைவப்புலவர் இ.வடிவேலு நாடறிந்த கதாபிரசிங்கியாக விளங்கினார். அவர் மாணவர் மத்தியிலும் இக்கலைகளை பயிற்றினார். அவர் வழிகாட்டலில் இந்துக்கல்லூரி மாணவரான சந்திரசேகரம்பிள்ளை ஜெயசந்திரன் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயில் உட்பட பல சைவ ஆலயங்களில் கதாபிரசங்கம் நிகழ்த்தினார். அவரைப் போன்று இந்துக்கல்லூரி மாணவன் சாம்பசிவம் அவ்வாறு கதாபிரசங்கங்களை நிகழ்த்தியதோடு மட்டக்களப்பில் நல்ல ஆன்மீக சேவையில் ஈடுபட்டு வருவதை கண்டு மகிழ்கிறோம்.

சூறாவளி தாக்கிய போது திருக்கோணமலை நகரம் மிகவும் பாதிப்புற்றது. மின்கம்பங்கள் தூக்கி எறியப்பட்டன. பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்ததால், வீதிகளில் போக்குவரத்து தடைப்பட்டது இவ்வேளை நாம் உண்டு, நமது குடும்பம் உண்டு, என்று பலர் ஒதுங்கி செயற்பட எங்கள் ஆசிரியர் பெருமகன் க.சிவபாலன் ஒரு மாணவர் குழாமை அழைத்து சென்று பல நாட்களாக பணிசெய்து வீதிகளை திருத்தும் பணிகளில் ஈடுபட்டார். இதன் மூலமும், இத்தகைய வேறு செயற்பாடுகள் மூலமும், மாணவர்களிடத்தே சமூக சேவை உணர்வை, மனப்பாங்கை அவர் ஊட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆசிரியர் சைவபபுலவர் இ. வடிவேல்



ஆசிரியர் கழகப்புலவர்
பெ.பொ.சிவசேகரனார்



அதிபர் க. சிவபாலன்



ஆசிரியர் கதிரவேற்பிள்ளை



ஆசிரியர் பெ. கணநாதபிள்ளை



தமிழகத்து நாடகமேதை
டி.கே. சண்முகம் சகோதரர்கள்
இந்துக்கல்லூரிக்கு வருகைத் தந்த நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நான் பிறிதொரு முன்னாள் ஆசிரியர் திரு கதிரவேற்பிள்ளை அவர்களின் பணியை குறிப்பிட விரும்புகின்றேன். யான் மாணவராக இருந்த காலத்தில் அன்னார், அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள் வருகைதருவதற்கு முன்னரே வேளையோடு கல்லூரிக்கு வருகை தந்துவிடுவார். தனது கோட்டை கழற்றி பாடசாலை அலுவலகத்தில் வைத்துவிடுவார். தனது வேட்டியை மடித்து கட்டுவார், விளக்குமாற்றை கையில் எடுப்பார். காலை பிரார்த்தனை நடைபெறும் முன்றிலை கூட்டி பெருக்குவார். பின்னர் மீண்டும் தனது கோட்டை அணிவார் மாணவர்கள் தத்தம் வகுப்புகளில் இருந்து பிரார்த்தனை முன்றிலுக்கு ஒழுங்கு, கட்டுபாடு பேணி வருவதற்கு ஏற்பாடு செய்து பிரார்த்தனையை அமைதியாகவும் பக்திபூர்வமாகவும் நடத்துவார். கற்பித்தலுடன் இதையும் தனது தினசரிபணியாக செய்த பெருமகன் அன்னார். இப்பணியில் நான் காணும் மாண்பு என்னவென்றால் கற்பித்தலுக்கு அப்பால் தனது செயற்பாட்டால் மாணவர்களுக்கு இன்று பெரிதாக பேசப்படும் தொழில் மகத்துவம் (dignity of labour) என்ற உணர்வை ஊட்டினார்.

கோணேஸ்வரா இந்துக்கல்லூரி ஆசிரியரான பொ.கந்தையா வாரந்தோறும் மாணவர்களை அழைத்துகொண்டு திருக்கோணமலை அரசமருத்துவமனையில் நோயாளர் விடுதிக்கு செல்வார். அங்கோ உறிவினர்கள் சூழ ஆறுதல் வார்த்தை கேட்டு பல நோயாளர்கள் இருப்பர். ஆனால் சில நோயாளர்கள், உறவினர்கள், அயலவர்கள் இன்றி அனாதரவானவர்களாக கவலை தோய்ந்த முகத்துடன் இருப்பர். அவர்களிடம் இம்மாணவர்களை அழைத்து சென்று அந்த நோயாளர்களின் தலைதடவி ஆறுதல் வார்த்தை கூறி அவர்களுக்கு நடைபெறும் சிகிச்சைகளை தன்னம்பிக்கையோடு முகம்கொடுத்து நோயை வெற்றிபெற ஊக்குவிப்பார்

"அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போற் போற்றாக் கடை" என்ற வள்ளுவசிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்தவர் காந்தி மாஸ்டரும் மாணவர்களும், இவ்வாறு இந்துக்கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் ஆற்றிய மனிதநேயப் பணியை என்னென்பேன, என்னென்பேன்!.

இத்தகைய விழுப்பம் வாய்ந்த குடிதழிழீய மனிதநேயம் மிக்க செயற்பாடுகளில் திருக்கோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரி தொடர்ந்து பயணித்து பாரிய சேவையாற்ற வேண்டும் என்பதே எந்தன் பிரார்த்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி : நினைவழியாச் சித்திரங்கள்.

அன்று ஓர் அழகிய நாள். வன்னி மண்ணை கோடை மழை நனைத்திருந்த ஒரு பிற்பகலில் அவரைச் சந்திக்கின்றோம். ஓமந்தை பிள்ளையார் கோயில் முற்றத்து கிளை படர்ந்த மரங்கள் வெப்பத்தை தணித்திருந்தது. அவரைச் சந்தித்த ஒற்றை நொடிக்குள் எப்போதும் இல்லாத மௌனம். தடித்த கண்ணாடி வழியாக உற்றுப் பார்க்கின்றார். வழக்கமான சிலேடை விசாரிப்புக்களுடன் பேசத் தொடங்குகின்றார். அவர் அகால இடமாற்றத்தின் அதிர்வுகளில் இருந்து விடுபட்டிருந்தார். ஆனாலும் அவருடைய பார்வை சட்டென புரிவதாகவும் இல்லை அவர் கையில் நான் எழுதிய அஞ்சலட்டையுடன், ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒரு நீண்ட தாளும் இருந்தது. எதிர்பாரா இடமாற்றத்தை ஏற்று சலனமின்றி கல்லூரியில் இருந்து வெளியேறிய அவரின் நிலை உணர்ந்து நான் எழுதிய நான்கு வரிகள் அந்த அட்டையில் இருந்தது. அந்த எழுத்துக்குப் பதிலாக என்னையும் நண்பன் கனகசிங்கத்தையும் ஓமந்தை வருமாறு அவர் எழுதிய அஞ்சலட்டை என் கையில்.

## அவர் அதிபர் சு. கிருஷ்ணபிள்ளை.

அவர் எங்களுக்கு தமிழாசிரியரும் கூட. பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் பாரதியின் மொழிப்பெருக்கை கவித்துவத்துடன் பாடமாக நடாத்திக்கொண்டிருந்த காலம். ஆசிரியர்கள் பற்றாக்குறையில் உயர்வகுப்பு அமிழ்ந்து கொண்டிருந்த வேளையில் அவருக்கான அக்கால இடமாற்றம் ஓராண்டுக்குள் 1977 இல் ஓமந்தைக்கு கிடைக்கின்றது. அதை சலனமில்லாமல் மாணவர்களுக்கு அறிவிக்கின்றார். எங்கள் வகுப்பறையில் பாஞ்சாலி அறச்சீற்றத்துடன் எழுப்பிய கேள்விகள் குரலடங்கியது போன்ற உணர்வு. மறுநாள் நன்றியைக் கூட எதிர்பாராமல் ஒரு கர்மயோகியின் பயணம் ஓசைப்படாமல் தடம் மாறுகின்றது. நண்பன் கனகசிங்கமும் நானும் அவருக்கு நான்கு வரிகளில் நன்றி தெரிவித்து அஞ்சலட்டை எழுதியிருந்தோம். அதற்கு பதிலாக அவர் எங்களை ஓமந்தை வருமாறு அழைத்து எழுதியிருந்தார். "உனக்காக ஒரு கவிதை. அதை உன்னிடம் தரவே கூப்பிட்டேன்" என்றார். எனக்கு அது விந்தையாக இருந்தது.

அவர் நடாத்திய பாஞ்சாலிசபதம் எனக்குப் பிடித்திருந்தது. பாஞ்சாலி சபதத்தில் பாரதி தன் மாய மொழியில் வனைந்து, வனைந்து பாஞ்சாலியை பேச வைத்திருப்பான். மரபார்ந்த கவிதையில் அதிகமாக காண முடியாத மொழி வீச்சு பாஞ்சாலி சபதத்தில் பெருகியிருந்தது. அவர் அதைக் கரிசனையோடு சொல்கின்ற போது அவரது மொழிக்கு ஒரு தன்னிச்சையான பெருக்கு கிளர்ந்தெழும் இருந்தாலும் கூட எனக்கு பாதி தான் புரிந்திருந்தது. ஆனால், நான் தேர்வுத் தடையைக் கடந்தது வேறு கதை. எப்பொழுதும் இலக்கியம் ஆளுள்ளத்தின் அழகியல் கட்டுமானங்களை மாற்றியமைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலம் வாய்ந்தது என்பதை பின்னர் தொடர்ச்சியான வாசிப்பு எனக்கு உணர்த்தியது. ஆர்தர் சி.கிளார்க் எழுதிய பல விண் சார்பு இலக்கியங்கள் அறிவியல் ஆய்வு கூடங்களில் புதிய தேடலுக்கான அகவெழுச்சியை இன்றும் அளித்துக் கொண்டிருக்கின்றன. மௌனத்தை உடைப்பது போன்று 'Charles Wolfe' என்றார். மீண்டும் ஒரு கண மௌனத்திற்கு பின் "அவர் எழுதிய Burial of Sir John Moore தெரியுமோ" என்றார். கிணற்றுக்குள் விழுந்த கல் ஓசைப்படாமல் அமிழ்ந்தது விடுவது போன்று நண்பரும் நானும் இருந்தோம். நான்கு வரிகளை பிழையில்லாமல் ஆங்கிலத்தில் எழுதுவது என்பது சிவன் இமயத்தை விட்டு இறங்குவது போன்று எப்போதாவது தான் எங்களுக்குள் நடக்கும். அதற்கு மேல் எங்கள் இருவருக்கும் 'நோ இங்கிலிஸ்'. மௌனமாக இருந்தோம்.

அவர் "Burial of Sir John Moore" கவிதையை வாசிக்கத் தொடங்கினார்.

'NOT a drum was heard, not a funeral note,

As his corse to the rampart we hurried;

Not a soldier discharged his farewell shot

Oer the grave where our hero we buried.'

32 வரிக் கவிதையில் இவை முதல் எட்டு வரிகள்.

Charles Wolfe படைத்த இனிதான செவ்வியல் கவிதை இது. கவிதை பிறந்த வரலாறும் அமரத்துவமானது என்பதை உணர்ந்து கொண்டேன். அவர் ஏன் Charles Wolfe இன் கவிதையை எனக்குத் தர வேண்டும்? நான் ஏன் அதன் கவித்துவத்தை இப்போது நினைவு கூரவேண்டும். அவர் கையில் இருந்த என் கடித்தின் நான்கு வரிகள் என்ன?

கி.பி 1808 தை மாதப் பனியில் உறைந்திருந்தது ஸ்பெயின் பெரு நிலப்பரப்பு. ஸ்பெயினின் ஆட்சியை புரட்டிப் போட பிரான்ஸ் இராணுவம் கொர்ன்னாவில் போரிடத் தொடங்கி இருந்தது. அந்தப் போரை எதிர்த்து Sir John Moore தலைமையில் துடிப்புடன் களமாடியது பிரிட்டன். Sir John Moore பிரஞ்சு வீரர்களின் தூக்கத்தையும் கலைத்துக் கொண்டிருந்த மாபெரும் போராளி. பிரான்சின் சிம்மசொர்ப்பனம். ஆரவாரம் அடங்கிக் கொண்டிருந்த ஒரு மாலைப் பொழுது எங்கிருந்தோ வந்த இலக்கு நோக்கற்ற எதிரியின் துப்பாக்கிக் குண்டிற்கு Sir John Moore பலியாகின்றார். அந்த தளபதி மண்ணில் சாய்ந்துவிட்டான். அடுத்து என்ன? அந்த மாபெரும் சாதனை வீரனுக்கு பிரிட்டிஸ் படை எவ்வாறு விடை கொடுத்தது? Charles Wolfe இன் கவித்துவத்தில் மாபெரும் தலைவனின் பிரிவுச் சொற் சித்திரம் தான் "Burial of Sir John Moore". நேர்மையான, தீவிரமான பதிவுகள் இவை. போர் முனையில் போராளிகளின் உள் மன வியாபகங்களை, அகவடிவங்களை, அதன் ஆழங்களை கலை உருக் கொடுத்து சத்திரிய சூத்திரத்திரத்தை பாடும் சொல்லழகு இத்தனை அற்புதமாக வேறெங்கும் அமைந்திருக்கிறதா என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவில்லை. வெறும் பாடல்கள் மட்டுமல்ல, அவை ஒரு வரலாற்று நிகழ்வொன்றின் சாட்சியமும் கூட.

தமிழில் அந்தக் கவிதையின் முதல் எட்டு வரிகளை இப்படித்தான் சொல்ல முடிகின்றது. அது தமிழின் குறையல்ல.

"சாப்பறை எதுவும் ஒலிக்கவில்லை, அஞ்சலிக் குறிப்பும் ஒன்றுமில்லை

அவர் உடலம் சுமந்து நாம் கோட்டை மதிற் புறம் விரைகையிலே

பிரியாவிடை வேட்டேதும் படையினன் எவனுமே தீர்க்கவில்லை

எங்கள் மாவீரனை நாம் புதைத்த இறுதி உறைவிடம் மேலாக.

இரவின் கருமையில் புகழுடல் புதைத்தோம்

துப்பாக்கி முனையீட்டி தோண்டிய மண்ணால்

மூடுபனி நனைத்த நிலாக்கதிரும் லாந்தர் விளக்கும்

தந்த நலிந்த ஒளியினில்"

இலட்சியவாதிகள் அர்ப்பணிப்பு மட்டும் கொண்டவர்கள். 'தன்னை அளித்தல்' ஒன்றே அவர்களின் செயலாக இருக்கும். அதில் அவர்கள் சுயநலத்தையும், புகழேற்றலை களைந்திருப்பார்கள். ஆனாலும், இறுதி இரு வரிகள் ஒரு இலட்சியவாதியின் தருணங்களில் மிக முக்கியமானவை. அவை தியாகத்திற்கும் உழைப்பின் இலட்சியத்திற்கும் மேலும் வழி அமைப்பவை.

அதிபர் யாருடைய நன்றியையும் எதிர்பார்க்கவில்லை. அவர் வழியில் அவர் சென்றார். அவ்வளவு தான். மரபார்ந்த ஞானம் அற்ற பள்ளிக்கல்வி முறையில் இத்தகைய நல்லாசிரிய சந்திப்புக்களே மானுட அறம் குறித்த கேள்விகளைத் தூண்டிவிடக் கூடியவை. ஒரு மாணவனின் வாழ்க்கையில் கல்லை விதை உடைக்கும் தருணம் போன்றது.

இப்போதும் நினைக்கும் தோறும் Burial of Sir John Moore ஐ புரட்டிப் பார்ப்பேன். எதனையும் கடந்து செல் என்ற கீதையின் மறு பதிப்பாக உணருவேன். நயமாக உதறிவிட்டு எதையும் எதிர்காலத்திற்கு விட்டுவிடு. அந்தப் பேச்சும், அந்தக் கவிதையும் இன்றும் எனக்குள் பாடம் நடாத்தும். உள்ளர்த்தங்கள் திரண்ட இந்த உணர்ச்சி வெளிப்பாட்டை ஏன் தெரிவு செய்தார் என விசாரிக்க என் முதிரா வயதுக்கு ஞானம் போதவில்லை. மாணவனின் அகத் தேடலை ஒரு ஆசிரியன் கண்டறியும் போது ஆசிரியனுடனான நெருக்கம் அதிகரிக்கும். அது உப்புப் பொம்மை கடலை அறிவது போன்று இயல்பானது. வார்த்தைகள் அற்றது. அது அவருடை இறுதிக்காலம் வரை எனக்கு கிடைத்தது. என் முகவரி தேடி வாரந்தோறும் ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதிக்கொண்டிருந்தார். என் பதில் ஒன்று இரண்டை ரசித்து பதில் எழுதியிருக்கின்றார். 'உனக்கும் எழுதத் தெரிகிறது' என்று நேரில் சொன்னபோது என் மன எடை குறைந்த உணர்வு மேலிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றை கூகுள் சொடுக்கலில் ஒரு மாணவன் தான் விரும்பிய தகவல்களையும் அவற்றின் எல்லா விதமான எதிர்வினைகளையும் அறிந்து கொள்ளும் வசதி அன்றைய சூழலில் இருந்ததில்லை. பாட நேரத்தில் வகுப்பறையை ஆங்கிலத் தகவல்களால் செறிவூட்டுவது அவரது சிறப்பு. ஆங்கில இலக்கியத்தை நவீன புனைவு மொழியில் நம்மிடம் அணுக்கமாக கொண்டுவரும் ரசவாதத்தை வித்தையாக அவர் அறிந்து வைத்திருந்தார். அதை தமிழ் வகுப்பில் இடையிடையே நிகழ்த்தியது எப்படிச் சாத்தியமானது என்பதை இன்றும் எண்ணிப்பார்ப்பேன். ஒரு நாள் ஒரு அஞ்சற்தலையை காட்டினார். யாரோ ஒரு வெள்ளை இன தலைவனின் நெஞ்சில் FDR என இருந்தது. வகுப்புத் தோழர்கள் யாருக்கும் FDR அறிமுகம் இல்லை. அவரே அமெரிக்காவின் 32வது ஜனாதிபதி Franklin D Roosvelt குறித்து பேசினார். பின்பு ஒரு கட்டத்தில் பிராங்லினின் சுய தரிசனம் தமிழில் நூலகம் வழியாகக் கிடைத்தது. அது "மனத்தின் மாண்பு" என்ற தலைப்பினாலான நூல். வாசித்தேன். ஊனமுற்ற போலியோ நோயாளி வெள்ளை மாளிகையில் அதிபரான உளவியல் போராட்டம் அது. புத்தகம் எங்கும் அவரது தன்னம்பிக்கை வரிக்கு வரி படர்ந்திருந்தது. அகவெழுச்சி தரும் தொடர் சம்பவங்கள். அதன் பின்னர் சுயசரிதைகளை தேடி வாசிக்க தொடங்கினேன். "இலக்கியத் தேடல் எங்கு தீராப் பசியுடன் எழுகின்றதோ அங்கு மானுட அறச்சீற்றமும் எழும்" என்னும் கூற்று உண்மை. பாஞ்சாலி சபதத்தில் இருந்து Burial of Sir John Moor வரை உணர்த்தியது இதுவே. இது அவரால் எனக்கு கிட்டியது. ஒரு நல்ல ஆசிரியருக்கு பாடத்துக்கு அப்பால் என்னென்ன தெரியும் என்பது தான் நல்லாசானுடனான மாணவர்களின் நெருக்கத்தை தீர்மானிக்கின்றது. அதில் இருந்து கிளர்ந்தெழும் உரையாடல் தான் உறவை வளர்த்தெடுக்கின்றது.

கல்லூரியில் என்றும் ஒரு சராசரி மாணவனாகவே இருந்தேன் என்றே எண்ணுகின்றேன், "சிறப்பு ஆற்றல்" என்பதற்கான வரைவிலக்கணம் வேறு என்பதை உணர்ந்து பின் தெளிந்த உண்மையிது. ஒரு நாள் வகுப்பறையில் இந்தியா போனவர்கள் யார் என்றார். இந்தக் கேள்விக்கு யாரும் பதில் அளிக்கவில்லை. 'ரயில் ஏறி கப்பல் வழியாக இராமேஸ்வரம் போக முப்பது ரூபாய் என்ற தகவலைக் கூறினார். நீங்கள் நம்பலாம் அப்போது திருகோணமலை - கண்டி ஒற்றை வழித்தடம் 4.20. திருக்கோணமலை - கொழும்பு 6.00 ரூபா இருந்தாலும் "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்..." புகையிரத நிலையத்தில் தகவலை சரிபார்க்கப் போனேன். காசநோயாளி போன்று குலுங்க குலுங்க ஒரு புகை வண்டி கரும்புகையை கக்கிக் கொண்டிருந்தது. தொல்காப்பியத்தில் இதுவே காரணப் பெயர். ஸ்டேசன் மாஸ்டர் வெள்ளை உடையுடன் கரும்புகையில் இருந்து வெளியே மீண்டார். "இந்தியா போக டிக்கற் எவ்வளவு?" அடக்கி வைத்திருந்த கேள்வியைக் கேட்டேன். 'தேர்ட்டி ரூப்பீஸ்' என மாஸ்டர் தோறணையில் பதில் வந்தது. முப்பது ரூபாயா? இது என் கேள்வி. ம்... இந்தியா போனா பள்ளிக்கூடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகமாட்டியா? அவரே என்னிடம் கேட்டார். வீட்டில் பொறுப்புள்ள அப்பாவாக இருந்திருப்பார். 1979இல் என் முதல் இந்தியக் கப்பல் பயணம் அந்த விலையில் தான் நிகழ்ந்தது.

கனடாவில் அவர் வீட்டில் சந்தித்து என் ஜேர்மன் அகராதியை அவரிடம் அளித்தேன். 2303 பக்கங்களையும் புரட்டிவிட்டு மிகக் கனதியான நூல் என்றார். அதன் எடை இரண்டரைக் கிலோவைத் தான் சொல்கின்றாரோ என ஒரு கணம் எண்ணிக்கொண்டேன். கையைப் பற்றினார். கையிலேந்தும் மகிழ்வென உணர்ந்தேன். முதிர்ச்சியில் நல்லாசிரியரின் அருகமர்ந்து பேசுவது வாழ்வின் தூய தருணம் என என்றும் எண்ணிக் கொள்வேன். எப்போதும் முதுவாழ்வில் ஒருவரின் கவனம் சிறு சமூக அலகுக்குள் சுருங்கிக் கொள்ளும். அதற்குள் ஒரு மாணவன் இருப்பது வாழ்வின் பெரும் பேறு. அந்த வரிசையில் ஆசிரியர்கள் திருவாளர்கள் சு.செல்வரட்ணம், வரதசுந்தரம், வே. தில்லைநாதன் என தொடர்வது மகிழ்ச்சி. என் கல்லூரி ஆசிரியர்கள் அனைவரின் நல்லாசிக்குரியவன். யாரையும் தவிர்க்க முடியவில்லை. மிக நெருக்கமான தொடர்பில் திருவாளர்கள் செல்வரட்ணம், மரைக்காயர், வரதசுந்தரம், தில்லைநாதன் என நீண்ட நட்பிற்குரியவர்கள் பலர். நானறிந்த வரை ஆசிரியர்களில் தில்லைநாதன் எழுத்திலும் வாசிப்பிலும் இருந்தவர். அவர் எழுதிய "இதயத் தந்திகள் மீட்கப்படுகின்றன" வீரகேசரிப் பிரசுரத்தில் நாவலாக வந்தது. தமிழும் சைவமும் E.K என குறியீட்டால் அழைக்கப்பட்ட கணபதிப்பிள்ளை ஆசிரியரின் மூச்சாக இருந்தது. முப்பெரியார் விழாச் சிற்பி என அவரைக் குறிப்பிடலாம். கற்றறிந்த தமிழ் அறிஞன். மிகுந்த ஈடுபாட்டுடன் கல்லூரியின் கண்ணியம் காத்தவர். பெ.பொ. சிவசேகரம், பண்டிதர் வைரமுத்து மரபு மொழியியலில் உயர்ந்தவர்கள்.

என் கல்லூரி வாழ்நாள் கால சிறந்த மாணவர்கள் பலர் இருந்தாலும் டாக்டர் ச. ஞானசேகரம் தனி மதிப்பீட்டிற்குரியவன். மிக நீண்ட இடைவெளிக்கு பின் நாம் இருவரும் 1973 இல் பேராதனை பல்கலைக்கழகம் சென்றோம். அவன் மருத்துவத்திலும் சட்டத்திலும் பட்டம் பெற்றவன். இறுதியாக சந்தித்த பொழுது தொல்லியல் துறையில் முதுகலைக்கு தயார் செய்து கொண்டிருந்தான். ஞானியுடன் இணைந்து நண்பர்கள் க. விஜயகுமர குரு. செ.சார்ள்ஸ் இன்பதுரை. மு.பாலச்சந்திரன். கு.தயாநிதி. சிறி. பரராஜசிங்கம். விநாயக மூர்த்தி இலவச உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான வகுப்புகளை ஒழுங்கு செய்து கொண்டார்கள். அந்த சேவை முயற்சி பெரும் பேறுகளை அளித்தது. இவர்களே Advance Level Union உருவாகக் காரணமானவர்கள். கல்லூரிக்கு வெளியே இருந்து திரு. யூசுப் ஜான், செல்வி. யோகா சம்பந்தர், செல்வி. நாகராசா இராஜேஸ்வரி. செல்வி.மலர் ஆகியோர்களை கல்லூரி நிர்வாகம் அழைத்து உயர் வகுப்பு மாணவர்களுக்கு கற்பிக்க ஏற்பாடு செய்தது. உண்மையில் இவர்களில் எவருக்கும் பண உதவி செய்யப்படவில்லை. பட்டதாரி ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய முன்வந்த இவர்கள் அனைவரும் என்றும் பெரு நன்றிக்குரியவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'BOSS' என்ற குறிப் பெயரால் மாணவர்களால் அழைக்கப்பட்டவர் அதிபர் திரு.க. சிவபாலன் அவர்கள் ஒருவரே. அவரது தனி மனித ஆளுமை கம்பீரமானது.

கல்லூரிக்கு வெளியிலும் அவருக்கு பெரு மதிப்பிருந்தது. ஆளுமையும் தலைமைத்துவமும் குறித்து பேசுகின்றவர்கள் அதிபர் சிவபாலன் அவர்களைத் தவறாமல் குறிப்பிடுவார்கள். அவருடைய ஆங்கில அறிவு அபாரமானது. 1960ம் ஆண்டு காலப்பகுதியில் உயர் வகுப்பு மாணவிகளுக்கு ஆங்கிலத்துடன் லத்தீன் மொழியையும் கற்பித்தார். அவருக்கிருந்த லத்தீன் மொழி அறிவு ஆங்கில மொழியறிவை செழுமையாக்கி இருந்தது. 1964 மார்கழியில் நிகழ்ந்த சூறாவளிப் பேரழிவின் போது அவர் மாணவர்களுடன் வீதி வீதியாக சென்று மீட்பு பணியில் ஈடுபட்டதை யாரும் மறந்துவிட முடியாது. பேரழிவில் நகர் செயலற்றிருந்த நிலையில் மனிதக் கழிவுகளை குழி தோண்டி புதைக்கும் பணியையும் நேரில் நின்று முன்னெடுத்தவர் அவர். அது மட்டுமின்றி சிங்கள மகா வித்தியாலய மாணவர்களையும் இணைத்து நகர்ப்புற சிரமதான பணியை முன்னெடுத்தவர் அவர் ஒருவரே. கல்லூரி என்பது சமூகத்தின் ஒரு அங்கம். சமூகம் செயல் இழக்கும் நிலையில் ஒரு கல்லூரியால் சமூகத்திற்கு வழிகாட்ட முடியும் என சாதித்தவர் 'எங்கள் BOSS'. 'BOSS' என்பது இங்கு 'வழிகாட்டி' என அர்த்தப்படும். அவர் இருக்கும் இடத்தில் கூச்சல் இருந்ததில்லை. எல்லாமே 'மியாவ்' ஆகிவிடும். அவர் யாரையும் ஈர்த்து விடும் ஆளுமைமிக்க மிடுக்கான தோற்றத்துடன் கர்ச்சனையாகப் பேசுவார். Boss நடந்து வந்தால் தெருவில் வழிவிட்டு ஒதுங்குபவர்களை யாரும் பார்த்திருக்க முடியும். ஐரோப்பிய பாணியில் கோட் - சூட் உடையில், சில நேரங்களில் வேட்டி - நாஷனல் இந்த உடைகள் அவரின் மனப் பிரதிபலிப்பை வெளிப்படுத்தும்.

அறுபதுகளின் இறுதிப் பகுதி நிர்வாகத்தில் பஞ்சாட்சரம் - நாகலிங்கம் ஆய்வுகூட உதவியாளர்கள். இவர்கள் உயிரியல், இரசாயனவியல் ஆய்வுகூடங்களில் தான் பணி என்றாலும் கல்லூரியை சுற்றி நிறைந்திருப்பார்கள். பஞ், கோணேஸ் - பரமேஸ் கால ஒரு இசைக் கலைஞர். அவருடைய கல்லூரிக் கால இசை வாழ்வு பாரிசில் மிளிர்ந்து அவரோடு மறைந்தது. நாகலிங்கம் எதையும் இல்லையென சொன்னதில்லை. முகமளவு சிரிப்பு. அது அவருடைய ரேட் மார்க். கற்பூரம் காற்றில் கரைவது போன்று யாருடனும் நட்பில் ஒன்றிவிடுவார். திருவாளர்கள் பாலேந்திரா, மூக்கையா ஆகியோர் அலுவலக எழுத்துப் பணியில் இருந்தவர்கள். மறக்க முடியாத நட்பு முகங்கள்.

நூலகத்தில் பெரும் இருப்புக்கள் இல்லையென்றாலும் இன்று பெருஞ் சொத்தாக தேடப்படுகின்ற பல நூல்கள் இருந்தன. 1965ம் ஆண்டுகளில் பல பெறுமதியான நூல்களை இலங்கை அரசகரும மொழித் திணைக்களம் மொழிபெயர்த்து மலிவுப் பதிப்பில் வெளியிட்டுக் கொண்டிருந்தது. அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தும் துருவேறிய கறாரான மொழி பெயர்ப்புக்கள். அறிவியல், கலை, வரலாறு, புவியியல் தவிர, வியத்தகு இந்தியா, சிந்துவெளி நாகரீகம், இந்திய வரலாறு என எல்லை கடந்த நட்புக்கான அறிவுப் பதிப்புக்களும் நூலகத்தில் இருந்தது. ஆனாலும் பல நூல்கள் 'வற்றிய நதியோரம் கொட்டிக் கிடந்த விதை நெல்லாக' நூலடுக்குகளில் இருந்து வெளியே வராமல் மாட்டிக் கொண்டிருந்தன என்றால் அதன் பிடிவாதமான தனித் தூயவாத கறார் மொழி பெயர்ப்பே காரணம். சி.பா.ஆதித்தனாரின் ராணி முத்து அறிமுகமாக்கியவர்களில் ஜெயகாந்தன் முக்கியமானவர். மரபு வாழ்க்கையை மீறிய மெல்லிய உணர்வுகளும், தவிப்புகளும் அறச்சீற்றத்தோடு அவர் எழுத்தில் வளர்ந்தது. நா. பார்த்தசாரதி, மு.வ, சாண்டிலியன், கல்கி ஆகியோர் நூலகத்தில் நிறைந்திருந்தார்கள். வினோபாஜி தவறாமல் இருப்பார். முக்கியமாக கலைக் களஞ்சியம் சென்னைப் பல்கலைக்கழக தமிழ் லெக்சிகன் ஆகியன நூல் தட்டில் பெரும் இடத்தைப் பிடித்திருந்தது. ராணி முத்தில் அடைப்படம் ஜெ... என அழைக்கப்படும் ஜெயராஜ் போட்டிருந்தால் மவுசு அதிகம். ஜெயராஜ் படைத்த ரதிகளில் வட இந்திய உடலழகு தூக்கலாகவே இருக்கும். அதுவும் தோளில் இருந்து நழுவத் துடிக்கும் சாறியுடன் எடுப்பான.... அவருடன் என் கல்லூரிக் கால பள்ளித் தோழர்களின் அட்டைப் பட ரசிப்பை நேரில் சொல்லி மகிழ்ந்திருக்கின்றேன். ஒரு இளம் வாசகன் மொழியினூடாக உருவாக்கிக் கொள்ளும் கனவு அது. கல்விக்கூடம் என்பதற்கு அப்பால் சுதந்திரமான தேடலையும் கலையிலக்கிய ஆர்வங்களையும் அனுமதித்தது. நூலகராக திரு. C.A.ஜோதிநாதன், செல்வி. நாகராசா ராஜேஸ்வரி கடமையாற்றியது நினைவில் உள்ளது. ராஜேஸ்வரி அவர்கள் பின்னர் சண்முகா மகளிர் கல்லூரியின் அதிபராக உயர்ந்து மறைந்தவர்.

கல்லூரியில் அதி விருப்பத்திற்குரிய இடங்களில் ஆறடிக்கு ஆறடி நீள அகலத்தில் இருந்த 'நாணா கன்ரீனும்' ஒன்று. நாணாவிடம் கடனாக வடை வாங்க ஒரு மென் சிரிப்பை அவ்வப்போது அடகு வைப்பதுண்டு. அந்தச் சிரிப்பின் அன்றைய இலங்கை மத்திய வங்கி பணவீக்கப் பெறுமதி 5 சதம் மாத்திரமே. அந்த ஐந்து சதம் அளித்த மனநிறைவுடன் 10 மணி குறும் இடைவேளையை இனிது நிறைவேற்றுவதில் ஒரு குஷி. மரவள்ளிக் கிழங்கை - மஞ்சள் - உப்புடன் வேகவைத்து எண்ணெயில் போட்டு வெளியே வைத்தால் அதற்கு ஒரு ரசிகர் கூட்டம் உண்டு. நாணாவின் வெற்றி இரகசியமே அந்த 5 சத சதுரச் செப்பு நாணயத்திற்கு மேலாக எதற்கும் விலை வைத்ததில்லை என்பது தான். 5 சதம் செப்பு சதுர நாணயம் தான் என்றாலும் அதில் பிரிட்டிஸ் மகாராசா ஆறாம் ஜோர்ஜ் கம்பீரமாக இருந்தாரே. அது ஒன்று போதாதா? நாணாவிற்கு யார் யார் கடன் கொடுக்க வேண்டும் என்பதெல்லாம் மனக்கணக்குத் தான். அவர் எழுதியதை யாரும் பார்த்ததில்லை. 1800ம் ஆண்டு உள்ளூர் சந்தை குறித்து ஒரு பிரிட்டிஷ் வரலாற்றாய்வாளன் விபரிக்கும் காட்சி மிக அலாதியானது. 'கூட்டமும் கூச்சலும் நிறைந்த திருக்கோணமலை சின்னக்கடைச் சந்தையில் கடனாளி சொல்வதும், கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தவர் சொல்வதும் ஒரு போது சர்ச்சையானதில்லை. மனக்கணக்குகள் உடனுக்குடன் குடும்பங்களில் பரிமாறப்பட்டிருக்கும். ஒருவர் இறந்து விட்டால் அவரது குடும்ப வாரிசு மனக்கணக்கை தொடருவாராம்'. ஜோர்ஜ் மகாராசா நாணயமா இருந்த காலத்து கதை இது. என்றாலும் மானுட அறத்தின் மீது நம் மக்களுக்கும் நம்பிக்கை மேலோங்கி இருந்திருக்கின்றது. மானுட அறம் என்றால் என்னவென சந்தேகமிருந்தால் ஒருவேளை அந்தக் காலத்து அகராதிகளை தட்டிப் பாருங்கள். நாணா என்ன படித்திருப்பார் என்று ஒரு நாளும் யாரும் கேட்டதில்லை. ஊர் காத்தான்குடி என்ற ஒற்றைச் சொல் தகவல் மட்டும் தான் அன்றைய மனப்பதிவில் இருந்து இப்போது நினைவில் தளிர்க்கின்றது.

பொன்னம்பலத்தின் தாத்தா, பாட்டன் வழிப் பூர்வீகத்தை யார் தேடினாலும் மட்டக்களப்பு வரை போகவேண்டும். நடுத்தர உயரம், அச்சு அசலாக வடிவேலின் இடைக்காலப் படங்களின் தோற்றம். அவர் கல்லூரியில் சிற்றூழியர் தான். இருந்தாலும் மாணவர்களின் நண்பன். காலையில் வெளிக் கதவைச் சாத்தி தாமதமாக வரும் மாணவர்களை வெளியில் நிறுத்தும் பணி அவருக்கு பிடிக்காத ஒன்று. ஓசைப்படாமல் மாணவர்களைக் கல்லூரிக்கு உள்ளே அனுப்பிவிடுவார். அது தாவணித் துண்டோடு இரட்டைப் பின்னல் சினிமா நாயகிகள் திரையில் வலம் வந்த காலம். கண் இமைகள் மின்னலாகத் துடி துடிக்க ஒரு பக்கக் கூந்தலை மார்பில் சாயவிட்டு அடிக்கூந்தலை விரல்களால் வருடுவது தான் அன்றைய "A+U" சேட்டிபிக்கற் திரைப்பட முத்திரைகள். நம் போதாக் காலம் ஒரு பறவை முன் பறக்க பின்னால் பெண் பறவை நெருக்கமாக பறப்பதோ அல்லது ஒரு வண்ணத்துப் பூச்சி ஒரு மலரில் அமர்ந்து தேன் உண்ணுவதோ எல்லாமே "A" சேட்டிபிகற்றே தான். பொன்னம்பலம் வாரந்தோறும் வெண் திரையின் முன் வரிசையில் இருப்பார். அவ்வப்போது ஐந்து அல்லது பத்து பிரிட்டிஸ் ஜோர்ஜ் மகாராசாக்களை ஒன்று சேர்த்து அவரின் கைக்குள் திணித்துவிட்டால் அவரின் சிரிப்பிலும் இறைவனைக் காணலாம். பொன்னம்பலத்தின் காலத்தில் இந்துக்கல்லூரிக் கதவு எங்களைப் பொறுத்தவரை அடையா நெடுங்கதவு தான். யாரும் வெளியில் நின்றதில்லை. இதுவரை பிரிட்டிஸ் மகாராசா ஜோர்ஜ் மட்டும் அறிந்த ரகசியம்.

ஒரு நிறுவனத்தின் வெற்றி கூட்டு ஆளுள்ளத்தால் மாத்திரமே தீர்மானிக்கப்படும். சேர் ஜோன் மூர் மரணத்திற்கு மறுநாள் முழு வீச்சாக பிரிட்டனின் புதிய தளபதியால் ஸ்பெயின் போர் வெற்றிகொள்ளப்படுகின்றது. தளபதி மூரின் மரணம் போர் வெற்றியைத் தடுக்கவில்லை. விரும்பிய போதெல்லாம் தனி மனித உழைப்பைக் கொண்டாடலாம். ஆனால் எதற்காகவும் அதில் தரித்து நின்று தேம்புவது நொண்டி. இது பாரதியின் சொல்லாடல். Burial of Sir John Moore சொல்வதும் அது தான். "எனது இடமாற்றம் கல்லூரியின் வளர்ச்சியை தடுத்து விடாது" என்று அதிபர் கிருஷ்ணபிள்ளை கூறியதை சரியென புரிந்து கொண்டேன். தலைமைத்துவத்தின் ஆழ்ந்த நோக்கு மெல்ல மெல்ல புரியத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர் ஜோன் மூர் நட்சத்திர ஒளியில் ஆரவாரம் இன்றி புதைக்கப்பட்டார். ஆனால் அவரின் இலக்கு வீரியத்துடன் அடுத்தவரால் எடுத்துச் செல்லப்பட்டது. அவரின் கனவு வென்றெடுக்கப்பட்டது. அவ்வாறே கல்லூரியில் அவருக்குப் பின்னரும் இன்னும் அதிக மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றார்கள். சாதனைகளைத் தொடர்கின்றார்கள். அடுத்து எதுவோ அதைக் கடந்து செல். நிமிர்வே நீங்கள் ஈட்டிக்கொள்ளும் வெற்றியின் முதற் காலடி. தனி மனிதனில் சார்ந்தி -ருக்காதீர்கள். இந்தக் கவிதையால் அவர் உணர்த்திய உண்மைகள் இவை. இன்று மானுட வளர்ச்சிக்கு இந்துக்கல்லூரி மாணவர்கள் ஆற்றுகின்ற சிறிய பங்களிப்புக்கூட மகாத்தானது. அந்த மாணவர்களை செதுக்கிய அனைத்துச் சிற்பிகளும் உயர்ந்தவர்களே! 125 ஆண்டுகளை கடக்க வழிகாட்டிய ஒவ்வொரு ஆன்மாவிற்கும் Charles Wolfe இன் கடைசி இரு வரிகளை எழுந்து நின்று சமர்ப்பிக்கின்றேன்.

"We carved not a line, and we raised not a stone,

But we left him alone with his glory."

Charles Wolfe. (1791–1823.)

**கனகசபாபதி சரவணபவன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்தி சங்க செயற்குழு உறுப்பினர்கள்
## ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி



அமர்வு (இ-வ): திரு.எஸ்.சிவகுமார், திரு.ம.நிரஞ்சன், திரு.என்.பரமேஸ்வரன், திரு.செ.பத்மசீலன்(அதிபர்), திரு.க.அருள்வரதராஜா(செயலாளர்), திருமதி.மே.யோகராசா, திரு.ந.ராஜிதன்

நிலை (முதலாம் வரிசை): திரு. கிருஷ்ணகுமார், திரு.நி.நிரோசன், திரு.க.துஷியந்தன்

வராதவர்கள் : திருமதி.ஆ.தட்ஷாயினி, திருமதி. ஜெ.ஸ்ரீபதி, Dr.வ.குகேந்திரன், திருமதி.கு.சோதிலிங்கம், திரு.T.டினராஜ், திருமதி.வா.விஜயராஜேந்திரன், திரு.சா.ஸ்ரீரிதரன், திருமதி.எஸ்.விமலகாந்தன், Audit.தம்பு பாலசுப்ரமணியம், திரு.இ.மகாதேவன்(வலயக்கல்வி பிரதிநிதி), திரு.தி.துஷியந்தன்

## பழைய மாணவர் சங்க செயற்குழு உறுப்பினர்கள்
## ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி



**Front row Left to right :** I.Vimalathas, T.K.Rajanikanth, N.Parameswaran, S.Pathmaseelan(President), I.Ashok(Secretary), N.Kumanan(Treasurer), K.Umesh

**Standing Left to right :** Y.Thanushanth, S.P.Sureshkumar, T.Sivanathan, M.Alawdeen babu, S.Saktheepan, S.Theeparaj, P.Jeyanthiran, R.Kalichelvan, R.Hariharan.

**Absentees :** K.Rathan, V.Chandru, N.Tharmenthiran

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BOSS: அதிபர் க.சிவபாலன்.

வாழ்க்கையை வெறும் தரவுகளாகவும், நினைவுகளாகவும் சொல்லிச் செல்லும் 'மரபு' கொண்ட எழுத்துச் சூழலில் ஒரு கல்லூரி அதிபரின் இரு தசாப்த ஆளுமைகளை காட்சிப்படுத்துவது சிக்கலானது. அதுவும் குரு வணக்கம் அருகி வரும் இன்றைய தமிழ்ச் சூழலில் அதிபர் க.சிவபாலன் போன்ற பல பரிமாணங்கள் கொண்ட ஆளுமையை மதிப்பீடு செய்வது அதைவிடக் கடினமானது. அவர் கல்லூரி என்ற கட்டடத் தொகுதியையும், தேர்வு மதிப்பெண்களையும் தன் வெற்றியாக மார்பு தட்டிக் கொண்டாடியவர் அல்ல. அவர் தன்னைப் பின் தொடரும் மாணவனுக்கு வெறும் கேள்வி பதில் வழியாக உலகில் திரட்டப்பட்ட ஒற்றைப்படை அறிவைக் கொடுப்பதற்கு பதிலாக பரந்துபட்ட ஆளுமை அளிப்பதைக் கனவாகக் கொண்டிருந்தவர். அத்தகைய தருணங்களிலேயே ஒரு நல்லாசிரியனுக்கும், மாணவர்களுக்கும் இடையில் கல்வியைத் தாண்டி அக நிலையில் ஓர் உறவு பூக்கும் என நம்பியவர். கல்வி என்பது அறிவு மேம்பாட்டுடன் ஆளுமையை நெறிப்படுத்துவதாக அமைய வேண்டும். இவற்றை எல்லாம் வென்றமைந்த ஒரு ஆசிரியன் குரு அல்லது வழிகாட்டிக்கு நிகரானவன். அதிபர் க.சிவபாலன் குறித்த மதிப்பீடுகளில் அக்காலச் சூழ்நிலையையும் சேர்த்து மதிப்பிடுவதே புரிந்துணர்வுக்குச் சரியானது. இன்றைய நாள் போன்று கூகுளின் ஒற்றைச் சொடுகில் உலகத்தை அறியாக் காலம் அது. அவற்றையெல்லாம் எழுதினால் வரலாறு எத்தகைய கொடுமைகளைக் கடந்து இன்றைய வண்ண நுழைவாயிலில் நிற்கின்றது என சிறிதளவேனும் புரிய முடியும். ஒரு காலத்தில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் மாட்டுச் சாணத்தை சுமந்து வந்து கூடங்களின் தரை மெழுகிய ஆசிரியர்களும், மாணக்கர்களும் கூடிய இடம் பள்ளிக்கூடம் என்ற ஒரு சிறிய யதார்த்தை என்றாவது நாள் சிந்தித்திருப்போமா? அதிபர் க.சிவபாலனின் காலம் கல்லூரி வரலாற்றில் அடுத்தவொரு கட்டம். அவர் கம்பீரம், நேர்த்தி, சமூக அக்கறை, ஆகியவற்றின் திரட்சியான ஆளுமை. மாணவர்களின் வளர்ச்சியையும் சமூகத்தின் வளர்ச்சியையும் இணைத்து சிந்தித்தவர். 1947 தொடக்கம் 1968 வரையிலான உறவு அவருக்கும் கல்லூரிக்கும் இவ்வாறே இருந்தது.

Sir!

இது 1942. கப்டன் புச்சிடோ தலைமையில் யப்பானிய பேரரசின் சீரோ உளவு விமானங்கள் திருகோணமலை கடற்படைத் தளத்தை குறிவைத்து உளவு நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த காலம். நீங்கள் அப்போது பிரிட்டிஸ் கூட்டுப்படை (Royal Air Force, Royal Navy, British Army ) தீயணைப்பு பிரிவின் Liasion அதிகாரி (in Charge of Administration and Liasion Officer. - A liaison officer (LNO) represents the commander or a staff officer.). கொழும்பு கூட்டுப்படை தலைமையகம் அவசரம் அவசரமாக சில பிரிட்டிஸ் இளநிலைப் படைவீரர்களை உங்கள் பிரிவிற்கு அனுப்புகின்றார்கள். ஆனால் உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பீட்டில் அவர்களில் சிலர் நேர்த்தியும் படைவீரனுக்குரிய கம்பீரமும் குறைந்தவர்கள். அவர்களில் ஒருவன் உங்கள் அறைக்குள் அலட்சியமாக உள் நுழைக்கின்றான்.

"I am (so and so) reporting for duty Sir. What have I do to do?"

இது தான் அந்த பிரிட்டிஸ் படைவீரன் உங்களிடம் கூறிய வார்த்தைகள்.

நீங்கள் ஒரு கண நொடியில் அவனைப் பார்வையால் அளவெடுக்கின்றீர்கள். உங்கள் பார்வையில் அந்த இளநிலை படைவீரன் நேர்த்தியான தோற்றத்தில் இல்லாததோடு தகுதியற்றவன் ( Nincompoops or Popinjays) போன்று இருந்தான்.

"Do all and keep out of my bloody way!"

இது இராணுவ மிடுக்கில் உங்கள் குரலில் வெளிவந்த கர்ச்சனை அந்த அறையை நிரப்புகின்றது. நினைவிருக்கின்றதா? உங்களுக்கு சில குணங்கள் இயல்பாகவே உள்ளன. கல்லூரியிலும் உங்கள் மாணவர்கள் நேர்த்தியாக இருப்பதையே வற்புறுத்துவீர்கள். துணிச்சல், யாருக்கும் அஞ்சாத நேர்மை, மனத்தில் பட்டதை உடனே பட்டென்று சொல்லி விடுவது இவை சில சந்தர்ப்பங்களில் விமர்சனங்களை வாரி இறைத்துவிட்டதும் உண்டு.

1947. இன்னும் ஒரேயொரு நிகழ்வை நினைவுபடுத்த விரும்புகின்றேன். பிரிட்டிஸ் ஆட்சியின் கீழ் இலங்கை இருந்த காலம் அது. வார விடுமுறை நாட்களில் மாணவர்களுக்கு கடலில் நீச்சல் பயிற்சி அளிப்பதை நீங்கள் வழக்கமாகக் கொண்டிருந்தீர்கள். அன்று இளங்காலை. வழமை போன்று நீச்சல் பயிற்சிக்கு பின் Back bay கடற்கரையில் மாணவர்களோடு பேசிக்கொண்டு நிற்கின்றீர்கள். அவர்களில் ஒருவர் எங்கள் கல்லூரியின் சிங்களப் பிரிவு மாணவன் D.J. சுபசிங்க ( இப்போது Dr.D.J.S). அங்கே பிரிட்டிஸ் படை வீரர்களின் குடும்பத்தவர்கள் கூட்டமாக வருகின்றார்கள். அவர்களில் ஒருத்தி ஓங்கிய குரலில் உங்களிடம்....

'Hey! You can't bath in the sea here. This meant only for white people and you are all blacks' என சினத்தோடு கட்டளைத் தொனியில் கூவுகின்றாள்.

நீங்கள் திசை தேடி திரும்பிப் பார்க்கின்றீர்கள்.

அந்த பிரிட்டிஸ் பெண்ணின் குரல் கேட்ட நொடித் துளிக்குள் உங்கள் கர்ச்சனை இப்படித்தான் முழுங்கியது:

'You bloody who the hell do you think you are. This is our land and you are interlopers here. Now get the hell out of here.'

இந்த நிகழ்வு நினைவிருக்கின்றதா? DR.D.J.S உங்களை பணிவோடு குருவாக ஏற்றிருப்பது இந்த நிமிர்வுக்காகத் தான். அந்தத் திமிர் யாருக்குத் தான் பிடிக்காது? அது நீங்கள் வரமாகப் பெற்ற கம்பீரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1947. அன்று ஞான நிலா. புத்த பெருமான் ஞானம் பெற்ற வெசாக் தினம். இந்துக்கல்லூரி மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. வண சிறி நிவாச தேரர், வண விஜிரகீர்த்தி தேரர், வண நாரதா தேரர் ஆகிய பௌத்த துறவிகள் மாணவர்களாக இந்துக்கல்லூரியில் கற்றுக்கொண்டிருந்தார்கள். திருகோணமலை ஜயசுமனராமயா பௌத்த பள்ளியின் தலைமை மதகுரு வண விமலகீர்த்தி தேரர் எங்கள் கல்லூரியின் பழைய மாணவர். அவரின் அழைப்பை ஏற்று ஞான நிலாவில் 'தம்மபதம்' குறித்து உரையாற்றினீர்கள். தம்மபதம் முழுக்க முழுக்க மனதை நெறிப்படுத்தும் கௌதமரின் ஞானப் பொழிவு இறைவனை பற்றி எதுவும் பேசவில்லை. உங்கள் உரையை ஆங்கிலத்தில் நிகழ்த்தினீர்கள். மனித குலத்திற்கு கௌதம புத்தர் அருளிய வாழ்க்கை இரகசியங்களை உங்கள் மொழியில் கேட்ட பிரிட்டிஷ் படைவீரர்கள் எழுந்து நின்று கரகோஷம் செய்ததை இன்னும் உங்கள் மாணவர்கள் தங்கள் பெருமையாகப் பேசுவார்கள்.

1948. இன்றும் அதிகம் பேசப்படாத உங்களின் ஒரு பக்கம் விளையாட்டுத் துறை. நீச்சல் போன்றே துடுப்பாட்டமும் உங்களின் அதி விருப்பத்திற்குரியது. அகில இலங்கை துடுப்பாட்ட வீரர் எல்லாட்டை (Ellart) அழைத்து மாணவர்களுக்கு பயிற்சி அளித்தீர்கள். அப்போது ஏனைய கல்லூரிகளில் துடுப்பாட்டப் பயற்சி அளிக்கப்பட்டதில்லை. அதில் ஒரு சுவையான நிகழ்வு. உங்கள் மாணவன் ஒருவர் கப்டனாக தலைமையேற்க அவரின் கீழ் ஒரு விளையாட்டு வீரானாக நீங்கள் விளையாடியதை யாரும் மறக்கமாட்டார்கள். இது ஒரு நல்லாசிரியன் தாழ்வுணர்ச்சியை தகர்த்த உதாரண நாள். ஆனால், அது எங்கள் வாழ்வில் விளையாட்டின் தத்துவமும் புரிய வைக்கப்பட்ட பெருந் தருணம்.

1957 மாவட்டங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியை நீங்களே முதலில் தொடக்கி வைத்தீர்கள் என்ற உண்மை இன்னும் பலருக்குத் தெரியாது. மட்டக்களப்பு - திருகோணமலை போட்டிகள் இலங்கை கடற்படைத்தளத்தில் உங்கள் தலைமையில் நிகழந்தது. இதில் சென் தோமஸ் (குறுருலாவா) பங்கேற்றது.

1958 நீங்கள் ஆசிரியராக இருந்த காலத்து நினைவுகளை உங்கள் மாணவர்கள் இன்னும் பெருமையோடு மீட்டுக்கொள்கின்றார்கள். 1958 இல் James Henry Leigh Hunt எழுதிய The Plate of Gold கவிதையை வகுப்பறையில் படிப்பித்த நாட்கள் என்றும் இனிமையானவை என்பார்கள். மானுட நேயத்தை கவிச் சித்திரமாக James Henry Leigh Hunt எழுதியிருப்பார். 'The Plate of Gold' கவிதை நேரம் கழிவதே மாணவர்களுக்குத் தெரிவதில்லை. ஒரு மனிதன் மீது மற்றொரு மனிதன் கொள்ளும் அன்பே இறைவனின் விருப்பத்திற்குரியது. இதுதான் இந்த கவிச் சித்திரத்தில் இழையோடியிருந்த சரடு. இடதுசாரிக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டிருந்த உங்களுக்கு 'The Plate of Gold' கற்பிக்கக் கிடைத்தது மிகப் பெரும் கொடை என எண்ணத் தோன்றுகின்றது. அதை கற்பிக்கும் போது நீங்கள் ரசித்தது. மாணவர்களை கற்கத் தூண்டியது James



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Henry Leigh Hunt அளித்த மானிட நேசம் என்பதை நினைவில் கொள்கின்றோம். கவிதை என்பது வாழ்க்கையனுபவங்களின் உச்சப்புள்ளியை விதையாக ஊன்றுவது என இன்று புரிந்துகொள்ள முடிகின்றது. கவிதையைப் புரிந்து கொள்ள ஒரு வயது முதிர்ச்சியும் தேவைப்படும் அல்லவா?

'One day there fell in great Benares' temple - court A wondrous plate of gold, whereon these words were writ'

"To him who loveth best, a gift from Heaven."

கவிதைகள் என்ற பெயரில் அச்சுக் குப்பைகள் மேடைகளை நிரப்பும் இன்றைய சூழலில் உங்கள் குரலில் James Henry Leigh Hunt இன் சொல்லடுக்குகள் காதுகளை இன்னும் வாரி நிறைத்துக் கொண்டிருக்கின்றன.

Charles Dickens. இது உங்களுக்கு மிக மிகப் பிடித்த பெயர். அதுவும் 'A Tale of Two Cities' என்றால் வகுப்பறையில் ஆர்வம் அதிகரிக்கும் என்பார்கள் உங்கள் மாணவர்கள். பிரஞ்சுப் புரட்சிக் காலத்தில் பரிஸ் மற்றும் லண்டன் ஆகிய இரு நகர மக்களின் வேறுபட்ட வாழ்வின் இலக்கியம் தான் Charles Dickens இன் A Tale of Two Cities. ஒரு தெய்வத்தின் இரு வேறுபட்ட முகங்கள் போன்ற மிக அற்புதமான கதைகள் தான். என்றாலும், ஒரு மாணவனாக வாசித்துப் புரிந்து கொள்வதற்கு சார்ள்ஸ் டிக்கின்ஸ் (Charles Dickens) மொழி கடுமையானது. ஆனாலும் அவருடை இலக்கியப் படைப்புக்களில் A Tale of Two Cities மிகச் சிறந்ததென நீங்கள் கூறுவீர்கள். ஒரு காவியமாக அதனோடு நீங்களும் ஒன்றி மாணவர்களையும் ஒன்றிவிடச் செய்துவிடுவீர்கள் என பெருமைப்படும் மாணவர்களை இன்றும் பார்க்கின்றேன். இக் காவியத்தில் இசை வழியாகவும் சற்று உணர்ச்சிகரம் குடியேறியிருக்கும். அவ்வப்போது சிறப்பு ஒலிகளை வாயினால் கூட எழுப்பிவிடுவீர்கள் என உங்கள் மாணவன் சண்முகம் சிவப்பிரகாசம் அவர்கள் கூறும் போது அவர் கண்கள் இன்னும் பிரகாசிக்கின்றன. ஆங்கிலப் பாடம் அதுவும் டிக்கின்ஸ் படைப்பை ஆவலோடு எதிர்பார்க்கும் மாணவர்களை அன்று உருவாக்கினீர்கள். ஏன் அந்த இரசவாதம் இன்று அருகிவிட்டது? எண்ணும் போதெல்லாம் ஆழ்ந்த துயர் நிறைகின்றது. அன்றைய அந்த வெற்றிக்கு டிக்கன்ஸ், மற்றும் நீங்கள் இருவருமே சொந்தக்காரர்கள். சிறகுகள் காற்றில் பறப்பது போன்று ஆங்கில இலக்கியங்களை எளிமையான மொழியில் இனிமையான வாசிப்பனுபவமாக அளிக்க உங்களால் தான் முடிந்தது. பிடித்த நல்ல நூல்களை மாணவர்களுக்கு பரிந்துரைப்பது உங்கள் வழக்கமாக கொண்டிருந்தீர்கள். அது உங்கள் பல மாணவர்களுக்கு இன்றுவரை வாசிப்பில் புதிய, புதிய திறப்புகளை வழங்கிக் கொண்டிருக்கின்றது. அவற்றுள் மறக்க முடியாத ஒன்று Dale Carnegie (1888 – 1955 was an American writer.).

1961 திருகோணமலை தூக்கமும் விழிப்புமான இருமை நிலையில் மயங்கியிருந்த காலம். பெண் கல்வி அதிகம் வீச்சுப் பெற்றிருக்கவில்லை. திருக்கோணமலைக் கல்லூரிகளில் ஆய்வுகூடங்களும், அறிவியல்துறை பட்டதாரி ஆசிரியர்களும் பற்றாக்குறை நிலவியது. இன்னும் பல்கலைக்கழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைவு எட்டித் தொடக்கூடிய நிலையில் இருந்ததில்லை. உங்கள் கவனம் உயர்வகுப்பு குறித்து திரும்புகின்றது. மாணவர்களோடு மாணவிகளுக்குமாக இந்துக்கல்லூரியின் கதவுகளை அகலத் திறக்கின்றீர்கள். அந்தத் தருணம் மாணவிகளின் வாழ்வில் ஒளி பாயப்போகிறது என யாரும் இலகுவில் நம்பி இருக்கமாட்டார்கள். 1961+ தவமணிதேவி முதல் மாணவியாக இந்துக் கல்லூரிக்குள் நுழைகின்றார். மாணவிகளின் உயர்கல்விக்காக உங்கள் தனி மனித வாழ்வில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றீர்கள். ஒரு கட்டத்தில் நகரில் தங்க வசதி இல்லாத மாணவிகளை உங்கள் வீட்டில் தங்க அனுமதிக்கின்றீர்கள். தோப்பூர் அனித்தா ஹபீபா (Anitha Habeeba), சாம்பல் தீவு செல்வி க.லட்சுமிதேவி ஆகியோர் உங்களோடு தங்கியிருந்து உயர்கல்வி பெற்ற காலங்களை நன்றியோடு பேசுகின்ற போது கலங்கி விடுகின்றார்கள். உங்கள் சிந்தனையில் எந்த வண்ண பேதங்களும் இல்லை. செல்விகள் தவமணி, சாந்தாதேவி, து. தனேஸ்வரி, சி.லோகேஸ்வரி, லக்ஸ்மி, சரஸ்வதி, அனித்தா, ஆயிஷா மீரா சாகிப் (Aysha Meera Shahib), குரைஷிய ஜபார் (Kuraisha Jaber), யுகைரா ஜயா (Juhaira Jayah). சி. ரஞ்சினி, சி.பிரமிளா ஆகியோர் உங்கள் மாணவிகள். என் நினைவுச் சுழற்சியில் நழுவிச் சென்ற மாணவிகள் இன்னும் பலர்.

1964 புயல் பேரழிவில் இந்துக்கல்லூரி - சென் ஜோசப் கல்லூரி, சிங்கள மகாவித்தியாலயம் ஆகியவற்றை இணைத்து பல சிரமதானத் திட்டங்களை முன்னெடுத்தவர் நீங்கள். கல்லூரி உங்களுக்கு ஒரு சமூகக் கருவி மாத்திரமே. உங்கள் இலக்கு மண்ணும் மக்களும் தான். இது தான் உங்களை மற்றவர்களிடம் இருந்து வேறுபடுத்தி உயர்த்திக் காட்டுகின்றது. தமிழ், சிங்கள மாணவர்களுடன் இணைத்து நிறைவேற்றிய சிரமதானங்கள் பல. 1963 இல் மிகப் பாரிய சிரமதானப் பணியை ஒற்றை மனிதனாக நின்று ஒழுங்கு செய்து கோணேசர் ஆலய வீதியை சீரமைத்தது பரந்தளவு பேசப்பட்டது. கல்லூரிக்கும், சமூகத்திற்கும் இடையிலான உறவு சிரமதான பணிகளினால் மேம்பட்டது.

முதல் பல்கலைக மாணவன், மாணவி.

முதல் மாணவனாக திரு. K. கோபாலசிங்கம் பல்கலைக்கழகம் சென்ற நாள் உங்கள் உழைப்பின் மகாத்தான முதல் அறுவடைத் தினம் என எண்ணுகிறேன்.

1967 வரை உங்கள் மாணவிகளின் உயர் கல்விப் போராட்டம் தொடர்ந்தது. நீங்கள் காட்டிய ஆர்வம் ஒரு தந்தையின் உழைப்பாகவே தெரிந்தது. ஆய்வுகூட வசதியற்ற மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு இந்துக் கல்லூரிக் கதவுகளை தொடர்ந்தும் திறந்து வைத்தீர்கள்.

1968 10ம் வகுப்புக்குள் நுழைகின்றீர்கள். நிலைகொள்ளாத மௌனம். 21 ஆண்டு கால இந்துக் கல்லூரி வாழ்வில் இருந்து விடைபெறும் தருணம். மிக அமைதியாகப் பேசுகின்றீர்கள். திருகோணமலை மண் சார்ந்த அக்கறை வெளிப்பட்டது. மாணவர்களின் தலைமைத்துவம் ஆளுமையும் கருப் பொருளாக இருந்தது அந்த அமைதி உரையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971 இல் இருந்து உயர்தரம் புத்துணர்வுடன் மீண்டும் வீறுகொள்ளத் தொடங்கியது. பேராற்று வெள்ளத்தின் முதல் துளியாக, மாணவியாக 1974 இல் செல்வி சி.சாந்தினிதேவி பல்கலைக் கழகம் நுழைகின்றார். தொடர்ந்து மாணவ மாணவிகள் கலை, மருத்துவம், பொறியியல், சட்டம் என பேரருவியாக பாயத் தொடங்கினார்கள். உங்கள் விதைப்பின் அறுவடைக் காலத்தில் நீங்கள் மாற்றலாகி பலாலி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றுவிட்டீர்கள். பெரு வருத்தம் தான்.

1987 இல் நீங்கள் ஆசிரியராக, அதிபராக, சமூகப் போராளியாக இருந்த வேறுபாடுகளை மெல்லிழையால் தான் பிரிக்க முடியும். நீங்கள் பிபிசி உலக சேவைக்கு அளித்த 'Siva and his People' என்ற ஒரு மணி நேர நேர்காணலில் உலகின் கவனத்தை 83ம் ஆண்டு கறுப்பு இலங்கையின் பக்கம் திருப்பினீர்கள். உங்கள் விமர்சனம் கடும் வார்த்தைகளில் வெளிப்பட்டது. அன்றைய சூழலில் அதற்கு தனியான அசட்டுத் துணிச்சல் தேவை. அதை நீங்கள் பிறவி வரமாக குறைவின்றிப் பெற்றிருந்தீர்கள்.

இடதுசாரி சிந்தனையால் ஈர்க்கப்பட்ட நீங்கள் சுவாமி கெங்கானந்தாஜியுடன் காட்டிய நெருக்கத்தை ஒரு தேடலின் தொடக்கமாகவே உணர்கின்றேன். அறிவு என்பது தன்னை விலக்கி உண்மையைத் தேடுவது. கேள்விகளால் தான் தேடல் கொண்டவன் தொகுக்கப்படுகிறான். இது கௌதம புத்தரின் உரை. அந்த அறிவு எதை அறிந்துகொள்ள முடியும், எதை அறிந்துகொள்ள முடியாது என்பதை உணர்த்தும். உங்கள் தேடல் மற்றொரு வார்த்தையில் வாழ்வை நிறைப்பதற்கானது. சுவாமிஜி உடனான உங்கள் தொடர் உரையாடல் அவ்வளவு தான். வெள்ளிக்கிழமை நாட்களின் கல்லூரிப் பிரார்த்தனை வேளைகளில் நீங்கள் பேசியதை இப்படித்தான் என்னால் உணர முடிகின்றது. ஏனெனில் உங்களிடம் மேலோங்கி இருந்தது பக்தி அல்ல மானுட அறம் அல்லது அறச்சீற்றம். உங்களை இன்னும் பெருமைகொள்ள வைக்கும் அடையாளம் இது தான்.

எப்போதும் உங்கள் ஆங்கில உரைகள் சவர அலகால் கிழித்தது போன்று பிசிறு தட்டாமல் மிக நேர்த்தியாக இருக்கும். பின் புலத்தில் உங்கள் லத்தீன் மொழி அறிவு இருந்தது என்பது வெகு சிலருக்கே தெரிந்தது. பன்னாட்டு அரங்குகளிலும், உள்நாட்டிலும் உங்கள் பேச்சு எழுந்து நின்று பாராட்டப்பட்டது. 'அவர் எங்கள் அதிபர் என நாங்களும் கொண்டாடினோம். கல்வி வழி சார்ந்தும், செயல்வழி சார்ந்தும் ஒரு ஆசிரிய வழிகாட்டியாக உங்களை அகமேற்று பயணிக்கும் நாங்கள் எல்லா வகையிலும் நன்றிக் கடன்பட்டிருக்கின்றோம். நீங்கள் எங்களுக்கு தர விரும்பியது மண்ணில் திரட்டிய கல்வியை அல்ல. வாழும் கலையை. அது கல்வியாக, விளையாட்டாக, சிரமதானமாக, நல் வாசகனாக, நற் குடிமகனாக. அது உங்களால் தான் சாத்தியமானது. தனி மனிதனாக க.சிவபாலன் அவர்கள் என்றும் மானுடத்தால் நிறைந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் கம்பீரத்தையும், நிமிர்வையும் இன்னும் நினைவில் என்றும் கொண்டாட பல காரணங்கள் உண்டு. உங்களை நினைக்கும் தோறும் Joe Louis Clark (Lean on me – 1989) City high school principal in Paterson, New Jersey, US.) நினைவிற்கு வருவார். ஒரு கட்டத்தில் அறுபதுகளின் இறுதியில் எங்கள் கல்லூரி பட்டதாரி ஆசிரியர்கள் பற்றாக்குறையை கடுமையாக எதிர் கொண்டது. உயர் வகுப்புக்கள் இயங்க முடியாமல் தத்தளித்தது. நீங்கள் பல முறை கல்வி அதிகாரிகளை சந்தித்தும் அவர்கள் உங்கள் கோரிக்கையை நிறைவேற்றவில்லை. ஆனால் கல்லூரியைக் கண்காணிக்க ஒரு பெண் கல்வி அதிகாரி வந்தார். உங்கள் சீற்றம் கிளறப்பட்டு உச்சத்தைத் தொட்டது. கல்லூரி முகப்பு வாயில் கதவுகளை அடித்து மூடுமாறு உத்தரவிட்டீர்கள். Here my word is law என உங்கள் குரல் ஒலித்தது. அந்தப் பெண் அதிகாரியை வாசலில் காக்க வைத்து கல்லூரிக்குள் உள் நுழையவிடாமல் மறுத்தீர்கள். இராணுவ பயிற்சி அளித்த கம்பீரம், அறச்சீற்றம் முழுவதுமாக வெளிப்பட்ட அந்தத் தருணம் இனி எங்கே, எப்போது, யாரால்? இதனால் தான் ஒரு தலைமுறையை இயக்கிய நற்பெருவிசையாக உங்களை நாம் நினைவு கூருகின்றோம்.

வழக்கமாக எல்லா பஞ்சாயத்தும் பதினெட்டு பட்டி ஆலமரத்தடிக்கு வந்தாகிவிடும். அங்கு தான் விமர்சனங்கள் ஒன்று கூடும். ஆனாலும், அதெப்படி விமர்சனம் இல்லாத ஆளுமையாக ஒருவர் இருக்க முடியும்? விமர்சனங்கள் தானே ஆளுமையைக் கட்டமைக்கின்றன. அதிபர் சிவபாலன் 'நல்லாசிரியன்', 'இல்லை 'கண்டிப்பான ஒழுக்கவாதி மாத்திரமே', 'சமூக வழிகாட்டி', என அவரவர் பார்வையில் ஆயிரம் விமர்சனங்கள் உண்டு. வேதாந்திக்குச் சிக்காத கடவுள் போன்று பலரின் கண்களில் சிக்காத ஒன்று உங்களுக்குள் இருக்கின்றது. பரந்து விரிந்தோடும் பெரு நதியிலும் அவர்களால் அள்ள முடிந்தது அவரவர் கையில் இருந்த குடம் அளவே என எண்ணியவாறு விமர்சனங்களைத் தினமும் நடந்து கடந்திருப்பீர்கள். இன்று நீங்கள் எங்கள் வெறும் புகழ்ச்சிக்குரிய நினைவு அல்ல. என்றும் தொன்மம்.

**க. சரவணபவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/இ.கி.ச ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி தேசிய பாடசாலையின் ஆளுமைகளும் அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவைகளும் :

புராண இதிகாச காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே பல வரலாற்று படிமங்களை தன்னகத்தே கொண்டு பூகோள ரீதியாக சர்வதேச மட்டத்தில் பிரபல்யம் பெற்ற இடம் தான் திருக்கோணமலை நகராகும். இந்நகரானது முன்னைய காலத்தில் வாழ்ந்த ரிஷிகளாலும், மகான்களாலும் ஆசீர்வதிக்கப்பட்ட புனித பூமியாகும். இந்த தெய்வீக சக்தியின் காரணமாக வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துப்படி இந்த பூமியில் எப்போதும் கலைகளையும், கலாச்சாரத்தினையும் பிரதிபலிக்கும் விதமாக தொடர்ந்து பல நிகழ்வுகள் நிகழ்ந்த வண்ணமே இருக்கும் என்று கூறப்படுகிறது.

இப்புகழ் பூத்த நன்னகரில் தனக்கென ஒரு கௌரவத்துடன் தொடர்ந்து ஒன்பது தசாப்தங்களிற்கு மேலாக எங்கள் பாடசாலை முன்னனி வகிக்கின்றது என்றால் அதற்குரிய ஒரே காரணம் சிறந்த ஆளுமையினாலும் அர்ப்பணிப்பு மிக்க சேவையினாலும் உயர்ந்து நிற்கும் கல்லூரியின் முதல்வர்களே என்றால் மிகையாகாது. இதற்கான உறுதியான அஸ்திவாரம் சுவாமி விபுலானந்தர் அடிகளாரினால் ஆயிரத்து தொளாயிரத்து முப்பதுகளின் மத்தியில் இடப்பட்டு அவரின் பின்னால் நிர்வாகத்திற்கு வந்த பெருந்தகைகளினால் ஒவ்வொரு கல்லாக ஒன்றன்பின் ஒன்றாக வைத்து கட்டியெழுப்பிய கூடம் தான் இன்று நீங்கள் எல்லோரும் பார்த்து வியந்து நிற்கும் இந்தக் கல்விக்கூடம். எங்கள் கல்லூரி திருமலையிலுள்ள மற்ற பாடசாலைகளை விட சகல செயற்பாடுகளிலும் உயர்ந்து நிற்பதற்கான காரணம் சுவாமி விபுலானந்தர் அடிகளாரினால் அன்று விதைக்கப்பட்ட நற்சிந்தனைகளும், கல்விச்சிந்தனைகளும் ஆளுமை முறைமைகளுமேயாகும். அவர் கல்லூரியினை விட்டு செல்லும் போது திறமையான ஆளுமைகளையும், நல்லாசான்களையும் எங்களுக்கு தந்திருந்தார். இதே கலாச்சாரம் பின்னால் வந்த அதிபர்களாலும் பின்பற்றப்பட்டதும் அதற்குரிய காரணங்கள் ஆக அமையப்பெற்றிருக்கின்றன.

இப்பேர்ப்பட்ட கல்லூரியில் தலைமைப்பொறுப்பு ஒருவருக்கு கிடைப்பதென்பது அவரவர்கள் செய்த பூர்வஜென்ம பலன் என்றே எண்ணத் தோன்றுகிறது. அந்த வகையில் எங்கள் கல்லூரி தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்ட பின்னர் கடமையாற்றிய அதிபர்களின் சிறப்பு பண்புகளையும் அவர்கள் ஆற்றிய அர்த்தம் பொதிந்த சேவைகளை பற்றியும் ஒருவர் பின் ஒருவராக உற்று நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. இந்துவின் நிர்வாக ஆளுமை திரு.சி.தண்டாயுதபாணி ஐயா:

எங்கள் பாசறையிலேயே ஆரம்ப வகுப்பு முதல் சாதாரண தர வகுப்பு வரை மாணவனாக கல்வி பயின்று பின்னர் பயிற்றப்பட்ட ஆசிரியராகி பட்டதாரியாகி அனுபவ ஆசிரியராக 1985ம் ஆண்டு மீண்டும் கால்பதிக்கின்றார். இவரதும் இவரது சமகால நண்பர்களான திரு.மா.இராசரெத்தினம், திரு.அருணகுமார், திரு.சச்சிதானந்தம் ஆகிய ஆசிரியர்களினதும் கற்பித்தலினால் கல்லூரியின் வர்த்தகபிரிவு மெருகேருகிறது. வர்த்தக துறையை நோக்கி மாணவர்கள் படையெடுக்கிறார்கள்.

உயர்தர பிரிவு மாணவர்களின் பல்கலைக்கழக நுழைவு எண்ணிக்கையில் பாரிய வளர்ச்சி ஏற்படுகின்றது. திரு.சிங்காரவேலு தண்டாயுதபாணி ஐயா அவர்கள் கல்வி நிருவாகசேவை பரீட்சையில் 1990ம் ஆண்டு சித்தியெய்துகிறார். அமரர் திரு.அ.சிவலோகநாதன் ஐயாவின் ஓய்வு அதனை தொடர்ந்து அமரர் திரு.குணரெட்ணம் ஐயாவின் பதவியுயர்வு மாற்றம் ஆகிய இரு காரணிகளால் கல்லூரியின் முதல்வர் பதவியை 15.09.1990ம் திகதி தனது வாலிப பராயத்திலேயே திரு.சி.தண்டாயுதபாணி ஐயா அவர்கள் பொறுப்பேற்கிறார். முன்பே அவர் எழுதிய அதிபர் சேவை பரீட்சையிலும் தரம் 1 இல் சித்தியெய்துகிறார். கல்வித் திணைக்களத்தில் ஒரு உயர்பதவியை பெறக்கூடிய சந்தர்ப்பம் இருந்தும் திருக்கோணமலை மண்ணின் கல்வி அபிவிருத்தி நலன்கருதியும் சமூக நலன்கருதியும் அவர் தொடர்ந்தும் 14 ஆண்டுகளாக அதிபர் பதவியை முழுமனதுடன் ஏற்றுக் கொண்டு நற்சேவையாற்றியவர் என்பதை இங்கே குறிப்பிட்டு சொல்ல வேண்டும்.

அதிபருக்குரிய ஆசனத்தில் அமர்ந்த பின் தனது கூர்மையான அறிவினாலும் முன்மாதிரியான சிந்தனையினாலும் தூரநோக்கு பார்வையினாலும் கல்லூரியின் உடனடி அபிவிருத்தி தொடர்பான தேவைப்பாடுகளை பட்டியல் இடுகிறார். முதல்வேலையாக தனது சிந்தனைகளிற்கு செயல்வடிவம் கொடுக்கக்கூடிய வல்லமையுள்ள பிரதி அதிபர் ஒருவரை தேடுகிறார். ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றி கொண்டிருந்த திரு. மா.இராசரெத்தினம் ஐயாவை தேடிக்கண்டுபிடித்து பிரதி அதிபராக நியமிக்கிறார். இதன்பின்னர் நாடிவந்த முதல் இன்செய்தி 1990ம் ஆண்டு உயர்தர பரீட்சையில் பொறியியல் துறைக்கு மாவட்டத்தில் இருந்து தெரிவான 12 பேரில் எங்கள் கல்லூரியில் கற்ற 10 மாணவர்கள் தெரிவாகியிருந்தமை. அத்துடன் வர்த்தக துறையில் 3A 1C பரீட்சை பெறுபேற்றை ஒரு மாணவன் பெற்றமை.

இவரின் தொடர் இயக்கத்தில் செயலிழந்து போயிருந்த பழைய மாணவர் சங்கத்திற்கு புத்துயிர் கொடுக்கிறார். விபுலானந்தர் அடிகளாரின் நூற்றாண்டு ஜனனதினத்தை முன்னிட்டு 1992ம் ஆண்டு அவரின் திருவுருவச் சிலை கல்லூரியில் பழைய மாணவர் சங்கத்தினால் ஸ்தாபிக்கப்படுகிறது. வரலாற்றில் முதல்முறையாக ஒரே தடவையில் தரம் 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புகள் எங்கள் கல்லூரியில் ஆரம்பிக்கப்படுகிறது. வன்பந்து கிரிக்கெட் அணி தோற்றம் பெறுகிறது. இந்துக் கல்லூரியும் ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயமும் இணைக்கப்பட்டு இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி என்ற நாமம் பெற்று மாவட்டத்தில் முதலாவது தேசியபாடசாலையாக உருவாக்கம் பெறுகிறது. இதன் ஞாபகார்த்தமாக இராமகிருஷ்ண சங்க நட்பு பாடசாலைகளான மட்டு சிவானந்தா கல்லூரிக்கும் எங்கள் கல்லூரிக்கும் இடையில் முதன்முறையாக 1993ம் ஆண்டில் பொன் அணிகளின் சமர் என்ற நிகழ்வில் வருடாந்திர கிரிக்கெட் விளையாட்டு போட்டி விளையாடப்படுகிறது. இதன்மூலம் தேசிய மட்டத்தில் விளையாடும் வன்பந்து கிரிக்கெட் விளையாட்டுக்கு திருக்கோணமலை மாவட்டத்தில் பிள்ளையார் சுழி இட்டவர் இவரேயாவார்.

இத்துடன் தேசியபாடசாலை தினத்தை முன்னிட்டு வீதியோட்ட போட்டியையும் கல்லூரி தினத்தை முன்னிட்டு மிதிவண்டி ஓட்ட போட்டியையும் அறிமுகம் செய்து வைக்கிறார்.

எங்கள் கல்லூரிக்கு உரித்துடைய விளையாட்டு மைதானக்காணி பல பலத்த சவால்களிற்கும் போராட்டத்திற்கும் மத்தியில் அதிபர் அவர்களின் இடைவிடாத முயற்சியின் பால் கையகப்படுத்தப்படுகிறது. பின்னர் கல்லூரி விளையாட்டு மைதானம் படிப்படியாக அபிவிருத்தி செய்யப்படுகிறது. கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 1997ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் முதலாவது கணிணி ஆய்வுகூடம் பழைய மாணவர் சங்கத்தின் நிதியுதவியுடன் எங்களது கல்லூரியில் தோற்றம் பெறுகிறது. இந்நிகழ்வானது மாணவர்களினது கல்வி வளர்ச்சியில் மிகவும் முக்கியமான மைல்கல்லாகும். இதன் பின்னர் கல்லூரிக்கென தனியான உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரியும் இணையத்தளமும் அமையப்பெறுகிறது. இதே வருடத்தில் கல்லூரியில் சித்தி விநாயகருக்கு ஆலயம் எழுப்பப்படுகிறது. பின்னர் 2000ம் ஆண்டில் அலுவலகமும் நூலகமும் இணைந்த கேட்போர் கூட மூன்று மாடிக்கட்டிடத்தை கல்லூரிக்கு பெற்று தருகிறார். தலைமைத்துவ பயிற்சிக்காக புலமைப்பரிசில் பெற்று 2003ம் ஆண்டு ஐக்கியராச்சியத்திற்கு சென்றிருந்த வேளையில் எங்கள் பழைய மாணவர்களிடம் ஏற்படுத்தப்பட்ட ஆரோக்கியமான தொடர்புகளின் மூலம் செயலிழந்து போயிருந்த இலண்டன் பழைய மாணவர் சங்கத்தை மீள ஆரம்பித்து வைக்கிறார். அவர்கள் அந்த நிகழ்வில் சேகரித்து கொடுத்த அன்பளிப்பு தொகையை கொண்டு கட்புல செவிப்புல கேட்போர் கூடம் ஒன்று எங்கள் கல்லூரியில் அமையப்பெறுகிறது. கல்லூரியில் சாரணியர் அமைப்பு, சென் ஜோன்ஸ் ஆம்புலன்ஸ் படையணி, தமிழ் இன்னியம் அணி போன்றவற்றை நிறுவுகிறார். கிழக்கு மாகாணத்திலேயே ஓர் முன்னனி கல்லூரியாக எங்கள் கல்லூரி வீறுநடை போடுகின்றது. 2002ம் ஆண்டு காலப்பகுதியில் பழைய மாணவர் சங்கத்தின் கனடா கிளை அங்குரார்ப்பனம் செய்யப்படுகிறது. இந்த கிளையின் மூலம் பொருளாதாரத்தால் கல்வியில் பின்தங்கிய மாணவர்களின் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திக்கென டாக்டர் ஞானி புலமைப்பரிசில் நிதியம் ஒன்றை திறந்து வைத்து அதன்மூலம் நிதியுதவி செய்யப்படுகிறது. இவர் பழைய மாணவர் சங்க தலைவராக இருந்த காலத்தில் இடம்பெற்ற பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டத்தில் பழைய மாணவர் தினமானது வருடந்தோறும் பழைய மாணவர்களின் சேவை நினைவாக கொண்டாடப்பட வேண்டும் என்றும் அதற்கு உகந்த தினமாக யூன் 30ம் திகதி அமையவேண்டும் என்று ஆசிரியரும் பழைய மாணவருமாகிய திரு. சா.பாஸ்கரன் அவர்களால் கொண்டு வரப்பட்ட பிரேரனை அங்கீகரிக்கபடுகிறது.

இவர் தொடர் மேற்படிப்பின் மூலம் முதுமாணி பட்டத்தையும் பெறுகிறார். இத்தகைய அறிவால் உயர்ந்த ஆளுமையை கல்வி திணைக்களம் சேவைக்காக அழைக்கிறது. இவர் கல்லூரியின் அதிபர் பொறுப்பில் இருந்து பதவியுயர்வு பெற்று செல்லும் போது சிறந்த ஆசிரியர்களையும் திறன்மிக்க மாணவர்கள் சமுதாயத்தையும் வலிமையான பழைய மாணவர் சங்கத்தையும் ஆரோக்கியமான பாடசாலை அபிவிருத்தி சங்கத்தையும் விட்டு செல்கிறார். அப்போது கல்லூரியின் உயர்தர அடைவுமட்டம் பல்கலைக்கழகத்திற்கு வருடம்தோறும் அண்ணளவாக 60 மாணவர்கள் செல்கின்ற நிலை, கல்வி சாதாரண பரீட்சை அடைவுமட்டம் 90% வீதத்திற்கு மேல். இவருடைய காலத்தில் கல்லூரி சமூகத்தினரிற்காக கல்லூரியின் கதவுகளை எப்போதும் திறந்தே தான் வைத்து இருந்தார். இருவழி தொடர்பாடல்கள் சிறந்த முறையில் பேணப்பட்ட விடயம் இன்றும் கூட ஒரு ஆரோக்கியமான விடயமாக கருதப்படுகிறது. சட்டங்கள் அதிகாரங்கள் என்பவற்றிற்கு மேலாக வினைத்திறன் மிக்க முறைமைகளே பாடசாலையை ஆளவேண்டும் என்று அடிக்கடி அவரது சக ஆசிரியர்களுக்கு ஞாபகப்படுத்துவார்.கல்விப் புலத்தில் மாணவர்களே முதன்மைப் படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கை உடையவராக காணப்பட்டார். இதற்காக ஒவ்வொரு மாணவனும் தனது விசேட திறனை வெளிப்படுத்தக்கூடிய வகையில் இணைப்பாடவிதான செயற்பாடுகளை திட்டமிட்டு அதற்கு வடிவம் கொடுத்தார். நவீன தொழில்நுட்பங்களும் மாற்றங்களும் உடனுக்குடன் வகுப்பறை கற்பித்தல் செயற்பாடுகளில் உள்வாங்க படவேண்டும் என்று அறிவுரை கூறுவார். ஒவ்வொரு பாடசாலையும் தனக்கு தேவையான வளங்களை பேணுவதில் தூரநோக்குடன் செயற்பட வேண்டும் என்பதை பல விடயங்களில் நிகழ்த்தி காட்டியவர். அதிகாரங்கள் அதிபரிடம் மட்டுப்படுத்தப்படாமல் உரியவர்களுக்கு கடமைகளும் அதற்குரிய அதிகாரமும் வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து சாதித்து காட்டியவர். இவர் காட்டிய வழியில் ஏனைய எதிர்கால அதிபர்களும் இயங்க வேண்டும் என்று தான் கல்லூரி சமூகம் எதிர்பார்த்து நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. உன்னதமான அதிபர் திரு. மா.இராசரெத்தினம் ஐயா :

எங்கள் கல்லூரியின் பழைய மாணவரும் சிறந்த கணக்கியல் ஆசானுமாகிய திரு.மார்க்கண்டு இராசரெத்தினம் ஐயா அவர்கள் பாடவிதான செயற்பாடுகளுக்கும் மாணவர் நலன்புரி விடயங்களுக்கும் பொறுப்பான பிரதி அதிபராக 1990ம் ஆண்டு காலப்பகுதியில் நியமனம் பெறுகிறார். அன்று தொட்டு 2004ம் ஆண்டு ஆனி மாதம் முதலாம் திகதி வரைக்கும் பிரதி அதிபராக கல்லூரியின் வளர்ச்சியில் சிறப்பான சேவைகள் பல செய்து அந்நாள் அதிபர் திரு.சி.தண்டாயுதபாணி ஐயாவுக்கு தோள்கொடுத்து பணியாற்றியதை யாரும் எளிதில் மறந்து விடமுடியாது. பாடவிதான செயற்பாடுகளை திறம்பட திட்டமிடல் செய்வதில் கைதேர்ந்தவராகவும் பூரண ஈடுபாட்டுடனும் செயற்பட்டார். கற்பித்தலுக்கான நிகழ்ச்சிநிரல் தயாரித்தல், வகுப்பறை திறன்சார் கற்பித்தல் நடைமுறைகள், ஆசிரியர்களின் பாட ஆயத்தம், கற்பித்தல் செயற்திட்டம், மேற்பார்வை பணிகள், அலகு ரீதியான உள்ளகப்பரீட்சைகள் ஆகிய விடயங்களை சீராக நெறிப்படுத்தினார்.

பாடவிதான செயற்பாடுகளுக்கு அப்பால் மாணவர்களின் ஒழுக்கம், ஒழுக்ககட்டுப்பாடு, நலன் ஓம்பும் விடயங்கள், தலைமைத்துவ விருத்தி ஆகிய விடயங்களில் அக்கறை காட்டினார். மாணவர் தலைவர்கள் தெரிவு, செயற்பாட்டு ஒழுங்குகள் போன்ற விடயங்களை நேர்த்தியாக கையாளுவதற்காக சிறந்த முறைமை ஒன்றை வடிவமைப்பு செய்து நிறுவினார். மாணவர்களின் ஒழுக்கக்கட்டுப்பாடு விடயங்களில் மிகுந்த கண்காணிப்புடனும், அவதானத்துடனும் செயலாற்றினார். கல்லூரியின் மாணவர் கூட்டுறவுச் சங்கத்தை மிகவும் செயற்திறனுடன் இயங்க வைத்த பெருமை இவரையே சாரும். இச்சங்கத்தின் சிறந்த செயற்பாடுகள் காரணமாக கிழக்கு மாகாணத்திலேயே சிறந்த மாணவர் கூட்டுறவுச்சங்கமாக பல வருடங்கள் தெரிவு செய்யப்பட்டமைக்கு இவரின் நேரிய வழி நடத்தலே காரணமாகும். தனது பதவிக்குரிய பொறுப்புக்களை துணிவோடு ஏற்று திட்டமிட்டு நிறைவேற்றுவதில் வல்லமை படைத்தவராக இருந்தார். கல்லூரியின் முகாமைத்துவ முறைமையை வலுப்படுத்துவதிலும், கலைத்திட்ட ஒழுங்கமைப்பு மேம்படுத்துவதிலும், பௌதீக வளங்களை விருத்தி செய்வதிலும் இவர் காட்டிய அதீத அக்கறை, கல்லூரியின் தொடர்ச்சியான வெற்றிக்கு உறுதுணையாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இவருடைய சேவையின் முதலாவது நிகழ்வாக கன்னி பழைய மாணவர் தின கொண்டாட்டத்தை 2004.06.30 ம் திகதியன்று வெவ்வேறு துறைகளில் சர்வதேச மட்ட தேசிய மட்ட அடைவுகளை எட்டிய பழைய மாணவர்கள் கௌரவிப்புடன் ஆரம்பித்து வைத்து இருந்தார். இதனை தொடர்ந்து மேனாள் அதிபர்கள் முயற்சி செய்து இடைநடுவில் விட்டு சென்ற மாணவர் விடுதி ஒன்றையும் ஆரம்ப பிரிவுக்கான வகுப்பறைகளை அமைப்பதற்குமானதுமான காணியொன்றை பெற்றுக்கொள்ளும் விடயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிரமாக முயன்று ஈற்றில் 2006ம் ஆண்டு 168 பேர்ச் தனியார் காணியானது அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டு கல்லூரிக்கு வழங்கப்படும் வரை அயராது உழைத்து இருந்தார். ஆரம்ப பிரிவு வளாகத்திற்கென புதிய கட்டிடங்களை பெற்றுத்தந்தார். விளையாட்டு துறையில் தேசியமட்ட, மாகாணமட்ட அடைவுகளை மாணவர்கள் ஈட்ட ஆசிரியர்களையும், கல்லூரி நிர்வாகத்தினரையும், மாணவர் களையும் நேர்த்தியாக வழிநடாத்தினார். 2006ம் ஆண்டு எமது கல்லூரிக்கு புதிய கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தை SLRC இடம் இருந்து பெற்று தந்திருந்தார். இவர் ஐக்கியராச்சிய பழைய மாணவர் சங்கத்துடன் ஏற்படுத்திக் கொண்ட ஆரோக்கியமான தொடர்புகளின் மூலமும் பழைய மாணவர் சங்க தாய்ச்சங்கத்தை சரியாக வழிநடத்தியதன் மூலமும் 2011ம் ஆண்டு மாசி மாதம் இருசங்கங்களின் நிதியுதவியுடன் எங்கள் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் பார்வையாளர் அரங்கை நிறுவ வழிகோலியிருந்தார்.

மாணவர்களிடம் இலைமறைகாயாக ஒழிந்திருந்த விசேட திறமைகளை வெளிக்கொணருவதற்காக கல்லூரியில் ஏற்புடைய பலகளங்களை அமைத்து தந்த பெருமை இவரையே சாரும். மாணவர்களின் பல்துறை சார்ந்த புத்தாக்க திறன்களிற்கு செயல்வடிவம் கொடுக்க பிரவாகம், புத்தெழில் பிரவாகம் போன்ற கண்காட்சிகளை கல்லூரியில் ஒழுங்குபடுத்தி வெகுவிமர்சையாக செயற்படுத்தி காட்டினார். மாணவர்களின் அறிவாற்றலையும் கலையார்வத்தையும் விரிவுபடுத்துவதற்காக பழைய மாணவர் தினம், மாணவர் தலைவர் தினம், ஆசிரியர் தினம், நவராத்திரி விழா, பரிசளிப்பு விழா போன்ற நிகழ்வுகளையொட்டி சதுரங்க போட்டிகள், ஆங்கில சொற்கோவையாக்கப்போட்டிகள், விவாதங்கள், பேச்சு போட்டிகள், நாடகங்கள், சிறுகதையாக்க போட்டிகள், கவிதையாக்க போட்டிகள், சங்கீத இசைக் கச்சேரி., நாட்டியம், விஞ்ஞான வினாவிடை போட்டிகள், கோலம் போடுதல், பூமாலை கட்டுதல் போன்ற நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பு செய்து நிகழ்த்தி காட்டினார். இதன் போது மாணவர்களின் திறமையுடன் ஆசிரியர்களின் பல்திறமையாற்றல் வளரவும் களங்கள் பலவுருவாகின. பல்கலைக்கழக தேர்வில் தேசிய மட்ட அடைவுகளை அதிகரிக்க பலதிட்டங்களை வகுத்து செயற்பட்டதுடன் வெற்றி பெற்றவர்களுக்கு ஒரு பவுண் தங்க நாணயத்தை பரிசாக வழங்கி கௌரவித்தார். இதன் விளைவாக ஒரே வருடத்தில் ஏழு மாணவர்கள் தேசிய மட்ட தெரிவின் மூலம் பல்கலைக்கழகம் சென்ற நிகழ்வும் நடந்தேறியது. இதன் மூலம் மாவட்டத்திற்கான பல்கலைக்கழக நுழைவு எண்ணிக்கை அதிகரிக்கிறது என்பதை குறிப்பிட்டு சொல்ல வேண்டும்.

1982ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பின்னர் தொடர்ந்து வெளிவராமல் இருந்த கல்லூரி சஞ்சிகையான "உள்ளக்கமலம்" சஞ்சிகையினை மீண்டும் 2008ம் ஆண்டிலிருந்து புதுப்பொலிவுடன் ஒவ்வொரு பரிசளிப்பு விழா நிகழ்வின் போதும் பிரசுரம் செய்தார். ஆவணமாக்கலின் பால் இவர் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதீத நாட்டம் காரணமாக பழைய மாணவர் சங்கத்தின் தொடர்ச்சியான செயற்பாடுகளும் கல்லூரியின் அடைவுமட்டங்களும் "சாரல்" என்ற அரையாண்டு செய்திமடலாக 2010ம் ஆண்டு இடம்பெற்ற பழையமாணவர் தின நிகழ்விலிருந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது என்பது எமக்கெல்லாம் பெருமைசேர்க்கும் விடயமாகும். இடர்கால நிலை காரணமாக தற்காலிகமாக தடைப்பட்டிருந்த கல்லூரி தினத்தையொட்டிய நிகழ்வுகளான வீதியோட்ட போட்டி, மிதிவண்டி ஓட்ட போட்டி என்பவற்றை மீண்டும் ஆரம்பித்து வைத்தார். கல்லூரியின் முக்கிய நிகழ்வுகளிற்கு என்று ஒரு நிகழ்வு கலண்டர் வடிவமைக்கப்பட்டு அதன்பிரகாரம் அந்தந்த தினத்தில் நிகழ்வுகளை நிகழ்த்தி காட்டினார். கல்லூரியின் உடனடி தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் பழைய மாணவர் சங்கத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டினை உறுதி செய்யும் முகமாகவும் தூரநோக்கு சிந்தனையில் "பழைய மாணவர் சங்க நிதியம்" ஐ ஆரம்பித்து வைத்து 2011ம் ஆண்டில் அதன் நிலையான வைப்பு தொகையை ரூபா. 1,500,000/- ஆக உயர்த்தி காட்டினார்.

கல்லூரியின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும் கல்லூரியினை அபிவிருத்தி செய்வதற்கும் என பழைய மாணவர்களுடனும், பெற்றோர்களுடனும் ஆரோக்கியமான தொடர்பாடல்களை நேரடியாகவும் இயலுமை வாய்ந்தவர்களை கொண்டும் ஏற்படுத்தி காரியம் சாதிப்பதில் அவருக்கு நிகர் அவரேயாவார். இதற்கு உதாரணமாக நிக்கோட் திட்டத்திலிருந்து பெற்று கொண்ட ஆரம்ப பிரிவு வளாக மூன்று மாடிக்கட்டிடத்தையும், ஒபர் நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொண்ட தற்காலிக வகுப்பறை தொகுதி கட்டிடத்தையும், ஜி.ரி.செற் நிறுவனத்திடமிருந்து பெற்று கொண்ட 30 மேசைக் கணிணிகளையும், பழைய மாணவர்கள் மூலம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட விளையாட்டு மைதான பார்வையாளர் அரங்கையும் குறிப்பிடலாம்.

பெற்றோரினை பார்த்து இவர் அடிக்கடி சொல்லும் வசனம் உங்கள் பிள்ளைகளை சுயமாக புத்தகங்களை வாசிப்பதற்கு வழிநடத்துங்கள், பின்னர் பிள்ளைகள் தாமாகவே கற்றுக்கொள்ள பழகிவிடுவார்கள் என்பதாகும். மாணவர்களை பார்த்து அடிக்கடி சொல்லும் வசனம் "சுயதேடல்", "சுயகற்கை" உன்னை வாழ்வில் ஓர் நாள் சான்றோனாக்கும் என்பதும் நீ எங்கு சென்றாலும் நீ கற்ற கல்லூரியின் நற்பெயரை காப்பாற்ற வேண்டும் என்பதும் முக்கியமானதாகும்.

பழைய மாணவர்களை பார்த்து விழித்து "உன் வாழ்நாளில் ஒரு தடவையாவது நீ கற்ற கல்லூரியை மனதில் நிறுத்தி உன்னால் இயன்ற உதவியை நிதிமூலமாகவோ இல்லாது போனால் சரீர உதவியையோ இல்லாவிட்டால் உன் பதவியின் பால் ஏற்படுத்தக்கூடிய ஆரோக்கியமான தொடர்பாடல்களின் மூலம் ஏதாவது உதவிகளை பெற்று தரவேண்டும் என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களிற்கு முன்னுதாரணமாக ஓர் எளிமையான வாழ்க்கை வாழ்ந்து காட்டியவர். கல்லூரியின் வளர்ச்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். கண்ணியமானவர், கட்டுப்பாடானவர், செயலில் கண்டிப்பு மிக்கவர், எப்போதும் மிதிவண்டியில் தான் பயணம் செய்வார். அதிபராக இருந்த காலத்தில் எப்போதும் பிரதான வளாக நாளாந்த கடமைகளை செவ்வனே நிறைவேற்றிவிட்டு தினமும் ஆரம்ப பிரிவு வளாக மேற்பார்வைக்கு சென்று வருவது இவர் வழமை. எந்த நிகழ்வானலும் முன் தயார்படுத்தல், திட்டமிடல், நேரம் தவறாமை என்பவற்றை தவறாமல் கடைப்பிடிப்பவர். இவர் அதிபராக சேவையில் இருந்த காலத்தில் காலை ஏழு மணியிலிருந்து இரவு 10.00 மணி வரையிலும் கல்லூரியின் அபிவிருத்திற்காக அயராது உழைத்தவர். மாலை வேளைகளில் இவருக்கு ஒத்தாசையாகவும் உற்சாகப்படுத்துவதற்காகவும் அமரர் திரு.இ.சுப்பிரமணியம் அவர்கள் (மேனாள் பழைய மாணவர் சங்க உபதலைவர், ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர்) தினமும் கல்லூரிக்கு வருகை தருவது வழமை. பல இனிய பொன்னான சேவைகளுடன் விளையாட்டு மைதான பார்வையாளர் அரங்கு திறப்பு விழா நிகழ்வுடன் எமது கல்லூரியின் முதலாவது மணிவிழா கண்ட அதிபர் என்ற பெயருடன் 19.02.2011 ம் திகதியன்று அதிபர் சேவையிலிருந்து விடுகை பெற்று சென்றிருந்தார்.

### 3. பல்புலமை வாய்ந்த அதிபர் திரு.இ.புவனேந்திரன் ஐயா அவர்கள் :

அதிபர் திரு. மா.இராசரெத்தினம் ஐயா அவர்களின் ஓய்வை அடுத்து நிதி நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருந்த பிரதியதிபர் திரு. இரத்தினம் புவனேந்திரன் ஐயா அவர்கள் புதிய அதிபராக கடமையை பொறுப்பு எடுத்து கொண்டார். இவரின் இந்துக் கல்லூரியுடனான சேவைகளை பின்னோக்கி உற்றுநோக்குவோம். பயிற்றப்பட்ட கணித ஆசிரியராக 14.02.1985ம் ஆண்டு எங்கள் கல்லூரியில் சேவையில் இணைந்து கொண்டவர். அப்போது சேவையில் இருந்த அதிபர் அமரர் திரு. அ.சிவலோகநாதன் ஐயா அவர்களினால் பௌதீகவியல் பாடத்திற்கான ஆசிரியராகவும் கணித பாடத்திற்கான ஆசிரியராகவும் நியமிக்கப்படுகிறார். பௌதீகவியல் பாடத்திற்கான செய்முறைகளை மாணவர்களிற்கு சொல்லி தருவதில் கைதேர்ந்தவர். கணித பாடத்தில் பல இலகு கற்கை யுக்திகளை மாணவர்களிற்கு கற்றுக்கொடுத்தவர். நீண்டகால ஆசிரியர் சேவையின் பின்னர் 1995ம் ஆண்டு ஆரம்பபிரிவுக்கான உப அதிபராக திருமதி. உஷா பாலகிருஷ்ணன் அம்மணியின் ஓய்வை தொடர்ந்து பொறுப்பு ஏற்கிறார். இவர் இதற்கு முன்பே 1991ம் ஆண்டில் அதிபர் சேவை பரீட்சையில் சித்தியெய்தியிருந்தார். இவர் ஆரம்ப பிரிவுக்கு பொறுப்பாக 11 ஆண்டுகளிற்கு மேலாக இருந்து சேவையாற்றியவர். இவருடைய சேவைக்காலத்தில் உப அதிபருக்கு என்று ஒரு தனியான அலுவலகத்தை ஏற்படுத்தி தாபனக்கோவைகளை ஒவ்வொன்றாக ஒழுங்குமுறைப்படி நிறுவியவர். இதனைத் தொடர்ந்து ஆரம்ப பிரிவுக்கென தனியான பாண்ட் வாத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவையும் குருளைச்சாரணர் அமைப்பையும் சென் ஜோன்ஸ் ஆம்புலன்ஸ் அமைப்பையும் ஸ்தாபிப்பதற்கு பொறுப்பாக இருந்தார். இதைவிடுத்து ஆரம்ப பிரிவு மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளிற்காக வருடாந்திர கண்காட்சி, இல்ல விளையாட்டுப்போட்டி ஆகியவற்றை ஒழுங்கமைத்து செயற்படுத்தினார். வருடந்தோறும் ஆரம்ப பிரிவுக்கென தனியான பரிசளிப்பு விழாவை ஏற்பாடு செய்தார். எங்கள் கல்லூரியின் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை அடைவுமட்டங்களை படிப்படியாக உயர்த்தினார். மாணவர் நேய ஆசிரியர் நேய நடைமுறைகளை நிர்வாக முறைமையில் கையாண்டார்.

பின்னாளில் பிரதி அதிபர் அமரர் திரு. அ.அருணகுமார் ஐயாவின் ஓய்வை தொடர்ந்து 25.04.2005 ம் திகதியன்று நிதி நிர்வாகத்திற்குரிய பிரதியதிபராக கடமையை பொறுப்பு ஏற்றுக்கொண்டார். இவர் ஆசிரியர், உப அதிபர், பிரதி அதிபர் ஆகவிருந்த காலத்தில் இவருடைய பிரதான கடமையுடன் கல்லூரியின் தொழில்நுட்பம் சார்ந்த விடயங்களான கட்புல செவிப்புல சாதனங்களின் கையாளுகை, கணினி ஆய்வுகூட பொறுப்பு, பராமரிப்பு போன்ற செயற்பாடுகளையும் ஒருசேர கையாண்டார். கல்லூரியின் மின்னிணைய தள வடிவமைப்பில் ஆசிரியர் நித்தியானந்தம், திரு.பரமேஸ்வரன், பழைய மாணவர் எந்திரி. ச.கோணேஸ்வரன் ஆகியோருடன் இணைந்து பணியாற்றினார். பின்னர் கல்லூரியின் மின்னிணைய, மின்னஞ்சல் கையாளுகை பணியையும் கவனித்து வந்தார். இதுபோக பிரதி அதிபராக இருந்த காலத்தில் கல்லூரி கூட்டுறவு சங்க கிளையின் தலைவராகவும் சேவையாற்றினார். சுமார் ஆறு வருடங்கள் பிரதியதிபராக கடமையாற்றிய இவர் அதிபராக கடமையை பொறுப்பு ஏற்றவுடன் நிதி நிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதி அதிபராக திரு.செ.பத்மசீலன் ஐயா அவர்களை நியமித்தார்.

இவர் அதிபராக சேவையில் இருந்த காலம் மிகக்குறுகிய காலமெனினும் இக்காலத்தில் பலமுக்கிய நிகழ்வுகள் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டு நிகழப்பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவரின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விழாக்களாக விளையாட்டு மைதான பார்வையாளர் அரங்கு திறப்புவிழா, மேனாள் அதிபர் திரு.மா.இராசரெத்தினம் ஐயாவின் சேவை நலன் பாராட்டு விழாவுடன் கூடிய மணிவிழா, முன்னாள் அதிபரும் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் மேலதிக செயலாளருமாகிய திரு.சி.தண்டாயுதபாணி ஐயா அவர்கள் வடகிழக்கு மாகாணத்திற்கு ஆற்றிய சேவைகளை பாராட்டி கல்விகலம்பகம் என்ற நூல் வெளியீட்டுடன் கூடிய பாராட்டு விழா, காலனித்துவ வரலாறு திருக்கோணமலை என்ற நூல் வெளியீட்டை பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வெளியிட்டமை, கல்லூரிக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட மேனாள் அதிபர் அமரர் திரு. அ.சிவலோகநாதன் ஐயாவுக்கு ஒரு சிறிய தேனீர் உபசாரத்துடன் கூடிய நினைவுப்பரிசில் வழங்கி கௌரவிப்பு செய்தமை, ஆகியன சிறப்புடன் இடம்பெற்றிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை விட பல நிர்மாண வேலைகளும் இவருடைய காலத்தில் அமையப் பெற்றிருந்தன. ஆரம்ப பிரிவு வளாக அலுவலகத்துடன் கூடிய அதிபர் விடுதி கட்டிடம், சிறுவர் நேய மலசலகூடத்தொகுதி, ஆரம்பபிரிவு வளாக இரண்டாவது மூன்று மாடிக்கட்டிடத்திற்குரிய கீழ்த்தள வேலைகளை ஆரம்பித்து வைத்தமை, உயிரியல் ஆய்வுக்கூடம் புனருத்தாரண வேலை, விளையாட்டு மைதான குளியலறை, ஆடைமாற்றுமறை, கழிவறை, உபகரண அறை என்பவற்றுடன் கூடிய தொகுதி கட்டிடம் ஆகியவையாகும். அமரர் செல்வி. கு.சதாசிவம் அவர்களின் ஞாபகார்த்தமாக புலமைப்பரிசில் நிதியம் ஒன்றை திறந்து மாணவர்களிற்கு கற்றலுக்காக மாதாமாதம் புலமைப்பரிசில் நிதி வழங்கியமை, இவரின் நினைவாக கோட்ட ரீதியில் சாதாரண உயர்தர பிரிவு மாணவர்களிற்கு விஞ்ஞான போட்டி பரீட்சைகளை ஒழுங்கு செய்து நடாத்தியமை என்பனவும் இவருடைய காலத்தில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளாகும்.

இத்துடன் நின்றுவிடாமல் கல்லூரியின் வழமையான நிகழ்வுகளை தளர்வில்லாமல் தொடர்ந்து நிகழச்செய்த பெருமை, கல்லூரியின் அடைவுமட்டங்களை தொடர்ந்து அதே தரத்தில் பேணியமை என்பன இவரது சிறந்த ஆளுமையை எடுத்து காட்டுகின்றது. மருத்துவ சத்திரசிகிச்சையின் நிமிர்த்தம் இவர் தனது கடமையை திரு.செ.பத்மசீலன் ஐயாவிடம் 31.12.2012ம் திகதியன்று கையளித்து விட்டு விடுமுறையுடன் சேவையிலிருந்து 31.03.2013ம் திகதியன்று விடுகைபெற்று சென்றிருந்தார். இவரது சேவையை பாராட்டி 19.04.2013ம் திகதியன்று சேவைநலன் பாராட்டு விழாவொன்று கல்லூரி சமூகத்தினரினால் ஏற்பாடு செய்யப்பட்டு வெகுசிறப்பாக இடம்பெற்றிருந்தது.

**ஆக்கம்**
**Eng. தி. ஹரிதரன்**
**மேனாள் பழைய மாணவர் சங்க செயலாளர்**
**உயர்தரம் - 1990ம் வகுப்பு கணிதபிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நீங்கா ஸ்ரீ கோணேஸ்வரா இந்துவின் ஆசிரிய விற்பனர்கள்:

இந்து மகா சமுத்திரத்தில் பொங்கும் அலைகள் மோதி இசைபாடும் கோணமாமலையின் முன்னே, கம்பீரமாகக் காட்சிதரும் காளி அம்மனின் கோவிலின் அருகே, பச்சைக் கம்பளம் போர்த்த முற்றவெளியின் முன்பாக திருமலை நகரிற்கே பெருமைகள் பல சேர்க்கும் சைவத் தமிழ் சகோதரப் பாடசாலைகளாக திகழ்ந்தவை தான் இ.கி.ச. கோணேஸ்வரா வித்தியாலயமும் இ.கி.ச இந்துக் கல்லூரியும் என்றால் மிகையாகாது. ஆரம்ப வகுப்பு தொடக்கம் பத்தாம் வகுப்பு வரை கோணேஸ்வராவில் படிக்கும் மாணவர்களை இன்முகத்தோடு வரவேற்று பல்கலைக்கழகம் காணவைக்கும் கடமையை சகோதர பாடசாலையான இந்துக்கல்லூரி திறம்பட நிறைவேற்றுகிற அரும்பணியையாற்றுவது வழமை.

90 இன் ஆரம்பங்களில் சகோதரப் பாடசாலைகள் இரண்டும் இணைந்து தேசியப் பாடசாலையாக வளர்ச்சி கண்டு, இன்று தனது 125 ஆவது அகவையில் தடம் பதிப்பதை இங்கு கல்விகற்ற, கற்றுக் கொண்டிருக்கின்ற மாணவர்களும், கற்பித்த, கற்பித்துக் கொண்டிருக்கின்ற அதிபர் ஆசிரியர் குழாமும் விமர்சையாக மனதார கொண்டாடுகிறார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

நாம் கடந்து வந்த பள்ளிக்கூட பாதையைத் திரும்பிப் பார்க்கிறோம். சந்தை போன்ற சத்தத்துடன் மாணவர்கள் இருக்க திடீர் அங்கே மயான அமைதி, குண்டூசி விழுந்த சத்தமும் கேட்கிறது, ஏன் இப்படி திடீர் அமைதி ஓ அப்போது தான் புரிகிறது அதிபர் வேலுப்பிள்ளை மாஸ்டரும், அதிபர் சிவலோகநாதன் மாஸ்டரும் வகுப்பறைகளில் புகுந்து விட்டார்கள் என்று. சில மாணவர்கள் மீது இவர்களின் பிரம்பும் விளையாடும் சில சந்தர்ப்பங்களில் மாணவர்களின் கன்னங்களை அவர்களின் கைகளும் பதம்பார்க்கும்.

இவர்கள் அதிபர்களாக இருந்த காலம் பாடசாலைகள் இணையுமுன்பிருந்த பள்ளிக்கூடங்களின் பொற்காலமென்றே கருதலாம். கோணேஸ்வரா வித்தியாலத்திற்கு வகுப்புகளிற்கான இடப்பற்றாக்குறை ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் ஆரம்ப வகுப்புக்கள் சில சற்றுத் தொலைவில் இருந்த தனியார் காணியில் மாட்டுத் தொழுவத்தின் அருகில் கிடுகினால் அமைக்கப்பட்ட வகுப்பறைகளில் நடைபெற்றன. கோமயம், கோசலம் நிறைந்த இயற்கைச் சுற்றாடலில் இலவசக் கல்வியை பெற்று வந்தோம்.

ஆரம்ப வகுப்புகளில் இருந்த போது வெள்ளிக்கிழமைகளில் கோணேஸ்வராவில் இருந்து கோணேஸ்வரத்திற்கு அணிவகுத்துச் சென்றோம். மான் துள்ளி விளையாடும் மதில் கோட்டை, மீன் துள்ளி அலைபாயும் நீலக்கடல், வான் பரந்து விளையாடும் வானரங்கள் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கொள்ளாக் காட்சிகளுடன் கோணைநாதர் மாதுமையாளின் தரிசனம் இவை தான் நம் கண்களால் கண்ட அன்றைய காட்சிகள்.

விஞ்ஞான பாடம் என்றால் ஆசிரியர் சண்முகநாதனையும் ஆசிரியை கிருஷ்ணமூர்த்தியையும் எளிதில் மறந்து விட முடியாது. சண்முகநாதன் சேர் இராணுவ பிரிவில் கடமையாற்றி ஆசிரியர் தொழிலுக்காக வந்தமையால் அவரின் கம்பீரத்தோற்றமும், கண்சிமிட்டா பார்வையும், வளைந்து கொடுக்காத மீசையும் பிரதமர் D.S.சேனநாயகாவின் பிம்பமாகவே காட்சி தந்தது. இல்ல விளையாட்டுப் போட்டிகளின் போது அனைத்து மாணவர்களையும் அரவணைத்துக் கொண்டு அணி வகுப்பு பழக்குவதை யாராலும் எளிதில் மறந்துவிட முடியாது. இடம் வலம் இடம் எனக்கூறிக் கொண்டே அனைவரையும் அவதானிக்கும் தோரனை அவருக்கே உரித்தான ஒன்று.

“லேஞ்சி ககுல, நிக்கங் ககுல,” என சிங்களத்திலும் கூறி கால்களுக்கு கடுப்பேற்றுவார்.

ஆனால் தனது விஞ்ஞான பாட நேரத்திலும் முற்றவெளிக்கு அனுப்பி P.T பாடத்தை எடுக்க வைத்து மாணவர்களின் உள்ளத்தில் குடியேறிவிடுவார். கோணேஸ்வராவிற்கு விவசாயப்பாடத்தை அறிமுகப்படுத்திய பெருமை ஆசிரியர் நந்தபாலனைச் சாரும். எது எப்படியோ அனைத்து வகுப்புக்கும் கோழி வளர்ப்பைப் பற்றி அவர் பாடம் எடுக்காத நாட்களே கிடையாது. இவ்வாறே ஆங்கிலத்திற்கு ஆசிரியை பாலசிங்கம், சுதரஸ் ஏகாம்பரம், செல்வி. இந்திராணி நடராஜா, கணிதத்திற்கு செல்வி கதிரிவேற்பிள்ளை ஆசிரியை, ஆசிரியர் ஜெயசீலன், தமிழிற்கும் சமயத்திற்கும் ஆசிரியை பத்மா விசாகப்பெருமால், அருந்ததி கணேசலிங்கம் இது போன்று எத்தனை எத்தனை அதிபர் ஆசிரியர்களைக் காண்கின்றோம்!

நாங்கள் உயர்தரம் படித்துக் கொண்டிருந்த காலத்தில் எங்களுக்கு பிரயோக கணிதம், பௌதிகவியல் கற்பித்த ஜெயசீலன் ஆசிரியர் மிகவும் வித்தியாசமான ரசனை உணர்வு மிக்கவர். கற்பிக்கும் போது இயல்பான நகைச்சுவை உணர்வுடன் பாடம் நடாத்துவார். அதனால் அவருடைய வகுப்பில் மாணவர்கள் எவரும் நித்திரை கொண்டதாக சரித்திரம் இல்லை. அவரிடம் ஒரு வித்தியாசமான பழக்கம் இருந்தது. அது என்னவென்றால் ஒவ்வொரு மாணவனுக்கும் அவரே தனக்குத் தோன்றிய ஒரு ரசனையான பெயரை வைத்து விடுவார். அதன் பின்னர் அவனுடைய சொந்தப்பெயர் அவனுக்கே சில சமயங்களில் மறந்து போய்விடும். எத்தனை ஆண்டுகள் கழித்து அவனை(ரை) இப்போது காண நேர்ந்தாலும் அவனுக்கு சூட்டிய பெயரால் தான் அழைப்பார். இந்தப் பெயர் விஷயத்தில் அப்படி ஒரு ஞாபகசக்தி அவருக்கு.

சுந்தரலிங்கம், நாராயணன், சகாதேவன, கரிகால்வளவன, கருணாகரன், வந்தியத்தேவன், ஏழுமலை, அண்ணாமலை, ஜஸ்டின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒமர்ஷெரீப, புண்ணியகோடி, கந்தளாய்த்தோமஸ், செயின் ஜெயபால், சமாரியன், நரம்படி நாராயணன், அந்தோணிச்சாமி, ஆரோக்கியசாமி, காலேஜ்மாணவன, லஞ்சநாதன், பண்டித், ஜம்புலிங்கம், அரைக்கோளம், அழகானவாலிபன், வள்ளுவர் என்று அந்தப் பெயர்ப் பட்டியல் நீளும். சம்பந்தமூர்த்தி என்று ஒரு மாணவனுக்குப் பெயர் வைத்திருந்தார். எந்த ஒரு தியரியையும் படிப்பித்துவிட்டு அதனுடைய பிரயோகத்தை கரும்பலகையில் செய்யும் போது சம்பந்தமூர்த்தியின் பக்கம் ஒரு தடவை திரும்பி, "தம்பி சம்பந்தமூர்த்தி, நாங்க படிச்ச தியரிக்கும் இந்தக் கணக்குக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கா?" என்று ஒரு டயலாக்கை எடுத்து விடுவார்.

அண்ணாமலை என்று ஒரு மாணவனுக்குப் திருநாமம் சூட்டியிருந்தார். 'Orr's Hill', தமிழில் உவர்மலை என்று அழைக்கப்படும் இடத்தைச் சேர்ந்த மாணவன் அவன். அவனிடம் சொல்வார், தம்பி, உனக்கு கடிதம் வந்தால் முகவரி இவ்வாறு இருக்குமா? அண்ணாமலை, உவர்மலை, திருமலை" .

ஒரு தடவை பரீட்சை எழுதிக்கொண்டிருக்கும் போது உயர்தர மகளிர் பாடசாலை மாணவிகள் பாடசாலை முடிந்து வீதியில் சென்று கொண்டிருந்த அழகிய காட்சியை அண்ணாமலை ஜன்னல் வழியாக ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்ததை இந்த ஆசிரியர் கவனித்து விட்டார். பாட்சா படத்தில் கடைத்தொகுதிக்குள் புகுந்து தனக்குச் சேர வேண்டிய மாமூலைப் பயமுறுத்தி வசூலித்து விட்டு வாகனத்தில் ஏறிப் புறப்படும் நேரத்தில் ரஜினியின் தங்கையைக் காண நேர்ந்த ஆனந்தராஜ் வாகனத்தைக் கொஞ்சம் நிறுத்தச் சொல்லிவிட்டு "ம், என் மனசு இப்ப எங்கிட்ட இல்ல..... புறப்படு" என்று பெருமுச்சுடன் வெளிப்படுத்தும் டயலாக் அண்ணாமலையின் மைன்ட் வாய்சாக வந்திருந்தாலும் அது இந்த ஆசிரியருக்கு கொஞ்சம் சத்தமாகவே கேட்டிருக்க வேண்டும். அவனுடைய அருகில் சென்று சொன்னார் "தம்பி அண்ணாமலை, வானத்தில் நட்சத்திரங்களுக்கா பஞ்சம், கடலில் மீன்களுக்கா பஞ்சம், முதலில் இதைப் படி, பிறகு அதைப் பிடி".

பௌதிகவியலில் ஒளிமுறிவு பற்றிப் படிப்பிக்கும் போது 'மெய்யாழம், தோற்றாழம் (தோன்றுகின்ற ஆழம்) பற்றிய விளக்கத்தின் போது இதனை முதலில் கண்டு சொன்னவர் யார் என்று கேட்டார்.எல்லோரும் வாயில் நுழையாத மேலைநாட்டுப் பெயர்களை யோசித்துக் கொண்டிருக்க "ஔவையார்" என்றார். ஔவையார் எப்போது பிஸிக்ஸ் பாடினார் என்று நாங்கள் தலையைக் குழப்பிக் கொண்டிருக்க "ஆழம் அறியாமல் காலை விடாதே" என்று முதலில் சொன்னவர் அவர் தான் என்றார். இதேபோல ஆக்கிமீடிசின் தத்துவத்தை அது சொல்லப்படுவதற்கு முன்னரே வாய்ப்புப் பார்த்தவர் திருநாவுக்கரசர் என்பார். கல்லோடு கட்டிக் கடலிலே மிதந்து திருப்பாதிரிப்புலியூர் என்ற திருத்தலத்தை திருநாவுக்கரசர் அடைந்ததாக சமயபாடத்தில் படித்தது சமயத்தில் ஞாபகம் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் படித்த காலத்தில் உணவுக்காகப் பேருந்து நிறுத்தப்படும் இடங்களில் அனுபவித்த இரண்டு விடயங்கள் பசுமையாக அவர் மனதில் ஆழப் பதிந்திருக்க வேண்டும். அதனை அவ்வப்போது "முறிகண்டி கச்சானும் வவுனியா கொத்து றொட்டியும்" போல என்று நினைவு கூறுவார். ஒரு கணக்கை விளக்கப்படுத்தி விட்டு இது பச்சையனின் புத்தகத்தில் இருக்கிறது என்றார். அவர் சொன்னது Mr. Green எழுதிய புத்தகம் என்பதைப் புரிந்து கொள்ள சிறிது நேரம் பிடித்தது.

ஒரு மாணவனுக்கு ஏதோ ஒரு ...வீரன் என்று பெயர் வைத்திருந்தார். அவர் ஒளியியல் கற்பித்துக் கொண்டிருந்த போது இந்த வீரன், வசூல் ராஜா எம்பிபிஎஸ் போல, எழுந்து நின்று கேட்டானே ஒரு கேள்வி. அவருக்கு தான் படித்திருந்த ஒளியியல் மறந்து போயிருக்கும். அப்படி என்னதான் கேட்டான் அவன். "சேர், ஒளி மழையில் நனையுமா?"

உயர்தர கணிதப்பிரிவு மாணவர்களின் ஆதர்சநாயகர் மரியதாஸ் ஆசிரியரின் ஆங்கில மொழிமூல புத்தகத்தை கையில் ஏந்தி தூயகணித பாடத்தை தமிழில் கற்பிக்கும் முறையை மறக்க தான் முடியுமா. யார் டவுட்டு கேட்டாலும் இணைந்த கணிதம், பௌதீகவியல் எந்த பாடமானாலும் முகம் கோணாமல் தெளிவுபடுத்துவதில் வல்லவர்.

இந்துவின் மைந்தர்களிற்கு இரண்டு தசாப்தங்களிற்கு மேலாக கல்வி புகட்டி அவர்களின் வாழ்க்கைக்கு ஒளியேற்றி வைத்த பெருந்தகைகளான ஆசிரியர் ஜெகன்மோகன், ஆசிரியர் விக்கினேஸ்வரன, ஆசிரியைகளான நவசக்தி புவனேஸ்வரன், சிவரஞ்சனி விக்கினேஸ்வரன், மதிவதனி, சித்தி ரீச்சர் திரு/திருமதி. தண்டாயுதபாணி, இராசரெத்தினம் , மரைக்கார் என்று ஒரு நீண்ட பட்டியல் நினைவில் நிற்கிறது.

நான் முற்பது ஆண்டுகளுக்கு முன்பு நானாக விளங்கிச் செய்த பௌதிகவியல் கணக்கு ஒன்றை இப்போதும் செய்வேன் என்று தன்னம்பிக்கையுடன் பௌதிகவியல் கற்பித்த வெள்ளை பாண்ட் வெள்ளை சேர்ட் அணிந்து நடந்து வரும் குணரெட்ணம் ஆசிரியர் Smith எழுதிய பௌதிகவியல் புத்தகத்தை முழுமையாக விளங்கிக் கொண்ட வித்தகர். முதன்முதலாக கணினியை கல்லூரிகளுக்கு அறிமுகம் செய்வதற்காக சிலரைக் கல்லூரி மட்டங்களில் தெரிவு செய்து கொழும்பில் பயிற்சி வழங்க இ.கி.ச. இந்துக்கல்லூரி சார்பில் தெரிவு செய்யப்பட்டவர் குணரெட்ணம் ஆசிரியர் அவர்கள். ஒருநாள் கணினிப் பயிற்சியின் போது, கணினியில் ஒரு கொமாண்ட் கொடுக்கத் தேவைப்பட்ட நிலையில் please find the comma என்று அவர் சொல்ல, மாணவர்கள் கீபோர்ட்டில் கொம்மாவை (அதாவது அம்மாவை) தேடிக் களைத்துப் பின்னர் அது ஒரு punctuation mark என்று புரிந்து கொண்டது வேறு விடயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970களின் பிற்பகுதியில் வேட்டி, வெள்ளை நெஷனல் அல்லது வெள்ளை சேர்ட் அணிந்து பண்டிதர் வடிவேலு ஐயா தலைமையில் கோணேஸ்வரா வித்தியாலயத்தை அலங்கரித்த கண்ணியமிக்க ஆசிரியர்கள் வரிசையில் முக்கியமானவர்கள் இராமலிங்கம், சின்னத்தம்பி, செல்லத்துரை போன்றோர். "கை வீசம்மா கை வீசு" என்று இராமலிங்கம் ஐயா மாணவர்களை முற்றவெளிக்கு அழைத்துச் சென்று தமிழ், சமயம், கணிதம் போன்ற பாடங்களைக் கற்பிப்பார்.

பாடசாலையின் உப அதிபர், அதிபர் ஆகிய பதவிகளை வகித்து சுறுசுறுப்பாக ஓடித் திரிந்த குறிப்பிடத்தக்க ஆசிரியர் சிவப்பிரகாசம் சேர்.

ஒரு ஆண்டில் ஒரு நாள் கூட விடுமுறை எடுக்காமல் பாடசாலைக்கு வந்ததனால் The island பத்திரிகையில் பாராட்டுப் பெற்ற செல்வி இந்திராணி நடராஜா ஆசிரியை. மாவட்ட மட்டத்தில் Do you know contest இல் பங்குபற்றுவதற்காக மிகச்சிறப்பாக பயிற்றுவித்து ஆங்கிலப் பாடசாலைகளைப் புறந்தள்ளி கோணேஸ்வரா வித்தியாலயத்திற்குக் கேடயத்தைப் பெற்றுத் தந்த நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையும் கொண்ட ஆங்கில ஆசிரியை திருமதி பாலசிங்கம். தமிழ் மீது கொண்ட காதலால் தமிழை சிறப்பாகக் கற்பிப்பதோடு கவிதை, வில்லுப்பாட்டு, நாடகம் போன்றவற்றை எழுதிப் பயிற்றுவித்து மாவட்ட, கோட்ட மட்டங்களில் வெற்றிகளைத் தேடித்தந்த திருமதி. பத்மா தர்மலிங்கம் ஆசிரியை என்று கொண்டாடப்பட வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகம்.

**ஆக்கியோன்.**

**திரு.கணேசலிங்கம் கிருபானந்தன்**

**(AL- 1990 batch)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவால்களை வென்ற அதிபர் திரு.செ.பத்மசீலன் அவர்கள்:

திரு.இரத்தினம் புவனேந்திரன் ஐயாவின் மருத்துவ சத்திரசிகிச்சைக்கான சேவை விடுவிப்பை தொடர்ந்து 01.01.2013ம் திகதியன்று நிதி நிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதி அதிபர் திரு.செல்வராசா பத்மசீலன் அவர்கள் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் அதிபராக தனது கடமையை இனிதே பொறுப்பேற்றார். இந்த வேளையில் நிதிநிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதியதிபராக திரு.அ.முருகதாஸ் ஐயா அவர்களும் பாடவிதான செயற்பாடுகளுக்கும் மாணவர் நலன்புரி விடயங்களுக்கும் பொறுப்பான பிரதி அதிபராக திரு.சண்முகநாயகம் ஐயா அவர்களும் ஆரம்பபிரிவுக்கு பொறுப்பான பிரதியதிபராக தொடர்ந்து திரு.சங்கரதாஸ் ஐயா அவர்களும் உப அதிபராக திரு.வசந்தகுமார் ஐயா அவர்களும் சேவையில் இணைகின்றனர்.

இவரது சேவைக்கால பணிகளை உற்றுநோக்கு முன்னர், இவர் இந்த நிலையை அடைய கடந்து வந்த பாதையை கோடிட்டுக் காட்டுவது நன்று. இந்துவின் மாணவனாக 1970 - 1982 காலப்பகுதியில் கல்வி கற்று தொடர் மேற்படிப்பின் பின்னர் ஆசிரியராக பண்டாரவளையில் முதல் நியமனம் பெறுகிறார். பின்னர் அனுபவ ஆசிரியராக 1991 - 2004 காலப்பகுதி வரை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் சேவையை தொடர்கிறார். அதன் பின்னர் பாடவிதான செயற்பாடுகளுக்கும் மாணவர் நலன்புரி விடயங்களுக்கும் பொறுப்பான பிரதி அதிபராக 2004 -2006 காலப்பகுதியில் எமது கல்லூரியில் சேவையாற்றி, பின்னர் அதிபராக நியமனம் பெற்று சீனன்குடா தமிழ் வித்தியாலயத்தில் 2006 - 2010 காலப்பகுதி வரை கடமையாற்றி இருந்தார். பின்னர் மீண்டும் இடமாற்றலாகி எங்கள் கல்லூரியில் 2010 - 2011 வரை உப அதிபராகவும் பின்னர் திரு.இ.புவனேந்திரன் ஐயா அதிபராக பதவியுயர்வு பெற்றவுடன் நிதி நிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதியதிபராக 2011 - 2012 வரை சேவையாற்றியிருந்தார். இந்த அனுபவங்களை தாங்கி இந்துவின் அதிபராக தற்போது வரை பணியை முன்னெடுத்துச் சென்றுகொண்டிருக்கிறார்.

இவருடைய சேவைக்காலத்தில் இவர் தலைமையேற்று நிறைவேற்றிய முக்கிய நிகழ்வுகளையும் அபிவிருத்தி செயற்பாடுகளையும் மேலெழுந்தவாரியாக கண்ணோட்டம் விடுவோம். வேலையின் நிமித்தம் கொழும்பிற்கு வதிவிடத்தை மாற்றிக்கொண்ட பழைய மாணவர்களை ஒருங்கிணைத்து அவர்களின் செயற்பாட்டிற்கென பழைய மாணவர் சங்க கொழும்பு கிளையை 2013ம் ஆண்டளவில் ஸ்தாபித்தார். ஆரம்ப பிரிவு வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த இரண்டாவது மூன்று மாடிக்கட்டிடத்திற்குரிய நிர்மாண வேலையினை பூர்த்தி செய்து ஆரம்ப பிரிவு வளாகத்தை பூரணத்துவமாக நிரந்தர கட்டிடத்தில் இயங்குவதற்கு ஆவனசெய்தமை. பழைய மாணவசங்க பவளவிழா கொண்டாட்ட நிகழ்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையேற்று நிகழ்த்தியமை. பவளவிழா மலர் வெளியீடு. கல்லூரிமட்ட சஞ்சிகைகளான உள்ளக்கமலம், சாரல் போன்றவற்றை தொடர்ந்து பிரசுரம் செய்தமை. கல்லூரி விளையாட்டு மைதான எல்லைகளை வரையறை செய்து சுற்றுமதில் அமைத்தமை. டிலக்ஸன் ஞாபகார்த்த அரங்கு, பார்வையாளர்களிற்கான அரங்கு, விளையாட்டு வீரர்களிற்கான அரங்கு போன்றவற்றை விளையாட்டு மைதானத்தில் ஏற்படுத்தி தந்தமை. கோவிட் கொரோனா வைரஸ் நோய்த்தொற்று இடர்காலத்தில் மாணவர் கற்கையை தொலைவழி நிகழ்நிலைக்கற்கை மூலம் முன்னெடுத்தமை.

வினைத்திறன் செயல்பலகைகளை கற்பித்தலுக்காக முக்கியமான ஆய்வுகூடங்களிலும், கேட்போர் கூடத்திலும், ஆரம்ப பிரிவு வகுப்பறைகளிலும் பொருத்தியமை. திருக்கோணமலை நகரில் நீண்ட காலமாக கௌரவிக்கப்படாமல் இருந்த கல்வியாளர்களையும், சமயப்பெரியார்களையும், சமூகசேவையாளர்களையும் நிகழ்வுகளிற்கு அதிதிகளாக வரவழைத்து கௌரவித்து சமூகத்திற்கு அடையாளம் காட்டியமை. கல்லூரி சித்திவிநாயகர் ஆலயத்திற்கு திருப்பணி செய்து கும்பாபிசேக விழா எடுத்தமை. சர்வதேச ரீதியில் கணித ஒலிம்பியாட் போட்டிகளில் பங்கேற்க மாணவர்களை கணித விற்பன்னர்களை கொண்டு பயிற்றுவித்து லக்னோ-இந்தியா, பாங்காக்-தாய்லாந்து போன்ற நாடுகளிற்கு அனுப்பி வெற்றிபதக்கங்களை சுவீகரித்தமை. இந்தியாவிற்கும், தாய்லாந்திற்கும் பயிற்றுவித்த ஆசிரியர்களோடும் மாணவர்களோடும் நிகழ்வில் பங்கேற்க சென்றிருந்த போது போட்டிகளில் மாணவர்கள் காட்டிய அதீத திறமையால் அதிபர் கௌரவிப்பு பெற்றமை.

அதிபர் திரு. செ.பத்மசீலன் அவர்கள் புலம்பெயர் நாடுகளில் உள்ள பழைய மாணவர்களின் அழைப்பினை ஏற்று 2017ம் ஆண்டில் பிரான்ஸ், சுவீட்சிலாந்து ஆகிய நாடுகளிற்கு விஜயம் செய்து அந்தந்த நாடுகளில் பழைய மாணவர் சங்க கிளைகளை அங்குராப்பணம் செய்து வைத்திருந்தார். அத்துடன் 2018ம் ஆண்டு ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தின் அழைப்பை ஏற்று அவர்களால் ஒழுங்கு படுத்தப் பட்டிருந்தது கோடை கால விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கலந்து கொள்ள அந்நாட்டிற்கு சென்று சிறப்பித்திருந்தார்.

இவருடைய அதிபர் சேவைக்காலம் இவருக்கு கடமைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அவ்வளவு எளிதாக அமையவில்லை. தினம் தினம் பல சவால்களை எதிர்கொண்டு தான் பயணிக்க வேண்டியிருந்தது. அவர் எதிர்கொண்ட சவால்களையும் கல்லூரிமட்ட சாதனைகளையும் சற்று உற்றுநோக்குவோம். நாடு யுத்த இடரிலிருந்து விடுவிக்கப்பட்டவுடன் நீண்ட காலமாக கல்லூரியில் சேவையாற்றிய வெளிமாவட்ட ஆசிரியர்கள் தமது சொந்த பிரதேசங்களிற்கு மாற்றலாகிச் சென்றதன் நிமித்தம் பதிலீடாக அனுபவ ஆசிரியர்கள் மீள்நிரப்பு செய்யப்படவில்லை. கல்லூரி நிர்வாகத்தை மூன்று தசாப்தங்களிற்கு மேலாக வழிநடத்துவதில் பெரும்பங்காற்றிய அதிபர்கள், பிரதியதிபர்கள், ஆசிரியர்கள் இளைப்பாறுகை, நிர்வாக முறைமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுத்துவதற்கு தகுதியானவர்களை அடையாளம் காணுவதில் ஏற்பட்ட தடுமாற்றம். புதிதாக இணைந்து கொண்ட ஆசிரியர்கள், பிரதியதிபர்கள், கற்பித்தலிலும் நிர்வாகத்திலும் காட்டிய தடுமாற்றம் கல்லூரியின் அடைவுமட்டங்களை தளம்பல் நிலைக்கு இட்டுச் சென்றிருந்ததை நாம் மனதார ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம். யுத்தம் நடைமுறையில் இருந்த காலத்தில் பெற்றோரின் நேரடிக் கண்காணிப்பிலும் ஆசிரியர்களின் கட்டுப்பாட்டில் இருந்து சொல்கேட்டு நடந்த மாணவர்கள், யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக நவீன கலாச்சார மோகத்தால் கவர்ந்திழுக்கப்பட்டமை (அலைபேசி பாவனை, கட்டுப்பாடற்ற மின்னிணையதள பாவனை, போதைவஸ்து பாவனை போன்றவை). மாணவர் நலன்சார் மனிதவுரிமை சட்டங்களின் நடைமுறையும் ஆதிக்கமும், காலம் காலமாக நடைமுறையில் இருந்த ஒழுக்க கட்டுப்பாட்டு முறைமைகளில் தளர்வு ஏற்பட காரணமாகின. சமூக தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியும் அதனூடான தகவல் பரிமாற்ற வேகமும் கல்லூரி நிர்வாகத்தினரின் கைகளை கட்டிப்போட்டன. நவீன கால மாணவர்களின் தொழில்நுட்பமாற்றத்திற்கு ஈடுகொடுக்கும் அறிவு வளர்ச்சியையும் இவர்களின் செயற்திறனையையும் புரிந்து ஈடுகொடுத்து கற்கை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆசிரியர்களிற்கு தேவையான திறமையில் ஏற்பட்ட வெற்றிடம். தலைமுறைகளிற்கு இடையிலான அறிவு இடைவெளியை கையாளக்கூடிய பொறிமுறையை நிர்வாகத்தில் இருந்தவர்கள் சரியான நேரத்தில் அடையாளம் கண்டு அதற்குரிய பரிகாரங்களை நடைமுறைப்படுத்த தவறியமை.

இவை போன்ற வலிந்து தோற்றம் பெற்ற சவால்கள் அதிபர் திரு. செ.பத்மசீலன் அவர்களை, இவருடைய சேவைக்காலத்தில் கல்லூரியின் அடைவுமட்டத்தில் பாரிய வளர்ச்சி போக்கினை நோக்கி நகர முடியாத நிலைக்கு இட்டுச் சென்றன. ஆனால் அடைவுமட்டம் பாரிய மாற்றமின்றி முன்பிருந்த அதிபர்களின் காலத்தை ஒத்ததாகவே இருந்தது. ஆனால் கல்லூரியின் ஆரம்ப பிரிவு வளாக அடைவுமட்டம் பிரதி அதிபர் திருமதி. திருச்செல்வி சுதாகரன் அவர்களின் காலத்தில் வளர்ச்சியை நோக்கி நகர்ந்தது. இதற்கு காரணம் இவர் பெற்றோருடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர் தொடர்பாடல்கள் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நோக்கி பெற்றோர் அதீத ஆர்வம் எடுக்க காரணமாயின. அதே நேரம் கல்லூரியில் சில வரலாற்று பதிவுகள் எட்டப்பட்டு கொண்டும் இருந்தன. அதாவது மில்லேனிய வருடத்தில் பிறந்த மாணவர்களின் வகுப்பு 2019 உயர்தர பிரிவு சகல துறைகளிலும் தன்னிச்சையாக பரினமிக்க தொடங்கியது. இந்தபிரிவினரின் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் அடைவுமட்டம், கல்வி பொதுப்பரீட்சைகளின் பெறுபேறுகள் சாதாரணதரம், உயர்தரம், பல்கலைக்கழக மருத்துவ பீட, பொறியியல் பீட, வர்த்தக பீட நுழைவு எண்ணிக்கை கல்லூரியை மாவட்ட மட்டத்தில் முதன்நிலைக்கு உயர்த்தி காட்டியிருந்தது. இந்த வகுப்பு பிரிவு மாணவர்களையும் அவர்களிற்கு கற்பித்த ஆசிரியர்களையும் பேட்டி கண்டு ஆய்வு செய்வதன் மூலம் சிறந்த அனுகுமுறைகள், படிப்பினைகள் ஆகியவற்றை இனங்கண்டு, எங்கள் கல்லூரியின் அடைவு மட்டத்தினை ஆரோக்கியமான நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணுவதற்காக ஒரு பொறிமுறை கட்டமைப்பை உருவாக்கி அதன் பிரகாரம் கல்லூரியினை வழிநடத்தி செல்லலாம். மேனாள் அதிபர் திரு. சி.தண்டாயுதபாணி ஐயா அடிக்கடி கூறும் கருத்தை இங்கே ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். "கல்லூரியினை பொறுத்தமட்டில் நிர்வாக முறைமைகள் தான் ஆளவேண்டுமே ஒழிய ஆளுமைகள் அல்ல".மாணவர்களின் விசேட திறமைகள் வெளிக்கொணரப் படுவதற்கான செயற்திட்டங்கள், நிகழ்ச்சிகள் கற்கை முறைமைக்குள் உள்வாங்கபட வேண்டும். விளையாட்டு துறை ஆசிரியர்கள் தமது கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து செயற்பட வேண்டும். இவர்கள் மூலம் தளர்ந்து போய் கொண்டிருக்கும் விளையாட்டு துறைக்கு புத்துயிர் கொடுக்கபட வேண்டும். உயர்தர வகுப்புக்களிற்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் தமக்கென ஒரு வருடாந்திர பாடரீதியான அடைவுமட்ட இலக்கை நிர்ணயித்து அதை நோக்கி கற்கை செயற்பாடுகளை முன்னெடுத்து செல்ல வேண்டும். இதற்கு கல்லூரியின் நிர்வாகமும் இரு சங்கங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்துக்கல்லூரி சமூகம் தற்போது விழித்தெழா விட்டால், எங்கள் எதிர்கால சந்ததியினரின் எதிர்காலம் திக்கு தெரியாத கப்பல் பயணமாக இருக்கும்.

திருக்கோணமலை வாழ் மக்களின் கலங்கரை விளக்காக திகழும் எங்கள் கல்லூரி இவ்வருடம் யூன் மாதம்1ம் தேதி தனது 125ஆவது அகவையை நிறைவு காண்கிறது. இதனையொட்டி தற்கால அதிபரின் தலைமையில் மேனாள் அதிபர்கள், மூத்த பழைய மாணவர்கள், மேனாள் சங்க செயலாளர்கள், இந்நாள் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பல நிகழ்வுகளையும் செயற்திட்டங்களையும் திட்டமிட்டு நிதிதிரட்டி ஒன்றனப்பின் ஒன்றாக செவ்வனே நிறைவேற்றி கொண்டிருக்கின்றார். இந்நிகழ்வின் பின்னர் கல்லூரி புதிய பரிமாணம் வளர்ச்சி காணவேண்டும் என்று எல்லாம் வல்ல கோணேசப்பெருமானையும், காளியாச்சியையும், சித்தி விநாயகரையும் பிரார்த்திப்போமாக.

**ஆக்கம்:**

**எந்திரி.தி.ஹரிதரன் 1990 உயர்தர கணிதப்பிரிவு**

**மேனாள் பழைய மாணவர் சங்க செயலாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீர் அளவே ஆகுமாம்
நீர் ஆம்பல் தான் கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண்ணறிவு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பப்பிரிவின் வளர்ச்சி மீதான ஒரு பார்வை

"இந்த உலகையே மாற்றக்கூடிய ஒரு பலமான ஆயுதம் உண்டென்றால் அது கல்வி தான்" என்கிறார் நெல்சன் மண்டேலா. "கல்வி அழகே அழகு" என்கிறார் நாலடியார். இத்தகைய சிறப்புப் பொருந்திய அழியாச் செல்வமான கல்வியானது தனியாளின் ஆளுமையை வளர்த்தெடுத்து, சமூக முன்னேற்றத்துக்கு எடுத்துச் சென்று, சமூகத்தை அழிய விடாமல் பாதுகாக்கும் கருவியாக உள்ளது. இக்கல்விச் செல்வத்தை வழங்கி அறிவு, திறன், மனப்பாங்கை விருத்தி செய்து, மாணவர்களை எதிர்கால உலகிற்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் தயார்ப்படுத்தக்கூடிய ஒரு நிறுவனமே பாடசாலையாகும்.

அந்த வகையில் கிழக்கிலங்கையின் பொன் எழிலாய் மிளிரும் புகழ்பூத்த பாடசாலையே தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி என்பது தான் நிதர்சனமான உண்மை. முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் தடம் பதித்த விளைநிலத்திலே நூற்றாண்டின் பின்னரும் தேசிய மட்டத்தில் பல்வேறு சாதனைகளை வருடாவருடம் நிலைநாட்டி, மாவட்டத்தில் முன்னணிப் பாடசாலையாக கம்பீரமாக நிற்கும் கல்விக்கூடமாக பல முத்துக்களைப் பதித்து வரும் வளர்ச்சிப் போக்கை எமது கல்லூரியில் காணாதோர் யாருமிலர் என்றே கூறலாம். திருக்கோணமலையில் இந்துக்கள், அதுவும் ஆண்கள் கல்வி கற்கக்கூடிய கலைக்கூடங்களாக கோணேஸ்வரா வித்தியாலயமும், இந்துக்கல்லூரியும் நகர் பாடசாலைகளில் மிகவும் பிரபல்யமாக விளங்கியமை யாவரும் அறிந்த உண்மை.

தி/இ.கி.ச இந்துக்கல்லூரியிலே தரம் ஆறு தொடக்கம் க.பொ.த (உ/ த) வரையும் தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயத்தில் தரம் ஒன்று தொடக்கம் க.பொ.த (சா/த) வரையும் வகுப்புகள் இயங்கி வந்தன. ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயத்தில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டமையினால் அண்மையிலுள்ள ஒரு தனியார் வீட்டில் வகுப்புகள் நடாத்தப்பட்டு வந்த வேளையில் 1989ம் ஆண்டிற்குப் பின்னர் தி/புனித அந்தோனியார் சிங்கள வித்தியாலயத்தில் ஆரம்பப்பிரிவின் எட்டு வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வந்தன. இக்காலத்தில் திருக்கோணமலையின் செல்வாக்குப் பெற்ற ஆரம்பப்பிரிவு பாடசாலையாக ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயம் திகழ்ந்தது மட்டுமல்லாமல் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று முதன்மை நிலை வகித்ததோடு வருடம் தோறும் பல மாணவர்கள் தகுதி பெறுவதுமாக இருந்து பலரது பாராட்டுக்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். இங்கு இக் காலத்தில் திரு.க.ஜீவரெட்ணம் அவர்கள் அதிபராக கடமையாற்றியிருந்தார். இந்துக்கல்லூரியிலே திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். 1992 இல் இ.கி.ச இந்துக்கல்லூரியில் சமூகத்தின் தேவைக்கேற்ப தரம் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் தரம் ஐந்து வரை ஒரே சமயத்தில் ஐந்து வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. இரு பாடசாலைகளும் இணைக்கப்படுவதற்கு முன்னர் இ.கி.ச இந்துக் கல்லூரியில் ஆரம்பப்பிரிவானது ஒவ்வொரு தரங்களிலும் ஒவ்வொரு வகுப்புக்களும், ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயத்தில் ஒவ்வொரு தரங்களிலும் இரண்டு வகுப்புக்களும் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

1993.02.01ந் திகதியன்று கல்விக்கட்டமைப்பில் இரு பாடசாலைகளும் ஒன்றிணைக்கப்பட்டு இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி என்ற நாமத்துடன் தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின் தலைமையில் இயங்க ஆரம்பித்தது. அக்காலகட்டத்தில் ஆரம்ப பிரிவில் ஒவ்வொரு தரங்களிலும் மூன்று வகுப்புகளாக மொத்தம் பதினைந்து வகுப்புகள் இருந்தன. ஆரம்பப்பிரிவுக்கென தனியான பகுதி உருவாக்கப்பட்டது. இப்பிரிவுக்கென திருமதி.உசாதேவி பாலச்சந்திர ஐயர் அவர்கள் நியமிக்கப்பட்டார். இவர் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கல்வி, விளையாட்டு முதலான ஏனைய செயற்பாடுகளில் ஊக்கமளித்து சிறப்புற நடாத்தி வந்தார். இச்சந்தர்ப்பத்தில் தரம் 1, 2 வரையான ஆறு வகுப்புக்கள் புனித அந்தோனியார் சிங்கள பாடசாலையிலும் தரம் 3, 4, 5 வரையான ஒன்பது வகுப்புக்கள் தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பிரதான வளாகத்தில் நடாத்தப்பட்டு வந்தன. தனியான இடத்தில் இயங்கி வந்த தரம் 1, 2 வகுப்புகளின் கல்வி நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக திருமதி. வி கணேசலிங்கம் ஆசிரியை அவர்கள் இணைப்பாளராக கடமையாற்றி வந்தார். ஆரம்பப்பிரிவு மாணவர்களின் தனித்துவத்தை பேணும் வகையில் இம் மாணவர்களுக்கென தனியான காலைக்கூட்டம், விளையாட்டுப்போட்டி நடாத்தபட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். 1994இல் கல்லூரிக்கு தரம் ஒன்றிற்கு மாணவர்களின் வருகை அதிகரித்தமையால் தரம் ஒன்றில் நான்கு வகுப்புகள் ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனை தொடர்ந்து வருடாவருடம் நான்கு வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் மாணவர் தொகை உயர்ந்தது.

1995 இல் திருமதி. உசாதேவி பாலச்சந்திர ஐயர் அவர்கள் இடமாற்றம் பெற்று சென்றார். இவ்வருடத்திலிருந்து திரு.இ.புவனேந்திரன் அவர்கள் நியமிக்கப்பட்டு கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. 1998இல் 20 வகுப்புகளிலும் 735 மாணவர்கள் கல்வி கற்றதுடன் 23 ஆசிரியர்களுடன் ஒரு உபஅதிபரும் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. காலைக்கூட்ட ஆராதனைகள் தரம் 1, 2 மாணவர்களுக்கு புனித அந்தோனியார் சிங்கள வித்தியாலய வளாகத்திலும், தரம் 3 - 5 மாணவர்களுக்கு கல்லூரியின் சிற்றுண்டிச்சாலை மண்டபத்திலும் தனித்தனியாக நடைபெற்று வந்தன. இவ்விரு இடங்களிலும் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து, மாணவர்களின் தலைமைகளின் கீழ் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் நடாத்திவந்தனர். இதனால் மாணவர்கள் தலைமை தாங்கும் பண்பையும், மேடைக்கூச்சமின்றி பேச்சாற்றலையும் தம்மிடையே வளர்த்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனிஷ்ட இடைநிலைப்பிரிவு ஆசிரிய ஆளணி - 2022



அமர்வு (இ-வ): திரு.ச.சத்தியசீலன், திரு.கே.பாஸ்கரன், திரு.வி.இராஜேந்திரன், திரு.ந.பரமேஸ்வரன், திரு.செ.பத்மசீலன் (அதிபர்), திருமதி.கே.இராதாகிருஷ்ணன், திருமதி.ல.செல்வநாயகம், திரு.ப.வாமதேவன்

நிலை (முதல் வரிசை): ஜனாபா.எஸ்.ஆர்.பர்வின், திருமதி.எஸ்.மேகலா, செல்வி.எஸ்.றொசேலா, திருமதி.பி.வித்தியா, திருமதி.கோ.விஜயகாந்தன், திருமதி.பயஸ் அமலநாதன், திருமதி.ஜெ.சயந்தினி, திருமதி.என்.நிசாந்தினி, திருமதி.எஸ்.வினோடனி, திருமதி.ஜெ.சுவேந்திரன், திருமதி.சோ.சஞ்சித், திருமதி.ஜா.தயாளசிங்கம், செல்வி.வ.செல்லக்கண்டு, திருமதி.வ.வசீகரன், செல்வி.சி.பிரவீனா, செல்வி.எஸ்.சர்மிளா, செல்வி.ஆர்.கிசாந்தி, திருமதி.த.மைதிலி, ஜனாபா.ஏ.ஜே.சப்னாஸ், திருமதி.த.வாசுதேவன்

நிலை (இரண்டாம் வரிசை): திரு.ஆர்.சி.செல்வராஜா, திரு.கே.டினராஜ், திரு.பொ.சுதாகரன், ஜனாப்.ஐ.ஹஸ்மைன், திரு.கே.சியாந்தன், திரு.பி.பிரபாகரன், திரு.எஸ்.சுபைர்டீன், திரு.ஆர்.ஸ்ரீகேதீஸ்வரன், திரு.எஸ்.ஸ்ரீரங்கநாதன், ஜனாப்.ஏ.ஜே.எம்.பசால், ஜனாப்.ஏ.ஆசாத், ஜனாப்.ஏ.சி.முபாரக்

## ஆரம்பப்பிரிவு ஆசிரிய ஆளணி - 2022



அமர்வு (இ-வ) - திருமதி.வி.கிருபானந்தன், திருமதி.ஏம்.கனகராஜா, திருமதி.ஜே.ஸ்ரீதரன், திரு.ஏ.ஜெயநேசன், திரு.செ.பத்மசீலன் (அதிபர்), திரு.எஸ்.கணேசலிங்கம், திருமதி.ந.சுபேந்திரன், ஜனாப்.பி.பி.இவ்திகார், திருமதி.மே.யோகராஜா

நிலை (முதல் வரிசை) - செல்வி.த.ஹர்சினி, திருமதி.எஸ்.ஜெனிற்றா, செல்வி.எம்.இந்துஜா, திருமதி.எஸ்.தமிழ்வேந்தன், திருமதி.ஜெயசீலன், செல்வி.லை.சஜித்தனா, திருமதி.க.பாலதாஸ், திருமதி.பி.சதீசன், திருமதி.வி.ஸ்ரீபாஸ்கரன், திருமதி.ஜெ.விதுசா, திருமதி.ரி.மனோகரன்

நிலை (இரண்டாம் வரிசை) - திரு.ரி.சுஜிதரன், ஜனாப்.ஜே.ஸ்மத், திரு.எஸ்.கிருஸ்ணகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி சித்திவிநாயகர் கோயிலில் வெள்ளிக்கிழமையில் பூசைகளில் பங்கு கொண்டு சித்திவிநாயகரின் அருளைப் பெற்றனர். தரம் 1, 2 இற்கு இணைப்பாளராகக் கடமையாற்றிவந்த திருமதி. வி. கணேசலிங்கம் ஆசிரியை ஓய்வுபெற்றுச் சென்ற போது அப்பதவிக்கு திருமதி. கி. உதயகுமார் நியமிக்கப்பட்டார். அவரும் ஆரம்பப்பிரிவு கல்வி நடவடிக்கைகளில் எதுவித தளர்வும் ஏற்படாமல் செவ்வனே நிறைவேற்றி வந்தார்.

சித்திவிநாயகரின் அருளாலும், எமது ஆசிரியர்களின் உழைப்பாலும் வருடாவருடம் தரம் 5 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றும், அதிகூடிய மாணவர்கள் தகுதி பெற்றும் வருவதோடு, மாவட்ட, தேசிய ரீதியில் முதலிடத்திலும் உள்ளனர். 2003ம் ஆண்டு செல்வன்.ந.அபிலாஸ் 182 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழி மூலத்தில் முதலாவது இடத்தையும் பெற்று கல்லூரியிற்கு பெருமை சேர்த்தார். 2005ம் ஆண்டு 71 மாணவர்களும், 2006ம் ஆண்டு 73 மாணவர்களும் புலமைப்பரிசில் பரீட்சையில் தகுதி பெற்றிருந்தமை ஒரு சாதனையாகும். இச்சாதனை இன்றுவரை முறியடிக் கப்படாமல் உள்ளது. இம்மாணவர்களுக்கு சான்றிதழ்களையும், பரிசில்களையும் வருடாவருடம் வழங்கி பாராட்டப்படுவது வழமை. அது மட்டுமன்றி ஆரம்ப பிரிவிற்கான பரிசளிப்பு விழா, கல்விக்கண்காட்சி, களப்பயணம் என வருடந்தோறும் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. 2003இல் நடைபெற்ற “பிரவாகம்” கல்விக்கண்காட்சியில் ஆரம்பப்பிரிவு சிறார்களின் கைவினைகளைக் கொண்ட புத்தம்புதிய ஆக்கங்கள் நேர்த்தியாகவும் சிறப்பாகவும் இருந்தமை, பலரது பாராட்டையும் பெற்று பெருமை சேர்த்தது.

மொழித்திறனை விருத்தி செய்யும் நோக்குடன் தமிழ் மொழித்தினப்போட்டிகள், ஆங்கில மொழித்தினப்போட்டிகள் ஆண்டுதோறும் எமது கல்லூரியில் விரிவாக நடாத்தப்படுகின்றன. ஆரம்பப்பிரிவில் தரம் 4, 5 மாணவர்கள் பங்குபற்றி தேசிய ரீதியில் தங்கப்பதக்கத்தையும் பெற்று கல்லூரியிற்கு பெருமை சேர்த்துள்ளனர். 1997ம் ஆண்டு பாவோதல் போட்டியில் செல்வன்.இ.மால்மருகன் எனும் மாணவனும், 2000ம் ஆண்டு பேச்சுப்போட்டியில் செல்வன்.சே.நிசாந் எனும் மாணவனும் அகில இலங்கை ரீதியில் தங்கப்பதக்கத்தைப் பெற்று பெருமை சேர்த்தனர்.

ஆண்டுதோறும் நடைபெறுகின்ற நவராத்திரி விழாவின் போது மாணவர்களுக்கென சமய அறிவுப்போட்டி, பேச்சுப்போட்டி, மனனப்போட்டி என்பன இடம்பெற்று பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுவதுடன், இறுதிநாள் கலைவிழா நிகழ்விலும் மாணவர்கள் பங்கேற்று நாட்டியநாடகம், நடனம், வில்லுப்பாட்டு என பல்வேறு நிகழ்வுகளை அரங்கேற்றி அவர்களின் திறமைகளை வெளிக்கொணரவும் வாய்ப்பளிக்கப்பட்டு வந்தது.

திருக்கோணமலையில் குருளைச்சாரணீயம் 1996 இல் மீள்உருவாக்கத்தின் போது எமது கல்லூரியில் 24 மாணவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக்குழுவிற்கு செல்வி மீரா இராமச்சந்திரன் பொறுப்பாசிரியராகவும், திருமதி. பா.தர்மராசா உதவியாளராகவும் நியமிக்கப்பட்டனர். குருளைச்சாரணீயர் தொகை அதிகரிக்க 1998இல் திருமதி. சாந்தமேரி ஜவர்யென்னிங்ஸ், திருமதி. சா. இரமணீகரன் ஆகியோருடன் செல்வி. திருமகள் நாயகம் என்பவரும் இணைந்து செயற்பட்டுவந்தனர். 1998ம்ஆண்டு குருளைச் சாரணர்களுக்கான வெண் கலத்தாரகைச் சின்னத்தை 5 பேர் பெற்றுக்கொண்டனர். 1999ம் ஆண்டு 21 குருளைச்சாரணர்கள் வெண்கலத்தாரகைச் சின்னத்தையும் 14 பேர் வெள்ளித்தாரகை சின்னத்தையும் பெற்றுக்கொண்டனர். இந்நாளில் "தங்கத்தாரகை" விருது பெற்றதும் கல்லூரிக்கு கிடைத்த பெருமையே எனக் கூறலாம்.

இதே போன்று 2000 ஆம் ஆண்டிலே சிறார்களுக்கான "பாண்ட்" வாத்திய அணி 35 பேரைக் கொண்டு உருவாக்கப்பட்டது. இவ்வணி ஆரம்பப்பிரிவு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று அப்போட்டிகளை மேலும் மெருகேற்றியதுடன் பலரது பாராட்டையும் பெற்றது. இக்குழுவிற்கு செல்வி. வி.சிவபுண்ணியம் பொறுப்பாசிரியராகவும், பிரதான பயிற்றுனராக செல்வி. திருமகள் நாயகம் என்பவரும் செயற்பட்டு வந்தனர். இந்நாளில் கல்லூரி பாண்ட் வாத்திய குழு உறுப்பினரான மாணவன் அமரர் பிரணவன் அவர்கள் தோள்கொடுத்து உதவியமை மறக்கமுடியாத விடயமாகும். வருடந்தோறும் தரம் இரண்டின் மாணவர்கள் இறுதித் தவணையிலே பெற்றோரின் சம்மதத்துடன் தெரிவு செய்யப்படுவர். அவ்வாறு இணைக்கப்பட்டவர்கள் தொடர்ந்து தரம் ஐந்து வரை அணியில் அங்கம்வகிப்பர். திரு. மணிவண்ணன், திரு.ரஞ்சித், திரு சிசாந்த மேயோ ஆகியோர் பயிற்றுவிப்பாளராக இயங்கி வந்தனர். இன்றும் திரு. சிசாந்த மேயோ என்பவர் பயிற்றுவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

1998 இலிருந்து ஆரம்ப பிரிவு இல்ல விளையாட்டுப் போட்டிக்கென பொறுப்பாசிரியராக செல்வி. மீரா இராமச்சந்திரன் அவர்கள் நியமிக்கப்பட்டார். ஜனாப்.பசீர்அமீர், திரு.சி.சசிக்குமார் ஆகியோரின் வழிகாட்டலுடன் இல்ல விளையாட்டுப்போட்டிகள் இனிதே இடம்பெற்று வந்தன. 2001 ஆம் ஆண்டு இல்ல விளையாட்டுப்போட்டி எமது கல்லூரி மைதானத்தில் முதன்முறையாக இடம்பெற்றது. இவ்விளையாட்டுப்போட்டியின் போது இடைவேளை நேரத்தை ஆரம்பப்பிரிவு மாணவர்களின் பாண்ட் வாத்தியஅணியும். உடற்கண்காட்சியும் மைதானத்தை அலங்கரித்ததுமல்லாமல் கண்குளிரச் செய்து பலரது பாராட்டுக்களையும் பெற்றனர். இவை மட்டுமன்றி இவ்விளையாட்டுப் போட்டியின் போது 7 வயதிற்கு கீழ், 8 வயதிற்கு கீழ், 9 வயதிற்கு கீழ், 10 வயதிற்கு கீழ், 11 வயதிற்கு கீழ் என ஒவ்வொரு வயதினருக்குமான போட்டிகளும் இல்ல ரீதியிலான மாணவர்களின் அணிநடை, குருளைச்சாரணர் அணிநடை, சென்ஜோண்ஸ் அம்புலன்ஸ் அணியினர் (கிட்டீஸ்) அணிநடை, என சகல மாணவர்களும் பங்கு பற்றி மைதானத்தை விறுவிறுப்படையச் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக ஆரம்பப்பிரிவின் செயற்பாடுகள் அதிகரித்த போது தேவை கருதி 2003ம் ஆண்டில் தரம் மூன்று தொடக்கம் ஐந்து வரையான வகுப்புகளுக்கு இணைப்பாளராக செல்வி.வி.சிவபுண்ணியம் அவர்கள் நியமிக்கப்பட்டார். திரு.இ.புவனேந்திரன் அவர்கள் ஆரம்பப்பிரிவுக்கென பல ஒழுங்கமைப்புகளுடனான வளங்களையும், வசதிகளையும் அதிகரிக்க செய்தார். இதன் மூலம் கற்றல், இணைப்பாடவிதான செயற்பாடுகள் என்பவற்றின் பெறுபேறுகளை அதிகரிக்க வழிகாட்டியிருந்தார். 2005இல் திரு. அ.அருணகுமார் அவர்கள் ஓய்வு பெற்ற போது கல்லூரியின் பிரதி அதிபராக திரு.இ.புவனேந்திரன் அவர்கள் பதவியை ஏற்றார். அதன் பின்னர் திருமதி. எம்.எவ்.சண்முகநாதன் அவர்கள் 2006இல் இப்பிரிவின் உப அதிபராக பதவியை ஏற்றுக் கொண்டார்.

உபஅதிபராக திருமதி. எம்.எவ்.சண்முகநாதன் அவர்கள் ஆரம்பப்பிரிவை மேலும் அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றினார். இணைப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து சிறந்த பலசாதனைகளை படைத்தார். இவர் விஞ்ஞான செயற்பாடுகளில் ஈடுபட்டு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சிறந்த விளக்கங்களை வழங்கி தெளிவுபடுத்தியதோடு, உடலியக்கச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டார். இவர் 2010 இல் பணியிலிருந்து ஓய்வுநிலை பெற்றுச் சென்றார். 2010 பெப்ரவரி 02ஆம் திகதியிலிருந்து திரு.ந.சங்கரதாஸ் அவர்கள் ஆரம்பப்பிரிவுக்கு உப அதிபராக பணியை ஏற்று வழிநடத்தினார். இவரது காலத்திலேயே அதிகமான பௌதீக வளங்கள் வளர்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

புனித அந்தோனியார் சிங்கள பாடசாலையிலுள்ள கட்டடம் தற்காலிகமாகவே திருத்தியமைக்கப்பட்டு அங்கு வகுப்புகள் நடாத்தப்பட்டு வந்தன. 1993ம் ஆண்டிலிருந்தே ஆரம்பப்பிரிவுக்கென காணிதேடும் முயற்சி இடம்பெற்று வந்த நிலையில் 2000ஆம் ஆண்டளவில் கிறீன்வீதி, மின்சார நிலைய வீதி, புனித அந்தோனியார் வீதியை எல்லைகளாக கொண்டு அமைந்த 168 பேர்ச் காணி தெரிவு செய்யப்பட்டு சுவீகரிக்கப்படுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2005ம் ஆண்டிற்கு பின்னர் முயற்சி தீவிரமடைந்து 2006இல் கல்லூரிக்கு காணி கையளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நெக்கோட்டினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அடித்தளத்தில் கூட்ட மண்டபம் ஒன்றுடன் பத்து வகுப்பறைகளைக் கொண்டதான கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. மின்சாரநிலையவீதி வளாகத்தில் அமைந்த புதிய கட்டிடத்தில் பத்து வகுப்பறைகள் மாத்திரம் இருந்தமையினால் கல்லூரியின் பிரதான வளாகத்தில் நடைபெற்று வந்த தரம் மூன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான பன்னிரண்டு வகுப்புக்கள் இப் புதிய கட்டிடத்திற்கு 2010ம் ஆண்டு ஆரம்பத்ததில் இடமாற்றப்பட்டன. இப்புதிய மண்டபத்தில் முதல் நிகழ்வாக ஆரம்பப்பிரிவு பரிசளிப்புவிழா நடைபெற்றது. தற்போது பாடசாலை விழாக்கள், ஆசிரிய மாணவ செயலமர்வுகள், நவராத்திரி வைபவம், மற்றும் செயலமர்வுகள் எனப்பல நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. புனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தோனியார் சிங்கள பாடசாலை வளாகத்தில் இயங்கி வந்த தரம் 1, 2 வகுப்புகள் அக்காலத்தில் மாற்றப்படவில்லை.

2011ஆம் ஆண்டு ஆரம்பத்தில் தி/புனித அந்தோனியார் சிங்கள பாடசாலையை மீள மாகாண கல்வி திணைக்களத்திற்கு கையளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதனால் கிழக்கு மாகாணசபையினதும் தரம் 1, 2 பெற்றோர்களின் பங்களிப்புடனும் புதிய வளாகத்தின் கிறீன் வீதிப் பக்கமாக நான்கு வகுப்புகள் நடாத்தக் கூடிய தற்காலிக கூடாரம் ஒன்று அமைக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு இரண்டாம் தவணையின் போது புனித அந்தோனியார் சிங்கள பாடசாலை வளாகத்திலிருந்து முற்றாக வெளியேறி மின்சாரநிலைய வீதி வளாகத்தில் வகுப்புகள் நடாத்தப்பட்டன. அதே வருடம் கிழக்கு மாகாணசபையின் அப்போதைய முதலமைச்சரால் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் ஆரம்பப்பிரிவு வளாகத்தில் சுவீகரிப்பின் போது காணப்பட்ட முற்றுப்பெறாத மாடிக்கட்டடம் ஒன்று முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு 2012ம் ஆண்டு ஆரம்பத்தில் திறந்து வைக்கப்பட்டது. அதன் கீழ்த்தளத்தில் ஆரம்பப்பிரிவின் அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டது. அதன் முதலாம் மாடியில் ஆசிரியருக்கான விடுதி ஒன்றும் அமைக்கப்பட்டது.

மாணவர்களின் உடல் உள வளர்ச்சிக்கும் அவர்களது கற்றல் சூழலை மேம்படுத்தும் நோக்கில் விளையாட்டு முற்றம் ஒன்றை டோக்கியோ சீமெந்து நிறுவனத்தினர் அமைத்துத்தந்தமை சிறார்களுக்கு பெரிதும் உதவியாக அமைந்திருந்தது. 2012 ஆம் ஆண்டு டி.எவ்.சி.சி. வங்கியாலும் கல்வி அமைச்சினாலும் மேற்கொள்ளப்பட்ட 6'எஸ்' செயற்றிட்டத்தில் ஆரம்பப்பிரிவு அகில இலங்கை ரீதியில் 4வது இடத்தைப் பெற்று பரிசிலையும் பெற்றமை எமக்கு பெருமையைத் தேடித்தந்துள்ளது.

சிறார்களின் திறன்களை வளர்க்கும் நோக்குடன் நூலகம், சாரணீயம், சென்யோண்ஸ், பாண்ட், கல்விக்கண்காட்சி, களப்பயணம், தமிழ், ஆங்கில மொழித்திறன் போட்டிகள், கையெழுத்துச்சஞ்சிகை, கல்லூரி தினத்தை ஒட்டிய சைக்கிளோட்டப்போட்டி, நடைபவனி, நவராத்திரி விழாவின்போது சமய அறிவுப்போட்டி, கைத்திறனை விருத்தி செய்ய மாலைகட்டல், கோலம் போடல் இவ்வாறாக பல நிகழ்வுகள் இடம்பெற்று கல்லூரியை சிறப்பிக்க திரு.ந.சங்கரதாஸ் அவர்கள் வழிவகுத்தார். குறிப்பாக இவரது காலத்திலேயே வளாகம் பசுஞ்சோலையாக மாறியது என கூறினால் மிகையாகாது. மாணவர்கள் இயற்கை எழிலை இரசித்து மகிழும்படியாக பூஞ்சோலை மற்றும் விளையாட்டு முற்றம், நீர் வசதியைக் கருத்திற் கொண்டு கிணற்று வசதி என பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு ஆரம்பப்பிரிவு வளாகத்தை மெருகூட்டி மேலும் வளர்ச்சியுறச் செய்தார். அத்துடன் புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்று முன்னணி வகித்து சாதனைகளைப் படைக்கவும் தவறவில்லை.

2014 இல் சுற்றுநிருபத்திற்கேற்ப சுற்றாடற்கழகம் ஆரம்பிக்கப்பட்டு அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர்கள் என அனைவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இன்னிய அணி



ஆரம்பப்பிரிவு மாணவத்தலைவர்கள்



சிரேஷ்ட மாணவத்தலைவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துழைப்புடனும் சுற்றாடலையும் சுகாதாரத்தையும் இன்று வரையில் பேணி வருவதுடன் மலசலகூடங்களையும் கண்காணித்து உரிய முறையில் பராமரிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் மாணவர்களது ஆளுமை மேலும் விருத்தியடைய வேண்டும் என்ற நோக்கில் மாணவ தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு சின்னஞ்சூட்டி, சிறார்களை ஊக்கத்துடன் செயற்பட வைத்தமை சிறப்பம்சமாகும். வருடாவருடம் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான களப்பயணம் மேற்கொள்ளும் செயற்பாட்டில் 2015ஆம் ஆண்டு ரஜமாவிகாரை, எம்பக்கதேவாலயம் போன்ற இடங்களையும், 2016ஆம் ஆண்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளை அம்மன் கோவில், ஆடைத்தொழிற்சாலை, இரணைமடுக்குளம், போன்ற இடங்களை பார்வையிட்டு மகிழ்ச்சியடைந்தனர். மாணவர்கள் பயனடையும் வகையில் சிறந்த முறையில் களப்பயண ஒழுங்கை மேற்கொண்டு மாணவர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தி வழிகாட்டிய சிறப்பும் இவரைச் சாரும்.

ஆரம்பப்பிரிவு மாணவர்களின் விளையாட்டுத்திறனை விருத்தி செய்யும் பொருட்டு கல்வி அமைச்சினால் உருவாக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் 2013 இலிருந்து “செயற்பட்டு மகிழ்வோம்” எனும் போட்டிக்கு மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு முதல் இடங்களைப் பெற்று மாவட்ட மட்டத்தில் தெரிவாகி தேசிய மட்டத்திலும் பங்குகொண்டமை கல்லூரிக்கு பெருமை சேர்த்தது. இதற்கு பொறுப்பாக ஆசிரியர்கள் திரு.சி.கிருஸ்ணகாந், திரு.ஜெ.ஜெயதர்சன், ஜனாப்.வ. முஹம்மட் அன்ஹாஸ் என்போர் இருந்தனர். குருளைச் சாரணீயத்திற்குப் பொறுப்பாக திருமதி. அ.ஜெயநேசன் அவர்கள் செயற்பட்டு வரும் வேளையில் வருடாவருடம் சின்னஞ் சூட்டப்பட்டு பயிற்சிப் பாசறையில் கலந்து விளையாட்டுக்களில் பங்கு கொண்டு பரிசில்களையும் பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். 2013இல் திருமதி.சி.பேரின்பராசா அவர்கள் மாற்றலாகிச் சென்றதும் தரம் 1,2 இற்கு இணைப்பாளராக திருமதி.தே.ஆனந்தன் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

திரு.ந.சங்கரதாஸ் அவர்கள் 2010 தொடக்கம் 2015 வரை பணியாற்றி ஆரம்பப்பிரிவின் புதிய வளாகத்தை கற்றல் மற்றும் மாணவர் செயற்பாடுகட்கு உரிய முறையில் மாற்றியமைத்து வெற்றிகண்ட பெருமைக்குரியவர். இவரது சேவையைத் தொடர்ந்து திருமதி.தி.சுதாகரன் அவர்கள் 2015இல் பொறுப்பை ஏற்று கல்லூரி உணர்வோடு சரிவு ஏற்படாது செயலாற்றியமை யாவரும் அறிந்ததே. இவரது காலத்தில் ஆசிரிய பற்றாக்குறை நிலவியபோது தாமே வகுப்பறைக்குச் சென்று கற்பித்தலில் ஈடுபட்டு மாணவரிடத்தே நல்லெண்ணத்தையும் ஏற்படுத்தினார். மாணவரின் இணைப்பாடவிதான செயற்பாடுகளுடன் தியானப் பயிற்சியை மேற்கொள்ள வழிவகுத்தார். தரம் 1, 2 மாணவர்களுக்கும் தரம் 3, 4 மாணவர்களுக்கும் தனித்தனியே வாரத்தில் ஒருநாளும், தரம் 5 மாணவர்களுக்கு தினமும் தியானப் பயிற்சி நடைபெற்றது. இதனை திரு.பா.சிவப்பிரகாசம் அவர்கள் வழிநடத்தி வந்தார். இவருக்கு உதவியாக ஆசிரியர் திருமதி.பு.விஸ்வலிங்கம் செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2017இல் இடம் பெற்ற இடமாற்றத்தின் போது திருமதி.தே.ஆனந்தன் மாற்றலாகிச் சென்றதும் செல்வி.ம.கனகராசா தரம் 1, 2 இற்கு இணைப்பாளராக செயற்பட்டு வந்தார். 2018இல் செல்வி.வி.சிவபுண்ணியம் அவர்கள் ஓய்வுநிலை பெற்றதும் தரம் 3 - 5 இற்கு செல்வி.ம.கனகராசா அவர்கள் அவ்வெற்றிடத்தை நிரப்பினார். திருமதி.தே.ஸ்ரீதரன் தரம் 1, 2 இற்கு இணைப்பாளராக செயற்பட்டு வந்தார்.

புலமைப் பரிசில் பரீட்சையில் 2016இல் செல்வன்.உ.கோசிகன் 194 புள்ளிகளைப் பெற்று தேசியமட்டத்தில் 3ம் இடத்தையும், 2019இல் செல்வன்.ச.டேனுவர்சன் தேசியமட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்று மாவட்டத்திற்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்த்தமை மகிழ்வுக்குரியவிடயமாகும். செல்வன்.உ.கோசிகன் அவர்களை தரம் 5இல் ஆசிரியர் திரு.ஜெ.ஜெயதர்சன் அவர்களும், செல்வன்.ச.டேனுவர்சன் அவர்களை தரம் 5இல் ஆசிரியர் திருமதி.தி.கலைச்செல்வன் அவர்களும் வழிநடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. எவ்வளவு இடையூறுகள் ஏற்பட்டாலும் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக முன்னணி நிலையினை பெற்று பேணிக்காத்து வந்தமை பாராட்டக்கூடிய விடயமாகும். அதே நிலைமை பின்வாங்காது மென்மேலும் உயர்ந்துள்ளமை தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. திருமதி.தி.சுதாகரன் அவர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து திருமதி.தங்கமயிலாள் ஹரிகரன் அவர்கள் உபஅதிபர் பதவியை ஏற்று செயற்பட்டு வருகிறார். 2021ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையிலும் எமது கல்லூரியே மாவட்டமட்டத்தில் 1ம், 2ம், 3ம் இடங்களை பெற்றமை பெருமைக்குரியதொன்றாகும்

செல்வன்.ஜெ.பிரதீஸ் - 189 புள்ளியைப் பெற்று 1ம் இடத்தையும்,
செல்வன்.து.யுவின் - 186 புள்ளியைப் பெற்று 2ம் இடத்தையும்,
செல்வன்.க.அஸ்வின் - 185 புள்ளியைப் பெற்று 3ம் இடத்தையும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.

இவ்வகையில் தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் ஆரம்பப்பபிரிவு கற்றல் செயற்பாடுகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்த முறையில் சாதனைகளை நிலைநாட்டி இன்று வரை திருகோணமலை மாவட்டத்தின் சிறந்த பாடசாலையாக திகழ்ந்து இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரிக்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் நிலையில் இச்சாதனைகள் மேலும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதே எம் எல்லோரது பேரவா எனக்கூறி பாடசாலையின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் என்றும் துணைநின்ற அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் யாவர்க்கும் நன்றியைத் தெரிவித்து கல்லூரியின் சித்திவிநாயகரின் அருளால் மேலும் மேலும் கல்லூரி சிறப்புற வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரியின் தோற்றம் மற்றும் வளர்ச்சி மீதான ஒரு வரலாற்றுப் பார்வை

எமது கல்லூரி 125வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் மாவட்டம், மாகாணம், தேசியம் என்ற எல்லைகளையும் தாண்டி சர்வதேச மட்டத்திலும் சாதனைகள் படைக்கும் கல்லூரியாக வளர்ச்சியடைந்து உயர்ந்து நிற்பது, கல்லூரி சார்ந்து சிந்திக்கும் அனைவருக்கும் பெருமையும் மகிழ்ச்சியும் தருவதாகும்.

இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் நம் நாட்டிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் கல்வியில் உன்னத நிலை பெற்றவர்களாகவும் பல்வேறு தொழில் முயற்சிகளில் உயர் நிலையினைப் பெற்றவர்களாகவும் இருப்பதுடன் தாம் இருக்கும் நிலையில் இருந்து கொண்டு சமூகத்துக்கும் நம் எதிர்கால சந்ததியினருக்கும் சேவையாற்றும் மனப்பாங்கையும் கொண்டிருப்பது இக்கல்லூரியின் சேவைக்கும் வளர்ச்சிக்கும் சிறந்த அடையாளமாகும்.

இக்கட்டுரையின் நோக்கம் கல்லூரி இவ்வளர்ச்சி நிலையையடைவதற்குக் கல்வி அபிவிருத்தியிலும், பௌதிக வளங்களையும் கற்றல் கற்பித்தலுக்கான வசதிகளை அதிகரித்துக் கொள்வதிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூலம் மாணவர்களின் திறன்களை வெளிக்கொணர்வதிலும், ஏனைய சமூக செயற்பாடுகளில் மாணவர் ஈடுபாட்டை அதிகரிப்பதிலும் பல்வேறு சிரமங்களின் மத்தியில் படிப்படியாக எடுத்துவைத்த பாதச் சுவடுகளை ஞாபகப்படுத்திக் கொள்வதும் எதிர்கால சந்ததியினர் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பாக சுருக்கக் குறிப்புக்களைத் தருவதுமேயாகும்.

## ❖ தோற்றமும் பின்னணியும்

ஒரு நாட்டில் அல்லது ஒரு பிரதேசத்தில் பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் தோற்றம் பெறுவதற்கான பின்னணியில் பல்வேறு காரணிகள் தூண்டுகோலாக அமைந்திருக்கும். குறித்த சமூகத்திற்கான கல்வித் தேவை, ஆட்சியாளரின் நோக்கமும் கல்விக் கொள்கையும் அதற்கான சட்டங்களும், இன, மத, மொழி கலாசார விழுமியங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவமும் செல்வாக்கும், பொருளாதார நிலை எனப் பல காரணிகளை இனங் காணலாம்.

இலங்கையின் கல்வி வரலாற்றில் போர்த்துக்கீச காலமானது கல்வியினூடாக கத்தோலிக்க சமயத்தைப் பரப்பும் நோக்குடன் சமய அடிப்படையில் மட்டும் கல்வி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையரைப் புரட்டஸ்தாந்து சமயத்திற்கு மதம் மாற்றுவதற்கும் தாம் வியாபாரத்தினூடாக சொத்துக்களைக் குவிப்பதற்கும் ஏற்றவாறு மனித வளத்தை உருவாக்கும் வாய்ப்பாக கல்வி நிறுவனங்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் ஒழுங்கமைத்திருந்தனர்.

இலங்கை பிரத்தானியரின் ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட குடியேற்ற நாடாக ஆக்கப்பட்ட பின்னரும் சமயத்தைப் பரப்பும் நோக்குடன் மிஷனரிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியுடன் பொது மக்களுக்கான கல்வி ஒழுங்கமைக்கப்பட்டது. ஒவ்வொரு ஆட்சியாளரின் காலத்திலும் உயர் கல்விக்காகவும் வேலைவாய்ப்புக்காகவும் மத மாற்றங்கள் தாராளமாக நடைபெற்றது.

19ம் நூற்றாண்டில் கிறிஸ்தவ பாடசாலைகள் நாடு பூராகவும் ஆரம்பித்து நடாத்தப் பட்டன. சுதேச சமயங்களான பௌத்த, இந்து, இஸ்லாமிய சமய மாணவர்களுக்கு தமது சமய கலாசாரங்களுடன் கல்வி பயிலும் வாய்ப்புக் கிடைக்கப் பெறவில்லை. திருக்கோணமலை நகரிலும், அதனைச் சூழவும் 1820ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட மூன்று பாடசாலைகளே காணப்பட்டன.

அரசகரும மொழியாக ஆங்கிலம் காணப்பட்டதாலும் திருக்கோணமலை சர்வதேச கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இயற்கைத் துறைமுகத்துடன் கூடியதாக அமைந் திருந்தாலும், அரச கருமங்கள், துறைமுக செயற்பாடுகள், முப்படைகளின் செயற்பாடுகள் எனப் பலவற்றிற்கும் ஆங்கில மொழித் தேர்ச்சி மிக அவசியமாகக் காணப்பட்டது. இக்காலப் பகுதியில் மிஷனரி வேலைகளுக்காக திருக்கோணமலைக்கு வருகை தந்த ஐரிஸ் நாட்டைச் சேர்ந்த அருட்தந்தை Rev. Fr Lours Mary Keatine O.M.I அவர்கள் ஆங்கிலப் பாடசாலை ஒன்றின் அவசியத்தை உணர்ந்து செயற்பட்டதன் காரணமாக ஆண்களுக்கான ஆங்கிலப் பாடசாலையாக 1867ல் புனித சூசையப்பர் கல்லூரி உருவாகியது. கத்தோலிக்க சமயத்தவர்கள் மட்டுமன்றி ஏனைய சமயத்தவர்களும் இக்கல்லூரியில் கற்றுப் பயன்பெற்றனர்.

நம் நாட்டின் கல்வி வரலாற்றில் 1867ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகளில் பின்வரும் அம்சங்கள் முக்கியம் பெற்றன.

1. திருப்திகரமாக கல்வி வழங்கக்கூடிய சமய, பொதுச்சேவை அமைப்புக்களுக்கு பாடசாலை களை ஆரம்பித்து நடாத்துவதற்கு நன்கொடை உதவிகளை வழங்குதல்.

2. ஆரம்பக்கல்வி தாய்மொழியிலும் இடைநிலைக்கல்வி உயர்கல்வி ஆகியன ஆங்கிலத்திலும் அளிக்கப்படல்.

3. கல்விப் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளுதல்.

இதுபோன்ற சாதகமான சிபாரிசுகள் காணப்பட்டமையும் 1869ல் பொதுக்கல்வித் திணைக்களம் உருவாக்கப்பட்டமையும் சமய மறுமலர்ச்சி சார்ந்து பாடசாலைகளை உருவாக்க வாய்ப்பளித்தது.

19ம் நூற்றாண்டின் இறுதி மூன்று தசாப்தங்களில் சமய மறுமலர்ச்சி காரணமாக பாடசாலைகள் உருவாக்கப்பட்டதைக் காணமுடிகின்றது. 1870களில் பௌத்த மறுமலர்ச்சியின் ஆரம்பத்துடன், நாட்டின் பல பாகங்களிலும் அரச நன்கொடை பெறும் பாடசாலையாக பௌத்த அமைப்புக்களின் பாடசாலைகள் உருவாக்கம் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமய மறுமலர்ச்சி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரை முன்னோடியாகக் கொண்டு "சைவ பரிபாலன சபை" உருவாக்கத்துடன் ஆரம்பமானது. பொன்னம்பலம் இராமநாதன் போன்றோரும் இந்துக் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டனர். இதன் பயனாக 1880ல் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் முதலாவது இந்து சமய பாடசாலை உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக நிறுவப்பட்டது. தொடர்ந்து வந்த இரு தசாப்தங்களில் நாட்டின் பல பகுதிகளிலும் இந்து சமயத்தைச் சார்ந்த மாணவ மாணவிகள் சமய கலாசார விழுமியங்களுடன் தமது கல்வியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அப்பகுதியைச் சார்ந்த அமைப்புக்கள், தனியார் குழுக்கள் போன்றவற்றினால் இந்து சமயப் பாடசாலைகள் நிறுவப்பட்டன.

திருக்கோணமலையிலும் இந்து சமய கலாசாரத்துடன் கல்வி கற்பதற்கு அக் காலத்தில் தனித்துவமான எந்தவொரு பாடசாலையும் இல்லாத நிலையே காணப்பட்டது. மிஷனரிகளால் உருவாக்கப்பட்ட கிறிஸ்த்தவ சமயப் பாடசாலைகள் மூன்று மட்டுமே நகர் மத்தியில் இயங்கின. இப் பின்னணியில் இந்து சமய கலாசாரத்துடன் கல்வி வழங்குவதற்கு ஆண்களுக்கான தனியான இந்துப் பாடசாலையை அமைப்பதன் அவசியமும் தேவையும் அக்காலத்தில் வாழ்ந்த சைவப் பெரியார்களால் அக்கறையுடன் உணரப்பட்டது. அதற்கான செயற்பாட்டின் விளைவாக 19ம் நூண்றாண்டின் இறுதியில் (1897ல்) இந்நகரில் வாழ்ந்த சில இந்துப் பெரியார்களால் ஒரு சிறிய பாடசாலையாக எமது இந்துக்கல்லூரி தோற்றம் பெற்றது.

1900 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட இந்து சமய அமைப்புக்களின் முகாமைத்துவத்தில் இயங்கிய 45 பாடசாலைகளில் ஒன்றாக எமது பாடசாலையும் அமைந்தது.

## ❖ கல்லூரியின் வளர்ச்சி பற்றிய ஒரு வரலாற்றுப் பார்வை

1897ம் ஆண்டளவில் உருவாக்கப்பட்டு இன்று 125 வருடங்களைக் கடந்து மாவட்டம், மாகாணம், தேசிய மட்டம் என்ற எல்லைகளைத் தாண்டி சர்வதேச மட்டத்திலும் புகழ் பரப்பி இன்று 2100 மாணவர்களையும், 106 ஆசிரியர்களையும், 25 கல்விசாரா ஊழியர்களையும் கொண்டு சிறப்பாக இயங்கிவரும் மதிப்பிற்குரிய எமது கல்லூரியின் வரலாற்றை மீட்டுக் கொள்வது 125வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் மிகப் பொருத்தமாக அமையும்.

கல்லூரியின் வளர்ச்சி எனும் போது மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளை வெளிக் கொணர்ந்து முழுமையான ஆளுமையுள்ளவர்களாக சமூகத்துக்கு அளிப்பதில் பாடசாலைகள் எந்தளவு வெற்றி பெற்ற பாடசாலைகளாக செயற்படுகின்றன என்பது முக்கியமாகும். இவ்வெற்றி என்பது மாணவரது ஒழுக்கம், சிறந்த பரீட்சைப் பெறுபேறுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பரந்தளவிலான ஈடுபாடும் அவற்றினது வெற்றிகளும், சிறந்த நிர்வாகக் கட்டமைப்பு, மனித வளங்களையும் பௌதிக வளங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிக்கொள்வதற்கும் அவற்றை உச்சப் பயன்பெறும் வகையில் கையாள்வதற்குமான முறைமைகளைக் கொண்டிருத்தல், சிறந்த சமூகத் தொடர்பு போன்றவற்றால் வெளிப்படுவதாக இருக்கும். அரசின் கொள்கைக்கும் சட்டவிதிகளுக்கும் உட்பட்டு, கல்லூரி நிர்வாகத்தினதும் அதிபரினதும் தூரநோக்குடனான திட்டமிடல், செயற்படுத்துதல், கட்டுப்படுத்துதல் தொடர்பான தொடர் செயற்பாடுகளும் அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையும், சிறந்த ஆசிரிய மாணவ உறவும், பெற்றோர், பழைய மாணவர்களின் ஒத்துழைப்பும் கல்வித் திணைக்களத்தின் சிறந்த தொடர்பும் வழிகாட்டலும் ஒரு கல்லூரியின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும்.

கல்லூரியின் 125 வருட கால வரலாற்றை அதன் முகாமைத்துவ ஒழுங்கில் மாற்றம் ஏற்பட்ட காலங்களின் அடிப்படையில் காலப் பிரிப்புச்செய்து, வளர்ச்சிப்போக்கினை நோக்குதல் பயனுடையதாக அமையும்.

1. 1897 - 1924 தோற்றுவித்த பெரியார்களது முகாமைத்துவக் காலம்
2. 1925 - 1961 இராமகிருஷ்ண சங்க முகாமைத்துவக்காலம்
3. 1962 - 1992 அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டபின் இரு பாடசாலைகளாக இயங்கிய காலம்.
4. தேசிய பாடசாலை உருவாக்கமும் வளர்ச்சியும் (1993 - 2022)

## 1. 1897 - 1924: தோற்றுவித்த பெரியார்களது முகாமைத்துவக் காலம்

திருக்கோணமலையில் இந்துக்களுக்கான ஆண்கள் பாடசாலையொன்றின் அவசியமும் அக்காலத்தில் ஆங்கிலக் கல்வியின் அவசியமும் உணரப்பட்ட வேளையில் சைவப் பெரியார் களால் 1897ம் ஆண்டில் ஒரு ஆரம்பப் பாடசாலையாக சிறிய கொட்டில் அமைப்பில் எமது கல்லூரி உருவானது. ஒரு பாடசாலையாக உருவான போதும் இந்து ஆண்கள் தமிழ்ப் பாடசாலை, இந்து ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை என இரு பிரிவுகளாக ஒரே நிர்வாகத்தினால் நிர்வகிக்கப்பட்டது.

இலங்கையில் முதன்முதலாக விபரமான முறையான கல்விச் சட்டம் 1920ம் ஆண்டிலேயே நிறைவேற்றப்பட்டது. 1921ம் ஆண்டில் உதவி நன்கொடை பெறும் ஆசிரியர்களுக்கு ஒரு சம்பளத் திட்டம் தயாரிக்கப்பட்டது. நாட்டின் இக்கல்வி அபிவிருத்தி வளர்ச்சிப் போக்கில் 1922ம் ஆண்டிலேயே இப்பாடசாலையை உத்தியோகபூர்வமாக ஆரம்ப பாடசாலையாக பதிவு செய்யக்கூடியதாக இருந்துள்ளது.

பாடசாலை ஆரம்பித்த பெரியோர்கள் முகாமைத்துவக் குழுவை நிறுவி, பௌதிக வளம், நிதி வளம், ஆசிரிய வளம் அனைத்தையும் அரச நன்கொடையாக கிடைக்கக்கூடியதாக இருந்த மட்டுப்படுத்தப்பட்ட உதவித் தொகையுடன், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகளின் உதவிகளையும் பெற்று சிறப்பாக நிர்வகித்துள்ளனர். அக்காலத்தில் இந்து ஆண்கள் ஆங்கிலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையிலும் இந்து ஆண்கள் தமிழ்ப் பாடசாலையிலும் கடமையாற்றிய அதிபர்கள் ஆசிரியர்களின் கடின உழைப்பு, பாடசாலைகள் தொடர்ச்சியாகவும் படிமுறையாகவும் வளர்ந்து வருவதற்கு முக்கிய பங்களிப்பாக அமைந்தது.

இக்காலப் பகுதியில் இரு பாடசாலைகளும் ஆரம்பப் பாடசாலைகளாக இயங்கியபோதும் 1921ம் ஆண்டில் ஆங்கிலப் பாடசாலையில் தரம் 6 வகுப்பு ஆரம்பிக்கப்பட்டமை கல்லூரியின் வளர்ச்சியில் முதற்படியாக அமைந்தது.

1902ம் ஆண்டில் கொழும்பில் விவேகானந்த சபை உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவிலிருந்து இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமிகள் பலரின் வருகையும் அவர்களது உரைகளும் இந்து மக்களிடையே சமயம் பற்றிய விழிப்புணர்வை விரைவாக அதிகரித்தது. இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின் வருகையும், கருத்துரைகளும், சமயப் பயிற்சி வகுப்புக்களும் தொடர்ச்சியாக நடைபெறுவதாகவமைந்தது. இத்தொடரில் 1924ம் ஆண்டு சுவாமி சர்வானந்தா அவர்கள் சுவாமி விபுலானந்தர் அவர்களுடன் திருக்கோணமலைக்கு வருகைதந்து பல சிறப்புரைகளையும் நிகழ்த்தினார்கள். இவர்களின் இந்த வருகை திருக்கோணமலையில் இந்து சமய மறுமலர்ச்சியிலும் கல்வி வளர்ச்சியிலும் சிறந்தவொரு அத்திவாரத்தை இட்டதாகக் கொள்ளலாம்.

1924ம் ஆண்டு சுவாமி விபுலானந்தருக்கு பொறுப்பளிக்கப்பட்டதற்கமைய 1925ம் ஆண்டு இராமகிருஷ்ண மிஷனுக்கான ஆச்சிரமம் தொடங்கப்பட்டமையும் முகாமைத்துவச் சபை யினரால் நிர்வகிக்கப்பட்ட இந்து ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையையும் இந்து ஆண்கள் தமிழ்ப் பாடசாலையும் இராமகிருஷ்ண மிஷன் சார்பாக சுவாமி விபுலானந்தர் அவர்களால் 01.06.1925 இல் பொறுப்பேற் கப்பட்டமையும் இக்காலப் பகுதியின் இறுதி மிக முக்கிய நிகழ்வு களாகக் கொள்ளவேண்டும்.

சைவப் பெரியார்களின் முகாமைத்துவக் காலத்தில் (28 வருடங்கள்) பல பெரியார்கள் முகாமைத்துவக் குழுவிலிருந்து சிறப்பான பங்களிப்பைச் செய்துள்ளனர். அவர்கள் அனைவரது விபரங்களும் ஒழுங்குமுறையில் திரட்ட முடியாதுள்ள போதும் பின்வருவோர் காலத்துக்குக் காலம் முகாமைத்துவக் குழுவிலிருந்து சிறப்பான பங்களிப்பை வழங்கி உள்ளமையை அறிய முடிகின்றது.

1. வழக்கறிஞர் க.வல்லிபுரம்பிள்ளை முதலியார்
2. வழக்கறிஞர் எஸ்.தியாகராஜா
3. வழக்கறிஞர் ச.விஸ்வலிங்கம்
4. திரு.இ.முருகுப்பிள்ளை (நில அளவையாளர்)
5. திரு.க.அருணாசலம்
6. திரு.எஸ்.சுப்ரமணியம் (சிறாப்பர்)
7. திரு. வைத்திலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப் பெரியார்களின் முகாமைத்துவக் காலத்தில் பின்வருவோர் தலைமை ஆசிரியர்களாக கல்லூரி வளர்ச்சிக்கு தமது சிறப்பான சேவையை நல்கியுள்ளமையை அறியக்கூடியதாக உள்ளது.

❖ இந்து ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையில் கடமையாற்றியோர்

1. திரு.ஏ.மாசிலாமணி (திருக்கோணமலை)
2. திரு.பி.வேலாயுதம்பிள்ளை (திருக்கோணமலை)
3. திரு.எஸ்.யு.கனகசபாபதி (மட்டக்களப்பு)
4. திரு.இராமகிருஷ்ண ஐயர் பி.ஏ (இந்தியா)
5. திரு.கே. கோவிந்தாச்சாரி பி.ஏ (இந்தியா)

❖ இந்து ஆண்கள் தமிழ்ப் பாடசாலையில் கடமையாற்றியோர்

1. திரு.வ.தம்மையா
2. திரு.எஸ்.ஆறுமுகம்
3. திரு.ஏ.பரமசாமி

இன்று உன்னதமான நிலையில் கல்லூரியைக் காணும் நமக்கு அன்று இவ்விருட்சத்திற்கு வித்திட்டு கல்லூரியை ஆரம்பித்து முகாமை செய்தவர்களையும் தலைமை ஆசிரியர்களாகவும், ஆசிரியர்களாகவும் பணியாற்றியவர்களையும், நிதியாகவும், பொருளாகவும், ஆதனமாகவும் அன்பளிப்புக்களை வழங்கிய வர்களையும் உளமார மதித்துப் பாராட்டி நன்றி செலுத்த வேண்டியது தலையாய கடமையாகின்றது.

## 2. 1925 - 1961 : இராமகிருஷ்ண சங்க முகாமைத்துவக்காலம்.

1925ம் ஆண்டில் முறையாக அமைக்கப்பட்ட முதலாவது இராமகிருஷ்ண மிஷனுக்கான ஆச்சிரமம் ஒன்று திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் அமைந்தது. பெரியார் வல்லிபுரம்பிள்ளை முதலியார் தலைமையிலான முகாமைத்துவக் குழுவினரின் தீர்மானத்திற்கமைய இரு பாடசாலைகளும் இராமகிருஷ்ண மிஷன் சார்பாக 01.06.1925ல் சுவாமி விபுலானந்தர் அடிகளாரால் பொறுப்பேற்கப்பட்டது. இந்நிகழ்வுகள் கல்லூரியின் வரலாற்றிலும் திருக்கோணமலை மாவட்ட வரலாற்றிலும் மட்டுமன்றி வடக்குக் கிழக்கின் பல பாகங்களிலும் இந்து சமய மறுமலர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும், எதிர்கால சிறந்த செயற்பாடுகளுக்கும் அடித்தளமிட்டு வழிகாட்டிய நிகழ்வுகளாக அமைந்தன.

### ❖ கோணேஸ்வர வித்தியாலய நாமம்

சுவாமி விபுலானந்த அடிகளார் அவர்கள் மிஷன் சார்பாக முகாமைத்துவப் பொறுப்பேற்ற போது இரு பாடசாலைகளும் ஒரே வளாகத்திலேயே இயங்கின. பாடசாலையின் எதிர்கால வளர்ச்சியைக்கருதி சுவாமி அவர்கள் பாடசாலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிக்கு அருகிலுள்ள "தம்பர்" வளவை விலைக்கு வாங்கியதுடன் அதில் புதிய கட்டிடங்களையும் அமைத்தார். காணியைக் கொள்வனவு செய்வதற்கு அக்காலத்தில் பதிவாளராக இருந்த திரு.வயித்திலிங்கம் எனும் அன்பர் பணத்தைக் கடனாக வழங்கியுள்ளார்.

நன்கொடைகளைப் பெற்று அமைக்கப்பட்ட கட்டிடத்தில் ஒன்றை இந்து ஆண்கள் தமிழ்ப் பாடசாலைக்கு வழங்கி கோணேஸ்வரா வித்தியாலயம் எனும் பெயரையும் சூட்டினார்.

இராமகிருஷ்ண மிஷன் பொறுப்பேற்றபோது தலைமை ஆசிரியராக கடமையாற்றிய திரு.பரமசாமி அவர்களைத் தொடர்ந்து ஆரப்பற்றையைச் சேர்ந்த பண்டிதர் திரு.செ.பூபாலபிள்ளை அவர்களும், மட்டக்களப்பு காரைதீவைச் சேர்ந்த திரு.கே.கணபதிப்பிள்ளை அவர்களும், தலைமை ஆசிரியர்களாக பாடசாலையின் வளர்ச்சிக்கு தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

1929ம் ஆண்டில் திருக்கோணமலையைச் சேர்ந்தவரும் தமிழ், ஆங்கிலப் பாடசாலைகளின் பழைய மாணவருமான ஸ்ரீ.சு.கு.குமாரசாமி ஐயர் அவர்கள் தலைமை ஆசிரியராக பொறுப்பு ஏற்றார். கோணேஸ்வரா வித்தியாலயத்தின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் இணைப் பாடவிதான செயற்பாடுகளும் ஒழுக்கக் கட்டுப்பாட்டு நடைமுறைகளும் இக்காலத்தல் சிறப்பாகக் பேணப்பட்டதனை அறியமுடிகின்றது.

1932ம் ஆண்டில் முதன்முறையாக சுயபாஷை பாடசாலைகளுக்கான தரம் 8 வகுப்புக்கான பரீட்சையில் மாணவர்கள் இருவர் சித்தியடைந்தனர். 1932ம் ஆண்டில் நாட்டின் கல்வி முறையில் செயற்படுத்திப் பார்க்கப்பட்ட தரம் 6 தொடக்கம் வாழ்க்கையோடு இணைந்த செயலான கிராமியக் கல்விமுறைத் திட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்டு பல போட்டிகளில் முன்னிலைப் பரிசுகளையும் மாணவர்கள் பெற்றனர்.

1933ம் ஆண்டில் உயர்தரப் பாடசாலையாகவும் தரமுயர்த்தப்பட்டு சிரேஷ்ட தராதர வகுப்புக்களிலும் மாணவர்கள் கற்று சித்தியடைந்தனர். 1930 களின் இறுதி வரை பாடசாலையின் வளர்ச்சி கல்விச் செயற்பாடுகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் துரித வளர்ச்சி கண்டது.

1942 - 45 காலப்பகுதியில் உலக மகா யுத்தம் காரணமாக வித்தியாலயத்தின் செயற்பாடுகள் முழுமையாக முடங்கியது. படிப்படியான ஐந்து தசாப்த வளர்ச்சி பின்தள்ளப்பட்டது. எனினும், சுவாமி விபுலானந்தரது அக்கறையான செயற்பாட்டினால் 3 பிள்ளைகளுடனும், ஒரு ஆசிரியருடனும் பிரதான வீதியிலுள்ள தனியார் வீடொன்றில் மீண்டும் கற்றல் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு 1943ல் வித்தியாலயம் வீதியிலுள்ள வேறு வீடொன்றிற்கு மாற்றப்பட்டது. சுவாமி அவர்களது விடாமுயற்சியால் 1946ல் படையினரின் பாவனையிலிருந்த பாடசாலைக் கட்டிடம் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் பாடசாலையின் செயற்பாடுகள் உரிய இடத்தில் ஆரம்பமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்கல்லூரியும், கோணேஸ்வரா வித்தியாலயமும் மிஷனுடைய ஒரே நிர்வாகத்தின் கீழ் இருந்ததாலும் யுத்தகாலப் பாதிப்பைத் தொடர்ந்து கல்வியில் மீள் எழுச்சி பெறவேண்டிய அவசியநிலை காணப்பட்டதாலும் முகாமையின் தீர்மானத்திற்கமைய 1949ம் ஆண்டு முதல் கோணேஸ்வரா வித்தியாலயம் தரம் 3 வரையான ஆரம்பப் பாடசாலையாக மாற்றப்பட்டது. தரம் 4 உம் அதற்கு மேலுமான வகுப்பு அனுமதிகள் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இம்மாற்றத்தின் காரணமாக 1952ம் ஆண்டில் 375 ஆக காணப்பட்ட மாணவர் எண்ணிக்கை 1957ம் ஆண்டில் 235 ஆகக் குறைவடைந்தது. யுத்தகால அழிவுகள், இடம்பெயர்வுகள் மீளுருவாக்கம் என பல கஸ்டமான காலப் பகுதியிலும் தன்னால் வழிநடத்தப்பட்ட பாடசாலையை தரக்குறைவின்றி வளர்ச்சியடையச் செய்வதில் அதிபர் ஸ்ரீ.சு.கு.குமாரசுவாமி ஐயர் அவர்கள் தளர்வின்றி அர்ப்பணிப்பான பணியை ஆற்றிக்கொண்டிருந்தார்.

1959 ஆகஸ்ட் 30 வரையான 30 வருட நீண்ட கால தலைமை ஆசிரிய சேவையை சிறப்பாக ஆற்றிய நிலையில் பதவிக் காலத்திலேயே அவர் இயற்கை எய்தியமை கல்லூரி வளர்ச்சி பற்றி வரலாற்றில் ஓர் சோக நிகழ்வாக அமைந்தது.

1959ம் ஆண்டின் பிற்பகுதியில் வித்தியாலயத்தின் தலைமை ஆசிரியராக திரு.இ.செல்லத்துரை அவர்கள் (பண்டிதர் வடிவேல்) பொறுப்பேற்றதைத் தொடர்ந்து கோணேஸ்வரா வித்தியாலயம் கல்வியிலும் சமய கலாசார ஒழுக்கநெறிகளைப் பேணுவதிலும் தரமான சிறந்த ஆரம்பப் பாடசாலையாக வளர்ச்சிப் பாதையில் சென்றது.

## ❖ இ.கி.மி. இந்துக்கல்லூரி.

01.06.1925ல் இந்து ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை இராமகிருஷ்ண மிஷனுக்குக் கையளிக்கப்பட்டபோது அதில் ஆரம்பப் பிரிவுக்கு மேலாக இடைநிலைப் பிரிவு வகுப்புக்களும் தரம் 6ல் ஆரம்பித்து வளர்ச்சியடையும் நிலை காணப்பட்டது. இந்நிலையில் இராமகிருஷ்ண மிஷன் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து வந்த காலத்தில் கல்லூரியின் பெயர் தி/இ.கி.மி இந்துக்கல்லூரி என மாற்றம்பெற்றது.

மொழி, சமயம், விஞ்ஞானம், கணிதம், இசை எனப் பல துறைகளிலும் புலமை கொண்ட ஞானியும் நல் ஆசானுமான சுவாமி விபுலானந்த அடிகளார் தனது சமயப் பணியையும் கல்விப் பணியையும் எமது கல்லூரி மூலம் ஆரம்பிப்பதற்குக் கிடைத்த வாய்ப்பு நாம் பெற்ற பெரும்பேறாகும். அன்று அரும்பணிகளாலும், அருளாசிகளாலும் இடப்பட்ட அடித்தளம் இன்றும் நாம் அரும்செயற்பாடுகளை சிறப்பாக நிறைவேற்றி முன்னிலையில் சென்றுகொண்டிருப்பதற்கு வழிகாட்டலாக அமைவதை உணர முடிகின்றது.

சுவாமி அவர்களின் தூரநோக்குடனானதும் வேகமானதுமான கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர் மத்தியில் ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தியது. கல்வியின் பாலும் இந்து சமய ஒழுக்க விழுமியங்களின்பாலும் மாணவர்களும் பெற்றோரும் ஈர்க்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1928ம் ஆண்டில் விபுலானந்த அடிகளார் இந்து ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையின் அதிபர் பதவியையும் பொறுப்பேற்று கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும் நிர்வாகச் செயற்பாடுகளிலும் சிறந்த முன்னுதாரணத்தை வழங்கினார். கல்லூரி விரைவான வளர்ச்சிப் பாதையில் செல்ல ஆரம்பித்தது. எதிர்கால அதிபர் ஆசிரியர்களுக்குச் சிறந்த வழிகாட்டல் கிடைத்தது.

சுவாமி அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் விஞ்ஞானம், கணிதம், மொழி, சமயம் போன்ற பாடங்களைக் கற்பித்து ஏனைய ஆசிரியர்களுக்கு சிறந்த கற்பித்தலுக்கு வழிகாட்டியுள்ளார். இச்செயற்பாடு இக்கல்லூரியின் வளர்ச்சியில் எப்போதும் ஓர் உந்து சக்தியாக அமைந்துள்ளது.

1925ம் ஆண்டில் தமிழ்ப் பாடசாலை, ஆங்கிலப் பாடசாலை இரண்டிற்கும் ஒவ்வொரு கட்டிடங்களே காணப்பட்டன. மாணவருக்கான இடவசதியும் பற்றாக் குறையாகவே காணப்பட்டது. சுவாமி அவர்கள் கல்வியில் ஆர்வமுள்ள சில இளைஞர்களையும் அரவணைத்து சிறந்த சேவையை ஆற்றினார். இதன் பயனாக பெற்றோர், நலன்விரும்பிகளும் கல்லூரிக்கு உதவ முன்வந்தனர். சுவாமி அவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர், நலன்விரும்பிகளிடம் நிதியைத் திரட்டி பெரிய மண்டபம் ஒன்றை அமைத்து 1928ம் ஆண்டில் திறந்து வைத்தனர். இதற்கான நிதிப்பங்களிப்பில் கணிசமான பங்கு தம்பலகாமத்தைச் சேர்ந்த திரு.காளியப்பு என்பவரால் வழங்கப்பட்டதனால் அம்மண்டபத்திற்குக் காளியப்பு மண்டபம் எனப் பெயர் சூட்டப்பட்டது.

1933ம் ஆண்டில் பி.கே.சம்பந்தர் அவர்களது ஞாபகார்த்தமாக அவர்களின் குடும்பத்தாரது அன்பளிப்பாக "சம்பந்தர் மண்டபம்" எனும் பெயரில் பெரிய ஒன்றுகூடல் மண்டபம் ஒன்று கட்டப்பட்டு கல்லூரிக்குக் கையளிக்கப்பட்டது. இம்மண்டபம் 1996ம் ஆண்டில் இடிக்கப்படும் வரை கல்லூரி விழாக்கள், கூட்டங்கள் நடைபெறும் ஒரு மண்டபமாகவும் தேவைக்கேற்ப வகுப்பறையாகவும் பயன்பட்டது. கல்லூரிக்கு மட்டுமன்றி திருக்கோணமலைச் சமூகத்தின் பலதரப்பட்ட தேவைகளுக்கும் பயன்படும் மண்டபமாக இது அமைந்திருந்தது.

சுவாமி விபுலானந்தர் அவர்கள் கல்லூரியைத் தரம் உயர்த்துவதற்காக பெரும் முயற்சி எடுத்தபோது விஞ்ஞான ஆய்வுகூடமில்லாத குறை அம்முயற்சியை தாமதித்தது. இந்நிலையில் ஆய்வுகூடம் அமைப்பதற்கான நிதியாக ரூ. 10,000/= கொறுக்காயன் சின்னத்தம்பி என்பவரால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

திருக்கோணமலையில் வேறு எந்தப் பாடசாலையிலும் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் இல்லாத காலத்தில் சுவாமி விபுலானந்தர் அவர்களின் முகாமையின் கீழ் இந்துக் கல்லூரியில் சிறந்த வசதிகளுடனான ஆய்வுகூடங்கள் நிறுவப்பட்டன. 1934ல் கல்லூரி சிரேஷ்ட இடைநிலைத் தரத்திற்குத் தரம் உயர்த்தப்பட்டது. சுவாமி அவர்கள் செய்முறைக் கற்பித்தலுக்கு மிக முக்கியத்துவம் கொடுத்ததுடன் அவரது முகாமையின் மேற்பார்வையிலும் செய்முறைக்கான கவனம் கூடுதலாக செலுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1947ம் ஆண்டில் L.H. ஹரிதாச என்பவரால் அவரின் தந்தையின் (நொரிஸ் டி சில்வா) ஞாபகார்த்தமாக நூலகத்திற்கான கட்டிடம் ஒன்று அமைத்து கொடுக்கப்பட்டது.

1949ம் ஆண்டு கோணேஸ்வரா வித்தியாலயம் தனியாக ஆரம்பப் பிரிவுக்கு உரியதாகவும் இந்துக்கல்லூரி கனிஷ்ட, இடைநிலை, சிரேஸ்ட இடைநிலைக் கல்விக்குரியதாகவும் முகாமையினால் ஒழுங்கமைக்கப்பட்டது. 1952ம் ஆண்டில் இந்துக்கல்லூரி தரம் I நிலைக்குத் தரம் உயர்த்தப்பட்டதுடன் ஆய்வுகூடங்களும் தரமுயர்த்தப்பட்டு புனரமைக்கப்பட்டன.

இராமகிருஷ்ண மிஷன் நிர்வாகத்தில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் காணப்பட்ட இறுக்கமான மேற்பார்வைச் செயற்பாடுகளும், சமய ஈடுபாட்டு நெறிமுறையுடனான மாணவர்களுக்கான கல்வியும் பெறுபேறுகளில் காணப்பட்ட படிமுறை வளர்ச்சியும், மாணவர்களை இந்துக் கல்லூரியின்பால் ஈர்த்துக்கொண்டது.

மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வகுப்பறைப் பற்றாக்குறை காணப்பட்ட நிலையில் 1934ம் ஆண்டு இக்கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றிய திரு.S.அம்பலவாணர் அவர்கள் 03.04.1954ல் அதிபர் பொறுப்பை ஏற்றார். அதிபர் அவர்கள், பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகளின் உதவியைப் பெற்று கல்லூரியின் 1வது இரண்டு மாடிக் கட்டிடத்தை அமைப்பதற்கான திட்டத்தை வகுத்து 1955ம் ஆண்டில் அதன் தளமாடி வேலைகள் பூரணப்படுத்தப்பட்டதுடன் 1958ம் ஆண்டில் மாடிக் கட்டிடம் முழுமையாக பூரணப்படுத்தப்பட்டு திறக்கப்பட்டது. (தற்போதுள்ள அம்பலவாணர் அகமானது இராமகிருஷ்ண மிஷன் முகாமைத்துவக் காலக் கட்டிடங்களில் எஞ்சியுள்ள ஒரே கட்டிடமாகும்)

அரசாங்கத்தின் ஆதரவுபெற்ற ஆங்கிலப் பாடசாலைகளே முன்னணியில் அதிகம் செயற்பட்ட அக்காலத்தில் பல்வேறு விழாக்களும், சமய கலாச்சார நிகழ்வுகளும் பண்பாட்டு விழுமியங்களைப் பேணும் வகையில் நடைபெற்றன. பாடசாலைகளுக் கிடையில் நடைபெறும் போட்டிகளிலும் முன்னிலையான வெற்றிகளை மாணவர் பெற்றுக்கொண்டனர்.

இராமகிருஷ்ண மிஷன் முகாமைத்துவ காலத்தின் இறுதிப் பகுதியிலேயே (1961) க.பொ.த.உயர்தர வகுப்பு கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் இக்கல்லூரியில் கனிஷ்ட தராதரப் பத்திரம், க.பொ.த.சாதாரண தரம் கற்றவர்கள் பலர் பல்கலைக் கழகங்களுக்கும், வேறு உயர்கல்வி நிறுவனங்களுக்குமான புகுமுகப் பரீட்சைகளுக்குத் தோற்றி உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் பட்டப் படிப்புக்களை மேற்கொண்டு சட்டத்தரணிகளாகவும் பொறியியலாளர்கள், மருத்துவர்கள், நிர்வாக உயர் உத்தியோகத்தர்கள், கணக்காளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பல துறைகளில் தகைமைபெற்று சமூகத்தில் சிறந்த சேவையாளராகத் திகழ்ந்துள்ளனர். மிஷன் கால கல்வி வளர்ச்சிக்கு இவர்களின் சாதனைகள் சான்றாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப் பெரியார்கள் பாடசாலையை ஆரம்பித்த போது இப்பகுதி வெற்றிலைத் தோட்ட செய்கை நிலங்களைச் சூழ்ந்து காணப்பட்டதாக அறியப்படுகின்றபோதும் பாடசாலை அமைப்பதற்கான காணி யாரால் வழங்கப்பட்டது அல்லது எவ்வாறு பெறப்பட்டது என்ற விடயம் ஆதாரபூர்வமாக மேலும் அறிய வேண்டியதாகவுள்ளது.

இந்து ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை இந்து ஆண்கள் தமிழ்ப் பாடசாலை என இரு பிரிவுகளாக 1925ம் ஆண்டில் இராமகிருஷ்ண மிஷனுக்காக இரு பாடசாலைகளும் சுவாமி விபுலானந்தர் அவர்களால் பொறுப்பேற்கப்பட்ட போதும் இவற்றின் காணி, கட்டிடம் தொடர்பான சரியான தரவு விபரங்களுக்கான தகவல் கிடைக்கக்கூடியதாக காணப்படவில்லை.

தனியார் பாடசாலைகளை அரச பாடசாலைகளாக சுவீகரிக்கும் சட்டத்திற்கு அமைவாக 1962.03.28ம் திகதிய வர்த்தமானியில் இரு பாடசாலைகளும் தனித்தனியாக காட்டப்பட்டுள்ள போதும் இராமகிருஷ்ண மிஷனிடமிருந்து சுவீகரித்த இப்பாடசாலைகளின் சொத்து விபரங்கள் மொத்தமாக 2 றூட் 7 பேர்ச் காணியும் கட்டிடங்களும் மைதானத்தில் 2.96 ஹெக்ரயர் (7.3 ஏக்கர்) காணியும் அதற்கான அமைவிட விளக்கமும் அளிக்கப்பட்டிருந்தது.

மேற்படி வர்த்தமானி அறிவித்தல் தகவலே இப்பாடசாலைகளின் பயன்பாட்டிலிருந்த காணியின் அளவையும் மைதானத்தில் பாடசாலைக்குரிய பகுதியையும் வரையறுத்துவிஸ்தீரணத்துடன் வெளிப்படுத்திய தகவலாக அமைந்தது. எனினும், அதில் அமைந்திருந்த கட்டிட விபரங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் கல்லூரியின் பௌதிகவள வளர்ச்சிப்போக்கை சுவீகரிப்புக் காலம் வரை அறிந்து கொள்ளலாம்.

1897 - ஆரம்பத்தித்த போது அமைத்துக்கொண்ட இரு பிரிவுகளுக்குமான சிறிய வகுப்பறை அமைப்புக்கள் பின்னர் இவை கட்டிட அமைப்புக்களாக மாற்றப்பட்டன

1928 - காளியப்பு மண்டபம் அமைக்கப்பட்டது. (சுவாமி விபுலானந்த அடிகளாரின் முயற்சியால் பெற்றோர், நலன்விரும்பிகளின் நிதியில்)

1933 - சம்பந்தர் மண்டபம் அமைக்கப்பட்டது. (திரு.பி.கே.சம்பந்தர் அவர்கள் நினைவாக, அவர்களின் குடும்பத்தினரால் கட்டி அன்பளிப்பாக வழங்கப்பட்டது)

1942 - பழைய மாணவர் சங்கத்தினரால் கட்டிக் கையளிக்கப்பட்ட இரு வகுப்பறைகள்.

1947 - நொரிஸ் டி சில்வா அவர்களின் நினைவாக திரு.எல்.எச்.ஹரிதாச அவர்களால் அமைத்துக் கையளிக்கப்பட்ட நூலகக் கட்டிடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1952 - பாட ரீதியாக அமைந்த சிறந்த தரத்திலானதும் உரிய உபகரண வசதிகளைக் கொண்டதுமான ஆய்வுகூடங்கள். (ஏற்கனவே கட்டப்பட்டு, 1952ல் புனரமைக்கப்பட்டவை)

1958 - அதிபர் அம்பலவாணரது அயராத முயற்சியால் கல்லூரியில் அமைக்கப்பட்ட முதலாவது மாடிக்கட்டிடம் (தற்போதுள்ள அம்பலவாணர் அகம்)
தென்னை ஓலையால் வேயப்பட்ட மண்டபம் (தற்போது நடராஜானந்தா அகம் உள்ள இடத்தில்)
அதிபர் விடுதிக் கட்டிடம் (இது பின்னர் அதிபர் அலுவலகமாகவும் பயன்படுத்தப்பட்டது)
பொது மைதானத்தில் கல்லூரிக்கான 7.3 ஏக்கர் காணி

1962ல் அரசால் சுவீகரிக்கப்பட்ட போது காணப்பட்ட மேற்கண்ட கட்டிட அமைப்புக்களில் அம்பலவாணர் அகம் தவிர்ந்த எந்தக் கட்டிடமும் நம் கண் முன்னில்லை. இடப் பற்றாக்குறை காரணமாகவும் சிறந்த அமைப்புத் தேவை கருதியும் அவை அகற்றப்பட்டு புதிய ஒழுங்கில் மாடிக் கட்டிடங்களாக நம்முன் காட்சி தருகின்றன. எனினும், இராமகிருஷ்ண சங்க முகாமைத்துவக் காலமான 37 வருடங்களில் ஞாபகார்த்த அன்பளிப்பாகவும் பொதுமக்களிடம் நிதி திரட்டல் மூலமும் இக்கட்டிடங்கள் அனைத்தும் அமையப் பெற்றுள்ளமை அக்கால முகாமையாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் ஆகியோரின் கடுமையான முயற்சிக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

1955ம் ஆண்டில் நிலாவெளியைச் சேர்ந்த திரு.எஸ்.கணபதிப்பிள்ளை அவர்களால் வருமானத்தைக் கல்லூரிக்குப் பயன்படுத்தக்கூடிய வகையில் கடைத்தொகுதி ஒன்று இராமகிருஷ்ண மிஷனுக்குக் கையளிக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட இன வன்செயலின் போது பிற இனத்தவரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் மிஷனால் அச்சொத்து விற்கப்பட்டு, திறைசேரி உண்டியலில் முதலிடப்பட்டு அந்த வருமானம் கல்லூரிக்கு இன்றும் பயன்படுவது கல்லூரியின் தொடர்ச்சியான வளர்ச்சியில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையினதும் அவர்கள் காட்டிய அக்கறையினதும் வெளிப்பாடாகவும் அமைகின்றது.

## 1. 1962 - 1992 : அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட பின் இரு பாடசாலைகளாக இயங்கிய காலம்

இராமகிருஷ்ண மிஷன் முகாமைக் காலத்தில் மிஷனின் முகாமைத் தீர்மானத்திற்கு அமைய 1949ம் ஆண்டிலிருந்து தரம் 3 வரையான ஆரம்பப்பிரிவு வகுப்புக்களைக் கொண்ட ஒரு ஆரம்பப் பாடசாலையாக கோணேஸ்வரா வித்தியாலயம் மாற்றப்பட்டது.

இந்துக் கல்லூரியானது தரம் 4 தொடக்கம் கனிஷ்ட, சிரேஸ்ட இடைநிலை வகுப்புக் களைக் கொண்டதாக இயங்கி 1952ல் தரம் I நிலைக்கு உயர்த்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1962ம் ஆண்டில் தனித்தனிப் பாடசாலையாக அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்படும் வரை கோணேஸ்வரா வித்தியாலத்தில் தரம் 3 வரை கற்கும் மாணவர்கள் தொடர்ந்து இந்துக் கல்லூரியில் தரம் 4 தொடக்கம் கல்வியைத் தொடரும் நடைமுறையே காணப்பட்டது. சுவீகரிப்பினைத் தொடர்ந்து பாடசாலை நிர்வாகத் தீர்மானத்திற்கமையவும் திணைக்கள அனுமதிக்கமையவும் மேற்கண்ட நடைமுறை மாற்றமடைந்தது.

## தி/கோணேஸ்வரா வித்தியாலயத்தின் மீள் எழுச்சி.

1949ம் ஆண்டு தரம் 3 வகுப்புடன் வரையறுக்கப்பட்டிருந்த கல்வி நிலையை படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்தமையை கீழ்வரும் குறிப்புக்கள் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

- ❖ 1962ம் ஆண்டு மீண்டும் தரம் 4 வகுப்பு ஆரம்பிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து தரம் 5 வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டு முழுமையான ஆரம்பப்பிரிவு உருவாக்கப்பட்டது.
- ❖ 1965.06.17ம் திகதி கல்வித் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வமாக தி/ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- ❖ 1968: அரச பாடசாலையாக சுவீகரிக்கப்பட்ட பின் தரம் 6 வகுப்பு ஆரம்பிக்கப்பட்டதுடன் கனிஷ்ட இடைநிலைக்கு கால்பதித்தது.
- ❖ 1971 : தரம் 8 வரையுமான வகுப்புக்கள் உருவாக்கப்பட்டன.
- ❖ 1975 - 1976

1972ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டப்படி 1975ல் தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சைக்கு (N.C.G..E) 29 மாணவர்கள் தோற்றி 18 மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்று உயர்தரத்திற்கு (H.N.C.E) தகுதி பெற்றனர். 1976ம் ஆண்டிலும் 55 மாணவர்கள் தோற்றி 29 மாணவர்கள் உயர்தரத்திற்குத் தகுதி பெற்றனர்.

இரு வருடங்களிலும் உயர்தரத்திற்குத் தகுதிபெற்ற மாணவர்கள் இந்துக் கல்லூரியில் H.N.C.E வகுப்பில் உயர் கல்வியை ஆரம்பித்த போதும் இப்புதிய கல்வித்திட்டம் கைவிடப் பட்டதனால் க.பொ.த.உயர்தரத்தின் இடைக்காலப் பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதற்கு அமைய உயர்கல்வியைத் தொடர்ந்தனர்.

### ❖ 1978:

தி/ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து முதற் தடவையாக க.பொ.த(சா/த) பரீட்சைக்கு 32 மாணவர்கள் தோற்றி 17 மாணவர்கள் சித்தியடைந்ததுடன் 16 பேர் உயர்தரத்திற்குத் தகுதிபெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993ம் ஆண்டில் தேசிய பாடசாலை உருவாக்கப்படும்வரை மாவட்டத்தில் முன்னிலைப் பெறுபேற்றைப் பெறும் பாடசாலை ஒன்றாக கோணேஸ்வரா வித்தியாலயம் திகழ்ந்தது. பின்வரும் அட்டவணை இதனை வெளிப்படுத்தும். (முதற் தடவை தோற்றிய மாணவர் அடிப்படையில்)

| ஆண்டு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | | க.பொ.த. உயர்தரத்திற்கு தகைமை பெற்றோர் | | உச்சப் பெறுபேறு 8D |
|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | வீதம் | எண்ணிக்கை | வீதம் | |
| 1978 | 32 | 17 | 53.1 | 16 | 50.0 | |
| 1979 | 49 | 21 | 42.9 | 15 | 30.6 | |
| 1980 | 41 | 12 | 29.3 | 09 | 22.0 | |
| 1981 | 19 | 04 | 21.1 | 04 | 21.1 | |
| 1982 | 22 | 19 | 86.4 | 14 | 63.6 | |
| 1983 | 49 | 26 | 53.1 | 26 | 53.1 | |
| 1984 | 26 | 17 | 65.4 | 17 | 65.4 | |
| 1985 | 36 | 18 | 50.0 | 23 | 63.8 | |
| 1986 | 36 | 21 | 58.3 | 20 | 55.0 | |
| 1987 | 38 | 22 | 57.9 | 26 | 68.4 | 01 |
| 1988 | 25 | 17 | 68.0 | 14 | 56.0 | |
| 1989 | 30 | 22 | 73.3 | 21 | 70.0 | |
| 1990 | 21 | 16 | 76.2 | 15 | 71.4 | |
| 1991 | 48 | 40 | 83.3 | 40 | 83.3 | |
| 1992 | 54 | 39 | 72.2 | 44 | 81.5 | 01 |

கோணேஸ்வரா வித்தியாலயத்தின் க.பொ.த (சா/த)ப் பரீட்சையின் சிறந்த பெறுபேறுகள் இந்துக் கல்லூரியின் க.பொ.த (உ/த) வகுப்பு அனுமதிக்கும் சிறந்த ஊட்டத்தைக் கொடுப்பதாக அமைந்திருந்தது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையிலும் மாவட்ட மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் சாதனை படைக்கும் பாடசாலையாக கோணேஸ்வரா வித்தியாலயம் வளர்ச்சி கண்டு முதன்மை நிலையில் நிகழ்ந்தது.

மேற்கண்ட பெறுபேற்றுச் சாதனைகளுடன் ஆரம்பக் கல்வி நிலையிலும் இடைநிலைக் கல்வி நிலையிலும் தி/ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயம் மாவட்டத்திலும் தேசிய மட்டத்திலும் சாதனை படைத்து முன்னிலையில் திகழ்ந்தமை பாராட்டுக்குரியதும் மகிழ்ச்சிக்குரியதுமாகும். இடைநிலைக் கல்வியில் கால் பதித்து முதல் தசாப்தத்தில் க.பொ.த(சாத) பரீட்சைக்குத் தோற்றி தொடர்ந்த தசாப்பத்தில் தொடர்ச்சியாக மாவட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் நிலைக்கு உயர்வடையக் காரணமான மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர், பெற்றோர்கள் என அனைவரும் கல்லூரியின் வரலாற்றில் பாராட்டுக்குரியவர்கள்.

## ❖ இணைப்பாடவிதான செயற்பாடுகள்

இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூலம் மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட வாய்ப்புக்களும் அதில் கிடைக்கப்பெற்ற வெற்றிகளும் மாணவர்களது ஆக்கத்திறன்களும் குழு நிலையில் அவர்களது செயற்பாடுகளும் ஆசிரியர், பெற்றோர் மற்றும் சமூகத் தொடர்பும் இக்காலத்தில் மிக்க வளர்ச்சியடைந்ததை பின்வரும் செயற்பாட்டு நிகழ்வுகள் வெளிக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1970 களிலிருந்து இல்ல விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக ஒழுங்கமைத்து நடைபெற்றமை. மாவட்ட மட்ட, தேசிய மட்ட போட்டிகளில் மாணவர் பங்குபற்றியமையும் வெற்றி பெற்றமையும்.

- மாவட்டத்தில் பல பகுதிகளுக்கும் கற்றலுக்கான கள விஜயங்களும், மாவட்டத்திற்கு வெளியில் ஒழுங்கமைக்கப்பட்ட கல்விச் சுற்றுலாக்கள் மூலம் மாணவர்களுக்கு அனுபவக் கற்றலுக்கான வாய்ப்புக்களும் அதிகரிக்கப்பட்டமை.

- தமிழ் மொழித்தினம், ஆங்கில மொழித்தினம் ஆகியன பெரும்பாலான ஆண்டுகளில் கல்வித் திணைக்கள அதிகாரிகளாலும் பெற்றோராலும் சிறப்பித்துக் கூறக்கூடிய வகையில் ஒழுங்கமைக்கப்பட்டு மாணவருக்கு வாய்ப்பளித்தமை.

- ஆண்டுதோறும் நவராத்திரிப் பூஜை, காளி கோயில் மஞ்சத் திருவிழா, பெரியார்களுக்கான விழாக்கள் போன்ற சமய கலாசார நிகழ்வுகளில் மாணவருக்கு வாய்ப்பளித்தல்.

- சாரணர், குருளைச் சாரணர் பாசறைகள் மூலம் சமூக உணர்வுகளை மாணவர் மத்தியில் வளர்ப்பதற்கு சந்தர்ப்பங்களை வழங்கியமை.

- இக்காலத்தில் அவ்வப்போது நடாத்தப்பட்ட பரிசளிப்பு விழாக்களும் அது தொடர்பான நிகழ்ச்சிகளும் மாணவர்களுக்கு சிறந்த வாய்ப்புக்களை அளித்ததுடன் சமூகத்தில் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. இது மாணவரின் கற்றலிலும் பெற்றோரின் செயற்பாட்டிலும் உந்துசக்தியாக அமைந்தது.

## பௌதிகவள அபிவிருத்தி

இக்காலப் பகுதியில் கோணேஸ்வரா வித்தியாலயம் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியையும் சாதனைகளையும் வெளிப்படுத்தி நின்ற நிலையில் பாடசாலையின் இடப் பற்றாக்குறையும் வகுப்பறைக் கட்டிடங்களுக்கான பற்றாக்குறையும் உச்சப் பிரச்சினையாக காணப்பட்டது. விசேட பாடங்களைக் கற்பிப்பதற்கான வகுப்பறைகள், விஞ்ஞான ஆய்வுகூடம், கூட்ட மண்டபம், சிற்றுண்டிச்சாலை, நூலகம், மலசலகூடம் போன்ற பாடசாலையின் அவசிய பௌதிக வசதிகளைத் தேடிக்கொள்வதில் வித்தியாலய அதிபர்களும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொண்ட போதும் நிலப் பற்றாக்குறை காரணமாக அவற்றை உடன் தீர்த்துக்கொள்ள முடியவில்லை. காலைக்கூட்ட நிகழ்வினைக்கூட அனைத்து மாணவர்களுக்கும் ஒழுங்குபடுத்துவதற்கு முடியாதவாறு இடப்பற்றாக்குறை காணப்பட்டது. 1962ல் 350 ஐ அண்மித்ததாக இருந்த மாணவர் எண்ணிக்கை 1990ல் 700 ஐக் கடந்தபோதும் இம்மாணவ அதிகரிப்புக்கேற்ப பௌதிகவள வசதிகளை மாணவருக்கு வழங்கமுடியாது இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கஷ்டமான நிலையிலேயே பல்வேறு கற்றல் பெறுபேற்றுச் சாதனைகளும் இணைப்பாடவிதான செயற்பாட்டுச் சாதனைகளும் புரியப்பட்டுள்ளமை அக்காலத்தில் அனைவரதும் பாராட்டுக்குரியதாக அமைந்தது.

வகுப்பறைப் பற்றாக்குறைக்கு எடுக்கப்பட்ட தற்காலிக தீர்வுகளும் தீர்மானங்களும் இப் பற்றாக்குறையின் தீவிரத் தன்மையை வெளிக்காட்டும்.

- ❖ 1971ல் இந்துக் கல்லூரியின் வகுப்பறைகளைப் பயன்படுத்தியமை.
- ❖ இடப்பற்றாக்குறைக்குத் தீர்வாக 1971ல் இடைநிலை வகுப்புக்களை தரம் 6, 7, 8 வகுப்புக்களை இந்துக் கல்லூரிக்கு மாற்றி ஆரம்பப் பாடசாலையாக மாற்றுவதற்கு வட்டாரக்கல்வி அதிகாரி அவர்கள் அறிவுறுத்தல் வழங்கியபோதும் அது நடைமுறைப்படுத் தப்படாது கைவிடப்பட்டது.
- ❖ 1989ம் ஆண்டில் தரம் 1 தொடக்கம் 4 வரையுள்ள வகுப்புக்கள் தற்காலிகமாக புனித அந்தோனியார் சிங்கள வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டது. (தேசிய பாடசாலையான போதும் இந்நிலை காணப்பட்டது)
- ❖ சில வகுப்புக்கள் காலையிலும் இன்னும் சில வகுப்புக்கள் மதியத்திலும் ஆரம்பித்து நடத்தியமை.
- ❖ கல்லூரி வீதியில் தனியார் காணியில் தற்காலிக கொட்டில் அமைத்து வகுப்புக்கள் நடாத்தப்பட்டமை.

இக்காலத்தில் பௌதிக விருத்தியில் நிரந்தரமாக பின்வரும் அபிவிருத்திகளும் காணப்பட்டன.

- 03.10.1979ல் அயலில் இருந்த 14.62 பேர்ச் காணி சுவீகரிக்கப்பட்டமை.
- சுவீகரிக்கப்பட்ட காணியில் மூன்று மாடிக்கட்டிடம் ஒன்று 6 வகுப்பறை களுக்கு ஏற்றதாக அமைக்கப்பட்டு, 12.09.1981ல் திறந்து வைக்கப்பட்டது. இதில் நிலத் தளத்தில் காணப்பட்ட ஒரு அறை அதிபர் அலுவலகமாக மாற்றப்பட்டது.
- 04.06.1990ல் அடிக்கல் நாட்டப்பட்டு கூட்ட மண்டபத்துடன் கூடிய மூன்று மாடிக் கட்டிடம் 01.08.1991ல் திறக்கப்பட்டது. (இக்கட்டிடம் கட்டுவதற்காக கல்லூரி வீதிப்பக்கமாக அமைந்திருந்த பழைய கட்டிடம் இடிக்கப்பட்டது)

❖ தேசிய பாடசாலையாக்கும் நோக்கத்திற்காக தி/ கோணேஸ்வரா வித்தியாலயமும் தி/ இ.கி.ச.இந்துக்கல்லூரியும் இணைக்கப்பட்டபோது ஆரம்பக்கல்வியிலும் இடைநிலைக் கல்வியில் க.பொ.த (சா/த) வரை ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயம் பல்வேறு பௌதிக வள பற்றாக்குறையின் மத்தியிலும் சிறப்பாக இயங்கிக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் (1962 - 1992) பின்வருவோர் அதிபர்களாக தமது அர்ப்பணிப்பான சேவையை வழங்கியுள்ளனர்.

1. பண்டிதர் இ.வடிவேல்
2. திரு.கே.வேலுப்பிள்ளை
3. திரு.ச.சிவப்பிரகாசம்
4. திரு.க.ஜீவரெட்ணம்

1970களின் ஆரம்பத்திலிருந்து நாட்டில் காணப்பட்ட ஆயுதப் புரட்சி, இன வன்முறைகள், விடுதலைப் போராட்டங்கள், இயக்கங்களின் செயற்பாடுகள், இந்திய அமைதிப்படை வருகை, மாகாண சபை அமைப்பும் அதன் நடைமுறைச் சிக்கல்களும் என கல்வி நடவடிக்கைகளைப் பாதித்த அனைத்து செயற்பாடுகளுக்கும் முகம்கொடுத்து மாணவரின் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்து பாடசாலையை வளர்ச்சிப் பாதைக்கு இட்டும் சென்ற அனைவருக்கும் நன்றி செலுத்துதல் எம் கடனாகும்.

## தி/ இ.கி.மி இந்துக்கல்லூரியின் துரித எழுச்சிக் காலம் (1962 – 1992)

இராமகிருஷ்ண மிஷன் முகாமைத்துவத்தின் கீழ் சுவாமி விபுலானந்தரின் வழிநடாத்தலில் திருக்கோணமலை மாவட்டத்திலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அனைவராலும் அறியத் தக்க ஒரு சிறந்த கல்லூரியாக தி /இ.கி.மி இந்துக் கல்லூரி விளங்கியது.

அக்காலத்தில் கனிஷ்ட பாடசாலைத் தராதரம் (J.S.C) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (S.S.C) வரை கல்வி கற்றுத் தேர்ச்சியடைபவர்களின் எண்ணிக்கையானது குறைவாகவே காணப்பட்டது. அந்நிலையிலும் இக்கல்லூரியில் கற்ற மாணவர்கள் பலர் மருத்துவம், பொறியியல், சட்டம், கணக்கியல், நிர்வாகம் என பல துறைகளிலும் உயர் தகைமை பெற்று தமக்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்த்திருந்தனர்.

1962ம் ஆண்டில் அரச பாடசாலையாக சுவீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அக்காலத் தேவைக்கேற்ப கல்வி அபிவிருத்தி, இணைப்பாடவிதான அபிவிருத்தி, பௌதிகவள அபிவிருத்தி என்பவற்றைத் துரிதப்படுத்த வேண்டிய தேவையேற்பட்டது. சுவீகரிப்பின் முதற் தசாப்தத்தில் படிமுறையான ஒரு வளர்ச்சிப்போக்கை எட்டியபோதும் தொடர்ந்துவந்த இரு தசாப்தங்களிலும் பல துறைகளிலும் கல்லூரி துரித எழுச்சி கண்டது.

## கல்வி அபிவிருத்தி

கல்வி அபிவிருத்தியில் க.பொ.த. சாதாரணதரத்தில் கல்வித்தரத்தை உயர்த்துவதிலும், 1961ம் ஆண்டில் ஆரம்பித்த க.பொ.த. உயர்தர வகுப்புக்களை மேலும் விருத்திசெய்து பெறுபேறுகளை அதிகரிப்பதிலும் பல்கலைக்கழகங்களுக்கு அதிக மாணவர்களை அனுப்பி அவர்களுக்கான வாய்ப்பை அதிகரிப்பதிலும் அக்கறை கொண்ட காலமாக இக்காலம் அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1961ம் ஆண்டு க.பொ.த. உயர்தரத்தில் கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து வந்த வருடத்திலேயே கணித, விஞ்ஞான பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டன. 1964ம் ஆண்டில் கலைப்பிரிவிலிருந்து முதலாவது மாணவனாக திரு. கே.கோபாலசிங்கம் அவர்கள் இந்துக்கல்லூரியிலேயே கற்று பல்கலைக் கழகத்திற்குத் தெரிவானார். இவர் தனது பெற்றோரின் வசதியின்மை காரணமாக வேறு மாவட்டங்களுக்குச் செல்லமுடியாது தனி ஒருவராக உயர் தரத்தில் கற்கவேண்டிய நிலையேற்பட்டது.

அன்று பிரதி அதிபராகவும் பின்னர் அதிபராகவும் கடமையாற்றிய திரு.க.சிவபாலன் அவர்கள் 4 பாடங்களுக்கும் நான்கு ஆசிரியர்களை ஒதுக்கிக் கொடுத்ததுடன் ஏனைய வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். குறித்த மாணவரின் கனவு நனவாவதற்கும் கல்லூரியில் உயர்தரக் கல்வி வளர்ச்சிக்கும் இவர்கள் அனைவரதும் தியாக சிந்தனையும் செயற்பாடும் அடித்தளமாக அமைந்தது. இந் நிகழ்வு மாணவர் மத்தியிலும் பெற்றோர் மத்தியிலும் உயர்கல்வி தொடர்பான நம்பிக்கையை ஏற்படுத்தியது. 1965ம் ஆண்டிலும் கலைப்பிரிவில் திரு.சு.ஸ்கந்தராஜா, தே.யூசுப் ஜான் ஆகிய இருவர் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகினர்.

தேவையான ஆசிரிய வளத்தைக் கொண்டிராமையாலும் வழிகாட்டலுக்கான போதிய வாய்ப்புக் கிடைக்கப் பெறாமையாலும் 1960 களில் உயர்தரத்தில் தொடர்ந்து போதிய பெறுபேறுகளைப் பெறமுடியவில்லை. திருக்கோணமலையிலிருந்து வேறு மாவட்டங்களுக்குச் சென்று உயர் தரத்தில் தகுதி பெறவேண்டிய நிலை காணப்பட்டது. அந்த ஒழுங்கில் உயர் தரத்தில் சித்தியடைந்து, பல்கலைக் கழகத்திற்குத் தெரிவான பழைய மாணவர்கள் பலர் நல்ல தகுதி நிலையிலிருந்து கல்லூரிக்கும் திருக்கோணமலை மக்களுக்கும் இன்றும் சிறந்த சேவை ஆற்றுவதைக் காணலாம்.

1970 களில் க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் சித்தி பெறுவோர், பல்கலைக்கழக அனுமதி பெறுவோர் எண்ணிக்கையும் அதிகரிக்க ஆரம்பித்தது. இவ் அதிகரிப்புக்கு பின்வரும் காரணிகள் பங்களிப்புச் செய்தன.

1. தொடர்ந்து பதவி வகித்த அதிபர்களும் அவர்களது நிர்வாகமும் அவசியமான ஆசிரிய வளத்தை வெளி மாவட்டங்களிலிருந்து இடமாற்றம் வாயிலாகப் பெற்று சேவையில் ஈடுபடுத்தியமை.

2. 1970ம் ஆண்டு வரை தேக்கநிலை கண்டிருந்த பல்கலைக்கழக அனுமதியானது, 1972ம் ஆண்டு பல்மருத்துவத் துறைக்கும், கலைத் துறைக்கும் ஒவ்வொருவர் தெரிவானமையும், தொடர்ந்து 1973ம் ஆண்டில் கலை, மருத்துவம், பொறியியல் என அனைத்துத் துறை களிலும் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தமையும் அது தொடர்ச்சியாக அதிகரித்தமையும்.

3. கல்லூரியிலிருந்து பல் மருத்துவத்துறைக்கு முதன்முறையாக தெரிவான ச.ஞானசேகரன் (ஞானி) அவர்களும் கலைத்துறைக்கு அவ்வருடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமைத்துவ குழு உறுப்பினர்கள்



அமர்வு (இ-வ) :- திரு.ப.வாமதேவன் பகுதித்தலைவர் (தரம் -10, 11), திரு.ச.சத்தியசீலன் பகுதித்தலைவர் (தரம் 8), திரு.கே.பாஸ்கரன் உதவி அதிபர் தரம்-6,7,8, திரு.வி.இராஜேந்திரன் பிரதி அதிபர் (நிதி, நிர்வாகம்), திரு.செ.பத்மசீலன் (அதிபர்), திரு.ந.பரமேஸ்வரன் பிரதி அதிபர் (பாட விதானம்), திருமதி.கே.இராதாகிருஷ்ணன் பிரதி அதிபர் (இணைக்கலைத்திட்டம்), திருமதி.ல.செல்வநாயகம் பகுதித்தலைவர் (தரம் -9), திரு.வி.விஜயராஜேந்திரன் பகுதித்தலைவர் (க.பொ.த உயர்தர கணித, விஞ்ஞானம்), திருமதி.நி.பரமேஸ்வரன் பகுதித்தலைவர் (க.பொ.த உயர்தர கலை.வர்த்தகம்)

## உயர்தரப் பிரிவு ஆசிரியர் குழாம்



முன்வரிசை (இ-வ) :- திரு.சி.காண்டீபன், திருமதி.வா.விஜயராஜேந்திரன், திரு.ந.பரமேஸ்வரன், திரு.செ.பத்மசீலன், திரு.ராஜேந்திரம், திருமதி.வ.செல்வநாயகம், திருமதி.நி.பரமேஸ்வரன்

இரண்டாம் வரிவை (இ-வ) :- திருமதி.வா.செல்வகுமார், திருமதி.ச. அன்ரனி, திருமதி.ஷி.ரமேஸ், திருமதி.சி.விமலகாந்தன், திருமதி.கு.சோதிலிங்கம், திருமதி.த.புஸ்பாதரன், திருமதி.சி.இரகுபதி, திருமதி.வ.வசீகரன், திருமதி.ஹ.உமாசுதன்

மூன்றாம் வரிசை (இ-வ) :- திரு. N.சுகந்தன், திரு.பொ.தவசிதன், திரு.சி.சுதாகரன், திரு.சி.செந்தில்நாதன், திரு.P.சுரேஸ்குமார், திரு.ப.டயஸ் அன்ரனி, திரு.தே.ஜனனன், திரு.க.ஜெயக்குமார், திரு.அ.நிமரேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவான திரு.க.சரவணபவன் அவர்களும், தொடர்ந்து அடுத்த ஆண்டில் ஏனைய துறைகளுக்குத் தெரிவான அவரது நண்பர்களும் சேர்ந்து, பல்கலைக்கழக நண்பர்கள் மூலமாக விசேட வகுப்புக்களை நடாத்தி திருக்கோணமலையிலேயே படித்து சித்தியடையலாம் என்ற நம்பிக்கையையும் உற்சாகத்தையும் வழங்கி கடின முயற்சியின் மூலம் வெற்றி கண்டமை.

4. மாவட்ட ரீதியில் பல்கலைக்கழக தெரிவுமுறை அறிமுகப்படுத்தப்பட்டதன் சாதக நிலைமை.

5. பெண் பிள்ளைகளுக்கும் கல்லூரியில் உயர் கல்விக்கான வாய்ப்பு வழங்கப்பட்டமை.

6. பிரத்தியேக தனியார் வகுப்புக்கள் மூலம் கற்றலுக்கான வாய்ப்புக்கள் அதிகரித்தமை.

7. 1977ம் ஆண்டில் வர்த்தகத்துறை உயர்தரத்தில் ஆரம்பிக்கப்பட்டு 1979ம் ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றியதுடன் அத்துறை விரைவாக வளர்க்கப்பட்டமை.

8. கல்லூரியில் கற்ற பழைய மாணவர்கள் ஆசிரிய குழாத்தில் இணைந்து கொண்டு ஆர்வத்துடன் ஏனைய ஆசிரியர்களுடன் சேர்ந்து பணியாற்றியமை.

9. 1978ம் ஆண்டிலிருந்து கோணேஸ்வரா வித்தியாலயத்தில் கல்விகற்று க.பொ.த உயர் தரத்திற்குத் தகுதி பெறும் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் இந்துக் கல்லூரியில் அனுமதி பெறும் நடைமுறை உருவானமை.

10. சிறந்த நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டதுடன் கற்றல் சூழலுக்கேற்ற வகுப்பறை வசதிகள், நூலக, ஆய்வுகூட வசதிகள் அதிகரிக்கப்பட்டமை.

க.பொ.த. உயர்தரம் ஆரம்பித்த 1960 களில் மிகக் குறைவான ஒரு வளர்ச்சியைக்காட்டி நின்ற பரீட்சைக்குத் தோற்றிய, சித்திபெற்ற மாணவர் எண்ணிக்கையானது 1970 களில் அதிகரித்தது இப் படிமுறை வளர்ச்சியைப் பின்வரும் அட்டவணை மூலம் அறிய முடிகின்றது.

## க.பொ.த. (உ/த) பரீட்சைப் பெறுபேறு (1963 – 1979)

| பிரிவு | கலை | | கணிதம் | | விஞ்ஞானம் | | வர்த்தகம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற். | சித்தி | தோற். | சித்தி | தோற். | சித்தி | தோற். | சித்தி | தோற். | சித்தி |
| 1963 | 02 | 00 | - | - | - | - | - | - | 02 | 00 |
| 1964 | 01 | 01 | 01 | 01 | 01 | 00 | - | - | 03 | 02 |
| 1965 | 03 | 03 | 02 | 00 | 05 | 00 | - | - | 10 | 03 |
| 1966 | 02 | 00 | 01 | 00 | 02 | 00 | - | - | 05 | 00 |
| 1967 | 04 | 01 | - | - | - | - | - | - | 04 | 01 |
| 1968 | 01 | 01 | - | - | - | - | - | - | 01 | 01 |
| 1969 | - | - | 01 | 00 | 04 | 00 | - | - | 05 | 00 |
| 1970 | 08 | 03 | - | - | 01 | 00 | - | - | 09 | 03 |
| 1971/72 | 02 | 01 | 08 | 02 | 08 | 02 | - | - | 18 | 05 |
| 1973 | 04 | 03 | 15 | 05 | 08 | 03 | - | - | 27 | 11 |
| 1974 | 04 | 04 | 18 | 09 | 13 | 04 | - | - | 35 | 17 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | கலை | | கணிதம் | | விஞ்ஞானம் | | வர்த்தகம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற். | சித்தி | தோற். | சித்தி | தோற். | சித்தி | தோற். | சித்தி | தோற். | சித்தி |
| 1975 | 09 | 04 | 17 | 08 | 20 | 04 | - | - | 46 | 16 |
| 1976 | 12 | 06 | 23 | 11 | 29 | 07 | - | - | 64 | 24 |
| 1977 | 30 | 22 | 26 | 08 | 37 | 12 | - | - | 93 | 42 |
| 1978 | 13 | 13 | 34 | 07 | 29 | 12 | - | - | 76 | 32 |
| 1979 (பழைய பா.தி) | 09 | 08 | 31 | 07 | 24 | 04 | - | - | 64 | 19 |
| 1979 (புதிய பா.தி) | - | - | 20 | 06 | 30 | 06 | 08 | 01 | 58 | 13 |

1961ம் ஆண்டில் அதிபர் திரு.அம்பலவாணர் அவர்களின் காலத்தில் க.பொ.த. உயர்தரம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதிபர் திரு.க.சிவபாலன், அதிபர் திரு.ஆர்.கிருஸ்ணபிள்ளை, அதிபர் திரு.சி.நடராசா ஆகியோர் க.பொ.த. உயர்தரத்தை தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் செயற்பாட்டில் தமது அர்ப்பணிப்பான பங்களிப்பினை வழங்கியிருந்தனர். 1973ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக மருத்துவம், பொறியியல் மற்றும் ஏனைய உயிரியல், பௌதிகத் துறைகள், கலை என பல பிரிவுகளுக்கும் பல்கலைக் கழகத்திற்கு மாணவர் தெரிவாகினர்.

26.09.1978ல் கல்லூரியின் அதிபர் பொறுப்பை ஏற்ற கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் ஆசிரியருமான திரு.அ.சிவலோகநாதன் அவர்கள் கல்லூரியின் கல்விச் செயற்பாட்டிலும் நிர்வாக ஒழுங்கமைப்பிலும் கல்லூரி வளாக வடிவமைப்பிலும் தூரநோக்குடன் சிறந்ததொரு மாற்றத்தை ஏற்படுத்தினார். அது விரைவாகவே கல்விப் பெறுபேறுகளிலும் அதிகரிப்பை வெளிப்படுத்தியது.

1980களின் ஆரம்பத்திலிருந்து வர்த்தகத்துறையில் கல்வி கற்கும் மாணவர் எண்ணிக்கை விரைவாக அதிகரித்ததுடன், ஏனைய துறைகளுக்கான மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பும் உயர்தரக் கல்வியில் ஒரு எழுச்சிக் காலமாக இக்காலத்தை வெளிக்காட்டியது.

க.பொ.த (உ/த) பெறுபேறுகளின் தொடர்ச்சியான அதிகரித்தபோக்கை இவ் அட்டவணையில் அவதானிக்கலாம்.

| ஆண்டு | உயிரியல் | | | பௌதிகவியல் | | | வர்த்தகம் | | | கலை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | பல்கலைக்கழக அனுமதித்தகுதி | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | பல்கலைக்கழக அனுமதித்தகுதி | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | பல்கலைக்கழக அனுமதித்தகுதி | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | பல்கலைக்கழக அனுமதித்தகுதி | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | பல்கலைக்கழக அனுமதித்தகுதி |
| 1980 (இடை.பா.தி) | 33 | 12 | 09 | 19 | 09 | 06 | - | - | - | 07 | 04 | 04 | 59 | 25 | 19 |
| 1980 (புதிய.பா.தி) | 58 | 24 | 17 | 36 | 13 | 10 | 24 | 10 | 03 | - | - | - | 118 | 47 | 30 |
| 1980 (பழைய.பா.தி) | 12 | 07 | 06 | 05 | 00 | 00 | - | - | - | 01 | 01 | 01 | 18 | 08 | 07 |
| 1981 (இடை.பா.தி) | 18 | 08 | 05 | 08 | 02 | 02 | 08 | 04 | 02 | - | - | - | 34 | 14 | 09 |
| 1981 (புதிய.பா.தி) | 45 | 17 | 04 | 34 | 14 | 10 | 17 | 10 | 05 | 08 | 06 | 04 | 104 | 47 | 23 |
| 1982 (பழைய.பா.தி) | 05 | 03 | 03 | 01 | 01 | 01 | - | - | - | 01 | 01 | 01 | 07 | 05 | 05 |
| 1982 (புதிய.பா.தி) | 46 | 09 | 07 | 39 | 12 | 08 | 35 | 17 | 07 | 38 | 09 | 04 | 158 | 47 | 26 |
| 1983 | 39 | 18 | 15 | 29 | 13 | 07 | 29 | 19 | 16 | 17 | 11 | 05 | 114 | 61 | 43 |
| 1984 | 23 | 12 | 09 | 28 | 08 | 04 | 12 | 11 | 07 | 03 | 01 | 01 | 66 | 32 | 21 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | உயிரியல் | | | பௌதிகவியல் | | | வர்த்தகம் | | | கலை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | பல்கலைக்கழக அனுமதித்தகுதி | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | பல்கலைக்கழக அனுமதித்தகுதி | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | பல்கலைக்கழக அனுமதித்தகுதி | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | பல்கலைக்கழக அனுமதித்தகுதி | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | பல்கலைக்கழக அனுமதித்தகுதி |
| 1985 | 20 | 05 | 02 | 40 | 13 | 08 | 08 | 07 | 05 | 07 | 03 | 02 | 75 | 28 | 17 |
| 1986 | 18 | 05 | 05 | 24 | 09 | 07 | 08 | 06 | 03 | 03 | 03 | 03 | 53 | 23 | 18 |
| 1987 | 12 | 04 | 01 | 16 | 10 | 06 | 16 | 12 | 08 | 05 | 04 | 03 | 49 | 30 | 18 |
| 1988 | 21 | 13 | 07 | 26 | 19 | 16 | 31 | 18 | 11 | 04 | 03 | 03 | 82 | 53 | 37 |
| 1989 | 31 | 17 | 10 | 28 | 18 | 13 | 25 | 21 | 18 | 07 | 04 | 03 | 91 | 60 | 44 |
| 1990 | 06 | 03 | 01 | 10 | 06 | 04 | 06 | 04 | 04 | 01 | 01 | 01 | 23 | 14 | 10 |
| 1990 (விசேடபரீட்சை) | 04 | 02 | 02 | 14 | 05 | 05 | 09 | 07 | 05 | - | - | - | 27 | 14 | 12 |
| 1991 | 13 | 09 | 07 | 20 | 14 | 11 | 23 | 17 | 13 | 15 | 12 | 10 | 71 | 52 | 41 |
| 1992 | 20 | 15 | 09 | 29 | 18 | 11 | 44 | 40 | 38 | 15 | 15 | 14 | 108 | 88 | 72 |

கலவர நிலை காரணமாக திருக்கோணமலையிலிருந்து அதிகளவான மக்கள் 1990ல் இடம்பெயர்ந்ததன் தாக்கம் க.பொ.த.(உ/த), க.பொ.த.(சாத) பரீட்சைப் பெறுபேறுகளிலும் வெளிப்பட்டது.

கனிஷ்ட இடைநிலைத் தரங்களிலும், சிரேஸ்ட இடைநிலையில் க.பொ.த. சாதாரண தரத்திலும் தொடர்ச்சியானதும் அக்கறையுடனானதுமான கற்றல் கற்பித்தல் ஒழுங்குகள், விசேட செயற்றிட்ட நடைமுறை போன்றவற்றால் பெறுபேறுகளிலும் தொடர்ச்சியான அதிகரிப்பைக் காணமுடிந்தது. மாவட்டத்திலும் மாகாண நிலையிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று இந்துக் கல்லூரி முன்னிலைக் கல்வி நிறுவனமாகத் திகழ்ந்தது.

தொடர்ச்சியாக உயர் நிலையில் பெறுபேறுகள் காணப்படுவதை இவ் அட்டவணையில் அவதானிக்கலாம்.

## க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள்

## இ.கி.ச.இந்துக் கல்லூரி (1978 - 1992)

| ஆண்டு | தோற்றியோர் (முதற் தடவை) | சித்தியடைந்தோர் | | க.பொ.த. உயர்தரத்திற்கு தகைமை பெற்றோர் | | உச்சப் பெறுபேறு 8D |
|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | வீதம் | எண்ணிக்கை | வீதம் | |
| 1978 | 53 | 16 | 30.2 | 13 | 24.5 | |
| 1979 | 66 | 33 | 50.0 | 34 | 51.1 | |
| 1980 | 61 | 14 | 22.9 | 15 | 24.6 | |
| 1981 | 38 | 07 | 18.4 | 06 | 15.8 | |
| 1982 | 53 | 26 | 49.1 | 21 | 39.6 | |
| 1983 | 43 | 23 | 53.5 | 26 | 60.5 | 01 |
| 1984 | 55 | 33 | 60.0 | 32 | 58.2 | |
| 1985 | 32 | 18 | 56.3 | 20 | 62.5 | |
| 1986 | 51 | 39 | 76.4 | 41 | 80.4 | |
| 1987 | 76 | 41 | 53.9 | 52 | 69.3 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | தோற்றியோர் (முதற் தடவை) | சித்தியடைந்தோர் | | க.பொ.த. உயர்தரத்திற்கு தகைமை பெற்றோர் | | உச்சப் பெறுபேறு 8D |
|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | வீதம் | எண்ணிக்கை | வீதம் | |
| 1988 | 87 | 52 | 59.8 | 44 | 50.6 | |
| 1989 | 56 | 32 | 57.1 | 33 | 58.9 | |
| 1990 | 34 | 16 | 47.5 | 16 | 47.5 | |
| 1991 | 47 | 35 | 74.5 | 40 | 85.1 | 01 |
| 1992 | 78 | 39 | 50.0 | 49 | 62.8 | |

1987ம் ஆண்டு கொத்தணிப் பாடசாலை அமைப்புமுறை நடைமுறைக்கு வந்தபோது மத்திய கொத்தணியின் மூலாதாரப் பாடசாலையாக பொறுப்பையேற்று முன்மாதிரியாகச் செயற்பட்டதுடன் கொத்தணிப் பாடசாலைகளுடன் ஏனைய பாடசாலைகளையும் இணைத்து தவணைப் பரீட்சைகளைப் பொதுவான பரீட்சையாக நீண்ட காலம் நடைமுறைப்படுத்தியமை. கல்லூரி வளர்ச்சிக்கு ஒரு அங்கீகாரமாக அமைந்தது.

## பௌதிக வள அபிவிருத்தி.

அரச பாடசாலையாக சுவீகரிக்கப்பட்டபின் 1960 களிலும் 1970 களிலும் இந்துக் கல்லூரியில் காணி கட்டிட அமைப்பு ரீதியான பௌதிகவள அபிவிருத்தி குறிப்பிட்டுக் கூறுமளவில் இடம்பெறவில்லை. எனினும், 1970ம் ஆண்டில் தனியான நூலகக் கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டு மாணவர்கள், ஆசிரியர்களின் பயன்பாட்டிற்கான நூல்களும் போதியளவில் சேர்த்துக் கொள்ளப்பட்டமை கற்றலுக்கான வள அபிவிருத்தியில் முக்கியமான வளர்ச்சியாகக் காணப்பட்டது.

அதிபர் திரு.அ.சிவலோகநாதன் அவர்கள் கல்லூரி வளாகத்தை வடிவமைப்பதில் தூர நோக்குடன் பாரிய திட்டத்தை வகுத்து 1980ம் ஆண்டில் அதனை ஆரம்பித்தார். இதற்காக கல்லூரி வீதிப் பக்கமாக இருந்த விஞ்ஞான ஆய்வுகூடங்கள், வகுப்பறைகள், அதிபர் விடுதி போன்ற கட்டிடங்கள் அகற்றப்பட்டது. அவ்விடத்தில் தற்போதுள்ள விபுலானந்தர் அகம், விவேகானந்தர் அகம், சிவானந்தர் அகம் ஆகியன விரைவாக கட்டி முடிக்கப்பட்டு 03.12.1982ல் திறந்து வைக்கப்பட்டது. இதற்கான நிதியை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினூடாக பாராளுமன்ற உறுப்பினர் திரு.இரா.சம்பந்தன் அவர்கள் பெற்றுக்கொடுத்திருந்தார்.

உயர்தர வகுப்புக்களுக்கான பாட ரீதியான இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல் ஆய்வுகூடங்களும், பொது விஞ்ஞான ஆய்வுகூடமும், கணித விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான வகுப்பறைகளும் ஒரு பகுதியில் அமைக் கப்பட்டது. (விவேகானந்தர் அகம், சிவானந்தர் அகம்)

சம்பந்தர் மண்டபத்திற்கு அருகிலுள்ள பகுதியில் கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான வகுப்பறைகளையும், நூலகத்தையும் கொண்டதாக (விபுலானந்தர் அகம்) இக்கட்டிடங்கள் அமைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1982ம் ஆண்டு இறுதியில் திறந்தவெளி முற்றத்திலிருந்த கட்டிடங்கள் அகற்றப்பட்டு திறந்தவெளி முற்றம் செப்பனிடப்பட்டதுடன் மேடைக்கான அடித்தளமும் இடப்பட்டது. பழைய மாணவர்கள் இப்பணியில் முக்கிய பங்கெடுத்து இச்சீரமைப்பைச் செய்தனர்.

1986.02.12ம் திகதி திறந்தவெளி அரங்கு முழுமையாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. 2022ம் ஆண்டில் அது இடிக்கப்பட்டு, 125ம் ஆண்டு நிறைவு செயற்பாடுகளில் ஒன்றாக பழைய மாணவர்களால் புதிய அரங்கு அமைக்கப்பட்டுள்ளது.

## இணைப்பாடவிதான செயற்பாடுகள்.

இல்ல விளையாட்டுப் போட்டிகள், உதைபந்தாட்டப் போட்டிகள், மெய்வல்லுனர் போட்டிகள், சாரணர் பாசறைகள், கடே முகாமில் பங்குபற்றுதல் போன்ற இணைப் பாடவிதான செயற்பாடுகள் கல்லூரி மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் மாணவருக்கு வாய்ப்பளிக்கக் கூடியதாக சிறப்பாக ஒழுங்கமைத்து தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.

கல்லூரியுடன் தொடர்புடைய பெரியார்களுக்கான விழாக்கள், சமய கலாச்சார விழாக்கள், மொழித்தினப் போட்டிகள், விசேட தினங்களையொட்டிய போட்டிகள், பாண்ட் வாத்திய குழுப் போட்டிகள், இசைத்திறன் போட்டிகள் என பல்வேறு போட்டிகளிலும் மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் ஆர்வமும் அவற்றில் ஈட்டிய வெற்றிகளும் இக்காலத்தில் விரைவாக வளர்ச்சி அடைந்தது.

மாணவர்கள் சமூகப் பணிகள் மூலமாகவும், வேலை அனுபவங்கள் மூலமாகவும் நல்ல மனநிலையும் ஆளுமையும் கொண்டவர்களாக சமூகத்தில் திகழ்வதற்கு பல சிரமதானப் பணிகள் அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. அதிபர் திரு.க.சிவபாலன் அவர்கள் இப்பண்பை வளர்ப்பதில் மாணவர்களுக்கு நிறைவான சந்தர்ப்பங்களை வழங்கினார். 1964ல் திருக்கோணமலையில் வீசிய சூறாவளியால் ஏற்பட்ட பெரும் சேதத்திலிருந்து மக்கள் மீள்வதற்கு மாணவர்கள், ஆசிரியர்களைத் திரட்டி அதிபரால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் இன்றும் பலராலும் நினைவுகூர்வதைக் காணலாம்.

1972ம் ஆண்டில் நடைபெற்ற மூன்று நாள் விஞ்ஞானக் கண்காட்சி 1964ம் 1981ம் 1992ம் ஆண்டுகளில் நடைபெற்ற பரிசளிப்பு விழாக்களும் கல்லூரி வளர்ச்சிப்போக்கை வெளிப்படுத்தும் நிகழ்வுகளாக அமைந்தன.

1966ம் ஆண்டு கல்லூரியின் இந்து மன்றத்தினால் வெளியிடப்பட்ட "உள்ளக்கமலம்" மலர் வெளியீட்டைத் தொடர்ந்து நடைபெற்ற 1981ம் ஆண்டு பரிசளிப்பு விழாவை ஒட்டியதாக 1982ம் ஆண்டில் கல்லூரியின் வெளியீடாக உள்ளக்கமல மலர் வெளியீடு கல்லூரி வளர்ச்சியைக் காட்டும் தகவல்களுடன் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15.02.1989ல் சிவலோகநாதன் அதிபர் அவர்கள் இளைப்பாறியதும் நீண்டகாலம் இக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு.எஸ்.குணரட்ணம் அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்றார். எனினும், திரு.சி.தண்டாயுதபாணி அவர்களுக்கு அதிபர் நியமனம் கிடைத்ததும், இக்கல்லூரியின் வேகமான வளர்ச்சிக்கு தகுதியான இளம் அதிபர் ஒருவரே பொறுப்பேற்க வேண்டும் எனக்கூறி, திரு.சி.தண்டாயுதபாணி அவர்களைப் பொறுப்பேற்கச் செய்து, மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு தி.எஸ்.குணரட்ணம் அதிபர் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

15.09.1990ல் அதிபர் பொறுப்பையேற்ற இக்கல்லூரியின் பழைய மாணவரும் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் கடமையாற்றிய திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் கல்லூரியை சமூகத்திற்குத் திறந்துவிடும் செயற்பாட்டில் வேகமாகச் செயற்பட்டு உடனடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அனைவரதும் ஒத்துழைப்பைத் திரட்டினார்.

ஒரு தசாப்த காலமாக இயங்காதிருந்த இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் 1991ல் புனரமைக்கப்பட்டு இயங்கத் தொடங்கியது. அதே வருடத்தில் நடைபெற்ற பழைய மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வின் மூலம் பழைய மாணவர்கள் தொடர்பு அதிகரித்தது.

கோணேஸ்வரா வித்தியாலயத்தில் 1968 தொடக்கம் இடைநிலை வகுப்புக்கள் ஆரம்பிக் கப்பட்டு க.பொ.த.சாதாரண தரம் வரை அதிகரித்தது. ஆரம்பப் பிரிவு இல்லா நிலையில் இந்துக்கல்லூரியின் இடைநிலை வகுப்புக்களில் மாணவர் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டது. இதனைச் சீர்செய்யும் செயற்பாடாக 1992ம் ஆண்டில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையும் இந்துக்கல்லூரியில் ஆரம்பப் பிரிவு ஒரே தடவையில் ஆரம்பிக்கப்பட்டது.

சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச் சிலை பழைய மாணவர் சங்கத் தலைவர் டாக்டர்.கு.ஹேமச்சந்திரா அவர்களின் அனுசரனையில் நிறுவப்பட்டு 21.03.1992ல் திறந்து வைக்கப்பட்டது.

1964ம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு முதலாவது ஒரு மாணவனை அனுப்பியதுடன் ஆரம்பித்த இக்காலச் சாதனை, 1992ம் ஆண்டில் உயர் தரத்தில் 88 பேர் சித்தியடைந்து 72 பேர் பல்கலைக்கழக தகுதியடைந்து உயர் வளர்ச்சியைக் காட்டி நின்றது. 1992ம் ஆண்டில் கணிதப் பிரிவில் 4A சித்திகளை முதன்முதலில் பெற்ற திரு.கு.ரவிச்சந்திரன் என்ற மாணவனின் மாவட்ட, மாகாணச் சாதனையானது துரித எழுச்சிக் காலத்தின் பாராட்டுக்குரிய நிகழ்வாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாடசாலை உருவாக்கமும் வளர்ச்சியும் (1993 - 2022)

## ❖ இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி (01.02.1993 – 2022 வரை)

நாட்டின் அரசினால் சட்டத் திருத்தம் காரணமாக ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை அமைப்பு முறையில் மாகாணங்களில் காணப்பட்ட சில பாடசாலைகளைத் தகுதி அடிப்படை யில் தேசிய பாடசாலையாக்கும் செயல்முறை காணப்பட்டது. அவ்வாறு தேசிய பாடசாலை யாவதற்கு தகுதிகளாக உயர் தரத்திலான பரீட்சைப் பெறுபேறுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சிறந்த அடைவுகள், சிறப்பாக இயங்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், சிறந்த சமுகத் தொடர்பு, சிறந்த நிர்வாகக் கட்டமைப்பு, போதிய மாணவர் எண்ணிக்கை எனப் பல தகுதிகள் எதிர்பார்க்கப்பட்டது.

இ.கி.ச இந்துக்கல்லூரியைத் தேசிய பாடசாலையாக்குவதற்கு 29.01.1993ல் நடைபெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவைக்கு சமர்ப்பித்த விண்ணப்பத்தினைப் பரிசீலித்தபோது மாணவர் எண்ணிக்கை தவிர்ந்த ஏனைய தகுதிகள் அனைத்தும் மிகவுயர்வான நிலையில் காணப்பட்டது. இதற்கான காரணங்களை நேரில் வந்து பரிசீலித்த கல்விச் செயலாளர் தி/ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலத்தையும் தி/இ.கி.ச இந்துக் கல்லூரியையும் இணைத்து தேசிய பாடசாலையை உருவாக்கலாமென முன்வைத்த தீர்மானத்திற்கமைய இரு பாடசாலைகளின் இணக்கப்பாட்டுடன் தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி என்ற பெயரில் 01.02.1993ல் தேசிய பாடசாலை உருவானது.

திருக்கோணமலை மாவட்டத்தில் முதலாவதும் கிழக்கு மாகாணத்தில் இரண்டாவதும் தேசிய பாடசாலையாக எமது கல்லூரி அமைந்தது. இந்நிகழ்வானது தி/இ.கி.ச இந்துக்கல்லூரி பொதுப்பரீட்சைப் பெறுபேறுகளிலும் ஏனைய செயற்பாடுகளிலுமடைந்துள்ள வளர்ச்சிக்குச் சான்றாக அமைந்தது.

ஆரம்பப் பிரிவிலும் கனிஷ்ட, இடைநிலைப் பிரிவிலும், க.பொ.த.சாதாரண தரப் பெறுபேறு களிலும் சிறந்து விளங்கிக்கொண்டிருந்த தி/ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயமும் கனிஷ்ட, இடைநிலைப் பிரிவிலும் சிரேஸ்ட இடைநிலைப் பிரிவில் க.பொ.த.சாதாரண தரம், க.பொ.த. உயர்தரம் ஆகியவற்றில் சிறந்து விளங்கிய தி/இ.கி.ச இந்துக்கல்லூரியும் இணைந்துகொண்டமை சமூகத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

இரு பாடசாலைகளிலும் அப்போது காணப்பட்ட பல்வேறு வளப்பற்றாக்குறைகளும் வசதியின்மையும் விரைவாக நிவர்த்திக்கப்படுமென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையும் இரு பாடசாலைகளும் சேரும் போது அமையக்கூடிய 1 நம்பிக்கையும் இரு பாடசாலைகளும் சேரும் போது அமையக்கூடிய முழுமையான பெரிய கல்லூரியால் அனைத்து மாணவர்களுக்கும் அவசியமான வசதிகளையும் வாய்ப்புக்களையும் வழங்கமுடியும் என்ற நம்பிக்கையும் கல்லூரி சமூகத்தில் காணப்பட்டது. காணப்பட்ட எதிர்பார்ப்புக்களையும் நம்பிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்களுடன் இரு பாடசாலைகளும் தனித்தனியாக இருந்தபோது சாதித்தவை களுக்கு மேலாக சாதனைகளைப் பல்வேறு துறைகளிலும் உயர்வடையச் செய்யவேண்டும் என்ற உற்சாகமான எண்ணத்துடன் தேசிய பாடசாலையான பின்னரான வளர்ச்சிப்போக்கு ஆரம்பமானது.

தி/இ.கி.ச இந்துக்கல்லூரியின் அதிபர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் தேசிய பாடசாலையின் 1வது அதிபராக கடமையேற்றுக்கொண்டார். ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயத் தினை மிகச் சிறப்பாக வழிநடாத்திய அதிபர் திரு.க.ஜீவரட்ணம் அவர்கள் கோட்டக்கல்வி அலுவலகத்தில் ஒரு கல்வி அதிகாரியாக பதவியேற்றுக்கொண்டார்.

இரு பாடசாலைகள் இயங்கிக்கொண்டிருக்கும் நிலையில் இணைவது என்பது அசாதாரண விடயமாகவும் கல்லூரியின் நிர்வாகத்திற்கு மட்டுமன்றி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் புதிய அனுபவமாகவும் அமைந்தது. இந் நிலையிலும் சுமூகமாக இவ்விணைப்புச் செயற்பாடுகளை படிப்படியாக நிறைவேற்ற முடிந்தமைக்கு, இரு பாடசாலைகளும் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளாக ஆரம்பத்தில் இயங்கியமையும் சுவீகரிப்பின் பின்னரும் இரு பாடசாலைகளிடையே காணப்பட்ட சிறந்த உறவும் நிர்வாகக் கட்டமைப்பில் காணப்பட்ட சீர்மையும் பேணப்பட்ட ஒழுக்கநெறிமுறைகளும் அடித்தளமாக அமைந்தது.

புதிய நிர்வாகத்தின் நடுநிலைத் தன்மையும், வகுக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பில் அதிகாரப்பகிர்வுடன்கூடிய சுதந்திரமான செயற்பாடுகளுக்கு வாய்ப்பளித்தமையும் விரைவானதும் சுமூகமானதுமான இணைப்புக்குச் சாதகமாக அமைந்தது. இச்செயற்பாடானது இரு பாடசாலை களும் உன்னதமான கல்வி, கலாசார விழுமியங்களைப் பேணி வளர்ந்து வந்துள்ளமைக்குச் சான்று பகிர்வதாக அமைந்தது.

1897ம் ஆண்டில் சிறிய கொட்டிலில் ஆரம்பித்த தனியார் முகாமைத்துவம் இராமகிருஷ்ண சங்க முகாமைத்துவம், அரச சுவீகரிப்பிற்குப் பின் இரு தனிப் பாடசாலை நிர்வாகம் எனப் பலரது தியாகங்களாலும் வளர்ச்சிபெற்று மீண்டும் ஒரே முழுமையான கல்லூரியாக தேசிய பாடசாலையாக்கப்பட்டபோது ஒவ்வொரு பாடசாலையிலுமிருந்த மாணவர் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | தி/ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயம் | | தி/இ.கி.ச இந்துக்கல்லூரி | | இரு பாடசாலைகளின் மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | வகுப்பு | மாணவர் | வகுப்பு | மாணவர் | வகுப்பு | மாணவர் |
| ஆரம்பப் பிரிவு | 10 | 290 | 07 | 172 | 17 | 462 |
| தரம் 6 - 8 | 06 | 203 | 04 | 115 | 10 | 318 |
| தரம் 9 - 11 | 06 | 180 | 08 | 267 | 14 | 447 |
| **மொத்தம்** | **22** | **673** | **19** | **554** | **41** | **1,227** |
| க.பொ.த உயர்தரம் | - | - | 10 | 274 | 10 | 274 |
| **இணைப்பின்போது மொத்தம்** | **22** | **673** | **29** | **828** | **51** | **1,501** |

## பௌதிகவள அபிவிருத்தி

தேசிய பாடசாலையாக்கப்பட்டபோது அனைத்துப் பிரிவுகளிலும் வகுப்பறைப் பற்றாக்குறை யும் விசேட வகுப்புக்களுக்கான வசதிகளும், மாணவர்களுக்கான சுயகற்றல் வசதிகளில் பற்றாக்குறையும் முதன்மைப் பிரச்சினையாக காணப்பட்டது. இக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட பின்வரும் கட்டிட அமைப்புகள் மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் வசதியை ஏற்படுத்து வதில் காணப்பட்ட வளர்ச்சியைக் காட்டுவதாக அமையும்.

### கனிஷ்ட இடைநிலைப் பிரிவு

07.02.1996 - கோணேஸ்வரா வித்தியாலயத்தில் காணப்பட்ட ஆரம்பகாலக் கட்டிடம் இடிக்கப்பட்டு 1995.07.05ம் திகதி பண்டிதர் இ.வடிவேலு அவர்களால் அத்திவாரம் இடப்பட்ட மூன்று மாடிக் கட்டிடம் கீழ்த் தளமானது காலைக் கூட்டத்திற்கேற்ற திறந்த மண்டபத்துடன் சிற்றுண்டிச்சாலை அமைப்புடன் கூடியதாக அமைக்கப் பட்டது. திரு.அ.தங்கத்துரை (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதிலொரு அறை (முதல் மாடியில் கனிஷ்ட பிரிவுக்கான விஞ்ஞான ஆய்வுகூடமாக அமைக்கப்பட்டது. கற்றல் கற்பித்தல் மேற்பார்வைச் செயற்பாட்டை இலகுபடுத்தக்கூடியதாக பகுதித் தலைவர் அலுவலகமும் இதிலமைந்தது.

12.07.2002 - 07.02.1996ல் திறக்கப்பட்ட கட்டிடத்தின் மேல்மாடியானது கனிஷ்ட இடை நிலைப் பிரிவுக்கான தனியான நூலகமாக அமைக்கப்பட்டது. இதிலொரு பகுதி 2005ம் ஆண்டில் கணனி முறையிலான கற்றல் கற்பித்தலுக்கான உபகரண வசதிகளுடன் தனியான பகுதியாக புனரமைப்புச் செய்யப்பட்டது.

### சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு (தரம் 9 - 13)

01.02.1994 - காளி கோயில் பக்கமாகவுள்ள (140 × 25) மூன்று மாடிக் கட்டிடம் மாகாணக் கல்விப் பணிப்பாளர், திரு.க.தியாகராஜா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. (காளியப்பு அகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜானந்தா அகம், சித்திர, சங்கீத கலைக் கூடங்கள்) ஏற்கனவே இருந்த காளியப்பு மண்டபம், நடராஜானந்தா மண்டபம் ஆகியன 1992ல் இடிக்கப்பட்டு இதற்கு அத்திவாரமிடப்பட்டது. பழைய மாணவர்களான திரு.சி.இரட்ணராஜா, ஜனாப்.அ.பசீர் அமீர் ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினர் களாக இருந்தபோது இதற்கான நிதி ஒதுக்கப்பட்டது.

14.11.1996 - 1933ல் கட்டப்பட்ட சம்பந்தர் மண்டபம் இடிக்கப்பட்டு முன்னாள் அதிபர் அ.சிவலோகநாதன் அவர்களால் புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது (தற்போது அலுவலகம் அமைந்துள்ள கட்டிடம்).

10.02.1998 - பழைய மாணவர் சங்கத்தினால் கல்லூரி நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக தூரநோக்குச் சிந்தனையுடன் நடராஜானந்தா அகத்தின் தளப்பகுதி கணனிக் கூடமாக புனரமைக்கப்பட்டு, கணனிகளுடன் பாடசாலைக்குக் கையளிக்கப் பட்டது.

14.02.1998 - தற்போது சம்பந்தர் மண்டபம் அமைந்துள்ள புதிய கட்டிடத்தின் கீழ்த்தள வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு நிர்வாகப் பிரிவு அங்கு மாற்றப்பட்டது.

31.01.1999 - பற்சிகிச்சை நிலையம் ஒன்று வைத்திய கலாநிதி ஜி.ஞானகுணாளன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

20.01.2000- புதிய கட்டிடத்தில் அமைந்த சம்பந்தர் மண்டபமும் அதன் மேல்மாடியில் அமைந்த நூலகம், வகுப்பறை என்பனவும் சுவாமி ஆத்மகனானந்தாஜி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. முன்னாள் அதிபர் திரு.அ.சிவலோகநாதன் அவர்களது காலத்தில் 1982ல் வெளியான உள்ளக் கமலத்தில் “எங்கள் கனவு நனவாகுமா?” என்ற வினாவுடனான படத்தை ஒட்டியதாக கனவு மெய்ப்பட்டது.

02.11.2001 - பொதுக் கல்வித் திட்டத்தின்கீழ் கணனிக் கூடத்திற்கு 10 புதிய கணனிகள் பொருத்தப்பட்டது.

11.06.2004- முன்னாள் அதிபர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின் வெளிநாட்டுப் பயணத்தின்போது பிரிட்டன் பழைய மாணவர்களால் வழங்கப்பட்ட அன்பளிப்பைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட கட்புல செவிப்புல சாதன அறை காளியப்பு அகத்தின் தளத்தில் அமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31.12.2007 - கணனிப் பிரிவு விஸ்தரிப்புக்காக (20x25) வகுப்பறை புனரமைப்புச் செய்யப்பட்டது.

04.2009 - பழைய மாணவர் ஒருவரின் முயற்சியால் மாணவர் கற்றலுக்கு வாய்ப்பை அதிகரிக்கும் வகையில் 25 கணனிகள் கணனிக்கூடத்தில் பொருத்தப்பட்டது.

தேசிய பாடசாலையாக்கப்பட்டு முதற் தசாப்தத்திலேயே கனிஷ்ட இடைநிலை, சிரேஸ்ட இடைநிலை வகுப்புக்களுக்கான வகுப்பறைப் பற்றாக்குறையைத் தீர்க்கக்கூடியதாக வகுப்பறைகளும் உரிய வசதிகளும் செய்யப்பட்டன. எனினும், அவற்றை முழுமையாக பயன்படுத்தமுடியாத வகையில் ஆரம்பப் பிரிவு வகுப்பறைப் பற்றாக்குறையானது ஏனைய இரு பிரிவுகளையும் பாதித்தது. மாணவர் எண்ணிக்கையும் சுமார் 500 ஆல் அதிகரித்து மொத்த எண்ணிக்கை 2000 மாணவர் களுக்கும் மேல் அதிகரித்தது. இதில் 750 பேருக்கு மேல் ஆரம்பப் பிரிவில் காணப்பட்டனர்.

## ஆரம்பப் பிரிவு

01.02.1993ல் தேசிய பாடசாலையாக்கப்பட்டபோது கோணேஸ்வரா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள் தற்காலிகமாக பாவனைக்குப் பெறப்பட்ட புனித அந்தோனியார் சிங்கள வித்தியாலயத்தின் அரைச் சுவர்களை மட்டும் கொண்டதான ஒரு பெரிய மண்டபத்தில் நடைபெற்றது. இதேவேளை 1992ம் ஆண்டில் தி/இ.கி.ச இந்துக்கல்லூரியில் ஒரே தடவையில் ஆரம்பிக்கப்பட்ட 1 தொடக்கம் 5 வரையான ஏழு ஆரம்ப வகுப்புக்கள் அப்போதிருந்த சம்பந்தர் மண்டபத்தில் நடைபெற்றது. ஆரம்பப்பிரிவிற்குப் பொறுப்பாக திருமதி.உ.பாலச்சந்திர ஐயர் அவர்கள் நியமிக்கப்பட்டு சிறப்பாக இயங்கியது.

இணைப்பினைத் தொடர்ந்து மாணவர் தொகையும் விரைவாக அதிகரித்தது. இடப் பற்றாக்குறை காரணமாக தரம் 1, 2 வகுப்புக்களைச் சேர்ந்த 8 வகுப்புக்கள் புனித அந்தோனியார் வித்தியாலயத்திலும் தரம் 3 தொடக்கம் தரம் 8 வரையான வகுப்புக்கள் (ஆரம்பப் பிரிவு, கனிஷ்ட இடைநிலைப் பிரிவு) கோணேஸ்வரா வித்தியாலயம் அமைந்திருந்த வளாகத்திலும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. கனிஷ்ட இடைநிலைக்கான இடங்களையே ஆரம்பப் பிரிவின் 3 தொடக்கம் 5 வகுப்புக்களுக்கும் பகிர்ந்து பயன்படுத்த வேண்டியிருந்தது. சில கனிஷ்ட, இடைநிலைப்பிரிவு வகுப்புக்கள் சிரேஸ்ட இடைநிலை பகுதியிலும் நடத்த வேண்டியிருந்தது.

ஆரம்பப்பிரிவு வகுப்புக்கள் 20 உம் தொடர்ந்தும் போதிய இடவசதியும் பொருத்தமான வகுப்பறை வசதியும் இல்லாத நிலையில் புனித அந்தோனியார் சிங்கள வித்தியாலய தற்காலிக இடத்திலும் கோணேஸ்வரா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்த பகுதியிலும் நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கி வந்தது. மகிழ்ச்சியான கற்றலுக்கான சூழல் அவர்களுக்கு அமையவில்லை.

கற்றல் கற்பித்தல் பாதிக்கப்படாது தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு பின்வரும் தற்காலிக ஏற்பாடுகள் மட்டும் ஆரம்பப் பிரிவுக்கு பௌதிகவள விருத்தி தொடர்பாக இரு தசாப்தங்களில் மேற்கொள்ளப்பட்டன.

1. திறந்த மண்டபத்தை தற்காலிகமாக மூடிய மண்டபமாக மாற்றியமைக்கப்பட்டது.
2. மண்டபத்தில் தற்காலிக பிரிப்புக்கள் மூலம் வகுப்புக்களாக பிரிக்கப்பட்டமை.
3. புனித அந்தோனியார் வித்தியாலயத்தில் கல்வி அலுவலக அலுவலர்கள் விடுதியாக பயன்படுத்திய மேலுமொரு கட்டிடம் வகுப்பறைப் பயன்பாட்டிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட துடன் அதிலொரு அறை அலுவலகமாகவும் மாற்றப்பட்டது.
4. புதிய வகுப்பறை ஒன்று அமைக்கப்பட்டமை.
5. கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள கொடைநிதியைப் பயன்படுத்தி (14x25) மூன்று வகுப்பறைகள் அமைக்கப்பட்டமை (கூட்டுறவு இல்லம்).

இடப் பற்றாக்குறை, வகுப்பறைப் பற்றாக்குறை, ஏனைய வளங்கள், வசதிகள் மிகக் குறைவாகக் காணப்பட்ட நிலையிலும் ஆரம்பப் பிரிவு தனியான ஒரு பிரிவாக துரித எழுச்சி கண்ட காலமும் இதுவாகவே அமைந்தது.

தேசிய பாடசாலையாக்கப்பட்டதைத் தொடர்ந்து 1995ம் ஆண்டு தொடக்கம் ஆரம்பப்பிரிவிற்குரிய உதவி அதிபராகச் செயற்பட்ட திரு.இ.புவனேந்திரன் அவர்கள் அப்பிரிவின் இணைப்பாளர்கள் ஆசிரியர்களின் முழுமையான ஆதரவுடனும், நிர்வாகத்தின் அனுசரணை உடனும் சிறந்த முறைமைகளை வகுத்துச் செயற்பட்டார்.

அனைத்து மாணவர்களது உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணரும் வகையின் பின்னரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு தேசிய மட்ட வெற்றிகளும் பெறப்பட்டது.

1. ஆரம்பப்பிரிவுக்கான காலைக்கூட்ட நிகழ்வுகள் தனித்தனியாக அம்மாணவர்களின் நிகழ்ச்சி களுடன் ஒழுங்கமைக்கப்பட்டது.
2. 1993ம் ஆண்டிலிருந்து வயது அடிப்படையில் தகுதிபெறும் அனைத்து மாணவர்களும் புலமைப் பரிசில் பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்டனர்.
3. இல்ல விளையாட்டுப் போட்டி ஆரம்பப்பிரிவுக்கு தனியாக நடாத்தப்பட்டு அனைத்து மாணவர்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டது.
4. 1994ம் ஆண்டிலிருந்து ஆரம்பப் பிரிவுக்காக தனியான பரிசளிப்பு விழா நடாத்தும் முறை ஆரம்பிக்கப்பட்டது.
5. கல்விக் கண்காட்சிகள், சித்திரக் கண்காட்சிகள், கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி, மொழித்திறன் போட்டிகள் அனைத்தும் ஆரம்பப்பிரிவுக்கு தனியாக ஒழுங்கமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. 1996ல் கல்லூரியில் குருளைச் சாரணர் குழு உருவாக்கப்பட்டது.
7. நவராத்திரி விழாவும், அது தொடர்பான போட்டிகளும், கலை நிகழ்ச்சிகளும் ஆரம்பப் பிரிவுக்குத் தனியாக ஒழுங்கமைக்கப்பட்டது.
8. 1998ம் ஆண்டு நடைபெற்ற சஞ்சிகைப் போட்டியில் (தரம் 3 - 5) மாவட்ட, மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றமை.
9. 2000ம் ஆண்டு ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பாண்ட் வாத்தியக் குழு உருவாக்கப் பட்டது. இக்குழு மாவட்டத்தில் ஆரம்பப் பிரிவுக்கான முதலாவதாக பாண்ட் வாத்தியக் குழுவாக அமைந்தது.
10. ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பயனுள்ள சுற்றுலா ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது.
11. 1997, 2000ம் ஆண்டுகளில் தமிழ்மொழித் தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெறப்பட்டது.
12. 2003ம் ஆண்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை மட்டத்தில் முதலாம் இடம் பெறப்பட்டது. 2005ல் 71 பேரும் 2006ல் 73 பேரும் இப்பரீட்சையில் சித்தியடைந்து ஒரே பாடசாலையில் கூடுதலான மாணவர் மாவட்டத்தில் சித்தியடைந்து சாதனை புரிந்தனர்.

2005ல் பிரதி அதிபர் திரு.அ.அருணகுமார் அவர்களின் ஓய்வைத் தொடர்ந்து திரு.இ.புவனேந்திரன் அவர்கள் பிரதி அதிபராக நியமிக்கப்பட்டதும் திருமதி.M.F.சண்முகநாதன் அவர்கள் ஆரம்பப் பிரிவு உதவி அதிபர் பொறுப்பையேற்று மிகச் சிறப்பாக செயற்பட்டு ஆரம்பப் பிரிவு வளர்ச்சிக்கு சிறந்த பங்களிப்பைச் செய்தார்.

## ஆரம்பப் பிரிவுக்கான காணி சுவீகரிப்பும் ஏனைய பௌதிகவள அபிவிருத்தியும்

ஆரம்பப் பிரிவானது இடப்பற்றாக்குறை, வகுப்பறைகள், விளையாட்டு மைதானம், நூலகம், மலசலகூட வசதிகள் என பல குறைபாடுகளுடன் இயங்கியது. ஆரம்பப்பிரிவின் குறைபாடுகள் ஏனைய பிரிவுகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. ஆரம்பப் பிரிவுக்கு தனியான ஒரு இடத்தைத் தேடி முழுமையான வசதிகளுடன் வகுப்பறைகளையும் ஏனைய வசதிகளையும் விரைவாக வழங்கவேண்டிய தேவையும் அவசியமும் காணப்பட்டது.

31.05.2004 வரை அதிபராகக் கடமையாற்றிய திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் வலயக் கல்விப் பணிப்பாளராக வவுனியா வடக்கு வலயத்திற்குப் பதவியுயர்வு பெற்றுச் சென்றார். தொடர்ந்து இக்கல்லூரியின் பழைய மாணவரும், நீண்ட காலம் கல்லூரியின் பிரதி அதிபராகக் கடமை ஆற்றியவருமான திரு.மா.இராசரெத்தினம் அவர்கள் அதிபர் பொறுப்பை 01.06.2004ல் ஏற்றபோது ஆரம்பப்பிரிவின் இடப்பற்றாக்குறையே முதன்மைபபிரச்சனையாகக் காணப்பட்டது. இதற்கான தீர்வைக் காண்பதற்கு புதிதாக பதவியேற்ற அதிபரின் தலைமையிலான நிர்வாகம், பழைய மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பனவற்றின் முழுப் பங்களிப்புடன் வேகமாகச் செயற்பட ஆரம்பித்தது.

முன்னாள் அதிபர் திரு.அ.சிவலோகநாதன் அவர்கள் காலத்தில் இந்துக் கல்லூரியின் மாணவர் விடுதிக்காக இனங்காணப்பட்டதும் முன்னாள் அதிபர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் காலத்தில் அதனைக் கொள்வனவு செய்யும்நோக்கில் மதிப்பீடு செய்யப்பட்டு கொள்வனவு நடைமுறை அரச காணிக்கு சாத்தியப்படாதென அறிந்து விடப்பட்டதுமான மானாங்காணி என அழைக்கப்படும் 168 பேர்ச் காணியை (மின்சார நிலைய வீதி) ஆரம்பப் பிரிவுக்கும் மாணவர் விடுதிக்குமாக சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.இரா.சம்பந்தன் அவர்கள், பிரதேச செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் காணி ஆணையாளர், அலுவலக உத்தியோகத்தர், நில அளவை உத்தியோகத்தர் அனைவரதும் ஆர்வமுடனான துரித செயற்பாட்டினால் காணி சுவீகரிக்கப்பட்டு கட்டிடங்களும் அமைக்கப்பட்டன.

முன்னர் 4 பேருக்கு உரித்துடையதாகவிருந்த காணித்துண்டுகள் பிரித்து விற்கப்பட்டதன் காரணமாக 10 துண்டுகளாக அமைந்தது. இதனால் அவற்றை உள்ளடக்கிய புதிய வரைபடம் நில அளவைத் திணைக்களத்திடம் பெற்றுக்கொள்ளப்பட்டது. மதிப்பீட்டுத் திணைக்களத் தினால் 10 துண்டுக் காணிகளுக்கும் தனித்தனி மதிப்பீடு செய்யப்பட்டது.

22.07.2005- காணி சுவீகரிப்புக்குரிய முதலாவது வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் பட்டது.

02.10.2006 - கல்லூரிக்காக சுவீகரிக்கப்பட்ட 168 பேர்ச் காணி பிரதேச செயலகத்தினால் கையளிக்கப்பட்டது.

2007 - அத்துமீறி குடியிருந்தவர்களை அகற்றும் நடவடிக்கை தொடர்ந்ததுடன் சுற்றுவேலி அமைத்து காணியை மட்டப்படுத்தலும் நடைபெற்றது.

07.04.2008 - சுவீகரிக்கப்பட்ட காணியில் (120X30) கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இக்கட்டிடம் 23 மில்லியன் ரூபா பெறுமதியில் நெகோட் (NECORD)நிறுவன நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டது. பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர் சங்கமும் இதில் தீவிர பங்களிப்பை வழங்கியது.

2009 - சுற்று மதில் அமைக்கப்பட்டு சிறார்களுக்கான பாதுகாப்பான வளாகம் உருவானமை.

22.01.2010 - ஆரம்பப் பிரிவு புதிய வளாகத்திற்கு சம்பிரதாயபூர்வமாக மாணவர்கள் இடமாற்றப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.02.2010 - உத்தியோகபூர்வமாக தரம் 3 தொடக்கம் 5 ஐச் சேர்ந்த மாணவர் அனைத்து வசதிகளுடனான தனித்தனியான வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டிடத்திற்கு இடமாற்றப்பட்டனர். தரம் 1,2 மாணவர்கள் புனித அந்தோனியார் வித்தியாலய வளாகத்திலேயே கற்றலில் ஈடுபட்டனர்.

01.09.2010 - சிறார்களின் உடல், உள வளர்ச்சிக்கும் அவர்களின் கற்றல் சூழலை கவர்சிகரமானதாக மேம்படுத்தும் வகையிலும் விளையாட்டு முற்றம் டோக்கியோ சீமெந்து நிறுவனத்தின் அனுசரணையில் பழைய மாணவரின் முயற்சியால் அமைக்கப்பட்டது.

10.11.2010 - தரம் 1, 2 மாணவர்களுக்காக (90'X30') மேலும் ஒரு கட்டிடத்தை அமைப்பதற்கான முதற்கட்ட வேலைக்காக ரூபா. 4.0 மில்லியன் மத்திய கல்வி அமைச்சினால் ஒதுக்கப்பட்டது.

14.03.2011 - 2வது புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டல் நிகழ்வு நடைபெற்றது.

25.04.2011 - புனித அந்தோனியார் வித்தியாலய வளாகத்தைக் கையளிக்க வேண்டிய நிலையில் தரம் 1, 2 வகுப்புக்கள் இயங்குவதற்கு தற்காலிக மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு மாணவர்கள் இடமாற்றப்பட்டனர். (மாணவர் விடுதிக்காக ஒதுக்கப்பட்ட பகுதியில்)

26.03.2012 - ஆரம்பப் பிரிவு அலுவலகம் மற்றும் ஆசிரியர் விடுதி என்பன திறந்து வைக்கப்பட்டது. 2வது புதிய வகுப்பறைக் கட்டிடம் (90'X30' மூன்று மாடி) திறந்து வைக்கப்பட்டது.

இத்துடன் ஆரம்பப் பிரிவுக்குத் தேவையான வகுப்பறை, கூட்ட மண்டபம், நூலகம்,அலுவலகம், மலசலகூட வசதிகள், நீர் வசதி, விளையாட்டு மைதானம், விளையாட்டு முற்றம் போன்ற அனைத்து பௌதிக வசதிகளும் தேவையான அளவில் பூர்த்தியாக்கப்பட்டது.

திருமதி.மே.ப.சண்முகநாதன் அவர்கள் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து 2010ம் ஆண்டு உதவி அதிபராகப் பொறுப்பேற்ற திரு.ந.சங்கரதாஸ் அவர்கள் ஆரம்பப் பிரிவின் புதிய வளாகத்தை சிறுவர்களுக்கு கவர்ச்சிகரமான பூஞ்சோலையாக மாற்றியதுடன் கற்றல், கற்பித்தல் இணைப்பாடவிதான செயற்பாடுகள் அனைத்தையும் மிகச் சிறப்பாக செயற்படுத்தினார். 2015ம் ஆண்டு அவரது இடமாற்றத்தைத் தொடர்ந்து திருமதி.தி.சுதாகரன் அவர்களும் அவரின் ஓய்வைத் தொடர்ந்து திருமதி.த.ஹரிகரன் அவர்களும் ஆரம்பப் பிரிவை வளர்ச்சிப் போக்கிற்கு இட்டுச் செல்வதில் சிறந்த பங்களிப்பை வழங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.02.2011ல் அதிபராக பொறுப்பேற்ற திரு.இ.புவனேந்திரன் அவர்கள் தரம் 1, 2 வகுப்புக் களையும் புதிய வளாகத்தில் ஒன்று சேர்த்து முழுமையான ஆரம்பப்பிரிவை அமைத்துக் கொள்வதில் துரிதமாக செயற்பட்டார்.

தேசிய பாடசாலையாகும்போது எதிர்பார்க்கப்பட்டதற்கமைய பௌதிகவள வசதி அனைத்து மாணவர்களுக்குமேற்றவகையில் ஏற்படுத்தப்பட்டன. தற்போது புதிய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றதாக கற்றல் கற்பித்தலை நவீனமயப்படுத்தும் செயற்பாடுகள் தொடர்கின்றன.

## கல்லூரி விளையாட்டு மைதான அபிவிருத்தி

தேசிய பாடசாலையான பின் கல்லூரியின் பௌதிகவள வளர்ச்சியில் ஒரு முக்கிய செயற்பாடாக கல்லூரி விளையாட்டு மைதான அபிவிருத்திச் செயற்பாட்டை இனங்காண முடியும்.

1962ம் ஆண்டில் இராமகிருஷ்ண மிஷனிடமிருந்து அரச பாடசாலையாக சுவீகரிக்கப்பட்டபோது பொறுப்பேற்கப்பட்ட கல்லூரிக்குரிய மைதானமானது நீண்ட காலம் எல்லையிடப்படாது பெரும் பகுதி அபிவிருத்தி செய்யப்படாது பாவனைக்குட்படாத நிலையில் காணப்பட்டது. பாவனையின் போது வெளியாரின் தலையீடுகளும் அதிகரித்தது.

1999ம் ஆண்டில் இம்மைதானத்தின் ஒரு பகுதி நகரத்தின் பஸ் தரிப்பிட பாவனைக்காக எடுக்கப்பட்டது. கல்லூரி நிர்வாகம் இதனை ஆட்சேபித்து மேற்கொண்ட முறைப்பாட்டினைத் தொடர்ந்து ஆளுனரால் அமைக்கப்பட்ட குழுவின் தீர்மானத்திற்கமைய உரிய பரப்பு (7.32 ஏக்கர்) மாறாத வகையில் நில அளவைத் திணைக்களத்தினால் வரைபடம் தயாரிக்கப்பட்டு 17.12.1999ல் உத்தியோகபூர்வமாக மைதானக் காணி பிரதேச செயலாளரினால் கையளிக்கப் பட்டது.

மைதானத்தை அபிவிருத்தி செய்வதில் ஆரம்ப காலத்தில் பல்வேறு முரண்பாடுகளும் எதிர்ப்புக்களும் காணப்பட்டது. அதிபர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் கல்லூரிச் சமூகத்தின் அனைத்து தரப்பினரையும் ஒருங்கிணைத்து செயற்பட்டு 2000ம் ஆண்டில் அத்திவாரத்துடன் பிளாஸ்ரிக் கம்பி வலையிலான வேலியிட்டு மைதானம் எல்லையிடப்பட்டது. தொடர்ந்த அபிவிருத்திகளை பின்வரும் செயற்பாடுகள் காட்டுகின்றன.

17.02.2001 - முதன்முறையாக கல்லூரி மைதானத்தில் சிறுவர் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

06.02.2002 - மைதானம் 200M ஓட்டப் பாதைக்கேற்றதாக சீராக்கப்பட்டு இல்ல விளையாட்டுப் போட்டி கல்லூரி மைதானத்தில் நடத்த ஆரம்பிக்கப்பட்டது. 2003ம் ஆண்டிலிருந்து 400M ஓட்டப்பாதை அமைப்பில் போட்டிகள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24.06.2006 - செஞ்சிலுவைச் சங்க அனுசரணையில் அமைக்கப்பட்ட கூடைப் பந்தாட்ட மைதானம் திறந்து வைக்கப்பட்டது.

15.12.2006 - மைதானத்தில் கிணறும் நீர்த்தாங்கியும் யுனிசெப் அனுசரணையில் அமைக்கப்பட்டது.நியாப் நிறுவனத்தின் அனுசரணையில் மைதானத்தில் மரம் நடும் திட்டம் ஆரம்பித்து செயற்படுத்தப்பட்டது.

26.06.2010 - உள்நாட்டு மற்றும் பிரிட்டன் வாழ் பழைய மாணவர்களின் நிதிப் பங்களிப்பில் மைதானத்தில் முதலாவது பார்வையாளர் அரங்கு அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டு 2011.02.19ம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

27.08.2013 - மைதானத்தின் பிரதான வாயில் வளைவிற்கான அத்திவாரம் இடப்பட்டது. 19.10.2013ல் இதற்கு அனுசரணை வழங்கிய திரு.தே.முகுந்தன் அவர்களால் திறக்கப்பட்டது.

24.02.2016 - நீண்ட பார்வையாளர் அரங்கு (முற்றவெளி பள்ளிவாசல் பக்கமாக) திறந்து வைக்கப்பட்டது.

30.03.2016 - பி.திலக்சன் ஞாபகார்த்தமாக அவரது சக பழைய மாணவர்களின் அனுசரணையில் நிறுவப்பட்ட வீரர்களுக்கான ஆயத்த அறையும் அரங்கும் திறந்து வைக்கப்பட்டது.

15.09.2016 - 2005ம் ஆண்டு கற்ற பழைய மாணவர் குழுவால் மைதானக் குடிநீர் வசதிக் காக அமைத்த தண்ணீர்த் தாங்கி பயன்பாட்டுக்கு விடப்பட்டது.

எல்லைகள் சுற்றுமதில் இடப்பட்டு மைதானத்தைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் பெரும் பகுதி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

2022 - கல்லூரி 125ம் ஆண்டை முன்னிட்டு மைதானத்தை முழுமையான பயன்பாட்டுக்கு ஏற்றதாக செப்பனிடும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

தேசிய பாடசாலையாக்கப்பட்டதன்பின் கல்லூரியின் அனைத்து மாணவர்களுக்கும் தங்கள் சொந்த மைதானத்தில் பயிற்சி பெறவும் போட்டிகளில் பங்குபற்றவும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இம்மைதானம் கல்லூரிக்கு மட்டுமன்றி ஏனைய பாடசாலைகளுக்கும் பயன்படுத்த வாய்ப்பளிக்கக் கூடியதாகவும் உள்ளமை கல்லூரி வளர்ச்சியில் மகிழ்ச்சியடையக்கூடிய அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய பாடசாலையாகிய பின் கல்வி வளர்ச்சி

ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியான பகுதித் தலைவர்களும் அவர்களுக்கு உதவியாக இணைப்பாளர்களும் நியமிக்கப்பட்டு அந்தந்தப் பிரிவுகளின் கல்வி அபிவிருத்திச் செயற்பாடு கள் சுதந்திரமாக திட்டமிட்டு செயற்படுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டது. கல்லூரி நிர்வாகத்திலும் நிதி. நிர்வாகத்திற்குப் பொறுப்பாக ஒரு பிரதி அதிபரும், பாடவிதானம், இணைப்பாடவிதானம் மாணவர் நலனோம்பலுக்குப் பொறுப்பாக ஒரு பிரதி அதிபரும் நியமிக்கப்பட்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் ஏனைய செயற்பாடுகளும் தடையின்றி வளர்ச்சியடைய வழிவகுக்கப்பட்டதனால் சகல துறைகளிலும் பிரிவுகளிலும் வேகமான வளர்ச்சியைக் காண முடிந்தது.

### ❖ ஆரம்பப் பிரிவு

01.02.1993ல் ஆரம்பப் பிரிவில் காணப்பட்ட மாணவர் எண்ணிக்கை குறுகிய காலத்திலேயே வேகமான வளர்ச்சியைக் கண்டது.

| ஆண்டு | வகுப்பு எண்ணிக்கை | மாணவர் தொகை |
|---|---|---|
| 1993 | 17 | 462 |
| 1999 | 20 | 673 |
| 2004 | 20 | 720 |
| 2010 | 21 | 780 |
| 2016 | 20 | 761 |
| 2022 | 20 | 718 |

2009ம் ஆண்டில் அனுமதி நெருக்கடி காரணமாக ஒரு வகுப்பு மேலதிகமாக அனுமதிக் கப்பட்டபோதும் எதிர்காலத்தில் இடப் பற்றாக்குறை ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்கமாக பின்னர் சமாந்தர வகுப்புக்கள் நான்காக மட்டுப்படுத்தப்பட்டது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெறும் அனைத்து மாணவர் களும் அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் அதிகரிப்பையும் பெறுபேற்றின் வளர்ச்சிப்போக்கையும் பின்வரும் அட்டவணை மூலம் உணரலாம்.

| ஆண்டு | தோற்றியோர் | வெட்டுப்புள்ளிக்கு மேல் தகுதி | | 100 புள்ளிக்கு மேல் பெற்றோர் | | புலமைப் பரிசில் நிதி பெறுவோர் |
|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | வீதம் | எண்ணிக்கை | வீதம் | |
| 1993 | 73 | 36 | 49.0% | - | - | 14 |
| 1994 | 93 | 43 | 46.0% | 71 | 76.3% | 21 |
| 1995 | 89 | 50 | 56.0% | 56 | 62.9% | 10 |
| 1996 | 109 | 41 | 37.0% | 70 | 64.2% | 14 |
| 1997 | 98 | 48 | 49.0% | 48 | 48.9% | 16 |
| 1998 | 123 | 45 | 37.0% | 90 | 73.1% | 19 |
| 1999 | 125 | 47 | 37.0% | 74 | 59.2% | 22 |
| 2000 | 134 | 60 | 45.0% | 106 | 79.0% | 18 |
| 2001 | 116 | 43 | 38.0% | 70 | 60.3% | 06 |
| 2002 | 131 | 54 | 41.0% | 82 | 62.6% | 21 |
| 2003 | 138 | 44 | 32.0% | 79 | 57.2% | 17 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | தோற்றியோர் | வெட்டுப்புள்ளிக்கு மேல் தகுதி | | 100 புள்ளிக்கு மேல் பெற்றோர் | | புலமைப் பரிசில் நிதி பெறுவோர் |
|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | வீதம் | எண்ணிக்கை | வீதம் | |
| 2004 | 144 | 59 | 41.0% | 96 | 66.6% | 24 |
| 2005 | 149 | 71 | 47.0% | 102 | 68.4% | 25 |
| 2006 | 148 | 73 | 49.0% | 115 | 77.7% | 26 |
| 2007 | 143 | 36 | 25.0% | 94 | 65.7% | 09 |
| 2008 | 140 | 40 | 28.0% | 64 | 45.7% | 13 |
| 2009 | 138 | 37 | 26.0% | 113 | 81.8% | 10 |
| 2010 | 148 | 61 | 41.0% | 132 | 89.1% | 17 |
| 2011 | 151 | 39 | 26.0% | 117 | 77.4% | 17 |
| 2012 | 142 | 41 | 29.0% | 103 | 72.5% | 12 |
| 2013 | 170 | 59 | 35.0% | 140 | 82.3% | 15 |
| 2014 | 147 | 41 | 28.0% | 125 | 85.0% | 15 |
| 2015 | 161 | 70 | 44.0% | 130 | 80.7% | 20 |
| 2016 | 143 | 45 | 32.0% | 118 | 82.5% | 14 |
| 2017 | 155 | 41 | 25.0% | 119 | 76.7% | 10 |
| 2018 | 153 | 53 | 35.0% | 138 | 90.2% | 09 |
| 2019 | 155 | 67 | 43.0% | 129 | 83.0% | 20 |
| 2020 | 154 | 56 | 36.0% | 146 | 94.8% | 18 |
| 2021 | 155 | 51 | 32.0% | 133 | 85.8% | 13 |

தேசிய பாடசாலையாக்கப்பட்ட 29 ஆண்டு காலப்பகுதியில் 19 தடவைகள் மாவட்டத்தின் முதல் நிலையைக் கல்லூரி பெற்றிருந்தது. இதில் கடைசி 7 ஆண்டுகளில் 6 முதலிடம் பெற்றுள்ளமை கல்லூரியின் வளர்ச்சி நிலையில் உறுதியாக உள்ளதைக் காட்டுகிறது. 2003ம் ஆண்டில் தேசிய மட்டத்தில் 1ம் இடத்தையும் 2016ம் ஆண்டில் 3ம் இடத்தையும் 2019ம் ஆண்டில் தேசிய மட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்று ஆரம்பப் பிரிவின் வளர்ச்சி சாதனையாக தொடர்கின்றது.

100 புள்ளிகளுக்குமேல் தகுதியடையும் மாணவர் சதவீதம் 90% க்கும் கடந்த நிலையை எட்டியுள்ளமை அனைத்து மாணவர்களின் தரரீதியான வளர்ச்சியைக் காட்டுகின்றது. தகுதி பெறும் மாணவர்களில் 30% க்கு மேற்பட்ட மாணவர்கள் வருமான நிலையில் குறைவானவர் களாக இருப்பதும், புலமைப்பரிசில் நிதியைப் பெறுவதும், வசதி குறைந்த மாணவர்களுக்கு எதிர்கால கல்விக்கான வசதியளிப்பதில் கல்லூரியின் அக்கறையுடனான அதிகரிப்பைக் காட்டுகின்றது.

## ❖ இடைநிலைக் கல்வி

பகுதித் தலைவர்களும் அப்பகுதிக்கான ஆசிரியர்களும் கணிதம், மொழி ஆகிய பாடங்களில் திறனை வளர்க்கும் நோக்குடன் ஒவ்வொரு வகுப்பிலும் குறைவான மாணவர்களை இனங் கண்டு சிறப்பான செயற்றிட்டங்களை வகுத்துச் செயற்பட்டனர். இதன் விளைவாக சிரேஷ்ட இடைநிலைகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் கற்றலை மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட்டனர். க.பொ.த.(சா/த) தரத்தில் விரைவாக உயர்வான சித்தி வீதத்தையும், க.பொ.த.(உ.த) தரத்திற்கு தகுதிபெறும் வீதத்தையும் எட்டியதுடன் தொடர்ந்து பேணக்கூடியதாகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் அட்டவணை தேசிய பாடசாலையான பின் க.பொ.த(சாத) பெறுபேறுகளில் விரைவான வளர்ச்சியினை காட்டுகின்றது.

| ஆண்டு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | | க.பொ.த (உ/த) இற்கு தகுதி பெற்றோர் | | உச்சப் பெறுபேறு | உச்சப் பெறுபேறு எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | | |
| 1993 | 146 | 92 | 63.0 | 101 | 69.1 | 8D | 01 |
| 1994 | 160 | 107 | 66.9 | 112 | 70.0 | - | - |
| 1995 | 132 | 90 | 68.2 | 101 | 76.5 | 8D | 01 |
| 1996 | 145 | 102 | 70.3 | 112 | 77.2 | 8D | 01 |
| 1997 | 127 | 97 | 76.4 | 104 | 81.9 | 8D | 01 |
| 1998 | 151 | 140 | 92.7 | 136 | 901 | 8D | 01 |
| 1999 | 122 | 117 | 95.9 | 118 | 96.7 | 10D | 03 |
| 2000 | 137 | 133 | 97.1 | 134 | 97.8 | 10D | 03 |
| 2001 | 152 | 136 | 89.5 | 131 | 86.2 | 10A | 4 |
| 2002 | 139 | 119 | 85.6 | 118 | 84.9 | 10A | 2 |
| 2003 | 132 | 105 | 79.5 | 105 | 79.5 | 10A | 1 |
| 2004 | 154 | 124 | 80.5 | 123 | 79.8 | 10A | 2 |
| 2005 | 148 | 130 | 87.8 | 137 | 92.5 | 10A | 3 |
| 2006 | 145 | 110 | 75.8 | 124 | 85.5 | 10A | 5 |
| 2007 | 110 | 91 | 82.7 | 95 | 86.4 | 10A | 4 |
| 2008 | 128 | 116 | 90.6 | 118 | 92.1 | 9A | 2 |
| 2009 | 161 | 139 | 86.3 | 150 | 93.1 | 9A | 4 |
| 2010 | 159 | 141 | 88.7 | 151 | 95.0 | 9A | 13 |
| 2011 | 163 | 146 | 89.6 | 143 | 87.7 | 8A, 1B | 14 |
| 2012 | 179 | 151 | 84.4 | 148 | 82.7 | 9A | 9 |
| 2013 | 169 | 140 | 82.8 | 140 | 82.8 | 9A | 6 |
| 2014 | 157 | 148 | 94.3 | 126 | 80.3 | 9A | 10 |
| 2015 | 161 | 124 | 77.0 | 139 | 86.3 | 9A | 6 |
| 2016 | 160 | 140 | 87.5 | 151 | 94.4 | 9A | 17 |
| 2017 | 154 | 130 | 84.4 | 139 | 90.3 | 9A | 7 |
| 2018 | 141 | 119 | 84.1 | 130 | 92.2 | 9A | 10 |
| 2019 | 175 | 144 | 82.3 | 151 | 86.3 | 9A | 07 |
| 2020 | 139 | 120 | 86.3 | 122 | 87.8 | 9A | 09 |
| 2021 | 162 | 141 | 87.0 | 148 | 91.4 | 9A | 16 |

இரு பாடசாலைகளாக இருந்தபோதும் தேசிய பாடசாலையாக்கப்பட்ட ஆரம்ப காலங்களிலும் 70% இற்குள் காணப்பட்ட சித்தி வீதம் 1998ம் ஆண்டிலிருந்து 90%க்கு மேல் அதிகரித்து 2000ஆம் ஆண்டில் உச்ச வளர்ச்சியாக 97% ஐக் காட்டியது அனைவரது அர்ப்பணிப்பான சேவையாலும் பங்களிப்பாலும் தேசிய பாடசாலையாக்கப்பட்டபோது சமூகத்தில் காணப்பட்ட எதிர்பார்ப்புக்கு ஏற்றதாக விரைவான வளர்ச்சி வெளிப்பட்டது.1998ம் ஆண்டைத் தொடர்ந்து சித்தி வீதத்தை உயர் நிலையிலேயே பேணுவதற்கும் அதிக மாணவர்கள் தரரீதியில் உயர்வான பெறுபேறுகளைப் பெற்று க.பொ.த உயர்தரத்தில் பொருத்தமான துறைகளைத் தெரிவுசெய்ய வாய்ப்பளிப்பதிலும் விசேட கவனம் செலுத்தப் பட்டது. பகுதித் தலைவர்கள் இணைப்பாளர்களின் வழிகாட்டலில் அனைத்து ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கணித மன்றம் அமைத்து அதன் மூலமான பரீட்சைகள், அலகுப் பரீட்சைகள், தொடர்ச்சியான பரிசளிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக்கள் மூலம் பாட ரீதியான உச்ச அடைவுகள் ஊக்குவிக்கப்பட்டமை போன்றன தரரீதியிலும் விரைவான வளர்ச்சியைக் காட்டியது.

1998ம் ஆண்டு வரை வருடத்தில் ஒரு மாணவன் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி (8D) பெறும் நிலை காணப்பட்டபோதும் அதனைத் தொடர்ந்து வந்த இரு தசாப்தங் களில் (1999 - 2021) 143 மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்திகளைப் பெற்றிருந்தனர். 2016ம் ஆண்டில் மட்டும் 17 மாணவர்கள் இவ்வுச்சப் பெறுபேற்றை (9A) பெற்றதுடன் 2007ம் ஆண்டில் ஒரு மாணவன் தேசிய மட்டத்தில் 6வது இடத்தைப் பெற்று சாதனை புரிந்தமை தரரீதியான வளர்ச்சிப்போக்கை வெளிப்படுத்தியது. 2022ம் ஆண்டின் இறுதியில் வெளியான 2021ம் ஆண்டுப் பெறுபேற்றிலும் 16 மாணவர்கள் 9A சித்திகளைப் பெற்றனர்.

இச்சாதனைகளைப் புரிந்த மாணவர்களும் அதற்காக அர்ப்பணிப்புடனான சேவையை வழங்கிய ஆசிரியர்கள் அனைவரும் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்களாவர்.

- **க.பொ.த. உயர்தரத்தில் (கல்லூரி நிலையில்) கல்வி அபிவிருத்தி**

1960, 1970 களில் பலதரப்பினரதும் அயராத முயற்சியால் வளர்ச்சிபெற்ற உயர்தரப் பிரிவானது, 1980 களில் மாவட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், கலை என சகல பிரிவுகளிலும் அதிகளவான மாணவர்களைப் பல்கலைக்கழகத் திற்கு அனுப்பும் தனித்துவமான கல்லூரியாக இந்துக்கல்லூரி விளங்கியது. இச்சிறந்த பெறுபேறு கல்லூரி தேசிய பாடசாலையாவதற்கு முக்கிய தகுதியாகவும் அமைந்தது.

மாவட்ட ஒதுக்கீட்டு முறையால் பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெறுவதற்கு மேலாக தேசியமட்டத் தெரிவுக்கு உட்படக்கூடியதாக சித்தித் தரத்தை உயர்வடையச்செய்ய வேண்டிய தேவையுள்ளது. தேசிய பாடசாலையானபின் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழக அனுமதி கிடைக்காதவர்கள் உயர் தொழில்நுட்பக் கல்லூரிகளில் டிப்ளோமா பாடநெறிகள் (NDT, HNDE, HNDA, HNDIT) வெளிவாரிப்பட்டப் படிப்பு, தேசிய கல்வியற் கல்லூரிகளில் சேர்தல், வெளிநாடுகளில் உயர்கல்வி வாய்ப்பு என உயர்கல்விக்கான வாய்ப்புக்களை பயன்படுத்துவதற்கும், தொழில் வாய்ப்புக்களுக்கும் ஏற்றதாக அனைத்து மாணவர்களும் உயர்தரத்தில் சித்தியடைய எதிர்பார்க்கப்படுகின்றது.

பல்கலைக்கழக அனுமதி எண்ணிக்கையை மாவட்டத்தில் அதிகரிப்பதற்கு தேசியமட்டத் தெரிவுக்குள் அனுமதிபெற மாணவர் ஊக்குவிக்கப்பட்டனர். இதற்கமைய பரீட்சைக்குத் தோற்றுபவர்களில் 65% ஆனோர் அளவில் சித்தியடையும் நிலையும் அவர்களில் 60% இற்கும் அதிகமானவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்களகத்திற்குத் தெரிவாகும்நிலைக்கும் பெறுபேறுகள் வளர்ச்சியடைந்தது. தற்போது வருடாந்தம் 50 - 60 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

1993 - 2020 வரையான காலத்தில் தேசிய மட்டத்தில் தெரிவுக்கு உட்பட்ட மாணவர் எண்ணிக்கை 124 ஆகவும் இதில் தேசிய மட்டத்தில் முதல் 100 நிலைகளுக்குள் தெரிவான மாணவர்கள் எண்ணிக்கை படிமுறையாக அதிகரித்து காணப்படுவதும் அனைத்து பாடங்களிலும் A சித்திபெறும் மாணவர் எண்ணிக்கை இக்காலத்தில் 132 ஆகவுள்ளதும் உயர்தரத்தில் தரரீதியான ஒரு வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றது.

தேசிய பாடசாலையான பின்னரான காலத்தில் கல்லூரியின் உயர்தர பரீட்சைப் பெறுபேற்றின் போக்கை (1993 - 2021 வரை - 1ம், 2ம் தடவை தோற்றியோர்) கீழ்வரும் அட்டவணையில் துறை ரீதியாக காணமுடிகின்றது.

| ஆண்டு | உயிரியல் | | | பௌதிக விஞ்ஞானம் | | | வர்த்தகம் | | | கலை | | | மொத்தத் தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | வீதம் (%) | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | வீதம் (%) | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | வீதம் (%) | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | வீதம் (%) | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | வீதம் (%) |
| 1993 | 20 | 16 | 80.0 | 32 | 20 | 62.5 | 33 | 31 | 93.9 | 10 | 9 | 90.0 | 95 | 76 | 80.0 |
| 1994 | 26 | 19 | 73.1 | 37 | 12 | 32.4 | 53 | 47 | 88.7 | 10 | 10 | 100 | 126 | 88 | 69.8 |
| 1995 | 30 | 20 | 66.7 | 36 | 20 | 55.6 | 62 | 53 | 85.5 | 16 | 12 | 75.0 | 144 | 105 | 72.9 |
| 1996 | 50 | 31 | 62.0 | 56 | 36 | 64.3 | 67 | 54 | 80.6 | 19 | 17 | 89.5 | 192 | 138 | 71.9 |
| 1997 | 41 | 36 | 87.8 | 31 | 17 | 54.8 | 53 | 48 | 90.6 | 13 | 9 | 69.2 | 138 | 110 | 79.7 |
| 1998 | 46 | 41 | 89.1 | 32 | 25 | 78.1 | 74 | 60 | 81.1 | 13 | 13 | 100 | 165 | 139 | 84.2 |
| 1999 | 63 | 46 | 73.0 | 54 | 34 | 63.0 | 74 | 48 | 64.9 | 15 | 14 | 93.3 | 206 | 142 | 68.9 |
| 2000 | 45 | 32 | 71.1 | 55 | 35 | 63.6 | 76 | 46 | 60.5 | 21 | 19 | 90.5 | 197 | 132 | 67.0 |
| 2001 | 53 | 29 | 54.7 | 66 | 35 | 53.0 | 93 | 52 | 55.9 | 21 | 16 | 76.2 | 233 | 132 | 56.7 |
| 2002 | 48 | 22 | 45.8 | 71 | 36 | 50.7 | 88 | 50 | 56.8 | 26 | 9 | 34.6 | 233 | 117 | 50.2 |
| 2003 | 48 | 32 | 66.7 | 62 | 39 | 62.9 | 87 | 58 | 66.7 | 19 | 12 | 63.2 | 216 | 141 | 65.3 |
| 2004 | 51 | 26 | 51.0 | 62 | 33 | 53.2 | 88 | 60 | 68.2 | 18 | 15 | 83.3 | 219 | 134 | 61.2 |
| 2005 | 45 | 25 | 55.6 | 56 | 37 | 66.1 | 86 | 57 | 66.3 | 19 | 13 | 68.4 | 206 | 132 | 64.1 |
| 2006 | 43 | 32 | 74.4 | 49 | 27 | 55.1 | 53 | 36 | 67.9 | 25 | 13 | 52.0 | 170 | 108 | 63.5 |
| 2007 | 41 | 28 | 68.3 | 33 | 20 | 60.6 | 68 | 45 | 66.2 | 21 | 9 | 42.9 | 163 | 102 | 62.6 |
| 2008 | 42 | 24 | 57.1 | 35 | 18 | 51.4 | 71 | 49 | 69.0 | 28 | 14 | 50.0 | 176 | 105 | 59.7 |
| 2009 | 33 | 22 | 66.7 | 42 | 29 | 69.0 | 73 | 52 | 71.2 | 15 | 11 | 73.3 | 163 | 114 | 69.9 |
| 2010 | 28 | 22 | 78.6 | 54 | 33 | 61.1 | 62 | 40 | 64.5 | 23 | 11 | 47.8 | 167 | 106 | 63.5 |
| 2011 | 38 | 25 | 65.8 | 62 | 27 | 43.5 | 59 | 26 | 44.1 | 20 | 11 | 55.0 | 179 | 89 | 49.7 |
| 2012 | 44 | 32 | 72.7 | 80 | 34 | 42.5 | 68 | 39 | 57.4 | 22 | 7 | 31.8 | 214 | 112 | 52.3 |
| 2013 | 62 | 42 | 67.7 | 74 | 42 | 56.8 | 94 | 48 | 51.1 | 12 | 10 | 83.3 | 242 | 142 | 58.7 |
| 2014 | 54 | 41 | 75.9 | 62 | 36 | 58.1 | 78 | 56 | 71.8 | 14 | 7 | 50.0 | 208 | 140 | 67.3 |
| 2015 | 27 | 22 | 81.5 | 61 | 34 | 55.7 | 72 | 41 | 56.9 | 24 | 14 | 58.3 | 184 | 111 | 60.3 |
| 2016 | 41 | 29 | 70.7 | 72 | 46 | 63.9 | 67 | 49 | 73.1 | 9 | 0 | 0.0 | 189 | 124 | 65.6 |
| 2017 | 50 | 38 | 76.0 | 77 | 46 | 59.7 | 64 | 39 | 60.9 | 6 | 4 | 66.7 | 197 | 127 | 64.5 |
| 2018 | 43 | 34 | 79.1 | 84 | 53 | 63.1 | 71 | 47 | 66.2 | 13 | 9 | 69.2 | 211 | 143 | 67.8 |
| 2019 | 39 | 32 | 82.1 | 79 | 46 | 58.2 | 76 | 40 | 52.6 | 16 | 6 | 37.5 | 210 | 124 | 59.0 |
| 2020 | 43 | 24 | 55.8 | 77 | 46 | 59.7 | 68 | 32 | 47.1 | 13 | 3 | 23.1 | 201 | 105 | 52.2 |
| 2021 | 43 | 28 | 65.1 | 58 | 31 | 53.4 | 72 | 44 | 61.1 | 8 | 6 | 75.0 | 181 | 109 | 60.2 |
| **மொத்தம்** | **1,237** | **850** | **68.7** | **1,649** | **947** | **57.4** | **2,050** | **1,347** | **65.7** | **489** | **303** | **62.0** | **5,425** | **3,447** | **63.5** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய பாடசாலையான பின்னருள்ள 29 வருட காலத்தில் (1993 - 2021) க.பொ.த. உயர் தரத்தில் பரீட்சைக்குத் தோற்றிய, பரீட்சையில் சித்தியடைந்த, பல்கலைக் கழகத்திற்குத் தகுதிபெற்ற மாணவர் விபரத்தைப் பின்வரும் அட்டவணையில் மொத்தரீதியாக அவதானிக்கும் போது தேசிய பாடசாலையான பின் கல்லூரியின் வளர்ச்சியை அறிந்து கொள்ள முடிகின்றது.

| விபரம் \ துறை | | உயிரியல் | பௌதிகவியல் | வர்த்தகம் | கலை | மொத்தம் | ஆண்டுச் சராசரி |
|---|---|---|---|---|---|---|---|
| பரீட்சைக்குத்தோற்றியோர் | | 1,237 | 1649 | 2050 | 489 | 5425 | 187 |
| சித்தியடைந்தோர | Nos. | 850 | 947 | 1347 | 303 | 3447 | 119 |
| | % | 68.7 | 57.4 | 65.7 | 62.0 | 63.5 | 63.6 |
| பல்கலைக்கழக அனுமதித் தகுதி பெற்றோர் | Nos. | 748 | 845 | 1239 | 276 | 3108 | 107 |
| | % | 60.5 | 51.2 | 60.4 | 56.4 | 57.3 | 57.2 |
| அனைத்து பாடங்களிலும் A சித்தி பெற்றோர் | | 20 | 46 | 65 | 02 | 133 | 4.6 |

1963 ஆம் ஆண்டிலிருந்து 1992ம் ஆண்டு வரையான 30 வருட காலத்தில் க.பொ.த உயர்தரத்தின் அனைத்துத் துறைகளிலும் இந்துக்கல்லூரியிலிருந்து சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை 837 ஆகும். இக்காலத்தின் இறுதித் தசாப்த காலப்பகுதி வரை தற்போது உயர்தர வகுப்புக்களைக் கொண்டுள்ள அனேக பாடசாலைகள் உயர்தர வகுப்புக்களை ஆரம்பித்திருக்கவில்லை. மாவட்டத்தின் உயர்தரக் கல்விக்கான முதன்மைக் கல்லூரியாக இந்துக் கல்லூரி விளங்கியது.

தேசிய பாடசாலையான பின் இன்று வரையான (1993 - 2021) 29 வருட காலத்தின் உயர்தரத்தில் அனைத்துத் துறைகளிலும் கல்லூரியில் சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை 3447 ஆகும். வருடாந்தம் சராசரியாக 120 மாணவர்கள் சித்தியடைவதும் அவர்கள் பல்கலைக்கழகங்களுக்கும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அனுமதிக்கான அடிப்படைத் தகுதியைக் கொண்டிருப்பதும் இன்றும் கல்லூரியானது உயர்தரக் கல்வியில் முதன்மை நிலைபெற்று வளர்ச்சிப் போக்கில் பயணிப்பதைக் காட்டுவதாக அமைகிறது.

தேசிய பாடசாலையாக்கப்பட்டதன் பின் அனைத்து மாணவர்களும் தங்களது திறன்களை வெளிப்படுத்தக்கூடிய வகையில் நாளாந்த காலைக்கூட்ட நிகழ்வுகள் தொடக்கம் மாணவர் தலைவர் குழு, மொழி, சமய விருத்திக்கான மன்றங்கள் அனைத்து விளையாட்டுக்குமான தனித்தனி மன்றங்கள், சாரணீயம், சென்ஜோன்ஸ் படையணி, பாண்ட் வாத்திய அணி, இன்னிய அணி, சமூக பாதுகாப்பு தொடர்பான கழகங்கள் என அனேக அமைப்புக்கள் மாணவர் மத்தியில் உருவாக்கப்பட்டு மாணவருக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கழகங்களில் அனேகமானவை சிரேஷ்ட பிரிவுக்கும், ஆரம்பப் பிரிவுக்கும் தனித் தனியாக அமைக்கப்பட்டு சிறுபராயத்திலிருந்தே மாணவருக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப் பட்டுள்ளது. இக்காலத்தில் வருடாந்த நிகழ்வுகளாக நடைபெறும் இல்ல மெய்வல்லுனர் போட்டிகள், ஆரம்பப் பிரிவு விளையாட்டுப் போட்டிகள், தமிழ்மொழித்தின, ஆங்கில மொழித்தினப்

- **இணைப்பாடவிதான செயற்பாடுகளும் சமூகத்தொடர்பு மற்றும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளும்**

தேசிய பாடசாலையாக்கப்பட்ட தன் பின் அனைத்து மாணவர்களும் தங்களது திறன்களை வெளிப்படுத்தக்கூடிய வகையில் நாளாந்த காலைக்கூட்ட நிகழ்வுகள் தொடக்கம் மாணவர் தலைவர் குழு, மொழி, சமய விருத்திக்கான மன்றங்கள் அனைத்து விளையாட்டுக்குமான தனித்தனி மன்றங்கள், சாரணீயம், சென்ஜோன்ஸ் படையணி, பாண்ட் வாத்திய அணி, இன்னிய அணி, சமூக பாதுகாப்பு தொடர்பான கழகங்கள் என அனேக அமைப்புக்கள் மாணவர் மத்தியில் உருவாக்கப்பட்டு மாணவருக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இக்கழகங்களில் அனேகமானவை சிரேஷ்ட பிரிவுக்கும், ஆரம்பப் பிரிவுக்கும் தனித் தனியாக அமைக்கப்பட்டு சிறுபராயத்திலிருந்தே மாணவருக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் வருடாந்த நிகழ்வுகளாக நடைபெறும் இல்ல மெய்வல்லுனர் போட்டிகள், ஆரம்பப்பிரிவு விளையாட்டுப் போட்டிகள், தமிழ்மொழித்தினம், ஆங்கில மொழித்தினப் போட்டிகள், நவராத்திரி விழா தொடர்பான போட்டிகள், கலை விழாக்கள் தொடர்ச்சியாக சிறப்பான முறையில் நடைபெறுகின்றது.

நிகழ்வுகள் வருடாந்தம் நடைபெறும் ஒரே நிகழ்வாக இருப்பினும் அதில் பங்குகொள்ளும் மாணவர்களும், அவர்களால் வெளிப்படுத்தப்படும் திறன்களும் மாறுபட்டவையாகவும் புதுமை ஆனவையாகவுமிருப்பதே இங்கு முக்கியமானதாகும்.

சமூகத் தொடர்பை அதிகரிக்கக்கூடிய வகையில் பின்வரும் நிகழ்வுகளும் ஆரம்பிக்கப்பட்டு தவிர்க்கமுடியாத நிலைமை தவிர ஏனைய ஆண்டுகளில் தொடர்ந்தும் நடைபெறுகின்றது.

15.09.1993 - மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்துடன் மாபெரும் கிரிக்கட் ஆட்டம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்கிறது.

01.06.1997 - கல்லூரி தினத்தையொட்டி முதலாவது சைக்கிள் ஓட்டப் போட்டி ஆரம்பிக்கப் பட்டு தொடர்கின்றது.

01.02.1998 - தேசிய பாடசாலை தினத்தையொட்டி முதன்முறையாக மரதன் ஓட்டப் போட்டி ஆரம்பிக்கப்பட்டு தொடர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரேஷ்ட பிரிவினருக்கான 8 பரிசளிப்பு விழாக்கள் இக்காலத்தில் பெரு விழாக்களாக நடத்தப்பட்டு அனைத்து வருடங்களுக்குமான பரிசில்கள் வழங்கி மாணவர்கள், பெற்றோர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். மூன்று விழாக்கள் ஆரம்பப் பிரிவுக்குத் தனியாக நடைபெற்றது.

ஆண்டுப் பரிசளிப்பு விழாவாக நடைபெறுவதற்கு மேலாக புலமைப்பரிசில் பெறுபேறு, மொழித் தினங்கள், நவராத்திரிக் கலைவிழா தொடர்பான போட்டிகள், ஏனைய விசேட தினங்கள் தொடர்பான போட்டிகள், கல்லூரியில் இயங்கும் மன்றங்களினால் நடாத்தப்படும் போட்டிகள் என பல்வேறு சந்தர்ப்பங்களிலும் மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படு கின்றனர்.

மாபெரும் கல்விக் கண்காட்சிகள் "பிரவாகம் 2003", "புத்தொழில் பிரவாகம் 2010", "சக்தி பிரவாகம் 2022" ஆகியன கல்லூரியின் சகல மாணவர்களையும், சகல துறைகளையும் உள்ளடக்கியதாக நடைபெற்று மாவட்டத்திலும், மாவட்டத்திற்கு வெளியிலுள்ள பாடசாலை மாணவர்களும் பார்வையிடக்கூடியதாக அமைந்தமை கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சியினை வெளிப்படுத்தி நின்றது.

இக்காலத்தில் தேசிய மட்டத்தில் தமிழ் மொழித்தினம், ஏனைய நிறுவனங்களின் விசேட போட்டிகளில் ஈட்டப்பட்ட வெற்றிகளுக்கு மேலாக சர்வதேச மட்டத்தில் வெற்றி பெற்று அதிக மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

1. 2013சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டியில் தேசிய மட்டக்குழுவில் 10 பேரில் ஒருவராக தரம் 7 மாணவன் அ.அகிலாஷ் பங்குபற்றியமை.
2. 2016சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டியில் பங்குகொண்டு 3 தங்கம், 2 வெள்ளி, 3 வெண்கலம் எனும் பதக்கம் பெற்றமை.
3. 2017தாய்லாந்தில் நடந்த கணித ஒலிம்பியாட் போட்டியில் இலங்கைக் குழு 21 பேரில் 12 பேர் எமது கல்லூரி மாணவர் கலந்துகொண்டு 4 தங்கம், 6 வெள்ளி, 2 வெண்கலம் எனப் பதக்கங்கள் வென்றமை.
4. 2018சிங்கப்பூரில் நடைபெற்ற இளைஞர் கணித வினாவிடைப் போட்டியில் 31 மாணவர்கள் பங்குபற்றி 7 தங்கம், 6 வெள்ளி, 12 வெண்கலம், 6 திறமைச் சான்றிதழ் எனப் பரிசுகள் பெற்றனர்.

இவை சர்வதேச மட்டத்தில் ஈட்டப்படும் சாதனை வளர்ச்சியினைக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர் சங்க வளர்ச்சி

தேக்க நிலையிலிருந்த பழைய மாணவர் சங்கம் 1991ம் ஆண்டில் புனரமைக்கப்பட்டு இயங்கத் தொடங்கியதிலிருந்து கல்லூரியின் பௌதிகவள வளர்ச்சி கல்விப் பெறுபேறுகளின் வளர்ச்சிக்காக புலமைப்பரிசில் திட்டம், ஊக்குவிப்பு பரிசளிப்புக்கள், திறன் வளர்ச்சிக்கான போட்டிகள் நடாத்துதல், ஆசிரியர் தின நிகழ்ச்சி நடாத்துதல் மற்றும் விசேட தினங்களில் மாணவர்களை ஊக்குவித்தல், கல்லூரியின் அனைத்து செயற்பாடுகளிலும் நிர்வாகத்திற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குதல், ஏனைய பாடசாலைகளுக்கு இயன்றவரை கல்வி மேம்பாட்டுக்கு உதவுதல், சமூக செயற்பாடுகளை முன்னெடுத்தல் என சகல துறைகளிலும் சங்கத்தின் செயற்பாடுகள் பரந்து விரிந்து செல்கின்றது.

தேசிய பாடசாலையான பின்னர் சங்கத்தின் அங்கத்தவர் எண்ணிக்கையில் விரைவான அதிகரிப்புக் காணப்பட்டது. கல்லூரியுடனிருந்து இயங்கும் தாய்ச் சங்கத்திற்கு மேலாக கொழும்பு, கனடா, பிரிட்டன், பிரான்ஸ், அவுஸ்திரேலியா எனத் தலைநகரிலும் ஏனைய நாடுகளிலும் கிளைகள் அமைக்கப்பட்டு சிறந்த பங்களிப்புடன் அனேக செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

125வது ஆண்டை முன்னிட்டு 40 செயற்றிட்டங்கள் 2022ம் ஆண்டு காலப்பகுதியில் பெரும் நிதிப்பங்களிப்பில் நிறைவுசெய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வதியும் அனேக பழைய மாணவர்கள் தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

சங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தையும் இங்கு அட்டவணைப்படுத்துதல் கடினமான தாகும். எனினும், சங்கத்தின் வெளியீடுகளையும் கல்லூரியின் ஏனைய வெளியீடுகளையும் வருடாந்த செயற்பாடுகளையும் அட்டவணைப்படுத்துவதன் மூலம் சங்கத்தின் விரைவான வளர்ச்சியை இலகுவில் அறிந்துகொள்ளக்கூடியதாகவிருக்கும்.

1. “சாரல்” செய்தி மடல் [யூன் 2010 முதல் யூன் 2019 வரை 11 இதழ்கள் வெளியாகி உள்ளது. (முதல் நான்கும் அரையாண்டுச் சஞ்சிகை பின்னர் ஆண்டுச் சஞ்சிகையாக)]
2. “கனடா சாரல்” 2011 கனடாக் கிளை வெளியீடு.
3. பவள விழா மலர் (1937 - 1912) 2013 வெளியீடு (சங்கத்தின் நீண்ட கால வரலாறும், செயற்பாடுகளும் விரிவாக உள்ளடக்கப்பட்டது)
4. “வெள்ளை நிற மல்லிகை” சுவாமி விபுலானந்தரின் 125வது ஜனன தின நினைவு மலர், ஜனன தினம் 27.03.2017 - வெளியீடு 10.12.2017
5. கல்விக் கலம்பகம் - 08.10.2011 திரு.சி.தண்டாயுதபாணி (முன்னாள் அதிபர்) அவர்களின் கல்விச் சேவை நலன் பாராட்டு சிறப்பு மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்குழு உறுப்பினர்கள் :- பழைய மாணவர் சங்கம், பிரித்தானியா கிளை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி



**நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக) -**
திரு. பார்த்திபன் (உறுப்பினர்), திரு. இராசநாயகம் (உறுப்பினர்), திரு. பிரசாந்தஜோதி (உதவி செயலாளர்), திரு.ராஜ்மோகன் (உப தலைவர்), திரு. மோகனதாஸ் (உறுப்பினர்), திரு. நிரஞ்சன் (உறுப்பினர்), திரு. துருவாசன் (உறுப்பினர்), திரு. சிவானந்தன் (உறுப்பினர்)

**இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக) -**
திரு. கெங்காதரன் (அறங்காவலர்), திரு. இரட்ணதீபன் (அறங்காவலர்), திரு. முகுந்தகுமார் (அறங்காவலர்), திரு. இளஞ்செழியன் (தலைவர்), திரு. புஷ்பராகவன் (செயலாளர்), திரு. சார்ள்ஸ் அமர்நாத் (பொருளாளர்)

## செயற்குழு உறுப்பினர்கள் :- பழைய மாணவர் சங்கம், அவுஸ்ரேலியா கிளை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கண்ட வெளியீடுகளுடன் கல்லூரியின் ஏனைய வெளியீடுகளையும் இங்கு பட்டியலிடல் சமூகத் தொடர்பிலும் ஆவணப்படுத்தலிலும் கல்லூரியடைந்துள்ள வளர்ச்சியைக் காட்டுவதாக அமையும்.

1. "உள்ளக் கமலம்" 1966 (இந்துமன்ற வெளியீடு), 1982, 2008, 2010, 2013, 2015, 2017, 2019ம் வருடாங்களுக்கான பரிசளிப்பு விழாக்களுடன் வெளியானவை.
2. "சாரதை" - இந்துமன்ற வெளியீடு 1995, 2015, 2016, 2017, 2018, 2019 (6 வெளியீடுகள்)
3. சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர் வெளியீடு 1997, 2021
4. "திரானி" உயர்தர மாணவர் ஒன்றிய வெளியீடு

**தொடர்ச்சியான செயற்பாடுகள்**

1. யூன் 30 பழைய மாணவர் தினமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு (2004.06.30ம் திகதி தொடக்கம்) வருடாந்த நிகழ்வாக நடைபெறுதல்.
2. 30.06.2007 பழைய மாணவர் நிதியம் உருவாக்கம் [ஒவ்வொரு பழைய மாணவரும் வாழ்நாளில் ஒரு தடவையாயினும் பங்களிப்புச் செய்யும் நிதியம்]
3. டாக்டர் ஞானி புலமைப் பரிசில் நிதியம் கனடாக் கிளையினரின் அனுசரணையில் உருவாக்கப்பட்டு கல்விக்கான நிதி உதவி அளிக்கப்படுகின்றது.
4. ஆசிரியர் செல்வி.கு.சதாசிவம் ஞாபகார்த்த விஞ்ஞான வினாவிடைப் போட்டி வருடாந்த நிகழ்வாக நடாத்தப்படுகின்றமை.
5. சேவையால் உயர்ந்த பழைய மாணவர்கள் கௌரவிப்பு பழைய மாணவர் தினத்தில் நடைபெறல்.

சங்கத்தின் ஆரம்ப காலம் தொடக்கம் (1937) இன்று வரை பல்வேறு காலப் பகுதியிலும் சங்கத்தின் நிர்வாகிகளாக செயற்பட்டவர்களும் அதன் செயற்பாடுகளில் பங்கெடுத்து ஒத்துழைத்த அனைவரும் கல்லூரி வரலாற்றில் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்களாவர்.

## சித்தி விநாயகர் ஆலயம்

சுவாமி விபுலானந்த அடிகளாரினால் அருவுருவ வழிபாடாக பக்திபூர்வமாக வழிபட்ட உருவங்கள் காளி கோயில் பக்கமாகவுள்ள எல்லை மதிலுடன் சிறிய அமைப்பில் நீண்ட காலமாக அமைந்திருந்தது. புதிய கட்டிடங்கள் அமைப்புக் காரணமாக 1992ம் ஆண்டில் அவ் வழிபாட்டிடம் அம்பலவாணர் அகத்தின் முன்பாக மாற்றப்பட்டது. தேசிய பாடசாலையான பின்னர் கல்லூரிச் சமூகத்தின் விருப்புக்கமைய இறையுணர்வை மாணவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் மத்தியில் வளர்க்கக்கூடியதாக ஓர் ஆலயத்தை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. 1995ம் ஆண்டில் காந்தி ஐயா (முன்னாள் ஆசிரியர் பொ.கந்தையா) அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு தாமரைத் தடாகத்தில் மூலஸ்தானத்தைக் கொண்டதாக சிறிய ஆலயமாக சித்தி விநாயகர் அமைப்பு அழகுற அமைக்கப்பட்டது.

1997ம் ஆண்டு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமிகள் மூவரினால் விநாயகர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு தொடர்ந்து மஹா கும்பாபிஷேகமும் சிறப்பாக நடை பெற்று, சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து நாளாந்த பூசை, வெள்ளிக் கிழமைகளில் வகுப்பு ரீதியாக நடைபெறும் விசேட பூசைகள், விநாயக சதுர்த்தி, வருடப் பிறப்பு, தைப்பொங்கல் போன்ற தினங்களில் விசேட பூசைகள் என ஒழுங்கமைக்கப்பட்டு இறையுணர்வோடு எமது சமய கலாசாரத்தை மாணவர் பின்பற்றுவதற்கான அனுபவத்தை வழங்கும் மையமாகவும் ஆலயம் காட்சி தருகின்றது.

தற்போது 2010, 2021 ஆகிய ஆண்டுகளில் 2வது, 3வது கும்பாபிஷேகங்களும் சிறப்பாக நிறைவுபெற்றுள்ளது. கல்லூரியின் அனைத்து நிகழ்வுகளும் சித்தி விநாயகர் ஆலய வழிபாட்டுடன் இறைவனை முதன்மைப்படுத்தித் தொடங்கும் பண்பு மாணவர், ஆசிரியர் மத்தியில் உணர்வுபூர்வமாக வளர்ச்சியடைந்துள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

## பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம்

1975ம் ஆண்டில் இந்துக் கல்லூரியில் உருவாக்கப்பட்ட பாடசாலைக் கூட்டுறவுச் சங்கமானது சிறிது காலம் இயங்கியபோதும் காத்திரமான சேவை எதையும் வழங்கமுடியாத நிலையில் காணப்பட்டது. 1990ம் ஆண்டு உணவு முத்திரைத் திட்டத்தைச் செயற்படுத்தும் நோக்கில் சங்கம் புனரமைக்கப்பட்டு இயங்கத் தொடங்கியது. அத்திட்டத்தினால் கிடைக்கப் பெற்ற இலாபத்தைப் பயன்படுத்தக்கூடியவாறு அதே வருடத்தில் ஆசிரியர்களுக்கான காசு விற்பனை, கடன் விற்பனை நடவடிக்கைகளையும் ஆரம்பித்து சிறப்பாக செயற்படுத்தியது.

1992ம் ஆண்டு தொடக்கம் மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளை மலிவாக விற்பனை செய்யும் திட்டத்தை ஆரம்பித்து கல்லூரி மாணவர்களுக்கும் ஏனைய பாடசாலை மாணவர்களுக்கும் நன்மை கிடைக்கக்கூடியதாக சிறந்த சேவையை வழங்கியது.

1994ம் ஆண்டில் சிற்றுண்டிச்சாலையையும் பொறுப்பேற்று ஆசிரியர்களுக்கும் மாணவர் களுக்கும் குறைந்த விலையில் உணவுப் பண்டங்களையும் தேநீரையும் வழங்கித் தனது சேவையை சிறப்பாக்கியது.

1998ம் ஆண்டு தொடக்கம் சங்கம் தனியானதொரு சேமிப்புப் பிரிவை ஆரம்பித்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சேமிப்பு வாய்ப்பை அளித்ததுடன் ஆசிரியர்களுக்கான கடன் திட்டத்தையும் சிறப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுத்தியது. ஆரம்பத்தில் ரூபா. 5,000 என இருந்த கடன் தொகை படிப்படியாக ஒருவருக்கு ரூபா.10,000 வரை அதிகரித்து, சங்கம் சிறந்த இலாபத் தன்மையுடனும் நிதி நிலைமையுடனும் வளர்ச்சியடைந்தது.

மாணவர் கல்வி விருத்திக்கும் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் பௌதிகவள விருத்திக்கும் சங்கம் தனது இலாபத்தில் ஒரு பகுதியைப் பயன்படுத்தியது.

மாவட்டத்திலும் மாகாணத்திலும் சிறந்த பாடசாலைக் கூட்டுறவுச் சங்கத்துக்கான விருதைப் பல வருடங்கள் சங்கம் சுவீகரித்தது. ஒவ்வொரு வருடமும் எண்பார்வை செய்யப் பட்டு கால் நூற்றாண்டு காலமளவில் சிறப்பாக இயங்கிய சங்கம், சில குறைபாடுகள் இனங் காணப்பட்டதாலும் அது மிகைப்படுத்தப்பட்டு ஆசிரியர், மாணவர் மத்தியில் சங்க இயக்கம் தொடர்பாக அச்ச நிலை உருவாக்கப்பட்டதாலும் சங்கத்தின் இயக்கநிலையில் ஒரு தளர்வை ஏற்படுத்தியுள்ளது.

கூட்டுறவுத் திணைக்களத்தினால் தற்காலிகமாக தற்போது நிர்வகிக்கப்படும் சங்க நிர்வாகம் அவசியமான சீராக்கங்களை மேற்கொண்டு சங்கத்தின் இயல்பான நடைமுறைக்கு வழிவகுக்க வேண்டுமென்பது, சங்கத்தை பல்வேறு தியாகங்களால் செயற்படுத்திய அனைத்து உள்ளங்களினதும் எதிர்பார்ப்பாகும்.

## சாரணர் செயற்பாட்டு வளர்ச்சி

1920ம் ஆண்டில் கல்லூரியில் உருவாக்கப்பட்ட சாரணர் இயக்கமானது காலத்திற்குக் காலம் நாட்டின் நிலைமைகள் காரணமாக தொடர்ச்சியாக இயங்குவதில் தடைகளும் தேக்க நிலையும் ஏற்பட்டபோதும் 1993ம் ஆண்டு சாரணர் இயக்கம் கல்லூரியில் புனரமைக்கப் பட்டதைத் தொடர்ந்து மாவட்டத்தில் மட்டுமன்றி தேசிய சர்வதேச மட்டத்திலும் சாரணர் செயற்பாடுகள் வளர்ச்சியடைந்துள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

1. 1999ம் ஆண்டு 1வது ஜனாதிபதி சாரணர் விருது பெறப்பட்டதிலிருந்து இன்று வரை 23 ஜனாதிபதி சாரணர் விருது பெறப்பட்டுள்ளது.

2. 1997ம் ஆண்டிலிருந்து 2019ம் ஆண்டு வரை 14 மாணவர்கள் வெளிநாடுகளில் ஜம்போரி களில் கலந்துகொள்வதற்காகவும் நல்லெண்ண விஜயமாகவும் பங்குபற்றியுள்ளனர். (மலேசியா, மாலைதீவு, நேபாளம், இந்தியா, சுவீடன், யப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இதில் அடங்கும்)

3. கல்லூரி 125வது ஆண்டு நிகழ்வாக மைதானத்தில் ஒரு பகுதியில் சாரணர் தந்தையின் உருவச் சிலை திறந்து வைக்கப்பட்டதுடன் சாரணர் இயக்கத்தின் தொடர் செயற்பாட்டுக்கு அங்கத்தவர்களும் உள்ளீர்க்கப்பட்டுள்ளமை சாரணர் இயக்கத்தின் தொடர் வளர்ச்சிக்குரியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன கற்பித்தல் செயற்பாடுகளும் ஏனைய வசதிகளும்

01.01.2013ல் திரு.இ.புவனேந்திரன் அதிபர் அவர்களின் ஓய்வினைத் தொடர்ந்து பதவி ஏற்ற கல்லூரியின் பழைய மாணவரும், உதவி அதிபர், பிரதி அதிபர் பதவிகளை வகித்தவருமான திரு.செ.பத்மசீலன் அவர்கள் காலத்தின் தேவைக்கேற்றதாக கல்லூரியை மறுசீரமைப்பதிலும் திறன் வகுப்பறைகள், திறன் பலகைகள் ஆகியவற்றின் பயன்பாட்டை அதிகரிப்பதிலும் கூடிய அக்கறை செலுத்தி மாணவர்கள், ஆசிரியர்களுக்கு வசதிகளை அதிகரித்தார். "கொவிட்" தொற்று ஏற்பட்ட காலத்திலும் நவீன கற்பித்தல் முறைகள் மூலம் செயற்பட்டு கல்விக்கான பாதிப்பு குறைக்கப்பட்டது.

ஆரம்பப் பிரிவு தொடக்கம் உயர்தர வகுப்பு வரை இந்நவீன கற்பித்தல் செயற்பாட்டு வசதிகள் பரந்தளவில் ஏற்படுத்தப்பட்டு தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றது.

125வது ஆண்டு செயற்றிட்டங்களிலும் நவீன கற்பித்தல் செயற்பாடுகளுக்கான வசதிகள் வகுப்பறைகளில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் நடைபெறும் பல்வேறு போட்டிகளுக்கு மாணவருக்கு அதிகளவிலான சந்தர்ப்பங்களை வழங்கி ஊக்குவிக்கும் செயற்பாடு இக்காலத்தில் அதிகரித்துள்ளமை மாணவர் திறன்களை வெளிக்கொணர்வதில் முக்கிய அம்சமாக வளர்த் தெடுக்கப்படுகின்றது.

மைதான அபிவிருத்திச் செயற்பாடுகளில் மேலும் பார்வையாளர் அரங்குகளை அமைத்தல், சுற்றுமதில் அமைத்தல், மைதானத்தை முழுமையான பயன்பாட்டிற்கு சீராக்குதல், குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை அதிகரித்தல் என பல்வேறு செயற்பாடுகளை அதிபர் பொருத்தமானவர்களை அணுகி நிறைவேற்றியுள்ளமை மாணவர்களுக்கான வசதி வாய்ப்புக்களை அதிகரித்துள்ளது.

கல்லூரியை நிர்வகித்த அதிபர்கள், பழைய மாணவர்களாகவும், முன்னாள் ஆசிரியர் களாகவும் காணப்பட்டமையும் அவர்களிடையே காணப்பட்ட புரிந்துணர்வுகளும் கல்லூரியை இன்றுள்ள உயர்நிலைக்கு உரிய இலக்குநோக்கி தடையின்றி நகர்த்திச்செல்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளதெனலாம். அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் அர்ப்பணிப்பான சேவைக்கும், நிர்வாகத்திற்கு பக்கபலமாக செயற்படும் பழைய மாணவர்கள், பெற்றோர், திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பது நம் கடமையாகும்.

திருக்கோணமலை நகரில் 3 பாடசாலைகள் மட்டும் இயங்கிய நிலையில் உருவான எமது கல்லூரி இன்று நகரிலும், புறநகர்ப் பகுதியிலும் அதிகப் பாடசாலைகள் உருவாகி உயர்தரம் வரை மாணவ மாணவிகளுக்கு போதிய வாய்ப்புக்கள் அதிகரித்த நிலையிலும் அப்பாடசாலைகளுக்கும் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களையும் வாய்ப்புக்களையும் பகிர்ந்து அரவணைத்தவாறு முதல் நிலை கல்வி நிறுவனமாக இயங்கி வருகின்றது.

125 ஆண்டுகளின் முன் சிறு கொட்டிலில் ஆரம்பப் பாடசாலையாக ஆரம்பித்து, இன்று அனைத்துப் பிரிவுகளுக்கும் அவசியமான வள வசதிகளுடன், தனியான ஆரம்பப் பிரிவு வளாகம், கனிஷ்ட இடைநிலைப்பிரிவு, சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு என அனைத்துப் பிரிவுகளிலும் நவீன கற்றல் கற்பித்தல் வசதிகளையும் உள்ளீர்த்தவாறு பெருவிருட்சமாக வளர்ந்து “கல்வி, ஒழுக்கம், தூய்மை” என மணம் பரப்பி சமூகம் பயன் பெருக நிற்பது நம் அனைவருக்கும் பெருமைக்குரியதாகும்.

கல்லூரியின் இவ்வளர்ச்சியானது, பாடசாலையை ஆரம்பித்த சைவப் பெரியார்களின் உயரிய சிந்தனைகள், இராமகிருஷ்ண மிஷன் சார்பாக கல்லூரியை வழிநடத்திய சுவாமி விபுலானந்த அடிகளாரின் ஆசியும், அருள்வாக்கும் கொண்ட அவரது அர்ப்பணிப்பான சேவை தொடர்ந்து கல்லூரியை நிர்வகித்த அதிபர்கள், ஆசிரியர்களின் தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள், பெற்றோர், பழைய மாணவரின் அயராத ஒத்துழைப்புக்கள், மாணவர்களின் விடாமுயற்சி என்பற்றின் மொத்தப் பெறுமானமாகும். இவர்கள் அனைவரும் என்றும் நம் நன்றிக்கும் மதிப்புக்கும் உரியவர்களாவர்.

இந்த உயர் நிலையைத் தக்கவைத்துக்கொண்டு எதிர்கால மாற்றங்களுக்கு ஏற்றவாறு பொருத்தமான ஆளுமையும், சிறந்த பண்பும் கொண்ட பிரஜைகளை சமூகத்திற்கு அளிப்பதில் கல்லூரி சிறந்த சமூக நிறுவனமாக தொடர்ந்து வெற்றி நடைபோடும் என்பதே அனைவரது நம்பிக்கையும் எதிர்பார்ப்புமாகும்.

**திரு. மா. இராசரெத்தினம்,**
**முன்னாள் அதிபர்,**
**இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி,**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்எழுத்தோடு நற் பண்புகளையும் கற்றுத்தந்த திருக்கோணமலை இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

1940ல் திருக்கோணமலை இராமகிருஷ்ண சங்க இந்துக் கல்லூரியில் 6ம் வகுப்பில் சேர்க்கப்பட்டேன். 1955 ஒக்டோபர் அரச சேவையில் இணையும்வரை இக் கல்லூரியில் மாணவனாகவும், பின் ஆங்கில ஆசிரியராகவும் இருந்தேன். ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில், நான் விஞ்ஞான மாணவனாக இருந்ததால் கல்லூரியின் இரசாயன மற்றும் தாவரவியல் / உயிரியல் ஆய்வுகூடங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அத்தோடு கல்லூரியின் வருடாந்தக் கணக்கை ஆய்வுக்குத் தயாரிக்கும் பணியும் அதிபர் அம்பலவாணர் அவர்களால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவற்றையெல்லாம் நான் கல்லூரிக்குச் செய்யும் சேவையாகவே செய்து வந்தேன்.

அப்போது இக் கல்லூரி இராமகிருஷ்ண சங்கத்தால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. 6ம் வகுப்பில் திரு. கதிரவேற்பிள்ளை ஆசிரியர் அவர்கள் எங்கள் வகுப்பாசிரியராக இருந்தார்.

கல்வி பவித்திரமாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்பதால் கல்விக்குத் தெய்வாம்சம் தந்தனர் நம் முன்னோர்கள். "பள்ளித்தலமனைத்தும் கோவில் செய்குவோம்" என்ற மகாகவி பாரதியாரின் கூற்றுக்கிணங்க, அதிஷ்டவசமாக இந்துக்கல்லூரிக்கு அருகாமையிலேயே ஸ்ரீ பத்திர காளி அம்பாளின் திருக்கோயில் அமைந்திருப்பதால் கல்லூரியின் சூழல் தெய்வீகம் நிறைந்ததாக இருந்து வருகின்றது. இக் கல்லூரி இந்துக் கல்லூரி என்ற பெயருடன் இயங்கினாலும், இராமகிருஷ்ண மிஷனின் சர்வமதக் கொள்கையைப் பிரதிபலிக்கும் வகையில் இந்து, முஸ்லிம், பௌத்த மாணவர்களுக்கு இன, மத, பேதமின்றி இங்கு கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. அக் காலத்தில் இக் கல்லூரியில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளும் போதனா மொழிகளாக இருந்தன.

"To educate a man in mind and not in morals is to educate a menace to society"
**Theodore Roosevelt**

இவ்வறிஞரின் கூற்றுக்கிணங்க இக்கல்லூரி, எண்எழுத்தோடு தன் மாணவர்களுக்கு நற் பண்புகளையும் கற்பித்து வந்தது. ஆசிரியர்கள் அர்பணிப்போடு கற்பித்தது மாத்திரமல்லாமல் நற்பண்புகளையும் கொண்டவர்களாக இருந்து மாணவர்கள் பின்பற்றக்கூடிய முன்மாதிரிகளாக (Role models) விளங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியின் ஆசிரியர்கள் மட்டுமல்லாது கிழக்கு மாகாண இ.கி.ச. பாடசாலைகளின் முகாமையாளராகப் அப்போது பணியாற்றிய சுவாமி நடராஜானந்தா அவர்கள் இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது திருக்கோணமலை பாதிக்கப்பட்டதால் ஆசிரியர்கள் இடம்பெயர்ந்து சென்றபோதிலும், கல்லூரியின் கட்டிடங்கள் பாதுகாப்புத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட போதிலும் கல்லூரியின் செயற்பாடுகள் நின்றுவிடக் கூடாது என்று மட்டக்களப்பிலிருந்து வந்து கற்க வந்த ஒரு சில மாணவர்களுக்குத் தற்காலிக இடத்தில் தாமே ஆசிரியராக இருந்து கற்பித்த அவருடைய அர்பணிப்பு இங்கே குறிப்பிடத்தக்கது. அவர் முகாமையாளராக இருந்தும் தான் ஒரு துறவி என்பதை அவரது செயற்பாடுகள் வெளிப்படுத்தின. ஒரு சிறிய உதாரணம் சுவாமி மட்டக்களப்பிலுள்ள தனது அலுவலகத்துக்குப் புகையிரதம் மூலம் செல்வது வழக்கம். புகையிரத நிலையத்துக்குச் செல்லும் போது தன்னுடைய படுக்கையைக் கையில் எடுத்துக் கொண்டு கல்லூரியிலிருந்து கால்நடையாகவே செல்லுவார். 3ம் வகுப்பில் மூட்டைக்கடியோடு பயணம் செய்வார். அந்த எளிமையான அவரது வாழ்க்கை எனது மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது.

கல்லூரியின் சில ஆசிரியர்கள் கற்பிப்பதில் இயல்பான திறன் உள்ளவர்களாக இருந்தனர். அவர்களில் ஒருவர்தான் பெ.பொ.சி. என்று அழைக்கப்பட்ட பெ. பொ. சிவசேகரம் அவர்கள். இலக்கியத்தைத் தான் சுவைத்து சுவைத்து அதை மாணவர்களையும் சுவைக்க வைக்கும் ஆற்றல் அவரிடமிருந்தது. அடிக்கடி அவர் தமிழ் கவிதை நயத்தைச் சுவைத்துச் சொக்கிப் போனேன் என்பார். அதனால் அவரது மாணவர்கள் அவருக்கு "சொக்கி" என்று பட்டப்பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள். பல ஆண்டுகளுக்கு முன் அவர் நடாத்திய தமிழ் வகுப்பில் நடந்த ஒரு சம்பவம். அவர் ஒரு கவிதையின் இரு வரிகளைப் பாடி அதன் பொருளை விளக்கும்போது அதன் சுவையில் திளைத்து சற்று நேரம் தன் கையை உயர்த்தியபடி அசைவற்று நின்றார். அந்தப் பாடல் வரிகளும் அவர் உருவமும் இன்றும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது. அந்தக் கவிதை வரிகள் "வில்லினையொத்த புருவம் வளைத்தனை வேலவா, அந்த வெற்பு நொருங்கிப் பொடிப்பொடியானது வேலவா." முருகன் சூரனோடு போர் செய்யும் போது அசுரன் ஒரு மலையாக மாறுகிறான். அப்போது வேலன் தன் வேலாயுதத்தைப் பயன்படுத்தாமல் வில்லைப்போன்ற தன் புருவத்தை (கோபத்தில்) வளைத்தானாம் அந்த மலை பொடிப்பொடியாக சிதறிப் போனதாம். கவிதையின் நயமும் அதில் சித்தரிக்கப்பட்ட கந்தனின் பேராற்றலும் அவரை அசைவற்ற நிலைக்கு ஆளாக்கியது. நாங்களும் அந்த உணர்வில் சற்று நேரம் கட்டுண்டு கிடந்தோம்.

ஆசிரியர் சிவசேகரம் அவர்கள் மாணவர்களின் ஆற்றலால் சமூகம் பயன்பெற வேண்டுமென்று எண்ணியவர். அவர் தேர்ந்தெடுத்த இந்துக் கல்லூரி மாணவர்களைக் கொண்டு திருவள்ளுவர் கழகம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபனத்தை உருவாக்கினார். திருக்குறள் நெறியை மக்களிடையே பரப்பவேண்டுமென்ற அவரது அவா வீண்போகவில்லை. திருவள்ளுவர் கழகம் அவரது வழிகாட்டலின் கீழ் சிறப்பாக இயங்கியது. அதன் முதல் செயற்பாடாக இந்துக் கல்லூரி வளாகத்தில் ஒரு பிரமாண்டமான அரங்கு அமைத்து மூன்று நாட்கள் தொடர்ந்து திருக்குறள் மாநாடு நடாத்தப்பட்டது. இம் மாநாட்டுக்காக இந்தியாவிலிருந்து பேரறிஞர்களான பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன், மா.பொ.சி ஆகியோருடன் உள்நாட்டு அறிஞர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் திருக்கோணமலை மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்து கலந்து கொண்டனர். திருக்கோணமலை இதுவரை வரலாறு காணாத ஒரு நிகழ்வாக அம்மாநாடு அமைந்திருந்தது. திருவள்ளுவர் கழகம் இம்மண்ணில் பல ஆண்டுகள் சிறப்பாக இயங்கி வந்நது. பல வருடங்கள் அதன் செயலாளராகப் பணியாற்றும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது.

திருவள்ளுவர் கழகத்தின் அழைப்பில் 1955ல் இங்கு திருக்குறள் பேருரைகள் நிகழ்த்த வந்திருந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஆசிரியர் பெ.பொ.சிவசேகரம் அவர்களின் கவிதை புனையும் ஆற்றலைப் பாராட்டி “கழகப் புலவர்” என்ற பட்டம் சூட்டி அவரை கௌரவித்தார். ஆசிரியர் பெ.பொ. சிவசேகரம் அவர்களும், திருவள்ளுவர் கழகத்தை இயக்கிய அவரது மாணவர்களும் இந்துக் கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்தார்கள்.

கடந்த 125 ஆண்டுகளாக கற்ற நன்மக்களை சமூகத்திற்கு உருவாக்கித் தந்துகொண்டிருக்கும் இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி தனது பவித்திரமான பணியை மேலும் சிறப்பாகத் தொடர்ந்து மேற்கொள்ள கோணமாமலையில் கோயில்கொண்டு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் எம்பெருமான் திருவடிகளை வேண்டி, என்னை உருவாக்கிய கல்லூரியின் 125வது ஆண்டு விழா சிறப்பாக அமைய எனது பணிவான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

துரைசிங்கம் குலவீரசிங்கம்
கல்லூரியின் பழைய மாணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை இராமகிருஷ்ண மிஷன் இந்துக் கல்லூரி மாணவன் ஒருவனின் ஏழாண்டு அனுபவத் துளிகள்

*சி. சிவசேகரம்*

1950இல் எட்டு வயதில் இந்துக் கல்லூரியில் அடிவைத்தேன். அதன் முன் "கொண்வென்ற்" எனும் புனித மரியாள் ஆங்கிலப் பாடசாலையிற் படித்தேன். அப்போது இந்துக் கல்லூரியில் நான்காம் வகுப்பு முதல் SSC எனும் சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ் வகுப்பான 10ம் வகுப்பு வரை கற்பித்தனர். சேர்ந்த முதலாந் தவணை முடியுமுன்பே என்னை ஐந்தாம் வகுப்பிற்கு மாற்றினர்.

இந்துக் கல்லூரிக்குப் பின்னிருந்த கோணேஸ்வரா வித்தியாலயத்தில் மூன்றாம் வகுப்பு வரை கற்பித்தனர். இரு பாடசாலைகளையும் ஒரு வேலி பிரித்ததென நினைவு. பாடசாலையில் அப்போது மாடிக்கட்டடங்கள் இல்லை. கல்வித் தரமும் சொல்லும்படி இல்லை. தகுதியான ஆசிரியர்கள் இருந்தும் நல்ல தலைமையின்மையே பாடசாலையின் நலிவுக்குக் காரணம் என நினைக்கிறேன். என் உறவினர் ஒருவர் கல்வித் தரங் கருதிக் குடும்பத்தை யாழ்ப்பாணத்துக்குப் பெயர்த்த வேளை என்னையும் என் மைத்துனரையும் சம்பத்திரிசியர் கல்லூரியிற் சேர யாழ்ப்பாணத்துக்கு அழைத்தார். மைத்துனர் போனார். அம்மா என்னை மறித்துப் 'படிக்கிற பிள்ளை எங்கேயிருந்தாலும் படிக்கும்' என விளக்கமுந் தந்தார்.

அப்போது திருக்கோணமலையிற் பலருக்கு எட்டாம் வகுப்பிற்கு மேற் படிக்க அக்கறையின்மைக்கு இன்னொரு காரணம் இருந்தது. படிப்பை இடைநிறுத்தி 'நேவியில்' வேலைக்குச் சேர்ந்தவர்கள் அரச ஊழியர்கள் கூடச் சம்பாதித்தார்கள். என்னோடு படித்த கெட்டிக்கார முஸ்லிம் பையன்கள் இருவரைப் பெற்றோர் எட்டாம் வகுப்போடு கடையில் அமர்த்தினர். என் வகுப்புச் சிங்களப் பையனின் கதையும் அவ்வாறே. தமிழ்ப் பையன்கள் பலர்திறமையிருந்தும் குடும்பப் பொருளாதாரப் பொறுப்புக்களாற் படிப்பை SSC வரை தொடரவில்லை. விஞ்ஞான பாடங்களில் மாணவர்களை ஊக்குவிக்கப் பாடசாலைச் சூழலை விடக் குடும்பச் சூழலும் தடையாயிருந்தது. அதை விட, விஞ்ஞான பாடங்களை ஆங்கிலத்திலேயே கற்பித்தனர். வயது மூத்த மாணவர்கள் சிலரின் நடத்தை பற்றி ஊரிற் திருப்தியில்லை. பிள்ளைகளைக் கட்டுப்பாடாய் வளர்க்க விரும்பிய பெற்றோர் சிலர், விஞ்ஞான பாடங்கள் கற்பிக்காத புனித சூசையப்பர் கல்லூரிக்குப் பிள்ளைகளை அனுப்பினர். அங்கு ஆங்கிலத் தரம் சிறப்பு என்பதும் ஒரு விளக்கம். அங்கு விளையாட்டு மிக ஊக்குவிக்கப்பட்டது.

இந்துக் கல்லூரியில் திருவாளர்கள் சிவபாலன், கோபாலபிள்ளை, நடராஜா, சுப்பிரமணியம் உட்படத் திறமான ஆங்கில மொழி ஆசிரியர்கள் இருந்தனர். தமிழ் கற்பித்த பண்டிதர்களிற் கொஞ்சம் வித்தியாசமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களை வாசிப்பிலும் எழுத்திலும் ஊக்குவித்த திருவாளர்கள் சிவசேகரமும் வைரமுத்துவும் சிறப்பாகக் கூறத்தக்கோர். கணிதத்துக்குத் திரு. கணநாதபிள்ளை போல ஒரு ஆசிரியரைக் காண்பது கடினம். பிரம்பெடாத ஆசிரியர்களில் அவர் முக்கியமானவர்.

பாடசாலையை உன்னத நிலைக்குக் உயர்த்தியவர் திரு. அம்பலவாணர். பாடசாலை மீது இரங்கி 1954இல் கல்லடி - உப்போடை சிவானந்தா வித்தியாலயத்திலிருந்த அவரைத் திருகோணமலை இந்துக் கல்லூரிக்கு அனுப்பிய மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொறுப்பாளர் (சுவாமி நடராஜானந்தா என ஊகம்) என் சக மாணவர்கள் எல்லாரதும் நன்றிக்குரியவர்.

அம்பலவாணர் பாடசாலை அதிபராக வந்த சில நாட்களிலேயே பாடசாலையின் கற்றல் கற்பித்தற் பண்பாடு மாறலானது. இயற்பியல், வேதியியல் இரண்டையும் அவர் பொறுப்பேற்றார். அவ் வருடம் SSC பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவர்கள் கற்றது அறவே போதாது. எனவே பாடசாலை வேளைக்குப் பின்பும் வகுப்புகள் நடத்தினார். அவரது கடும் உழைப்பு மாணவர்கட்கு ஊக்கமும் உறுதியுந் தந்தது. பிற ஆசிரியர்களும் மிக ஒத்துழைத்தனர். நான் படித்த எட்டாம் வகுப்பிலே பொதுப் பரீட்சைகளிற் தோன்றத் தைரியமூட்டுமாறு எங்களிற் சிலரை வட மாகாண ஆசிரியர் சங்கப் பரீட்சை எழுதச் செய்தார். கிடைத்த நல்ல பெறுபேறுகள் பிறரையும் ஊக்குவித்தன.

என் எட்டாமாண்டிற் பாடசாலையில் இணைந்த ஆசிரியர் திரு.கோணேசபிள்ளை, ஆசிரியர் மாணவர் உறவிற் புதுமைகள் செய்தார். மாணவர்களின் ஆங்கிலப் பேச்சாற்றலையும் விவாதத் திறனையும் ஊக்குவிக்க உயர் வகுப்பு மாணவர்களைக் கொண்ட ஒரு “பாராளுமன்றத்தை” உருவாக்கினார். மாணவர்களை இரண்டாகக் கட்சி பிரித்துப் பல விடயங்களை விவாதிக்கச் செய்தார். பல பொது விடயங்கள் பற்றி மாணவர்களுடன் சமமாக உரையாடினார். மாணவருடன் நட்புறவுக்கு இன்னொரு நல்லுதாரணம் திரு குணரத்தினம். அவர் என் SSC இறுதியாண்டில் வந்தாரென நினைவு. ஆசிரியர்களிற் பெரும்பாலோர் உயர் வகுப்பு மாணவர்களுடன் நட்பாகப் பேசிப்பழகினர். எனினும் என் அனுபவத்தில் இவ்விருவரையும் சிறப்பாகக் கூறுவேன்.

அப்போது, பாடசாலை ஆசிரியர்கள் கட்சி அரசியலில் ஈடுபடவோ தேர்தலில் நிற்கவோ தடையில்லை. பதவி விலகாமலே தேர்தலில் நிற்கலாம். கம்யூனிஸ்ற் கட்சிக்கு நெருக்கமான ஆங்கில ஆசிரியர் க. சிவபாலன் 1952இல் சுயேச்சையாகத் தேர்தலில் நின்றார். அவர் நின்றமை, தமிழரசுக் கட்சி வேட்பாளர் ந.இ.இராஜவரோதயத்தின் வெற்றியை எளிதாக்கியதென ஊகிக்கிறேன். 1947இல் தமிழ்க் காங்கிரஸிற் போட்டியிட்டு வென்ற சு. சிவபாலன் அம்முறை ஐக்கிய தேசியக் கட்சியிற் போட்டியிட்டார். 1956 வரை கட்சிகட்குத் தேர்தல் சின்னங்களில்லை. வேட்பாளர் இருவர் நட்சத்திரத்தைச் சின்னமாகக் கோரியதாற் குலுக்கல் மூலம் சின்னங்கள் முடிவாயின. வினோத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





1)SIVALOGANATHAN 2)NAVARATNAM 3)SARVANANTHAM 4)SENTHIVEL 5)MICHAL 6)VARATHASUNDARAM
GUNARATNAM, SIVAPRAKASAM, YOGARETNAM, SIVASUBRAMANIAM, SINGARAVEL, KANANATHAPILLAI,
THANGARAJAH, SARMA, MRS.KANDAIAH, MRS.MYLVAKANAM, SAMYTHAMBY, SARAVANAMUTHTHU,
GOPALAPILLAI, AMPALAVANAR, VAIRAMUTHTHU, MRS.BALACHANDREN, MS.PONAMPALAM KULANTHAIVEL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனிகழ்வாக, அத் தேர்தலிற் தமிழரசு, ஐ.தே.க., கம்யூனிஸ்ற் ஆதரவு வேட்பாளர்கட்கு முறையே கிடைத்த வீடு, யானை, நட்சத்திரம் ஆகிய சின்னங்கள், 1956 முதல் அக் கட்சிகளின் நிரந்தரச் சின்னங்களாயின.

ஆசிரியர் சிவபாலன் என்றாயினும் பாடசாலையிற் கட்சி அரசியல் பேசமாட்டார். தன் பணியை அவர் தேர்தல் தேவைகட்குப் பாவிக்கவில்லை. பழைய மாணவர் சிலர் தேர்தல் அலுவல்களில் அவருக்கு உதவினரென நினைக்கிறேன். 1952இன் பின் ஊரிற் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு வலிதெனினும் பாடசாலையில் இடதுசாரி முனைப்புள்ள ஆசிரியர்கள் இருந்தனர். பாடசாலையை அவர்கள் கட்சி அரசியலுக்குப் பாவித்ததில்லை. எனினும், பொது அலுவல்களை உரையாடும் போது அவர்களுடைய உலக நோக்குத் தெளிவாகத் தெரியும். பாடசாலைக்கு வெளியே உயர் வகுப்பு மாணவர்கள் சிலருடன் அரசியல் அலுவல்களைப் பேசுவர். சக மாணவர் எவரும் அரசியலில் ஈடுபட நினைக்கவில்லை. ஆனால் அரசியல் எழுச்சிக் காலங்களில் அரசியல் விவாதங்கள் நிகழும். 1956 அளவிற் பாடசாலையில் இணைந்த திரு.இராமகிருஷ்ணன் சமூக ஈடுபாடு மிக்கவர். அவருடைய கம்யூனிஸ்ற் கட்சிச் சார்பு வலிது. மாணவர்களுடன் வெகு நட்பாகப் பழகுவார். எனினும் பாடசாலை நீங்கிய பின்பே அவருடன் அதிகம் பழகினேன்.

1956இல் தமிழரசுக் கட்சியின் மாநாடு பெருங் கூட்டமாகப் பாடசாலைக்கு எதிரே பெரிய முற்றவெளியில் நடந்தது. 1957 சுதந்திர நாளன்று மணிக்கூண்டுக் கோபுரத்திற் கறுப்புக் கொடி கட்டும் எண்ணத்துடன் தமிழரசு ஆதரவாளர்கள் சிலர் போனார்கள். யாரும் கோபுரத்தில் ஏறுமுன்பே ஒரு விஷமி சந்தைக்குள்ளிருந்து சுட்டதில் நடராசன் எனும் அப்பாவி உயிரிழந்தார். அந் நிகழ்வுக்குச் சிலர் கண் மூக்கு வைத்து ஒரு வீர காவியம் புனைந்ததும் நினைவிலுள்ளது. அக் கதை இன்னமும் எங்காவது உயிருடன் இருக்குமென நம்புகிறேன்.

பாடசாலை ஆய்வுகூடங்களிற் சில பாரிய போதாமைகள் இருந்தன. வாயு எரிபொருள் இல்லாததால், பன்சன் எரிவெட்டியுடன் செய்யும் பரிசோதனைகள் கைகூடவில்லை. வாயு எரிபொருட் பிறப்பாக்கி ஒன்றுக்கு அம்பலவாணர் வகை செய்யும் வரை, அற்ககோல் போத்தல் விளக்கிற் பல பரிசோதனைளைச் செய்தோம். இருட்டறை இல்லாததால் ஒளியியற் பரிசோதனைகள் சிலதைப் பகலிற் செய்ய வழியில்லை. எனவே பாடசாலை நேரத்தின் பின் இயற்பியல் ஆய்வுகூட யன்னல்களை மூடி ஆய்வுகூடத்தை இருட்டறையாக்கி அம்பலவாணர் பல பரிசோதனைகளைச் செய்வித்தார். எங்களிற் சிலருக்குத் தமிழும் ஆங்கிலமும் போக மீந்த ஆறு பாடங்களும் விஞ்ஞான பாடங்களாயின. திரு கணநாதபிள்ளை பிரயோக கணிதத்துக்குப் பதிலாக மேம்பட்ட கணிதம் கற்க ஊக்குவித்தார். வகுப்பில் நான்கே மாணவராயினும் அவர் உற்சாகமாகக் கற்பித்தார்.

விஞ்ஞான ஆய்வுகூடங்களில் நமக்குக் கணிசமான சுதந்திரம் இருந்தது. ஒரு முறை இயற்பியல் ஆய்வுகூடத்தில் ஒளியியற் பரிசோதனைக்கு மேசையில் வைத்திருந்த பாதரசத்துடன் நாம் விளையாடிய போது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவனின் தங்க மோதிரம் வெள்ளியானது. நல்லவேளை, உடையவில்லை. சில நாட்களில் மோதிரத்தின் நிறம் மீண்டது.

ஒரு நாள், வேதியியல் ஆய்வுகூடத்தில் வெண் பொசுபரசைக் கையாண்ட பின் மதிய உணவுக்கு வீடு சென்ற வேளை எனது மேற்சட்டை தீப்பற்றியது. ஆனால் பரவாயில்லை. ஒரு சிறு துண்டு பொசுபரசு மேற்சட்டைக்கும், காற்சட்டைக்கும் நடுவே சிக்கிக் காற்றுப் பட்டபோது தீப்பற்றியதென நினைக்கிறேன். தழும்பு இன்னமும் உள்ளது.

தாவரவியல் ஆசிரியர் திரு. பாலசுப்பிரமணியத்தின் ஊக்குவிப்பால், தாவர மாதிரிகள் திரட்ட மாணவர்கள் சேர்ந்து இடையிடையே மாலையிற் பல இடங்கட்கும் போய்த் தேடுவோம். ஒரு நாள், பாடசாலைக்குப் போகும் வழியில் ஜோதி தியேற்றர் வேலியோரமாக இருந்த சீமைக் கிழங்குப் (caladium) பூப் பிடுங்க முட்கம்பி வேலியூடு தலைநீட்டிய போது, கம்பி முள் என் தலையிற் கீறி இரத்தம் கசிந்தது. அதைக் கண்ட ஒரு இரக்கமுள்ள மனிதர் என்னை வற்புறுத்தி அரச மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்றார். அங்கே தலையிற் சிறிதொரு தையலிட்டனர். தாதியார், நரப்பிசிவுத் தடை (anti-tetanus) ஊசி எற்றுமுன், எனக்குத் "தொய்வு" வருவதுண்டா எனக் கேட்டார். வீட்டில் மாமிக்கு "அஸ்த்மா" வரும். அது தான் தொய்வென எனக்குத் தெரியாது. தெரியாததால், இல்லை என முடிவெடுத்த அவர் எனக்கு ஊசி எற்றினார். சீமைக் கிழங்குப் பூவுக்கு என்ன நடந்ததென நினைவில்லை. இவ்வாறு பாடசாலைச் சுவர்கட்கு வெளியேயும் கற்றல் தொடர்ந்தது.

பாடசாலையின் நற்பெயர் பரவியதால் வெளிமாகாண மாணவர்கள் சிலரும் பாடசாலையிற் சேர்ந்தனர். 1956 SSC பெறுபேறுகள் சிறப்பாயமைந்தன. அப்போது 3 C பெறல் ஒரு சாதனை. வகுப்பிற் பலர் 3 Cக்குக் குறையாது பெற்றனர். சோமநாதனுக்கு 1A, 6 C , 1 D (D என்பது சாதாரண சித்தி) நல்லதம்பிக்கு 1 B, 5 C, 2 D. எனக்கு 1 A, 4 C, 3 D. அம்பலவாணர் HSC (இன்றைய GCE A-L) வகுப்புகளையும் தொடக்கினார். வீட்டார் சோமநாதனைக் கொழும்புக்கு அனுப்பிவிட்டனர். நானும் ஓரிருவருமே எஞ்சினோம். எனக்கு 1957 பிற்பகுதியில் றோயல் கல்லூரிக்குப் புலமைப்பரிசில் கிடைத்தது. வயது காரணமாக, எப்படியும் 1959இற் தான் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சை எழுதலாம் என்பதால் அம்மா கொழும்புக்குப் போக மகிழ்வாக விடைதந்தார்.

றோயல் கல்லூரியில் துணைப் பாடமான ஆங்கிலத்தை விட எல்லாப் பாடங்களிலும் நன்றாய்ச் செய்ய முடிந்தது. ஊரில் நாங்கள் ஆங்கிலத்தில் வாசிப்பது குறைவு. வகுப்பறைக்கு வெளியே ஆங்கிலத்தில் உரையாடுவது அரிது. றோயல் கல்லூரி மாணவர்கள் ஆங்கிலத்திலேயே பெரிதும் உரையாடுவதுடன் மிகவும் வாசிப்பர். அதற்கு ஈடுகொடுக்க இயலாததால் எனக்கொரு கேடும் வரவில்லை. இந்துக் கல்லூரியில் மிகக் குறைந்த உபகரண வசதிகளுடன் நான் செய்த ஆய்வுகூடப் பரிசோதனைகளின் தொகை றோயல் கல்லூரியில் ஒத்த வகுப்புகளிற் சக மாணவர்கள் செய்ததிலும் அதிகம் என்பேன். அதைவிடப், பாடங்களை அன்றன்றே கவனித்துக் கற்பதால் விழுந்து விழுந்து பரீட்சைக்குப் படிக்கும் தேவை இல்லாமையும் எனக்கு உதவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டி விளையாட்டுகளில் எனக்கு ஊக்கங் குறைவு. அயலிற் பிற பிள்ளைகளுடன் ஓடி விளையாடுவது போதுமாயிருந்தது. அப்போது பாடசாலைக்கென விளையாட்டு மைதானம் இல்லை. எனவே கட்டிடங்கள் இல்லாத பெரிய முற்றவெளி முழுதும் எங்களிற் பலருடைய விளையாட்டு மைதானமானது. வரன்முறையான பயிற்றல் இல்லாமலே மாணவர்கள் சிலர் திறமான உதைபந்தாட்டக்காரர் ஆயினர். என் வகுப்பில் எஸ்பி எனும் பத்மநாதனையும், லெட்சுமணனையும் சொல்வேன். லெட்சுமணனின் ஆர்வம் பலகாலம் நீடித்தது. 1970களில் ஒருமுறை திருக்கோணமலை மாணவர் உதைபந்தாட்டக் குழுவொன்றுடன் கண்டிக்கு வந்த லெட்சுமணனை நீண்ட காலத்தின் பின் காணக் கிடைத்தது.

பாடசாலையில் ஒப்பேறிய இரு நிகழ்வுகள் முக்கியமானவை. ஒன்று (ஏழாம் வகுப்பின் போதென நினைவு) பாடசாலை வளவில் நடந்த "திருக்குறள் மாநாடு". குன்றக்குடி அடிகளார் சிறப்பு விருந்தினராக வந்து உரையாற்றி எல்லார் மனதையுங் கவர்ந்தார். அது பாடசாலையில் இலக்கிய ஆர்வத்தை மேம்படுத்தியதென்பேன். மற்றது நான் பாடசாலை நீங்கிச் சில ஆண்டுகளின் பின் நடந்த விஞ்ஞானக் கண்காட்சி. அது ஊரில் விஞ்ஞான அக்கறையை வளர்த்தது எனத் துணிந்து கூறலாம். என் காலத்திற் படித்த சின்னையா எனும் மாணவரின் உற்சாகமான பங்களிப்பு இன்றும் கண்முன் நிற்கிறது. அக் கண்காட்சி பாடசாலையின் பிரகாசமான எதிர்காலத்திற்குக் கட்டியங்கூறியது.

எட்டாம் வகுப்பு வரை, ஒவ்வொரு புதனும் இறுதிப் பாட நேரத்தில் "இலக்கியச் சங்கம்" நடக்கும். எல்லாரும் என்றோ எப்படியேன் ஏதாவது பேசியோ பாடியோ ஆக வேண்டும். பெரும்பாலும் எதையேன் பாடமாக்கி ஒப்பிப்போம். சக மாணவர்கள் சிலர் அழகாகப் பாடுவார்கள். முருகையா "ஆறிரு தடந்தோள் வாழ்க" என்ற பாட்டைப் பன்முறை அருமையாகப் பாடியிருக்கிறார். எல்லாரும் ரசிப்போம். இப்போதும் அப் பாட்டை என்ன ராகத்தில் எவர் பாடக் கேட்டாலும் முருகையாவின் நினைவு வரும். இப்படிப் பல காரணங்களாற் சக மாணவர்களின் நினைவுகள் வந்து போகும். அதைவிடச், சொந்த அலுவல்கட்காக ஊருக்கு வரும் வேளைகளிற் பெரும்பாலும் தவறாமற் காணக்கிடைக்கும் நண்பர் சிதம்பரநாதன் பழைய நினைவுகளை மீட்பார்.

குறும்புக்காக அடிக்கடி பிரம்படி வாங்கும் மாணவர்கள் உட்பட எல்லாருக்கும் பாடசாலை மகிழ்வான அனுபவமாயிருந்தது. எட்டாம் வகுப்புடன் பாடசாலை நீங்கிய ஒரு மாணவனை நினைவிலுள்ளது. பாடசாலை நேரத்திற் கோணேசர் கோவிலுக்கு அருகாகக் கடற்குளித்து அகப்பட்டு வகுப்பறையிற் கடும் பிரம்படி வாங்கும் போது அலறுவானே ஒழிய அழமாட்டான். பிரம்படிக்குப் பின், ஒன்றும் நடவாதது போல சிரித்துப் பழகுவான். கடற்குளிக்கவும் போவான்.

அப்போது ரியூசன் அரிது. பாடசாலை ஆசிரியர் யாரும் சம்பளத்துக்கு வெளியே காசுக்காகக் கற்பித்ததாகத் தெரியாது. பாடசாலையிற் படித்த மாணவர்களிற் பெரும்பாலோர் மத்திய கீழ் நடுத்தர வகுப்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவரிடையில் வீண் போட்டி குறைவு. பலரும் வெறுங்காலுடன் பாடசாலைக்கு வருவதால் நானும் வெறுங்காலுடன் போய்வரப் பழகிவிட்டேன். நடு வெய்யிலில் மதிய இடைவேளையில் வெறுங்காலுடன் வீட்டுக்குச் சாப்பிடப் போவதெல்லாம் வெகு சாதாரணமாகிற்று. கொழும்புக்குப் படிக்கப் போனபோதே சப்பாத்து மீண்டும் காலிற் தொற்றிற்று.

பாடசாலையில் மாணவர்கள் தம்முட் சண்டையிட்டாலும் பொதுவாக இரக்கமானோர். ஒரு அனுபவம் இன்றும் மனதில் நிற்கிறது. ஆறாம் வகுப்பிலென நினைவு. பாடசாலை அதிபர் தவறான காரணத்துக்கு என் காலிற் பிரம்பால் அடித்துத் தோல் சிறிது அள்ளுண்டது. காலை இடைவேளையில் வகுப்பில் அமர்ந்து அழுதுகொண்டிருந்தேன். அதைக் கவனித்த சக மாணவன் நடராஜா (என்னுடன் அதிகம் பழகும் ஒருவனல்ல) என்னிடம் வந்து ஏன் அழுகிறாய் எனக் கேட்டு, என்னைக் காளி கோவிலடிக்குக் கூட்டிச்சென்று விளக்கிலிருந்து எண்ணெய்க் கரி சிறிதைப் புண்ணிற் பூசி "அழாதே. இனி அது மாறிவிடும்" என ஆறுதல் சொன்னான். கருணை கருணை என்பார்களே, அது இப்படித் தான் இருக்குமா?

இந்துக் கல்லூரியைப் பற்றி நான் மிகப் பெருமைப்படும் விடயம் மதச் சகிப்பும் சாதி வேறுபாடின்மையுமே. எனக்கு என்னுடன் படித்த எந்த மாணவனதும் சாதி தெரியாது. என்னுடைய சாதி பற்றியும் கொஞ்சம் வளர்ந்த பின்பே தெரிந்தது. மிகப் பின்தங்கிய சமூகத்தினராகச் சேரியில் ஒதுங்கிய நகரசுத்தித் தொழிலாளரின் பிள்ளைகள் தவிர்ந்த பல சமூகத்தினரும் இந்துக் கல்லூரியிற் படித்தனர். தமிழ், முஸ்லிம், சிங்கள, மலாய், ஆஃப்கானி மாணவர்களுடன் பழகக் கிடைத்தது. பறங்கியர் ஒருவரையும் மலையாளிகள் இருவரையும் ஆசிரியர்களாக அறிவேன். எவரதும் மதத்தைப் பற்றி யாரும் அதிகம் பேசாததால், இன்னாசி எனும் இக்னேஷியஸை விடக் கிறிஸ்தவ மாணவர் எவருடனும் பழகிய நினைவில்லை. புவியியல் கற்பித்த செல்வி. வேதமாணிக்கம் கிறிஸ்தவர் என நம்புகிறேன். திருக்கோணமலைக் கிறிஸ்தவர்களில் ஏகப் பெரும்பாலோர் கத்தோலிக்கர் என்பதால் அவர்கள் சூசையப்பர் கல்லூரியை நாடினர். பெருந்தெருவில் மெதடிஸ்த மிஷன் ஆண்கள் பாடசாலை இருந்தது. வசதி படைத்தோர் பிள்ளைகளை அங்கு அனுப்பார்.

நான் கொழும்புக்குப் போய் ஓரிரு ஆண்டுகளில் இந்துக் கல்லூரியில் GCE A-L வகுப்புகள் உறுதி பெற்றன. பிரித்தானியத் துறைமுகத்தளம் தேசியமயமான பின் "நேவி" வேலை வாய்ப்புகள் ஒழிந்தமை ஒரு தூண்டுதலாயிருக்கலாம்.

இன்று பாடசாலையின் எல்லை மிக விரிந்து, மாணவர் தொகை பன்மடங்காயுள்ளது. வளங்களும் என் பாடசாலை நாட்களினவற்றினும் சிறப்பாயுள்ளன. பழைய இராமகிருஷ்ண மிஷன் இந்துக் கல்லூரியின் ஆத்மநாதமான சாதி இன மத வேறுபாடின்மையைச் சிரத்தில் அணிந்து கல்லூரி மேலும் உயர என் மனமார்ந்த வாழ்த்துகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் நினைவுகள் - பள்ளிவாழ்க்கை

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்பது முதுமொழி. அத்தகைய மனிதனை செம்மைப்படுத்தி புடம் போடுவது அவனது பள்ளிப்பருவமேயாகும். மாதா பிதாவிற்கு அடுத்தபடியாக குருவே வணக்கத்திற்குரியவர். அத்தகைய குருவினை காண்பது பள்ளிக்கூடங்களில்தான் என்றால் மிகையாகாது. குருவும் சீஸ்யரும் இணைந்த வாழ்க்கை இன்று நேற்றல்ல. தொன்று தொட்டு நடந்துவரும் ஒரு நிகழ்ச்சியாகும் ஆதியில் குருகுலவாசமாக இருந்த கல்விகற்றல் இன்று பள்ளிக்கல்வியாக மாற்றமடைந்துள்ளது ! இளமையிற்கல்வி என்பது ஆன்றோர் வாக்கு. தமது மாணக்கரை ஏணியாய் இருந்து ஏற்றிவிடும் ஆசிரியப்பெரும் தகைகள் என்றென்றும் போற்றுதற்குரியவராவர். எனது பள்ளிக்கல்வியின் போது என்னை உருவாக்கி உயர்த்திய பெருமக்களை இக்கட்டுரையின் வாயிலாக நினைவு கூர சந்தர்ப்பம் வழங்கியமைக்கு நன்றியுடையவராவேன்.

திருக்கோணமலையில் எனது தாய் தந்தையர் வாசம் செய்த இல்லமானது இராஜவரோதயம் வீதியில் அமைந்திருந்தது இதே வீதியில் ஸ்ரீ சண்முக வித்தியாலயம் என்னும் பாடசாலை மறைந்த தங்கம்மா என்னும் சீமாட்டியினால் தோற்விக்கப்பட்டு பெண்களுக்கான பாடசாலையாக நிலை கொண்டிருந்தது. இது ஒரு மகளிர் பாடசாலை என்ற போதும் ஆண் பிள்ளைகள் மூன்றாம் தரம் வரை கல்விகற்க அனுமதிக்கப்பட்டிருந்தது இக்காரணத்தால் எனது பள்ளிக் கல்வி ஆரம்பமானது ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில் என்ற போதும், தொடக்கத்தில் அரிவரி வகுப்பில் சேரும் போது நான் விருப்பமுடன் செல்லவில்லை. ஸ்ரீ சண்முக வித்தியாலயத்திற்கு ஒரு பெரிய கதவும் ஒரு சிறிய கதவும் இருபக்கமும் அமைந்துள்ளது. எனது பாட்டி என்னை பெரிய கதவால் கூட்டிச்சென்று வகுப்பில் விட்டு வீடு திரும்பும் முன் நான் சிறிய கதவின் வழியாக வீடு வந்து அடம்பிடித்ததை நினைவு கூர வெட்கமாக உள்ளது. ஆனாலும் படிப்படியாக பள்ளிக்கல்வியில் ஒன்றிய நான் மூன்றாம் தரத்தில் வகுப்பாசிரியையாக இருந்த செல்வி ரதி ஆசிரியை வைக்கும் போட்டிகளில் பரிசுகள் வாங்கியதன் காரணமாக பள்ளிகல்வியில் எனது நாட்டம் அதிகமாயிற்று.

நான்காம் ஆண்டுக்கு எனது தாய் தந்தையர்கள் என்னை திருக்கோணமலையில் பிரசித்தமாயிருந்த, சுவாமி விபுலானந்த அடிகளார் அதிபராக இருந்து உருவாக்கிய, இராமகிருஷ்ண சங்கத்தால் உருவாக்கப்பட்டிருந்த இ.கி.ச இந்துக்கல்லூரியில் சேர்த்துவிட்டனர். பெரிய பாடசாலையை பார்க்கவே பிரமிப்பாக இருந்ததோடு அங்கும் இங்கும் உலாவிய ஆசிரியர்களை பார்க்க பயமாகவும் இருந்தது எமது 4ம் மற்றும் 5ம் தர வகுப்புகள் "காளியப்பு" மண்டபத்தில் நடைபெற்றன. காலை வேளையில் மத்தியில் இருந்த வெளியில் ஒன்று கூடுதலும் நல்ல சிந்தனைகளை உள்வாங்குவதும் மனதிற்கு உவப்பான காரணிகளான போது வெள்ளிக்கிழமை தோறும் அயலில் உள்ள ஸ்ரீபத்திரகாளியம்மன் கோவில் மண்டபத்தே பிரார்த்தனை செய்து மீளும் போது மனதில் ஒரு புது உத்வேகம் உண்டானதென்னவோ உண்மைதான். இந்த பிரார்த்தனையை நடாத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் திரு. நவரெட்னம் போற்றுதற்குரியவராவர். மெல்ல மெல்ல ஆசிரியர்கள் பரீட்சியமான போது அவர்கள் காட்டிய பரிவும் அனுசரனையும் பள்ளிப்பாடங்களை நன்கு கற்றுத்தேற உதவியாயிற்று. இந்தப் பருவத்தில் எனக்கு வகுப்பாசிரியராக இருந்த திரு.கந்தப்பு என்னும் பெருமகனை என்னால் மறக்க இயலாது. வகுப்பில் முதலாவதாக வரும் என்மீது அவர் மிகவும் பாசமும் பரிவும் கொண்டிருந்தார். அவரிடம் கற்ற பாடங்கள் என் மனதில் இன்னும் பசுமையாகவே உள்ளன. நாங்கள் காளியப்பு மண்டபத்தில் இருந்தாலும் விசேடங்கள் நடைபெறும் பொழுது முன்புறத்தில் இருந்த சம்பந்தர் மண்டபத்திற்குள் பிரவேசிப்பதை ஒரு பிரமிப்பாகவே கொண்டிருந்தோம். ஆனாலும் ஆறாம் தரத்திற்கு முன்னேறிய பொழுது எமது வகுப்பறைகள் சம்பந்தர் மண்டபத்திலேயே ஒதுக்கப்பட்டது எமக்கு மிக்க மகிழ்ச்சியை அளித்த விடயமாயிற்று இக்காலத்தில் எனக்கு ஆங்கில ஆசிரியராக வகுப்பெடுத்தவர் பாடசாலையில் கண்டிப்பிற்கு பெயர்போன திரு K. சிவபாலன் ஆசிரியராவார் ஆனாலும் அவருடைய கற்பித்தல் முறை அவர் மேல் இருந்த பயம் போய் ஒரு பக்தியை உண்டு பண்ணியது. இதே வகுப்பில் தமிழ் பாடம் கற்பித்த திரு.புலேந்திரன் ஆசிரியரையும் என்னால் மறக்க இயலாது கம்பராமாயணத்தில் சுந்தரகாண்டம் மேல் ஒரு பற்றுதல் வந்தது அவரின் கற்பித்தல் முறையினாலன்றி வேறேதுமில்லை. இந்த காலகட்டத்தில் பாடசாலையில் நடாத்தப்படும் இராமகிருஸ்ணர் தினப்போட்டிகட்கு எனக்கு கட்டுரை மற்றும் பேசும் உரைகள் தயாரித்து உதவிய திருமதி. கந்தையா ஆசிரியையின் சேவையினையும் மறக்கமுடியாது. இந்த வேளையில் பாடசாலையின் மேற்கு புறத்தில் இருந்த கட்டடம் இரண்டு மாடியாக உருப்பெற்றது. இதனை பார்க்கும் போதெல்லாம் மிக பிரமிப்பாக இருக்கும். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் படிக்கட்டில் ஏறி இறங்கி விளையாடியதை மறக்க முடியாது. எமது பிரமிப்பு நீங்கும் முன்பே எங்களது எட்டாம் வகுப்புகள் மேல் மாடியில் ஒதுக்கப்பட்ட வேளை மிகமிக மகிழ்ச்சியில் நாம் திளைத்ததை இன்னும் நினைவு கூரமுடியும். 8ம் வகுப்பில் எனக்கு கற்பித்த ஆசிரியர்களான திருவாளர்கள் பழனித்தம்பி , சரவணமுத்து, சிவப்பிரகாசம், சிவபாலன் கற்பித்த முறையினால் வட மாகாண ஆசிரியர் சங்கத்தின் பரீட்சைகள் சபையினரால் நடாத்தப்பட்ட J.S.C பரீட்சையில் என்னால் முதல் தரத்தில் தேற முடிந்தது. இதன்போது இந்துக்கல்லூரியில் இந்தப்பரீட்சையில் முதல் தரத்தில் தேறிய முதல் மாணவன் என்ற பெறுபேறு எனது ஆசிரியர்கட்கும் பெற்றோருக்கும் மிக்க மகிழ்ச்சியை அளித்தது.

பொதுவாக நான் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் பெரிதாக பங்குபற்றுவதில்லை ஆனாலும் கால்நடை அணிக்கு தேர்வு செய்யப்பட்ட வேளை மாவட்டத்தில் வென்று கொழும்பு சென்று போட்டியில் பங்குபற்றும் சந்தர்ப்பம் கிட்டிய போது கொழும்பு மாநகரை விழிகளை விரித்து பார்த்ததும் , தெருக்களில் நண்பர்களுடன் நடந்ததும் இன்னமும் நினைவில் நிற்கின்றது இதுவே நான் முதன்முதலில் இலங்கையின் தலைநகரத்திற்கு சென்றது என்பது ஒரு மைல்கல்தான், நான் விளையாட்டுப் போட்டிகளில் பெரிதாக பங்குபற்றாத போதும் ஏனைய விளையாட்டு வீரர்களை ஆரவாரம் செய்து ஊக்குவிக்க தவறவில்லை பாடசாலையில் நான்கு அணிகள் போட்டியின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குபற்றும் சிவானந்தா விபுலானந்தா, விவேகானந்தா மற்றும் இராமகிருஸ்ண அணிகளில் நான் விபுலானந்தா அணியாக இருந்த போதும் சிவானந்தா அணியைச் சேர்ந்த திரு. அபுபக்கர் மற்றும் திரு. தனபாலசிங்கம் ஆகியோர் விரைவுப்போட்டிகளில் முன்னேறி முதற் பரிசை கொள்ளும் போது நானும் அவர்களின் வெற்றிகளை குதூகலத்துடன் கைதட்டி வரவேற்றது நினைவில் உள்ளது இதேபோல திரு தெய்வேந்திரம் ஈட்டி எறிதலில் வெற்றிபெற்ற போதில் மகிழ்ச்சியை வெளிக்காட்டியிருந்தேன் அப்போது பாடசாலைகளுக்கிடையே கிரிக்கெட் போட்டிகள் சாக்கு விரிப்பில் நடாத்துவார்கள். எமது கல்லூரி அணியில் திருவாளர்கள் நிசாம் , பரிசான் , பாலசிங்கம், சத்தியமூர்த்தி ஆகிய வீரர்கள் என் நினைவில் நிற்கின்றனர். கிரிக்கெட் போட்டியை தவிர்த்து கால்பந்தாட்டப்போட்டியிலும் எமது பாடசாலை சோபிக்க தவறவில்லை - அதில் விசேடம் என்னவென்றால் விளையாடிய வீரர்களை விடவும் அவர்களை ஊக்கப்படுத்தி , உற்சாகப்படுத்தி சத்தம் போட்டு விளையாட வைத்த ஆசிரியர் திரு திருச்செல்வத்தை இன்னமும் மறக்க முடியாது.

நான் 8ம் வகுப்பில் படித்தபோது அதுவரை எமது கல்லூரி அதிபரை நேரடியாக சந்திக்கும் சந்தர்ப்பமே வரவில்லை திரு அம்பலவானார் ஒரு நேர்த்தியான அதிபா். வேஸ்டி ஜிப்பா சால்வை, மூக்குகண்ணாடியுடன் அவரை பார்ப்பதேம்மியமாக இருக்கும் அவர் பாடசாலை வளாகத்தில் அவருக்கான விடுதியில் தங்கியிருப்பார் அதிபர் அலுவலகத்தில் இருந்து வெளியே வந்து வகுப்பு விறாந்தையில் குறுநடை பயில்வதை பலமுறை பார்த்திருக்கின்றேன் அவருக்கு முன்பு பல இந்தியர்கள் அதிபராக இருந்திருக்கின்றார்கள் என கேள்விபட்டபோதும் நான் பார்த்ததில்லை. ஆனாலும் எனது JSC சேர்டிபிகேட்டில் திரு. K. சிவபாலன் அவர்களே அதிபராக வந்து கையொப்பமிட்டு கொடுத்திருக்கின்றார். 1963 ம் ஆண்டு 9ம் தரத்திற்கு நான் வந்தபோது ஆங்கில மொழியிலேயே (முன்னைய SSC) பிற்காலத்தில் G.C.L O/L வகுப்புகளை பயில அனுமதிக்கப்பட்டோம். அதிபர் அலுவலகத்திற்கு முன்பாக உள்ள இரண்டு வகுப்பறைகளில் ஒன்று எமது 9ம் தரத்திற்கு ஒதுக்கப்பட்டபோது அது ஒரு சிறப்பு என்றே தாம் கருதினோம். 9ம் தரத்திற்கு வந்தவுடன் எமது நிலை மாறிற்று வாங்குமேசை போய் தனிமேசை நாலுகால் கதிரை என எமக்கு வசதிகள் பெருகியது ஆனாலும் நாலுகால் கதிரையை சரித்து இரண்டு காலில் நிறுத்தி ஆடும் போதெல்லாம் எமது சக மாணவர்கள் அதிபரிடம் வாங்கிக் கட்டிக் கொண்டதை மறக்க முடியாது. 9ம் 10ம் தரத்திற்கு எமக்கு சிறந்த ஆசிரியர்கள் கற்பித்திருந்தார்கள் திருவாளர்கள் கணநாதபிள்ளை வைரமுத்து குணரெட்ணம் பாலசுப்பிரமணியம் மயில்வாகனம் சிவபாலன் ஆகிய சிரேஸ்ட ஆசிரியர்கள் கற்பித்தார்கள் இவ்வேளையில் ஆங்கில மொழிமூலப் பரீட்சைகள் 1964 ம் ஆண்டுடன் நிறுத்தி சுயமொழி மூலம் பரீட்சைகள் 1965ம் ஆண்டு தொடங்கும் என்ற சுற்றறிக்கை வந்தது. வழக்கமாக எட்டாம் ஆண்டு முடிந்து மூன்று ஆண்டுகள் படித்த பின்னரே SSC அல்லது G.C.E O/L எடுத்து வந்த முறையில் எமது வகுப்பில் படித்தோரை (நாம் ஆங்கில மொழியில் கற்றதால்) 1964ம் ஆண்டே எமக்கு முந்திய வகுப்பினருடன் பரீட்சை எடுக்கும்படி அதிபர் ஆசிரியர்கள் எம்மை பணித்தனர் இதன் காரணமாக மூன்று வருட படிப்பை 2 வருடங்களில் முடித்து பரீட்சைக்கு தோற்றினோம் நான் G.C.E (O/L) 1964 ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு எழுதும் போது தமிழ் இலக்கிய பரீட்சை அன்றுதான் திருக்கோணமலையில் பெரிய புயல் அடித்தது. ஆதலால் பரீட்சைகள் தள்ளி வைக்கப்பட்டு பிற்பாடு நடந்தேறியது. இந்த பரீட்சையில் எனது வகுப்பில் நான் ஒருவனே சித்தி பெற்று G.C.E A/L வகுப்பை தொடர அனுமதிக்கப்பட்டேன். ஏனையோர் திரும்பவும் பரீட்சை எடுக்கும் அவலத்திற்கு தள்ளப்பட்டனர். அதேவேளை எமக்கு மூத்தவர்களான 3 வருட கல்வியை முடித்தவர்கள் வகுப்பிலும் யாரும் A/L படிப்பை தொடர முடியாதவர்களாகப் போனது துர்பலம். இந்த காலகட்டத்தில் எமக்கு முன்பதாக எமது கல்லூரியில் A/L வகுப்பிற்கு அனுமதி அளிக்கப்பட்டு அந்த விஞ்ஞான வகுப்புகளில் பெண்களுக்கு இடம் அளிக்கப்பட்டிருந்தது. அந்த வகுப்புகளில் 3 பெண்களும் 2 ஆண்களும் கற்றுவந்தனர் இதைவிட கலை வகுப்புகளில் சிலரும் சேர்ந்து பயின்று வந்தார்கள். நான் 1964ம் ஆண்டு G.C.E. (O/L) பெறுபேறுகளில் அடிப்படையில் A/L செய்ய அனுமதிக்கப்பட்ட பொழுது என்னுடன் நண்பன் ஜெயரெட்ணமும் இணைந்து கொண்டார். நாங்கள் இருவரும் கணித பாடவகுப்புகளில் பயின்ற வேளை செல்விகள் ரஞ்சனி சித்திரவேல் விபூஷானந்தி துரைராஜசிங்கம் மற்றும் திரு ரெட்ணசபா ஆகிய ஐவருமே A/L வகுப்புகளில் பயின்றோம். கணித வகுப்புகட்கு போதுமான ஆசிரியர்கள் இல்லாததால் திரு. குணரெட்ணம் ஆசிரியரே இரண்டு கணிதங்களையும் பௌதீகவியல் வகுப்புகளையும் எடுத்திருந்தார் இராசயனப் பாடத்திற்கு திரு. மயில்வாகனம் ஆசிரியர் பயிற்றுவித்தார் நான் இந்துக்கல்லூரியில் A/L வகுப்பில் பயின்றபோது அரைகாற்சட்டையே அணிந்திருந்தேன் நீள்காற்சட்டை அணியவில்லை 1965ம் ஆண்டு இந்துக்கல்லூரி வரலாற்றில் ஒரு புது நடவடிக்கை தொடங்கப்பட்டது .அதிபர் ஆசிரியர்களினால் ஒரு பாரிய பரிசு வழங்கும் நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்தினார்கள். இப்பரிசு வழங்களில் 10ம் ஆண்டு பரிசுகளில் ஒன்பது பாடங்கட்கான பரிசுகள் எனக்கு கிடைக்க பெற்றது 10வது பாடமான ஆங்கிலத்திற்கு நண்பன் தாயூடீன் என்னை சில புள்ளிகளால் முந்தியதால் அவருக்கு கிடைத்தது.

இந்த பரிசுத்திட்டம் அதிபர் ஆசிரியர்களினால் எனக்கு வழங்கப்பட்ட ஒரு பேருதவியாக நான் எண்ணிக் கொண்டேன் ஏனெனில் A/L வகுப்புகளுக்கு தேவையான பாடபுத்தகங்கள் எனக்கு பரிசாக வழங்கப்பட்டது இப்பரிசளிப்பு விழா காளியப்பு மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது இதில் மூன்று பரிசினை மேடையில் ஏறி இறங்கி நான் பெற்ற போது என்னை இடை மறித்த ஆசிரியர்கள் மிகுதியையும் வாங்கியபின் கீழே போ என்று விளித்ததை நான் இன்னமும் நினைவில் கொள்வேன். இந்த தருணத்தில் இந்து கல்லூரியில் இருந்து ஸ்கந்தவரோதய கல்லூரிக்கு மாற்றமாக சென்ற திரு . கணபதிபிள்ளை ஆசிரியர் (யேர்மன் கணபதிபிள்ளை) செய்த உதவியை நான் என்றென்றும் நினைவில் கொள்வேன் அவர் இந்து கல்லூரியில் தனியே படித்து வந்த எந்தன் நிலைகருதி ஸ்கந்தவரோதயாவில் 6 மாதம் மீட்டல் வகுப்புகளில் சேர்த்து விடுவதாக கூறி என்னை சேர்த்து விட்டார்.

ஸ்கந்தவரோதய கல்லூரி மண்டபத்தில் சுமார் 150ற்கு மேற்பட்ட மாணவர்கள் நிறைந்திருந்த வகுப்பில் தேர்ந்த சிறப்பு வாய்ந்த ஆசிரியர்கள் மீட்டல் வகுப்புகளை நடாத்தும் போதுதான் நான் என்னை பரீட்சைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயார்படுத்தவே இல்லை என்பது புலனாயிற்று அந்த ஆறுமாத மீட்டல் வகுப்புகள் என்னை பரீட்சைக்கு தயார்படுத்த மிகவும் உதவியது என்றால் மிகையில்லை. எனது காலத்தில் செயல்முறைப் பரீட்சையில் தேறினால் மட்டுமே பல்கலைப் படிப்பிற்கு தெரிவாக முடியும் என்ற காரணத்தால் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு செயல் முறைப்பரீட்சைக்கு தெரிவு செய்யப்பபட்டு அங்கு முதன் முறையாக காலடி வைத்த நிகழ்ச்சி என்னால் மறக்க முடியாதது. பரீட்சையை புதிய உற்சாகத்துடன் எதிர்கொண்டு நான்கு பாடங்களிலும் விசேட சித்திகள் பெற்றதன் மூலம் எனது பல்கலைக்கழக வாழ்க்கையை நிச்சயப்படுத்திக் கொண்டேன். அந்தவருடம் இலங்கையில் முதல் மாணவியாக சித்திபெற்ற பெண்ணிற்கு ஒரு அதிவிசேட சித்தியும் மூன்று விசேடசித்திகளும் கிடைக்கப்பெற்றிருந்தது. அந்நாளில் இலங்கையில், A/L ல் தோற்றிய அனைத்து மாணவர்களில் முதல் நூற்று ஜம்பது மாணவர்களே பொறியியற் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர் இப்போதைய மாவட்ட கோட்டா முறை பிற்காலத்தில் தோற்றுவிக்கப்பட்டது. நூற்றுஜம்பது மாணவர்களில் நான் முதல் பாதியில் அடங்கியது பிற்பாடு தெரியவந்தது ஆனாலும் திருக்கோணமலையில் இருந்து ஒற்றையாக 1967ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டதால் 1968ம் ஆண்டு பல்கலைகழக பிரவேசம் தொடங்கியது. கூட வருவதற்கு சக மாணவர்கள் இல்லா நிலையில் மாட்டிக்கொண்டேன் யாழ்நகர் கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் இருந்து வரும் மாணவர்கட்கு சகமாணவர்கள் மட்டும் இன்றி மூத்தமாணவர்களும் அனுசரணையாக இருந்தனர் "றெகிங்" என்னும் பயத்தினால் நான் யாழ்நகர் சென்று அங்கிருந்து பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்த ஒரு சொந்தக்காரரின் துணையோடு எனது பேராதனை பல்கலைக்கழக பிரவேசத்தை செய்ய வேண்டியதாயிற்று. இன்றைய நிலை முழுமையாக மாறிவிட்டது. (எனது சகோதர சகோதரிகள் யாவரும் திருக்கோணமலை மாவட்டத்தில் இருந்தே பொறியியற் பீடம் மற்றும் மருத்துவபீடங்கட்கு தெரிவு செய்யப்பட்டனர்.) பல்கலைக்கழக பிரவேசம் செய்யும் போது ஏனைய மாணவர்கள் ஒரு குழுவாகவே சென்றதை மீட்டிப்பார்க்கிறேன் இதைவிட பல்கலைக்கழக வாழ்க்கையில் பல ஒன்று கூடல்கள் நடைபெறும். கூடுதலாக பள்ளிக்கூட ரீதியாக ஒன்றுகூடல்கள் நடைபெறும். முதலாம் ஆண்டில் நான் தனித்திருந்ததால் எனது கவலையை எனது வகுப்பில் படிக்கும் மட்டகளப்பு மாணவர்களிடையே பகிர்ந்து கொண்டபோது, அவர்கள் தங்களுக்கும் பாடசாலை ரீதியாக ஒன்றுகூடல்கள் நடாத்த போதுமான மாணவர்கள் இல்லாதபடியால் தாங்கள் கிழக்கு மாகாண ஒன்றுகூடல் என்றே நடாத்துவதாக கூறி என்னையும் அழைத்து சென்றனர் அந்த ஒன்றுகூடலில் திருக்கோணமலையை சேர்ந்த செல்வி யோகா சம்பந்தர் (கலைப்பிரிவு) அவர்களை சந்தித்திருந்தேன். பொறியியற் பீட இறுதிப்பரீட்சையில் முதலாம் வகுப்பை தவறவிட்டு இரண்டாம் வகுப்பு சித்திபெற்று ஒருவருடம் பொறியியற் பீடத்திலேயே கற்பித்து 1973ம் ஆண்டில் திணைக்களத்தில் நிறைவேற்றுப் பொறியியலாளராக சேர்ந்து கொண்டேன்.

எனது காலத்தில் பொறியியலாளர்கட்கு போதிய அரசாங்க வேலைகள் இல்லாத வேளையிலும் என்னால் அரச சேவையில் சேர்ந்து கொள்ள முடிந்தது சிறப்புத்தான். அரச சேவையில் 1973 முதல் இணைந்து கொண்ட நான் காலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மாகாணம், கொழும்பு மேல்மாகாணம் உன்னிச்சை மட்டகளப்பு கிழக்கு மாகாணங்களில் சேவையாற்றி 1976இல் லண்டன் மற்றும் இலங்கை பொறியியலாளர் சங்கம் நடாத்தும் தொழில்முறை பட்டங்களையும் பெற்று 1978 இல் திருக்கோணமலைக்கு நிறைவேற்றுப் பொறியியலாளராக வந்து சேவையாற்றிய காலத்தில். இந்துக்கல்லூரி உப அதிபர் திரு. அருணகுமார் அவர்களுடன் இணைந்து "இராமகிருஸ்ண சேவாசங்கத்தையும் உண்டாக்கி அதன்மூலம் பல நற்காரியங்களை செய்துவர முடிந்தது இறையருள் என்றே கொள்ள வேண்டும். மேலும் திரு. தண்டாயுதபாணி அதிபராக இருந்த காலத்தில் இந்துக்கல்லூரி அபிவிருத்தி சபை (SDS) யில் செயலாளராக கடமையாற்றி வந்த வேளை இந்துக்கல்லூரியை தேசிய பாடசாலையாக்கும் திட்டம் முன்மொழியப்பட்டது இந்த எண்ணக்கரு உருவாகிய காலத்தில் இலங்கையின் பிரதம மந்திரி கௌரவ பிரேமதாசா திருக்கோணமலைக்கு விஜயம் செய்கிறார் என கேள்வியுற்றதும் எனக்கு பரிச்சயமாக இருந்த இராமகிருஸ்ண சங்கத்தலைவர் சுவாமி ஆத்மகனானந்தஜி அவர்களை திருக்கோணமலைக்கு வரவழைத்து அவர் மூலம் எமது தேசிய பாடசாலை திட்டத்தை கௌரவ பிரேமதாசாவிற்கு கொண்டு சென்றதன் காரணமாக இந்துக்கல்லூரி தேசிய பாடசாலை தரத்திற்கு உயர்த்தப்பட்டது ஒரு சிறப்பம்சம். திரு. அருணகுமார் மறைவிற்குபின் நானும் திருக்கோணமலையினின்றும் மாற்றமாகி தேசிய பெரும் திட்டங்களுக்குள் உள்வாங்கப்பட்டதால் இராமகிருஸ்ண சேவாசங்கத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பித்து போயின. இந்த சங்கங்கத்தினால் கொழும்பு இராமகிருஸ்ண சங்க உதவியுடன் நடாத்தப்பட்ட திட்டங்களில் புத்தக கண்காட்சி திருக்கோணமலை மாணவர்கட்கு பெரிதும் உதவியாக இருந்தது இந்த சங்கம் மீளவும் செயற்பட்டால் பல ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களை செய்ய முடியும்.

நான் 1983ம் ஆண்டு கலவரத்திற்கு பிற்பட்ட காலங்களில் பாதிக்கப்பட்டவர்கட்கு தேவையான உதவிகளை பல ஸ்தாபனங்கள் மூலம் அளித்ததற்கும் எனது சேவையில் வடக்கு கிழக்கு மாகாணத்தின் பிரதி பிரதம செயலாளர் (பொறியியல்) பதவிகளை வகித்ததோடு தேசியத்திட்டங்களுக்கு பொறுப்பாக திட்டத்தலைவராக பணியாற்றவும் தேவையான ஆளுமையையும் திடசங்கற்பத்தையும் என்னில் வளர்த்தது இந்துக்கல்லூரியில் நான் பெற்ற அனுபவங்கள் என்றால் மிகையாகாது. இதன் போது இவற்றை என்னுள் ஏற்றிவிட்ட ஆசிரிய பெருமக்களை நான் என்றென்றும் நினைவில் கொள்வேன். இதில் குறிப்பிட்டு சொல்ல வேண்டியது 1964இல் புயலின் போது அதிபர் K.சிவபாலன் அவர்கள் தன்னலம்பாராது மாணவரது பங்களிப்போடு நகரை சுத்தம் பண்ணிய வேலைத்திட்டத்தில் பெற்றுக்கொண்ட பாடம் தான். எனக்குள் அகதிகளாக இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி செய்யும் பண்பை உண்டாக்கியது. இப்பெருமக்கள் சேவையை தலைதாழ்த்தி இன்றும் நினைவு கூர கடமைப்பட்டுள்ளேன். என்னை போலவும் என்னை விட மேலாகவும் ஆளுமை கொண்ட மாணாக்கரை வளர்க்க இருக்கும் இந்துக்கல்லூரி மென்மேலும் பல் வளங்களை கொண்டு வளர வேண்டும்மென எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**எந்திரி து. தவசிலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றிவிட்ட ஏணியாய் என்றும் என் நெஞ்சில்

ஒரு கட்டிடத்துக்கு அத்திவாரம் எந்தளவுக்கு முக்கியமோ அதேயளவு ஒரு மனிதனின் வளர்ச்சிக்கு அவனது பாடசாலையும் முக்கியத்துவம் பெறுகிறது. அத்திவாரம் என்றுமே மண்ணுக்கு அடியில் இருந்து தன் கடமையை செவ்வனே செய்து ஒரு கட்டிடத்தின் வெளிப்பெருமைகளை வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு பிரம்மாண்ட தோற்றத்துடன் காட்டிக்கொண்டு தான் இருக்கப் போகிறது.

அதே போன்று விளைச்சல் தரும் ஒரு மரத்தையோ அல்லது நிழல் தரும் ஒரு பெரு விருட்சத்தையோ பார்த்து யாரொருவரும் சிந்திப்பதில்லை இப்பயிருக்கோ விருட்சத்துக்கோ வித்திட்ட அந்த பெருந்தகை யாரென்று அந்த வித்திட்ட பெருந்தகை மென்மேலும் ஆயிரக்கணக்கான மரங்களுக்கும், விருட்சத்துக்கும் தனது தொடர் வித்திடலையும், உரமிடுதலையும், உழுதலையும் செவ்வனே செய்து இவ்வுலகை பொன்னுலகாக்கி கொண்டுதான் இருக்கிறது இருக்கவும் போகிறது.

நான் இங்கு குறிப்பிட்ட ஒளிர்மிகு கட்டிடமும், விளைச்சல் தரும் மரங்களும் நிழல் தரும் விருட்சங்களும் வேறு யாருமில்லை. உலகெங்கும் பரந்து விரிந்து பற்பல தொழில் வெற்றிகளுடன் வாழும் நம்மில் பலரே.

அதே நேரத்தில் அத்திவாரம் என்ற அதிமரியாதை சொல்லுக்கு உரித்தானது நாம் கற்ற நமது பாடசாலையே. அத்துடன் மரமாகிய நம்மை வித்திட்ட, உரமிட்ட அந்த பெருந்தகைகள் நம்மை கற்பித்த நம் ஆசிரியப் பெருந்தகைகளே.

இப்படி ஒரு பாடசாலையும் சரி ஆசிரியப் பெருந்தகைகளும் சரி ஆயிரக்கணக்கான வெற்றியாளர்களாகிய எமக்கு வாழ்வின் ஆரம்ப கல்வியில் மிகப்பெரும் பங்கு வகித்தது மாத்திரமன்றி மேன்மேலும் இன்னும் பல்லாயிரங்களை உருவாக்கிக்கொண்டு தான் இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட பல்லாயிரக்கணக்கான வெற்றியாளர்களில் அடக்கமான ஒருவனாக எனக்கு என் பாடசாலையும் சரி என் ஆசிரியர்களும் சரி எனது பாடசாலை வெற்றிக்கும் எனது உத்தியோகத்தின் தொடர் வெற்றிக்கும் அவர்களே அத்திவாரமும் வித்திட்டவர்களும் என கீழ்வரும் நான் ஏறிய ஏணிப்படிகளின் சாராம்சம் வெளிச்சம் போட்டுக்காட்டட்டும்.

எனது வெற்றியினை இங்கு சமர்ப்பிப்பதன் மூலமாக எல்லாப்புகழும் என் பாடசாலைக்கும் என்னைக் கற்பித்த என் ஆசான்களுக்கும் என இத்தால் கூறுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் யார், என்னை அத்திவாரமிட்ட, வித்திட்ட என் பெருமை மிகு பாடசாலையையும் ஆசிரியர்களையும் நான் அடைந்த உயரங்களை இதில் பதிவதன் மூலம் என் வெற்றி என் பாடசாலையினதும் ஆசிரியர்களினதும் வெற்றி என்ற பெருமிதப்பில் இதோ:

தற்போது அமெரிக்காவின் நியூஹாம்ஷையர் என்ற மாநிலத்தில் வசித்து வரும் ரவி என்று அழைக்கப்படும் குலசேகரம் ரவிச்சந்திரன் ஆகிய நான் 1989 மார்கழியன்று தான் எனது கடைசிப் பள்ளிப்பருவத்தை எனது வாழ்க்கையில் பதின்மூன்று வருடங்களாக ஒன்றிப்பிணைந்த தி/ஸ்ரீ கோணேஸ்வர இந்துக்கல்லூரியில் முடித்துக்கொண்டேன். என் பாடசாலை என்னை பின்வரும் வளர்ச்சிக்கு வித்திட்டது என்பதை இந்தத்தருணத்தில் பெருமையுடன் நினைவு கூரவும் நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளேன். தற்புகழ்ச்சியை வெறுப்பினும் எல்லாப்புகழும் என் பாடசாலைக்கே என்ற தாற்பரியத்துடன் இதை எழுதுகிறேன். (இது ஒரு சாராம்சம்):

1989 மார்கழியில் நடந்த உயர்தர பரீட்சையில் முதன் முதலாக கிழக்கு மாகாணத்தில் 4A சித்தியெய்தி திருக்கோணமலையை தேசிய மட்டத்துக்கு எடுத்துச்சென்றது.

எனது உயர்தர பெறுபேற்றில் இரசாயனவியலிலும், பிரயோக கணிதத்திலும் இலங்கையின் அதிகூடிய மதிப்பெண்கள் பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனது மொத்தப் பெறுபேறும் இலங்கையில் முதல் ஐவரில் ஒருவர் என்ற ஒரு இடத்தையும் பெற்றுத்தந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது..

கிழக்கு மாகாணத்தின் முதன்மையும் முழு இலங்கையின் முதல் ஐவரில் ஒருவருமான நிலையின் பொருட்டு இலங்கையின் ஜனாதிபதி அங்கீகாரத்துடன் அவுஸ்திரேலியா பயணித்தது.

உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகமான கேம்பிரிட்ஜ் (Cambridge) க்கு அதி உயர் மதிப்புக்குறிய "Cambridge Commonwealth Trust" புலமைப்பரிசிலில் கல்வி கற்றது.

வழக்கமாக மொத்தம் ஐந்து அல்லது ஆறு வருடங்கள் எடுக்கும் BA & MA என்ற இரு பட்டங்களையும் மூன்று வருடத்தில் பெறும் வழியை தேர்ந்தெடுத்து "honors" முறையில் பெற்றது.

இன்றைய தேதி வரைக்கும் Cambridge Commonwealth Trust இன் ஒரு Fellowship அங்கத்தவராக உள்ளது.

உலகிலே தலை சிறந்த இலத்திரனியல் தொழில்நுட்ப (Electronic Manufacturing) நிறுவன அமைப்பில் ஒன்றாகிய Celestica வின் Toronto



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைப்பீடத்தில் (Head Quarters) ஆரம்ப பொறியியல் துறையை ஆரம்பித்தது.

அங்கிருந்து அமெரிக்காவில் தலைமைப்பீடத்தை கொண்ட மின்விளக்கு கண்டுபிடிப்பின் தந்தையாகிய தோமஷ் அல்வா எடிசன் ஸ்தாபித்த General Electrics (GE) என்றழைக்கப்படும் உலகின் அதிகளவில் பரந்து விரிந்த ஸ்தாபனத்தில் இருபத்திரண்டு வருடங்களாக பல்வேறு தொழில்நுட்ப தேர்ச்சியில் பங்கெடுத்தும் தலைமை வகுத்தும் அதுவே எனது தற்போதைய உலகளவிலான தொழில்நுட்ப இயக்குனர் பதவியை அடையவும் வழிவகுத்தது.

(பின்குறிப்பு : இக்கால ஆரம்ப காலகட்டத்தில் அதீத ஆவல் அல்லது ஆர்வக்கோளாறு (excessive desire) காரண அடிப்படையில் GE இல் வேலை செய்த காலங்களில் University of Nevada பல்கலைக்கழகத்தில் எனது இரண்டாவது Master of Engineering பட்டத்தை Digital Signal Processing என்ற தொழில் நுட்பத்தில் 7A and B+ என்ற பெறுபேறுடன் "Dean List" முறையிலும் சித்தியடைந்தது)

கடந்த ஏழு வருடங்களில் உலகளவிலுள்ள முப்பதுக்கும் மேலான இலத்திரனியல் பொருட்களை உற்பத்தி செய்யும் ஸ்தாபனங்களையும் அதிலுள்ள பலநூறுக்கும் மேற்பட்ட பல தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு முறிகோடு முனையில் (dotted line manager) தலைமை வகித்தும் ஆலோசனை வழங்கியும் (consultancy) முகாமைத்துவ மேற்பார்வை செய்தும் உலகளாவிய இயக்குனர் (Global Director) பதவியிலும் உள்ளேன். இந்நாட்களில் பல தொழில்நுட்ப ஆலோசனைகளை குறைந்த செலவில் அதி உச்ச பலனில் செய்வதை காட்டி ஆசியநாடுகளின் சில நிறுவனங்களில் பேராசிரியர் குலா (Professor Kula) என்ற பட்டப்பெயருடனும் .......

எல்லாப்புகழும் என்னை வெளிக்கொணர்ந்த என்னை வித்திட்ட என் பள்ளி தி /ஸ்ரீ கோணேஸ்வர இந்துக்கல்லூரிக்கே.

**குலசேகரம் ரவிச்சந்திரன்**

**தி/ஸ்ரீ கோணேஸ்வர இந்துக்கல்லூரி முன்னாள் மாணவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ந்து நிற்கும் எமது கல்லூரியின் உயர்தர கல்வியின் வளர்ச்சி பற்றிய ஒரு பார்வை

கந்தசாமி விஜயகுமரகுரு B.Eng.(London)

பழைய மாணவர் சங்க நிர்வாக குழு உறுப்பினர் 1982 - 83

பழைய மாணவன் 1963 - 74

1972 - 74 காலப் பகுதியில் உயர் தரக் கல்வியில், குறிப்பாக விஞ்ஞானப் பிரிவில் அடையப்பட்ட அமோக வளர்ச்சியினால் ஏற்பட்ட பிரமிப்பு இன்னும் என் உள்ளத்தைவிட்டு அகலவில்லை. அந்த வளர்ச்சிக்கான காரணங்களை இங்கு விபரித்து 125வது வருட விழாவை சிறப்பிக்க எண்ணுகின்றேன்.

இதற்கான தகவல்களை சமகாலத்தில் படித்த நண்பர்கள், ஏனைய பழையமாணவர்கள் மூலமும் கல்லூரியிலிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் மூலமும் தேடிய போது 1950ஆம் ஆண்டின் பிற்பகுதிகளில் இதுவரை அறியப்படாத பல தகவல்கள் இருப்பதனையும் கண்டறிந்து அவற்றினையும் இக்கட்டுரையின் பின் பகுதியில் சுருக்கமாக குறிப்பிட்டுள்ளேன்.

## அரை நூற்றாண்டுக்கு முன்பு திருக்கோணமலை மாவட்டத்தில் நிலவிய கல்விச் சூழ்நிலை

திருக்கோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 1960ஆம் ஆண்டுகளில் Junior School Certificate (JSC) என அழைக்கப்பட்ட 8ஆம் தர வகுப்பில் சித்தியடைவது தற்போது உயர்தர வகுப்பில் சித்தியடைவது போல் ஒரு பெரிய விடயமாக பார்க்கப்பட்டது.

1960களில் Senior School Certificate (SSC) எனப்பட்ட 10ஆம் தரத்தில் சித்தியடைவது (தற்போதைய GCE O/L) இன்றைய காலகட்டத்தில் பல்கலைக்கழக அனுமதி கிடைத்ததைப் போல் ஒரு சாதனையாகவே கருதப்பட்டது.

8ஆம் வகுப்பு தகைமையுடன் கடற்படைத்தளத்திலோ அல்லது துறைமுகத்திலோ பொருத்தமான வேலை வாய்புகள் கிடைப்பதும், மாவட்டத்தின் பின்தங்கிய நிலைமையும் உயர்தர வகுப்பிற்காக தேவைப்பட்ட தகைமைகளும்தான் இப்படியான நிலைமைக்கு முக்கிய காரணங்களாகும்.

## 1972ற்கு முன்பு இந்துக்கல்லூரி உயர்தர வகுப்புகளின் நிலைமை

1970ற்கு முன்பு உயர்தர வகுப்பில் கலைப்பிரிவானாலும் சரி, விஞ்ஞானப்பிரிவானாலும் சரி 7ற்கு உட்பட்ட மாணவர்களே இருந்தனர். சாதாரணதர பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் தகுதி பெறுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டவர்களே உயர்தரத்தில் இணைத்துக் கொள்ளப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Photo 1: 1970 - 72, 1971 - 73 & 1972 - 74 Science and 1970 - 72 Arts Students with Teachers and Principal



### Front row seated Teachers - Left to right:

Mr.Thillainathan, Mr.S.Thatchanamoorthy, Mr.A.Nadaraja (The Principal), Mr.Varatharajan, Mr. Gnanapragasam.

### 2nd row standing - Left to right:Teachers :

Miss.Rajasooriyar, Miss.Markkandu, Miss.Aloysious, Miss.Kamalambihai

Students:

A.Krishnajodhy, S.Inthumathy, K.Ambigaivathana,
N.Nirmaladevi, S.Shanthinidevi, M.Suseeladevi, M.Thevarani.

### 3rd row standing - Left to right:

K.Sithiravelauthaguru, K.Saravanapavan, T.Sotheeswary, A.Srirangapalan, K.Vijayakumaraguru, Charles Chellappillai, M.Vinayagamoorthy, M. Nanthapalan, A.Sornalingam, Martin Ananthakumar, S.Kanagasingam, N.Srikanthan, K.Amsadeva

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணதர பெறுபேறுகள் வெளிவந்ததும் தகுதியானவர்களில் வசதியான ஓரிருவர் வெளிமாவட்டங்களுக்கு செல்ல மிகுதியானவர்கள் தொடர்ந்திருப்பர். இவர்களுக்கு தகுதியான ஆசிரியர்களைப் பெறுவது மிக கடினமாக (குறிப்பாக விஞ்ஞானத்துறைக்கு) இருந்தது. சில பாடங்களை சாதாரண தரத்திற்கு கற்பிக்கும் ஆசிரியர்களே தங்கள் வசதிக்கு ஏற்றாற்போல் உயர்தரத்திற்கும் கற்பித்து சமாளித்தனர். மேலும் விஞ்ஞானத்துறையில் பல்கலைக்கழகத்திற்கு தகைமை பெறுவதற்கு பேராதனை அல்லது கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு சென்று ஆய்வுகூட செய்முறைப் பரீட்சையிலும் (Laboratory Practical Exam) சித்தியடைய வேண்டும். இந்த ஆய்வுகூட செய்முறைப் பரீட்சைக்குரிய பயிற்சிகளைப்பெற்று தங்களை தயார்படுத்திக் கொள்வதற்கு பொருத்தமான நவீன ஆய்வுகூட உபகரணங்கள் எமது கல்லூரியில் இருக்கவில்லை.

1971ஆம் ஆண்டுவரை பேராதனையையும் கொழும்பையும் விட வேறு எந்தவொரு இடங்களிலும் பல்கலைக்கழகங்கள் இல்லாதபடியால், தெரிவாகிப் போகக்கூடிய மாணவர்களும் அதற்கேற்றாற்போல் குறைவாகவே இருந்தனர். 1970ம் ஆண்டிற்கு முன்னர் வெளிமாவட்டங்களின் பரீட்சை நிலையங்களிலேயே எமது மாவட்ட விஞ்ஞான பிரிவு மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற வேண்டியிருந்தனர். இவ்வளவு கடினமான சூழ்நிலைகள் காரணமாக எமது கல்லூரியிலும், திருக்கோணமலை மாவட்டத்திலும் உயர்தர வகுப்புகளில் மாணவர்களும் பெற்றோர்களும் ஆர்வமில்லாமல் இருந்ததில் வியப்புகள் ஒன்றுமில்லை.

## பல்கலைக்கழக தெரிவிற்கு தளர்த்தப்பட்ட விதிமுறைகள்

பெரும்பாலும் 1966/67களில் பல்கலைக்கழகங்கள் நேரடியாக நடாத்தும் நுழைவுப் பரீட்சை (Entrance Exam) ஓரிருதுறைகளை விட ஏனைய துறைகளுக்கு இல்லாமல் செய்யப்பட்டது (ஆதாரம் : The Universities and the Government of Sri lanka by Kingsley De Silva). எனினும் கட்டடக்கலை (Architecture), தகவல் தொழில் நுட்பம் (IT) போன்ற துறைகளுக்கு தற்போதும் பல்கலைக்கழக நுழைவுத்தேர்வு ஒன்றை கடந்தாக வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாவட்ட அடிப்படை சலுகைகள்

1972ஆம் ஆண்டில் திருக்கோணமலை போன்ற பின்தங்கிய பிரதேசங்களில் இருந்த வளப் பற்றாக்குறைகளை கருத்தில் கொண்டு அவற்றை ஈடு செய்யும் விதமான ஒரு பல்கலைக்கழக தெரிவு முறையொன்று உயர் கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த முறையின்படி ஒரு மாணவர் பாடங்களில் எடுத்த மொத்த புள்ளிகளுடன் (Marks) மாவட்டமட்டத்தில் புள்ளிகளின் அடிப்படையில் வகிக்கும் இடத்தினையும் கருத்தில் கொண்டே தெரிவுகள் தீர்மானிக்கப்பட்டன.

1970ஆம் ஆண்டும் 1971ஆம் ஆண்டும் ஆரம்பிக்கப்பட்ட உயர்தரவகுப்பு மாணவர்களுக்கு 30% திறமையையும் 70%



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டமட்டத்தில் வகிக்கும் நிலைமையையும் கருத்தில் கொண்டு தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

1972ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட உயர்தர வகுப்பினருக்கு 100% மாவட்ட அடிப்படையிலேயே பல்கலைக்கழக தெரிவுமுறை நடைமுறைப் படுத்தப்பட்டது. இந்த தெரிவு முறை அபிவிருத்தியடைந்த யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற மாவட்டங்களை பெரிதும் பாதித்திருந்தாலும் திருக்கோணமலை போன்ற கல்வி வசதிகள் குறைந்த பிரதேசத்து மாணவர்களுக்கு பெரும் வாய்ப்பாகவும் ஊக்குவிப்பாகவும் அமைந்தது.

இவை சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்களை https://en.wikipedia.org/wiki/standardization என்ற இணையத்தில் கண்டறியலாம்.

## 1970 – 1973 காலப்பகுதியில் ஏறிய படிகள்

மாவட்ட அடிப்படை சலுகைகள் அறிமுகப்படுத்தப்பட்ட இக்காலப் பகுதியில் 7 ஆண்டுகள் இடைவெளியின் பின்னர் மீண்டும் ஒரு சிலர் பல்கலைக்கழகத்திற்கு தகைமை பெறத்தொடங்கினர்.கல்லூரியில் எத்தனை மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிறார்கள் என்பதனைக்கொண்டு அக்கல்லூரியின் உயர்தரக்கல்வியின் தரத்தை பெரும்பாலும் மதிப்பிடலாம். எனவேதான் இக்கட்டுரையில் வெவ்வேறு காலங்களில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களின் எண்ணிக்கைகள் குறிப்பிடப்படுகின்றன. 1970ல் ஆரம்பிக்கப்பட்ட உயர்தர வகுப்பில் கற்ற திரு.S.ஞானசேகரன், 1972ல் பரீட்சைக்கு தோற்றி முதன் முதலில் பேராதனை பல்வைத்திய துறைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். முதன் முதலில் எந்தவொரு விஞ்ஞானப்பிரிவிற்கோ அல்லது ஒரு வைத்தியதுறையிற்கோ தெரிவாகினார் என்ற வரலாற்றுப் பெருமை இவருக்கே உரியது.

இதே 1972இல் பரீட்சை எழுதிய க.சரவணபவன், 7ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்பு கலைப்பிரிவில் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். இவர் உயர்தரத்தை எமது கல்லூரியில் கற்றிருந்தார்.

இக்காலப் பகுதியில் ஆசிரியர்களாக, திரு.K.வல்லிபுரநாதன் (விலங்கியல்), திரு.இ.கணபதிப்பிள்ளை/ செல்வி.கு.சதாசிவம் (தாவரவியல்), திருமதி.சிற்றம்பலம் / திரு.நல்லநாதன் (பௌதீகம்), திருமதி.சிவாலிங்கம/ திரு.தர்மராஜா (இரசாயனவியல்), திரு.ராஜாமணி/ திருமதி சிற்றம்பலம் (கணிதம்), திரு.சு.செல்வரெட்ணம் (வரலாறு , அரசியல்), திரு.சு.கிருஷ்ணபிள்ளை / திரு.வைரமுத்து (தமிழ்), திரு.புலேந்திரன்/ செல்வி.மாரக்கண்டு (புவியியல்) ஆகியோர் கடமையாற்றினார்கள்.

இதற்கடுத்த வருடம் 1973ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றிய செல்வி.S.சாந்தினிதேவி எமது கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகம் சென்ற முதலாவது மாணவியாக பெருமை பெற்றார். வித்தியாலங்கார பல்கலைக்கழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப்பிரிவிற்குத் தெரிவாகிய இவர் சண்முகா மகளிர் கல்லூரியில் சாதாரண தரம் வரையிலும், உயர் தரத்தை எமது கல்லூரியிலும் கற்றவராவார்.

அதே 1973ஆம் ஆண்டுப் பரீட்சையில் இரு மாணவர்கள் பேராதனை மருத்துவத்துறைக்கு முதன் முறையாக தெரிவாகினர். அவர்களில் ஒருவரான திரு.சார்ள்ஸ் செல்லப்பிள்ளை, சிரேஸ்ட வகுப்புக்களை புனிதசூசையப்பர் கல்லூரியில் கற்று உயர்தர வகுப்பிற்கு எமது கல்லூரியில் இணைந்தவர். மற்றவரான திரு.கு.ஹேமச்சந்திரா உயர்தர வகுப்பினை யாழ்ப்பாணத்தில் கற்று பின்பு எமது கல்லூயில் இணைந்து பரீட்சைக்குத் தோற்றியவராவார். அவ்வருடத்திலேயே புனித சூசையப்பர் கல்லூரியின் பழையமாணவரான திரு.ரோமியோ குமாரசாமியும் உயர்தர வகுப்பினை யாழ்ப்பாணத்தில் கற்று பரீட்சைக்கு எமது கல்லூரி மூலம் தோற்றி முதல் முறையாக மொறட்டுவ பொறியியல் துறைக்குத் தெரிவாகினார்.

இக்காலப் பகுதியில் 70% மாவட்ட அடிப்படை சலுகைகள் அமுல் நடத்தப்பட்டுங்கூட அந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்வதற்கு உயர்தர வகுப்பில் மாணவர் எண்ணிக்கை குறிப்பிடும்படியாக இருக்கவில்லை. சலுகைகள் கிடைக்கும் என்ற தகவல் போதிய அவகாசத்தில் அறிவிக்கப்படாமையே பெரும்பாலும் சாதாரண தரத்தினர் உயர்தர வகுப்பில் இணையும் தகமையைப்பெற தங்களை தயார் செய்து கொள்ளமுடியாமல் போனதற்கு காரணமாக இருக்கலாம்.

## 1972இல் தொடங்கிய பரிணாம வளர்ச்சி

1971ஆம் ஆண்டில் நடந்த சாதாரணதர பரீட்சையில் வழமைக்கு சற்று அதிகமான எண்ணிக்கையில் மாணவர்கள் பல பாடங்களில் திறமைச் சித்திகளை பெற்றதினால் உயர்தர வகுப்பின் கணித விஞ்ஞான பிரிவிற்கு இணைந்த மாணவர்களின் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்தது. திருக்கோணமலை நகரின் ஏனைய கல்லூரிகளைச் சேர்ந்த தகுதியான மாணவ மாணவிகளும், எமது கல்லூரியில் சாதாரண தரத்தினை கற்று விலகியிருந்த மாணவர்களும் என 14 பேர் வந்து இணைந்து உயர்தர வகுப்புக்களை மேலும் பலப்படுத்தினார்கள். அத்துடன், ஏற்கனவே வெளி மாவட்டங்களுக்குச் சென்று சாதாரண தரம் வரை கற்று உயர்தரக் கல்வியை தொடரவிருந்த எமது ஊர் மாணவர்கள் 14 பேர், மீண்டும் திருக்கோணமலைக்கு வந்து எமது கல்லூரியில் இணைந்து மொத்த உயர்தர வகுப்பு மாணவர்கள் எண்ணிக்கையினை 41ஆக உயர்த்திவிட்டனர். இது முந்திய ஆண்டினை விட நான்கு மடங்கு அதிகம் என்பது வியக்கத்தக்க விடயமாகும். திருக்கோணமலைக்கு பின்தங்கிய மாவட்டத்திற்கான சலுகைகள் கிடைக்கும் என்பதனால் எவரும் வேறு மாவட்டங்களுக்கு உயர்தரம் கற்க விலகிச் செல்லவில்லை.

உயர்தர வகுப்பு ஆரம்பித்த சில வாரங்களில் பௌதீக பாட ஆசிரியராக திரு. S. தட்சணாமூர்த்தி அவர்கள் கிடைக்கப்பெற்றார். அதற்கு முன்பு பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்களாக பௌதீக பாடத்திற்கு ஆசிரியர்கள் ஒருவரும் பாடசாலையில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தகுதியான கணித ஆசிரியர் ஒருவரும் விரைவில் வருவார் என கல்லூரி நிர்வாகம் எதிர்பார்த்து நம்பிக்கையுடன் உறுதி செய்தது. ஆனாலும் முதல் தவணை இறுதிவரை கணித ஆசிரியர் வந்து சேராதபடியால் ஓரிரு திறமையான மாணவர்களின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை யாழ்ப்பாண பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கு ஆலோசித்தனர். அப்படியான சில மாணவர்கள் விலகிப்போனால் 1972ஆம் ஆண்டில் பெரும் உற்சாகத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கணித விஞ்ஞான பிரிவு பாதிக்கப்பட்டு விடும் என்று அங்கலாய்க்கையில் ஒரு தற்காலிக தீர்வு வந்து வாய்த்தது. பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியிலிருந்து மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் துறைக்கு தெரிவாகி ஆரம்ப நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த திருக்கோணமலையைச் சேர்ந்த எமது கல்லூரியின் பழைய மாணவரான திரு.மு.பாலச்சந்திரன் அவர்களுடன் தொடர்பு கொண்டு இது பற்றி விபரித்த போது அவர் தாமாகவே முன் வந்து கணித பாடங்களை (தூயகணிதம்,பிரயோககணிதம்) கற்பித்து உதவி புரிவதற்கு பெருந்தன்மையுடன் சம்மதித்தார். இந்த ஒழுங்கைக்கூறி யாழ்ப்பாண பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்ப திட்டமிட்ட பெற்றோர்களிடம் சென்று எம் கல்லூரியிலேயே அவர்களை வைத்திருக்க இணங்க வைத்தோம்.

இப்படியிருக்கையில் இரண்டாம் தவணையின் ஆரம்பத்தில் தகுதியான ஒரு உயர்தரவகுப்புக்குரிய கணித ஆசிரியராக திரு. ஞானப்பிரகாசம் அவர்களை கல்வித்திணைக்களத்தால் எமது கல்லூரிக்கு அனுப்ப முடிந்தது. இதனாலும் ஏனைய ஆசிரியர்களின் சேவையினாலும் உயர்தர கணிதவிஞ்ஞான பிரிவு எதுவித தடையுமின்றி தொடர்ந்தது.

## மாணவிகளை அனுமதிப்பதில் ஏற்பட்ட தயக்கம்

திருக்கோணமலையிலிருந்த பெண்கள் கல்லூரிகளில் சாதாரண தர பரீட்சையில் உயர்தரத்திற்கான தகைமைகளைப் பெற்றும் கூட உயர்தர வகுப்பொன்றிற்கான வாய்ப்பில்லாமையினால் கல்வியை கைவிட்டு ஓரிரு வருடங்களாக வீட்டிலிருந்த மாணவிகளும் எமது கல்லூரியில் உயர்தரத்தில் சேர விண்ணப்பித்திருந்தனர். இதற்கு சில ஆசிரியர்கள் தயக்கத்தை காட்டியிருந்தாலும், இறுதியில் கல்லூரி நிர்வாகம் அவர்கள் அனைவரையும் ஏற்றுக் கொண்டது. அப்படியான மாணவிகளின் வருகைக்கு ஆதரவாக செயற்பட்ட ஆசிரியர்களான திரு.S.செல்வரெட்ணம், திரு.K.வல்லிபுரநாதன் ஆகியோர் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.


## புனித மரியாள் கல்லூரிக்கு அளித்த ஒத்துழைப்பு

மேற்குறிப்பிட்ட விடயங்கள் நடந்த அதே காலத்தில் (1972 - 74) புனித மரியாள் கல்லூரியில் உயர்தர வகுப்பிற்கு பௌதீக பாட ஆசிரியர் இருக்கவில்லை. இதன் காரணமாக அங்கிருந்த மாணவிகளும் எமது கல்லூரிக்கு வந்து திரு. S.தட்சணாமூர்த்தி ஆசிரியர் அவர்களின் வகுப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Photo 2: 1972 - 74 & 1973 - 75 Science and 1972 - 74 Arts Students with Teachers and Principal



Front row seated teachers - Left to right:

Miss.G.Sathasivam, Miss.Markandu, Miss.Rajasooriyar, Mr.V.Thangaraja, Mr.A.Nadaraja, Mr.K.Vallipuranathan, K.Chandradeva (student), Mr.S.Selvaratnam, Mr.Gnanapragasam, Mr.Nallainathan, Mr.Thatchanamoorthy, Mr.Thillainathan.

2nd row standing - Left to right:

P.Saraswathydevi, M.Sathiyabama, S.Mangaleswary, B.Sivagamasunthary, R.Nirmala, S.Inthumathy, L.Rajaluxmy, N.Inthumathy, K.Ambigaivathana, K.Thevarani.

3rd row standing - Left to right:

N.Nithyananthan, S.Ratnanasen, S.Surenthiranathan, S.Chandrasorupan, S.Prapaharan, S.Retnaranjan, B.Jeyathevan, M.Stanislaus, S.Narenthiran, R.Vicneswaramoorthy, T.Sachithanantharajah, K.Saseenthiran.

4th row standing - Left to right:

M.Selvakumar, C.A.Ranjithakumaran, N.Srikanthan, S.Krishnakumar, K.Vijayakumaraguru, P.Suthaharan, T.Thavaneswaran, Thavapriya, T.Navaneethanathan, K.Baskaranathan, T.Sarvanantham.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து பௌதீகவியலை படிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு அதற்கேற்றாற் போல் இரண்டு கல்லூரிகளின் பாட நேர அட்டவணைகளும் அமைக்கப்பட்டன.

## ஆசிரியர்களின் கண்ணியமான சேவை

நல்லுள்ளம் படைத்த பல ஆசிரியர்கள் உற்சாகத்துடன் விறுவிறுப்பாக ஆரம்பிக்கப்பட்ட உயர்தர வகுப்பு மாணவர்களின் நலனுக்காக பெரும் அக்கறையுடன் பாடங்களை கற்பித்தனர்.

நல்ல பெறுபேறுகளை அடையவேண்டும் என்பதற்காக திரு. S.தட்சணாமூர்த்தி ஆசிரியர் அவர்கள் ஒரு முன்யோசனையுடன் செயற்பட்டார். அவர் பௌதீக பாடத்தில் விவேகப்பரீட்சை ஒன்றை நடாத்தி பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் மாணவர்களை இரண்டாகப் பிரித்தார். அதிக புள்ளிகளை எடுத்த மாணவர்களடங்கிய 'A' வகுப்பிற்கு அவரே பௌதீக பாட ஆசிரியராகவும் வகுப்பாசிரியராகவும் இருந்து கற்பித்தார். 'B' வகுப்பிற்கு திரு. நல்லநாதன் ஆசிரியர் அவர்கள் பௌதீகம் கற்பித்தார். இவர்களுடன் ஆசிரியர்களான திரு. ஞானப்பிரகாசம் - கணிதம், திரு.தர்மராஜா- இரசாயனம், செல்வி கு. சதாசிவம் - தாவரவியல், திரு.K.வல்லிபுரநாதன் - விலங்கியல் ஆகிய பாடங்களைக் கற்பித்தனர்.

கலைப்பிரிவில் ஆசிரியர் S. செல்வரெட்ணம் அவர்கள் தமிழ், வரலாறு போன்ற பாடங்களையும் ஆசிரியைகளான செல்வி. மார்க்கண்டு புவியியலையும் செல்வி. இராஜசூரியர் பொருளியலையும் கற்பித்தனர்.

இவ்விடத்தில் இன்னுமொரு விடயத்தை குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. திரு. S. தட்சணாமூர்த்தி ஆசிரியர் அவர்கள் உயர்தர வகுப்பிற்கு பௌதீகம் கற்பித்தலுடன் நின்று விடாது சகல பாடசாலை மாணவர்களினதும் விஞ்ஞான அறிவு, பொது அறிவு, தத்துவ அறிவு, அறநெறிகள் ஆகியவற்றை வளர்ப்பதிலும் பெரிதும் ஈடுபட்டுவந்தார்.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் 1972இல், 1971 - 73 விஞ்ஞான வகுப்பிற்கு பௌதீக பாட ஆசிரியர் ஒருவரை நியமிக்கப்படாமலிருந்ததை எதிர்த்து மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர். இதன்போது மாணவர்களை சந்தித்து சமரசம் செய்து தானே பௌதீக வகுப்புக்களை அவர்களுக்கு நடாத்துவதாக உறுதியளித்து அதனை நிறைவேற்றி வைத்தார்.

## சிரேஸ்ட மாணவர்கள் ஆற்றிய தொண்டு

எந்தவொரு பிரத்தியேக வகுப்புகளும் (Private tuition classes) இல்லாத அந்த 1972 காலப்பகுதியில் பல்கலைக்கழகத்திற்கு ஏற்கனவே புகுந்த / தகைமை பெற்ற சிரேஸ்ட மாணவர்கள் 1972ஆம் ஆண்டின் உயர்தர மாணவர்களை பயிற்றுவிப்பதில் பெரும் அக்கறையுடன் உதவினார்கள். இவர்களால் இலவசமாக நடாத்தப்பட்ட மேலதிக வகுப்புக்கள் மாணவர்களுக்கு பாடங்களிலிருந்த சந்தேகங்களை நீக்கி நம்பிக்கை ஊட்டியது. இவர்களில் பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திய பீட மாணவர் திரு. S. ஞானசேகரன் விலங்கியலையும், வைத்திய பீட மாணவர் திரு. சார்ள்ஸ் செல்லப்பிள்ளை இரசாயனவியலையும் பாடசாலை நேரத்திற்கு பின்னரும் விடுமுறை நாட்களிலும் கற்பித்து உதவினர். அவ்வாறே கலைப்பிரிவிலுள்ளோருக்கு கலைப்பீட மாணவரான திரு. க.சரவணபவன் கற்பித்தலை மேற்கொண்டு உதவினார். திரு. S. ஞனசேகரன் அவர்கள் தான் மட்டுமல்லாது தன்னுடன் பல்கலைக்கழகத்தில் பயின்றுகொண்டிருந்த சக மாணவர்களில் பொருத்தமானவர்கள் சிலரையும் அழைத்து வந்து வகுப்புக்களை நடாத்துவித்தார். இவர்கள் வேறு மாவட்டங்களை சேர்ந்தவர்கள் என்பது கவனிக்கத்தக்கது.

கணிதபாடங்களுக்கு திரு. மு. பாலச்சந்திரன் அவர்களால் நடாத்தப்பட்ட மேலதிக வகுப்புகள் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டு சில இடையூறுகள் காரணமாக பின்னர் மாணவர் திரு. சி.சந்திரசொரூபன் வீட்டிலே தொடர்ந்து நடைபெற்றது. இவ்வகுப்பிற்கு 6 - 8 வரையான மாணவர்கள் பங்குபற்றியிருந்தார்கள். அம்மாணவர்களே கணித பாடங்களில் பெரும்பாலும் முன்னணியில் திகழ்ந்தனர். பாடசாலையில் பாட விதானத்தை (Syllabus) 100% முடிக்க முடியாமல் இருந்தமையால் இவரின் உதவி மாணவர்களுக்கு பெரிதும் கைகொடுத்தது.

## கல்லூரியின் உயர்கல்வி மேம்பாட்டிற்கு நகரசபை வாசிகசாலையின் பங்களிப்பு

1972 காலப்பகுதியில் கூட உயர்தர விஞ்ஞான பாடங்களிற்கேற்ற உள்நாட்டு தமிழ் புத்தகங்கள் இல்லாதது மாணவர்களுக்கு குறைபாடாக இருந்தது. கடற்கரையோரம் டொக்யாட் வீதியில் அமைந்திருந்த நகரசபை வாசிகசாலையிலிருந்த ஆங்கில மொழி புத்தகங்களும் சில தென்னிந்திய தமிழ் புத்தகங்களும், மாணவர்கள் பரந்த அளவில் பாடங்களில் பாண்டித்தியம் பெற பெரிதும் உதவின. மாணவ மாணவிகள் சந்தர்ப்பம் கிடைக்கும் போது அந்த வாசிகசாலைக்கு சென்று வாசித்து குறிப்புகள் (reference) எடுப்பதனை வழக்கமாக கொண்டிருந்தனர். எமது மாணவர்களுக்கு பெரும் உதவி புரிந்த அவ்வாசிகசாலையின் சிறிய கட்டடத்தை தற்போதும் காணக்கூடியதாக உள்ளது.

## 1974 சித்திரை மாதம் நடைபெற்ற பரீட்சையில் அடைந்த சாதனை மிக்க பெறுபேறுகள்

1972 சித்திரையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த உயர்தர வகுப்பு மாணவர்கள் 1974 சித்திரையில் உயர்தர பரீட்சைக்குத் தோற்றி வியக்கும் வண்ணமான பெறுபேறுகளைப்பெற்றனர்.

**பொறியியல் துறை** : முதன் முறையாக எமது கல்லூரியில் மாத்திரமே உயர் கல்வியை கற்று 4 மாணவர்கள் பேராதனை பொறியியல் துறைக்கு தெரிவாகி ஊரையே மலைக்க வைத்தனர். அந்த நால்வரில் ஒருவரான திரு. சி. பிரபாகரன் திறமை அடிப்படையிலேயே தெரிவாகப்படக்கூடிய 3A & 1C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Photo 3: 1970 - 72 and 1971 - 73 Science Students with Teachers and Principal



Front row :(Teachers seated) Left to right :

S.Thatsanamoorthy, K.Vallipuranathan, A.Nadarajah (the principal), Gnanapragasam, Mrs. Sivalingam, Miss.G.Sathasivam.

Front row standing Left to right :

Yogeswary, Samsathnona, K.Ganasaraswathy, M.Jeyanthy, A.Krishnajodhy, T.Sotheeswary.

Middle row standing Left to right :

K.Amsadeva, S.Thanasegaram, M.Nanthapalan.

Back row standing Left to right :

M.Vinayagamoorthy, P.Sivayogaraja, A.Srirangapalan, Charles Inpathurai, T.Jeyaseelan, Martin Anandakumar.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் பெறுபேறுகளை பெற்று யாவரையும் இன்ப அதிர்ச்சிகுள்ளாக்கினார். எமது கல்லூரியிலிருந்தும் பிரபல யாழ், கொழும்பு பாடசாலைகளின் தரத்திற்கு நிகரான பெறுபேறுகளை பெறமுடியும் என்பதை சாதித்துக்காட்டி கல்லூரிக்கு தேசிய மட்டத்தில் பெரும் அங்கீகாரத்தை பெற்றுக் கொடுத்தார். அவருடன் இணைந்து பொறியியல்துறைக்கு தகைமை பெற்றோர் திரு.சி.சந்திரசொரூபன், திரு. S.சர்வலோகநாதன். திரு.ந.சிறீகாந்தன் ஆகியோராவார். அதுவரை எந்தப்பிரிவிலும் "A" அல்லது "B" எனும் பெறுபேறுகளை யாராலும் அடைய முடியாமல் இருந்த எமது கல்லூரியில் கணிதப்பிரிவில் மொத்தமாக 6 "A" சித்திகளும் 4 "B" சித்திகளும் 5 மாணவர்களால் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அக்காலங்களில் கடினமான பாடங்களென கருதப்பட்ட கணிதபாடங்களில் அவ்வாறான அருமையான சித்திகளைப் பெற்றமைக்கு அம்மாணவர்களின் திறமையே காரணமன்றி மாவட்ட சலுகைகள் அல்ல என்பதனை கூறத்தேவையில்லை.

நான்கு மாணவர்கள் பொறியியல்துறைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இச்சாதனையை அடுத்தசில வருடங்களிலும் முறியடிக்கப்படமுடியவில்லை. பின்பு 1978ஆம் ஆண்டு பொறியியல் துறைக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 60% ஆக அதிகரிக்கப்பட்ட போதுதான் அச்சாதனையை முறியடிக்கக்கூடியதாயிருந்தது. அந்த நான்கு மாணவர்களில் திரு.சி.பிரபாகரன், திரு. சி.சந்திரசொரூபன் ஆகிய இருவரும் ஆரம்பகால கல்வியிலிருந்து எமது கல்லூரியிலேயே பயின்றவர்களாவர்.

**கட்டடக்கலைத்துறை :** முதன் முறையாக மொறட்டுவை பல்கலைக்கழக கட்டடக்கலைத்துறைக்கு திரு.மா.செல்வகுமார் தகைமை பெற்றார். இவரும் ஆரம்பகால வகுப்புகளிலிருந்து எமது கல்லூரியிலேயே பயின்றவராவார்.

**உயிரியல் விஞ்ஞானத்துறை :** முதன் முறையாக செல்வி ந.இந்துமதி பேராதனை உயிரியல் விஞ்ஞானத்துறைக்கு தெரிவாகினார். அப்போதைய அதிபர் திரு. A.நடராசா அவர்களின் புத்திரியான இவர் உயர் கல்வியை மட்டும் எமது கல்லூரியில் பயின்றார். அவர் சாதாரணதரம் வரை யாழ்ப்பாணத்தில் பயின்றபடியால் எமது மாவட்டத்திற்கான சலுகைகளைப் பெறமுடியவில்லை.

**கணித புள்ளிவிபரவியல் துறை :** 1974ஆம் ஆண்டில் இரண்டாவது தடவையாக பரீட்சைக்குத் தோற்றிய திரு.மா.விநாயகமூர்த்தி, திரு.து.ஜெயசீலன் ஆகியோர் முதன் முறையாக யாழ்ப்பாண பல்கலைக்கழக கணித புள்ளி விபரவியல் துறைக்கு தெரிவாகினர். இவர்களில் திரு.மா.விநாயகமூர்த்தி ஆரம்பகால வகுப்புகளிலிருந்து எமது கல்லூரியிலேயே படித்தவராவார்.

இந்துக்கல்லூரியில் திரு. S.தட்சிணாமூர்த்தி ஆசிரியரின் வகுப்பிற்கு வந்து பௌதீக பாடத்தினைக்கற்ற புனித மரியாள் கல்லூரியின் மாணவிகளில் இருவர் பேராதனை மருத்துவதுறைக்கு தெரிவாகி எமது கல்லூரிக்கு மேலும் பெருமை சேர்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பரீட்சை பெறுபேறுகளை மேற்கோள் காட்டி அன்றிருந்த கல்வி அமைச்சின் செயலாளர் திரு.பிரேமதாச உடகம அவர்கள் தங்கள் புதிய கல்விக்கொள்கை வெற்றியளித்து விட்டது என சுட்டிக் காட்டியிருந்தார். இச்செய்தி பிரதான பத்திரிகைகளின் முதற்பக்க செய்தியாக பிரசுரிக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்களும் தங்கள் உயர்தர கல்வியில் பெற்ற நல்ல பெறுபேறுகளின் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் வேலைவாய்ப்பைப்பெற்று பொருத்தமான மேற்படிப்புகளை மேற்கொண்டு முன்னணியில் திகழ்ந்தனர்.

இதனை விடவும் 1972 - 74 விஞ்ஞானப்பிரிவில் படித்துக் கொண்டிருக்கும் போதும் அதன் பின்னரும் என இவ்வகுப்பிலிருந்து நால்வர் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) பாட நெறிக்கு தெரிவாகிச் சென்று அம்பாறை தொழில்நுட்பக் கல்லூரியிலும், மொறட்டுவை பல்கலைக் கழகத்திலும் தங்கள் கற்கை நெறிகளை முடித்து அவரவர் துறைகளில் தொழில் வாய்ப்புகளை பெற்றனர். இதற்கு முந்திய காலங்களிலும் ஒரு சிலர் தெரிவாகிச் சென்றிருந்தாலும் ஒரே வகுப்பிலிருந்து 4 பேர் தெரிவாகியது குறிப்பிடத்தக்கது. திரு.மு.ஜெயராஜ், திரு.C.A.J.இரஞ்சிதகுமாரன், திரு.க.பரராஜசிங்கம் ஆகியோருடன் நானும் அடங்கலாகவே அந்த நால்வர்.

## உயர் கல்வியை கைவிட்டவர்களுக்கு மீண்டும் உயர் கல்வியில் ஏற்பட்ட ஆர்வம்

1974 பரீட்சை பெறுபேறுகளைத் தொடர்ந்து திருகோணமலையில் உயர் கல்வியின் மேல் ஆர்வம் ஏற்பட்டது. இதன் பலனாக சந்தர்ப்ப சூழ்நிலைகளால் உயர் கல்வியை தவறவிட்ட பலர் மீண்டும் புத்துயிர் பெற்றது போல் பாடசாலைக்கு வெளியிலிருந்து படித்து பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்றனர். சிலர் வெளிவாரியாகவும் படித்து பட்டம் பெற்றனர். இவர்கள் தங்கள் உத்தியோகங்களில் இருந்து கொண்டே தமது உயர்தரகல்வியை கற்று பட்டபடிப்புக்கோ அல்லது சட்டக்கல்லூரிக்கோ தகைமையை பெற்றுக்கொண்டனர். இவர்களில் திருக்கோணமலையில் தற்போதும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சட்டத்தரணிகள், எமது கல்லூரி உட்பட பல பாடசாலைகளில் பணிபுரிந்த முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல நிறுவனங்களில் தொழில் புரிந்தோர் எனப்பலர் அடங்குவர்.

## உயர்தர வகுப்பு மாணவர் மன்றம்

உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான மன்றமும் (A/L Student Union) உரியமுறையில் 1972 / 73 காலப்பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டது. வெளியூர் பிரபல பாடசாலைகளின் யாப்புகளின் பிரதிகள் பெறப்பட்டு எமது மன்றத்திற்கு உகந்ததான ஒரு யாப்பு உருவாக்கப்பட்டது. இந்த யாப்பு உருவாக்கத்தில் திரு. க.சரவணபவன் பெரிதும் உதவியாக இருந்தார்.

## பாராட்டுக்குரியவர்கள்

1972ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 1974இல் பரீட்சைக்குத்தோற்றிய உயர்தர வகுப்பினர் ஏற்படுத்திய பல வெற்றிகளுக்கு காரணமாயிருந்த அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.A.நடராசா அவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பல்கலைக்கழகத்தில் பயின்றபடி பெரிதும் உதவிய பழைய மாணவர்கள் ஆகிய யாவரும் பாராட்டுக்குரியவர்களாவர்.

125ஆம் ஆண்டு விழாவும் உயர்தர விஞ்ஞானக்கல்வியில் பெரும் சாதனையை ஏற்படுத்த காரணமான 1972இன் பொன்விழாவும் (50ஆம் ஆண்டு) ஒருங்கே அமையப் பெற்றதும் சிறப்பான ஓர் சம்பவமாக எண்ணத்தோன்றுகிறது. இப்படியான சாதனைகள் உருவாகுவதை நேரில் பார்த்து சமகாலத்தில் பயின்றேன் என கூறிக்கொள்வதில் மிகவும் பெருமையடைகின்றேன். 1972 - 74 ஆம் ஆண்டுகளில் இருந்த அதிபர் உட்பட அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களும் கூட இச்சாதனைகளைக் கண்டு பெருமைப்பட்டிருப்பார்கள்.

## 1952 – 1965 காலப்பகுதியில் உயர்தரக்கல்வி பற்றி கிடைக்கப்பெற்ற சில முக்கிய தகவல்கள்

இக்கட்டுரையை எழுதுவதற்காக பல வழிகளில் தகவல்களைத்திரட்டும் போது 1952 - 65 ஆம் ஆண்டுகளில் வரலாற்றில் பதியப்பட வேண்டிய பல விடயங்களை கண்டறியக்கூடியதாயிருந்தது.

1961 இல் திரு. S.அம்பலவாணர் அதிபராகவும் திரு. மு. சிவபாலன் உப அதிபராகவும் இருந்த போது உயர்தரத்திற்கான கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு திரு. K. கோபாலசிங்கம் அவர்கள் 1964இல் முதன் முதலில் கலைப்பிரிவில் பல்கலைக்கழகம் சென்றதனை கடந்தகால கல்லூரி வெளியீடுகள் மூலமாக வாசித்து அறிந்திருக்கிறேன்.

ஆனால் 1952 / 53 காலப்பகுதியில் திரு. P. ரகுபதி அவர்கள் அதிபராக இருந்த போது கலைப்பிரிவும் விஞ்ஞானப்பிரிவும் ஆரம்பிக்கப்பட்டதனை நான் அறிந்திருக்கவில்லை. மேலும் விசாரித்துப்பார்த்தபோது பழைய மாணவர்கள் பலரும்கூட அதனைப்பற்றி அறிந்திருக்கவில்லை என்றே கூறினார்கள். தற்போது கிடைக்கக்கூடிய எந்தவொரு கல்லூரியின் வெளியீடுகளிலும் கூட அவ்விடயம் பற்றி குறிப்பிடப்பட்டதாக தெரியவில்லை. இது தொடர்பில் ஆராய்ந்த போது பின்வரும் பெறுமதியான தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

1952- SSC (சா.தர) பரீட்சைப் பெறுபேறுகளை தொடர்ந்து. அப்போது அதிபராக பணியாற்றிக் கொண்டிருந்த திரு.P. ரகுபதி அவர்கள் தகுதி பெற்ற மாணவர்கள் சிலரைக் கொண்டு உயர்தர வகுப்பினை ஆரம்பித்துள்ளார். எனினும் தகுதியான ஆசிரியர்கள் யாரும் கிடைக்காமையினால் வகுப்புக்கள் நடைபெறாமல் இருக்கவே, மாணவர்கள் ஓரிரு மாதங்களில் விலகிச் சென்றுவிட்டனர். இவ்வகுப்பில் திரு.T.குலவீரசிங்கம், திரு.T.கோணாமலை, திரு. ஏரம்பமூர்த்தி, ஜனாப்.ஹசன், ஜனாப். உசன், திரு.திலகரெட்ண, திரு.குணதாச, திரு.சிறிசேன ஆகியோர் இருந்தனர். இவர்களில் திரு.T.குலவீரசிங்கம், திரு.T.கோணாமலை ஆகிய இருவரும் உதவி அரசாங்க அதிபர்களாக பணியாற்றியமை யாவரும் அறிந்ததே. திரு.திலகரெட்ண RMP (Registerd medical practitioner) ஆக பணியாற்றியுள்ளார் என அறியக் கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் அதற்கடுத்த வருடம் 1953 - SSC பரீட்சை பெறுபேறுகளை தொடர்ந்து உயர்தரத்தில் தொடர்வதற்கு தகுதிபெற்ற மாணவர்கள் சிலருடன் கைவசமிருந்த ஆசிரியர்களைக் கொண்டு அதிபர் P. ரகுபதி அவர்கள் மீண்டும் உயர்தர வகுப்புக்களைத் தொடங்கியுள்ளார். அவ்வகுப்பில் திரு.ஜெயச்சந்திரன்[1] அவர்கள் கணிதத்துடன் சில கலைப்பிரிவு பாடங்களையும், திரு.S.கோபாலகிருஷ்ணன்,[2] திரு.G.சிவானந்தராஜா[3] ஆகியோர் விஞ்ஞான பாடங்களையும் தேர்ந்தெடுத்துக் கற்றனர். அக்காலத்தில் சாதாரணத்தரத்திலும் உயர்தரத்திலும் கலைப்பிரிவு பாடங்களையும் விஞ்ஞானப்பிரிவுப் பாடங்களையும் மாணவர்கள் கலந்து கற்கும் வழக்கம் இருந்தது. இவர்களுக்கு ஆசிரியர்களாக திரு.மு.சிவசுப்பிரமணியம் (சரித்திரம்), திரு.மதனகோபால் (கணிதம்) ஆகியோர் இருந்துள்ளனர்.

அப்போது பட்டப்படிப்பினை மேற்கொண்டிருந்த திரு.மு.பத்மநாதன்[4] அவர்கள் விடுமுறைகாலத்தில் சரித்திர பாடத்தினை கற்பித்து உதவியுள்ளார். ஆனால் பெரும்பாலான பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினாலும் வகுப்பில் இணைந்த மாணவர்கள் தொழில் நிமித்தம் விலகிச் சென்றதாலும் இவ்வகுப்புக்களை தொடர்ந்து நடாத்தி செல்ல முடியாமல் 6 - 8 மாத காலத்தில் அதிபர் P.ரகுபதி அவர்கள் எமது கல்லூரியை விட்டு விலகிச்செல்லும் தறுவாயில் முற்றாக குழம்பிவிட்டது.

இதனைத் தொடர்ந்து வந்த அதிபர் திரு.S.அம்பலவாணர் அவர்கள் 1954ஆம் ஆண்டு SSC பரீட்சையில் சித்தியடைந்து HSC வகுப்புக்கு தகுதி பெற்ற இரண்டு மூன்று மாணவர்களைக் கொண்டு 1955இல் வகுப்புக்களை ஆரம்பித்துள்ளார். அவ்வகுப்பில் படித்தவர்களில் திரு. S. இராமச்சந்திரன், திரு.விக்னேஸ்வரன் ஆகியோர் அடங்குவர். இவர்களில S.இராமச்சந்திரன் அவர்கள். 1957ஆம் ஆண்டு விஞ்ஞான பிரிவில் முதற்தடவையிலேயே மூன்று பாடங்களில் சித்தியடைந்து பின்பு அப்போதிக்கரிக்கான (Apothecary) தெரிவுப்பரீட்சையில் தேர்வாகி கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பயின்று அப்போதிக்கரியாக தகைமை பெற்றார்.

1) திரு.S.ஜெயசந்திரன் - அவர்கள் எமது கல்லூரியிலேயே ஆசிரியராக 1955/1956 ஆம் ஆண்டுகளில் பணியாற்றி பின்னர் நீதிமன்ற விகிதராக இலங்கையில் பலபாகங்களில் சேவை புரிந்து உள்ளார்.

2) S.கோபாலகிருஷ்ணன் - திருமலையில் பல காலம் நில அளவையாளராக சேவை புரிந்து இவர், யுத்த காலத்தின் போது அகால மரணமடைந்தார்.

3) G.சிவானந்தராஜா - இவர் கணித ஆசிரியராக எமது கல்லூரியிலும் கொழும்பிலும் கடமையாற்றியவர். அவரது தந்தையான திரு.மு.கோபால் மாஸ்டர் என அழைக்கப்பட்ட திரு.குழந்தைவேலு ஆசிரியர் அவர்கள், எமது கல்லூரியில் 40 ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றியவர்.

(4) திரு. மு. பத்மநாதன் - இவா் பட்டப்படிப்பின் பின்பு எமது கல்லூரியில் ஆசிரியராக கடமை புரிந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப்பகுதியில் கற்பித்தலை மேற்கொண்ட ஆசிரியர்கள், திரு.S.அம்பலவாணர் (பௌதீகம்), இந்தியாவைச் சேர்ந்தவர்களான திரு.A.ரெங்கநாதன் (இரசாயனம்), திரு.முத்துகிருஷ்ணன் நாயர் (உயிரியல்), திரு.மதனகோபால் (கணிதம்) என்பவர்களாவர்.

இப்பெறுமதியான தகவல்களை திரு.S.குணசந்திரன், Dr.S.இராமச்சந்திரன், திரு.S.ஜெயசந்திரன் மற்றும் திரு.T. குலவீரசிங்கம், ஆகியோரிடம் சமீபத்தில் நேரடியாகப் பெறக்கூடியதாக இருந்தது. 1957ம் ஆண்டு நடைபெற்ற HSC பரீட்சைக்கான பெறுபேறுகள் சிதைவடைந்திருந்தமையினால் , இத்தகவலை ஆவணம் மூலம் உறுதிப்படுத்த முடியவில்லை.

## 1964 – 65இல் நிகழ்ந்த சரித்திர பூர்வமான விடயங்கள்

மேற்கூறப்பட்ட S.இராமச்சந்திரனின் இளைய சகோதரரான S.குணச்சந்திரன் 1964ஆம் ஆண்டில் கணிதப்பிரிவில் முதற்தடவையிலேயே 3 பாடங்களில் திறமைச் சித்திகளை பெற்றுள்ளார். இவரின் சாதனையை 1972 வரையில் யாரும் முறியடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் ஆய்வுகூட செய்முறைப்பரீட்சைக்கு தயார் செய்வதற்கு இந்துக்கல்லூரி ஆய்வுகூடத்தில் பொருத்தமான உபகரணங்கள் இல்லாதபடியால் அவர் யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் சென்று ஆய்வுகூட செய்முறையில் பயிற்சி பெற்று பின்பு திருக்கோணமலை மாவட்டத்தின் மூலமாகவே 1966இல் பிரத்தியேகமாக பரீட்சைக்கு தோற்றி பேராதனை இயந்திர பொறியியல் (Mechanical Engineering) துறைக்கு தெரிவாகினார்.

அதே 1964ஆம் வருடத்தில் செல்வி க.தவமணிதேவி[5] அவர்கள் உயிரியல் விஞ்ஞான பிரிவில் கல்வி கற்று பரீட்சைக்கு தோற்றினார். இவரே எமது கல்லூரியிலிருந்து தோற்றிய முதலாவது பெண்மணியாவார்.

இவர்களுக்கு ஆசிரியர்களாக திரு.கணநாதபிள்ளை (கணிதம்), திரு.ச.குணரெட்ணம் (பௌதீகம்), திரு.கனகரெட்ணம்/செல்வி.பொன்னம்பலம் (இரசாயனம்), திரு.பாலசுப்பிரமணியம் (தாவரவியல்), திரு.அ.சிவலோகநாதன் (விலங்கியல்) ஆகியோர் குறித்த பாடங்களை கற்பித்தனர்.

இந்த அத்தியாயாத்தில் குறிப்பிடப்பட்ட திரு.S.ஜெயசந்திரன், திரு.S.ராமச்சந்திரன், திரு. S.குணச்சந்திரன் ஆகியோர் சகோதரர்கள் ஆவார்கள். அவர்களின் மாமாவாகிய திரு.காளியப்பு அவர்கள் தான் எம் கல்லூரிக்கு ஒரு மண்டபத்தை கட்டி அன்பளிப்புச் செய்தவர். அம்மண்டபமே பின்பு காளியப்பு மண்டபம் என பெயர் சூட்டப்பட்டது.

(5) செல்வி.க.தவமணிதேவி - நிலாவெளியைச் சேர்ந்தவர். இவர் நிலாவெளி/கும்புறுப்பிட்டியின் கிராமசபை தலைவராக இருந்த திரு.கனகசபையின் புத்திரியாவார்.

திரு.யோகரெட்ணம் அவர்களும் ஏறத்தாழ 60களின் ஆரம்ப பகுதியிலிருந்து 70 வரை , கணித ஆசிரியராக கடமையாற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வருடத்திலேயே (1964) எமது கல்லூரியில் ஆரம்பகால கல்வியிலிருந்து படித்தவரான திரு.K.கோபாலசிங்கம் அவர்களும் கலைப்பிரிவில் சித்தியடைந்து எமது கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகம் சென்ற முதல் மாணவர் என்ற பெருமையை பெற்றார். அதற்கடுத்த 1965 ஆம் ஆண்டில் கலைப்பிரிவில் பரீட்சைக்கு தோற்றிய மூவரில் ஜனாப்.T. யூசுப்ஜான், திரு.சு.ஸ்கந்தராஜா ஆகிய இருவரும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி கல்லூரிக்கு மேலும் புகழைச் சேர்த்தனர்.

1952 - 65 காலப்பகுதிகளில் உயர்தர வகுப்புக்களுக்கு சமாளிக்க முடியுமான அளவில் ஆசிரியர்கள் இருந்தமை மெச்சத்தக்க ஒரு விடயமும் ஒருவகை அதிஷ்டமும் என்றே கூற வேண்டும். அதனைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் உயர்தர வகுப்புகள் சீராக நடைபெற்றதாக தெரியவில்லை. இதனை 1967,68ஆம் ஆண்டுகளில் கணித விஞ்ஞான பிரிவுகளிலோ, 1969இல் கலைப்பிரிவிலோ எவரும் பரீட்சைக்கு தோற்ற முடியாமலிருந்ததின் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

1965ற்கு பின் 7 ஆண்டுகளாக யாரும் பல்கலைக்கழகம் செல்ல முடியவில்லை. ஆனால் அக்குறைகளை எல்லாம் ஈடுசெய்யும் விதமாக 1972இல் உயர்தரக்கல்வியின் வளர்ச்சி ஒரு புலிப்பாய்ச்சலாகவே பாய்ந்துவிட்டது. அதன் பிறகு மிகவும் விறுவிறுப்பாக உயர்தர வகுப்புக்களும் நடைபெற்று மாணவர்களும் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகி சென்று கொண்டிருக்கின்றனர் என்பது யாவரும் அறிந்ததே.

## எனது நன்றிக்குரியவர்கள்

இக்கட்டுரையை எழுதுவதற்கு தேவைப்பட்ட கல்லூரியின் ஆவணங்களுடன் தொடர்பான விடயங்களை பல சிரமங்களுக்கு மத்தியில் தேடி எடுத்து தந்துதவி, பெரிதும் உற்சாகப்படுத்திய திரு. S.பாரதிநாதன் (இலங்கை) அவர்களுக்கு விசேடமான நன்றிகள். அத்துடன், நண்பன் திரு. சி.சந்திரசொரூபன் (அவுஸ்திரேலியா), பல முக்கிமான தகவல்களைப் பகிர்ந்து கொண்ட நண்பன் மா.விநாயகமூர்த்தி (அமெரிக்கா), பெறுமதி வாய்ந்த அரை நூற்றாண்டு பழமை வாய்ந்த நிழற் படங்களை பத்திரமாக பேணி பாதுகாத்து தந்து உதவிய திருமதி. கிருஸ்ணஜோதி அல்மெய்டா (இலண்டன்) ஆகியோருக்கும் மற்றும் ஏனைய முக்கிய தகவல்களை வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிற்கு எட்டிய காலம் முதல் 1974 சித்திரை வரையில் நடைபெற பரீட்சைகள் மூலம் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகியோரின் விபரம்.

| Name | University | Year of Exam |
|---|---|---|
| K.Kopalasingam | Arts,Peradeniya | 1964 |
| T.Yusoof Jan | Arts,Peradeniya | 1965 |
| S.Skantharajah | Arts,Peradeniya | 1965 |
| Gnanasekaran.S | Dental, Peradeniya | 1972 |
| Saravanabavan.K *** | Arts,Peradeniya | 1972 |
| Charles.C (late) | Medicine, Peradeniya | 1973 |
| Hemachandra.K * | Medicine, Peradeniya | 1973 |
| Roydz Coomarasamy * | Engineering, Moratuwa | 1973 |
| Anvardeen.U | Arts, Vidiyalankara | 1973 |
| Santhinidevi.S | Arts, Vidiyalankara | 1973 |
| Miss.Inthumathy.N | Bio Science, Peradeniya | 1974 |
| Chandrasorupan.S | Engineering, Peradeniya | 1974 |
| Prabaharan.S *** | Engineering, Peradeniya | 1974 |
| Sarvaloganathan.S | Engineering, Peradeniya | 1974 |
| Selvakumar.M | Architecture, Moratuwa | 1974 |
| Srikanthan. N | Engineering, Peradeniya | 1974 |
| Jeyaseelan.T * | Statistic, Jaffna | 1974 |
| Vinayagamoorthy.M *** | Statistic, Jaffna | 1974 |
| Sachithanantharajah.T | Arts, Vidiyalankara | 1974 |

❖ உயர்தர வகுப்பு கல்வியை வெளி மாட்ட பாடசாலைகளிலும் கற்றவர்கள்.

திருகோணமலை பாடசாலைகளில் சிரேஸ்ட (Secondary) கல்வியையும், உயர்தரத்தை எமது கல்லூரியிலும் மட்டுமே கற்று குறிக்கப்பட்டுள்ள பீடங்களுக்கு முதன்முதலில் சென்றவர்கள்.

❖❖❖ பல்கலைக்கழக பட்டபடிப்பை மேற்கொண்டு பின்பு வெளிநாடுகளில் கலாநிதி பட்டம் பெற்றவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1972 - 74 உயர்தர கணித விஞ்ஞான வகுப்பிலிருந்தோரில், 1974 சித்திரைக்குப் பிந்திய வருட பரீட்சைகளில் தோற்றி பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகியோரின் விபரம்.

| Name | University |
|---|---|
| Ambigaivathana.K | Medicine, Peradeniya |
| Inthumathy.S | Medicine, Peradeniya |
| Thevarani.K | Architecture, Moratuwa |
| Chandrakanthan.S | Mathematics, Jaffna |
| Navaneethanathan.T | Applied Science, Moratuwa |
| Saseenthiran.K | Medicine, Peradeniya |
| Surenthiranathan.S | Applied Science, Moratuwa |
| Thavaneswaran.T | Engineering, Moratuwa |
| Varatharajah.P *** | Statistic, Jaffna |
| Yogeswaran.K | Applied Science, Moratuwa |

*** பல்கலைக்கழக பட்டப்படிப்பினை மேற்கொண்டு பின்பு வெளிநாடுகளில் கலாநிதி பட்டம் பெற்றவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரேபார்வையில் விஞ்ஞான வகுப்புக்களில் 1972 – 1974 வரையில் இருந்த மாணவர்கள்**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| Year of Exam | Students from our College | Arrived from other Schools in Trincomalee | Arrived from other Districts | Total number of Students | Exam sat 1st + 2nd =total (attempt) |
| 1972 April | 5 | 2 | 9 | 16 | 9+7=16 |
| 1973 April | 2 +(1) | 6 +(2) | 14 +(1) | 26 | 6+17=23 {3} |
| 1974 April | 13 +(1) | 14 +(2) | 14 +(1) | 45 | 27+4=31 {14} |

( ) : நிரல் இலக்கம் 2,3 மற்றும் 4 இல் இவ்வடைப்புக்குறிக்கள் தரப்பட்டுள்ள எண்ணிக்கை முன்னைய வருடத்திலும் உள்ளடக்கப்பட்டவர்களினது.

{ } : நிரல் 6 இல் இவ்வடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள எண்ணிக்கை பரீட்சைக்கு விண்ணப்பிக்காதவரும்,விண்ணப்பித்து தோற்ற முடியாதவர்களினதுமாகும்.

பிற்குறிப்பு :

- 1971 ஆம் ஆண்டு மார்கழியில் நடைபெற வேண்டிய பரீட்சையே நாட்டில் உருவாகிய அசாதாரண சூழ்நிலைகளால் 1972 சித்திரைக்கு மாற்றப்பட்டு நடைபெற்றது.

- இந்த கட்டுரை சம்பந்தமாக பெரும்பான்மையான விபரங்கள் ஆராய்ந்து தரப்பட்டுள்ளது. ஒரு சில தகவல்கள் விடுபட்டிருக்கவும் வாய்ப்புண்டு. தெரிந்த விபரங்கள் மட்டுமே அட்டவணையில் இணைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/Prof M.Balachandran, **Ph.D. (USyd,Australia), MACS, MIEEE**

Information Sciences and Engineering

University of Canberra

Australia

## A Brief Biography of a Trinco Hindu College Old Boy

Dr. Muthukumar Balachandran, also known as Dr. Bala, received his Bachelor of Engineering (Hons) degree in 1977 from the University of Moratuwa. Between 1982 and 1988 he conducted his postgraduate studies in the field of Engineering and Computing at the University of Sydney, Australia, and completed his master's in 1984 and Ph.D. in 1988. During this time he was a recipient of a UNESCO Fellowship and a Sydney University Ph.D. Scholarship.

He has over 35 years of academic (teaching & research) experience from several leading universities in Sri Lanka (Moratuwa University), Australia (Sydney University & Canberra University), Fiji (University of South Pacific), and the UK (Kings College of London). He has taught information technology to students with diverse backgrounds including engineering, architecture, commerce, and mathematics. His main research areas are intelligent systems applications, cloud computing, and data science. He has over 100 publications in the form of co-authored books, co-edited conference proceedings, book chapters, journal articles, and numerous conference papers. He has presented his research papers in Australia, the UK, Europe, Asia, and the USA. He is a member of the Australian Computer Society, the IEEE Computer Society, and the Data Science Foundation.

## Trinco Hindu College Laid the Foundation for My Education

My early education, Kindergarten to Grade 3, was from Sri Shanmuga Vidyalayam. I do recall even at that young age I showed great interest in school work and received several prizes. At that time boys were allowed to study at Shanmuga Vidyalayam only up to grade 3.

After completing Grade 3, my parents chose R.K.M Hindu college for me as it was without a doubt, well known and had the best education system in Trincomalee. I was admitted to Grade 4 at Hindu College in 1962 when the college principal was the late Mr. S. Ambalavanar. During the 1960s I thoroughly enjoyed my school life at Hindu College with many fantastic teachers who were warm, intelligent, and engaging. Among



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

my most admired teachers were my maths teachers late Mr.P. Sivasegaram,late Mr K. Sivapragasam, my Tamil teacher late Mrs. Kandiah,English teacher the principal late Mr. K, Sivapalan, and science teacher late Mr. Thiruchelvam. I began to realize my academic ability and talents when I became one of the successful students in the NPTA examination in my 8th Grade in 1966. Following my passion for Maths and Science, I studied hard and completed GCE(O/L) with great results in April 1969. I was among the top three students in Trincomalee in 1969.

My GCE(O/L) results motivated me enormously and I was determined to proceed to GCE(A/L) and further into university education. Although I loved to continue my studies leading to A/L at Trincomalee Hindu College, at that time the resources and facilities available for A/L classes were limited and no student could achieve university admissions in Maths/Science. Following the advice from then principal Mr. S. Elayathambi, I began to look for a school for my next stage of education preferably in the northern province. In 1970, I was accepted for my 11th Grade at Hartley College in Point Pedro which was and is still one of the leading schools well known for engineering faculty admissions. I was focused and worked diligently to achieve my dream during my senior years at Harley College. My hard work and dedication paid off and I was admitted to the engineering faculty at the University of Moratuwa in 1973.

I pursued my engineering course very successfully with a specialization in Structural Engineering. I was the batch top in both Part 1 and Part II examinations. I graduated with a Bachelor of Engineering (Hons) in 1977 December. Having an interest in finding solutions to problems and new facts to share with the world drove me to pursue a career in academia. I still think that it was a good career choice for me because it enables me to satisfy my intellectual curiosity. My dream came true when I was appointed as an Assistant lecturer in 1978 at Moratuwa University. In 1981, I was one of the three recipients of a UNESCO fellowship to pursue postgraduate studies. I chose the University of Sydney, Australia to carry out my graduate studies and moved to Australia in 1982.

The field I chose to specialize in was Engineering and Information Technology which introduced me to the dynamic and exciting field of computing and information sciences. After completing my Master's Program successfully with excellent results, I was fortunate to receive a Ph.D. scholarship from Sydney University on a merit basis. This was a



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

turning point in my life and career. My doctoral research was an investigation of Artificial Intelligence Applications to Engineering Design. My Ph.D. thesis was published as a book in the series Intelligent Systems in Engineering by a UK publishing company. I graduated and received my Ph.D. from Sydney University in 1989.

## Reflection on the Volunteer Teaching of Mathematics during 1972 - 1974 for Hindu College Students.

When I was waiting for my university admission in Trinco., in 1972, at the request of my friend Mr.K. Vijayakumraguru, I collaborated with few undergraduates including late Dr.S. Gnasekaran and implemented a voluntary teaching program for the Hindu College A/L Maths students of 1972 - 74 batch.

The classes were first conducted at the College, and then continued at the house of one of the students, S. Chandrasorupan, where facilities like benches, table and black board were available at the front verandah. I do recall that I would dedicate about 12 hours per week generally for teaching Pure Mathematics and Applied Mathematics. I showed the students a fun way to do and learn Maths. My philosophy behind my teaching was to be creative and supportive. With lot of keen and enthusiasm, I continued this program even after my university classes were started during each term holidays.

This volunteer teaching program was conducted nearly for 18 months between 1972 to 1974 covering most of the syllabus for 1972 – 74 A/L batch. Most students saw me as a role model and found their inspiration in my class. One of the goals of the program was to prepare the students for the final examination with confidence. Several of my students told me "**Thank you for all of your encouragement and willingness to share your passion with us. We appreciate your creativity and patience in teaching that has made a meaningful impact on us".** I do recall that in 1974 A/L examination, some of my students, for the first time in the history of T/Hindu College, received the excellent results with 'A' or 'B' in Maths & Applied Maths and obtained university admissions for engineering.

At that time this was a remarkable & historical achievement for the college and the local community. The principal and the teachers were very proud to see a significant improvement in the results of their students and university admissions. I am still in touch with some of those successful students who are currently residing in USA, Australia, and Canada. I would also like to mention that Dr.S.Prabaharan(Branch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Chief, Federal Energy Regulatory Commission, New York, USA) and Eng. T. Thavaneswaran (Retired Deputy General Manager at Ceylon Electricity Board) were among my favourite students.

Even after 1974, I continued the A/L classes in Maths & Applied Maths in my home for many ardent students during each of my university vacation. In those classes I would cover the concepts and techniques of a topic using several examples and then give them some exercises in the class and get them to find solutions in small teams. This way I was able to assess their strengths and weaknesses and choose my teaching methods and exercises accordingly. Even after I completed my University Degree whenever I came to Trinco. I helped the A/L students in learning Maths & Applied Maths.

All my students appreciated very much my time, effort, patience, and guidance during the most important time of their lives. Looking back, I am very proud and delighted to think that I was part of a dedicated team that made an important and meaningful contribution to the continuous growth and development of Hindu College.

## Congratulations on the 125th Anniversary of a Remarkable School – R. K. M. Sri Koneswara Hindu College

It gives me great pleasure to congratulate the staff, students, and alumni of R. K. M. Sri Koneswara Hindu College on this auspicious 125th-anniversary celebration. Ever since its founding in 1897, the college has become a highly recognized and successful school in Sri Lanka. Without a doubt, we all feel proud to see all its achievements since its inception 125 years ago. Built on its solid foundation, the college has continued to make remarkable contributions to the education and professional lives of local students in meeting the city's evolving and challenging needs.

Today Trinco. Hindu College's old boys lead various professional careers such as professors, engineers, medical practitioners, managers, and IT specialists around the world.

I wish to extend my best wishes to Trincomalee R.K.M Koneswara Hindu College for its continued path to success in all endeavours over the next 100 years and beyond.

**Prof. M. (Bala) Balachandran**

**Sydney, Australia**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவிகள் கற்ற காலம் மனதில் வந்த போது..

அரும்பும் துளிருமாக கழித்த அந்தப் பள்ளிப் பருவத்தின் இயல்பான உற்சாகத்தோடு பேச முடியாவிட்டாலும், பள்ளி நினைவுகளை மீட்கும் தருணங்களில் மகிழ்வும் ஏகத்துடன் கூடிய வெட்கமும் சேர்ந்து விடுவது கனிவில் தனியழகு. 1960களின் இந்துக்கல்லூரி HSC மாணவிகள் தி. சாந்தாதேவி, க. லட்சுமிதேவி, சி.லோகேஸ்வரி, அனிதா ஹபிபா (Anitha Habeeba), யுகைரா ஜயா (Juhaira Jayah) பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அந்த தனியழகோடு வெளி வந்தது நெகிழ்ச்சியளிக்கின்றது. அவர்கள் தங்கள் காலங்களை மீட்டெடுத்து நினைவுகளை கோர்வையாக்கியது வாழ்வில் மிக இனிய தருணங்களில் ஒன்று. வாழ்வின் ஒரு கட்டத்தில் நாம் சலித்துக் கொள்ளும் மனநிலையை அடைகின்ற போதும் கூட பள்ளி வாழ்வு அர்த்தமுள்ள காலமாகவே அனைவருக்கும் உணரத் தோன்றும்.

இந்துக் கல்லூரி கடந்த 125 ஆண்டுகள் என்பது இரு உலகப் போர்கள், பெரும் பஞ்சங்கள், பேரழிவுகள், சுதந்திரப் போராட்டங்கள், பெண் வாக்குரிமை, அரசியல் சதிகள் என பல அரசியல் மாற்றங்களின் அழியாத் தடங்கள் நிறைந்த பெருங் காலப்பகுதி. அவற்றின் தளும்புகளுடன் தான் இன்றைய விஸ்வரூபத்தை எட்டிக் கொண்டிருக்கின்றது எங்கள் கல்லூரி. பிரிட்டிஸ் சிலோனில் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு அரசியல் சீர்திருத்தமும் மகளிர் மேம்பாட்டை ஊக்குவித்ததுக் கொண்டிருந்தது. காலனித்துவத்தின் பல சட்டங்கள் பெண்களின் சமூக விலங்குகளை உடைத்தெறிந்தன. இந்தக் காலப்பகுதியில் பெண்கள் வாக்குரிமை, பெண்கள் சொத்துரிமை, பெண்கள் கல்வி என பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்தியச் சுதந்திரப் போராட்டம் பெண் கல்வியோடு இணைந்திருந்தது. இந்தியச் சுதந்திர விடுதலையில் பாரதியின் பெண் விடுதலைப் பாடல்கள் கடலெல்லை கடந்து இலங்கை நிலப்பரப்பிலும் ஒலித்தது. பெண் கல்வியால் பல சமூகத் தடைகள் தகர்ந்தன. இந்த வரலாற்று மாற்றங்களை இந்துக் கல்லூரியும் தொட்டு தன் நூற்றாண்டை இன்று கடந்திருக்கின்றது. 1920 இல் உருவாக்கப்பட்ட 'திருகோணமலை மாதர் ஐக்கிய சங்கம்', 1927இல் திருமதி தைலம்மா தலைமையில் திருகோணமலை யில் வெளியான 'மாதர் மதி மாலிகை' பெண்கள் சஞ்சிகை என்பன சமூகத் தடைகளைத் தகர்த்த பெண் கல்வி விழிப்புணர்வின் குறியீடுகளே.

இலங்கையின் சுதந்திர வரலாற்றில் 1961ம் ஆண்டு மிக முக்கியமான காலமாகும். இவ்வாண்டிலேயே இலங்கையின் தனியார் கல்விக்கூடங்கள் அரசுடைமையாக்கப்பட்டது. எனினும் ஒரு மாணவியாக என் தேடலில் இந்துக் கல்லூரி வரலாற்றின் மிக நெருக்கடியான காலங்களில் ஒன்றாக 1960 – 1972 பகுதியையும் தனித்துக் கூறிவிடலாம். இந்தக் காலப்பகுதியில் உயர் வகுப்பு மாணவ - மாணவியரை சேர்ப்பதும், அவர்களுக்கான வகுப்புகளை உருவாக்குவது என்பதும் சலசலப்புக்களுடன் கூடிய சவாலாகவே அறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகின்றது. அக்காலப் பகுதியில் பல திருகோணமலை நகரப் பாடசாலைகள் உயர் வகுப்பு இன்றியே செயற்பட்டன. அறுபதுகளில் புனித மரியாள் கல்லூரியில் அறிவியல் துறைக்கான ஆய்வுகூடம் ஓரளவே செயற்பட்டது. குறிப்பாக அங்கு ஆய்வுகூட வசதி ஆங்கில மொழி வழி உயர்வகுப்பு மாணவிகளுக்கு மட்டுமே அளிக்கப்பட்டது. தமிழ்மொழி வழிக்கல்வி கற்ற மாணவிகள் அறிவியல் உயர் கல்விக்காக (HSC) இந்துக் கல்லூரியில் இணைந்து கொண்டார்கள். சண்முகா மகளிர் கல்லூரியின் நிலையும் உயர் வகுப்புகளுக்கு ஏற்றதாக இருந்ததில்லை. பட்டதாரி ஆசிரியர்களின் பற்றாக்குறையும், ஆய்வுகூட வசதியின்மையுமே மாணவிகளின் கவனம் இந்துக் கல்லூரி நோக்கித் திரும்பக் காரணம் என ஒற்றை வரியில் கூறிவிடலாம்.

1925 - 30ம் ஆண்டு சுவாமி விபுலாநந்தா இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்த காலத்தை அறிவியல் மறுமலர்ச்சியின் தொடக்கம் என எவரும் ஊகிக்க முடியும். சுவாமி விபுலாநந்தர் ஒரு அறிவியற் துறைப் பட்டதாரி. தமிழில் அறிவியல் அகராதியைத் தொகுத்தவர். எனவே அவர் இந்துக்கல்லூரி அதிபராக இருந்த காலத்தில் அறிவியற் கல்விக்கு அதிக ஊக்கமளித்திருப்பார் என ஒருவர் எண்ணுவதில் வியப்பேதும் இல்லை. இந்தியத் தத்துவாசிரியர் ஜே.கிருஸ்ணமூர்த்தி கல்வி தொடர்பான சில முக்கியக் கருதுகோள்களை முன்வைக்கிறார். அவற்றில் ஒன்று Scientific Mind and a Religious Mind - தேடல்களை அறிவியல் பூர்வமாக அணுகுதல். அந்த அணுகுமுறையை மிகுந்த அர்ப்பணிப்புடன் நிறைவேற்றுதல். இந்தக் கோட்பாட்டில் இராமகிருஷ்ண மிசனுக்கும், சுவாமி விபுலாநந்தருக்கும் இருந்த ஆழ்ந்த ஈடுபாடு வெளிப்படையானது. ஆன்மீக சிந்தனைக்கு அப்பால் ஆய்வுகூடக் கல்வியில் சுவாமி விபுலாநந்தா கொண்டிருந்த ஈடுபாடும் வெளிப்படையானதே. ஆய்வுகூடம் மாணவர்களின் ஆர்வத்தை தூண்டியது. குரு குலம் வழியாக 'தீயில் விழுந்தவள் தெய்வமாக ஆனாள்' போன்ற இதிகாச கதைகள் கேட்டு வளர்ந்த பெண் சமூகம் ஆய்வுகூடத்தில் புதுக்கல்வி கற்கத் தொடங்குவதற்கு சுவாமி அளித்த தளம் மிக மகத்தானது. சமநிலைக் கல்வி என்பது மாணவர்களின் உடல், உளம் ஆகியவற்றை மிக உயரிய நிலைக்குக் கொண்டு சென்று மேம்படுத்துவது தான். ஆய்வுகூடம் வழியாக விடை தேடும் கேள்விகளை எழுப்புவதும், எதையும் ஆராய்ந்து பார்க்கும் மனநிலை வளர்ப்பதும் துடிப்புடன் நிகழத் தொடங்கியது. இது சுவாமியால் இந்துக்கல்லூரியில் சாத்தியமானது.

1950 களின் ஆரம்பத்தில் இந்துக் கல்லூரியில் ஆய்வுகூட உதவியாளராக இந்தியாவைச் சேர்ந்த குட்டிக் கிருஸ்ணன் நாயர் கடமையாற்றினார். இந்திய இராமகிருஸ்ண மிசன் பேரியக்கம் தன் கிளை வழியாக இலங்கைக் கல்லூரிகளுக்கு ஆசிரியர்களை நியமித்துக் கொண்டிருந்தது. 1954 இல் இந்துக்கல்லூரியில் திரு. மரகதம் என்றழைக்கப்பட்ட ஆசிரியர் பௌதீகத்திற்கும், திரு. வெங்கட்ராமன் கணிதத்துறைக்கும், அவரது 18 வயது நிரம்பிய அறிவியல் பட்டதாரி மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. வெ. ரங்கநாதன் அவர்கள் இரசாயனவியலுக்கும் நியமிக்கப் பட்டிருந்தார்கள். இலங்கையின் கல்வி வளர்ச்சி வரலாற்றில் இராமகிருஷ்ண மிசன் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. குறிப்பாக அறிவியல் கல்விக்கு இந்திய ஆசிரியர்கள் அளித்த பங்களிப்பு 1961 வரை நீடித்தது.

## முதல் மாணவி

1963ம் ஆண்டின் மிக முற்பகுதியில் நிலாவெளியைச் சேர்ந்த செல்வி. தவமணிதேவி கனகசபை எனும் மாணவி உயிரியல் விஞ்ஞானத்தில் HSCல் சேர்ந்து, 1964ல் பரீட்சையில் தோற்றியிருந்தமைக்கான ஆதாரம் கல்லூரி ஆவணம் மூலம் உறுதி செய்யப்படுகின்றது. இந்துக் கல்லூரியில் கற்ற முதல் மாணவி என்ற பெருமைக்குரியவர் க.தவமணிதேவி. தேடிக் கிடைத்த தகவலில் 1964ல் HSC மாணவிகள் (HSC) அனுமதிக்கப்பட்டிருந்தார்கள் என்பது உறுதியானது . அவர்களில் செல்விகள் சாந்தாதேவி தில்லைநாயகம், ( பின்னர் திருமதி சிவலிங்கம்), ஆயிஷா மீரா சாகிப் (Aysha Meera Shahib), குரைஷிய ஜபார் (Kuraisha Jaber), யுகைரா ஜயா (Juhaira Jayah) இவர்கள் நான்கு பேரும் உயிரியல்துறை மாணவிகள். இதற்கு முன்பு 1937 இல் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடாத்திய கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற பாக்கியலட்சுமி என்ற மாணவி செல்வி சாந்தாதேவியின் தாயார் என்பது கூடுதல் தகவல். கல்லூரியில் உள்ள இந்த எழுத்தாவணம் பழைய மாணவர் சங்கத்தின் தோற்றம் மற்றும் மாணவிகள் மிக நீண்ட காலத்திற்கு முன்பே இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்துடன் தொடர்பில் இருந்தார்கள் என்ற மகிழ்ச்சியான தகவல்களை இணைத்து உறுதி செய்கின்றது. பேசும் போதெல்லாம் காலத்தை மீறி திருமதி. சாந்தாதேவி சிவலிங்கம் அவர்களின் ஒவ்வொரு வார்த்தையும் அழுத்தமாக மென் முறுவலுடன் வெளிவந்தது பெரு மகிழ்ச்சியே.

அடுத்த கட்டமாக செல்வி து.விபுசானந்தி, செல்வி சி. ரஞ்சனி, செல்வி. து.தனேஸ்வரி, ஆகியோருடைய கல்விக் காலத்தைக் குறிப்பிடலாம். இவர்கள் 1965 இல் உயர் வகுப்பில் கல்வி கற்றவர்கள். பிற்காலத்தில் விபுசானந்தி வழக்கறிஞராகவும், தனேஸ்வரி ஆசிரியையாகவும் புகழ் பெற்றவர்கள். இவர்களைத் தொடர்ந்து 1966- 67ம் காலப்பகுதியில் அதிபர் க.சிவபாலன் அவர்களின் மகள் பிரமிளா (பொம்மி) உட்பட ஆறு மாணவிகள் கல்லூரியில் சாதாரண தரம், உயர்தரம் ஆகியனவற்றில் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். செல்விகள் சித்திரவேல் சுகிர்தா, சரஸ்வதி (பன்குளம்), அனிதா ஹபீபா (Anitha Habeeba), மற்றும் இரு மாணவிகள் சாம்பல்தீவைச் சேர்ந்த க. லட்சுமிதேவி, செல்வி. இராஜேஸ்வரி குணம் சொலமன்ஸ் (இமெல்டா) ஆவர். இவர்களில் செல்வி. இராஜேஸ்வரி பிற்காலத்தில் தன் கணவர் டாக்டர் வேதநாயகத்துடன் இணைந்து "தென்றலும் புயலும்" என்ற திரைப்படத்தை தயாரித்தவர். அனிதா அவர்கள் ஆசிரியையாகவும், கல்வி அதிகாரியாகவும் பணியாற்றியவர். இவர்கள் உயர் வகுப்பு HSC வரை படித்திருந்தாலும் நிறைவு செய்யவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1967 இல் செல்வி சிவகுரு லோகேஸ்வரி, செல்வி அனிதா ஹபீபா (Anitha Habeeba), சி.பிரமிளா, சரஸ்வதி ஆகியோர் HSC வகுப்பில் இணைந்து பின்னர் அதே ஆண்டு இறுதியில் விலகினார்கள். இவர்களில் அனிதா தோப்பூரைச் சேர்ந்தவர். இவர்கள் அனைவரும் உயிரியல் துறை மாணவிகளாக இருந்த போது மதக் கல்வியும், லத்தீன் மொழியும் கற்றார்கள். அதிபர் க.சிவபாலன் அவர்கள் இவர்களுக்கு ஆங்கிலத்துடன் இலத்தீன் மொழியையையும் கற்றுக்கொடுத்தார். அக்காலத்தில் கல்வி என்பது ஒழுக்கத்தோடு போதிக்கப்பட வேண்டும் என்ற அதி தூயவாதம் சகல சமூகங்களிலும் பரவலாக ஏற்கப்பட்டிருந்தது. தங்கள் பிள்ளைகளை கண்டிப்பான ஒழுங்குமுறைகள் இருக்கும் கல்லூரிகளில் சேர்க்கவே பெற்றோர்கள் விரும்பினார்கள். இதனால் ஆசிரியர்கள் இல்லாத வேளைகளில் மாணவிகள் தங்கள் வகுப்பறைகளில் இருந்து வெளியேறி மாணவிகளுக்கான ஓய்வறையில் மாத்திரம் தங்க அனுமதிக்கப்பட்டார்கள். இது வரலாற்றில் துறவி மடங்களில் பேசப்பட்ட ஒழுக்க விதிகளுக்கு நிகராக உணர முடிகின்றது. உயர்தர வகுப்புக்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை, ஆய்வுகூடம் ஆகியன புனித மரியாள் கல்லூரி, இந்து சண்முகா மகளிர் கல்லூரி ஆகியவற்றில் 1960 - 1974 வரை மிகப் பெரும் நெருக்கடியாக இருந்தது. அதனால் உயர் வகுப்பு மாணவிகளை இந்துக்கல்லூரியில் தொடர்ச்சியாக சேர்க்கும் தேவை மீண்டும் 1971 இல் உருவாகியது.

இதுவரை பார்த்த இந்துக் கல்லூரியின் உயர்வகுப்பு மாணவிகள் அனைவரும் உயர் கல்விக்காக உயிரியல் துறையை மாத்திரம் தேர்வு செய்துள்ளார்கள். ஏன் அவர்களால் கணிதம் கண்டு கொள்ளப்படவில்லை? உயிரியல்துறை போன்று கணிதத் துறைக்கு ஆசிரியர்கள் இருந்தார்களா? எப்போது HSC கணிதத்துறை ஆரம்பிக்கப்பட்டது? இவை இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக் காலத்தை மதிப்பிடுவதற்கான கேள்விகள் மாத்திரமல்ல, திருகோணமலை மாவட்ட கல்வி வளர்ச்சி குறித்த ஆய்வு செய்பவர்களும் தெரிந்து கொள்ளவேண்டிய பதில்கள் இவை. 1961 வரை இந்திய இராமகிருஸ்ண மிசனே இந்துக்கல்லூரிக்கு ஆசிரியர்களை அனுப்பிக் கொண்டிருந்த காலம் என மனதில் கொள்ளும் ஒருவருக்கு இந்தக் கணிதத்துறைக்கான கேள்விகள் தவிர்க்கக் கூடாதவை.

அதிபர் க. சிவபாலன் குறித்த மாணவிகளின் பார்வை பெருமைக்குரியது. 'அவர் எங்களுடன் தந்தையாக வாழ்ந்தார்' என்று கூறும் போதெல்லாம் லட்சுமிதேவி மனம் தளர்ந்து கலங்கிக் கொண்டார். 'மதியம் இரண்டு மணிக்கு பின்னர் 'மெயில் பஸ்' என அழைக்கப்பட்ட கடைசி பஸ் சாம்பல்தீவு - கும்புறுபிட்டி உள்ளூர் வீதிகள் வழியாக குச்சவெளி சென்றடையும். அந்த பஸ் இல்லாத வேளைகளில் என்னை அவர் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று தங்க வைப்பார். அதிபர் சிவபாலன் அவர்களுக்கு முற்பணம், சம்பளம் என இரு தடவைகள் மாத ஊதியம் கிடைக்கும். ஒவ்வொரு தடவையும் மாணவிகளுக்கு மாத்திரம் இரண்டு ரூபா கொடுப்பார். அப்போது ஐஸ்கிரீம் 25 சதம் தான். எட்டு மாணவிகளும் அருகிலிருந்த Flora Fountain



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் ஐஸ்கீரிம் சுவைத்து விட்டு வகுப்புகளுக்கு திரும்புவோம்'. தன்னிலை மறந்து நினைவுகளை மீட்டுப் பேசும் போது மீண்டும் திரும்பி வரா வகுப்பறைக் காலத்திற்குள் அவர் நுழைந்து கொள்வது பார்ப்பதற்கு நெருடலாக இருந்தது.

ஜே.கிருஸ்ணமூர்த்தியின் Freedom and Order - சுதந்திரமும் ஒழுங்கும் இயல்பாக மலர்தல் தான் அதிபர் சிவபாலன் அவர்களின் கனவாக இருந்தது. இது அதி தூயவாத நோக்கில் காணப்பட்ட ஒரு சிறு நெகிழ்ச்சி. அவர் கல்வியை ஆசிரியரும், மாணவரும் இணைந்து முன்னெடுக்கும் மகிழ்ச்சியான பயணமாக முன்வைக்க முயன்றவர். மாணவர்களால் அதிபர் சிவபாலன் ஏன் கொண்டாடப்படுகின்றார் என்பதற்கு ஒவ்வொருவருக்கும் தனித் தனி காரணங்கள் இருக்கலாம். அவருடைய கம்பீரமான தோற்றம், ஆங்கிலப் பேச்சாற்றல் நீங்கலாக அவருக்கிருந்த மனிதாபிமானம் மிகச் சிறப்பானது. அவர் ஒருபோதும் கல்லூரி என்ற தனி அலகுக்குள் தன்னை ஒடுக்கிக் கொண்டவர் அல்ல. அந்தக் குறுகிய எல்லைகளுக்கு அப்பால் அவரது கனவு முற்றிலும் சமூகம் சார்ந்ததிருந்தது. இடதுசாரி சிந்தனையாளர், இந்த மண்ணை முழுமையாக நேசித்தவர். அவருடைய மண் மீதிருந்த பற்றுதல் கல்லூரி வழியாக வெளிப்பட்டது. திருகோணமலை மண் மீது அவர் கொண்டிருந்த தீராப் பற்று உணர்வு பூர்வமானது. புயல் பேரழிவுக் காலத்தில் அவர் ஆற்றிய சேவை திருகோணமலை சமூகம் நன்றியோடு என்றும் நினைவு கூரும். பொது வெளிக் கருத்தரங்கங்கள், தேர்தல் மேடைகள் என்பனவற்றிலும் அணையா ஆர்வ நெருப்போடு வந்து முன் நிற்பார். அவரது அறச் சீற்றம் பல இடங்களில் வெளிப்பட்டது. அவரது துணிச்சல் விமர்சனங்களுக்கு அப்பால் மாணவர்களின் அங்கீகாரம் பெற்றவை. இந்தக் கருத்துக்கள் அனைத்தும் அவரிடம் கற்ற மாணவிகளின் பொதுப் பார்வை. அதிபர் சிவபாலன் அவர்களின் கையெழுத்து தனித்தனி எழுத்துக்களின் கூட்டாக இருக்கும். கையொப்பம் எப்போதும் தெளிவாக இருக்க வேண்டும் என்பதை அவர் எங்களுக்கு கூறியதைப் போன்றே என் கையொப்பத்தை மாற்றிக் கொண்டேன் என திருமதி யுகைரா கூறும் போது குழந்தையாகிப் போனார். யுகைராவின் தமிழ் அழகானது என்றாலும் அவர் ஒவ்வொரு வார்த்தையும் தேர்ந்தெடுத்து மிகச் சரளமாக ஆங்கிலத்தில் பேசினார். ஆங்கிலம் தான் அவர்களின் குடும்ப மொழி.

E.K என அழைக்கப்படும் கணபதிப்பிள்ளை ஆசிரியரின் இலக்கிய அறிவு வற்றா நீரருவி போன்றது. அவர் இலக்கிய வகுப்பிற்கு வந்துவிட்டால் ஆர்வம் பொங்கும். நல்லாசிரியர்கள் பலர் கதைகள் மூலமே மாணவர்களுடன் நெருக்கமடைவார்கள். ஒரு கட்டத்தில் கதைகள் தீர்ந்து போனால் அவர்களே கதைகளை அங்கும் இங்குமாகத் தேடி உருவாக்கி சொல்லிவிடுவார்கள். E.K இலக்கியக் கதைகளால் மாணவர்களை வசீகரிப்பார். ஆனாலும், அவர் உயிரியல் துறையில் இந்தியப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். மொழி, மதம், அறிவியல் என அவர் பெற்றிருந்த அறிவு எளிதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடையிட முடியாதவை. அவரிடம் இலக்கியம் கற்ற மாணவிகள் நெகிழ்வுடன் கூறும் கருத்துக்கள் இவை. கையில் பிரம்புடன், கடுமையான முகத்துடன் மாணவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவரே திறமையான ஆசிரியர் என்னும் பிம்பத்தை தகர்த்தவர்களில் இவரும் ஒருவர் என பெருமைப்படலாம். ஒழுக்கம் என்பது வன்முறை வழியாக, மாணவர்கள் மீது திணிக்கப்பட்ட காலம் மெது மெதுவாக கரைந்து கொண்டிருந்தது. 1960களில் செயல் முறைக் கல்வி அதிக முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. மனனக் கல்வியே வற்புறுத்தப்பட்டிருந்தது. இந்தச் சூழலில் E.K போன்ற ஆசிரியர்கள் மாணவர்களால் அதிகம் கவரப்பட்டதில் ஆச்சரியமில்லை.

1970களின் தொடக்கத்தில் இந்துக் கல்லூரியில் உயர் வகுப்பிற்கு மாணவர்களை அனுமதிப்பதில் ஆசிரியர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தது. சாதாரண தரத் தேர்வுகளைக் கடந்தும், உயர் வகுப்பில் இணைய வசதியின்றி வெளியில் இருந்த மாணவர்களை மீண்டும் கல்லூரிக்குள் சேர்ப்பது விமர்சிக்கப்பட்டதாகப் பேசப்பட்டது. வயது எல்லையைக் கடந்து கொண்டிருந்த மாணவர்களையும் கற்க அனுமதிப்பதில் என்ன தவறு என குரல் கொடுத்தவர்களில் முதன்மையானவர்களாக செல்வரட்ணம் மாஸ்டர், தட்சணாமூர்த்தி ஆசிரியர் ஆகியோர் இருந்தார்கள். அவர்களது குரல் 1970 - 1971இல் பொது விவாதத்தை உருவாக்கியது. இருவரும் பல்கலைக்கழகம் செல்வது மிக அவசியம் என மாணவர்கள் மத்தியில் தீவிரமாக விழிப்புணர்வை வளர்த்தவர்கள். உயர் வகுப்பில் சேர முடியாமல் இருந்த மாணவிகளையும் இந்துக்கல்லூரியில் இணைப்பதில் தவறில்லை எனக் கூறியதோடு பல மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஒளியூட்டியவர்கள்.

செல்வரட்ணம் மாஸ்டர் உயர் வகுப்பு மாணவர்களினால் அதிகம் கொண்டாடப்பட்டவர்களில் ஒருவர். அவர் அளித்த ஒத்துழைப்பும் உற்சாகமும் மாணவர்களுக்கு புத்தூக்கம் அளித்தது. அன்று அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இளம் பட்டதாரி ஆசிரியர். 'நன்று', 'மிக நன்று', 'S.Sel' இந்தக் குறிப்புகள் தான் அவரது மதிப்பீடாக இருக்கும். சிரித்தவாறு கண்டிப்பது அவரது அடுத்த ரேட் மார்க். அவர் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை அனுப்ப வேண்டும் என்பதில் பெரும் அர்ப்பணிப்புடன் செயலூக்கம் அளித்தவர். இந்துக் கல்லூரியின் வெற்றி ஓரிரு கைகளினால் தீர்மானிக்கப்பட்டத்தல்ல. ஒவ்வொரு ஆசிரியரும் மாணவர்களின் வெற்றியைத் தீர்மானித்திருக்கின்றார்கள். ஆசிரியர்கள் திரு. வல்லிபுரநாதன், செல்வி சதாசிவம், திரு தட்சணாமூர்த்தி என பல தூய உள்ளங்களின் கூட்டு உழைப்பினால் மாணவர்களின் தொடர் வெற்றிகள் சாத்தியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் பல்கலைக்கழக அனுமதி.

1967க்குப் பின் 1971இல் மீண்டும் உயர் வகுப்பு மாணவிகள் அனுமதிக்கப்பட்டார்கள். 1963இல் உயர் வகுப்பில் மாணவிகளை சேர்க்கப்பட்டிருந்தாலும், 1974 இல் நான் முதல் மாணவியாக (செல்வி சி.சாந்தினிதேவி) கலைத்துறையில் தேர்வாகி வித்தியலங்காரப் பல்கலைக்கழகம் சென்றேன். சாரலாக, லேசாக 1974 இல் தொடங்கிய மாணவிகளின் பல்கலைக்கழக நுழைவு சில ஆண்டுகளில் அடை மழையாகப் பொழியத் தொடங்கியது ஆரோக்கியமான விஷயம். கலை, மருத்துவம், பொறியியல் என பல துறைகளில் மாணவிகளின் சாதனைகள் தொடர்ந்தது. இது அதிபர் க. சிவபாலனின் மிகப் பெரிய கனவுகளில் ஒன்று. 1974 இல் மாவட்ட அடிப்படையிலான பல்கலை நுழைவு அறிமுகமானது மாணவர்களுக்கு அதிக வாய்ப்பை அளித்தது. இந்துக்கல்லூரியில் மாணவிகளின் பல்கலைக்கழக நுழைவு விசைகொண்ட பிறகே கிராமங்கள் தோறும் பெண் கல்வி குறித்த புரிதல் ஏற்பட்டது.

1971 இல் இருந்து 1977 சித்திரை வரை மாணவிகள் தொடர்ந்து கல்வி கற்றார்கள். இது இந்துக் கல்லூரியின் வரலாற்றில் பொற்காலங்களில் ஒன்று. அறிவியல், கலைத் துறைகளில் மாணவிகள் பல்கலைக்கழகம் வழியாகப் பெற்றிருந்த சாதனைகள் மிக நீண்ட பட்டியலுக்குரியது. பல்கலைக்கழக நுழைவு என்பது வளர்ச்சிப் படியின் ஒரு வழி மாத்திரமே. பல்கலைக்கழக தேர்வுகளுக்கு அப்பாலும் மாணவர்கள் பெற்றிருக்கும் சாதனைகள் பெரு மதிப்பிற்குரியன. வழமையாக பெண்கள் கல்லூரி அதிதூயவாத விழுமியங்களுக்காக உருவாக்கப்படுபவை. அத்தகைய கல்லூரிகளுக்கு மாணவியரை படிக்க அனுப்புவதே அந்த அதி தூய்மைவாத நோக்குக்காகத்தான். அந்த மனத் தடை தகர்ந்து ஆண்கள் கல்லூரியில் மாணவிகளை சேர்ப்பதில் பெற்றோர் பெரு விருப்படைந்தார்கள். இது இந்துக்கல்லூரி கடந்த மற்றொரு மைல்க் கல்.

உயர் கல்வியில் நம்பிக்கையற்று வீட்டில் ஒதுங்கியிருந்த மாணவிகளுக்கு இந்துக் கல்லூரி தன் கதவுகளை அகலத் திறந்த போது அவர்கள் புத்துயிர்ப்பு பெற்றார்கள். அது அவர்களுக்கு எண்ணிறந்த கனவுகளின் உயிர்வெளியாகத் தோன்றியது. தன் தோள் மீது ஏற்றி உலகைக் காட்டிய தந்தையர் காலத்தை விட தன் சொந்தக் காலில் நின்று உலகைத் தரிசிப்பதில் பெண் கர்வம் கொள்கின்றாள் என்பது உண்மையே. இவர்கள் புதிய பராசக்திகள். இதுவரை "மகளிர் மட்டும்" கல்லூரிகளில் கற்ற மாணவிகளுக்கு ஆண்கள் கல்லூரியில் கற்பது ஒரு புது உத்வேகத்தையும், வேறுபட்ட புரிதலையும் அளித்தது. எதிர்ப்பால் கவர்ச்சிக்கு அப்பால் ஒரு நிஜ உலகின் தரிசனம் மாணவிகளுக்கு கிடைத்தது. அதன் வழியாக ஆளுமை மேம்பட்டது. ஆண்கள் கல்லூரியில் 'தான்' கல்வி கற்ற போது தன்னை கர்வம் கொள்ளச் செய்ததாக செல்வி இராசரத்தினம் சாந்தினி (இன்றைய பொறியியல் துறைப் பேராசிரியை பேராதனை வளாகம்) ஒரு குறிப்பேட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டிருந்தார். இது சமத்துவமற்ற ஆண் உலகில் (systemic inequality) பெண் சாதித்த அங்கீகாரம். ஆண்கள் கல்லூரியொன்றில் மாணவிகளின் அதிசயிக்கக்கூடிய தொடர் வெற்றிப் பதிவுகள் உண்மையில் வியப்பூட்டின.

புதிய கல்விச் சூழல் மாணவிகளுக்கு வேட்கைக் களமாக மாறத் தொடங்கியது. அதனால் அவர்கள் கல்லூரிக்கு வெளியிலும் சாதித்தார்கள். கல்கி செதுக்கிய காவியங்களில் 'சிவகாமியின் சபதம்' அற்புதமானது. அதில் விழிச்சுடர் பொங்கும் சிவகாமி ஒரு கற்பனை வார்ப்பு என்று சொன்னால் மட்டுமே ஒருவரால் நம்ப முடியும். அந்தக் காலகட்டத்தில் அந்த புனைவில் இருந்து வரலாறு, சினிமா என பல தளங்களுக்கு விரிந்து வாசகர்களைச் சென்றடைந்து கொண்டிருந்தாள் சிவகாமி. அந்தளவுக்கு எழுத்துக்களால் செதுக்கப்பட்ட உயிரோட்டமுள்ள கதாப்பாத்திரம் சிவகாமி. கல்கியின் எழுத்துக்களை காவியமாக்குவதற்கு ஒரு இளம் பெண்ணுக்கு எத்தனை அசரா வலிமை தேவைப்பட்டிருக்கும். அழகு, நடனம் என நாவல் நெடுகிலும் எழுத்துக்களைச் சித்திரங்களாகக் கோர்த்திருப்பார் கல்கி. அதை முதலில் நாடகமாக்கி கிழக்கு மாகாணப் போட்டியில் பரிசிலை தனதாக்கியவர் செல்வி வை.ஜெயந்தி. 'ஜனனம்' என்ற சிறுகதை வழியாக 'குமுதம்' போட்டியில் முதற் பரிசைப் பெற்றவர் செல்வி மஞ்சுளா. அனுராதா, ஜெயந்தி, மஞ்சுளா ஆகியோர் சிற்றிதழல்களில் தினமும் கூவிய குயில்கள். கல்லூரியின் கலை நிகழ்வுகளில் அறிவியல் துறையில் இருந்து செல்விகள் புவனஜோதி, கோகிலேஸ்வரி, பா.சாந்தினி, தயாளினி ஆகியோரின் வில்லுப்பாட்டு, கலைத்துறையில் இருந்து செல்விகள் வ.ராஜினி, மஞ்சுளா ஆகியோரின் இசை நடனங்கள் நீர்ச்சுழல் போல பார்வையாளர்களை உள்ளிழுத்து நினைவில் இருந்து வெளியேறாமல் சிக்க வைத்த காலமும் அது தான்.

1975 இல் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பெண்களின் பங்கேற்பு இந்துக் கல்லூரி வரலாற்றில் புதிய வரிகளை எழுதியது. மாணவிகள் நான்கு அணிகளாக மோதி பரிசில்களைப் பெற்றுக் கொண்டார்கள். மாணவிகளின் அணிநடை கூடுதல் அழகாக இன்னும் கண்ணில் எஞ்சியுள்ளது. இருந்தாலும், இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் இன்னும் Old Boys' Association என அழைப்பது சற்று நெருடல் தான்.

திருமதி S. சாந்தினிதேவி

பி-கு: கடந்த கால நினைவுகளில் இருந்து தகவல்களைத் நிறைவாகத் திரட்டுவது சவாலானது. இன்னும் நினைவுகள் மீளும் தருணங்களில் இக்கட்டுரை மீளாக்கம் செய்யப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**From Rajaratnam Shanthini (an old student of Trincomalee/R.K.M. Sri Koneswara Hindu College, then known as Trincomalee/R.K.M. Hindu College, from April 1973 to April 1975)**

I passed G.C.E. (O/L) with flying colours in 1972from Trincomalee / Methodist Girls' English School, which had no G.C.E. (A/L) classes, then. I was ambitious, very ambitious. We were repeatedly told by my teachers at Methodist Girls' English School that a respectable profession was very important for a woman. Those teachers were all female,and most of them were university graduates or trained teachers. They were also very strong characters, my role models, and were totally committed to turn us, girls, into serious professionals. They were very certain that we would be if we set our minds to it. I wholesale bought their convictions, and set my mind to become a respected professional. Profession of my choice was engineer as I was, and still am, thoroughly entertained by anything that is mathematics.

First step of becoming an engineer would be to go to a school with A/L classes that would see me to an engineering faculty. Choice was obvious; go to Trincomalee Hindu College which was the first school in Trincomalee to start A/L classes, which happened just a couple of years back, and was admitting girls for A/L classes, despite it was, and still is, a boys' college. I was in the third A/L batch of Trincomalee Hindu College, and I did study there from April 1973 to April 1975. I entered University of Moratuwa in April 1976, on merit basis, and passed out as a Chemical Engineer from University of Moratuwa in Sept 1980. I worked at University of Moratuwa for an year as a lecturer on contract basis, and secured a permanent position as a lecturer at the Department of Chemical Engineering, University of Peradeniya in Sept 1981. I went to University of Alberta, Canada, on Commonwealth scholarship, and completed my M.Sc. in Chemical Engineering there. I completed my PhD in University of Luleå, Sweden, and returned to Sri Lanka to continue my services at University of Peradeniya, where I am still working, and now in the capacity of Senior Professor in Chemical and Process Engineering.

As a matter of fact, I am the first female Professor in Chemical and Process Engineering in Sri Lanka. I am also the first female academic staff to secure a permanent employment at the Faculty of Engineering, University of Peradeniya, and the first female Head of the Department at the Faculty of Engineering, University of Peradeniya.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

How did I achieve all these? Where the confidence came from? Who showed me the path? Who guided me through it? First and foremost, all credits go to my father who was absolutely sure that his daughter could always get what she wanted. He was unshakable in his stand, which I bet every father owns to his daughter to make her stands on her ownfeet. My mother was a living role model who always dared to go for what she wanted. And then all my teachers, both at Methodist and Hindu College.

And, then there was my A/L physics teacher, late Mr. S. Thachchanamoorthi, who was unique and was full of dreams and ideas for us, O/L and A/L students of Hindu College.He demanded that we become intellectuals, not merely intelligent. Mr. Thachchanamoorthi trained us, via debates,to critically analyze ideas, theories, and any other matters of consequences considering their philosophical dimensions, in addition to their practical ends. He encouraged us to have discourses in ideas, thoughts, and theories. His contributions towards my life were so great that I ended up dedicating my PhD thesis to him. I wrote in my thesis on fluid mechanics the following:

**To one of my pre-university teachers**

**S.THACHCHANAMOORTHI,**

**who always insisted that the prime goal of education should be to**

**make a human more humane.**

Then, there was our priceless principal at Hindu College during my stay there, late Mr. Vallipuram Nadarajah, who was unique in making us comfortable with whom we were, and encouraged us, in his seemingly strict manners, to better ourselves until we were comfortable with ourselves. He facilitated us to seriously focus on our goals, and strived to achieve our goals no matter what the circumstances were. Indumathi, his daughter, was our classmate. I gathered from her that her father was very fond of students who got a lot of questions about life, who were trying to figure out things on their own, who were active, and who were full of life. I cherished that about our principal, and was immensely benefitted from his attitudes towards, and approach to, free-thinking students.

Under the watchful guidance of late Mr. Vallipuram Nadarajah, most of my classmates and I went to universities. As I recall, about five of us went to University of Moratuwa; at least one went to the medical faculty;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

a good number of my batch mates entered University of Jaffna. Mind you, we were just the third A/L batch at Hindu College, and it was a great achievement that so many of us entered the universities.

My math and chemistry teachers at Hindu College were, as I understood, came straight from the universities. We were their first group of students. They were dedicated, caring, very friendly, and encouraging. I have heap of memories, which I treasure, about our interactions, and their roles in making the distance between me and the university shorter.

Thank you so much for my teachers and mentors at Trincomalee/ R.K.M. Sri Koneswara Hindu College, you contributed immensely towards me achieving my dreams and goals.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி
# என் நினைவுகளின் ஒரு பக்கம்

1971 ஆம் ஆண்டு, சித்திரை வருடப் பிறப்பு முடிந்து பாடசாலைகள் தொடங்கும் முதல் நாள், கல்வியைத் தொடர வாய்ப்புக் கிடைத்த சந்தோக்ஷத்துடன் முதன் முதலாக இ.கி.ச.இந்துக்கல்லூரியில் (அப்போது அறியப்பட்ட பெயர்), கால் பதிக்கின்றேன். என்னை எப்படி வரவேற்பார்கள், எண்ணூறு ஆண் மாணவர்களுக்கிடையில் நான் ஒருத்தியா என்ற சிந்தனைகள் மனதில் ஓட, அதிபர் அறைக்குள் என் தந்தையுடன் நுழைகிறேன்.

ஆம், ஒரு ஆண்கள் பாடசாலைக்குள் கல்வி கற்க சட்டப்படி அனுமதி பெற்ற முதல் பெண். ஏன் சட்டப்படி?

சில வருடங்களின் முன் அதிபராக இருந்த திரு.க.சிவபாலன் அவர்களின் இரு புதல்விகளும் இன்னும் சில பெண்களும் இ.கி.ச.இந்துக்கல்லூரியில் கல்வி கற்றனர்.

எங்களை எதிர்பார்த்திருந்த அதிபர் திரு.கிருஸ்ணபிள்ளை அவர்கள் எங்களை அன்புடன் வரவேற்று எனக்கு தைரியம் கூறி என்னை ஆசிரியைகளின் அறைக்கு அனுப்பி வைத்தார். அங்கிருந்த ஆசிரியைகள் என்னை அன்புடன் விசாரித்து பின் எனது வகுப்பறைக்கு அனுப்பினர்.

ஆறு மாணவர் (நவநீதன், முருகதாஸ், விநாயகமூர்த்தி, விக்னேஸ்வரமூர்த்தி, மார்ட்டின் ஆனந்தகுமார், சிவயோகராஜா ஆகியோர்) இருந்த அந்த வகுப்பில் என்னைக் கண்டதும் நிசப்தம். அது மாணவரின் வரவு பதியும் நேரம், திரு.தில்லைநாதன் அவர்கள் வகுப்பாசிரியராக வரவு பதிந்து கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் மணி அடித்தது. எனக்கு தரப்பட்ட பாட அட்டவணையின் படி, அடுத்த பாடம் இரசாயனம். ஆறு பேரும் எழுந்து சென்றனர். எங்கு செல்வது என்று தெரியாததால் நான் அங்கேயே இருந்தேன். சில நிமிடங்களுக்குப் பின் ஒருவர் திரும்பி வந்து இரசாயன ஆய்வு கூடம் எங்கு இருக்கிறது என்று காட்டி அழைத்துச் சென்றார். பின் மெல்ல மெல்ல ஒவ்வொருதராக என்னிடம் பேசத் தொடங்கினர்.

## நான் எதற்காக ஆண்கள் பாடசாலைக்குச் செல்லே வேண்டும்?

1968இல் நான் க.பொ.த சாதாரண பரீட்சையில் சித்தியடைந்த பின், புனித மரியாள் கல்லூரியில் கலைப்பிரிவு பாடங்கள் கற்பிக்கப் பட்டாலும், விஞ்ஞானப் பிரிவில் உயர்தரம் படிப்பதற்கு பெண்கள் பாடசாலையில் ஆய்வு கூட வசதிகள் இருக்கவில்லை. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்த பெண்களில் பண வசதியோ உறவினர்களோ உள்ளவர்கள் யாழ்ப்பாணம் அல்லது கொழும்பு சென்று கல்வி கற்றனர். மற்றவர்கள் வீட்டிலேயே இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சொந்த ஊரிலேயே கல்வி கற்கும் வசதி பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று எனது தந்தையார் ஜி.ஏ.டி அல்மெய்டா அவர்கள் கல்வித்துறையிடம் விண்ணப்பித்தார்.

1968 இலிருந்து 1971 வரை சளைக்காமல் விண்ணப்பத்திற்கு மேல் விண்ணப்பம் கல்வி இலாகாவிற்கு அனுப்பி 1971 இல் அனுமதி பெற்றார்.

நான் பாடசாலையில் சேர்ந்து ஓரிரு மாதங்களின் பின் ஜோதீஸ்வரியும் அவருக்குப் பின் சம்சத்நோனா, கானசரஸ்வதி, யோகேஸ்வரி ஆகியோரும் பாடசாலையில் சேர்ந்தனர். அடுத்த வருடம் எனது தங்கை உமாராணியுடன் இன்னும் பலர் சேர்ந்து படித்தனர். பின்பு பல பெண்கள் பயன் பெற்றனர்.

ஜோதீஸ்வரி Medical Lab Technologist ஆகவும் சம்சத்நோனா. கானசரஸ்வதி ஆகியோர் ஆசிரியர் ஆகவும் பின்னாளில் வேலை பார்த்தனர். நான் என்னை உருவாக்கிய ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியிலும், பின்னர் லண்டன் பாடசாலைகளிலும் கணித ஆசிரியராகப் பணி புரிந்தேன்).

நாங்கள் சீருடை அணிய வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. முதல் மாதம் நான் மட்டும் தனியே இருந்தபோது ஏதாவது வண்ண உடை அணிந்து சென்றேன். பின் ஜோதீஸ்வரியும், சம்சத்நோனாவும் வந்த பின் வெள்ளை சீருடை அணிவது என்று நாங்களே முடிவெடுத்து சீருடை அணிந்தோம். எங்களுக்குப் பின் வந்தவர் அப்படியே பின்பற்றினர்.

என் வகுப்பில் இருந்த ஆறு மாணவரும் பின்னாளில் எங்கள் வகுப்பில் சேர்ந்து கொண்ட ஜெயசீலனும், சத்தியமூர்த்தியும் எனக்கும் மற்றைய பெண்களுக்கும் பெரிதும் உதவியாக இருந்தனர். எங்கள் வகுப்பறை மிகவும் மகிழ்ச்சியானதாகவும் படிப்பதற்கு ஏற்ற சூழலுடனும் இருந்தது.

என் சக மாணவர் என்னை உயர்தர வகுப்பு தமிழ்ச்சங்கத்தின் தலைவியாக தேர்ந்தெடுத்து, வாரம் ஒருமுறை நடக்கும் ஒன்று கூடலில் யாராவது ஒரு பெரியவரை பேச அழைப்பதற்கும், அந்த வருடம் வள்ளுவர் விழா சிறப்பாக நடப்பதற்கும் உதவிகள் செய்தனர்.

பாடசாலை விளையாட்டுப் போட்டியின் போது நான் இருந்த இல்லத்திற்கு என்னைப் பொருளாளராக தேர்ந்தெடுத்து என்னைப் பெருமைப்படுத்தினர். விளையாட்டுப் போட்டியின் இறுதியில் ஆங்கிலத்தில் நன்றியுரை வழங்கும் வாய்ப்பையும் வழங்கினர்.

பாடசாலையில் முக்கியமானவர்கள் ஆசிரியர்கள். அவர்களை மறக்க முடியுமா? நான் சேரும் போது விஞ்ஞானப் பிரிவில் தூய கணிதம் கற்பிக்க திரு.ராஜாமணி அவர்கள், பௌதீகவியல் மற்றும் பிரயோக கணிதம் கற்பிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. சிற்றம்பலம் அவர்கள், இரசாயனம் கற்பிக்க திருமதி. சிவாலிங்கம் அவர்கள் உயிரியல் கற்பிக்க திரு. வல்லிபுரம் அவர்கள், தாவரவியல் கற்பிக்க செல்வி.சதாசிவம் அவர்கள் ஆகியோர் இருந்தனர். இவர்கள் எல்லோரும் மிகவும் அக்கறையுடன் படிப்பித்தனர்.

இவர்கள் எல்லோருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் கூறிக்கொள்கிறேன்.

துரதிஷ்டவசமாக நான் உயர்தரம் இரண்டாம் ஆண்டு படிக்கும் போது இவர்களில் சிலர் முக்கியமாக கணிதப் பிரிவில் படிப்பித்தவர்களான திருமதி.சிற்றம்பலம், திரு.ராஜாமணி ஆகியோர் வேலை இடம் மாறுதல் பெற்று சென்றுவிட்டனர். சில தவணைகள் கணிதத்திற்கும், பௌதிகவியலுக்கும் ஆசிரியர் இல்லாமல் நாங்களே பாடசாலை நூலகத்து உதவியுடனும், பொது நூலகத்து உதவியுடனும் சுயமாகவே படித்தோம்.

எனக்குப் பின் வந்த மாணவருக்கு புதிய ஆசிரியர்களும் பாடசாலைக்கு வெளியில் கூடுதல் உதவியும் கிடைக்கப் பெற்று மேலும் முன்னேறினர் என்பதை அறிந்து ஆனந்தம் அடைகிறேன். அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

இப்போதுள்ள மாணவருக்கும் எதிர்கால மாணவருக்கும் பல வசதிகள் உள்ளன. அவர்கள் அவற்றை சரியான முறையில் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேறவும், எங்கள் கல்லூரி எல்லாத்துறையிலும் வளம் பெறவும் என் வாழ்த்துக்கள்.

பரீட்சைக்குப் படிக்கும் பாடங்களை விட ஆங்கிலம் கற்பித்தார்கள் திரு.தங்கராஜா அவர்களும் திரு.தில்லைநாதன் அவர்களும். சுவாரஸ்யமான அவர்களின் வகுப்புகள் என்னை மிகவும் கவர்ந்தன. அவர்கள் இருவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் கூறிக்கொள்கிறேன்.

இந்த பாடசாலை நாட்களில் என் மேல் நம்பிக்கையும், அக்கறையும் கொண்டு எல்லாவழிகளிலும் என்னை ஊக்குவித்து பல தடைகளை இலகுவாக கடப்பதற்கு எனக்கு உறுதுணையாக இருந்த என் பெற்றோருக்கும் எனது உற்ற நண்பர், உறவினர், ஶ்ரீ சண்முகா மகளிர் இந்துக் கல்லூரியில் எனக்கு ஆசிரியராக இருந்தோர் ஆகியோருக்கும் என் நன்றியை தெரிவிக்க இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துகிறேன் .

எதிர் காலத்தில் வாழ்க்கை என்னும் சாகரத்தில் நீந்துவதற்கு என்னைத் தயார் செய்த ஶ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கு என் மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிருஸ்ண ஜோதி டி அல்மெய்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிமிகுந்த நாட்களை
# வலிமை கொண்டதாய் மாற்றிய காலம்.

1970களில் திருமலை மாவட்டத்தில் உயர்தரக்கல்வி என்பது வெளியே சென்று படிக்க கூடியவர்களுக்கு உரித்தானதாய் இருந்தது. ஒரு சில பாடசாலைகளில் உயர்தர வகுப்புகள் இருந்தாலும், முறையான, வகுப்பு, தரமான ஆசிரியர்கள் இல்லாததால், முடிந்த வரையில் வெளிமாவட்டங்களில் படிப்பதும், அங்கே படித்து வந்தது இங்கே பரீட்சை எடுப்பதுமாய் ஒரு தனித்துவமில்லாமல் போய்கொண்டிருந்த நேரம், திருமலை மண்ணின் மாணவர் மீதும் மாவட்டத்தின் முன்னேற்றத்தின் மீதும் பற்றுள்ள சில ஆசிரியர்களும், பழைய மாணவர்களும் ஒன்று சேர்ந்து புதிய மாற்றங்களைக் கொண்டு வந்தார்கள். முறையான வகுப்புகளை அமைப்பது, பெரும்தடைகளை விதிக்காமல் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது, முக்கியமாக பல்கலைகழகத்தில் படித்துக் கொண்டிருக்கும் பழைய மாணவர்களைக் கொண்டு விசேட வகுப்புகளை கொடுத்து பயிற்றுவிப்பது என்று முயன்றதால் கல்லூரியில் இருந்து பட்டப்படிப்புக்கு செல்லும் எண்ணிக்கை கூடத்தொடங்கியது.

இதனால், உயர்தரக்கல்வியில் சேரும் மாணவர்கள் மட்டுமல்லாது மாணவிகளது வருகையும் கூடியது. சரியான புரிதலும், வழிகாட்டலும் இல்லாமல், சாதாரண தரத்தின் சித்தியோடு அடுத்து என்ன என்று தெரியாது ஓரிரு வருடங்களைக் கழித்த மாணவ மாணவிகளும் மெல்ல சேரத் தொடங்கிய நேரம் நாம் இருவர் ஏற்கெனவே ஒரு மாணவி மட்டும் இருந்த கலைப்பிரிவில் சேர்ந்து கொண்டோம்.

ஓரிரு மாதங்கள் தான் போயிருக்கும் ஏழு மாணவர்களை மட்டுமே கொண்ட அந்த வகுப்பில் இருபத்தைந்து மாணவிகள் சேர்ந்து கொண்டோம் தொகையில் கூடினால் தொல்லைகளும் கூடிவிடும் போல உள்ளேயும், வெளியேயும் சிக்கல்கள் அத்தனையும் தாண்டி எம்மை அழைத்துச்சென்ற எங்கள் ஆசிரியர் திரு.செல்வரெட்ணம் அவர்களுக்கு இங்கு நன்றி கூறியே ஆகவேண்டும். இலகுவில் சித்தியடையக்கூடிய பாடங்களைத் தேர்ந்தெடுத்து தருவதும், அதற்கு உதவியாக பல்கலைகழகத்தில் படித்துக்கொண்டிருக்கும் மாணவர்களான கலாநிதி திரு.க.சரவணபவன், திரு சந்திரகாந்தன் போன்றவர்களைக் கொண்டு பயிற்றுவித்ததும், சோர்ந்து போன எங்களை தைரியமூட்ட ஒருமுறை இவர்கள் எங்கள் வீட்டுக்கே வந்து எமது பெற்றோருடன் பேசி ஊக்கமளித்ததும் அல்லாமல், எங்களுக்குள் பல்கலைக்கழக கனவை விரித்து வைத்தார்கள். கதவுகளை உடைத்துக் கொண்டாவது நீங்கள் பல்கலைக்கழகம் போகவேண்டும் என்பது இவர் அடிக்கடி கூறும் வார்த்தை. இல்லாத சட்டங்களையும், எழுதாத வழமையினையும் உடைத்தெறிந்து முன்னேறியதால் கல்லூரியின் நீரோட்டத்தில் இலகுவாக கலந்து கொண்டோம். கல்லூரி மலரில் மாணவிகளாய் எங்கள் கவிதைகள் இடம்பிடித்தன. கலைவிழாக்களில் எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைநயம் மிளிர்ந்தது. கவியரங்குகளில் இடம்பிடித்தோம் பள்ளிகளுக்கிடையேயான போட்டிகளில் பங்கேற்றோம். விளையாட்டுப் போட்டியின் போது மகளிருக்கான நடையணி உருவானது.

சாதாரணப் பயிற்றுவித்தலில் பெறும் அறிவு என்றில்லாமல் தேடித்தெரிந்து அறிந்து தயாராகும் முறையை இவர்கள் எங்களுக்கு சொல்லித்தந்தார்கள்.

இதன்மூலம் முதன்முதலில் கூடுதலான பேர் இந்தப் பிரிவில் சித்தியடைந்ததும், பிறகு பல்கலைக்கழகம் சென்றதும்,மாணவியரில் ஓரிருவரைத்தவிர மற்றவர்கள் அனைவரும் திருமலையிலேயே ஆசிரியைகளாகவும், வங்கிகளிலும் வேறு அலுவலகங்களில் கடமையாற்றியதும் குறிப்பிடத்தக்கது. அடுத்து வந்த வருடங்களில் இந்த பிரிவில் இருந்த மாணவிகளின் ஆக்கங்கள் வானலையில் தவழ்ந்ததும், இங்கிருந்து பல்கலைக்கழக சட்டப் பிரிவுக்கு சென்ற மஞ்சுளா குமரப்பா பிள்ளையின் சிறுகதைகள் குமுதம், விகடன் போன்ற சஞ்சிகைகளில் வெளியானதும் அவருடைய ஜனனம் என்ற கதைக்கு குமுதத்தில் அகில உலக சிறுகதை போட்டியில் முதல் இடம் கிடைத்ததும் குறிப்பிடத்தக்கது. புழுதியில் வீழ்ந்திருக்கும் நல்ல வீணைகளைப் புடம் போட்டு எடுத்தது போல் நம் பன்முகப்பட்ட திறமைகளையும், வெளிக்கொணர்ந்து, மனித நேயமுள்ளவராய் உருவாக்கியது இந்தக்கல்லூரி.

கவசகுண்டலங்களை
கழற்றி வைத்து, விட்டு
கைவீசிக்கொண்டு
கடல் பல தாண்டி வந்தும்
கையறு நிலையன்றி
காலூன்றி நிற்பதற்கு
கற்ற முறையன்றி
உற்ற துணை ஏதுமில்லை,

**இந்த வருடங்களில் நடந்த மாற்றங்கள் என்று பார்த்தால்**

- பல்கலைக்கழக பழைய மாணவர்களால் கிடைத்த சுயநலமற்ற கல்வி சேவை.
- பெருமளவில் மாணவிகள் சேர்க்கை.
- அதிக அளவில் மாணவிகள் பல்கலைக்கழகம் சென்றது.
- முதல் முறை பொறியியல் பீடத்துக்கு இங்கிருந்து மாணவி ஒருவர் சென்றது என்பவற்றை குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 125 ஆண்டு விழா : கவிதை

வண்டினங்கள் மட்டும் வாழ்ந்த வளமான - நிலப்பரப்பில்,
வசந்தருது வந்ததுமே
சில்லென்று பூத்த
சிறு பூக்கயாய்,
ஆண்களுக்கே, ஆனதாய் ஆண்டுகள் பல கழிந்ததே
இந்துக்கல்லூரியதில்,
காலத்தின் தேவையும்
கன்னியர் தேர்வையும் - கருதி
பூக்களும், புத்தகம்
தூக்கி வந்தன.
வாராத வசந்தத்தை
வண்டினமும்
கொண்டாடி நின்றது
பூக்களோடு போட்டியிட
முட்டி மோதியிட்டு
புத்தியைத் தீட்டிவிட்டு - நல்ல
சித்திகளை எட்டிவிட
சக்தியும் பெருகியது. சில
விசுவாமித்திர தவங்களும்
விடை பெற்றுக் கொண்டது
ஆண், பெண் கடந்த அழகான நட்புகளும்,
அதையும் தாண்டிவந்து
காற்று வாக்கில், சில
காதல்களும்,
இன்று வரை மணவாழ்வில்
இணைந்திருக்கும்
இணைகளும் - இங்கே
காலத்தால் அழியாத
காவியங்கள் ஆகின.

ஜெயந்தி வைரமுத்து
பழைய மாணவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துவில் எனது சேவை அனுபவம் இனிப்பும் கசப்பும்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தோராம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இருபத்தாறாம் திகதி தி/இராமகிருஷ்ண மிஷன் இந்துக் கல்லூரிக்கான எனது இடமாற்றக் கடிதத்தோடு கல்லூரிக்குள் நுழைந்தேன். பிரதான நுழைவாயிலுக்கு நேரெதிரே அமைந்திருந்த அன்றைய அதிபர் அலுவலகத்தை நோக்கி நடந்து சென்றேன். இப்போதிருக்கும் திறந்த வெளி அரங்கு மேடை அப்போது இருக்கவில்லை. பதிலாகச் சிற்றோடுகளால் வேயப்பட்ட ஒற்றையொற்றைப் பதிந்த கூரைக் கட்டட நிரைகள் காணப்பட்டன. அவற்றைக் கடந்து அதிபர் அலுவலக வாயிலை அடைந்து "எக்ஸ்கியூஸ் மீ. மே ஐ கம் இன்" என்று பண்போடும் பணிவோடும் குரல் கொடுத்தேன். நான் இந்துக் கல்லூரியில் கல்வி கற்காத காரணத்தினால் அப்போது அதிபர் பதவியில் இருந்தவரை முன்னெப்போதும் பார்த்துப் பேசிப் பழகியதில்லை. ஆனால் அங்கு நீண்ட காலம் ஆசிரியராக இருந்து அதிபராகியவர் என்ற தகவலை அறிந்திருந்தேன். அவரும் அதேபோல அறிமுகம் இல்லாத அந்நியனைப் பார்ப்பது போலத் தனது மூக்குக் கண்ணாடியின் மேல் விளிம்புக்கு மேலால் என்னைப் பார்த்து உள்ளே வரும்படி சைகை காட்டித் தன் எதிரே இருந்த ஆசனத்தைக் காட்டி அமரச்சொன்னார். அதற்கு ஆங்கிலத்திலே அவருக்கு நன்றி சொல்லி அமர்ந்து கொண்டு இடமாற்ற உத்தரவுக் கடிதத்தைச் சமர்ப்பித்தேன். கடிதத்தை மேலோட்டமாகப் பார்த்தார். நான் ஆங்கில ஆசிரியர் எனப் புரிந்துகொண்டார். என்னையும் மேலும் கீழுமாகப் பார்த்தார். "வெறி சொறி, நோ வேக்கன்சி ஹிய. யூ மே கோ" என்று கடிதத்தைத் திருப்பித் தந்துவிட்டார். தனியார் நிறுவனமொன்றில் வேலைவாய்ப்புக் கேட்டுக் 'கெஞ்சிப்' போன ஒருவனை முதலாளி திருப்பி அனுப்புவது போன்றிருந்தது எனக்கு.

ஏமாற்றமும் சற்று அவமானமும் ஏற்பட்ட எனக்கு அந்த அதிபர் மீது வைத்த தற்காலிக மதிப்பு மறைந்துபோக என்னைச் சுதாகரித்துக்கொண்டு, "கல்வி அலுவலகத்தினால் எனக்கு வழங்கப்பட்ட இடமாற்ற உத்தரவுக்கு அமையவே நான் இங்கு கடமை ஏற்க வந்துள்ளேன். நீங்கள் என்னைத் திருப்பி அனுப்பும் செயல் அலுவலக உத்தரவை நீங்கள் அவமதிப்பதாகவே நான் கருதுகிறேன். எனவே அலுவலகத்துடன் தொலைபேசித் தொடர்புகொண்டு எனக்கு இங்கே கடமையேற்க உங்களால் இடமளிக்க முடியாதென்பதை உரிய அதிகாரிக்குத் தெரிவிக்கும் பட்சத்தில் அவர்கள் எனக்கு மாற்றுப் பாடசாலை ஒன்றை வழங்குவதாகத் தெரிவித்தால் மட்டுமே நான் இங்கிருந்து போவேன்" என்று ஆங்கிலத்தில் கூறிவிட்டுப் பிடிவாதமாக இருந்துவிட்டேன்.

ஐந்து நிமிட தொலைபேசி உரையாடலின் பின் அதிபர் என்னைப் பார்த்து, "நீர் ஆண்டின் நடுப்பகுதியில் வந்துள்ளீர். ஏற்கனவே இங்குள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று ஆங்கில ஆசிரியர்களுக்கும் தரம் 6 முதல் தரம் 11 வரை ஆங்கிலப் பாடம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. எனவே உமக்கு ஆங்கில பாடம் தரமுடியாது. வேறு என்ன பாடங்கள் உம்மால் படிப்பிக்க முடியும்?" என்று கேட்டார். "தரம் 6 முதல் தரம் 9 வரை கணிதம், விஞ்ஞானம், தமிழ் மற்றும் சைவசமயம் ஆகிய பாடங்களை என்னால் கற்பிக்க முடியும்" என்று கூறினேன்.

நான் யா / ஹாட்லி கல்லூரியில் கல்வி கற்ற நாட்களில் J.S.C. (தற்போதைய தரம் 8) சித்தியடைந்தபின் மாணவர்களைக் கலைப்பிரிவு விஞ்ஞானப் பிரிவு என்று பிரித்துவிடுவார்கள். நான் விஞ்ஞானப் பிரிவுக்குத் தெரிவு செய்யப்பட்டதால் S.S.C. (தற்போதைய தரம் 11) வரை உயிரியல், பௌதிகம், இரசாயனம், தூயகணிதம் மற்றும் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், ஆங்கில மொழி, சைவ சமயம் என அனைத்துப் பாடங்களையும் கற்றுச் சித்தியடைந்த பின் H.S.C. (தற்போதைய A/L) கணிதப் பிரிவில் தூய கணிதம், பிரயோக கணிதம் பௌதிகம் மற்றும் இரசாயனம் என்னும் நான்கு பாடங்களையும் கற்றதனால் அவ்வாறு எதுவித தயக்கமும் இன்றிக் கூறினேன்.

திருப்தியடைந்த அதிபர், "இங்கே தமிழ், சமயம் படிப்பிக்கத்தான் ஆசிரியர் பற்றாக்குறை. எனவே நீர் கேட்டுக்கொண்டபடி தரம் 6 முதல் 9 வரை சில பிரிவுகளுக்குத் தமிழ் சமயமும் உயர்தர வகுப்புகளுக்கு ஆங்கிலமும் கற்பிக்க நேரசூசி வழங்கப்படும். பாடவேளைகள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் பக்கத்திலுள்ள நிர்வாக அறைக்குள் உமக்கு இடம் ஒதுக்கித் தரப்படும். ஆங்கிலத்தில் உத்தியோக பூர்வ கடிதங்கள் தயாரித்து ரைப் செய்யவேண்டும்" என்றார். (அக் காலத்தில் கொம்பியூட்டர் பாவனை இல்லை தட்டச்சு (ரைப்பிங்) தான்.) அந்த நிர்வாக அறைக்குள் சிரேஷ்ட ஆசிரயர்களான திரு குணரெத்தினம் அவர்கள், திரு இராஜாமணி அவர்கள் மற்றும் திரு வைகுந்தசாமி அவர்களும் தமக்கு ஒதுக்கப்பட்ட சில பாடவேளைகள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் வந்து நிர்வாகக் கடமைகளிலும் ஈடுபடுவார்கள். இவர்களுள் அமரர் குணரெத்தினம் அவர்கள் எனக்குத் தமாஷாக A.O. பட்டம் சூட்டி அவ்வாறே அழைக்கலானார். இதனைப் பார்த்து வேறு சிலரும் அவ்வாறே அழைக்கலானார்கள். அதிபருக்கு அமரர் குணரெத்தினம் அவர்களுடன் ஏதும் ஆலோசனைகள் கலந்துயையாடல் தேவைப்படும்வேளை தானே நேரில் வந்து கதைத்துவிட்டுப் போவார். அப்படியான சந்தர்ப்பங்களில் ரைப்பண்ண வேண்டிய அலுவலகக் கடிதங்கள் இருப்பின் என்னிடமும் தர முற்பட, நான் ஆசனைத்தை விட்டு எழுந்தால், "சிற், சிற்" என்று சொல்லி என்னை அமரவைத்துத் தான் நின்றுகொண்டே அவற்றைக் காட்டி விளக்கம் தந்துவிட்டுச் செல்வார். கடமை ஏற்க வந்த என்னை அன்று "வெறி சொறி, நோ வேக்கன்சி ஹிய. யூ மே கோ" என்று அவர் கூறியபோது ஏற்பட்ட கசப்பு உணர்வுகள் இரண்டொரு தினங்களில் நான் அவரைக் கண்டு எழும்பும்போது "சிற், சிற்" என்று சொல்லி எனது தோள்களில் தட்டிக் கதைக்கும் போது இனிமையாகி விட்டன. அதனைத் தொடர்ந்து அவருக்கும் எனக்கும் பரஸ்பர புரிந்துணர்வும் மரியாதையும் ஏற்பட்டு விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அதிபர் வேறு யாருமல்ல. எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராகவிருந்த அமரர் அ.சிவலோகநாதன் அவர்களே.

இனி எனது வகுப்பறைக் கற்பித்தலின் போது ஏற்பட்ட சில அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறேன். ஆறாம் வகுப்பு தமிழ் பாடத்தைக் கனகச்சிதமாகக் கற்பித்து மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டிருந்தேன். ஆறாம் வகுப்புத்தானே என்று எதுவித முன்னாயத்தமும் இல்லாமற்தான் வகுப்பறைக்குச் செல்வேன். ஒரு நாள் 'அடி சறுக்கிவிட்டது'. பாடத்தைக் கற்பித்துவிட்டு அதன் கீழ் உள்ள பயிற்சிகளைச் செய்யும்படி கூறிவிட்டு வகுப்பறையை வலம் வந்து சிலரது பயிற்சிகளைச் சரி பிழை பார்த்துக் கொண்டிருக்கும் போது ஒரு மாணவன் எழுந்து, "ஸேர், இரண்டாம் பயிற்சியில் நாலாவது வசனம் கஷ்டமாக இருக்கிறது" என்றான். "என்ன தம்பி எழுவாய் பயனிலை தெரிதல்தானே உன்னால் முடியும் முயன்று பார்" என்று அவனுக்கு உற்சாக வார்த்தையைக் கூறிவிட்டு எனது கதிரையில் போய் அமர்ந்துகொண்டு நான் நாலாம் வசனத்தோடு போராடிக்கொண்டிருந்தேன். அந்த நாலாவது வசனம் இதுதான். "அப்பாவுக்குக் கண்ணனிலும் வாணியிடம் கொள்ளை அன்பு." பாடம் முடிவுறம் மணி அடித்துவிட்டது. சரியான விடையைக் கண்டுபிடிக்கமுடியாமற்போன நான் அந்த மாணவனைப் பார்த்து மிகச் சர்வசாதாரணமாக, "என்னடா தம்பி இன்னும் விடைகண்டு பிடிக்கவில்லையா? சரி நாளைக்குப் பார்ப்போம்" என்று கூறிவிட்டு வகுப்பறையிலிருந்து நேரே ஆசிரியர் ஓய்வு அறைக்குள் அந்த நாலாம் வசனத்தோடு போனேன்.

அங்கிருந்த தமிழ் ஆசிரியை ஒருவரிடம் வசனத்தைக் காட்டி விடை கேட்டேன். கூறினார். எனக்கென்னவோ திருப்திப்பட முடியவில்லை. என்றாலும் அந்த ஆசிரியையுடன் விவாதிக்கவில்லை. பின்னர் மற்றுமோர் தமிழ் ஆசிரியை அங்கு வர அவரிடமும் வசனத்தைக் காட்டி விடை கேட்டேன். கூறினார். ஆனால் அது வேறு விடை. இடைவேளை நேரம் இன்னுமோர் தமிழ் ஆசிரியையிடம் கேட்டேன். வசனத்தைப் பார்த்தவுடனேயே "என்ன ஸேர் இவ்வளவு யோசிக்கிறீங்க? 'அப்பா' தானே விடை என்று மூன்றாவது புது விடை ஒன்றைச் சொல்லி என்னை மேலும் திணறடித்து விட்டார். எனக்கு இப்போ ஒரு புறம் குழப்பம். மறுபுறம் மகிழ்ச்சி. மூன்று மூத்த தமிழ் ஆசிரியர்களிடமிருந்து மூன்று வேறு விடை கிடைத்ததால் 'நான் பரவாயில்லை' என்பதில் மகிழ்ச்சி. சரியான விடை கிடைக்காததால் குழப்பம்.

இவர்களது வெவ்வேறான விடைகளுடன் எப்படி நாளை வகுப்பு மாணவர்களுக்கு நான் முகம் கொடுப்பது. அன்று மாலையே பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் முன்னாள் சீடனும் இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் வெளிவாரிப் பட்டப்படிப்பு "ஹிக்ஸ்" நிறுவனத்தின் ஸ்தாபகரும் விரிவுரையாளருமான அமரர் திரு ஆ.நவரெத்தினம் ஐயா அவர்களை நாடிச்சென்று அந்த "நாலாம் வசனத்துக்கு" விடை கேட்டேன். பாடசாலையில் அன்று எனக்கு ஏற்பட்ட குழப்பத்தைக் கூறிப் பரிகாரம் கேட்டேன். புன்சிரிப்புத் தவழ, விடையை ஒரு சொல்லில் கூறிமுடிக்காமல் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கியத்தின் எழுவாய் பயனிலையைக் கண்டறியும் யுக்தியை விளக்கிக் கூறிவிட்டு "நான் விளக்கிய வழிப்படி இப்போ நீரே எழுவாய் பயனிலை கூறும் பார்ப்போம்" என்றார். ஐயம் திரிபு அகன்று விட்ட நிலையில் விடையைக் கூறினேன். " சரிதானே, இதற்குத்தானா வீணான குழப்பம்?" என்றார். என்னைவிட அவர் மிகத் திருப்தி அடைந்ததை என்னால் உணர முடிந்தது. நன்றி கூறி விடைபெற்றேன்.

மறுநாள் அந்த ஆறாம் வகுப்பு தமிழ்ப் பாடத்துக்கான மணி ஓசைக்கு ஆவலோடு காத்திருந்து சென்றேன். முதல் நாள் தோற்ற போர்க்களத்துக்கு மறுநாள் பலம் கூடிய படைக்கலனோடு செல்லும் வீரனின் வெற்றி வீறாப்போடு சென்றேன்.

(உண்மையில் தோற்றது என்னவோ என் மனதோடு மட்டும்தான். மாணவர்கள் முன் சமாளித்துக்கொண்டேன். பாடம் முடிவுறும் மணி அடித்ததும் எனக்குச் சாதகமாய் அமைந்து விட்டது.)

நல்லாசிரியப் பெருந்தகையின் 'ஒரு வாக்கியத்தின் எழுவாய் பயனிலையைக் கண்டறியும் யுக்தியை' மாணவர்களுக்கு விளக்கிக் கூறிவிட்டுச் சரியான விடையை மாணவர்களிடமிருந்தே பெற்றுக்கொண்டேன். அந்த விடையை இங்கே கூறாமல் வாசகர்களின் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.

இந்தச் சிறிய விடயத்தை இவ்வளவு தூரம் நான் இக் கட்டுரையில் நீட்டிக்கொண்டு போனது, (சிலரைப் பொறுத்த அளவில் 'அலட்டிக்கொண்டே' போனது) எனது அனுபவ வாயிலாகப் பின்வரும் விடயங்களை இன்றைய சில ஆசிரியர்களுக்கு எனது தாழ்மையான ஆலோசனைகளாக முன்வைப்பதற்காகவே.

1. கீழ் வகுப்புத்தானே என்று அதீத தன்னம்பிக்கை அடிப்படையில் முன் ஆயத்தமின்றி வகுப்பறைக்குச் செல்லாதீர்கள்.

2. கற்பித்தலின் போது எதிர்பாராத விதமாகச் சங்கடம் ஏதும் ஏற்பட்டால் மாணவர்கள் முன் அதனைக் காட்டிக்கொள்ளாமல் சாதுரியமாகச் சமயத்துக்கு உசிதமான புத்தியை, யுக்தியைக் கையாண்டுகொள்ளுங்கள்.

3. வகுப்பறையில் ஏற்பட்ட சங்கடத்தை உங்களுக்குள் வைத்து மேலும் சங்கடப்படாமல் மூத்த ஆசிரியர்களுடன் சங்கோஜமின்றி கலந்தாலோசித்துத் தீர்வு காண முயலுங்கள்.

4. அந்தத் தீர்விலும் திருப்தியில்லையென்றால் சங்கடம் ஏற்பட்ட விடயத்தில் துறைபோகக் கற்றவர்களின் உதவியை நாடுங்கள். அல்லது நூல்களை நாடுங்கள். இன்னும் சொல்லப்போனால் இன்றைய தொழில் நுட்ப வளர்ச்சியின் பயனான 'கூகிளை' இலகுவில் நாடுங்கள். மறுநாளே மாணவர்களுக்குத் தற்றுணிவுடன் முகங்கொடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதற்ற சூழ்நிலைக் காலம். எனது சேவைக் காலத்தில் 1983 முதல் 1990 வரை நாடளாவிய ரீதியில் பதற்றம் நிலவிய சூழ்நிலையே காணப்பட்டது. கல்லூரி ஆரம்பித்த சில மணித்தியாலயங்களுக்குள்ளேயே அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பாரிய குண்டுவெடிப்புச் சத்தங்கள் நம் காதுகளை மட்டுமன்றிக் கட்டடங்களையும் அதிர வைக்கும். அதனைத் தொடர்ந்து வீதிகளெங்கும் வாகன விரைவு. உறுமிச் செல்லும் படையினர் வானங்கள், கூவிச்செல்லும் அம்பியுலன்ஸ் வாகனங்கள், நகரின் அநேக பாடசாலைகள் மூடப்பட்டு மாணவர்களும் வீடுகள் நோக்கிச் செல்லும் அல்லோலகல்லோலம்!.

"என்ன நடந்தது? எங்கே நடந்தது? என்பதைச் சரிவரத் தெரியாமல் மாணவர்களை வீதிகளில் அலைமோதக் கட்டவிழ்த்து விடுவது ஆபத்தானது. பள்ளிக்கூடம் பாதுகாப்பானது என்ற கொள்கையில் எங்கள் அதிபர் இறுக்கமாக் நின்றுகொண்டு பதறும் மாணவர்களை ஆசுவாசப்படுத்திக்கொண்டு நிற்பார். பதற்றம் படிப்படியாகத் தணிய, பிள்ளைகளைத் தேடிவந்த பெற்றோர்கள் கையிலே அவர்களை ஒப்படைப்பார்.

இல்ல விளையாட்டுப்போட்டிகள் நடந்த காலத்தில் ஏற்பட்ட ஒரு அனுபவத்தையும் இங்கு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். காலைக்கூட்டம் முடிந்தவுடன் அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களும் பயிற்சிக்காக முற்றவெளிக்குச் சென்றிட வேண்டும். அதிபரே தனது அலுவலக வேலைகளையெல்லாம் தள்ளி வைத்துவிட்டுத் தானும் முன்மாதிரியாக முற்றவெளிக்கு முந்திவிடுவார். அதிபர் ஒருநாள் என்னென்று மோப்பம் பிடித்தாரோ தெரியாது. பயிற்சி தொடங்கிப் பத்து நிமிடங்களில் முற்றவெளியில் நின்று மீண்டும் பாடசாலைக்குள் வந்தார். ஆவேசமாக ஆசிரியர் ஓய்வறைக்குள் நுழைந்தார். நானும் இன்னும் இரண்டு ஆசிரியர்களும் 'முறையான மாட்டு'. நானும் இன்னோர் மென்மையான சுபாவம் கொண்ட ஆசிரியரும் உடன் எழுந்து நமது தவறை உணர்ந்து வாலைச் சுருட்டிக்கொண்டு புறப்பட அதிபரோ மூன்றாம் நபரைப்பார்த்து, "ஹலோ, உமக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். Go to the grounds immediately" என்று கர்ச்சித்தார். அந்த ஆசிரியரோ, " I am not well. I can't go". என்றார். அதிபரோ, "If you are not well you should have submitted a sick leave note and stayed at home. Why did you come to school?" என்று யதார்த்தமாக வாதிடுபவர் போலக் கூறினார். அந்த ஆசிரியரும் விட்டபாடில்லை. "I am fit enough to sit in the classroom and teach, but I can't go and stand in the hot sun" என்றார். அதிபர் உடனே அவ்விடத்தைவிட்டு வெளியேறினார். நானும் மற்ற ஆசிரியரும் முற்றவெளி நோக்கிச் சென்றோம். அதிபர் தனது ஸ்கூட்டரை முறுக்கிக்கொண்டு வேறெங்கோ போனதைக் கண்டோம். சில மணிநேரங்களில் பயிற்சி முடிந்து எல்லோரும் திரும்பிவிட்டோம். அதிபரும் திரும்பி விட்டார். கையிலொரு கடிதத்துடன் வந்தவர் திரு.குணரெத்தினம் ஆசிரியரிடம் அதனைக் காட்டி நடந்த விடயங்களையும் கூறி அந்த மூன்றாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடம் கையளிக்கும்படி கூற, அவரும் அதைச் சம்பந்தப்பட்ட ஆசிரியரை நிர்வாக அறைக்கு அழைத்துக் கையளிக்க, வியப்போடு விரித்துப் பார்த்தார்.

"உடன் செயற்படும்படி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளீர்". மூன்றாம் பேருக்கும் தெரியாமல் அந்த முரண்பட்ட மூன்றாவது ஆசிரியர் புதுப் பாடசாலை நோக்கி வெளியேறிவிட்டார். இடைவேளையின்போது நிர்வாக அறையிலும் ஆசிரியர் அறையிலும் ஒரே பரபரப்பு.

சில வாரங்கள் உருண்டோடின. இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியருக்கு ஆசிரியர் கழகத்தினால் பிரிவுபசாரம் நடாத்த வேண்டும் என்ற சம்பிரதாயம் உண்டு. அதிபர் இதற்கு ஒத்துக்கொள்வாரா? சம்பந்தப்பட்ட ஆசிரியர்தான் வருவாரா? ஏன்று பலரும் பலவாறாகப் பேசி கழகத்தின் நிர்வாக உறுப்பினராகவிருந்த நானும் வேறு சிலரும் முதலில் அதிபரை அணுகினோம். இது ஆசிரியர் நலன்புரிச் சங்கக் கடமை. ஏனக்கு ஆட்சேபனை இல்லை என்றார். அடுத்ததாக அந்த ஆசிரியர் வீடு தேடிச் சென்று விடயத்தைக்கூறித் தயக்கத்துடன் சம்மதத்தைக் கேட்டோம். தனக்கு ஆட்சேபனை இல்லை நான் நிச்சயம் வருவேன் என்றார். 'வந்து வைபவத்தில் அதிபரைச் சொற்களால் பழிவாங்குவாரோ' என்று சந்தேகமும் சங்கடமும் ஏற்பட்டது. சம்பிரதாயம் மீறப்படாத சந்தர்ப்பம் கிட்டியதால் பெரும் மகிழ்ச்சி. விழா ஏற்பாடாகிவிட்டது.

பிரிவுபசார வைபவத்தில் அதிபர் உரையாற்றும் போது அந்த ஆசிரியர் இதே பாடசாலையில் மாணவனாக இருந்தபோது கற்றலில் காட்டிய திறமையையும் குத்துச்சண்டை மல்யுத்தம் மற்றும் உள்ளக விளையாட்டிலும் வீரனாகத் திகழ்ந்ததையெல்லாம் புகழ்ந்து தள்ளினார். வேறு ஆசிரியர்களின் உரைகளின் பின் பிரிவுபசார நாயகன் பதிலுரையாற்றும் போது அதிபரின் குணாதிசயங்கள், கல்லூரி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய அளப்பரியசேவை, மற்றும் நிர்வாகத் திறன் என்றெல்லாம் அவரது உச்சியில் பாராட்டுமழை பொழிந்தார்.

ஏனைய ஆசிரியர்களை விட அன்று முற்றவெளி போகாமல் ஆசிரியர் ஓய்வறையில் 'பதுங்கி' இருந்த மூவரில் ஒருவரான எனக்கு மட்டும்தான் "சொல்யுத்தம்" மற்றும் அதிபரின் "நிர்வாகத் திறன்" இரண்டுமே நினைவுக்கு வர, இவ் இருவரும் இறைவனிடம் "நினைத்து வாட ஒன்று மறந்து வாழ ஒன்று" என்று இரண்டு 'மனம் வேண்டிக்கொண்டார்களோ" என நினைத்து மனதுக்குள் சிரித்துக்கொண்டேன்.

இது நடந்து பல ஆண்டுகளின் பின் நகரில் உள்ள ஒரு மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டிக்கு கலைமகள் வித்தியாலயத்தின் பிரதி அதிபராக இருந்த நானும் அழைக்கப்பட்டு விருந்தினர் பந்தலுக்குள் அமர்ந்திருந்தேன். இடைவேளையின் போது இல்லங்களைப் பார்வையிட்டுச் சிறந்த அமைப்பு தெரிவு செய்ய அதிபரும் பிரதம விருந்தினரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு சிலரும் சென்றுவிட நான் முன்னேறி அங்கிருந்து பேசிக்கொண்டிருந்த கௌரவ விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர் இருவருக்கும் நேரே பின்னால் இருந்த கதிரையில் அவர்களின் பார்வைக்குப் படாமல் அமர்ந்து கொண்டு, "உங்களுக்கெல்லாம் இப்படி ஒரு விளையாட்டுப்போட்டியில் கௌரவ விருந்தினர் சிறப்பு விருந்தினர் என்று கலந்துகொள்ள என்ன அருகதையிருக்கிறது?" என்று கேட்டதும் ஒருவர் "யாரடா இவன் எங்களை இப்படிக்கேட்க" என்ற தோரணையில் திரும்பி என்னைப் பார்த்தார். நான் தொடர்ந்து பேசினேன்.

"ஆசிரியர்களாக இருந்த காலத்தில் பாடசாலை இல்ல விளையாட்டுப் பயிற்சிக்குப் போகமுடியாமல் ஆசிரியர் ஓய்வறைக்குள் இருந்து அதிபரிடம் மாட்டி விரட்டப்பட்ட நீங்கள் எல்லாம் இன்று......." என்று சொல்லமுதல் இருவரும் பலமாகச் சிரித்துவிட்டு "சித்திரவேல், நீர் இன்னும் அதை மறக்கவில்லையா" என்றார்கள். அந்த இருவரில் ஒருவர் கோட்டக் கல்வி அலுவலகத்தின் பிரதிநிதியாகவும் மற்ற மென்போக்காளர் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் என்ற ரீதியிலும்தான் அங்கு கலந்து கொண்டிருந்தார்கள்.

மூவரும் சற்றுநேரம் அந்தக் கசப்பான அனுபவத்தை மீட்டுக் கதைத்துவிட்டு அவரவர் பணிப்பாதையில் ஏற்பட்ட நல்ல மாற்றங்கள் ஏற்றங்கள் பற்றியும் கலந்துரையாடி மகிழ்ந்தோம்.

**கெ.சித்திரவேலாயுதன்,**

**கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ravindran Sivasidambaram,

Washington,

USA.

Hello Everyone,

With great honor and pleasure, First I would like to congratulate on this 125th anniversary of RKM Sri Koneswara Hindu College and I would like to take this opportunity to express my gratitude to all my students. I am an alumnus of RKM Hindu college and a former teacher of RKM Sri Koneswara Vidyalyam from 1975 to 1979.

As we celebrate the 125th anniversary of RKM Sri Koneswara Hindu College, this collage is a prestigious educational institute in the eastern part of the country. An alumni meeting is one of those times where you get to meet your all friends who you might have lost contact with or whom you might have not met after you have graduated from college. This event is also where you meet your teachers and Principals who educated all of us. We are all thankful for the institution's Teachers and Principals have produce thousands of students into a perfect world but also produced Advocates, Artist, Scientists, Doctors, Engineers, Teachers, Entrepreneurs etc.

I would like to appreciate all the efforts that is done by all the Old Boys association for development of the intuition and the local society and thank you for justifying the years spent by you at this intuition.

When I started my teaching carrier at RKM Koneswara Vidyalyam, I had a good opportunity to take the school to next level. The school was already one of the best schools in the district but didn't have any kind other events beside education. With the help of all staff and students, We organized the very first Sports meet in 1977. It was very successful and we had our very first Prize Giving event too. Then we started going on education tours annually for the very first time in the school history.

I thank you for taking time out of your busy schedule to attend this event but I can assure you one thing that at the end of the night you all will go home with memories that you would cherish forever.

Thanks.

With kind regards

Ravindran Sivasidambaram



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1975ம் ஆண்டு மாணவர்களின் சுவாரசியமான சம்பவங்களும், நினைவுத் தடங்களும்

நாம் கோணேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி கற்ற போது எமது தலைமை ஆசிரியராக திரு. நடராஜா அவர்களும் அதன் பின்னர் பண்டிதர் வடிவேல் ஐயாவும், சக ஆசிரியர்களாக நாதன் மாஸ்ரர் (மாணவர் ஒழுக்கம்), ராமலிங்கம் ஐயா, செல்வராஜ ஐயா (உதவித் தலைமையாசிரியர், கணிதபாடம், மணி ஓசை மூலம் நேரசூசியை நடைமுறைப்படுத்துபவர், இலவச பிஸ்கட் விநியோகம்), திருமதி.மீனாச்சி ரீச்சர் ( தமிழ்), ரமணி ரீச்சர் (சமயம்), திருமதி. ஏகாம்பரம் ரீச்சர் (ஆங்கிலம்), திருமதி. சிவாலிங்கம் ரீச்சர் (புவியியல்), திரு. சின்னத்தம்பி ஐயா (சமயம்), திரு. சின்னத்தம்பி மாஸ்டர் (விஞ்ஞானம்), சவுந்தரிப்பிள்ளை ரீச்சர் (திருமதி. தெய்வநாயகம்), திருமதி. பாலசிங்கம் (ஆங்கிலம்) போன்றவர்களுடன் வேறு சில ஆசிரியர்களும் எமக்கு பாடம் கற்பித்தார்கள்.

ஒரு நாள் செல்வராசா ஐயா வகுப்பிற்கு வெளியில் வைக்கப்பட்டிருந்த கைமணியை தனது மேசையில் எடுத்து வைக்கும் நோக்கில் "மணி" என்று சொல்லை உச்சரிக்கும் போது வகுப்பின் முன்வரிசையில் இருந்த அருள்பாஸ்கரன் ஓடிப்போய் வெளியே உள்ள மணியை எடுத்து மூன்று தரம் அடிக்க மறுகணம் செல்வராசா ஐயா இவர் முதுகில் அடி, அடி என அடித்ததை நாங்கள் மறந்தாலும் அருள்பாஸ்கரன் மறக்காமல் அடிக்கடி எம்மிடம் கூறுவதும் சிரிப்பதும் எமக்கு ஞாபகம் உள்ளது.

அப்போது பாடசாலை கட்டிடமாக ஏறத்தாழ 10 வகுப்பறைகள் அடங்கிய இரு நீளமான கட்டிடங்கள் இருந்தன. அவ்விரு கட்டிடங்களுக்கிடையில் கிட்டத்தட்ட 6 அடி அகலமுள்ள நீளமான முற்றம். இம் முற்றத்தில் நீண்ட 3 நிரல்களில் மாணவர்கள் காலைக் கூட்டத்திற்கு ஒன்று கூடுவார்கள். ஆனால் வெள்ளிக்கிழமைகளில் மட்டும் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் நாம் அமர்ந்திருந்து கூட்டுப் பிரார்த்தனை செய்வோம். இதே நேரத்தில் இந்துக் கல்லூரி மாணவர்கள் காளிகோவில் மண்டபத்தில் பிரார்த்தனையில் ஈடுபடுவார்கள்.

இரு கட்டிடங்களில் ஒன்றில் பெரிய மேடை ஒன்றும், நீண்ட மண்டபமும் இருந்தது. அந்த மண்டபம் நகர்த்தக் கூடிய தட்டிகளால் வகுப்பறையாக பிரிக்கப்பட்டிருக்கும். அடிக்கடி குரு பூசை போன்ற ஏதாவது நிகழ்வுகள் வரும். அப்போது தட்டிகள் ஓரமாக திருப்பப்படும் எமக்கு சந்தோஷம் ஓடிவரும். மேடையில் பின்புறமாக பதிந்த கூரையுள்ள சிறிய அறை தலைமையாசிரியர் அறையாக இருந்தது. எமது நீளமான மண்டபத்தில் பின்புறத்தில் ஓர் சிறிய நிலப்பரப்பு அதில் இடைவேளை நேரத்தில் சத்துணவாக பால்மா, பாலாக கரைத்து மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. அதன் பின்னர் பாலுக்கு பதிலாக பால்மா வழங்கப்பட்டது. பின்னர் பணிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்ப்பட்டது. சில பணிஸின் ருசியை விட பணிஸ் வாசம் மூக்கை துளைத்து பசியை தூண்டும், சில பணிஸ் மஞ்சள் நிறமாக இருக்கும் இது முட்டை பணிஸ் எனக் கூறுவார்கள் அக்கூற்றையும் அவ்வயதில் நம்பினோம்.

சுட்டித் தனமாக நாம் பணிஸின் சதைப் பகுதியை பிரித்து அதில் சிறு கல்லை மறைந்து வைத்து இரக்கமின்றி காகத்திற்கு எறிய காகம் அதை குறிதவறாது பறந்து பிடித்து விழுங்கிய பின்னர் காகம் படும் துன்பத்தை நாங்கள் வேடிக்கையாக ரசித்ததும் ஞாபகத்தில் உள்ளது.

பின்னர் பணிஸிற்கு பதிலாக பிஸ்கட் வழங்கப்பட்டது. எம்மில் அட்டகாசமான மாணவர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் செல்வராசா ஐயாவிற்கு தெரியாமல் பிஸ்கட்டை எடுத்து குழுவாக பிரித்து உண்பார்கள் அடியும் வாங்குவார்கள். இவர்கள் யார் என்று பெயர் சொல்லாமல் எமக்குத் தெரியும் தானே? பெயரை சொல்லலாமா ரஞ்சித்?

நாம் கல்விகற்ற காலத்தில் எமது பாடசாலையில் 5ம் வகுப்பு வரை தான் இருந்தது. நாம் 5ம் வகுப்பு வரும் போது தான் வகுப்பு 6 வரை நடாத்துவதற்கு அனுமதியும் கொடுக்கப்பட்டு வகுப்பு நடாத்துவதற்கான இடமாக இந்துக் கல்லூரியின் அதிபர் அலுவலகமும், அதிபர் விடுதியும் வழங்கப்பட்டு புதிய தகரத்திலான எல்லை வேலியும் போடப்பட்ட போது ஏற்பட்ட எல்லைச் சண்டையில் ஈடுப்பட்டது சிலருக்காவது ஞாபகம் இருக்குது தானே?

பின்னர் 7ம் வகுப்பிற்கு நாம் இந்துக்கல்லூரி சேர்ந்த பின்னர் அக்கட்டிடம் மீண்டும் எமது பாடசாலைக்கு கிடைத்ததும் எமக்கு மகிழ்ச்சியை கொடுத்தது. 1972ம் ஆண்டளவில் நாம் வகுப்பு 8இல் கல்வி கற்கும் காலத்தில் எமது அதிபராக திரு. நடராசா ஐயா அவர்கள் கடமையேற்றார். அக்காலப் பகுதியில் திரு. நடராஜா அதிபர் அவர்களாலேயே திருமலையில் முதல் முதலில் பெண்களுக்கான உயர்தர விஞ்ஞானப் பிரிவு இந்துக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது. இது ஓர் வரலாற்று மைல்கல் என்பது மிகவும் பொருத்தமானது.

அதிபரின் மூத்த மகளும் பெண்களுக்கான விஞ்ஞான உயர்தரப் பிரிவில் ஓர் மாணவியாகும். அதிபரின் 3 ஆண் பிள்ளைகளும் எமது பாடசாலையில் உயர்தரம் வரை கற்றார்கள். அதிபர் நடராஜாவின் அயராத முயற்சி காரணமாக உயர்தர விஞ்ஞானப் பிரிவுக்கு சில தரமான பட்டதாரி ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து எமது பாடசாலைக்கு இடமாற்றப்பட்டு அதிபரின் வழிகாட்டலில் சிறப்பாக கடமையாற்றினார்கள்.

அப்போது கடமையாற்றிய A/L ஆசிரியர்களாக திரு. தட்சணாமூர்த்தி (Phy) பார்த்தாலே ஒரு விஞ்ஞானி தான், வல்லிபுரதாசன் (Zoo) இவர் White



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

& White ஆடையுடன் கண்ணாடி, போத்தல்களில் புதைக்கப்பட்ட விலங்குக் கூட்டத்தின் மத்தியில் இவர் மட்டும் என்புக்கூடு போன்ற மெல்லிய வடிவான தோற்றமுள்ள சிறந்த ஆசான், திரு.ஞானப்பிரகாசம் (Double Maths) இவரைப் பார்த்தால் கணிதத்தை கரைத்து குடித்தவர் என்றுதான் எண்ணத் தோன்றும். தர்மராஜா (Che) நகைச்சுவை உணர்வுடன் இரசாயனத்தை புகுத்த வல்லவர், நல்லைநாதன் (Phy & Che) இவரை தானே என்று எல்லாராலும் அழைக்கப்பட்டார் இரு பிரதான பாடம்களில் வித்தகர் என்றால் சொல்லவும் வேண்டுமா?

அக்கால கட்டத்தில் எமது இடைநிலை வகுப்பில் (வகுப்பு 8,9,10,11) எமக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களாகிய மார்க்கண்டு மிஸ், சங்கரப்பிள்ளை மிஸ் (திருமதி. தில்லைநாதன், திருமதி.கந்தையா மிஸ் (சமயம்), சிவசேகரம் ஐயா (தேடா) (கணிதம், தமிழ்), தில்லைநாதன் சேர் (ஆங்கிலம்), மரைக்கார் சேர் (ஆங்கிலம்), தங்கராஜா சேர் (ஆங்கிலம்), வரதசுந்தரம் சேர் (ஆங்கிலம்), மிஸ் கமாலா அம்பிகை, (திருமதி. ராஜகோன்) (பிரயோககணிதம், கணிதம்), திரு. ராஜாமணி (பிரயோககணிதம்), மிஸ் அலோசியஸ் (Che), புலவர் அரியநாயகம் (தமிழ்), மிஸ் சதாசிவம் (O/L உயிரியல், சுகாதாரம், A/L தாவரவியல்), மனோகரன் சேர் (O/L Che), நந்தபாலன் சேர் (O/L உயிரியல்), வரதராஜன் சேர் (கைவேலை, சித்திரம்), அருள் சகோதரர் லோரன்ஸ் (சமயம், தமிழ்) ஆகியோரின் இடைவிடாத உழைப்பும் அதிபர் நடராஜாவின் 2 வருடம் தொடர் மேற்பார்வையும், வழிகாட்டலும் 1975 ஆம் ஆண்டு எமது சகமாணவர்கள் GCE O/L இலும் 1977இல் GCE A/L இலும் சிறந்த பெறுபேறுகளை பெற்று (9 மாணவர்கள்) வைத்திய, இயந்திரவியல் துறைகளுக்காக பல்கலைக்கழகம் நுழைந்தமை எமது மாணவர்களின் சாதனைகளாக உள்ளது.

எமக்கு ஏணியாக இருந்து எம்மை உயர்த்தி விட்ட எமது ஆசிரியர்கள் சிலர் பற்றிய சிலவரிகள்.....

திருமதி. கந்தையா மிஸ் மொழி அடிக்கு பயந்து தான் நாம் "D" சித்தி, "C" சித்தி பெற்றது மாத்திரம் அல்லாமல் பலர், "F" சித்தியை தவிர்த்தார்கள் என்பதை நாம் பின்னர் தான் உணர்ந்தோம். நித்திரைக்கு முன் ஒரு திருக்குறளையாவது படித்து விட்டு உறங்கும்படி அடிக்கடி கூறுவார் அதை இன்றுவரை நண்பன் கபிலன் கடைப்பிடித்து வருவதாக கூறியது எனக்கு ஞாபகம் வருகிறது சரி தானே கபிலன்.

சண்முகநாதன் இவர் GCE O/L இல் எங்களுக்கு பௌதீகவியலை சிறப்பாக கற்பித்தார். அத்துடன் மாணவர் ஒழுக்கத்திலும் மிகுந்த அக்கறை உடையவராக இருந்ததால் மாணவர் நெறிபிறழ்வுகள் பெருமளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்படுத்தப்பட்டது. இவர் நகம் , தலைமுடி வளர்ப்பவர்களும் இருவராக ஒரு சைக்கிளில் உல்லாசமாக பயணிப்பவர்களும், நடுவிரலுக்கும் சுட்டு விரலுக்கும் இடைப்பட்ட நகப் பகுதியில் காவி அடையாளம் உள்ளவர்களுக்கு கன்னத்தில் அறைந்து தான் இவர்களை நெறிப்படுத்துவார் எனவே Sun என்றால் எல்லோருக்கும் பயம். ஆனால் நாங்கள் படிப்பை முடித்து வேலை செய்யும் காலத்தில் மிகவும் நட்பாக பழகுவார் அதனால் நாங்களும் பயம் நீங்கி நட்பாக பழகுவோம்.

அரியநாயகம் (புலவர்) ஆசிரியர் இவர் தமிழ் பாடத்தில் குறைவு என்றால் அடிப்பார் ஆதலால் புலவர் என்றால் மாணவர்களுக்கும் பயம் ஓர் நாள் உயிர், மெய், உயிர்மெய் எழுத்துக்களில் கேள்வி கேட்டார் ஒருவரும் முற்றான பதில் கூறவில்லை இதனால் கோபம் அடைந்த புலவர் மாணவர்களுக்கு சரமாரியாக அடி கொடுத்ததுடன் எழுத்துக்கள் யாவும் பாடம் வரும்வரை தமிழ் நெடுங்கணக்கு அட்டையை ஒவ்வொருவரும் கடையில் வாங்கி மட்டையை வெளிப்படையாகவும் மடிக்காமலும் எங்களை கொண்டுவர வைத்தார்.

சிவசேகரம் ஐயா (தேடா) இவர் தமிழ் பண்டிதர் கணிதத்திலும் விற்பனர் கணித பாடத்திற்கு வகுப்பறையினுள் நுழைந்து கொண்டு இருக்கும் போதே பாடத்தை தொடங்கிவிடுவார். பாடத்தில் பிழைவிட்டால் நுள்ளுவார், அடிப்பார் அல்லது நீ ஏன்டா இங்கு வாராய் U.C க்கு போய் குப்பை அள்ளிக் கொட்டு " மொக்குக் கட்டை" என்று ஏசுவார். பென்சில் கூர் மொத்தமாக இருந்தால் " ஏன்டா இதைக் கொண்டு வாராய் வீட்டில் உள்ள உலக்கையை கொண்டுவாடா என்பார். Free பாட வேளை நாம் மைதானம் செல்வதற்கு யாராவது ஆசிரியரை கேட்போம் என எண்ணும் போது இவர் வகுப்பிற்குள் நுழைய நாம் இவரை கலைப்பதற்காக தமிழ், கணிதம் தவிர்ந்த வேறு பாடங்களை ஒவ்வொரு தடவையும் கூறுவோம். அவரும் அப்பாடங்களை எமக்கு கற்பித்து தான் தமிழ், கணிதத்தில் மட்டுமல்ல சகல பாடத்திலும் பண்டிதர் என்று நிருபித்தார். இவரின் மூக்குக் கண்ணாடியில் ஓர் காம்பு உடைந்து விட்டது. அதற்கு நூல்கட்டி இருப்பார். கண்ணாடி போடும் போது நூலின் மறு அந்தத்தை காதில் சுற்றி விட்டு எம்மை கண்ணாடி ஊடாக பார்க்க மாட்டார் கண்ணாடி மேல் உள்ள இடைவெளியால் எமக்குத் தெரியாமல் நாம் என்ன செய்கின்றோம் என்று நோட்டம் விட்டு பிழை கண்டு அடிப்பார்.

தில்லைநாதன் சேர் இவர் ஆங்கில பாடம் கற்பித்தார் யாராவது பாடத்திலோ ஒழுக்கத்திலோ பிழைவிட்டால் அடிப்பார். அடிக்கும் முன்னர் தூணை கட்டிப்பிடிக்கச் சொல்வார். அதன் பின் எங்களுக்கு பிரம்படி விழும். சமகாலத்தில் செல்வி. சங்கரப்பிள்ளை மிஸ் (திருமதி தில்லைநாதன்) எமக்கு பக்கத்துவகுப்பில் புவியியல் கற்பித்துக் கொண்டு இருப்பார். திரு.திருமதி தில்லைநாதன் ஆசிரியர்கள் பேரப்பிள்ளைகளுடன் ஆரோக்கியமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதுடன் ஆங்கில பத்திரிகைகளுக்கு ஆக்கங்கள் எழுதுவதும், தமிழ் நாவல்கள் எழுதுவதும் தொடர்ந்தும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கிறது.

தங்கராஜா சேர் ஆங்கிலப்பாடம். சாம்பல்தீவை பிறப்பிடமாகக் கொண்டவர் சாரணர் இயக்கத்தில் எமது பாடசாலையில் மட்டுமல்லாமல் திருமலை மாவட்டத்திற்கும் பொறுப்பாசிரியராக செயல்பட்டவர். பாடம் ஆங்கிலம் என்பதனாலோ தெரியவில்லை Discipline அவரது இரத்தத்தில் ஊறிவிட்டது. எனவே கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தார் எம்மையும் வாழவைத்தார்.

மரைக்கார் சேர் இவர் ஆங்கிலப்பாடத்தை பிரதானபாடமாகவும் சித்திரபாடத்தை துணைப்பாடமாகவும் கற்பித்தார். இவரது மரபுசித்திரத்தை விட Modern Art எல்லோராலும் கவரப்பட்டது. இவர் எம்மிடம் குறும்புத்தனமாகக் கதைப்பார். எமது குறும்புத்தனத்தையும் ரசிப்பதுடன் மற்றய மாணவர்களுக்கு சொல்லி எம்மை கலாய்ப்பார். அப்போது நாம் ரசிப்பது அவரின் புன்சிரிப்பும் அவரின் உதட்டில் ஏற்படும் சுருக்க விரிவுகளைத்தான்.

நந்தபாலன் சேர் விஞ்ஞானப்பாடம் பாடத்திற்கு குறிப்புகள் தரமாட்டார் கேள்வியும் விடையும் தான் தருவார். வகுப்பில் கேள்வி கேட்பார். விடை சொல்லாவிட்டால் அடிப்பார். அடிக்கு பயத்தில் விடையை நாம் பாடமாக்கி கொண்டிருப்போம். ஓர்முறை ஈஸ்வரதாஸ் (ஆம்ஸ்ரோங் / ஊசி) இடம் கனியுப்புக்கள் மூன்று தருக என்றார் அதற்கு அவன் மா, பலா, வாழை என்றான். சேரிற்கு கோபம் பொத்துக் கொண்டுவர ஈஸ்வரதாஸ்க்கு அடி, அடி என்று அடித்ததுடன் நான் இங்கு தமிழ் பாடமா கற்பிக்கிறேன் எனவும் வினாவியது என் நண்பன் மகேஸ்வரனும் தனக்கும் ஞாபகம் உள்ளதென கூறுகின்றான்.

செல்வி கமலாம்பிகை ரீச்சர் (திருமதி. ராஜகோன் ரீச்சர்) இவர் எமக்கு இந்துக்கல்லூரியில் பிரயோககணிதம் பாடத்தை GCE O/L இல் கற்பித்தார். பின்னர் நாம் ஆசிரியராக கடமை ஏற்ற காலத்தில் நாம் அவருடன் சக ஆசிரியராக கற்பித்தோம் பின் கடமையில் இருந்து தற்போது ஓய்வு பெற்று நலமாக உள்ளார்.

செல்வி குணபூசணி சதாசிவம் ஆசிரியை O/L இல் உயிரியல் A/L இல் தாவரவியலையும் எமக்கு பாடத்தில் விருப்புவரக் கூடியவாறு விளங்கக் கூடியவாறும் கற்பிக்கும் வல்லமை உடைய சிறந்த ஆசான். தாவரவியல் பாடத்திற்கு மட்டும் நாம் Tution Class இற்கு போகவில்லை எனவே நாம் தாவரவியலில் பெற்ற சித்திக்கு மிஸ் சதாசிவம் தான் காரணம் என்பதை எம் வைத்திய நண்பர்களும் மறுக்க மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவானந்தநாயகம் சேர் இவர் பௌதீகவியல் பாடத்தை எல்லா மாணவர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும். என்பதற்காக மிகவும் ஆறுதலாகவும் அழுத்தமான உச்சரிப்புடன் சொன்னதை மீண்டும் மீண்டும் மீள் வலியுறுத்தல் செய்தவாறு கற்பிப்பார். இதனால் பாடப்பரப்பு முழுமை பெறமாட்டாது இருப்பினும் இவர் கற்பித்த விடயங்கள் முற்றாக விளங்கி விடும். எனவே இவரின் கற்பித்தல் நுட்பமுறை எல்லோராலும் விரும்பப்பட்டது.

சிவலோகநாதன் சேர் இவர் எங்களுடன் நட்பாக பழகுவார். ஆதலால் இவர் எல்லா மாணவர்களும் விருப்பப்படும் ஓர் சிறந்த ஆசிரியர். இவரை நாம் கோடேற்றா என்ற பட்டப்பெயர் சூட்டி அழைப்போம்.

ஆறறிவுபடைத்த அற்புதப்படைப்பு மனிதன். மனிதனின் உணர்வுகளின் உறைவிடம் மூளையம். மூளையத்தில் பதிகின்ற பல நினைவுகளில் மறையாமல் என்றும் இருப்பது பள்ளிபருவ நினைவுகள். கட்டிளமைப்பருவத்தில் அடியெடுகின்ற அந்த பருவ நினைவுகள் நண்பர் குழாமை தமதாக்கி மகிழும் 1975ம் ஆண்டின் நினைவுகள் அதன் தொடர்புகள் தொடரலையாக இன்றும் பசுமையாக பரிணமிக்கின்றது. தி/ ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் 125 ஆண்டு நிறைவுகாண் நிகழ்வின் மகுடமாய் அமைந்த நூல் வெளியீட்டிற்கான நிதியுதவியினை அளிப்பதற்கு 1975ம் (O/L) மாணவர்களிற்கு சந்தர்ப்பத்தை நல்கிய பாடசாலை நிர்வாகத்திற்கும் மலர்வெளியீட்டு குழுவுக்கும், குறிப்பாக ஆக்கங்களை தேடி அலைந்து திரிந்து தொகுத்தெடுத்த திரு. ச.பாரதிநாதன் அவர்களுக்கும், இம்மலர் வெளியீட்டிற்காக நிதியினை நல்கிய 1975ம் (O/L) நண்பர்களிற்கும், 1975ம் (O/L) நண்பர்களை ஓர் அணியில் திரட்டிய நண்பன் கபிலனுக்கும் இந்நூல் சிறப்புடன் அமைய பொருத்தமான ஆக்கங்களை தத்துதவியவர்களுக்கும், ஆக்கங்களை சரிபார்பதிலும் அச்சிடுவதிலும் உதவிய அனைத்து நெஞ்சங்களிற்கும் 1975ம் (O/L) மாணவர்களின் நன்றிகள். நாமம் கூறாமல் நன்றிகூறி இருப்பினும் அவையும் நன்றி கூறுவதாகவே ஏற்று நன்றியை பூரணப்படுத்துகின்றோம்.

ஆக்கம் :- பரமநாதன் சுந்தரராஜன்
(1975 O/L மாணவன்)
1975ம் O/L மாணவர்கள் குழாம்
இ.கி.ச இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் வாக்கால் மாணவர் வாழ்வை மலர வைத்த திருமதி. இராசநாயகி கந்தையா

## கபிலன் பரஞ்சோதி - கனடா

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை தாரகமந்திரமாக ஏற்று வாழ்ந்த ஆசிரிய, ஆசிரியைகள் காலத்தில் மாணவனாக இருந்த பெருமை எனது மனதில் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளது.

"கற்பதைக் கசடறக் கற்கவேண்டும்" என்ற திருவள்ளுவரின் வேதவாக்கு ஆசிரிய திலகங்கங்களின் கடமை உணர்வின் அத்திவாரமாக இருந்தது.

திருவள்ளுவரின் 3330 வேத வாக்குகளும், சமயாசாரியர்களது போதனைகளும், இதிகாசங்கள், இலக்கியங்களும் ஆசிரியர்களுடைய உள்ளங்களில் அருவிகளாக ஓடியதையும், மாணவர்களாகிய நாங்கள் ஓடிப் பாடிப் பருகியதாகவும் ஞாபகம்.

இன்று நாம் ஒரு சிறந்த வாழ்க்கையை அமைக்க ஆசிரியர்களது அறிவுரைகள்தான் துணையாக இருந்து வந்திருக்கின்றன என்பதைப் பெருமையாகப் பதிவு செய்கிறேன்.

இப்படியான பெருமைக்கு உரியவர் ஆசிரியை இராசநாயகி கந்தையா ஆவார். இவர் ஆசிரியர் பரம்பரையைச் சார்ந்தவர். கல்வித்தானம் இக்குடும்பத்தினரின் சேவைத்தானமக இருந்தது.

இராசநாயகி அம்மையாரின் கணவர் காந்தி மாஸ்டர் என்று அழைக்கப்படும் காந்தீயத்தைப் பின்பற்றிய தத்துவஞானி ஆவார். இவர்களுக்கு முருகன் என அழைக்கப்பட்ட மகன் கதிர்காமநாதன் ஆவார்.

இன்றைய நமது வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்துள்ள திருக்குறளை எமது உள்ளங்களில் அன்று பதியவைத்த பெருமைக்கு உரியவர் கந்தையா ரீச்சர் ஆவார்.

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இராசநாயகி அவர்கள் வெள்ளிக்கிழமைகள் தோறும் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை மாணவர்களுக்காக ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நடத்தி வந்த பஜனை நெஞ்சிருக்கும் வரையில் என் நினைவில் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறளில் உள்ள ஒவ்வொரு குறளும் மக்களின் வாழ்க்கைக்கு ஒரு ஒப்பற்ற வழிகாட்டியாக இருப்பதை மாணவர்ளின் உள்ளங்களில் பதிய வைப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்தவர். மாணவர்களது நெஞ்சங்களில் வள்ளுவருக்குச் சிலை அமைத்தவர் என்றே கூறலாம். இவரை மாணவர்களாகிய நாங்கள் "திருக்குறள் தியாகி" என அழைப்பதுண்டு.

பொதுமக்கள் நலன் பேணுவதும், சிரமதானங்களைச் செய்வதும், தானதர்மம் செய்வதும் இவர்களது வாழ்க்கையின் இலட்சியமாகும்.

இத்தொண்டுகளால் இவரை **"திருமலைக் கஸ்தூரிபாய்"** என அன்பாக அழைப்பார்கள்.

இவரது ஒரு அரிய சாதனையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.
கால் நடையாக 223 மைல் தூரமான கதிர்காம யாத்திரையை 94 நாட்களில் நிறைவு செய்து முருகன் அருள் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர் சங்கத்தில் நான் இணைந்து பணியாற்றிய காலத்தின் சில சுவையான நினைவுகள்

1981ஆம் ஆண்டு ஒரு நாள் மாலை கல்லூரி வாசலில் நின்றுகொண்டிருந்த அப்போதைய அதிபர் திரு சிவலோகநாதன் அவர்கள் அவ்வழியால் சென்றுகொண்டிருந்த என்னை அழைத்து நலம் சுகம் மற்றம் என் தொழில் பற்றி விசாரித்த பின் ஒரு வேண்டுகோளையும் என்னிடம் விடுத்தார். நீண்ட காலமாக செயலற்றிக்கும் பழைய மாணவர் சங்கத்தை புனரமைத்து மீண்டும் செயற்திறன் கொண்டதாக அமைக்க வேண்டும் என்றும் இதுபற்றி தான் ஏற்கனவே டாக்டர் ஞானி, விஜயகுமரகுரு மற்றும் சிலருடன் கதைத்துள்ளதாகவும் என்னையும் இப்பணியில் இணைந்து செயற்படுமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்த நல்ல காரியத்தை செய்ய யார்தான் பின்னிற்பார்கள். கட்டாயம் செய்வேன் சேர் என்று சொல்லிவிட்டு ஞானி குழுவினருடன் நானும் களத்தில் இறங்கினேன். பத்திரிகை மூலம் விளம்பரப்படுத்தி இருந்தாலும் நானும் என் பங்கிற்க்கு வயது வித்யாசமின்றி பலரை இக்கூட்டத்திட்கு வருமாறு நேரில் அழைத்திருந்ததேன். கணிசமானவர்கள் பங்களிப்புடன் இப் புனருத்தாரண பொதுக்கூட்டம் நடைபெற்றது. என்ன காரணமோ தெரியாது. அக்கூட்டத்திற்கு வந்திருந்த பல பெரியோர் வயதில் சிறியோனான என்னை சங்கத்தின் தலைவராக தெரிவு செய்தார்கள் . அவர்களுடன் ஒப்பிடுகையில் வயதிலும் அனுபவத்திலும் ஏன் அறிவிலும் குறைந்த நான் அப்பதவியை ஏற்க மறுத்தும் என்னை வற்புறுத்தி அப்பதவியில் அமர்த்தினார்கள். செயலாளராக திரு ஜெகநாதனும் பொருளாளராக திரு சாந்திகுமாரும் செயற் குழு உறுப்பினர்களாக மேற் சொன்ன பெரியோர் சிலரும் தெரிவு செய்யப்பட்டார்கள். செயலாளர் ஜெகநாதன் நிர்வாக திறமை கொண்ட தன்னலமற்ற ஒரு செயல்வீரன். ராசா வா அதைச்செய்வோம் இதைச்செய்வோம் என்று எங்களை ஊக்குவித்தவர். பொருளாளர் சாந்திகுமார் மக்கள் தொடர்பு பெருமளவு கொண்ட பிரபலமானவர். அதிபர் சிவலோகநாதனின் வழிகாட்டலுடன் எமது சங்க பணி தொடங்கியது.

எமது முதல் செயல் திட்டமாக கல்லூரியில் இருந்த பழைய விலங்கியல் இரசாயனவியல் ஆய்வுகூட கட்டிடங்களை தரைமட்டமாகும் ஒப்பந்ததை கல்வி திணைக்களத்திடம் இருந்து பெற்றுக்கொண்டோம். முதல்நாள் வேலையே நாமே நம் கையால் செய்வதென்று முடிவெடுத்து கட்டிடத்தின் கூரையில் ஏறி ஓடுகளை கழட்டி கீழே அடுக்கத் தொடங்கினோம். அப்போது அங்கு வந்த அதிபர் சிவலோகநாதன் தொடர்ந்து அவ்வேலையை செய்ய எம்மை அனுமதிக்கவில்லை. நாம் உடம்பால் துன்பப்படுவதை அவர் விரும்பவில்லை. சாந்திகுமார் அவர்கட்கு பிரிமா சிலோன் அதிகாரிகள் சிலருடன் இருந்த தனிப்பட்ட நற்பின் நிமித்தம் தேவையான இயந்திங்களை இலவசமாக பெற்று காதும் காதும் வைத்த மாதிரி எம் காரியத்தை முடித்துக்கொண்டோம் . ஒப்பந்த தொகை ரூபாய் 35,000.00 எமது செலவு 15,000.00. நிகர லாபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20,000.00. அதிபர் கேட்டுக்கொண்டதற்கிணங்க . . அப்பணத்தில் தான் கல்லூரி திறந்த வெளி அரங்கு நிர்மாணிக்கப்பட்டது. இவ் அரங்கிற்கு "அதிபர் சிவலோகநாதன் அரங்கு" என்று பெயர் சூட்டியது சாலப்பொருத்தமே.

தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் டாக்டர் சத்தியமூர்த்தி தலைவராகவும் திரு. சண்முகநாதன் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்கள். பல செயல்திட்டங்கள் செய்ய அவர்கள் ஆயத்தமாக இருக்கையில் 1983 ஆம் ஆண்டு நாட்டில் ஏட்பட்ட குழப்பமும் தொடர்ந்த அமைதியின்மையும் காரணமாக சங்கம் முற்றாக மீண்டும் செயல் இழந்தது.

1991 ஆம் ஆண்டு அதிபர் திரு தண்டாயுதபாணி அவர்களின் அதிதீவிர முயற் சியால் சங்கம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. டாக்டர் ஹேமச்சந்திரா தலைவராகவும் எந்திரி சந்திரசொரூபன் செயலாளராகவும் நான் பொருளாளராகவும் மற்றும் சட்டத்தரணி திருக்குமாரநாதன், எந்திரி தவனேஸ்வரன், ஆசிரியர் அருணகுமார், அருள் சுப்ரமணியம் போன்றோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். இக்காலமே சங்கத்தின் பொற்காலம் என்றால் அது மிகையாகாது. இதோ சான்றுகள்:

## 1. திறந்த வெளி ஒன்றுகூடல்

இவ் ஒன்றுகூடலுக்கு பிரதம அதிதியாக அப்போதய கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்களை அழைக்கவென்று நானும் டாக்டர் ஹேமாவும் பாராளுமன்றம் சென்றிந்தோம். அன்றய மட்டக்களப்பு பா. உ. திரு.ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் இதற்கான ஏட்பாட்டை எமக்காக செய்து தந்தார். இறுதி நேரத்தில் சில அரசியல் குழப்பங்களை தவிர்ப்பதற்காக இம் முயற்சி கைவிடப்பட்டது. இருந்தும் பாராளுமன்றம் வரை வந்த நாம் வெறும் கையுடன் திரும்பக்கூடாது என்று இந்து கலாசார அமைச்சர் திரு. தேவராஜ் அவர்களை சந்தித்து எமது ஒன்று கூடலுக்கு பிரதம விருந்தினராக கலந்துகொள்ள அழைத்து அவரது சம்மதத்தையும் பெற்றோம். இத் திறந்தவெளி ஒன்றுகூடல் மிகக் கோலாகலமாகவும் கலந்துகொண்ட பலரது பாராட்டையும் பெற்றது. இராணுவ பொலிஸ் உயர் அதிகாரிகள் உட்பட அனைத்து திணைக்களங்களினதும் உயர் அதிகாரிகள் இதில் கலந்து சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

## 2. விளையாட்டு மைதானம்

மாவட்ட உயர் அதிகாரிகள் கூட்டம் ஒன்று அன்றைய வட கிழக்கு மாகாண ஆளுநர் லெப்ட்டினன் ஜெனரல் நளின் செனிவிரட்ன தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. அங்கு முற்றவெளியில் தனியார் பேருந்து நிலையம் அமைக்கவேண்டும் என்ற பிரேரணை நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளால் முன்வைக்கப்பட்டது. அதற்கு ஒப்புதல் அளிக்க முன் சம்பந்தப்பட ஆவணங்களை பரிசீலித்த ஆளுநர் குறிக்கப்பட்ட இடம் இந்துக் கல்லூரிக்கு உரியது என்பதை கண்ணுற்றார். பிரதான வீதியில் இருந்தும் கல்லூரி வீதியில் இருந்தும் முற்றவெளி பக்கமாக 200 அடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றவெளி அப்பாவை இடத்தை தவிர்த்து இந்துக்கல்லூரிக்கு விளையாட்டு மைதானமாக வர்த்தகமாணி மூலம் பிரகடனப்பட்டுள்ளது பற்றி ஆளுநர் வினவிய போது அங்கிருந்த சில மேதாவிகள் இந்துக்கல்லூரிக்கு அவ்வளவு இடம் தேவை இல்லை என்று எடுத்துரைத்தார்கள். அதிஷ்டவசமாக அக்கூட்டத்தில் உத்தியோக ரீதியாக கலந்துகொண்ட எமது செயலாளர் சந்திரசொரூபன் அதை அன்றே என்னிடமும் மேச்சந்திரா விடமும் கூற நாம் இதை அதிபர் தண்டாயுதபாணியின் கவனத்திட்கு உடனடியாக கொண்டு சென்றோம். அவரும் கல்லூரி ஆவணக் கோவையில் இவ் வர்த்தமாணி அறிவித்தல் இருப்பதை உறுதிப்படுத்தி உடனடியாக கல்வித்திணைக்களத்தின் கவனத்திற்கு இதை கொண்டு வந்தார். சிவில் நிர்வாகம் முறையாக இல்லாத அக்காலகட்டத்தில் திணைக்களங்களுக்கிடையில் என்ன நடந்ததோ தெரியாது. தனியார் பேருந்து நிலையம் எமது கல்லூரிக்கு சொந்தமான காணியின் ஒரு பகுதியில் அடாத்தாக அமைக்கபட்டது . இருந்தும் குறிப்பிட்ட பகுதி எமது கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு உரியது என்பதை நாம் தொடந்து பகிரங்கபடுத்தினோம். செயலாளர் சந்திரசொரூபன் குறித்த வர்த்தமாணி அறிவித்தலின் பட பிரதி ஒன்றை கல்லூரி அலுவலகத்தில் படம் போட்டு மாட்டினார். இன்று இம் மைதானம் கல்லூரி நிர்வாகத்தினரால் உள்நாட்டு வெளிநாட்டு பழையமானவர்களின் உதவியுடன் அழகாக அமைக்கப்பட்டுள்ளது.

## 3. ஆரம்பப்பாடசாலை

ஆனா எனும் எழுத்தை அறிவரியில் படிப்பித்து எமக்கெல்லாம் கல்வி வித்திட்ட ஸ்ரீ கோணேஸ்வர வித்தியாலயத்தில் ஆரம்பத்தில் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரை தான் இருந்தது. ஆனால் தொடந்து இப்பாடசாலை கல்வியில் பெரு முன்னேற்றம் கண்டு ஆண்டு 6, 7, 8,9 மற்றும் 10 வரை வைக்கும் அளவுக்கு வளைச்சி அடைந்தது. இது ஒரு மகிழ்ச்சியான விடயமாக இருந்தாலும் இதன் காரணமாக எமது பாடசாலையின் மாணவர் தொகை "நான் நிலவை போல தேய்ந்து வந்தேன் நீ வளைந்ததாலே " என்பதுபோல் பெருமளவு குறையத்தொடங்கியது. இதனால் எமது கல்லூரியில் சில மண்டபங்கள் குறிப்பாக சம்பந்தர் மண்டபம் பாவனையின்றி இருந்தது. நகரத்தின் மத்தியில் தமக்கு வசதியான ஒரு இடம் தேடிக்கொண்டிருந்த இராணுவத்தின் கண்ணில் இது பட்ட செய்தி ஒரு உயர் அரச அதிகாரியினால் இரகசியமாக எமக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இது அதிபருக்கும் மற்றும் பலருக்கும் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் அளித்தது. உடனடியயாக செயலில் இறங்கினோம். அதிபர் தண்டாயுதபாணியின் ஆலோசனைப்படி நாமும் ஆரம்பவகுப்புகளை 1ஆம் ஆண்டிலிந்து ஆரம்பிப்பதே ஒரே வழி எனக்கண்டு அதிபர் உத்தியோகபூர்வமாக இதற்கான அனுமதியை பெறும் முயற்சியில் அதி தீவிரமாக இறங்க நாமும் எமது பங்கிற்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஜனாப் காதர் மொஹ'தீன் அவர்களை பல தடவை உத்தியோகபூர்வமாகவும் நட்பு ரீதீயாகவும் சந்தித்து இதன் அவசியத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்தினோம். அனுமதி கிடைக்கப்பெற்றது. அதிபர் தண்டாயுதபாணி அவர்களின் வழிகாட்டலில் ஆசிரியை திருமதி உஷா பாலச்சந்த்திர ஐயர் அவர்களின் மேட்பார்வையில் ஆரம்பப்பிரிவு சம்பந்தர் மண்டபத்தில் மங்களகரமாக ஆரம்ப்பித்து வைக்கப்பட்டது.

## 4. தேசியப் பாடசாலை

அதி உத்தம ஜனாதிபதி மேதகு பிரேமதாசா அவர்களின் உள்ளத்தில் உதிர்த்த ஒரு திட்டம் தான் தேசியப் பாடசாலை. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பாடசாலையையாவது சகல வளங்களும் கொண்ட ஒரு தேசியப் பாடசாலையாக தரம் உயர்த்தி அதை மத்திய அரசு நேரடியாக பரிபாலிக்க வேண்டும் என்பது அவரது திட்டம். எமது கல்லூரி தேசிய பாடசாலையாக தரமுயர சகல தகுதிகள் இருந்தும் அதில் ஒரு தகுதியான மாணவர் தொகை ஒரு பற்றாக்குறையாக இருந்தது. அந் நேரம் ஜனாதிபதி அவர்களின் இன்னோரு திட்டமான ஜனாதிபதி நடமாடும் சேவை திருக்கோணமலையில் நடைபெற இருந்தது. மூன்று நாட்கள் நடைபெறும் இச்சேவைக்காலத்தில் ஜனாதிபதி தொடக்கம் பிரதமர் அமைச்சர்கள் , அமைச்சின் செயலாளர்கள் அனைவரும் இதில் கலந்து கொள்வர். அதிபர் தண்டாயுதபாணி அவர்கள் இச்சந்தர்பத்தை பயன் படுத்த முட்பட்டார். உடனடியாக பழையமாணவர் சங்க, பாடசாலை அபிவிருத்தி சங்க நிர்வாகிகளை அழைத்து தனது இறுதி முயற்சியாக ஜனாதிபதி அவர்களை நேரில் சந்தித்து உரையாடவேண்டும் என்ற தன் விருப்பத்தை தெரிவித்து அதட்கு எமது மேலான உதவிகளையும் நாடியிருந்தார். நாமும் முழு மூச்சாக இதற்கான ஏற்பாட்டில் ஈடுபட்டோம். ஜனாதிபதி அவர்களால் பெரிதும் மதிக்கப்படும் கொழும்பு இராமகிருஷ்ணசங்க தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தாஜீ அவர்கள் தலைமையில் அதிபர் திரு தண்டாயுதபாணி முன்னாள் அதிபர் திரு சிவலோகநாதன் , திரு குலவீரசிங்கம், டாக்டர் ேமச்சந்திரா ஆகியோர் கொண்ட குழு ஜனாதிபதி அவர்களை நேரில் சந்தித்தது. சுவாமிஜீ அவர்கள் சந்திப்பு அறைக்குள் நுழைந்ததுமே அவரை கண்ட ஜனாதிபதி உடனடியாக எழுந்து நின்று சுவாமிஜீ நான் உங்கட்கு என்ன செய்ய வேண்டும் ஏன் இவ்வளவு தூரம் இங்கு வந்தீர்கள் என்று கேட்க பிரதம பேச்சளராக இருந்த சிவலோகநாதன் சந்திப்பின் நோக்கத்தையும் மற்றும் இந்துக்கல்லூரி , கோணேஸ்வர வித்தியாலய வரலாற்றையும் சுருக்கமாக கூறி எமது கல்லூரியை தேசியபாடசாலையாக தரமுயர்த்துவதட்கான காரணத்தயும் விளக்கமாக எடுத்துரைத்தார். சகலதையும் கிரகித்துக்கொண்ட ஜனாதிபதி சொன்ன ஆலோசனைதான் ஒரே இராமகிருஷ்ண சங்க பாரம்பரியத்தை கொண்டு அருகருகே அமைந்திருக்கும் ஸ்ரீ கோணேஸ்வர வித்தியாலயமும் இந்துக்கல்லூரியும் ஒன்றிணைந்து ஏன் ஒரு தேசியப் பாடசாலையாக மிளிரக்கூடாது என்பது.

அனைவராலும் திருப்தியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது இம் முடிவு. சம்பந்தப்பட்ட அதிகாரிகட்கு இதற்கான அறிவுறுத்தல் அன்றய தினமே அமைச்சின் செயலாளர் திரு அலெக்ஸ் அவர்களால் அனுப்பப்பட்டது. ரொக்கெட் வேகத்தில் அனைத்தும் நடந்து முடிந்தது. சந்திப்பு முடிந்து ஜனாதிபதிக்கு நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்குழு உறுப்பினர்கள் :- பழைய மாணவர் சங்கம், பிரான்ஸ் கிளை
ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி



## 125வது ஆண்டு நிறைவு முத்திரை வெளியீடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறி வெளியேறும் பொழுது அவர் சொன்னது "உங்கள் அதிபர் (திரு. சிவலோகநாதன்) ஒரு இராஜதந்திரி மாதிரி அல்லவா பேசினார்".

சகலதும் சந்தோசமாக முடிந்தாலும் விசயத்தை கேள்விப்பட்ட ஸ்ரீ கோணேஸ்வர வித்யாலயா நிர்வாகத்தினருக்கும் குறிப்பாக அவர்களது பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கும் இதில் சந்தோசமில்லை. வளந்து வரும் ஒரு பாடசாலை மூடப்படுகிறது என்பது அவர்களது கவலை. எம்மீதான குற்றச்சாட்டும் அதுதான். இருப்பினும் ஜனாதிபதியின் ஆணையை மீற முடியுமா ? சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்ந்து பேசி அவர்களது கவலையை போக்கினோம். அவர்களது கோரிக்கைக் கிணங்க கல்லூரியின் பெயர் "இ . கி . ச. ஸ்ரீ கோணேஸ்வர இந்துக் கல்லூரி " என பெயர் மாற்றப்பட்டது. கிழக்கு மாகாணத்தின் இரண்டாவது தேசிய பாடசாலையாக இ . கி . ச. ஸ்ரீ கோணேஸ்வர இந்துக்கல்லூரி பரீட்சை பெறுபேறுகள் உட்பட ஏனைய தகுதிகளின் அடிப்படையில் முறையாக தரமுயர்த்தப்பட்டது. இவ்விடயம் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவினரால் அடுத்தநாள் Daily News பத்திரிகையில் முதல் பக்க செய்தியாக வெளியிடப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## 5. சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா

ஒருநாள் பழைய மாணவர் சங்கத்தின் செயற்குழு கூட்டம் முடிந்து வெளிவரும் பொழுது வேறு காரண நிமித்தம் கல்லூரிக்கு வந்திருந்த மேலதிக அரசாங்க அதிபர் திரு. புகேந்திரன் எங்களுடன் நட்பு ரீதியாக உரையாடினார். அப்பொழுது இவ்வாண்டு சுவாமி விபுலானந்தரின் நூற்றாண்டு என்றும் எதை ஒட்டி அவரது சிலை ஒன்றை பழைய மானவர்களாகிய நீங்கள் ஏன் கல்லூரியில் நிறுவக்கூடாதென்றும் கேட்டார். அங்கிருந்த அனைவராலும் இவ்யோசனை வரவேற்கப்பட, தானே சிலையின் பொறுப்பை எற்பதாக டாக்டர் ‘மோ சொன்னார். சிலை பீடத்தின் செலவை விநாயகசோதி பொறுப்பேற்றார். சிலை அமையவேண்டிய வேண்டிய இடத்தை அதிபர் காட்ட, பிறகென்ன அந்த இடத்திலே அடிகளாரின் சிலை நிமிர்ந்து நின்றது. சிலை திறப்பு விழாவும் விமரிசையாக நடாத்தப்பட்டது. காலையில் அடிகளாரின் கல்விப்பணி பற்றிய கருத்தரங்கம் சம்பந்தர் மண்டபத்தில் திரு புகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி மௌனகுரு , விரிவுரையாளர் பாலகுமார் , பண்டிதர் வடிவேல் ஆகியோர் கருத்துரை வழங்கினர். மாலையில் ஸ்ரீமத் ஸ்வாமி ஆத்மகானந்தஜீ அவர்களால் சிலை மங்களகளமாக திறந்துவைக்கப்பட்டது. தொடந்து திறந்த வெளி அரங்கில் நடந்த விழாவில் கலை நிகழ்ச்சிகளுடன் தத்தம் சமயங்களில் சமரசம் எவ்வாறு போதிக்கப்படுகிறது என்பதுபற்றி பௌத்த மதம் சார்பாக மடத்தடி பன்சலை புத்த குருவும். கிறிஸ்தவமதம் சார்பாக ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளாரும் , இஸ்லாம் மதம் சார்பாக சட்டத்தரணி இஸ்மாயில் அவர்களும் இந்து மதம் சார்பாக ஸ்ரீமத் ஸ்வாமி ஆத்மகானந்தஜீ அவர்களும் ஆன்மீக பேருரை நிகழ்த்தினார்கள். பலரது பாராட்டையும் பெற்ற ஒரு விழாவாக இது அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. கல்லூரிக்கான விடுதி

எமது கல்லூரிக்கு ஒரு மாணவர் விடுதி வேண்டும் என்பது பலரது நீண்டநாள் கனவு. வித்தியாலயம் வீதியில் உள்ள Rose Field எனும் வீடு சுவாமி விபுலானந்தர் திருக்கோணமலையில் இருந்த காலத்தில் வாழ்ந்த வீடு. அவ் வீடு விற்பனைக்கு வந்த பொழுது அதை கல்லூரி விடுதிக்காக கொள்வனவு செய்யவேண்டும் என்பது என்போன்ற சிலரது அவா. உரிமையாளர் திரு வாமதேவன் அவர்களும் அதை பெரிதும் விரும்பினார். அதிபரிடமும் பேசினார். துரதிஷ்டவசமாக அதை கொள்வனவு செய்யும் நிலையில் கல்லூரி நிர்வாகமோ , பழைய மாணவர் சங்கமோ அப்போது இல்லை. இப்போது உள்ளது போல் புலம் பெயர் பழைய மாணவர் சங்கங்கள் இருந்திருப்பின் கதை வேறு.

இருப்பினும் விடுதிக்காக ஒரு காணி பெற்றுக்கொள்ளும் முயற்சி அதிபர் சிவலோகநாதன் அவர்களால் தொடங்கப்பட்டு தொடர்ந்து வந்த அதிபர் தண்டாயுதபாணி அவர்களால் பின்தொடரப்பட்டது. இக்காலத்தில் பழைய மாணவர் சங்கத்தினராகிய நாமும் இது சம்பந்தமாக திரு தங்கதுரை பா. உ உடன் தொடர்பில் இருந்தோம். ஒரு தடவை நானும் 'மோவும் அவரை சந்திக்கும்பொழுது அவரது கிராமத்தவர் சிலர் அவருடன் இருந்தனர். அவர்கள் முன்னே இம்முறை எனது கல்விக்கான பாதீட்டை முழுமையாக கிராமப்புற பாடசாலைகட்கே கொடுக்கப்போகிறேன் என்றார். நாம் சொன்னோம் மிகவும் நல்லது அதைத்தான் நாமும் சொல்கின்றோம். இந்துக் கல்லூரி மாணவர் விடுதியால் பயன் அடையபோவது கிராமப்புற மாணவர்களே தவிர நகரத்து மாணவர்கள் அல்ல. ஆகவே தயவுசெய்து விடுதிக்கான நிலம் கிடைக்க உதவுங்கள் என்று. இறுதியாக அதிபர் இராஜரெட்ணம் அவர்களின் இறுதி முயற்சியால் அவரது காலத்திலேயே காணி கிடைக்கப்பெற்றது. இக் காணியின் ஒரு பகுதியில் தான் தற்போது ஆரம்பப்பாடசாலை அமைந்துள்ளது. இனி விடுதி கட்டும் முயற்சியில் கல்லூரி நிர்வாகத்துடன் பழைய மாணவர் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் ஈடுபடவேண்டும்.

## 7. மாணவர் கௌரவிப்பு

கல்லூரி வரலாற்றில் முதல் தடவையாக ரவிச்சந்திரன் என்ற மாணவன் க. பொ. த. உயர்தர கணித பிரிவில் 4A எடுத்து மேற் படிப்பிக்காக கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் புலமைப் பரிசிலையும் பெற்றிந்தார். அவரை கௌரவிக்கும் முகமாகவும் ஏனய மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் பழைய மானவர் சங்கத்தினராகிய நாம் ஒரு சிறு நிகழ்வை ஏட்பாடு செய்து அதில் அவருக்கு தங்க பதக்கமும் சூட்டினோம் அன்றிலிருந்து சாதாரண பிரிவில் 8D பெறுவோர்க்கும் உயர்தர பிரிவில் 4A பெறுவோர்க்கும் சங்கத்தின் சார்பில் தங்க பதக்கம் சூட்டி அவர்களை கௌரவிப்பதென்று தீர்மானித்தோம். காலக்கிரமத்தில் இப்பெறுபேறுகள் சாராதனமாகி போனதால் இவ் வழமை கைவிடப்பட்டிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணனி கூடம்

கல்லூரியின் நூற்றாண்டு 1997 ஆம் ஆண்டு. ஒருநாள் நான் கல்லூரியில் அதிபர் தண்டாயுதயபாணி அவர்களை சந்தித்து கல்லூரியில் 100 ஆவது பிறந்த நாளுக்கு பழைய மாணவர்களாகிய நாங்கள் ஒரு பிறந்த நாள் பரிசளிக்க விரும்புகின்றோம். உங்கட்கு என்ன பரிசு வேண்டும் என்று கேட்டேன். தகவல் தொழில் நுட்பம் பற்றி பெருமளவு அறிந்திராத அந்நேரம் தூரநோக்கோடு ஒரு கணனி தொகுதியை அமைத்து தாருங்கள் என்று கேட்டார். எனக்கோ அப்பொழுது கணனி பற்றிய அறிவு பூச்சியம். இருப்பினும் கொழும்ப்பில் உள்ள எனது நண்பர்களுடன் தொடர்பு கொண்டு தேவையானவற்றை வாங்க மதிப்பீட்டை பெற்றேன். அதிபரிடம் கணணிகூடத்திட்க்கான மண்டபத்தை கேட்டு அதை முழுமையாக குளிரூட்டி நிலத்தில் காப்பேட் போட ஆகும் செலவின் மதிப்பீட்டையும் பெற்றேன். மூன்று இலட்சம் வரை தேவைப்பட்டது. பணம் சேர்க்க களத்தில் இறங்கினோம். அதிபர் (அப்பொழுது சங்கத்தின் தலைவரும் கூட) உட்பட செயற்குழு உறுப்பினர்கள் பலரும் இப்பணியில் ஈடுபட்டார்கள். ஏகாம்பரம் வீதியில் எம்மை கண்ட பெரும்பான்மை இனத்தை சேர்ந்த விஜயசூரியா என்ற ஒரு வர்த்தகர் விடயத்தை தெரிந்துகொண்டு தாமும் இந்துக்கல்லூரியின் பழைய மாணவன் தான் அதுவும் சுவாமி விபுலானந்தரின் விருப்பத்துக்குரிய மாணவன் என்று சொல்லி தனது நிதிப்பங்களிப்பையும் செய்தார். தேவைக்கு அதிகமாகவே பணம் சேர்ந்தது. மூன்று கணனிகள் மற்றும் சில உபகரணங்களுடன் குளிரூட்டப்பட்ட கணணிகூடமும் அமைந்தது.

வைபவரீதியாக கூட்டத்தின் திறப்பு உபதலைவர் திரு மகேந்திரன் அவர்களினால் அதிபரிடம் கையளிக்கபட அவர் அதை மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. திவாகலால மூலம் திறந்தது வைத்தார்.

## காளி கோவில்

நகரத்தின் மத்தியிலே வீற்றிருந்து அருள் பாலித்துக்கொண்டிருக்கும் பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு அருகில் தான் எமது பாடசாலை அமைந்துள்ளது. பங்குனியில் வரும் பத்து நாள் திருவிழாவும் ஐப்பசியில் வரும் ஒன்பது நாள் நவராத்திரி நாட்களும் அம்பாளுக்கான அதிவிசேட நாட்களாகும். அந்த நாட்களில் காலை முதல் மாலை வரை தெய்வீக பாடல்களும் மந்திரங்களும் ஒலிபெருக்கியில் ஒலிப்பரப்பப்படுவது வழக்கம். அருகில் கல்வி கற்கும் மாணவர்கட்கு இது அசௌகரியமாக இருந்தாலும் இதைப்பற்றி யாரும் சம்பந்தப்பட்டவர் கவனத்திட்கு கொண்டு சென்றதில்லை. இதைப்பற்றி அதிபர் தண்டாயுதபாணி ஒருநாள் எம்மிடம் கதைக்கும் போது இதுவும் ஒரு கோயில் தானே என்றார். அன்று மாலையே நானும் செயலாளர் திரு உமாகாந்தனும் வேதாகமசிரோன்மணி ரவிச்சந்திர குருக்கள் ஐயா அவர்களை சந்தித்து இது பற்றி பேசினோம். ஐயா அவர்கள் இது நாள் வரை இது பற்றி யாரும் என்னிடம் சொல்லவில்லையே ஏன் ? என்று கேட்டுவிட்டு இனிமேல் நான் பாடசாலை நேரத்தில் ஒலிபெருக்கி பாவிக்க அனுமதிக்க மாட்டேன் என்று உறுதியளித்தார். ஐயாவுக்கு அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் சார்பில் நன்றிகளை தெரிவித்து திருப்தியுடன் திரும்பினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் காலகட்டத்தில் எமது சங்கத்தின் சகல நடவடிக்கைகளிலும் தம்மையும் விருப்புடன் ஈடுபடுத்தி எம்முடன் ஒத்துழைத்தவர்கள் உப அதிபர்களான திரு அருணகுமார் . திரு இராஜரெட்ணம் ஆகியோர். அவர்களும் கல்லூரியின் பழைய மாணவர்கள் தான் என்பது அதன் காரணமாக இருக்கலாம்.

என்னுடைய இச்சிறு பதிவில் நான் சில சம்பவங்களையோ, ஆளுமைகளையோ தவறவிட்டிருந்தால் அது எனது நினைவாற்றலின் குறைபாடே அன்றி வேறொன்றும் இல்லை.

1999 இல் நான் நாட்டைவிட்டு புலம்பெய்ந்து கனடாவிற்க்கு செல்ல வேண்டி இருந்தது. அச்சமயம் நான் என்னிடம் இருந்த பொருளாளருக்குரிய ஆவணங்கள் முறையான கணக்குவழக்குகள் வங்கியிருப்பு, கையிருப்பு போன்றவற்றை தலைவர்/அதிபர் திரு தண்டாயுதபாணி அவர்களின் அறிவுறுத்தல்படி செயற்குழு உறுப்பினரான திரு. பாரதிநாதன் அவர்களிடம் கையளித்தேன். அன்றிலுந்து இன்றுவரை திரு பாரதிநாதன் சங்கத்திட்கு ஆற்றிவருகின்ற தொண்டு அனைவரும் அறிந்ததே. போற்றுததற்குரிய இத்தொண்டை அவர் தொடர என் முழுமனதான நல்வாழ்த்துக்கள்.

**கனடா பழைய மாணவர் சங்கம்**

1999 இல் நான் கனடாவிற்கு புலம் பெயர்ந்தபின் 2002 இல் அங்குள்ள சில என் நண்பர்களுடன் சேர்ந்து கனடாவில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஒன்றை ஆரம்பித்தோம். நானே அதன் ஸ்தாபக தலைவராக தெரிவுசெய்யப்பட்டேன். முதல் செயல் திட்டமாக டாக்டர் ஞானி கல்வி நிதியம் ஆரம்பித்து ஏறத்தாழ பதினைந்து வசதியற்ற மாணவர்களுக்கு மாதாந்தம் அவர்கள் படிப்பை தொடர நிதி உதவி செய்தோம். பயனாளிகளை தெரிவு செய்ய தாயகத்தில் ஒரு குழுவை அமைத்திருந்தோம். தொடர்ந்து சில ஆண்டுகள் இப்பணி தொடைந்தது. அது தவிர விளையாட்டு மைதானம் அமைக்கவும் மற்றும் பரிசளிப்பு விழா , பழைய மாணவர் சங்க பவள விழா போன்றவற்றுக்கு நிதி உதவிகளும் செய்தோம். கனடாவில் முதலாவது பழையமாணவர் ஒன்று கூடலுக்கு அதிபர் சிவபாலன் அவர்களையும் இரண்டாவதிற்கு அதிபர் தண்டாயுதபாணி அவர்களையும் பிரதம விருந்தினர்களாக அழைத்திருந்தோம். இன்று இச்சங்கம் ஆற்றல் மிக்க இளைஞர்களால் மிக சிறப்பாக நடத்தப்படுகின்றது.

**" வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே**
**எங்கள் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி வாழ்கவே "**

**கே. கே. தயாநிதி**
**பழைய மாணவன்**
**(ஆண்டு 1 முதல் 12 வரை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் பதித்துச் செல்லும் காலடிச்சுவடுகள் ....

கிழக்கு மாகாணத்தில் கல்விச் சேவையில் தனக்கென தனியிடம் பதித்திருக்கும் தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி தனது 125வது அகவையை நிறைவு செய்வதனை முன்னிட்டு வெளிவரும் இச்சஞ்சிகையில் பெண்களாகிய எமது குரலினையும் பதிவு செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இலங்கையில் மாவட்ட ரீதியில் பல்கலைக்கழக தெரிவுமுறை ஆரம்பிக்கப்பட்டதின் விளைவாக இந்துக்கல்லூரியில் திருக்கோணமலை உயர்தர வகுப்புகள் 1971ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இத்தெரிவு முறை மூலம் திருக்கோணமலையைச் சேர்ந்த பல மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவானோம். அதுவரை வெகுசில மாணவர்களே பிற மாவட்டங்களுக்கு சென்று கல்வி கற்று தெரிவாகி இருந்தனர்.

இந்த ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட உயர்தர வகுப்புகளில் ஆண்கள் பாடசாலையாக தொடர்ந்து பரிணமித்த இக்கல்லூரியில் பெண்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். திருகோணமலை பெண்கள் கல்லூரிகளில் க.பொ.த சாதாரணதரத்தை பூர்த்தி செய்த பல மாணவிகளும் இந்துக்கல்லூரியில் அனுமதிக்கப்பட்டோம். அப்போது அதிபராக கடமையாற்றிய திரு. நடராஜா அவர்கள் எம்மை அன்புடன் வரவேற்று உயர்தர கல்வியை கற்க அனுமதித்திருந்தார்.

ஆண்களுடன் பெண்களாகிய நாமும் சேர்ந்து நட்புறவுடன் ஒருவருக்கொருவர் உதவியாக ஆனந்தமாக எமது மாவட்டத்தில் எமக்குரிய ஆசிரியர்கள் கிடைக்காமையினால் யாழ் மண்ணிலிருந்தே ஆசிரியர்கள் திருக்கோணமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்கள். க.பொ.த சாதாரண தரம் வரை எமக்கென கூறப்பட்டிருந்த புத்தகங்கள் மூலம் கல்வி கற்ற எமக்கு புத்தக உதவி இல்லாமல் ஆசிரியர்களின் குறிப்புகளுடன் மட்டுமே கல்வியை தொடர வேண்டுமென்பது பெரிய திகைப்பாக அமைந்திருந்தது. இந்த நிலையிலேயே சில யாழ் ஆசிரியர்களால் மெல்ல மெல்ல பிரத்தியேக வகுப்புகள் என்ற விஷயம் எமது மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டன.

இக்காலகட்டத்தில் ஏற்கனவே பல்கலைக்கழக கல்வியைத் தொடர்ந்திருந்த இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் சிலர் காலஞ்சென்ற பல்வைத்தியர் திரு.ஞானசேகரன், வைத்தியர் திரு.சார்ள்ஸ் போன்றோர் எமது கல்லூரி மாணவர்களாகிய எமக்கு கல்லூரியில் இலவசமாக கல்விச் சேவையாற்றி எமக்கு பேருதவியாக இருந்தனர். எமது சிரேஷ்ட மாணவர்கள் தமது நண்பர்களையும் வெளி மாவட்டத்திலிருந்து அழைத்து வந்து எமக்கு இலவசமாக பிரத்தியேக வகுப்புகளை நடாத்தி நாமும் பல்கலைக்கழகம் தெரிவாவதற்கு பெரும் பக்கபலமாக இருந்தனர். அனைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுகளிலிருந்தும் பல மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியை பெற்றுக் கொண்டோம். எமது வகுப்புகளில் கல்வியில் பின்தங்கி நிற்கும் சக மாணவர்களையும் கட்டியிழுத்துச் சென்று பல்கலைக்கழக தெரிவினை பெற்றுக் கொள்ள மாணவர்கள் யாவருக்கும் பக்கபலமாக எமது உறவு அமைந்திருந்தது.

இதே போன்று நாமும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற பின் இக்கல்லூரியிலும் இதர உயர்தர வகுப்புகளைக் கொண்ட கல்லூரிகளிலும் நாம் இலவச கல்விச் சேவையை வழங்கி இம்மண்ணிலிருந்து பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல உறுதுணையாக இருந்தோம்.

வெறும் புத்தகப் படிப்புடன் நின்று விடாது பல துணைப்பாட விதானங்களிலும் நாம் கலந்து கொள்ள இக்கல்லூரி எமக்கு வழி அமைத்து தந்தது. வெள்ளிக்கிழமைகளில் ஸ்ரீ பத்ரகாளி அம்மன் ஆலயத்தில் பஜனையில் பங்கு பற்றுவது எமக்கு ஒரு இனிய அனுபவமானது பேச்சாற்றல், விவாதத் திறமைகளை வளர்க்கவும் அதிபர், ஆசிரியர்கள் உறுதுணையாக அமைந்திருந்தனர்.

பல ஆசிரியர்களின் சேவையில் கற்றிருந்த எமக்கு சில ஆசிரியர்களின் கல்விச் செயற்பாடு என்றும் இனிமையான நினைவுகளாக தொடர்கிறது. அவ் ஆசிரியர்களில் ஒருவர் திரு. தட்சனாமூர்த்தி அவர் ஒரு பௌதிக ஆசிரியர், உயர்தர விஞ்ஞான பிரிவில் கல்வி கற்ற எமக்கு பௌதிகவியல் ஒரு கசப்பான பாடமாக இருந்தது. அதனால் இப்பாடத்தை தவிர்த்து வேறு பாடம் எடுத்துக் கொள்ள இவ் ஆசிரியரிடம் ஆலோசனை கேட்போம் என் போன்ற சில மாணவர்கள். அவரோ இன்னும் சிலகாலம் பொறுத்திருந்து இம்முடிவிற்கு வாருங்கள் என எமக்கு கூறிவிட்டு தானே தனது கல்வி புகட்டும் வேலையை தொடர்ந்தார். ஆனால் வகுப்பறை மட்டும் மாற்றப்பட்டது.

அந்த வகுப்பறை மூடப்பட்ட வகுப்பறையாக அமைந்திருந்தது. ஒரு வாசல் வழியாக மட்டுமே போக வர முடிந்தது. வகுப்புகள் முடிந்தது, பரீட்சை நடந்தது, வகுப்பிலுள்ள நாம் யாவருமே 90ற்கு குறையாத புள்ளிகளை பெற்றிருந்தோம். அதன் பின்னர் எம் ஆசிரியர் பாடம் மாறவிரும்பும் யாவரும் மாறலாம் என அனுமதித்தார். நாம் யாரும் பாடத்தை மாற்றிக் கொள்ளாமல் எம்மை புரிந்து கொண்டோம். அதாவது நாம் பாடத்தை புரிந்து கொள்ள முயற்சிக்காமல் வழியில் போய் வருவோரை கவனித்துக் கொண்டிருந்ததை ஆசிரியர் எமக்கு தெளிவுப்படுத்தி, ஒருமுகப்படுத்தி பாடத்தை விளங்கிக் கொள்ள எமது ஆசிரியர் எம்மை வழிப்படுத்தி இருந்தார்.

ஒரு சமயம் ஒரு மாணவிக்கும் ஒரு ஆசிரியருக்கும் இடையில் ஒரு தகராறு. அதன் விளைவு பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டுமென பாடசாலையில் கூறப்பட்டிருந்தது. அந்த மாணவியோ படிப்பை நிறுத்த முடிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருந்தாள். இதே ஆசிரியர் எம்மை அணுகி நாம் செய்தது தவறு என்றும் அதற்கு பெரியவர்களாகி இன்னுமொரு ஆசிரியரிடம் மன்னிப்பு கேட்பதில் வெட்கப்படத் தேவையில்லை என்பதை எம்முடன் கலந்துரையாடி தெளிவுபடுத்தி எம்மை நல்வழிப்படுத்தினார். பின்னர் அம்மாணவி பல்கலைக்கழகம் தெரிவாகி, ஈற்றில் பொறியியல் துறை தலைமை பேராசிரியராக பணிபுரிந்தார்.

இக்கல்லூரியின் தொடர் கல்விச் செயற்பாடுகளினால் திருக்கோணமலை மண்ணில் திருக்கோணமலை ஆசிரியர்கள் நியமனம் பெற்றோம். திருக்கோணமலை மண்ணைச் சேர்ந்த மருத்துவர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் என சகல துறைகளும் நிரப்பப்பட்டு நாம் இன்று பூரணத்துவம் அடைந்தோம்.

காலப்போக்கில் வேறு பெண்கள் கல்லூரிகளில் உயர்தர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு, இந்துக்கல்லூரி மீண்டும் ஆண்களை மட்டுமே கொண்ட பாடசாலையாகியது.

அகவை 125இனை நிறைவு செய்யும் தி/ இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி கல்விச் செயற்பாடுகளிலும் துணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் ஒழுக்க விழுமியங்களிலும் சிறந்து விளங்க விநாயகரும், பத்ரகாளி அம்பாளும், கோணநாதரும் அருள் புரிய வேண்டுகிறேன்.

நன்றி

**இராஜலஷ்மி இலஷ்மணப்பெருமாள்,**
**ஓய்வுப் பெற்ற உயர் கல்விப் பணிப்பாளர்,**
**வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுத் துறையில் விருதுகள் வென்ற காலம்

விளையாட்டுத்துறையில் எமது கல்லூரிக்கு பேரும் புகழும் தேடித் தந்தவர்களில் திருக்கோணமலை கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமை புரிந்து 2014ம் ஆண்டில் ஓய்வு பெற்று சுகாதார உடற்கல்வி விடயத்துக்கு பொறுப்பாய் இருந்த, ஜனாப். நாதர்ஜான் யாக்குப்ஜானும் ஒருவர்.

இவர், பாடசாலை மாணவராக இருந்த காலத்தில் விளையாட்டுத் துறையில் பங்கு பற்றி, பல வழிகளில் கல்லூரிக்கு நற்பெயரை ஈட்டித் தந்தார். பாடசாலை மட்டம், வலயமட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் என உயரம் பாய்தல் போட்டியில் பங்கு பற்றி 1967ம் ஆண்டு முதலிடம் பெற்றவர். அதே போல் கல்லூரியில் பயிற்றுவிக்கப்பட்ட மல்யுத்தத்தில் பயிற்சி பெற்று, அவரது நிறையில் சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டவர்.

ஜேர்மன் பயிற்றுவிப்பாளர் ஒருவரினால் வழங்கப்பட்ட நீச்சல் பயிற்சியிலும் பயிற்சி பெற்று, கல்லூரிக்கு பெயரையும் புகழையும் தேடித்தந்தார். இது முன்னாள் அதிபர் கௌரவ திரு. க. சிவபாலன் அவர்களின் காலத்தில் நடைபெற்றது.

பிற்காலத்தில் ஜனாப். யாக்குப்ஜான் அவர்கள், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறும் போது பரிதி வட்டம் எறிதல் போட்டியில் பங்கு பற்றி, இப்போட்டியில் சாதனை ஒன்றையும் படைத்தார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றும் இவர், பாடசாலை காலத்தில் பிரபல ஆசிரியர்களிடம் பெற்ற பயிற்சியினால் குண்டு போடுதல், பரிதி வட்டம் எறிதல், ஈட்டி எறிதல் போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றி பெற்ற வெற்றியானது, எமது கல்லூரியில் பயிற்றுவிப்பாளராக பணிபுரிந்த திரு. சிங்காரவேலு உடற்கல்வி ஆசிரியரின் பயிற்றுவிப்பின் புகழேயாகும்.

இது போலவே யாக்குப்ஜான் ஆசிரியர் அவர்கள், 1982 தொடக்கம் 1990 ஆண்டு வரை, திருக்கோணமலை மாவட்டத்தில் சிறந்த உதைப்பந்தாட்ட வீரராக திகழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. விளையாட்டுத் துறையில் ஆர்வமூட்டிய திரு.திருச்செல்வம், திரு. சண்முகநாதன் ஆகியோருக்கே இப்பெருமை சேரும். பல்துறை விளையாட்டு வீரராக திகழ்ந்த யாக்குப்ஜான் அவர்கள் 2013ம் ஆண்டு விளையாட்டுத்துறையில் சாதனை படைத்தோர் பட்டியலில் திருக்கோணமலையின் நகர பிதாவாக இருந்த திரு. க.செல்வராஜா தலைமையில் வழங்கப்பட்ட திருக்கோணமலை நகரபிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு விழாவில், விளையாட்டுத் துறையில் சிறந்த பயிற்றுவிப்பாளர் விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவர் போல இவருக்கு முன்னர் இவரது சகோதரர் தேமர்ஜான் யூசுப்ஜான் அவர்களும் மல்யுத்தம், குண்டு போடுதல் போன்ற நிகழ்வுகளில் மாவட்ட மட்டத்தில் சிறப்பு விருதுகளைப் பெற்றவர்களுள் ஒருவராக திகழ்ந்தார். அதன் பின்னர் அஸீஸ்ஹாஜியார் பஷீர் அவர்களும் உதைப்பந்தாட்டத்திலும், குண்டு போடுதலிலும் வெற்றி பெற்றார்.

விளையாட்டுத்துறையில் பலர் விருதுகள் பெற்றாலும், சம்சுதீன். அபூபக்கர் அவர்கள் தடைதாண்டல் நிகழ்வில் சாதனை படைத்தனர். அது போல் சம்சுதீன் சாதிக் ஆசிரியரும் சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்துக்கல்லூரி, விளையாட்டுத்துறையில் மிளிர்வதற்கு, எங்களால் இயன்ற பங்களிப்பினை நல்கி பெருமை சேர்ந்தவர்களாக, நாம் விளங்கினோம். தர்மஜான் முகமட் யூசுப்ஜான் அவர்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்திருந்தது. மெய்வல்லுனர் போட்டிகள், கால்பந்து, மேசைப்பந்து மற்றும் மல்யுத்தப் போட்டிகளில் பங்குபற்றி தனது திறமையினை வெளிக்காட்டியிருந்தார். பல்கலைக்கழக பட்டப்படிப்பினை கலைப்பிரிவல் முடித்திருந்தார். அதன் பின்னர் இலங்கை நிருவாக சேவை பரீட்சையில் சித்தி எய்தி, பல பதவிகளை வகித்திருந்தார். இவர் பல்கலைக்கழக படிப்பினை முடித்த பின்னர், 1970களின் ஆரம்பத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்று கொண்டிருந்த மாணவர்களுக்கு கற்பித்தல் சேவையினையும் ஆற்றியிருந்தார். இக்காலப்பகுதியில் கலைப்பிரிவில் மாணவர்கள் பல்கலைக்கழகம் நுழைவதற்கு யூசுப்ஜானின் பங்களிப்பு உறுதுணையாய் அமைந்திருந்தது.

நாதர்ஜான் யாக்குப்ஜான்
பழைய மாணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரம் தந்த உன்னத பள்ளி

பசுவின் மடியில் பால் சுரப்பது போல் ஆலயம் தன்னில் ஆன்மா லயிப்பது போல் பள்ளி தன்னில் மாணவன் புடமிடப்படுகின்றான். பால் சிந்திய வாயான் சம்பந்தன் பாடல் அளித்த புண்ணிய தலமாகிய கோணேஸ்வரம் குடி கொண்ட திருக்கோணமலையில் இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வர இந்துக் கல்லூரி அமைந்திருப்பது ஒரு வரப் பிரசாதமே. அது மட்டுமன்றி கல்லூரிக்கு முத்தாப்பூ செய்து அருளினை சுரக்கும் பத்திரகாளி அம்மனும் வினைகளை விரட்டி விடும் ஆலடி விநாயகரும் அமைந்திருப்பது ஒரு அருட் கொடையே. ஆண்களின் கற்றல் செயற்பாட்டிற்காய் அமைந்த இக்கல்லூரியின் அதிபர் பணி செய்ய திருக்கோணமலை வந்தவர் சி. நடராஜா. அவரின் பரந்த மனமும் மனிதநேயமும் பெண்களும் அக் கல்லூரியில் க.பொ.த (உயர்தரம்) கற்க ஒரு பாலமாக அமைந்தது. திருக்கோணமலை நகர்புறத்தில் க.பொ.த (உயர்தரம்) கற்கும் மாணவிகள் 1973ம் ஆண்டு காலப்பகுதியில் தமது சிவ சின்னங்களுடன் பள்ளிக்கு செல்ல வாய்ப்பை கொடுத்தது இப்பள்ளியே. பள்ளியில் நிலவிய கற்றல் செயற்பாடுகளும் இணைப்பாடவிதான செயற்பாடுகளும் இன்றும் எம் மனதில் பசுமரத்தாணி போல் பரிணமிக்கின்றது.

வெள்ளிக்கிழமை தோறும் காலைப் பிரார்த்தனை, அருள் பாலிக்கும் அம்மன் சந்நிதியில் பஜனைகளுடன் இடம்பெறும். மாணவ தலைவர்கள் கலாச்சார உடையுடன் வருகை தந்து பஜனைக்கு மெருகூட்டுவார்கள். பஜனை முடித்து வரும் போது நிர்மலமான மனத்துடன் மகிழ்வான கற்றலை மாணவர்கள் செய்வார்கள். விளையாட்டுப் போட்டிக்கு தனிமையான மைதானம் இல்லாத போது பயிற்சிகள் கோணேஸ்வரர் கோயிலுக்கு போகும் வீதியில் நடைபெறுவது ரம்மியமாக இருக்கும். மாணவர்கள் ஒன்று கூடி ஒருவரையொருவர் சிநேக பூர்வமாக புரிந்து கொள்ளவும் விளையாட்டு நிகழ்வு வடிகாலாக அமையும். விளையாட்டுப் போட்டியின் போது இல்ல அமைப்பு, போட்டியாளர்களை உற்சாகப்படுத்துவது, விருந்துபசாரம் என்பன ஒழுங்கமைப்புடன் அழகாக அமையும். மாணவர்களிடம் இருந்த உடற் திறமையும் கற்பனை வளமும் இவ்விளையாட்டு போட்டியில் மாணவர்களை திரையிட்டுக் காட்டும். அது மட்டுமன்றி நடைபெறும் மாணவ மன்றங்களில் பட்டிமன்றம் ஒரு சிறப்பு நிகழ்வு. நடுவர்களின் கருத்தாளத்துடன் பட்டிமன்ற கருத்துக்கள் மாணவர்களின் உள்ளார்ந்த திறமையை மேடையிட்டு காட்டி நிற்கும். அவர்களின் திறமைக்கும் தளமிடும் மேடையாக பட்டிமன்ற நிகழ்வுகள் அமையும்.

இன்றும் தமது பாடசாலையென பெருமையிட்டு மாணவர்கள் பள்ளியின் பால் கொண்ட நேயத்திற்கு பெறுபேறுகளை கொடுத்து ஏணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்த்தி விட்டது மட்டுமன்றி, திறமைகளை வெளிக் கொணர மாணவரின் பின்னால் உறுதுணையாக நின்ற அதிபர்கள், ஆசிரியர்கள், நண்பர்களை மாணவர்கள் இன்றும் தமது மனதில் பதித்தது ஒரு காரணமாகும்.

பெண் பிள்ளைகளாக இருந்து விஞ்ஞான பிரிவில் இப்பள்ளியில் கற்க எமக்கு சந்தர்ப்பம் கிடைத்தது ஒரு பேறு என்று தான் சொல்ல வேண்டும். வேறு பாடசாலையில் கல்வி கற்க இருந்த இடர்களை களைந்து எமக்கு கரம் நீட்டி வரவேற்று அனுமதி தந்த சி.நடராஜா அதிபருக்கும் என்றும் எமது சிரம் தாழ்ந்த வணக்கங்கள் உரித்தாகும். எங்கள் அனைவரதும் வாழ்த்தும் என்றும் இப்பள்ளிக்கே. இப்பள்ளியின் பெயரை பொன் முத்துக்களால் பொறிக்கும் காலம் நிரந்தரமாக நிலையாக இருக்கவும் ரம்மியமான சூழல் அமையவும் என்றும் இறையை வேண்டுகின்றோம்.

நன்றி

**அன்றைய செல்வி ஸ்ரீபதி தம்பிராஜா**
**இன்றைய திருமதி ஸ்ரீபதி சுந்தராஜன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழா

## - 1979 -

## இராமக்கிருஷ்ண மிஷன் இந்துக் கல்லூரி

**திருக்கோணமலை.**

சிறப்பு விருந்தினர்:
சுவாமி சமக்ரானந்தாஜி மகராஜ்
அவர்கள்
இராமகிருஷ்ண மிஷன்

தலைவர் :
ஜனாப் .M.M.மன்சூர்
அவர்கள்( பிரதம கல்வி அதிகாரி, திருக்கோணமலை)
1979.09.10

## பரிசளிப்பு விழா அறிக்கை 1979

பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய சுவாமி சமக்ரானந்தாஜி மகராஜ் அவர்களே,
தேசிய பேரவைப் பிரதிநிதி திரு.இரா.சம்பந்தன் அவர்களே,
பிரதம கல்வி அதிகாரி ஜனாப்.M.M. மன்சூர் அவர்களே,
அரசாங்க அதிபர் திரு.D.J.பண்டாரக்கொட அவர்களே,
கல்வித் திணைக்கள அதிகாரிகளே, பிரமுகர்களே, ஆசிரியர்களே,
பெற்றோர்களே, மாணவர்களே, முன்னாள் மாணவர்களே

எமது கல்லூரியின் பரிசளிப்பு விழாவிற்கு, உங்கள் அனைவரையும் வருக வருக என்று வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது கல்லூரி இற்றைக்கு 55 ஆண்டுகளின் முன்னர் யாழ்நூல் தந்த விபுலானந்த அடியார்களாரால் வளர்க்கப்பட்டு, காலத்திற்குக் காலம் இராமகிருஷ்ண சங்க அருளாளர்களின் அரவணைப்பால் ஆசிகளினால், அருட்பார்வையினால் உயர்ச்சி பெற்று, இன்று அரசாங்க மத்திய மகா வித்தியாலயத் தரத்துடன் உயர்கல்வி வழங்கும் ஒரு கல்விக் கூடமாகத் திகழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கல்லூரியை நிறுவி வளர்த்த இராமகிருக்ஷ்ண சங்கத்தின் அடிச் சுவட்டைப் பின்பற்றும், அருளாளர் சுவாமி சமக்ரானந்தாஜி மகராஜ், எமது பரிசளிப்பு விழாவில் சிறப்பு அரசாங்க விருந்தினராக வருகை தந்துள்ளமை பேருவகை தருகின்றது.

எங்கள் தேசியப் பேரவை உறுப்பினர் திரு.இரா.சம்பந்தன் அவர்களே, பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம்.எம்.மன்சூர் அவர்களே, திருக்கோணமலை அரசாங்க அதிபர் திரு.பண்டாரகொட அவர்களே, நீங்கள் அனைவரும் எமது கல்லூரி வளர்ச்சிக்குத் தேவையேற்பட்ட போதெல்லாம் ஆற்றிய உதவிகளுக்கு நன்றிகூறி, எமது கல்லூரி வளர்ச்சிக்கு வருங்காலத்திலும் வேண்டிய உதவிகளை, உங்களிடம் அன்புடன் போருகின்றோம்.

முதற்கண் எமது நாட்டின் கல்வியமைப்பிலே கல்விச் சிந்தனையிலே கல்வி நிருவாகத்திலே ஏற்ட்டுள்ள நல்ல மாற்றங்களை, தெளிவான சிந்தனையைக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கல்வித்துறை மாற்றங்களை, கல்விமான்களின் குழுவொன்றினை அமைத்து அவர்களுடைய அறிவு சார்ந்த, அனுபவம் சார்ந்த சிபார்சுகளை பெற்று அமுல் நடத்துவதில் கல்வியமைச்சர் கலாநிதி நிஸங்கா விஜயரெத்தினா அவர்கள் கண்ணுங் கருத்துமாயிருப்பது எமக்குத் தெம்பினைத் தருகின்றது.

ஆசிரியர்கள் நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு போன்றவற்றை நிர்ணயிப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினைப் போன்று, கல்விச்சேவை ஆணைக்குழுவொன்றினையும் நியமிக்க வேண்டுமென்று ஒரு சிபாரிசு செய்யப்பட்டிருப்பது ஓர் ஒளிக்கீற்றாகத் தென்படுகின்றது.

அதே போன்று, ஆங்கிலமொழிப் போதனை பற்றியும் நல்ல பயனுள்ள அறிவு கட்டாயமாக்கப்பட வேண்டுமென்றும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. குழந்தைகள், தாய்மொழி மூலம் கற்பது இயற்கை நியதி - அவசியமென்பது கல்விச் சிந்தனையாளர்களின் முடிந்த முடியாகும். அவ்வாறு தாய்மொழி மூலம் குழந்தைகள் தமது கல்வியைப் பெறுகின்ற அதே வேளையில், உலகமொழியும் - அறிவுத்துறையின் சாளரமாகவும் விளங்குகின்ற ஆங்கிலமொழியறிவு அனைத்து மாணவர்க்கும் அவருள்ளும் உயர்கல்வி பெறும் மாணவர்க்கும் மிக மிக அவசியமென்பதினால் இச் சிபார்சினையும் வரவேற்கின்றோம்.

## ஆசிரியர்களும் மாணவர்களும்

இன்று எமது பாடசாலையில் 6ம் வகுப்புத் தொடக்கம் உயர்தர வகுப்பு வரை 617 மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள் இவர்களுள் 352 மாணவர்கள் உயர்தர வகுப்புகளைச் சார்ந்தவர்கள் எமது கல்லூரியில் விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய துறைகளில் உயர்கல்வி போதிக்கப்படுகின்றது. 26 ஆசிரியர்கள் இங்கு பணியாற்றி வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய திறன்களை மேலும் மாணவர்கள் விருத்தி செய்யும் நோக்குடன் இல்ல ரீதியாகப் போட்டிகள் ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் நடாத்தப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

மாணவர்களிடையே தலைமைத்துவ உணர்வுகளை வளர்க்கும் பொருட்டும், மாணவர்களே தம்மிடையே கட்டுப்பாட்டினையும், ஒழுக்கத்தினையும் வளர்க்கும் பொருட்டும், மாணவ முதல்வர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இவர்களிற் பலர் வை.எம்.சி.ஏயினால் நடாத்தப்பெற்ற தலைமைத்துவ புத்தாக்கப் பயிற்சி வகுப்புக்களிற் கலந்து கொண்டு சான்றிதழ்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுத்துறை

எமது கல்லூரியின் முன்னாலுள்ள விளையாட்டுத்திடல் பகுதி எமக்கு அரசினரால் கையளிக்கப்பட்டுள்ளதால், மாணவர்கள் தமது ஓய்வு வேளைகளையும் விளையாட்டுப் பாடநேரத்தையும் நன்கு பயன்படுத்துகின்றார்கள் இவ் விளையாட்டுத் திடலினைச் செப்பனிடப் பழைய மாணவர்களின் உதவியினை நாடி நிற்கின்றோம்.

நீண்ட நெடுநாட்களாக மிகவும் மந்த நிலையிலிருந்த எமது கல்லூரியின் விளையாட்டுத்துறை, கடந்த சில வருடங்களாக மறுமலர்ச்சியுற்று வருகின்றது. 1977 இல் எமது கல்லூரியின் 10 மெய்வல்லுனர்கள் மாவட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்று அகில இலங்கை ரீதியான போட்டிக்குத் தகுதி பெற்றனர். ஏறத்தாழ 10 வருடங்களின் பின்னர் இவ்வாண்டில் தேசியப் போட்டியொன்றில் எமது வீரர்கள் கலந்து கொண்டனர். இதைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் அகில இலங்கைப் போட்டிகளில் பங்குபெறத் தகுதி பெற்று வருகின்றனர்.

## இல்ல விளையாட்டுத்துறை

மூன்றாண்டு இடைவெளியின் பின், இவ்வருடம் எமது இல்ல விளையாட்டுப் போட்டியினை வெகு சிறப்பாக நடத்தினோம். இப்போட்டியின் போது 10 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டமை எமது மாணவர்கள் மிகுந்த ஊக்கத்துடன் இப்போட்டியில் பங்கு பற்றியமைக்குச் சான்றாக அமையும்.

இப்போட்டியின் போது 5 மைல் தூர நெடுஞ்சாலை ஓட்டமொன்றினைச் சிறப்பு நிகழ்ச்சியாக நடாத்தினோம் இப்போட்டியில் 68 வீரர்கள் பங்குபற்றியமையும், அவர்களில் 48 வீரர்கள் தூரத்தினை பூர்த்தி செய்தமையும் இந் நிகழ்ச்சியின் வெற்றியை எடுத்துக் காட்டுகின்றன.


## உதைபந்தாட்டம்

இத்துறையில் கடந்த சில ஆண்டுகளாக அயராது உழைத்து குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம். இந்நாட்டின் முன்னனிப் பாடசாலைகளுடன் எதிர்த்து விளையாடுமளவுக்கு நாம் வளர்ந்துள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசளிப்பு விழா – 1979



இல்ல விளையாட்டுப்போட்டிகள் : விபுலாநந்தா இல்லம் – 1976



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம், அகில இலங்கைப் பாடசாலைகளின் உதைப்பந்தாட்டச் சங்கம், திருக்கோணமலை உதைபந்தாட்டச் சங்கம் மட்டக்களப்பு பாடசாலைகளின் உதைபந்தாட்ச் சங்கம் ஆகியவற்றினால் நடாத்தப்படும் பலதரப்பட்ட சுற்றுப்போட்டிகளில் ஒழுங்காகப் பங்குபற்றிக் குறிப்பிடத்தக்க வெற்றிகளையும் அடைந்துள்ளோம்.

இதற்கு எமக்கு உறுதுணையாயிருந்த பயிற்றுனர்கள் திருவாளர்கள் குணதாசா, இலட்சுமணன், இம்றுறஸாக் ஆகியோருக்கும் நாம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம். உள்ளக விளையாட்டுக்கழகத்தை மிக விரைவில் ஆரம்பித்து உள்ளக விளையாட்டுக்களாக கரம், மேசைப்பந்து, பூம்பந்து என்பவற்றையும் ஆரம்பிக்க இருக்கின்றோம்.

வெளிக்கழகங்களால் நடாத்தப் பெற்ற விளையாட்டுப் போட்டிகளிலும், சைக்கிளோட்டப் போட்டிகளிலும் பங்குபற்றிய எமது கல்லூரி மாணவர்கள் பாராட்டத்தக்க வெற்றிகளையும், பரிசில்களையும் பெற்றுள்ளார்கள்.

பெற்றோர், பழையமாணவர், அபிமானிகள் ஆகியோரின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் இத்துறையில் நாம் மேலும் வலுவடைந்து இன்னும் பல வெற்றிகளை ஈட்டக் காத்திருக்கின்றோம்.

## சமயமும் கலாச்சாரமும்

சமயப் பொதுமையும் ஆன்மீக ஒருமைப்பாடும் இராமகிருஷ்ண சங்கத்தின் உயிர் நாடிகளாகும். இன்று நேற்றல்லாமல், கல்லூரி நிறுவப்பட்ட நாள் தொட்டே இம்மரபு பேணப்பட்டு வருகின்றது. இங்கு இந்துமன்றம், கிறிஸ்தவ மன்றம், இஸ்லாமிய மஜ்லிஸ் ஆகியவை நிறுவப்பட்டு மும்மதங்களின் பாடங்கள் போதிக்கப்படுவதொடு சமய அனுஷ்டானமும் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்து மாணவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள பத்திரகாளியம்மன் கோவிலுக்கு, வெள்ளித்தோறும் சென்று கூட்டுவழிபாடு நடத்தி வருகின்றார்கள். ஆலடி விநாயகராலய மகோற்சவ விழாக்களில் ஒரு நாளைய விழாவினையும், புனித சிவராத்திரி தினத்தன்று திருக்கோணேசர் கோவிலில் 2ம் சாமப் பூஜையையும், நவராத்திரி காலத்தில் பாடசாலையில் வாணி பூஜையையும் முப்பெரியார் விழாவினையும், சமயகுரவர் விழாவினையும் பக்தியுணர்வோடு நடாத்தி வருகின்றோம். ஆண்டு தோறும் நடைபெறும் விவேகானந்தா சபையினரின் சமயப்பாடத் தேர்வுகளுக்கு மாணவர்கள் தோற்றுவது வழக்கமாகும். செல்வர்கள்: க.ரமணிதரன், ச.கேசவன் ஆகிய இருவரும் மேற்படி சபையினரால் நடாத்தப்பட்ட பரீட்சைகளில் முறையே தங்க, வெள்ளிப் பதக்கங்களையும் அகில இலங்கைப் பரிசினையும் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ, இஸ்லாமிய மாணவர்கள் தமக்கென மன்றங்களை அமைத்து நாள்தோறும் தத்தம் பிரார்த்தனைகளை நடத்தி, வாரந்தோறும் அவரவர் சமயக் கருத்துக்களைப் பரிமாற்றி அவர்களுக்குரிய சமய தினங்களில் விசேட வழிபாடுகளையும் நடாத்துகின்றார்கள்.

எமது மாணவர்களைப் பாடசாலைக்கு வெளியே நடைபெறும் கலைத்துறைப் போட்டிகளிலும் கலந்து கொள்ளச் செய்வதன் மூலம், கலை கலாச்சாரப் பண்பாட்டுத்துறை வளர்ச்சிக்கு நாமும் பங்களிப்புச் செய்கின்றோம்.

அண்மைக் காலத்தில் இவ்வாறான போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களின் விபரம் மாத்திரம் இங்கு தரப்படுகின்றது.

அகில இலங்கைச் சங்கீத நடன நாடகப் போட்டியில் மிருதங்க வாசிப்புப் பிரிவினில் வெற்றி பெற்றிருக்கின்றார். செல்வன் கி.இராஜ்குமார் திருமலைக் கலைவட்டம் நிகழ்த்திய பாரதி விழாச் சித்திரப்போட்டியில் 1மபிரிவினை செல்வன் தருமரெத்தினமும், 2ம் பரிசினை செல்வன் ரீ.ரவீந்திரனும், 3ம் பரிசினை செல்வன் அ.அருள்பாஸ்கரனும் பெற்றிருக்கின்றனர்.

அதே வட்டத்தினரின் பேச்சுப்போட்டியில் 1ம் பரிசினை, செல்வன் க.இரமணிதரன் பெற்றுக் கொண்டார். நாடகப் போட்டியிலே எமது கல்லூரியின் பாரதிபுரம், நாடகம் இரண்டாவதாகப் பாராட்டுப் பெற்றது.

## கல்லூரி நூலகம்

மாணவர்கள் தமது கல்வியறிவினைப் பெறுவதற்கு மட்டுமல்லாமல், ஆளுமையை விருத்தி செய்வதற்கும் பல்துறை வள நிறுவனமாக விளக்குவது நூலகமாகும்.

எமது கல்லூரியில் மாணவர்களுக்குப் போதிய நூலக வசதியினை அமைத்துக் கொடுத்திருக்கின்றோம். தனிக்கட்டத்தில் இயங்கிவரும் எமது நூலகம் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தின் 3வது மாடிக்கு மாற்றப்படவுள்ளது. இந் நூலகத்துக்குப் பொறுப்பாகவுள்ள திரு.க.நடராசா அவர்களுக்கு வசதிக் கட்டணத்திலிருந்து மாதாந்த வேதனம் வழங்குகின்றோம். சேவையுணர்வோடு மாணவர்களின் தேவைகளை அறிந்து அயராதுழைக்கும் எமது கல்லு/ரியின் பழைய மாணவராகிய, அவருடைய சேவை நிரந்தரமாக்கப்படட வேண்டுமென்பது எமது விருப்பமாகும்.

சென்ற ஆண்டு எமது பாடசாலைக்கு 543 புதிய நூல்களைப் பெற்றுள்ளோம். அத்தோடு 21 மாத இதழ்கள், 6 வார இதழ்கள், 3 நாளிதழ்களைப் பெற்றுக் கொடுத்துள்ளோம். இவ்வாண்டு டெயிலிநியூஸ், வீரகேசரி, தினபதி, ஈழநாடு ஆகிய நாளிதழ்களும் ஆனந்தவிகடன், கல்கி, இதயம் பேசுகிறது, குங்குமம், குமுதம், சாவி, தினமணிக்கதிர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்ளக்,கல்கண்டு, சிரித்திரன், சித்திரா, ஸ்போட்ஸ்றா, இல்லஸ்றேற்றட் வீக்லி ஆகிய வார இதழ்களும் கலைக்கதிர், கலை மகள் தீபம், மஞ்சரி, கணையாழி, அம்புலிமாமா, இரத்தினமாலா, சந்தமாமா, ஊற்று, செவ்வந்தி, நல்வழி ஆகிய மாத இதழ்களையும் இடையீடின்றிப் பெறுவதற்கு வசதிக்கட்டணத்தின் கணிசமான பகுதியைச் செலவிடுகின்றோம்.

உள்ளூராட்சித் திணைக்களத்தினால் திருக்கோணமலையில் அமைக்கப்பட்ட நடமாடும் நூலக சேவையினரின் உதவியைப் பெற்று, தவணை தோறும் எமது நூலகத்திற்கு பயனுள்ள பெறுமதி மிக்க நூல்களை இரவலாகப் பெறும் வழக்கமும் அமுலிலுள்ளது.

இவ்வசதியை எமக்கு ஏற்படுத்தித் தந்துள்ள திருக்கோணமலை உள்ளூராட்சித் திணைக்களச் சேவையாளர்களுக்கு எமது நன்றி.

மாணவர்கள் நூலகத்தில் வாசிப்பதோடமையாதது, தத்தம் வீடுகளுக்கும் நூல்களை எடுத்துச் சென்று பயன்பெறத்தக்க முறையில் நூலக அட்டை முறை அமுலில் உள்ளது.

இந்நூலகத்திற்கு மில்க்வைற் நிறுவன உரிமையாளர் திரு.கனகராஜா அவர்கள் ரூபா 2200/= பெறுமதியான நூல்களை அன்பளிப்பாகத் தந்து உதவி உள்ளார் அன்னாருக்கும் எமது நன்றிகள்.

அடுத்து இப்போது பெறுவதற்குச் சிரமமாகவுள்ள பல அரிய நூல்களை எமக்கு நல்கிய கல்லூரிப் பழைய மாணவர் இலட்சுமணன், எமக்கு நூல்களை அன்பளிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்.

## "பான்ட்" வாத்தியக்குழு

சென்ற ஆண்டு முதன்முதலாக அமைக்கப்பட்ட "பான்ட்" வாத்தியக்குழு நல்ல முறையில் பயிற்சி பெற்று மாவட்ட ரீதியிலான போட்டிகளில் பங்குபற்றி பலரின் பாராட்டுதல்களைப் பெற்றமை அவர்களின் திறமைக்கு எடுத்துக் காட்டாகும். இக்குழுவுக்கு பயிற்சி அளித்த திரு. ஆர்தர், திரு. குணசேகரா, திரு. குணவர்த்தனா ஆகியோருக்கும் தற்போது இவர்களைப் பயிற்றி வருகின்ற திருமதி.தேவசகாயத்துக்கும் எமது நன்றிகள்.

## ஆசிரியர் மன்றம்

எமது கல்லூரியில் இயங்கி வருகின்ற ஆசிரியர் கழகத்திலே சகல ஆசிரியர்களும் அங்கத்தவர்களாக இருந்து வருகின்றார்கள். அவர்களிடையே சகோதரத்துவ உணர்வினை உருவாக்குவதற்கு அம்மன்ற வைபவங்கள் உதவுகின்றன.

எமது கல்லூரி உதைப்பந்தாட்டக் குழுவினருக்குக் காலணிகள் வாங்கும் செலவுக்கென ரூபா 300/= இனை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திச் சபை

கல்வியமைச்சின் திட்டத்திற்கமைய எமது பாடசாலை அபிவிருத்திச் சபை 29.05.1979 இல் அமைக்கப்பட்டது. இச்சபையின் செயற்குழு உறுப்பினர்கள் பாடசாலையின் செயற்பாட்டிலும், வளர்ச்சியிலும் ஆர்வத்துடன் பங்குபற்றுகின்றார்கள்.

இன்றைய விழா இத்துணை சிறப்பாக அமைவதற்கு அவர்களுடைய முயற்சியும் முக்கிய காரணம் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

பரிசில்கள் பெறுவதற்கு உரிய பணத்தினைத் திரட்டுவதற்கு அவர்கள் எடுத்த முயற்சிகள் பற்பல.

### நிறைவு

ஒரு கல்வி நிறுவனத்தின் வளர்ச்சி அக்கல்லூரியின் மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், கல்வித் திணைக்களத்தினர் ஆகியோரின் நல்லுறவு கூட்டு முயற்சி ஆகியவற்றில் தங்கியுள்ளது.

இத்தகையதொரு பொதுச் சேவையிலே பங்காளர்களாக இயங்கி எம்முடன் தோளோடு தோள் நின்று பணியாற்றும் படி அன்புடன் கோருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடவிதானங்களும்
# இணைப் பாடவிதானங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## T/R.K.M.SRIKONESWARA HINDU COLLEGE
## GRADE FIVE SCHOLARSHIP EXAMINATION - RESULTS ANALYSIS
## 1984-2021

| S.No | YEAR | No. Applied | NO SAT | NO. QUALIFIED | % | ABOVE 100 | ABOVE 100 (%) | ABOVE 70 | ABOVE 70(%) | CUT OF MARKS | DIST RANK | Eligible bursary | COLLEGE HIGHEST | DISTRIC HIGHEST |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1984 | | 6 | 6 | 100.00% | .. | | .. | | 109 | 3,6,8 | 1 | 150 | 145 |
| 2 | 1985 | | 16 | 16 | 100.00% | .. | | .. | | 112 | 1,2,7,8,10 | 3 | 163 | 64 |
| 3 | 1986 | | 13 | 13 | 100.00% | .. | | .. | | 139 | 1,2,3,4,5,6,7,7,10 | 2 | 176 | 41 |
| 4 | 1987 | | 8 | 8 | 100.00% | .. | | .. | | 181 | 3,4,6,6,8,11 | 1 | 174 | 15,31,41,41 |
| 5 | 1988 | | 25 | 25 | 100.00% | .. | | .. | | 138 | 2,4,7,8,1,6,10,10 | 5 | 174 | 4 |
| 6 | 1989 | | 23 | 23 | 100.00% | .. | | .. | | 108 | 2 | 5 | 172 | 48 |
| 7 | 1990 | | 25 | 23 | 100.00% | .. | | .. | | 74 | 1,6,7,8 | 3 | 166 | 14 |
| 8 | 1991 | | 27 | 27 | 100.00% | .. | | .. | | 78 | 4,5,6,8,10 | 8 | 158 | .. |
| 9 | 1992 | | 27 | 27 | 100.00% | .. | | .. | | 120 | .. | | 190 | .. |
| 10 | 1993 | 74 | 73 | 36 | 49.00% | .. | | .. | | 121 | .. | 14 | 179 | .. |
| 11 | 1994 | 93 | 93 | 43 | 46.00% | 71 | 76.34% | 82 | 88% | 135 | .. | 21 | 176 | .. |
| 12 | 1995 | 92 | 89 | 50 | 56.00% | 56 | 62.92% | 78 | 88% | 107 | 1,3,5,6,8 | 10 | 174 | .. |
| 13 | 1996 | 110 | 109 | 41 | 37.00% | 70 | 64.22% | 107 | 98% | 117 | 2,3,5,6,9 | 14 | 169 | .. |
| 14 | 1997 | 99 | 98 | 48 | 49.00% | 48 | 48.98% | 86 | 88% | 101 | 1,2,4,9,6 | 16 | 157 | .. |
| 15 | 1998 | 123 | 123 | 45 | 37.00% | 90 | 73.17% | 113 | 92% | 126 | 2,3,5,7 | 19 | 168 | .. |
| 16 | 1999 | 125 | 125 | 47 | 37.00% | 74 | 59.20% | 104 | 83% | 118 | 1,7,9 | 22 | 175 | .. |
| 17 | 2000 | 134 | 134 | 60 | 45.00% | 106 | 79.10% | 125 | 93% | 134 | 2,6,7,7 | 18 | 182 | .. |
| 18 | 2001 | 116 | 116 | 43 | 38.00% | 70 | 60.34% | 99 | 85% | 117 | 4,7,9 | 6 | 168 | .. |
| 19 | 2002 | 131 | 131 | 54 | 41.00% | 82 | 62.60% | 119 | 91% | 118 | 8 | 21 | 162 | .. |
| 20 | 2003 | 141 | 138 | 44 | 32.00% | 79 | 57.25% | 114 | 83% | 117 | 1,4 | 17 | 182 | .. |
| 21 | 2004 | 144 | 144 | 59 | 41.00% | 96 | 66.67% | 128 | 89% | 126 | 1,7,7 | 24 | 177 | .. |
| 22 | 2005 | 150 | 149 | 71 | 47.00% | 102 | 68.46% | 134 | 90% | 119 | 1,1,3,5,9 | 25 | 160 | .. |
| 23 | 2006 | 163 | 148 | 73 | 49.00% | 115 | 77.70% | 150 | 101% | 125 | 4,6,6,7,7 | 26 | 167 | .. |
| 24 | 2007 | 145 | 143 | 36 | 25.00% | 94 | 65.73% | 132 | 92% | 141 | 1,4,8 | 9 | 178 | .. |
| 25 | 2008 | 140 | 140 | 40 | 28.00% | 64 | 45.71% | 111 | 79% | 114 | 1,2 | 13 | 148 | .. |
| 26 | 2009 | 138 | 138 | 37 | 26.00% | 113 | 81.88% | 130 | 94% | 138 | 5 | 10 | 179 | .. |
| 27 | 2010 | 148 | 148 | 61 | 41.00% | 132 | 89.19% | 147 | 99% | 142 | 3,10 | 17 | 177 | .. |
| 28 | 2011 | 151 | 151 | 39 | 26.00% | 117 | 77.48% | 142 | 94% | 151 | 1,5 | 17 | 190 | |
| 29 | 2012 | 144 | 142 | 41 | 29.00% | 103 | 72.54% | 131 | 92% | 147 | 3,7,10 | 12 | 188 | |
அவர்களுடைய இணையத்தள சேவை வழியாக வாசிக்கக்கூடிய ஆயிரக்கணக்கான நூல்களை வீட்டில் இருந்தவாறு அல்லது தங்குமிடத்தில் இருந்து வாசிக்கக்கூடிய சேவைகளை வழங்கி வருகின்றன. மருத்துவம், பொறியியல், இயற்கை விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், முகாமைத்துவம், வர்த்தகம் உட்பட பல்வேறு துறை சேர்ந்த அண்மைக்கால மற்றும் அத்தியாவசியமான பழைய நூல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் யாவும் இச்சேவையின் மூலம் தேவையான போது, தேவையான இடத்தில் வைத்து பெற்றுக்கொள்ளக்கூடியதாக நிலவரங்கள் வளர்ந்துள்ளன. இச்சேவைகளை தனிப்பட்டவர்களது ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகள் ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம். எனவே ஏன் கணணியின் பயன்பாட்டறிவு தேவை என்பதனை இவ்விபரங்கள் விளக்குவதாக இருக்கும். இவற்றை விட தொழில்நுட்ப ரீதியாக செயற்பட வேண்டியவர்களுக்கு வெவ்வேறான செயலிகளைப் பயன்படுத்தி மின்சாரப் பொறிகளைத் திருத்துதல், வாகனம் திருத்தல், தளபாடங்களை தயாரித்தல், கட்டடங்கள் கட்டல், மின்சாரப் பொறிகளை பொருத்துதல், ஆடை தயாரிப்பு பணிகள் உட்பட பல்வேறு மற்றும் தொழில்களுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வேண்டும் நேரங்களில் பெற்றுக்கொள்ள முடிகின்றது. எனவே ஏன் கணணி பயன்பாட்டு அறிவு அவசியமானதென்பதனை இவற்றில் இருந்து புரிந்துகொள்ளலாம். ஏறத்தாள ஒரு துவிச்சக்கர வண்டியை விலைக்கு வாங்கி அதனைச் செலுத்த சில பயிற்சிகளைப் பெற்று நாம் பயன்படுத்திக் கொள்வதனைப் போன்றது தான் கணணிப் பயன்பாடாகும். துவிச்சக்கர வண்டியை நாமா செய்கின்றோம், நாமா திருத்துகின்றோம்? கணணியிலும் புரோகிரோம் தயாரித்தல் உட்பட பல மென்பொருள் தயாரிப்பு மென்பொருள் பொறியியலாளர்களையும் (Software Engineer) கணணிக்கான உதிரிப்பாகங்கள், கணணி பொறித் தயாரித்தல் என்பன வன் பொருள் (Hardware) பொறியியலாளர்களையும் சார்ந்த பொறுப்புகளாகும். நாம் பயன்பாட்டாளர்களே.

அடுத்ததாக ஆங்கில அறிவும் நவீன அறிவினைப் பெற்று அன்றாடம் நமது அறிவை புதுப்பித்துக்கொள்ள தமிழைவிட ஆங்கிலமே இலகுவான ஊடகமாக உள்ளது. ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஆட்சியின் கீழிருந்த இலங்கை உலகில் ஐ.அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து அதே போல் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடன் கல்வி, வர்த்தகம் உட்பட பல பொருளாதார பரிமாற்றங்களை செய்துகொள்வதால் ஆங்கிலம் நமக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தொழில், மருத்துவம், கல்வி பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள பொருத்தமான சர்வதேச மொழியாகி விட்டது. ஏனைய முக்கியமான பல உலக நாடுகளுடனும் உதாரணமாக யப்பான், ஜேர்மனி, நோர்வே, சுவீடன், பிரான்ஸ், இத்தாலி, தென்னாபிரிக்கா, சவுதி அரேபியா, துபாய், எமிரேட்ஸ் போன்ற நாடுகளுடனும் தாராளமாக ஆங்கிலத்தில் தொடர்புகொள்ள முடியும். எனவே பெருமளவான அறிவு, தகவல்கள் ஆங்கில மொழியில் கிடைக்கக் கூடியதாக இருப்பதால் அம்மொழி அறிவு அத்தியாவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நடப்புக்கள் மற்றும் வாழ்க்கையில் சடுதியாக எதிர்பாரத வகையில் தோன்றும் சவால்களைத் தானாக சமாளிக்க அடிப்படையாக பொது அறிவு அவசியம். உலக நிலவரம் மற்றும் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட வேறான பல யதார்த்தங்கள் பற்றி அறிந்திராத ஒருவரால் எதிர்பாராமல் ஏற்படும் சவால்களை சமாளிக்க முடியாது போகலாம். அதற்கு தொடர்ந்து வாசித்துக்கொண்டிருப்பதன் மூலம் தனது பொது அறிவுக்கான உள்ளார்ந்த வளத்தை வளர்த்துக்கொள்ளலாம். எனவே தான் தொழில் தருணர்கள் தொழில் கேட்டு விண்ணப்பிப்பவர்களுடன் நேர்காணலை ஏற்பாடு செய்து சில வினாக்களைக் கேட்டு திடீர் கேள்விகளை சரியாக பதிலளிக்காவிட்டாலும், நேர்மையாக மற்றும் உண்மையாக அறிவார்ந்தமுறையில் நடந்துகொள்ளும் முறைகளைப் பரீட்சத்து பார்க்கின்றார்கள். சில கேள்விகளுக்கு மாத்திரம் பதில்களைத் தெரிந்து சித்தியடையும் செயல்முறையில் இருந்து வேறுபட்டு தொடர் வாசிப்பு வழியாக அறிவின் பொருத்தமான பிரயோகம், பயன்பாடுகள் என்பனவற்றை பெற்றிருக்க இதன் மூலமாக ஊக்குவிக்கப்படுகின்றது.

## மொழி

இறுதியாக தாய்மொழியில் இருக்க வேண்டிய புலமையின் தேவை பற்றிய சில குறிப்புக்களைக் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்யலாம் என்று எண்ணுகின்றேன்.

எந்தவொரு குழந்தைக்கும் தாய் மொழிதான், அதுவும் குறிப்பாக தமிழைப் போன்ற வளர்ச்சியடைந்த மொழியைக் கற்பதுவும், பயன்படுத்துவதும் பெரும் பாக்கியமாகும். பிறந்த காலம் முதலாக அக் குழந்தையின் காதில் ஒலிக்கும் மொழி தாய் மொழியாகும். ஐந்து வயதின் பின்னர் ஏறத்தாள 18 வயது வரையான 13 வருட காலம் பாடசாலைக் கல்வியை குழந்தை கற்கின்றது. இக்காலப் பகுதி மிக முக்கியமான ஒன்றாகும். அப்போது கல்வி தாய்மொழியில் அமைவது சிறப்பானதாக இருக்கும். இந்த நிலையில் தாய்மொழிக் கல்வி சிறந்தது என்ற கருத்தை தாய் மொழி மட்டுமே என்று எவரும் அர்த்தம் கொள்ளக்கூடாது. தாய் மொழியோடு ஆரம்ப கணிதத்தை கற்பிப்பதனைப் போன்றே குழந்தைகளுக்கு ஆரம்ப கல்வியின் போதே இலங்கை, தமிழ்நாடு போன்ற தமிழ் மக்கள் வாழும் நாடுகளில் மூன்றாவது பாடமாக ஆங்கில மொழியையும் கற்பித்தலே சாலச் சிறந்ததாகும்.

சில குறுக்கு வழிகளைக் காட்டிப் பழகிய தலைவர்கள், மற்றும் ஆசிரியர்களும் கூட இன்னுமோர் மொழியை குழந்தைகளுக்கு கற்பிப்பதில் தயக்கம் காட்டக்கூடாது. தமிழ் மொழியை முதலாவது மொழியாகவும், ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகவும், கணிதத்தை மூன்றாவது அறிவாகவும் கற்பிக்க வேண்டும். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று தமிழ் மூதாதையர்கள் கூறிச் சென்றுள்ளனர். நாம் விரும்பியோ அல்லது விரும்பாமலோ இன்றைய பொருளாதார முறைமை மற்றும் யதார்த்தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக எழுத்து என்பதனை இரண்டு எழுத்துக்களாக அதாவது ஒன்று தமிழ் மற்றது ஆங்கிலம் என்று இணைத்துப் பார்க்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

சில தற்குறிகள் குழந்தை தமிழைவிட இன்னுமோர் மொழியையும் கற்கவேண்டும் என்று கூறுவது ஒரு புறத்தில் அக்குழந்தையின் மீது திணிக்கப்படும் தேவையற்ற பளு என்று கூறி வருகின்றார்கள். ஒரு மனித மூளை 70 வரையிலான மொழிகளை வாசிக்க, எழுத, பேசுவதற்கான அறிவை வளர்த்துக் கொள்ளக்கூடிய திறனைக் கொண்டது என்பது உலகில் நிலைநாட்டப்பட்டுள்ளது. (Gardinal Guseppe Messafanti – a Hyperglot ) கார்டினல் கைசேப் மெசாப் பெண்டி என்பவர் இத்தாலியின் பொலஹ்னா பல்கலைக்கழகத்தின் அரபிக் பேராசிரியராகவும், பின்னர் வத்திக்கான் நூலகத்தின் பிரதம நூலகராகவும் பணியாற்றி 75 வயதில் இறந்தார். அவருக்கு 38 மொழிகளில் சிறந்த முறையில் எழுத, பேச, வாசிக்கக்கூடிய மொழி அறிவு இருந்திருக்கின்றது. (பார்க்க இணைய வழி) எனவே ஒவ்வொரு குழந்தையும் பால்ய வயதில் தாய் மொழி, இரண்டாம் மொழியையும் பத்தாவது வயதோடு அவர்கள் வாழும் நாட்டின் உத்தியோகபூர்வமான அரச மொழியையும் கட்டாயமாகக் கற்றுக்கொள்ள முயலவேண்டும். விரும்பினால் அதற்கு மேலும் கற்றலும் சிறந்ததே. மூன்று மொழிகளுக்கு மேல் கற்றவர்களஇந்தியாவில் மட்டும் பல இலட்சமானவர்கள் (300 இலட்சமானவர்கள்- 3% மட்டுமே). எந்தளவுக்கு மொழிகளை சிறப்பாக கற்கின்றோமோ அந்தளவுக்கு உலகில் பெரும்பாலன மக்களுடனும் தொடர்புகொள்ள வாய்ப்புக்கள் அதிகமாகின்றன.

மேற்கூறிய அடிப்படையான ஆனால் முக்கிய நோக்கங்களுடனேயே ஆங்கிலம், கணணி மற்றும் பொது அறிவு போன்ற கட்டாய மற்றும் அடிப்படைப் பாடங்கள் மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றன. மேற்கூறியனவற்றை விட மாணவர்கள் தமது விருப்பு பாடங்களை உதாரணமாக உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் பாடத்திட்டத்திற்கு உட்பட்ட வகையில் முழுமையாக வாசித்தறிவது பயனுடையதாகும். ஒரு முறையாவது முழுப் பாடத்திட்டத்தையும் வாசித்தறிந்து சிறு குறிப்புக்களை எடுத்துக்கொண்ட பின்னர் பரீட்சைக்கு சில காலத்திற்கு முன்னர் கடந்த கால வினாத்தாள்களை அடிப்படையாக வைத்து முக்கிய வினாக்களுக்கு விடையெழுதி நேர எல்லைக்குள் பதிலெழுதும் பயிற்சியை பெற்றுக்கொள்ள வேண்டும். சரியான புள்ளிவிபரங்கள், வரைபடங்கள், விளக்கப்படங்களை பொருத்தமான இடங்களில் உள்ளடக்கி இருத்தல் மிக அவசியமாகும். எனெனில் பொருத்தமான புள்ளி விபரங்கள், வரை / விளக்கப்படங்கள் ஒவ்வொரு வினாவிற்கும் 20%25 வீதமான புள்ளிகளைத் தரக்கூடியவை.

பதிலெழுதும் போது கேள்வியின் நோக்கத்தை சரியாக விளங்கி மையக் கருத்தை சரியாக ஆனால் சுருக்கமாக விளக்கி பிரச்சினையை வெளிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொணர்ந்து தீர்வினையும் பொருத்தமான விபரங்களுடன் பதில் எழுதிவிட்டால் வெற்றி நிச்சயம். நேரக் கட்டுப்பாடு (Time Management) மிக முக்கியம். இவ்வாறே அனைத்து பரீட்சைகளையும் மேற்கொள்ள தகுந்த பயிற்சிகளை மேற்கொண்டால் குறி தவறுவதற்கு வாய்ப்பிருக்காது. இவற்றோடு செய்முறை தேர்வுக்கான சரியான வழிகாட்டல்களையும் தெரிந்து கொள்ளவேண்டும். எப்படி க.பொ.த (உ/த) பரீட்சைக்கு மாணவர்கள் கற்றல் செய்முறைகளை பின்பற்றுகிறார்களோ அதே போன்று பல்கலைக்கழகம் சென்ற பின்னரும் அதே உத்வேகத்தில் கற்றல் செய்முறைகளையும் மேற் கொள்வார்களேயாயின் வாழ்க்கையிலும் வெற்றி உறுதியாகிவிடும்.

வாழ்க்கையின் வெற்றி என்பது கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களோடு மட்டும் முடிந்து விடுவதில்லை. மனித உறவுகள், முக்கிய உறவுகளை மதித்து பொறுப்புக்களைப் பேணுதல், சமூகப் பொறுப்புக்கள், சட்டம் ஒழுங்கு, அடுத்தவர்களது உரிமைகளை மதித்தல், கடமை தவறாமை, நேரம் தவறாமை யாவற்றிற்கும் மேலாக ஆரோக்கியமான உடலிலேயே ஆரோக்கியமான அறிவு தழைத்தோங்க முடியும் என்ற தத்துவத்தை பின்பற்றி தனது உடலாரோக்கியத்தை மிகச் சிறந்த முறையில் சரியானஉடற்பயிற்சி, சரியான சுகாதார வாழ்க்கை, சரியான உணவுப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தும் நேரத்திற்கு மதிப்பளித்தும் வாழ்வதன் மூலமே நமது இலக்குகளை வெற்றிகரமாக அடைய முடியும் என்பதனை இளைய தலைமுறையினருடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி.

**Mens sana in Corpore Sano** - Healthy mind in healthy body - ஆரோக்கியமான உடலிலேயே ஆரோக்கியமான அறிவு வளர முடியும்.

எழுதியவர் : பேராசிரியர் மா.செ. மூக்கையா,
முன்னாள் புவியியல் பேராசிரியர், தலைவர் புவியியற் துறை, பேராதனைப் பல்கலைகழகம்,
முன்னாள் கிழக்கு பல்கலைக்கழகத் துணை வேந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இன்னியம்

இசைக்கு இறைவன் வயப்படுவான் எனும் நிகழ்வினை இதிகாசங்களில் பல இடங்களில் காண முடிகின்றது. மூவுலகையும் வென்றிடும் வலிமையை இராவணன் இசைபாடி இறைவனைத் துதித்தே பெற்றான் என இதிகாசம் எடுத்தியம்புகின்றது. இசைக்கு இசையாகாத ஜீவராசிகளே இல்லை. நல்லிசை நோய் தீர்க்கும் அருமருந்தாக பாவிக்கப்படுவதையும் நாம் அறிவோம் ஆறறிவு படைத்த மனிதன் மட்டுமல்லாது ஐந்தறிவு படைத்த ஏனைய ஜீவராசிகளும் இசைக்கு மயங்குகின்றன. வேணுகானத்தால் கிருஸ்ணர் பசுக்களையும், கோபியர்களையும் வசப்படுத்தினர் என்பது புராண வரலாறு. இன்றும் மகுடிக்கு இசையும் பாம்பினை பார்க்கின்றோம் தமிழின் தோற்றம் வரையறுக்கப்படவில்லை. இதில் உயர்வு நவிற்சியாக ‘கல்தோன்றி மண் தோன்றா காலத்தின் முன் தோன்றிய தமிழ்" என கூறப்படுவதிலும் உண்மையுள்ளது சமீபத்திய ஆராய்ச்சி முடிபுகள் தமிழர் வாழ்வியல் சிந்துவெளி நாகரீகத்திற்கு முற்பட்டது. என கூறப்படுவதையும் நோற்கப்பாலாகும். மூத்த குடியான தமிழர்கள் இசைப்பாரம்பரியத்தையும் கொண்டிருந்தனர் என்பது தெளிவு. இறைவன் இசைவடிவம் எனக்கொண்டு இசையால் இறைவனை வழிபட்ட தமிழர்கள், இசைக்கருவிகளையும் பாவித்து வந்துள்ளனர் என்பது பல சந்தர்ப்பங்களிலும் நிறுவப்பட்டுள்ளது .

பண்டைய காலத்தில் புழக்கத்தில் இருந்த பல இசைக்கருவிகள் இன்று மருகிவிட்டன பல இசைக்கருவிகளின் பெயரை பழைய நூல்களில் மட்டுமே காணமுடிகின்றது கீழ்காணும் பாடலில் உள்ள பல இசைக்கருவிகள் இன்று பாவனையில் இல்லை ஆனாலும் ஏட்டளவில் உள்ள இசைக்கருவிகளை இனம் கண்டு மீண்டும் தமிழ் மரபு இசையை தரணியில் தவழவிடவேண்டும் என்னும் அவா தமிழ் அறிஞர்கள் மத்தியில் இன்றும் உண்டு.

“சல்லரி தாளம் தடுணிதம் தத்தளகம்
கல்லலகு கல்ல வடமொந்தை - நல்லியத்
தட்டச்சங்கம் சலஞ்சலந் தண்ணறுமை
கட்டிழியல் பேரி கரதாளம் - கொட்டும்
குடமுழவம் கொக்கரை வீணை குழல் யாழ்
இடமாம் தடாரி படகம் - இடவிய
மத்தளம் துந்தூபி வாய்ந்த முரு (டு) இவற்றுள்
எத்திசைதோறும் எழுந்தியம்ப - ஒத்துடனே
மங்களம் பாடுவார் வந்திறைஞ்ச.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இசைக்கருவிகள் மறைந்து விட்டாலும் இன்றும் இசைக்கருவிகளை செய்யும் தகை சிறந்தோர் மத்தியில் கீழ்காணும் இசைக்கருவிகளோடு பரிச்சியம் இருப்பதை காணலாம்.

தம்பாட்டம் , கஞ்சிரா, எக்காளம், உடுக்கை, திருச்சின்னம், புல்லாங்குழல், மகுடி, தாரை, கொம்பு, சங்கு, நாதஸ்வரம், ஒத்து யாழ் தம்புரா, பிடில் தாளம், கடகம், சேமக்களம், தட்டிக்கழி, பறை, முரசு, பேரிகை, சல்லிசை, சல்லரிதமுக்கு, மத்தளம், உறுமுமேளம், வீணை, சலங்கை ஆகிய இசைக்கருவிகள் இன்னமும் குறிப்பிட்ட விசேடங்கட்கு பாவிக்கப்படுகின்றன.

பண்டைய காலத்தில் அரசர்களையும் பிரமுகர்களையும் வரவேற்பதற்கு இசையணிகள் பயன்படுத்தப்பட்டிருந்ததை ஏடுகள் வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது இன்று அத்தகைய வரவேற்பிற்கு மேலைத்தேயத்து முறையில் பயிற்றுவிக்கப்பட்ட "பாண்ட்" எனும் வாத்திய அணி பயன்படுத்தப்படுகின்றது ஆயினும் தமிழ் மரபைப்பாதுகாக்கும் முயற்சியில் ஒரு அங்கமாய் தவில் நாதஸ்வரம் போன்ற சில வாத்தியங்களை வாசித்து பிரமுகர்களை வரவேற்கும் நிகழ்வுகள் தமிழ் பகுதிகளில் அரங்கேறிய வண்ணம் உள்ளது.

## தமிழ் இன்னிய அணியின் தோற்றம்

இலங்கையின் மேல் நாட்டு வாத்திய அணிக்கு ஈடாக தமிழ் வாத்திய அணி ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்னும் எண்ணக்கரு வடக்கு கிழக்கில் படித்தவர்கள் மத்தியில் உருவான போது அதன் வெளிப்பாடாக தமிழ் வாத்திய அணி உருவாக்கப்பட்டு தமிழர்களுடைய பாரம்பரியம் பேணப்பட வேண்டும் என்பதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டது.

1997ம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகாணசபையின் கல்வி அமைச்சின் செயலாளராக பணிபுரிந்த திரு. சுந்தரம் திவகலால அவர்கள் இம் முயற்சியில் முழுமையான இறங்கி முயற்சிகள் தொடங்கினார் ஆனாலும் இம்முயற்சி யார் மூலம் முழுமை அடைய வேண்டும் என்னும் தேடுதலில் அவருக்கு (சங்கீத பின்புலத்தை தகுதியாகக் கொண்ட திருமதி விஜயகுமாரி தவசிலிங்கம் திருமதி தேவிகாராணி முருகுப்பிள்ளை உதவிப்பணிப்பாளர் திரு. எதிர்மன்னசிங்கம் அவரையே வைத்து) தமிழ் வாத்திய அணியினை உருவாக்கும் முகமாக உதவிப்பணிப்பாளர் திரு. எதிர்மன்னசிங்கம் கலந்தாலோசித்து எடுக்கப்பட்ட முடிவின் படிக்கு தமிழ் இசையணி உருவாக்கும் முயற்சி 1997 பங்குனி மாதம் 24 ம் திகதி வடக்கு கிழக்கு மாகாணசபை கலாசார மண்டபத்தில் அங்குராப்பரணம் செய்யப்பட்டது.

இத்தகைய இசையணிக்கு என்ன பெயர் வைப்பது என்னும் தேடலில் அறிவுசால் பிரமுகர்கள் ஈடுபட்டனர் அவர்களின் தேடல் அகநானூறு புறநானூறு மற்றுப் குறிஞ்சிப்பாடல்களில் நடந்தேறியது இதன் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்கருவிகளின் கூட்டிசையை சங்ககால நூல்கள் எவ்வாறு விளித்தன என்னும் தேடலில் கீழ் காணும் பாடல் வரிகள் தமிழ் அறிஞர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

"...... விசிப்பினில் கூடு கொள் இன்னியம் காங்க
கூடு கொள் இன்னியம் கறங்க
ஆடலும் ஒன்னார் தம் பாடலும் மறந்தே"
(புற153 10-12)

அத்தோடு குறிஞ்சிப் பாடலில்

"அரிக்கூட்டின்னியம் கறங்க ஆடுமகள்
பாணியல் தளரும் சாயல்"

இவ்வரிகளில் இசைக்கருவிகளின் கூட்டிசையை "இன்னியம்" என்று அழைக்கப்பட்டது தெரியவந்தது.

இதையே அகநானூறில்

"அருஞ் சிமையிழி தரும் ஆர்த்து வரல் அருவியில்
ததும்பு சீரின்னியம் கறங்க கைதொழுது"

என மீண்டும் காணப்பட்டதால் தமிழ் இசைக்கருவிகளின் கூட்டிசைக்கு "இன்னியம்" என பெயர் வைப்பதென்று முடிவாயிற்று அம் முடிவு பேராசிரியர் சிவத்தம்பிக்கு அறிவிக்கப்பட்ட போது அவரும் இதனை ஏற்றுக்கொண்டார்.

## பரீட்சார்த்த இன்னியம்

1997 பங்குனியில் இன்னிய பயிற்சிகள் அங்குராப்பரணம் செய்யப்பட்டாலும் அதைத் தொடர்ந்து சுமார் ஆறு மாதங்கட்கு மாணவர்கட்கு இசைக்கருவிகளின் வாசிப்பில் பயிற்சி அளிப்பதென முடிவாயிற்று தமிழ் இசைக்கருவிகள் 28க்கு மேல் அடையாளம் காணப்பட்ட பொழுதும் இசையணிக்கு ஏற்றவை என 17 இசைக்கருவிகள் திருமதி விஜயகுமாரி தவசிலிங்கத்தால் ஏற்கப்பட்டது. இந் இசைக்கருவிகளை இந்தியாவில் இருந்து தருவிக்க திரு.திவகலால அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டபோது (இந்தியாவில் இருந்து பொருட்களை இலங்கைக்கு கொண்டு தரும் தொழில் செய்யும் திரு . வைத்தீஸ்வரன் அவர்கள் தேவையான அடையாளம் காணப்பட்ட இசைக்கருவிகளை இந்தியாவில் இருந்து கொண்டு வந்து தருவதற்கு ஒப்புக் கொண்ட தேடல்லாமல் அவற்றை நேரத்திற்கு தந்தும் உதவியிருந்தார்.) அவர் இந்தியாவில் கீழ்காணும் 17 இசைக்கருவிகட்கு ஏற்பாடு செய்யும் போது அவற்றின் உற்பத்தியாளர்களே இவற்றில் பல அருகிப் போய்விட்டன. என கூறிய விடயம் இங்கு தெரிவிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பறை | சேமக்கலம் | ஹார்மோனியம் |
| தவில் | மேல்பம்பை | புல்லாங்குழல் |
| தம்பட்டம் | கீழ்பம்பை | சலங்கை |
| கஞ்சிரா | உறுமி | |
| உடுக்கை | சங்கு | |
| சல்லரி | கொம்பு | |
| சப்ளாக்கட்டை | நாதஸ்வரம் | |

இவற்றை இந்தியாவில் இருந்து விமான மூலமாக தருவிக்க ஏற்பாடு செய்யப்பட்டபோது பறை மற்றும் தம்பட்டம் இசைக்கருவியை யாழ்ப்பாணத்தில் இருந்து பெற முடிவு செய்யப்பட்டது.

இசைக்கருவிகளினால் எழுப்பப்பட்ட கூட்டு இசைக்கருவிகள் இசைப்பவர்களின் கோலம் இசைக்கும் முறை இவற்றை நேர்த்தியான முறையில் தனித்துவம் பேணும் வகையில் ஒழுங்குபடுத்தி இசையணியை உருவாக்கிய பெருமை திருமதி.விஜயகுமாரி தவசிலிங்கத்திற்கே உரியது. அவரால் வடிவமைக்கப்பட்ட இவ்வணிக்கு 42 மாணவமணிகள் கீழ்காணும் பாடசாலைகளில் இருந்து தெரிவாகி பயிற்சி அளிக்கப்பட்டார்கள் இந்த பயிற்சியாளரில் இன மதம் பாராது தமிழ் மாணவர்களோடு முஸ்லிம் மாணவர்களும் கிறிஸ்தவ மாணவமணிகளும் இணைந்திருந்தது ஒரு சிறப்பாகும்.

1. தி/ இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
2. தி/ புனித சூசையப்பர் கல்லூரி
3. தி/ பெரும்தெரு விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்
4. தி/ புனித பிரான்சிஸ் சவேரியர் மகா வித்தியாலயம்
5. தி/ ஸ்ரீசண்முக இந்து மகளிர் கல்லூரி
6. தி/ புனித மரியாள் கல்லூரி
7. தி/ மெதடிஸ்த பெண்கள் கல்லூரி

1997 ம் ஆண்டு மார்கழி மாதம் வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவலர்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட இசை விழாவில் மூன்றாம் நாள் அன்று தமிழ் இன்னிய அணி முதன்முதலாக திருக்கோணமலையில் அரங்கேற்கப்பட்டது இந்நிகழ்வில் ஊர்வலமாக சென்ற இசையணியின் கூட்டிசை மட்டும் இன்றி அதை இசைத்து நடைபயின்ற மாணவர்களின் ஆடை அணிகலன் அலங்காரமும் மக்களால் மிகவும் பாராட்டப்பட்டது.

இப் பரீட்சார்த்த இன்னியம் மக்கள் வரவேற்று எல்லோரையும் மட்டற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்தியது இதன் விளைவாகவும் இதனை மற்றைய மாவட்டங்கட்கு விஸ்தரிக்க வடக்கு கிழக்கு மாகாணசபை நடவடிக்கைகளை முன்னெடுத்தது. ஒரு ஆரம்பமாக கிழக்கு மாகாணத்தில் உள்ள ஏழு கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளுக்கான இன்னியத்திற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்கருவிகள் வழங்க ப்பட்டன. அந்த பாடசாலை இசை ஆசிரியர் ஆசிரியைகட்கு கருத்தரங்கும் , செயலமர்வும் பட்டறை மூலம் திருமதி. விஜயகுமாரி தவசிலிங்கத்தினால் நெறிப்படுத்தி வழங்கப்பட்டது இதன் விளைவாக இந்த பாடசாலைகளிலும் இன்னியம் அணிகள் உருவாக்கம் பெற்றன. இந்த வளத்தைப் பெற்ற பாடசாலைகள் கீழ்வருமாறு :

1. திருக்கோணமலை இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

2. வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி

3. மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி

4. கல்குடா கதிரவெளி விக்கினேஸ்வரா வித்தியாலயம்

5. மட்டக்களப்பு ஆசனப்பந்தி இ.கி.ச பெண்கள் மகா வித்தியாலயம்

6. கல்முனை கணேச வித்தியாலயம் சேனைக்குடியிருப்பு

7. அக்கரைப்பற்று விநாயகபுரம் மகாவித்தியாலயம்

1998ம் ஆண்டு இடம்பெற்ற வடக்கு கிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் இலக்கிய விழாவின் போது இவ்வேழு இன்னிய அணிகளும் ஒன்றன்பின் ஒன்றாக அணிவகுத்து ஊர்வலமாக விழா அரங்கை சென்றடைந்த நிகழ்வு தமிழிசையின் பெருமைக்கு ஒரு முன்னோடி வைபவம் எனக்கொள்ளலாம் ஆனாலும் தமிழ் இன்னிய அணியை முன்னின்று உருவாக்கிய திருமதி விஜயகுமாரி தவசிலிங்கத்தின் ஆதங்கம் நோக்கற்பாலது தற்போது தமிழ்மொழி பாடசாலைகளிலும் இடம்பெறும் தமிழ் பண்பாட்டு நிகழ்வுகளில் கூட மேல்நாட்டு பாண்ட் வாத்தியக் குழுவே பயன்படுத்தப்படுகின்றது. தமிழ் இன்னிய அணி பயன்படுத்தப்படுவதில்லை. தமிழ் இன்னிய அணியை உருவாக்கி அறிமுகப்படுத்திய காலத்தில் இருந்த ஆர்வத்தை இன்று பாடசாலைகளில் காண முடிவதில்லை தோற்றுவிக்கப்பட்ட தமிழ் இன்னிய அணியை எவ்வாறாயினும் பாதுகாத்து எதிர்கால சந்ததியினரிடையே ஒப்படைக்க தமிழ் ஆர்வலர்கள் முன் வர வேண்டும் தமிழர் பண்பாட்டின் சின்னமாகவும் தனித்துவத்தை நிலை நிறுத்துவதாகவும் விளங்கும் தமிழ் இன்னிய அணியாகும் இந்த தமிழ் இன்னிய அணியில் சேர்ந்து கொள்ள விரும்பும் மாணவர்கட்கு தமிழ் இசைக்கருவிகளை பயன்படுத்தும் பயிற்சி கிடைக்கப் பெறாமை ஒரு காரணமாக காணப்படுகின்றது.

கல்வி திணைக்கள மட்டத்தில் இக்கருவிகளை பாவிக்கும் முறையில் பயிற்சியளிக்க வல்ல வளவாளர்களை உள்வாங்குவதன் மூலம் பாடசாலைகளில் தேவைக்கேற்ப பயிற்சிகளை அளிக்க முடியும் போதுமான பயிற்சிகள் வழங்கப்படுமாயின் பல மாணவர்கள் தமிழ் இன்னியத்தின்பால் ஈர்க்கப்படுவர் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது இனம் காணப்பட்ட பழமைவாய்ந்த இசைக்கருவிகளில் 17 கருவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு இன்னியம் கூட்டு இசை மட்டுமல்லாது அணியாக நடை பயில வேண்டியதும் ஒரு காரணமாகும் தேர்ந்தெடுக்கப்பட்ட 17 இசைக்கருவிகளில் ஒரு சிலவே யாழ்ப்பாணத்தில் பெறமுடியும் என்ற பொழுது ஏனையன இந்தியாவில் இருந்தே பெறப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட இசைக்கருவிகளின் இயல்பை கீழ்க்கண்டவாறு காணலாம்.

சங்கு :- இது ஒரு காற்றுக்கருவி இயற்கையாகவே கடலில் வாழும் ஒரு வகை பூச்சியின் கூடே சங்கு ஆகும் இதிகாசத்தில் கிருஸ்ணரின் கையில் பாஞ்சசன்னியம் என்னும் சங்கு இருந்ததாக கூறப்பட்டிருப்பது நோக்கத்தக்கது.

கொம்பு :- பித்தளையால் ஆன வளைந்த அமைப்பு கொண்டது கொம்பு இது பொதுவாக அணிகளின் முன்வரிசை கருவியாக இருக்கின்றது.

நாதஸ்வரம் :- மங்களகரமான நிகழ்வுகள் எல்லாம் நாதஸ்வர இசையுடன் நடைபெறுவது தமிழ் மரபு நாதஸ்வரம் இசைக்க மிகவும் கடினமான சீவாளியின் உள்ளே காற்று செலுத்தப்பட்டு தண்டில் உள்ள துளைகளை முறையாக மூடித்திறப்பதன் மூலம் வாசிக்க முடியும்.

குழல் :- மூங்கில் குழாயினால் துளையிட்டு உருவாக்கப்பட்ட கருவி பல நாடுகளில் இசைக்கருவியாக பாவனையில் உள்ளது ஆதியில் மூங்கில் காடுகளில் வண்டுகள் போட்ட துளைகளில் காற்று புகுந்து வெளியேறும் போது ஏற்பட்ட ஓசையே பின்பு புல்லாங்குழல் ஆக உருவாக்கம் பெற்றது.

தவில் :- தவில் ஒரு இருமுகத்தோற்கருவியாகும் இரு முகங்களில் ஒருமுகம் கையாலும் மறுமுகம் குச்சியாலும் அடித்து வாசிக்கப்படுகின்றது.

உடுக்கை :- இருமுக தோற்கருவியான இது இடையில் சுருங்கி இரு புறங்களிலும் விரிந்து காணப்படும் உடுக்கையின் சுருங்கிய இடையில் துணி மூலம் கையினால் பிடித்து வாசிக்க முடியும்.

பம்மை (மேல் பம்பை கீழ் பம்பை) :- இது ஒரு நான்கு முக தோற்கருவியாகும் உருளை வடிவ கருவிகள் இரண்டு ஒன்றன் மேல் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கும் பெரிய கருவிக்கு பெரிய கொட்டு என்றும் சிறிய கருவிக்கு சிறிய கொட்டு என்றும் பெயர் கொண்டவை .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுமி :- இது ஓர் இருமுக தோற்கருவியாகும் ஒரு முகத்தில் வளைந்த குச்சியினால் தேய்த்து ஒலி எழுப்புவர்.

தாளம் :- வெண்கலத்தால் வார்க்கப்பட்ட வட்டவடிவமான இருதட்டுகள் நடுவிலுள்ள துளையூடாக மணிக்கயிறு நுழைக்கப்பட்டு உட்புறப் முடிச்சு இடப்பட்டிருக்கும் .

சேமக்கலம் :- வெண்கலத்தால் வட்டவடிவில் உள்ள கருவியாகும் ஒரு கையில் இதனை பிடித்து மறு கையினால் கொட்டுவதன் மூலம் ஒலி எழுப்பப்படும் கருவியாகும்.

சலங்கை :- வெண்கலத்தால் மொட்டுக்கள் போல் செய்யப்பட்டு உள்ளே கற்கள் அல்லது சிறுஉலோக உருண்டைகள் இடப்பட்டு மணிகள் கெட்டியான நூலில் கோர்க்கப்படுகின்றன.

சிப்பிளாக்கட்டை :- மரப் பலகையின் அடியிலும் நுனியிலும் சலங்கை கட்டப்பட்டிருக்கும் இருக்கட்டைகளால் ஆனது இக்கருவி

பறை :- இந்த தோற்கருவி இருமுகமும் குச்சிகளால் அடித்து ஒலி எழுப்பப்படும் இருமுகவும் தோல் வாரால் நன்கு இறுக்கி கட்டப்பட்டிருக்கும்

ஹார்மோனியம் :- பெட்டி போல் தோற்றமளிக்கும் இக்கருவியில் கட்டைகளை அழுத்தி காற்றினை செலுத்துவதன் மூலம் ஒலி எழுப்பப்படும்.

கஞ்சிரா :- இது ஒரு தோற்கருவி ஒரு கையில் பிடித்து மறுகை விரல்களால் வாசிக்கப்படுவது வட்டவடிவில் இருக்கும் .

சல்லரி :- மிகவும் நேர்த்தியான இக்கருவி வாசிக்க கூடிய பயிற்சி தேவை.

**தகவல் - திருமதி.விஜயகுமாரி தவசிலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்திரையின் வரலாறு

தபால் சேவை மூலம் எடுத்துச் சொல்லப்படும் கடிதம், தபால் அட்டை, பொதி அல்லது ஏனைய தபால் பொருட்களில் அவற்றிற்குரிய கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருவதற்காக அவற்றில் ஒட்டப்படும் அல்லது பதிக்கப்படும் இலச்சினையே "முத்திரை" எனப்படும்.

முத்திரைகள் தனித்தனியாகப் பல வேறுபட்ட பெறுமதிகளில் அச்சடித்து வெளியிடப்படுகின்ற போதிலும், அவை கடித உறைகள், தபால் அட்டைகள், வான் கடிதங்கள் போன்றவற்றிலும் பதிக்கப்பட்டு அஞ்சல் அலுவலகக் கருமபீடங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.

தனியாரும், நிறுவனங்களும் பதிக்கும் இயந்திரங்கள் மூலமாகவும் (Postal Franking Machines) முத்திரைகளைத் தபால் பொருட்களில் பதிக்கலாம். இதற்கான இயந்திரத்தை ஒருவர் விலை கொடுத்து வாங்குவதற்கு முன்னர் அஞ்சல் அதிபதியின் அனுமதிப் பத்திரம் பெற வேண்டும். அத்தோடு இயந்திரத்தை உபயோகிக்க முன்னர் ஒரு குறித்த தொகைப் பணத்தை முற்பணமாக அஞ்சல் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டும். முத்திரை பதிக்கப்பட்ட அஞ்சல் பொருட்களைத் தபால் பெட்டிகளில் போடக்கூடாது. அவற்றை அஞ்சல் அலுவலகக் கருமபீடங்களில் கையளித்தல் வேண்டும்.


முத்திரையின் பாவனை அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னரும் செய்திப் போக்குவரத்து நிகழ்ந்தது என்பதற்குச் சரித்திரவாயிலான சான்றுகள் உள்ளன. ஆதி மனிதன் எழுதப் படிக்கத் தெரிந்தவனாக இருக்கவில்லை. எனவே நன்மையான அல்லது தீய செய்திகளை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திலுள்ள தமது இனத்தவர்களுக்கு அறிவிப்பதற்கு அவர்கள் பல யுக்திகளைக் கையாண்டனர். கூக்குரல் இடுதல், தீ வளர்த்துப் புகையைக் கிளப்பல், மிருகங்களின் தோலினால் செய்யப்பட்ட மேளம் போன்ற இசைக் கருவியில் ஒலி எழுப்புதல் என்பன அவற்றுள் பிரதானமானவையாகும்.

காலப்போக்கில் **"தபாலோடி"** (Runner) எனப்படும் சேவை அறிமுகமாயிற்று. தபால் பைகளை மனிதன் பொறுப்பெடுத்து ஓடிச்சென்று இன்னோரிடத்தில் கையளிப்பது இச்சேவையாகும். பல மைல் தூரத்திற்கு இவர்கள் ஓடவேண்டியிருந்தது. இதற்காக அடிமைகளே பயன்படுத்தப்பட்டனர். ஊன், உறக்கமின்றி, கொடிய மிருகங்கள் வசிக்கும் காட்டுப்பகுதியின் ஊடாக இவர்கள் நாட்கணக்காக ஓடி செய்திகளைப் பரிமாற்றஞ் செய்தனர். பலர் கொடிய காட்டு மிருகங்களுக்கும் பலியாயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மிகச் சிலரே இருந்தனர். எனவே தபால் சேவைக்காக அதிக கடிதங்கள் இருக்கவில்லை. அத்துடன் கடிதங்கள் எடுத்துச் செல்வதற்கான செலவீனங்களும் அதிகமாக இருந்தன. பல சந்தர்ப்பங்களில் இக்கட்டணங்கள் செலுத்தப்படவில்லை. ஏனெனில் கட்டணங்கள் முகவரியாளரிடமிருந்தே அறவிடப்பட்டன. எனவே கடிதங்களை எடுத்துச் செல்வதற்கான கட்டணங்களை ஒரு தேசம் முழுவதிலும் ஒருமுகப்படுத்தி அவற்றை முற்பணமாக பெற்றுக்கொள்ளும் ஒரு முறையே புகுத்துவதினால் அஞ்சல் கட்டணங்கள் குறைவதோடு அஞ்சல் சேவையில் அதிக கடிதங்களை கையாளும் வாய்ப்பு கிடைக்கப்பட்டதோடு அச்சேவையும் திறமையடையும் என்னும் உண்மையை முதலில் உணர்ந்தவர் **"சேர். றோலண்ட் ஹில்"** என்ற ஆங்கிலேயர் ஆவார். இவரின் வற்புறுத்தலின் பேரிலேயே முத்திரை அறிமுகமாயிற்று.

இன்று பல நாடுகளிடம் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வரும் முத்திரையானது 1840ம் ஆண்டு மே மாதம் 6ம் திகதியிலே உலகில் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. முதன் முதலில் முத்திரையை அறிமுகம் செய்த பெருமை மேலே விபரிக்கப்பட்ட பெரிய பிரித்தானியாவைச் சேர்ந்த **"சேர்.றோலண்ட் ஹில்"** (Sir. Roland Hill) என்ற ஆங்கிலேயரை சாரும்.

பிரித்தானிய அரசாங்கம் முத்திரையில் விக்டோரியா மகாராணியின் தலை உருவத்தை பொறிக்க வேண்டுமென தீர்மானித்தது. அதன்படி ஒரு செதுக்கல் விற்பன்னர் மூலம் மென்மையாக்கப்பட்ட உருக்கினால் செய்யப்பட்ட ஆயுதம் மூலம் மகாராணியின் தலை வடிவம் செதுக்கப்பட்டது. பின்னர் இந்த அமைப்பு பலமூட்டப்பட்டு பாரிய அமுக்கத்தின் உதவியால் ஒரு மென்மையான உருக்கு உருளையில் பல இடங்களில் ஒழுங்காக பதிக்கப்பட்டது. இந்த உருக்கு உருளையும் பலமூட்டப்பட்டு மை பூசப்பட்டு அதிலுள்ள மகாராணியின் தலைவடிவங்கள் கடிதாசித் துண்டுகளில் பதிக்கப்பட்டன. இப்படித்தான் முதல் முத்திரை பிறந்தது.

முதல் முத்திரை **"பென்னி பிளாக்"** (Penny Blacks) என அழைக்கப்படுகிறது. ஏனெனில் அது ஒரு பென்னி பெறுமதி கொண்டதாக கறுப்பு நிறத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இலங்கையில் முதன்முதலில் வெளியிடப்பட்ட முத்திரையில் விக்டோரியா மகாராணியின் தலை உருவமே பொறிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதன் பெறுமதி **06 பென்ஸ்** ஆக இருந்தது. இம்முத்திரை 1857ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் திகதி வெளியிடப்பட்டது. 1857 முதல் 1872 வரை இலங்கையில் சிலிங், பென்ஸ் பெறுமதிகளைக் கொண்ட முத்திரைகளே பாவனையிலிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே விபரிக்கப்பட்ட ஒரு பென்னி, ஆறு பென்ஸ் பெறுமதி கொண்ட முத்திரைகளுக்கு துளைகள் இடப்படாத காரணத்தினால் அவை கத்தரிக்கோலின் உதவியால் ஒவ்வொன்றாக வெட்டியெடுக்கப்பட்டன. இதற்கான கால விரையத்தை குறைக்கும் பொருட்டு காலப்போக்கில் முத்திரைகளுக்கிடையே துளைகள் இடப்பட்டன. இதனால் முத்திரைகள் சேதமடைவதிலிருந்து தப்பின. முத்திரைகளை அஞ்சல் பொருட்களிலும், ஆவணங்களிலும் ஒட்டக் கூடியதாக அவற்றின் பின்பக்கத்தில் பசை பூசப்பட்டு அமைக்கப்படுகின்றன.

இலங்கை நாணயமான ரூபா, சதம் எனும் பெறுமதிகளைக் கொண்ட முத்திரைகள் 1872ம் ஆண்டில் வெளிவந்தன. 1949ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதியன்று சிங்கள, தமிழ் எழுத்துக்களை கொண்டதும், பிரித்தானிய அரச சின்னம் அற்றதுமான முத்திரை இலங்கையில் வெளியிடப்பட்டது. இலங்கையில் முதல் முத்திரை தோன்றிய 1857ம் ஆண்டு முதல் இன்று வரை பல ஆயிரம் முத்திரைகள் வெளியிடப்பட்டன.

## முத்திரைகளின் வகைகள்

முத்திரைகளை தபால் முத்திரைகள். இறைவரி முத்திரைகள் என இரு வகைக்குள் அடக்கலாம். இலங்கையில், 10 சதம் முதல் 100 ரூபா வரையிலான முத்திரைகள் தபால், இறைவரி ஆகிய இரு தேவைகளுக்கும் உபயோகப்படுத்தக் கூடியவை. ஆனால் ரூபா 500, ரூபா 1,000 பெறுமதியான முத்திரைகளை இறைவரித் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தலாம். இவற்றை தபால் பொருட்களில் ஒட்டக் கூடாது. தபால் முத்திரைகள் மேலும் இரு வகையாக பிரிக்கப்படுகின்றன. அவையாவன


1. நிரந்தர முத்திரைகள்
2. ஞாபகார்த்த முத்திரைகள்

நிரந்தர முத்திரைகள் எக்காலத்திலும் பாவிக்கக்கூடியன. ஏதாவதொரு முத்திரையை அரசாங்கம் செல்லுபடியாகாமல் செய்தாலன்றி அவற்றின் உபயோகத்தை தடுக்க முடியாது. இவை மீண்டும் மீண்டும் அச்சிடப்பட்டு பாவனைக்கு விடப்படுகின்றன.

ஞாபகார்த்த முத்திரைகள் முடிசூட்டு விழாக்கள், நூற்றாண்டு தின கொண்டாட்டங்கள், பெரியார்களின் நினைவு தினங்கள், சமய காலாசார விழாக்கள், பண்டிகைகள் என்பவற்றை நிலனவு கூறும் வகையில் வெளியிடப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட தொகையில் அச்சிடப்படும் இவ்வகை முத்திரைகள் விற்பனை செய்து முடிவடைந்த பின்னர் மீண்டும் அச்சிடப்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாட்டில் வைகாசி விசாகம் (வெசாக்), நந்தார், மகாபொல, கம்உதாவ, தேசிய வீரர் தினம் ஆகியவற்றை நினைவு கூறும் முகமாக வருடந்தோறும் ஞாபகார்த்த முத்திரைகள் வெளியிடப்படுகின்றன.

## முத்திரை சேகரித்தல்

முத்திரையை பற்றி பேசும் போது முத்திரை சேகரித்தல் பற்றி நாம் எதுவும் சொல்லாமல் விட முடியாது. முத்திரை சேகரித்தலென்பது ஒரு சிறப்பான பொழுதுபோக்காகும். உலகின் பல பாகங்களிலும் உள்ளவர்கள் இப் பொழுதுபோக்கை ஆர்வத்துடன் மேற்கொள்கின்றனர். இப் பொழுதுபோக்கினை பொழுதுபோக்குகளின் ராஜா எனவும் அழைப்பர்.

முத்திரை சேகரித்தல் மூலம் அறிவு வளரச்சி, பொருளாதார முக்கியத்துவம் என்பன ஏற்படுகின்றன. சேகரிக்கப்படும் முத்திரைகள் காலம் செல்லச் செல்ல பெறுமதி கூடுகின்றன. இன்று பத்து சதத்திற்கு வாங்கப்படும் முத்திரையானது இன்னும் பல வருடங்களின் பின்னர் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியடையலாம்.

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள பௌத்த இளைஞர் சங்கத்தின் கட்டிடத்தின் பின்னனியில் முத்திரை சேகரிப்பின் ரகசியமொன்று புதைந்துள்ளது. ஆம், சேர். ஏர்னெஸ்ட் த சில்வா என்ற ஒரு முத்திரை சேகரிப்பாளரின் அன்பளிப்பாக கொடுக்கப்பட்ட ஒரு பழைய முத்திரையே விற்றே அக்கட்டிடம் கட்டப்பட்டது என்பதே அந்த ரகசியமாகும்.

சேகரிக்கப்பட்ட முத்திரைகளை எவ்வாறு விற்பனை செய்யலாமென ஆராய் வோமானால் பத்திரிகைகள் மூலம் விளம்பரம் செய்து விற்பனை செய்தல் சிறப்பானதென காணலாம்.

1859ம் ஆண்டில் எமது நாடாகிய இலங்கை தீவில் வெளியிடப்பட்ட நான்கு பென்ஸ் பெறுமதியான முத்திரையின் இன்றைய பெறுமதி என்ன தெரியுமா? இன்றைய காலகட்டத்தில் அதன் பெறுமதியை சரியாக கூறமுடியாது.

கொழும்பு அஞ்சல் அலுவலக தலைமையகத்தில் முத்திரை வெளியிட்டு பணியகம் எனும் பிரிவு செயற்பட்டு வருகிறது. அங்கு பழைய, புதிய முத்திரைகளை பெற்றுக்கொள்ளலாம். முத்திரை வெளியீட்டு பணியகத்தில் தொடர்ந்து முத்திரைகள் வெளியிடப்பட்டு வருகிறது. அவற்றில் சில உதாரணங்களை முன்வைக்கலாம். முத்திரை வெளியீட்டு பணியகத்தில் 1997-01-15 இல் சுவாமி விவேகானந்தர் இலங்கை விஜயம், 22-02-2012 இல் இலங்கை சாரணியம் 100 ஆண்டுகள் நிறைவு முத்திரை வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திரை வெளியீட்டு பணியகத்தில் (PHILATELICBUREAU) முத்திரை சேகரிக்க விரும்புபவர்கள் தங்களை பதிவு செய்வதன் மூலம் புதிய வெளியீட்டு முத்திரைகள் தபால் மூலம் உங்கள் முகவரிக்கே பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பப்படிவங்களை அருகிலுள்ள அஞ்சலகத்தில் பெற்று அதற்குரிய கட்டணத்தை செலுத்துவதன் மூலம் பதிவு செய்து கொள்ளலாம். மாணவர்களாகிய நீங்கள் முத்திரை சேகரிப்பில் ஈடுபடுவதன் மூலம் நல்ல அறிவுகளையும் அதற்குரிய பலன்களையும் பெற்றுக்கொள்ளலாம் இது ஒரு பொழுது போக்காகும்.

திருக்கோணமலை இராமகிருஸ்ண சங்க இந்துக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 125 ஆண்டுகள் நிறைவடைவதை சிறப்பிக்கும் முகமாக 01-06-2022 ரூபா 25/- பெறுமதியான முத்திரை வெளியிடப்படுகிறது.

தொகுப்பு
நல்லதம்பி குமணன்
பழைய மாணவன்
தி/ இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இ.க
0779007314



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamblegam

என் சொந்த இடம் திருக்கோணமலை என்ற போதிலும் மருத்துவக் கற்கை நெறிக்காக நீண்டகாலம் யாழ்ப்பாணத்திலும், மிகக் குறுகியகாலம் மருத்துவப் பயிற்சி நெறிக்காக மட்டக்களப்பிலும் வாழும் வாய்ப்பு வாய்த்திருந்தது. எனக்கு இந்த மூன்று இடங்களின் இடப்பெயர் மீதும் அதிக கவனம் ஈர்க்கக் காரணம் ஒன்றிருந்தது. அது அவ்விடப் பெயர்களின் ஆங்கில வடிவம் கொண்டிருந்த மேலாண்மை தொடர்பானது. உதாரணமாக திருக்கோணமலையினை Thirukonamalai என்று பயன்படுத்தாமல் Trincomalee என்றும், யாழ்ப்பாணத்தினை Yalpanam என்று பயன்படுத்தாமல் Jaffna என்றும், மட்டக்களப்பினை Mattakalappu என்று பயன்படுத்தாமல் Batticaloa என்றும் பயன்படுத்தும் முறை தொடர்பான தேடலே இப்பெயர்கள் மீது ஆர்வம் ஏற்படக் காரணமாக இருந்தது.

காலனித்துவ ஆட்சியாளர்களின் இடப்பெயர் உச்சரிப்பில் இருந்த இடர்பாடுகளால் அவர்கள் இவ்விடங்களை Trincomalee, Jaffna, Batticaloa என்று பயன்படுத்தினார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அவ்வாறே காலனித்துவக் காலத்தில் வாழ்ந்த சுதேச மக்களில் பலரும் அரசதேவைகளின் பொருட்டு அவ்வாறே பயன்படுத்தி இருப்பார்கள் என்பதும் புரிந்து கொள்ளக் கூடியதொன்றே. எனினும் இன்றும் மனதினை உருட்டிக் கொண்டிருக்கும் ஒரு கேள்வி என்னவென்றால் காலனித்துவ ஆட்சியாளர்களின் கடைசியான ஆதிக்க சக்தியான ஆங்கிலேயரும் இந்நாட்டினை விட்டு வெளியேறிய பின்னர் இம் மூன்று மாவட்டங்களையும் பெரும்பான்மையாக பிரதிநிதித்துவப்படுத்திய மக்கள் தமிழ் மக்கள். இவர்கள் நாடு சுதந்திரம் அடைந்ததின் பின்னால் ஏலவே மாற்றப்பட்டிருந்த தங்களது பிராந்தியங்களின் பெயரினை மீண்டும் வரலாற்றுடன் தொடர்புடைய புராதானமான பெயர்களான Thirukonamalai, Yalpanam, Mattakalappu என்பனவற்றை மீளப்பயன்படுத்த ஏதேனும் முயற்சிகள் மேற்கொண்டார்களா? என்பதே இன்றுவரை என்முன் விடைகாண முடியாத கேள்வியாக தொக்கி நிற்கிறது.

Trincomalee, Jaffna, Batticaloa போன்றதோர் பெயர் மாற்றம் தம்பலகாமத்திற்கும் நிகழ்ந்திருக்கிறது. காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இவ்வூரின் பெயர் Tamblegam என்றே அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. அதிஷ்டவசமாக Tamblegam என்ற பெயர் மீது தம்பலகாமவாசிகள் அதிக ஆர்வம் காட்டவில்லை போல் உள்ளது. காலனித்துவ ஆட்சிக்காலத்தில் உருவான இலக்கியங்கள், ஆவணங்கள் என்பன இவ்வூரினை தம்பை நகர், தம்பையூர், தம்பலகாமப் பற்று, தம்பலகாம தேசம், தம்பலகாமம், தம்பலகமம் என்று பதிவுசெய்கிற அதேவேளை காலனித்துவ ஆட்சிக்காலத்தின் பின்னரும் இம்மக்களிடையே தம்பலகாமம், தம்பலகமம் போன்ற பெயர்களே நிலைத்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலனித்துவ ஆட்சிக்காலத்தில் தம்பலகாமத்தின் முக்கியத்துவத்தினை அறிய Thampalakamam என்று தேடிச் சலித்துப்போயிருந்த வேளைதான் அப்பாவிடம் இருந்து ஒரு முக்கியமான தகவல் கிடைத்தது. பாலம்போட்டாற்றிற்கு அருகில் Tamblegam என்று தம்பலகாமத்தின் பெயரினை பிழையாக எழுதிய கல் ஒன்று இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்ட செய்தியே அது. அக்காலப்பகுதியில் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகமாக இருந்ததால் பின்னர் ஆவணப்படுத்தலாம் என்று கவனக்குறைவாக இருந்துவிட்டேன். பின்னொருநாளில் ஆர்வத்துடன் புகைப்படக்கருவியுடன் குறித்த இடத்திற்குப் போனபோதுதான் மிகப்பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அந்தக் குறித்த எல்லைக்கல்லில் இருந்த எழுத்துக்கள் யாவும் சீமேந்தினால் பூசி மறைக்கப்பட்டிருந்தது. இன்றுவரை அக்கல்லில் இருந்த எழுத்துக்களை உறுதிப்படுத்த முடியவில்லை என்பது மிகப்பெரிய வருத்தமே. இருந்தும்; Tamblegam என்று தம்பலகாமத்தின் பெயரினை எழுதும் வழக்கம் ஏதும் இருந்திருக்குமா என்ற தேடலுக்கு இச்சம்பவம் வழிவகுத்தது. இதன்மூலமே காலனித்துவ ஆட்சிக்காலத்து தம்பலகாமம் தொடர்பான பல தகவல்களைத் திரட்ட முடிந்தது.

இன்றைய நிலையில் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் தம்பலகாமம் கொண்டிருந்த சிறப்பிடங்களைப் தேட வேண்டுமாக இருந்தால் Tamblegam Oyster / Pearl, Tamblegam Lake / Bay, Tamblegam Hindoo Pagoda, Tamblegam Map என்று தேடினாலேயே அவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இவை ஒவ்வொன்றும் இன்றும் இவ்வூரின் பெருமைகளை நமக்கு உணர்த்துவதாக அமைந்திருப்பதனால் அவற்றினை சற்று விரிவாகப் பார்ப்பது அவசியமாகிறது.

## Tamblegam Map (1793)

தம்பலகாமத்தின் வரைபடம் ஒல்லாந்தர் காலத்தில் 1793 ஆம் ஆண்டு Struys (Surveyor) and Fornbauer (Engineer) ஆகியோரால் வரையப்பட்டிருக்கிறது. எனினும் அவ்வரைபு இதுவரை எமது பார்வைக்குக் கிட்டவில்லை. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் விவசாயத்தினை மேம்படுத்தி அதனூடாக வரும் வருவாயினை அதிகரிக்கும் நோக்குடன் கந்தளாய், வெண்டரசன் ஆகிய குளங்களினைப் புணரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதன் ஒரு பகுதியாகவே தம்பலகாமத்தின் வரைபடம் வரையப்பட்டிருக்கிறது. இங்கு குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் வரைபடம் வரையப்பட்ட இடத்தின் பெயர் Map of Tamblegam எனக் குறிப்பிட்டிருக்கிறது. மேற்கூறிய Map of Tamblegam தேடிக் கண்டுபிடிக்கப்படுமாயின் அது தம்பலகாமம் வரலாற்று ஆவணங்களில் முக்கிய இடத்தினைப் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A pen and black ink drawing (1824) Village of Tamblegam District of Trincomalee.

14.8 cm உயரமும் 21.8 cm அகலமும் உள்ள சித்திரம் ஒன்று பிரித்தானிய அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றது. காட்டில் வேட்டையாடிய பின்னர் அதனை சமையல்செய்வதை இச்சித்திரம் விபரிக்கிறது. தம்பலகாமத்திற்கு அருகில் இருக்கும் காடொன்றில் வைத்து வரையப்பட்டிருக்கும் இச் சித்திரம் ஒரு பெரிய மரத்தின் கீழ் வேலையாள் ஒருவர் சமையல் வேலைகளில் ஈடுபட அருகில் வேட்டைக்கு பயன்படுத்தப்படும் துப்பாக்கி முதலான பொருட்கள் காணப்படுவதனை பிரதிபலிக்கிறது. இச்சித்திரம் பிரித்தானிய அருங்காட்சியகத்தில் உள்ள ஆசியப் பகுதியில் 1997.1109.0.146 இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. 14.01.1824 ஆம் திகதியில் வரையப்பட்ட இச்சித்திரம் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள தம்பலகாமம் (Tamblegam) பிரதேசத்துக்கு உட்பட்ட ஒரு சிங்களக் கிராமத்தில் இச்சித்திரம் வரையப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒல்லாந்து ஆளுநர் Van Senden அவர்களின் தம்பலகாமப்பற்றுக்கான விஜயத்தின் போது அவர் 11.06.1786 அன்று கண்டி இராட்சியத்துக்கு மிக அருகில் இருந்த ஒரு சிறிய சிங்களக் குடியிருப்புக்கு தான் சென்றதை பதிவு செய்து இருக்கிறார். இந்த விஜயத்தின் போது அம்மக்களுடன் உரையாடிய அவர் அக்கிராம வாசிகள் தமிழர்கள் நரமாமிசம் உண்ணும் பழக்கம் உடையவர்கள் என்ற நம்பிக்கை கொண்டிருந்ததாக ஆவணப்படுத்தி இருக்கிறார். மேற்கூறிய தகவல் 1786 ஆண்டு காலப்பகுதியில் தம்பலகாமப்பற்றின் கண்டி இராட்சியத்துக்கு அண்மித்த பகுதியில் ஒரு சிறிய சிங்களக் கிராமம் இருந்ததையும், தம்பலகாமத்தில் இருந்த தமிழ்க் குடிகளுடன் தொடர்புகள் எதனையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை என்பதனையும் அறியத்தருகிறது. 1786 இல் தம்பலகாமத்தின் கண்டி இராட்சிய எல்லைதனில் இருந்த சிங்களக் கிராமத்தின் தொடர்ச்சியினை ஆதாரப்படுத்துவதாக 1824 ஆண்டுக்குரிய இச்சித்திரம் அமைந்திருக்கின்றது குறிப்பிடத்தக்கது.

## Tamblegam Hindoo Pagoda (1786)

தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் காலனித்துவ ஆட்சியாளர்களின் பயணக்குறிப்புகளில் Tamblegam Pagoda என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்று நமக்குக் கிடைக்கும் Tamblegam Pagoda தொடர்பான பல்வேறு தகவல்களில் ஒல்லாந்து ஆளுநர் Van Senden அவர்களின் குறிப்பு அதிக முக்கியத்துவம் பெறுவதாக அமைகிறது. ஒல்லாந்து ஆளுநர் Van Senden அவர்கள் 07.06.1786 புதன்கிழமை அன்று Tamblegam Pagoda (தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம்) இற்கு விஜயம் செய்துள்ளார். அவர் பதிவு செய்திருக்கும் குறிப்பு இவ்வாலய மேலதிக ஆய்வுகளுக்கு அவசியமானவை என்ற வகையில் மிகுந்த முக்கியத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகிறது. ஆளுநரின் ஆலய தரிசனம் தொடர்பான தமிழ் மொழிபெயர்ப்பு இவ்வாறு அமைகிறது.

"கிழக்கில் இருந்து மேற்காக அமைக்கப்பட்டுள்ள தம்பலகாமத்தில் உள்ள புகழ் வாய்ந்த ஆலயத்திற்கு நான் மாலையில் சென்றேன். பிரதம பிராமணக் குருக்கள் இன்னும் சிலருடன் சேர்ந்து என்னை வரவேற்க வந்தார். அவர் எனக்கு சம்பிரதாய பூர்வமாக வழங்கப்படும் அன்பளிப்பான தேசிக்காயும் பூக்களும் வழங்கினார். நான் அவரிடம் கீர்த்தி மிக்க இரண்டு விக்கிரங்களையும் காட்டுமாறு கேட்டேன். அதில் ஒன்று போர்த்துக்கீசர் வருகையின் போது ஆயிரங்கால் மண்டபக் கோயிலில் (திருக்கோணேச்சரம்) இருந்து பாதுகாப்பாக எடுத்து வரப்பட்டதாகும். பல சிரமங்களின் பின்னர் என் வேண்டுதலின் பின்னர் என் பரிசுப் பொருட்களைப் பெறச் சம்மதித்தார். என்னை ஆலயமண்டபத்திற்கு அப்பால் நெருங்க அனுமதிக்கவில்லை. ஆலயத்தில் நன்றாக ஒளி அலங்காரம் செய்யப்பட்டிருந்ததால் எனது தொலைநோக்கியின் உதவியுடன் ஒருவகைப் பலிபீடத்தில் அமர்ந்தவாறு காட்சியளிக்கும் விக்கிரகங்களை ஒருவாறு பார்க்க முடிந்தது. அவை துணியினால் போர்க்கப்பட்டு முகம் மாத்திரம் பார்க்கக் கூடியதாக இருந்தது. முற்பக்கத்தில் கோணேசரைப் போன்றும் அவருடைய இடப்பக்கத்தில் சாய்வான நிலையில் ஈஸ்வரி அம்மன் அமர்ந்திருந்தார்.என மிக விரிவாக ஆலய புராதன விக்கிரகங்கள் தொடர்பான அவரது வர்ணனை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்குச் சுமார் 230 வருடங்களுக்கு முன்னர் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய புராதன விக்கிரங்கள் தொடர்பாகக் கிடைக்கும் நம்பகமான தகவல் இது என்ற வகையில் இவ்வாவணம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

## Tamblegam Oyster / Pearl

தம்பலகாமம் குடாக்கடலை பாற்கடல் என்றழைக்கும் வழக்கம் முன்னர் இருந்திருக்கிறது. பிரித்தானியர் காலத்தில் முத்துக்குளிக்கும் பிரதேசமாக இருந்த இக்கடல் பிரித்தானியருக்கு அதிக வருவாயினை ஈட்டித் தந்திருக்கிறது. தம்பலகாம குடாவினைச் சுற்றி உள்ள சிப்பித் திடல் , முத்துநகர் , கப்பல்துறை என்றிருக்கும் ஊர்ப்பெயர்களும் அவ்வூர் கடற்கரைகளில் குவிந்து கிடக்கும் சிப்பிகளுமே இன்று முத்துக்குளிப்பு நடந்தமைக்கு ஆதாரமாக எஞ்சி இருக்கின்றன. முறையற்ற விதத்தில் முத்துக்குளிப்பு இடம்பெற்றதனால் தம்பலகாம குடாக்கடலில் இருந்த முத்துவளம் இன்று அற்றுப்போயுள்ளது. தம்பலகாம குடாக்கடலில் கிடைக்கும் முத்துக்கள் தொடர்பான விரிவான அறிக்கையொன்றினை திரு. E.H.KELAART (Trincomalee , 3rd October,1857.) TAMBLEGAM PEARL OYSTER FISHERY என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கிறார். இந்த ஆவணம் இணையவெளியில் இலவசமாகப் பார்க்கக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பலகாமம் குடாக்கடலில் கிடைக்கும் சிப்பிகள் பற்றிய முழுமையான விபரிப்பு அவை பூரணமாக முதிர்வடைவதற்கு முன்பாக எடுக்கப்படுகின்றமை தொடர்பான விபரம் மற்றும் இதனால் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பு என்பன பற்றி ஆராய்கிறது இந்த ஆவணம். இவற்றோடு தம்பலகாமம் குடாக்கடலில் முத்துக்குளிப்பு மூலம் கிடைக்கும் வருவாயினைப் பெருக்குவது தொடர்பான ஆலோசனைகளையும் இவ்வறிக்கை தருகிறது. இவ்வாவணம் தயாரிக்கப்பட்ட போது தம்பலகாமத்தின் தலைமைக்காரராக இருந்தவரை Tamblegam Wanniah / Modaliar என்றழைக்கிறது. முத்து உற்பத்தி சிறப்புற அமைவதில் தம்பலகாம வன்னிபத்தின் மேற்பார்வை அவசியம் என்பதனையும் அது வலியுறுத்துகிறது.

## Tamblegam bay

தம்பலகாமம் குடாக்கடல் பண்டைய துறைமுகங்களில் ஒன்றாக இருந்திருக்க வேண்டும். எனினும் அது துறைமுகமாகச் செயற்பட்டது தொடர்பில் ஐரோப்பியர் காலத்து பதிவுகளே அதிகளவில் கிடைக்கின்றன. தம்பலகாமம் குடாக்கடலின் கப்பல்துறைக் கிராமப்பகுதியில் முன்னர் துறைமுகம் ஒன்று இருந்ததற்கான அழிபாடுகள் காணக் கிடைத்ததாக 1970 களில் கப்பல்துறைக்காட்டில் வேட்டையாடச் சென்றவர்கள் மூலமாக அறியக்கூடியதாக இருக்கிறது. சிப்பித்திடல் , முள்ளியடிப் பகுதிகள் எதிர்காலத்தில் களஆய்வு செய்யப்படுமாக இருந்தால் மேலும் பல விடயங்கள் வெளிவரக்கூடும்.

திருக்கோணமலை மாவட்ட ஒல்லாந்து ஆளுநர் Jacques Fabrice van Senden அவர்களின் திருக்கோணமலை மாவட்ட சுற்றுப்பயண அறிக்கையில் (15.05.1786 - 21.06.1786) முள்ளியடி துறை பற்றிக் குறிப்பிடப்படுகிறது. ஆளுநரின் தம்பலகாமப்பற்று விஜயத்தின் போது மூதூரில் இருந்து கடல்வழியாக வந்த அவரை தம்பலகாமப்பற்று வன்னிபம் கனகதண்டிகை கனகரட்ணம் முதலியார் 03.06.1786 அன்று முள்ளியடியில் வைத்து வரவேற்றதாக குறிப்பிருக்கிறது. எனவே அக்காலப்பகுதியில் முள்ளியடி ஒரு துறையாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதனைப் புரிந்துகொள்ளலாம். அதுபோலவே 1804 இல் கண்டிப் படையெடுப்பில் தோல்வியைத் தழுவிய பிரித்தானியப் படையணி நூற்று அறுபதிற்கும் (160) மேற்பட்ட படைவீரர்களை இழந்து பின்வாங்கி வந்தபோது தம்பலகாமத்தில் இருந்து திருக்கோணமலை நகரை அடைய இந்தத் துறையினைப் பயன்படுத்தியதை அவர்களது ஆவணங்கள் உறுதிப்படுத்துகிறது.

பிரித்தானியரால் இலங்கையின் கரையோரப்பகுதிகள் கைப்பற்றப்பட்டமையால் இலங்கையின் மத்திய பகுதியில் விசாலமாகப் பரந்திருந்த கண்டி இராட்சியம் தனது வெளிநாட்டு அரசியல் மற்றும் வர்த்தகத் தொடர்புகளுக்கு மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டது. இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியாவிடம் இருந்து கரையோர துறைமுகங்களைப் பெற்றுக்கொள்வதில் அதிக அக்கறை கொண்டிருந்தது.

இதன் ஒரு பகுதியாக 1799 ஆண்டு Tamblegam bay உள்ளிட்ட திருக்கோணமலைத் துறைமுகப் பகுதிகளைப் பெற்றுக்கொள்ள கண்டி அரசு முயற்சித்தது. எனினும் இந்தக் கோரிக்கையை பிரித்தானியா மறுத்துவிட்டது. முயற்சியைக் கைவிடாத கண்டி அரசு 1812 இல் தாம் பிணைக்கைதியாக கைப்பற்றி வைத்திருந்த Major Davie என்பவரை விடுவிப்பதற்கு துறைமுகப்பகுதிகள் தம்மிடம் ஒப்படைக்கபடவேண்டும் என நிபந்தனை விதித்தது. இதற்கும் பிரித்தானியா இணக்கம் தெரிவிக்கவில்லை. இதனால் கண்டி அரசால் Tamblegam bay உள்ளிட்ட திருகோணமலைத் துறைமுகப் பகுதிகளை மீளப்பெறமுடியாமல் போனது. பிரித்தானியர் காலத்தில் Tamblegam bay (தம்பலகாமம் குடாக்கடல்) கொண்டிருந்த முக்கியத்துவத்தினைப் புரிந்துகொள்ள மேலுள்ள சம்பவம் மிக உறுதுணையாக இருக்கிறது.

## வீரக்குட்டிக் கங்காணத்தின் நியமன ஆவணம்

TRINCOMALEE DISTRICT

I, Robert Boyed commissioner of revenue by virtue of powers to that effect granted to me by his Excellency the governor do hereby nominate and appoint Veerakuddy Adappan Vallaippan to be kali kankanam of Tamblegam until further orders. All inferior Headman and others under you in the above situation are hereby ordered and directed to acknowledge you the said veerakuddy Adappan Kaliappan as kali kankanam of Tamblegam.

Given under my hand at Colombo this 27th day of October 1813.
Sgd. Robert Boyd.Governor's office

பிரித்தானிய ஆளுநர் அலுவலகத்தினால் 1813.10.27 ஆம் திகதி திரு. வீரக்குட்டி அடப்பன் அவர்கள் Tamblegam இன் காளிக் கங்காணமாக நியமிக்கப்பட்டதை இக்கடிதம் ஆவணப்படுத்தி இருக்கிறது. தம்பலமாமம் ஆதிகோணநாயகர் ஆலயத் தொழும்பு முறையில் சிற்றரரசர்களாக இருந்த வன்னிபங்கள் தலைமை வகித்த காலம் நிறைவடைந்த பின்னர் கங்காணம் என்ற தொழும்பு முறை புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது போல் தெரிகிறது. ஏனெனில் திருக்கோணேச்சர ஆலய தொழும்பு முறை பற்றி விரிவான விபரங்களைத் தருகின்ற கோணேசர்கல்வெட்டு கங்காணம் என்ற தொழும்பு முறை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. மேற்படி வீரக்குட்டிக் கங்காணத்தின் நியமன ஆவணத்துக்கு அமைய ஏலவே தம்பலகாமம் ஆதிகோணேநாயகர் ஆலயத்தில் அடப்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் தொழும்பு முறையினை மேற்கொண்டு வந்தவர் Tamblegam என்று ஆங்கிலேயரால் அழைக்கப்பட்ட தம்பலகாமத்தின் காளிக்கங்காணமாக நியமிக்கப்பட்டதுடன் அவருக்கு கீழுள்ள அனைத்து அடுத்த நிலைத் தலைவர்களும், ஏனைய பணியாளர்களும் இந்த நியமனத்துக்கு அமைய செயற்படவேண்டுமென கட்டளையிடப்பட்டிருப்பதையும் காணமுடிகிறது.

இதுவரை நாம் பார்த்து வந்த ஆவணங்கள் ஐரோப்பியர் காலத்தில் தம்பலகாமம் எனும் ஊர் Tamblegam என அவர்களால் அழைக்கப்பட்டது என்பதனை ஆதாரப் படுத்துவதோடு தம்பலகாமம் தொடர்பான மிக முக்கியமான பல வரலாற்றுத் தகவல்களையும் தன்னகத்தே கொண்டவையாக இருக்கின்றன. Tamblegam தொடர்பில் விரிவான தேடல்கள் எதிர்காலத்தில் செய்யப்படுமாக இருந்தால் இதுவரை எம்மால் அறிந்து கொள்ள முடியாதிருந்த தம்பலகாமம் வரலாற்றின் இருண்டை பக்கங்கள் பலவற்றிற்கு வெளிச்சம் கிடைக்கும் என்பது நம்பிக்கை தரும் உண்மையாகும்.

**Dr.த.ஜீவராஜ்**
**(MBBS - Jaffna) (MCGP – Colombo)**
**www.geevanathy.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமை காப்போம்

மரம் ஒரு வரம் பூமியில் மூன்றில் ஒரு பங்கு காடுகள் இருக்க வேண்டும் என்பது இயற்கையின் விதி. இவ்வாறு இருந்தால் நமக்கு கிடைக்கும் பயன்கள் அதிகம். மரங்கள் மழையைத் தருவதுடன் நிலச்சரிவைக் கட்டுப்படுத்துகின்றன. கரியமில வாயுவை நிர்ணயம் செய்யும் தன்மை மரங்களுக்கு தான் உண்டு. புவியின் தட்ப வெப்பத்தன்மையை நிர்ணயிக்கும் காரணிகளாக மரங்கள் உள்ளன. இவை பச்சைக் கம்பளியாக பரந்து விரிந்து நமது பூமியை பசுமையாக வைத்திருக்கின்றன.

மரங்களால் சுற்றுச்சூழல் வளமாகும் , மனித வாழ்வு நலமாகும். மரம் வளர்க்க மழை பொழிய மழை பொழிய வறுமை ஒழியும் ஆளுக்கொரு மரம் நடுவோம். மரம் மனிதனின் மூன்றாவது கரம். இரு கைகளைக் கடந்து இயற்கையை காக்கும் மூன்றாவது கரமாக உள்ளது மரம். சுற்றுச்சூழலை சுகமாய் காப்பதில் மரங்கள் முதன்மை காரணிகளாக விளங்குகின்றன. ஆதி மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்ததால் இன்பமாக வாழ்ந்தான். நாகரீக வளர்ச்சி என்ற பெயரில் மரங்கள் இன்று அழிக்கப்பட்டு வருகின்றன. மரங்கள் இருக்கும் வரை சுற்றுச்சூழல் சுகமாக இருக்கும். மரங்கள் அழியத் தொடங்கும் போது மனித சமூதாயத்தின் அழிவும் தொடங்கி விடும். “காடழிந்தால் நாடழியும்” , “காட்டின் வளமே நாட்டின் வளம்” போன்ற பழமொழிகள் மரங்களின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன. மரங்கள் மண்ணில் மைந்தர்கள்.

மரங்கள் நம் தேசத்தின் தியாகிகள். தியாகிகள் இல்லையென்றால் நம் வாழ்வில் திருப்பங்கள் ஏது? மரங்கள் இல்லையென்றால் நம் வாழ்வில் மகிழ்ச்சி ஏது? நமது உடலும் உள்ளமும் உறுதி பெற நமக்காக தவம் செய்யும் முனிவர்கள் இந்த மரங்கள் தான்.

சங்ககால மன்னர்கள் இயற்கையை தமது வாழ்வோடு இணைத்துப் பார்த்தனர். அசோகச் சக்கரவர்த்தி மரங்களை நேசித்த மாமன்னர் என்றும் கூறலாம். வீதியோரங்களில் மரங்களை நட்டு பயணத்தை குளிர்மைபடுத்தினார்.

மனிதர்களாகிய நாம் எத்தனை மரங்களை நட்டு வைத்திருக்கிறோம்? என கேள்வி கேட்டால் அதற்கு பதில் என்னவாக இருக்கும் என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். ஆளுக்கொரு மரம் நடுவோம் என்ற வழக்கம் அன்று. “நமக்கு வெப்பம் அதிகரித்தால் கொளுத்தும் சூரியனை குறைசொல்லக் கூடாது” என்கிறது சீன பழமொழி. “ நிழலின் அருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயிலில் தான் தெரியும்" என்பது போல மரங்களின் முக்கியத்துவம் அவை இல்லாத போது தான் தெரியும்.

மரங்களின் முக்கியத்துவத்தை வளரும் சமுதாயமான மாணவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். பிறந்தநாளில் இனிப்புக்களை வழங்கி கொண்டாடி மகிழும் மாணவர்களிடையே ஒரு மரத்தையாவது நட ஊக்குவிக்க வேண்டும்.

மரம் நடுவது நல்ல செயல் இயற்கையின் அருமையை இன்னும் உணராமல் இருப்பது தான் தவறு. மரம் வளர்ந்து மழைகொழித்து பூமி மகிழ ஒற்றுமையாய் கைகோர்ப்போம். பாலைவனமாக மாறிக் கொண்டிருக்கும் நம் சுற்றாடலை நாம் அனைவரும் ஒன்றிணைந்து சோலைவனமாக மாற்றுவோம்.

நன்றி

**ரூ. கிரோஷன்**
**6B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையால் உயர்வு

கார்மேகம் பூத்தேடும் ; இனித்திடும் ஈழத்தமிழ் வாழும் ; பனிப்பகையின் உட்டனத்தில் இதயம் இழைப்பாறும் ; மாகடலின் முத்தான ஈழத்தில் வாழும் நாம் மேம்பட்ட எண்ணங்கள் மூலம் எம்மை வளப்படுத்த உண்மையாகிய உரத்தை இட்டுத்தான் ஆகவேண்டும். இங்கு உண்மை எனப்படுவது யாதெனில் பிறருக்கு தீமையில்லாதபடி யாதொரு சொல்லையும் எப்போதும் சொல்லுதல் ஆகும். "பிறருக்கு தீங்கு விளைவிக்காது, நன்மை தரும் பொய்கள் கூட உண்மையாகவே கருதப்படும்" என்று வள்ளுவர் வரைந்தவை புனைந்துரையாகாது. உண்மை பேசுபவர்கள் பொதுவாக அறத்தின் தன்மையை உணர்ந்தவர்களாகவும் பேதமையுடன் பிறர் நலத்தை தம் சுயநலமாகக் கொள்வர் ; அவர்கள் நிலையானவர்கள் ; மறைந்தாலும் மானுடரின் உள்ளத்தில் வாழ்பவர்களாகவும் இருப்பர். அவர்களுக்கு இன்பத்தையும் அறத்தையும் பயப்பன உண்மைகளே!

நாம் எமது உள்ளத்திற்கு துரோகம் செய்யக்கூடாது. அவ்வாறு செய்வோமானால் நாம் எமது உள்ளத்தியாலேயே தண்டிக்கப்படுவோம். எமது மனமறிய நாம் பொய்த்திருப்பின் எமது மனமே எம்மை வருத்தும். இதை தான் வள்ளுவர் " தன்நெஞ் சறிய பொய்ப்பின் - பொய்த்தபின் தன்நெஞ்சே தன்னைச் சுடும்" என்றார். இது கலிகாலம் , மாந்தர்கள் தமது நிலையறியப் போராடும் ஒரு காலப்பகுதி ; இங்கு உண்மைக்கோ நன்மைக்கோ காலமில்லை என்பதும் கேள்விப்பட்ட விடயங்களே! உண்மையோ , நன்மையோ அவை வாழ்வதற்கு ஊனவரின் தூய மன நிலைகலன் போதுமானது. உடலின் மீது படியும் அழுக்குகள் நீரினால் நீக்கப்படும் ஆனால் உள்ளத்தில் படியும் அழுக்கானது உண்மையினாலேயே நீக்கப்படும். அதே போன்று சிரிப்பினும் பாக்கள் சிந்தும் கவிகளின் உண்மையை உணர்த்தும் படைப்புகளையும் நாம் மறந்து விடக்கூடாது.

உண்மை என்பது அனைவருக்கும் உரித்தானது. இந்த உண்மையில் தவறாது நிற்பவன் சாதனையாளனாகி வரலாற்றில் தன் பெயரை பொறிக்கிறான். மாறாக உண்மையிலிருந்து தவறுபவன் நாளை ஒரு குற்றவாளியாகின்றான். சமூகத்திலிருந்து தாழ்த்தப்படுகின்றான், தனக்குத் தானே தண்டனை அளித்துக் கொள்கின்றான் , சிறுமையான எண்ணங்களால் நிரப்பப்படுகின்றான் , மன வருத்தத்திற்கு ஆளாகின்றான். இத்தனை தீவினையால் சுட்டெரிக்கப்படுகின்றான். இவற்றையெல்லாம் தவிர்த்துக் கொள்ள நாம் அறக்கோலூன்றி உண்மையில் நிலையாக நிற்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலத்தினால் வென்றவர்களை விட அறத்தின் உண்மையால் வென்றவர்களே அதிகம் , உண்மை பேசுவதால் எமது எண்ணங்கள் மேம்படும். எமது மனம் தூய்மையையும் , நல்லெண்ணங்கள் ஈடேறும், சமூகத்தில் எமக்கு ஒரு நிலையான அந்தஸ்து கிடைக்கப்பெறும். இவ்வளவு நாளும் நாம் பல பொய்களை அள்ளித் தெளித்திருக்கலாம். இது பலரின் அறியாமையாலே நடைபெறுகின்றது. அவ்வாறாயின் நாம் அறப்பாதையிலிருந்து உண்மை விட்டுள்ள கிளைகளினூடாக அறப்பாதையில் நாம் எமது பயணத்தைத் தொடர முயல்வோம். “தவறு செய்பவன் தான் மனிதன், அதை திருத்த நினைப்பவன் மாமனிதன்” என்றெல்லாம் பொன் மொழிகளுண்டு அவற்றுக்கிணங்க எமது தவறுகளை உண்மையால் திருத்தி உயர்வடைந்து எட்டா உயரத்திலும் ஊனவர் உள்ளத்திலும் எமது பெயரை முத்திரையிடுவோம். உண்மையே என்றும் உயர்வளிக்கும்.

நன்றி

**சதீஸ்வரன் சரண்ஜன்**
**9C**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கான இணைய பாதுகாப்பு

80 , 90 களில் நாம் வளர்ந்த காலத்தில் இருந்த உலகத்தின் சூழ்நிலைகள் இப்பொழுது இருப்பது போல் இல்லை என்பது எல்லோரும் அறிந்ததே . முற்றிலும் மாறுபட்ட காலத்தில் நாமும் நம் குழந்தைகளும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். நாம் இன்று நிகழ் உலகம் மற்றும் இணைய உலகம் என்று இருவேறு உலகங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதற்கேற்ப நாம் இதுவரை சந்தித்திராத பல இடர்பாடுகளையும் சந்திக்க நேரிடுகிறது. இணைய உலகம் நேர்மறையான மற்றும் எதிர்மறையான தாக்கங்களை தருவதோடு இல்லாமல் அதன் துணையின்றி யாரும் இருக்க இயலாத காலத்தை உருவாக்கியுள்ளது.

கொரோனா காலத்தில் சகல நடவடிக்கைகளும் ஸ்தம்பித்து போய் இருந்த காலக்கட்டிடத்தில் , பொழுதுபோக்கு சம்மந்தப்பட்ட பொருட்கள் முதல் உயிர் காக்கும் மருந்துகள் வரை வாங்குவதற்கு இணையம் இன்றிமையாத ஊடகமாக மாறியிருந்தது. அதற்கு கல்வித்துறையும் விலக்கல்ல. பாலர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இணையம் மூலமே வகுப்புகள் நடந்தன. அன்றாட தேவைகளுக்குக் கூட இணையத்தை சார்ந்து இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையே இனி தொடருவதோடு இதுவே வழமையாகும்.

இருந்தாலும் நம் குழந்தைகள் இணையத்தில் நேரத்தை செலவழிக்கும் போது நமக்கு கொஞ்சம் அச்சமாகத்தான் உள்ளது. சமூக ஊடகங்களின் பாவனை , கைபேசி பாவனை மற்றும் இணையவணிகம் என்பன அதிகரித்துள்ளதால், உலகம் முழுவதும் இணைய குற்றச்செயல்கள் அதிகரித்து வருகிறது. நுகர்வோரின் தனிப்பட்ட மற்றும் நிதித் தரவு எல்லா இடங்களிலும் உள்ளது , மேலும் மோசடிக்காரர்கள் அதை மீட்டெடுப்பதில் புத்திசாலித்தனமாக இருக்கிறார்கள். கணினிகள் மற்றும் மொபைல் சாதனங்கள் மற்றும் வங்கிக் கணக்குத் தரவுகள் அவற்றை இலக்காகக் கொண்ட தீம்பொருட்கள், Ransomware மற்றும் Phishing தாக்குதல்களால் குறிப்பாக பாதிக்கப்படக் கூடியவை.

இன்றைய தலைமுறையினர் இணையத்துடன் பிறந்து வளர்ந்தார்கள், அது அவர்களின் வாழ்க்கையின் ஒரு பகுதியாகும், ஆனால் அவர்கள் அதன் நன்மை தீமைகளை புரிந்துகொண்டுதான் பயன்படுத்துகிறார்கள் என்று அர்த்தமல்ல. எந்தெந்த பயன்பாடுகள் அவர்களுக்கு பொருத்தமானவை என்பதை அறிந்து தெளிவாக வரையறுத்து அவர்களுக்கு விளக்குவது அவசியம். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இணையத்தை நம்மை சுற்றியுள்ளவர்களும் நமது குழந்தைகளும் பாதுகாப்பான முறையில் இணைய சுகாதாரத்துடன் (Cyber hygeine) பயன்படுத்துவதை உறுதிசெய்வது எமது கடமை. பெற்றோர்கள் , ஆசிரியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் குழந்தைகளுக்கு என்ன நடந்தாலும், அவர்கள் உங்களிடம் வந்து பகிர்ந்து கொள்ளும் அளவிற்கு குழந்தைகளை பழக்கப்படுத்திக் கொள்ளுவது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது.

கடவுசொல்களின் பயன்பாடு கணனி உலகில் மிகவும் முக்கியமானது. எந்த ஒரு கடவுச்சொல்லையும் தன் குடும்பத்தினர் அல்லாது யாரிடமும் பகிரகூடாது. பலவீனமான கடவுச்சொற்கள் இலகுவாக ஊகிக்கப்பட அல்லது சில விநாடிகளில் சிதைக்கபட கூடியவை. அதனால் வலுவான மற்றும் தனித்துவமான கடவுச்சொற்களைப் பயன்படுத்துவதும் கடவுச்சொற்களை அடிக்கடி மாற்றி கொள்வதும் அதன் பாதுகாப்புக்கு வலு சேர்க்கும். வங்கி கணக்கு போன்ற முக்கிய கணக்குகளை அணுகும் போது இரண்டடுக்கு (2FA) கடவுச்சொற்களை கட்டாயம் பயன்படுத்துங்கள். நீங்கள் பல்வேறு தனித்துவமான கடவுச்சொற்களை ஞாபகம் வைத்திருக்க சிரமப்படுபவராயின் Dashlane, LastPass, KeePass போன்ற கடவுச்சொல் மேலாண்மை பயன்பாடுகளை உபயோகிக்கலாம். ஒவ்வொரு உள்நுழைவுக்கும் வலுவான மற்றும் தனித்துவமான கடவுச்சொற்களை உருவாக்க பயனர்களுக்கு உதவுவதன் மூலமும், சிறந்த பாதுகாப்பு நடைமுறைகளைச் செயல்படுத்துவதன் மூலமும் , கடவுச்சொல் மேலாண்மை பயன்பாடுகள் கடவுசொல்களின் பாதுகாப்பை பெரிதும் அதிகரிக்கிறது.

நீங்கள் ஒரு பொது கணினியைப் பயன்படுத்துபவராக இருந்தால் , இணைய உலாவி உங்கள் கடவுச்சொற்களை நினைவில் வைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டாம். வெளியேறுவதற்கு முன்பு நீங்கள் அணுகிய கணக்குகளிலிருந்து வெளியேறியதை (Logout) உறுதிசெய்து கொள்ளுங்கள். இயன்றளவு , மின்னஞ்சல் அல்லது வங்கிக் கணக்குகள் போன்ற தனிப்பட்ட கணக்குகளை பொது கணனிகளில் இருந்து அணுக வேண்டாம்.

இணையத்தை உலாவ நீங்கள் பயன்படுத்தும் உலாவியை (Browser) எப்போதும் புதுப்பித்த (Updated) நிலையில் இருப்பதை உறுதிசெய்யுங்கள். உங்கள் உலாவியில் கடுமையான தனியுரிமை (Privacy settings) அமைப்புகளைத் தேர்வு செய்யவும். பலர் தங்கள் உலாவியின் இவ்வாறான பாதுகாப்பு அமைப்புகளை மேம்படுத்தத் தவறுகிறார்கள். இது தனிப்பட்ட முறையில் இணையத்தைப் பயன்படுத்துவதில் இது ஒரு முக்கிய படியாகும். வங்கி இணைய தளங்கள் போன்ற முக்கியமான இணையதளங்களை உலாவும்போது இணைய பாதுகாப்பு நெறிமுறையின் இருப்பை https :// மற்றும் பூட்டு அடையாளம் மூலம் சரிபார்த்து உறுதிசெய்து கொள்ளுங்கள். பூட்டு அடையாளம் என்பது பாதுகாப்பான இணைப்பு என்பதையும், ஒரு ஆச்சரியக்குறி (!) இணைப்பு பாதுகாப்பாக இல்லை என்பதையும், தகவல் அடையாளம் (i) என்பது தளம் தனிப்பட்ட இணைப்பைப் பயன்படுத்தவில்லை என்பதையும் குறிக்கிறது. அத்துடன் மிகவும் பிரபலமான சில உலாவிகள் (Chrome, Edge, Safari) பொதுவாக இணைய தளங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பகத்தன்மையைப் பற்றி புகாரளிக்கின்றன. மற்றும் வைரஸ்கள் அல்லது தீங்கிழைக்கும் கூறுகளைக் கொண்ட இணைய தளங்களின் இருப்பையம் புகாரளிக்கின்றன.

மின்னஞ்சல் இணைப்பைத் திறக்கும் போதும் அல்லது மென்பொருளைப் பதிவிறக்குவதற்கு முன்பும் எப்போதும் அவதானமாக இருங்கள். சில இணைப்புகளில் சில நேரங்களில் வைரஸ்கள் உள்வாங்கப்பட வாய்ப்புள்ளது. உங்களுக்குத் தெரியாத ஒருவரிடமிருந்து வரும் எந்த ஒரு இணைப்பையோ மின்னஞ்சலையோ ஒருபோதும் திறக்க வேண்டாம். ஒரு கோப்போ அல்லது ஒரு பதிவிறக்கமோ பாதுகாப்பற்றது என்று நீங்கள் சந்தேகப்பட்டால் , அதை கணனியில் இருந்து முற்றாக அழித்து விடுங்கள் அல்லது பதிவிறக்கக் செயல்முறையை நிறுத்தி விடுங்கள். அத்துடன் ஒவ்வொரு கணனியில் தரமான வைரஸ் தடுப்பு (Anti virus) இருப்பது அவசியம். மேலும் முக்கியமான தகவல்களை மேகக்கணணிக்கு (Cloud) அல்லது வெளிப்புற வன்வட்டில் (External harddisk) காப்புப் பிரதி (Backup) எடுத்து வைத்து கொள்ளவது பல சங்கடங்களை தவிர்க்க உதவும். நீங்கள் தகவல்களை இழக்கும்போது அல்லது கணனி பழுதடைவது போன்ற சூழ்நிலைகளில் காப்புப்பிரதிகள் பயனுள்ளதாக இருக்கும்.

தொழில்நுட்ப வளர்ச்சியில் நன்மையும் தீமையும் கலந்தே இருக்கிறது. அதனால் முழுமையாக எல்லாவற்றையும் தவிர்த்து விட முடியாது. அவ்வாறு முழுமையாக தவிர்த்தால் எதிர்காலத்தில் பாரிய பின்னடைவையும் பெரிய இழப்பையும் எமது சமுதாயம் சந்திக்க வேண்டி இருக்கும். எனவே பெற்றோர்கள் இணையத்தில் உள்ள நன்மையை மட்டும் எடுத்து கொள்ளும் அறிவையும் பக்குவத்தையும் குழந்தைகளுக்கு கற்றுத்தர வேண்டும்.

எந்திரி. கி.கௌரீசன்
இணைய பாதுகாப்பு ஆலோசகர் (சிங்கப்பூர்)
2000 உயர்தரம் - கணிதப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனை வளப்படுத்துவதில் கலாசாரத்தின் பங்கு

சமூகமோ அல்லது கூட்டமோ தலைமுறை தலைமுயையாக கடத்தப்பட்டு வரும் பொருட்கள் அல்லது ஆன்மீகப் பொருட்களின் தொகுப்பு கலாசாரம் என்று கூறலாம். கலாசாரம் பல்வகையாக காணப்படுகின்றன. அவையாவன மரபுரிமைகள், சமயங்கள், கலைகள், வட கலாசாரம் போன்றனவாகும்.

இவை மனிதனை வளப்பபடுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. நாம் வாழும் உலகில் பல கலாசாரங்கள் காணப்படுகின்றன. இவை மனிதனை வளப்படுத்துகின்றன. தற்கால அறிவியல்கள் அதிகமாகக் காணப்பட்டாலும் அவை மனிதனை மேம்படுத்துவதற்கு உதவுவதில்லை. ஆனால் கலாசாரங்கள் மேம்படுத்துகின்றன.

கலாசாரத்தின் ஒரு பங்குதான் சமயம் நாம் வாழும் இந்த பிரபஞ்சத்தில் பல சமயங்கள் காணப்படுகின்றன. நாம் அறிந்த மட்டும் கிறிஸ்தவம், இஸ்லாம், சைவம் போன்றனவாகும். ஆனால் உலகில் இன்னும் எவ்வளவு சமயங்கள் காணப்படுகின்றன. நாம் தான் சமயங்கள், அஸ்திரங்கள், இறைவன் என்று நினைக்கிறோம். ஆனால் அவை மனிதனை வளப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ளன. இவை மனிதனை நல்வழிப்படுத்த பெரிதும் உதவுகின்றன.

இவை இல்லாவிடின் மனிதர்கள், மிருகங்கள் என்ற வேறுபாடு இல்லாமல் போய்விடும். மனிதனை நல்வழிப்படுத்தவே இக் கலாசாரங்கள் காணப்படுகின்றன.
மனிதன் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு பண்டிகைகள், விழாக்கள் போன்றன காணப்படுகின்றன. நாம் தான் இறைவனுக்காக என்று நினைக்கிறோம். ஆனால் அவை மனிதனை நல்வழிப்படுத்தவே இவை உதவுகின்றன.

நம் தமிழர்களைப் பொறுத்தமட்டில் தமிழ் கலாசாரங்கள் காணப்படுகின்றன. அவை நம்மை நல்வழிப்படுத்துகின்றன. அவை விழுமியம் என்று ஒன்றைக் கூறுகின்றது. விழுமியம் என்றால் மேலானது எனப் பொருள்படும். விழுமியங்களாவன அவை ஒற்றுமை, கருணை, அன்பு, பொறுமை போன்றனவாகும். தற்காலத்தில் என்னதான் அறிவியலிலும், விஞ்ஞானத்திலும் வளர்ச்சி கண்டாலும் அவை மனிதனை தீய வழிக்கே இட்டுச் செல்கின்றன. ஆனால் நம் கலாசாரங்கள் சண்டைகள், 2ம் அமர் போன்றவற்றை அடக்கி ஆழவல்லன. நாமோ வேறு சமயங்கள், வேறு இனங்கள் என்று போட்டி போடுகிறோம். ஆனால் அவை மனிதனை பண்படுத்தவே அமைக்கப்பட்டுள்ளன. நம் மனித சமுதாயமோ அழிவை நோக்கியே செல்கின்றது. அவற்றை மீட்டெடுப்பதற்கு கலாசாரங்கள் பெரும் பங்காற்றுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுமுறைகள் எடுத்துக் கொண்டால் அவையும் ஒரு வகையில் கலாசாரங்கள் தான். நாம் அம்மா, அப்பா, மாமி, மாமா, சித்தி என்று அழைக்கின்றோம். அவ் உறவுமுறைகள் இல்லாவிடின் நம் சமுதாயம் எவ்வாறு காணப்படும் என்று நினைத்துப் பார்ப்போம். ஆகவே உறவு முறைகளில் கூட கலாசாரம் தங்கியுள்ளது.

வைபவங்கள், விழாக்கள் அவையும் கலாசாரங்களே இவை இல்லாவிடின் நமக்கு எவ்வாறு மகிழ்ச்சி கிடைக்கும். நாம் எவ்வாறு மனிதராய் வாழ்வோம். கலாச்சாரத்தின் ஒரு பங்கான கலைகளை நோக்குவோம். கலைகள் பல காணப்படுகின்றன. அவையாவன சித்திரகலை, சங்கீதம், நடனம் போன்றனவாகும். இவை இறை அம்சத்தோடு கூடியவையாகும். நாம் ஆனால் இவற்றைக் கவனிப்பதில்லை.

நமது கலாசார விடயமாக கோலம் இவை வீட்டில் போடப்படுகின்றன. இவை நாம் அழகுக்காக என்று நினைத்து போடுகிறோம். ஆனால் அவை கலாச்சாரத்தை பிரதிபலிப்பனவாக அமைகின்றன. பண்டிகையானது மனித வாழ்வில் பெரும் பங்கு வகிக்கின்றன. இவ் கலாசாரம் உலகமெங்கும் பரவிக் காணப்படுகிறது.

நாமோ ஒழுக்கங்கள், பண்புகள் என்று நினைக்கும் காலை எழுதல், நீராடுதல், ஏழை எளியவருக்கு உதவுதல் போன்றவற்றையும் கலாசாரங்கள் கூறுகின்றன.

நம் மனித வாழ்வில் கலாசாரம் எவ்வளவு அதிகமான பங்கு வகிக்கின்றன. சிலர் இவற்றை மதிப்பது கிடையாது. இனிமேலாவது கலாசாரத்தை பின்பற்றி நல்வாழ்வு வாழ்வோம்.

நம் நாடோ இரண்டாயிரம் வருட வரலாற்றைக் கொண்ட நாடாகும். இங்கு வரலாற்றைப் பார்த்தால் பல கலாசாரங்கள் காணப்படுகின்றன. அங்கு பல புராணக் கதைகள் நீதி, ஒற்றுமை போன்றன கலாசாரத்தை பலப்படுத்தும் பல கதைகள் காணப்படுகின்றன.

புதுவருட பிறப்புக்கள், தைப்பொங்கல் போன்றவையும் நம் கலாசாரங்களே. மனித வாழ்வில் கலாசாரம் எவ்வளவு பங்கு வகித்துள்ளது.

**கிருஸ்ணகுமார் டினுராதன்**
**10E**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்நிலை கல்வியும் மாணவரின் அடைவும்

உலகம் ஸ்தம்பிதமடைந்த நிலை காலகட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் உறுதிப்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கிறது. கைத்தொழில் புரட்சியின் பின்னர் ஸ்பானிய காய்ச்சல் , சார்ஸ் கொடூர காய்ச்சல், சீன பறவை காய்ச்சல், சின்னம்மை என்ற வரிசையில் கொரோனா காய்ச்சலையும் உலக வரலாறு மறக்க முடியாததொன்றாகும். பல்வேறு நாடுகளும் இக் கொடூர வைரஸிலிருந்து தம் நாட்டை பாதுகாக்கும் பணியில் மும்முறமாக ஈடுபட்டு வருகின்றன. பல்வேறு துறைகள் பாதிப்படைந்த போதிலும் " இணையம்" என்கிற நமது நண்பன் இச்சவிலை வெற்றி கொள்ள உறுதுணையால் நிற்கின்றான். இணையம் தன் உதவி கரங்களை நீட்டிய எத்துறையும் முழுமையாக ஸ்தம்பிதமடைந்து விடாது தத்தம் பாதைகளில் சீர்கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கிறது. அவ்வகையிலே கல்வித்துறையில் இணையத்தின் பங்கு அளப்பரியது.

மாணாக்கரின் கல்வி கேள்விக்குறியாக இருந்த வேளையில், மாணாக்கரின் வாழ்வில் ஒளியெழுப்பிய ஓர் விடயமாக நிகழ்நிலை கல்வியும் அதனுடன் சார்ந்த இணைய சேவைகளும் அமைகிறது. இணையம் கல்வித்துறையில் ஆற்றிய சேவையினை சாதாரணமாக எண்ணமுடியாது. இன்னதென்று வரையறை ஒன்றினுள் கொள்ளவும் முடியாது. கொரோனா வைரஸ் தன் பாதிப்புகளை பரப்ப முன்பே இணையக் கல்வியும் அதனுடன் சார்ந்த தொழினுட்பங்கள் இருந்த போதிலும் கொரோனா தோன்றிய பின்பே அதனுடைய பங்கு கல்விக்கு எவ்வாறு முக்கியம் என்பதனை நாம் அறிந்து கொண்டோம். புலனம் , வலையொளி , பிடவரி மற்றும் மெய்நிகர் செயலிகள் கல்வி துறையில் ஆற்றிய சேவை அளப்பரியது. பகலில் ஏற்றிய விளக்கு போல் அதனுடைய உண்மையான பலனை அறியாதிருந்தோம். அதன் சுடர் இருளில் வழிகாட்டுகையிலே உண்மை பயனை அறிந்து கொண்டோம். ஓர் ஆசிரியர் தன் மாணாக்கருக்கு உரிய பாட வேளைகளையும் , பரீட்சை வினாத்தாள்களையும் , மேலதிக கருத்தரங்கு தொடர்பான விடயங்களையும் நிகழ்நிலை மூலமாக அனுப்ப முடிகிறது. ஒரு குறிப்பிட்ட வலய , வட்டாரம் என்று இல்லாது அனைத்து வலயமும் ஓர் இணைய வலையினுள் இணைக்கப்பட்டு செயற்படுவதால் மாணவர்கள் தங்கள் அறிவு பசியினை பல்வேறு வழிகளிலும் நிறைவேற்ற கூடியதாக உள்ளது. நேர்முக வகுப்புக்கள் என்று பார்க்க போனால், நிகழ்நிலை வகுப்புகளிலிருந்து அவை தனிப்பட்ட ஓர் குறிப்பிட்ட வட்டாரமாக தொழிற்படுவதனால் கல்வி வட்டாரம் அல்லது அதனுடைய பயன் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகிறது. இது மட்டுமன்றி இன்று ஓர் பல்கலைக்கழக மாணவனோ அல்லது கலை பட்டதாரிகளோ தங்களுடைய மேலதிக கல்வியினை உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் பெற்றுக் கொள்ள இணையத்தினது உண்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்பினை இக் கொரோனா காலகட்டத்தில் அனைத்து மாணாக்கரினாலும் அறிந்து கொள்ள முடிந்தது. இவ்வாறு கல்வி என நோக்கும் போது பல்வேறு பயன் காணப்படினும் நிகழ் நிலை கல்வியில் மாணாக்கர்கள் அடைவுமட்டம் என்று நோக்கினால் அது ஓர் கேள்விக்குரிய விடயமாகவே அமைகிறது.

சார்ள்ஸ் டார்வின் கூறிய படி "ஓர் சூழலுக்கு ஓர் மிருகம் பழக்கப்படாதிருப்பின் அதனது நிலைப்புத்தன்மை அக் குறிப்பிட்ட சூழலில் நலிவடைகிறது", என கூறியுள்ளார். நிகழ்நிலை கல்வியை முறைப்படி பெறாத மாணவர்களும் அல்லது அறவே பெறாத மாணவர்களின் நிலையும் தற்போது கவலைக்குரிய விடயமாகவே காணப்படுகிறது. வறுமை மாணவர்கள் நிகழ்நிலை கல்விக்குரிய இணையவசதிகள், தொழினுட்ப பாகுபாடு அல்லது தொழினுட்ப பரந்ததன்மை அல்லாது மாணவரின் கல்வியின் வினைதிறன் அங்கு குறுகி ஒடுக்கப்படுகின்றது. இலங்கையை எடுத்துக் கொண்டால் , மாணவரின் சனத்தொகையில் கிட்டதட்ட நாற்பத்தைந்து விழுக்காடுகள் நிகழ்நிலை கல்விகான சாதனங்களை பெறாது, துன்ப நிலைக்கு ஆளாகின்றனர். அம் மாணவர்களிடத்தே ஆர்வம் காணப்படினும் சரியான ஊக்கம் மற்றும் கல்விக்குரிய தொழினுட்ப சாதனங்கள் அல்லாது அல்லலுறுகின்றனர். இதற்கு தீர்வாக அரசு தொழினுட்ப சாதனங்களையும், மாணவர்களுக்கு புலமை தொகைகளை வழங்கிய போதிலும் அதனை உரியவாறு பயன்படுத்த முடியாத மாணவர்கள் அல்லது அதனை தவறாக பயன்படுத்துகின்ற மாணவரின் வாழ்க்கை சீரழிகின்றது. இச்சந்தர்ப்பங்களில் அம்மாணவனின் கல்வி மீதான அடைவு மட்டம் குறைகின்றது.

நகர்ப்புறங்களில் வசதியான மாணவர்கள் அல்லது செல்வந்த வர்க்கத்தை சேர்ந்த மாணவர்கள் தொழினுட்ப சாதனங்களை கொள்வனவு செய்து , நிகழ்நிலை வகுப்புக்களிற்கு செல்ல வாய்ப்புக்கள் இருந்த போதிலும், அதை முழுமையாக அனைத்து மாணவரும், சிறப்பாக பயன்படுத்துகின்றனரா என வினவும் போது ஆங்கு அது கேள்வி குறியாகவே அமைகிறது. ஓர் மாணவன் ஆசிரியர் நடாத்தும் நிகழ் நிலை வகுப்புக்களிற்கு முழுமனதாக அல்லது திருப்தியோடு செல்கின்றான் என கூறுவது சற்று கடினமான விடயமாகவே காணப்படுகிறது. நிகழ்நிலையில் மெய்நிகர், நுண்மெல் நிகர் வகுப்புக்கள் மட்டும் காணப்படுவதில்லை. பொழுதுபோக்குக்கு உரிய விடயங்களாக திகழும் புலனம், விலையொளி, படவரி, அளாவி என பல்வேறு விடயதானங்கள் காணப்படுகின்றன. இவை பயன் தரக்ககூடிய விடயமாக காணப்படினும் இவற்றை தவறாக பயன்படுத்துகையில் ஆங்கு அது நமக்கு விரோதியாகிறது. தேவையற்ற காணொளிகள், வலைபக்கங்கள் என்பவற்றை பார்ப்பதிலேயே தான் பல்வேறுபட்ட சிறுவர்கள் தங்கள் கல்வியின் மீதான கவனத்தை சிதறடிக்கிறார்கள் என உலக சிறுவர் பாதுகாப்பு ஸ்தாபனம் அறிக்கை வெளியிட்டுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நிகழ்நிலை கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான மாணவரின் நிலை கேள்விக்குறியாகவே இருக்கிறது. இது மட்டுமன்றி சில பாடங்கள் மற்றும் துறைகள் நிகழ்நிலையில் நடத்தக் கூடியவை அல்ல. தமிழ் பாடம் இலக்கிய சுவையை, இலக்கண அறிவை ஓர் ஆசிரியர் மாணவரின் ஒத்துழைப்புடனும், நேரடி தொடர்பினாலும் தான் விளக்க முடியும் என்பது மிகவும் முக்கியமானதாகும். மாணவரின் தொட்டுணரும் புலன் மூலமாக அவன் கல்வி கற்கும் விடயம் அவனுக்கு நன்கு புலனாகிறது. இவைகளை நிகழ்நிலை மூலமாக நடத்த முற்பட்டால் அவைகளின் பலன் அல்லது விளைவு வினைதிறன் அற்றதாகவே காணப்படும். இதனால் மாணவரின் அடைவுமட்டம் நலிவுறுகிறது.

நிகழ்நிலை கல்வி மூலமாக பல்வேறு பயன்கள் காணப்படுகின்றது. எனினும், அந் நிகழ்நிலை கல்வி சரியான முறையில் மாணவரை சென்று அடைவதில்லை சிறப்பு தேவைகளுடைய மாணவர்கள் ஆசிரியரின் கவனத்திலிருந்து செயற்படுவது என்பது நிகழ்நிலையில் பொருத்தமற்ற ஓர் விடயமாகும். மாணவரின் சமயோசிதம் சிறந்து விளங்குகையிலே தான் அவனது நிகழ்நிலை கல்வி சிறந்து விளங்குகிறது. அவ்வாறு பார்த்தால் நிகழ்நிலை கல்வி சிறந்து விளங்குகிறது. அவ்வாறு பார்த்தால் நிகழ்நிலை கல்வி இருபத்தைந்து விழுக்காடுகள் மாத்திரமே வெற்றியளித்துள்ளது. இதனால் மாணவரின் நிகழ்நிலை மீதான கல்வி மட்டம் வினைத்திறன் மிக்க ஓர் அடைவுமட்டம் என கூறுவது கேள்விக்குரிய விடயமாகவே அமைகிறது.

சு.சிவானுஜன்
**11A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்நிலை கல்வியும் மாணவரின் அடைவும்

மனிதனானவன் இன்றும் பல யுகங்கள் கடந்து பூமியில் தொடர்ச்சியாக வாழும் உயிரினமாக காணப்படுவதற்கான காரணம், அவன் தனது தேவைகளையும் விருப்பங்களையும் காலத்திற்கு காலம் மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப மாற்றிக் கொள்வதாலேயே ஆகும். அந்த வகையில் மனிதர்களாகிய நாம் இந்த நவீன தொழில்நுட்பங்களால் ஆட்டிப்படைக்கப்படுகின்ற இவ்வுலகிலே உயர் செல்வமும் , சமூகத்தில் நிலையான புகழையும் , அந்தஸ்தையும் ஈட்டிக் கொள்ளும் ஊடகமாக கல்வி மாறியுள்ளது. எனவே தற்போது உலகெங்கும் நிலவும் கொவிட் தொற்று காரணமாக பாடசாலை மற்றும் கல்வி நடவடிக்கைகள் தடைப்பட்ட போதும் மனிதனிடம் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப தனது விருப்பத்திற்கேற்ப தேவையினை தெரிவு செய்யும் வழக்கத்திற்கு இசைவாக்கம் அடைந்திருப்பதால் கொவிட் தொற்று நிலவிய காலங்களிலும் தனது கல்வித் தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்காக நிகழ்நிலைக்கல்வி எனும் ஊடகத்தை மனிதன் தெறிவு செய்துள்ளான்.

நிகழ்நிலைக் கல்வியானது இன்று அத்தியாவசியமான மனிதத்தேவை ஆகிவிட்டதால் உலகில் உள்ள அனைவரும் தொழில்நுட்ப சாதனங்களை உபயோகிக்கும் முறை பற்றிய அறிவை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவைக்கு ஆளாகியுள்ளனர், குறிப்பாக நாம் நிகழ்நிலைக் கல்வியினை பயன்படுத்தும் மாணவர்களை கருதும் போது அவர்கள் தொழில்நுட்ப உபயோக சாதனங்களுக்கு அடிமைப்பட்டு, கல்வி நடவடிக்கைகளில் ஆர்வம் குறைந்தர்களாக காணப்படுகின்றன. இந்நிலையானது தொழில்நுட்ப சாதன உபயோகத்திற்கு அடிமையாவது, போதைப் பொருட்களுக்கு அடிமையாவதை விட ஒரு கொடூரமான விழுமியமாகக் கருதப்படுகிறது. நிகழ்நிலைக் கல்வியானது இன்று புலனம் Whatsapp, சூம் (Zoom), வலையொளி போன்ற பல்வேறு வகையான மென்பொருட்கள் மூலம் மாணவர்களை சென்றடையும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் அதே வேலையில் மாணவர்கள் வகுப்பறைகளிலிருந்து மிகுந்த உற்சாகத்துடனும், கூர்மையுடனும் பாடங்களை அவதானிப்பது போல் நிகழ்நிலைக்கல்வியில் அவதானிப்பதில்லை என்பது இன்றும் ஒரு குறையாகவே காணப்படுகிறது.

தற்போது உலகெங்கும் நிலவும் அசாதாரண கொவிட் தொற்று சூழ்நிலைக் காரணமாக மாணவர்கள் அனைவரும் நிகழ்நிலைக்கல்வி மூலம் தமது கல்வித்தேவையை நிறைவேற்றிக் கொள்ளும் முறையானது ஓர் பொருத்தமற்ற தீர்வாகவே காணப்படும் ஏனெனில் நகரப்புறம் தவிர்த்து கிராமப்புறங்களில் வசிக்கும் மாணவர்கள் வருமானம் குன்றிய குடும்பங்களிலிருந்து வருபவர்கள் ஆவர், எனவே அவர்களுக்கு நிகழ்நிலைக்கல்விக்கு பொருத்தமான நவீன தொழில்நுட்ப சாதனங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது, எனவே இவ்வாறான உதவிகளை அரசானது வழங்க முடியாத போது இலங்கை மாணவர்களின் அடைவு மட்டமும் எதிர்காலமும் கேள்விக்குறி ஆகியுளள்ளது.

மேலும் சில தனியார் நிதி நிறுவனங்கள் பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு நிதி உதவிகளை வழங்கிய போதும் இலங்கையில் தற்போது அடிக்கடி நிலவும் மின்சாரத் துண்டிப்பு மற்றும் கட்டுப்பாடு காரணமாக மாணவர்கள் கல்வி நடவடிக்கைகள் மீது கொண்ட ஆர்வம் குறைய வழிவகுத்து, அவர்களின் விழுமியப் பண்புகள் சீர்குலைந்து மன உழைச்சல் மற்றும் பல்வேறு வகையான நோய்களுக்கும் ஆளாக வழிவகுக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது உலகெங்கும் நிலவும் அசாதாரண கொவிட் தொற்று காரணமாக கல்வி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு பொருத்தமற்ற முறையல்ல என்றுத் தெள்ளத் தெளிவாக புலப்படுகிறது.

சில மாணவர்கள் இந்நிகழ்நிலைக்கல்வி காரணமாக சுயகற்றலில் அதிக நேரத்தையும் உழைப்பையும் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே பாடசாலை ஆசிரியர்களின் மதிப்பும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் மீது கொண்ட நம்பிக்கையும் குறைந்து சில மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களை நம்பியும், சிலர் கொண்ட ஆர்வமும் குறைந்து குடும்ப பொருளாதார நெருக்கடியின் பாரத்தை சுமக்கும் பொறுப்பையும் ஏற்று மன உழைச்சலுக்கு ஆளாகி உள்ளனர். இதற்கு சிறந்த உதாரணங்களாக மாணவர்களின் தற்கொலை முயற்சிகளும், போதைப் பொருட்களுக்கு அடிமைப்பட்டிருக்கும் தன்மையும், ஆசிரியர்கள் அரசாங்கம் எதிராக சம்பள உயர்வுக்காக மேற்கொண்ட போராட்டங்களும் காணப்படுகின்றன. எனவே இந்நிகழ்நிலை கல்வியானது மாணவர்களையும், ஆசிரியர்களையும் பாதித்தது மட்டுமன்றி இலங்கையின் சமுதாய சமநிலையையும் பாதித்துள்ளது.

நிகழ்நிலைக்கல்வி மூலம் மாணவர்கள் கொவிட் - 19 காலத்திலும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் பாடசாலை வகுப்பறையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இன்றியமையாததாகுவதோடு மாணவர்களாகிய நாம் பாடசாலையிலின்றி வேறு எக்கல்வி நடவடிக்கை மூலம் சிறந்த ஒழுக்கத்தையும் சமுதாய உணர்வை பெறமுடியாது . எனவே நிகழ்நிலைக்கல்வி மூலம் பாடசாலை மாணவர்களின் கல்வி மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளின் அடைவுமட்டம் மிகவும் குறைவான நிலையில் காணப்படுகிறது என்பது ஏற்றுக்கொள்ள வேண்டிய உலகநியதி மற்றும் உண்மையாகும்.

**A.டிவ்யேஷ்**
**11A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப இணையத்தள வடிவமைப்பு பணியில் 2003 இல் ஈடுபட்ட எமது பழைய மாணவன் கோணேஸ்வரனின் எண்ணப்பகிர்வுகள்.

(Eng.Saravanamuthu Koneswaran : September 21, 2009)

கல்லூரி நாட்கள் இன்றுவரை எவ்வாறு பசுமையாக இருக்கின்றதோ அதுபோல இன்று நினைத்தாலும் மறக்க முடியாத அனுபவம் எமது கல்லூரியின் இணையத்தளம் வடிவமைத்த அந்த நாட்கள்.

இணையப்பாவனை இலங்கையில் பிரபலமடையத் தொடங்கிய சில வருடங்களில் எமது கல்லூரிக்கான ஒரு இணையத்தளத்தின் தேவையினை கல்லூரி அதிபர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் கல்லூரியின் கணணி பிரிவு பொறுப்பாளர் திரு. செ.நித்தியானந்தம், திரு. இ. புவனேந்திரன் (ஆரம்ப பிரிவு, பகுதி தலைவர்) ஆகியோருடன் கலந்துரையாடி அதற்கான ஆரம்பகட்ட வேலைகளையும் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிலையில் நான் மொறட்டுவப் பல்கலைக்கழக கணணி பொறியியற் பீடத்தில் இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைத்தேன். இணையம் என்பதன் பரிச்சயம் புரிபட ஆரம்பித்த தருணம் அது. எனினும் இணையம் சார்ந்த பாடங்கள் மூன்றாம் வருடத்தில் தான் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் கூகுளின் துணையுடன் யாகூ, ஜியோ சிட்டி இலவச வழங்கியில் இணையத்தள பக்கங்களை அமைத்து பழகிக்கொண்டிருந்தேன். வார இறுதி நாட்களில் திருக்கோணமலை வரும்போது பாடசாலையின் விநாயகரை தரிசிக்கும் வழக்கத்தினை கொண்டிருந்தேன். ஒருநாள் அவ்வாறு சென்ற போது நித்தியானந்தம் சேருடன் வழக்கமான விசாரிப்புகளுடன் கூடிய கலந்துரையாடலின் போது இணையத்தளம் அமைப்பதற்கான செயற்திட்டத்தினை எனது இரண்டாம் வருட முடிவில் வரும் விடுமுறையில் செய்வதாக முடிவெடுத்தோம்.

திட்டத்திற்காக முதலில் இணைய முகவரியாக trincohindu.org இனை தெரிவு செய்து அதனை அந்நேரம் பிரபலமாக இருந்த Dream Solutions pvt Ltd ( Dehiwala) (நிலவு.காம்) நிறுவனம் மூலமாக செய்வதாக தீர்மானித்தோம். (பின்குறிப்பு : 2 பின்னாளில் இவர்கள் இணைய முகவரியினை தக்கவைக்க முடியாமையால் நாம் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல, எனினும் நீண்ட பிரயத்தனங்களின் பின் மீண்டும் 2 வருடங்களின் பின் தற்போது trincohindu.org எமது உடமையாக்கியுள்ளோம்.)

பல்கலைக்கழக பரீட்சைகள் முடிவுற, எனது விடுமுறையும் வந்தது. இத்திட்டத்திற்காக எம்முடன் திரு.சு.பரமேஸ்வரன் ஆசிரியர் அவர்களும் எம்முடன் முழு நேரமாக இணைவதென முன்வந்தார். அத்துடன் முன்வடிவமைப்பு தொடர்பான ஆலோசனைகளுக்கு சித்திர ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்பாஸ்கரன் அவர்களும் இணைவதாக உறுதி அளித்தார். அத்துடன் கல்லூரியின் கணணி வகுப்புக்களை நடத்திக் கொண்டிருந்த ஜனார்தனனும் எம்முடன் இணைந்தார்.

கல்லூரி இணையம் என்பது பல்வேறுபட்ட தரவுகளை உள்ளடக்க வேண்டியிருந்த்தால் தரவுகளினை ஒழுங்கமைத்து தருவதற்காக ஒவ்வொரு பகுதி தலைவர்களையும் சில ஆசிரியர்களையும் இதில் சேர்த்துக் கொண்டோம். சேகரிக்கப்பட்ட தரவுகளை கணனியில் மாற்றி (தட்டச்சு செய்தல், புகைப்படம் மின்னாக்கம்) தருவதுடன், சில அடிப்படை இணையப்பக்கங்களை தயார்படுத்த 7 மாணவர்களை செல்வன்.இ.மயூரன், செல்வன்.சி.ஆரணியன், செல்வன்.த.அருண்மாறன், செல்வன்.ஜெ.கோகுலன், செல்வன். ஞா.போல்றொசான், செல்வன்.ம.சஞ்சீவ்நாத், செல்வன்.செ.வாமனன் அவர்களின் ஆர்வம் காரணமாக தெரிவு செய்தோம்.

எமது கல்லூரியின் இலச்சினையின் தெளிவான வர்ண மூலப்பிரதி சிறப்பானதாக இல்லாமையால் அதனையும் அருள்பாஸ்கரன் சேர் ஒரே இரவில் வீட்டிலிருந்து வரைந்து எம்மிடம் கையளித்தார். பின்பு எமது கல்லூரியின் தற்போதைய கட்டங்களை படம் பிடிப்பதற்காக Rain Bow Color Lab படப்பிடிப்பாளரை அணுகினோம். எனினும் இரண்டு நாட்கள் காலநிலையின் சீர்கேட்டால் அது தடைப்பட, மூன்றாம் தடவை நீல வர்ண பின்னணியில் பல கோணங்களில் கல்லூரியினை படம் பிடித்தோம். அச்சமயம் ஏணியினை தூக்கி நடந்ததையும், நீர்த்தாங்கியில் ஏறியதையும், ஆய்வுகூட கூரையின் நின்று படம் பிடித்ததையும் இப்போது நினைத்தாலும் சிரிப்புத்தான் வருகின்றது. அத்துடன் எமது ஆசிரியர்களையும் தனித்தனியாக் நிழற்படம் எடுக்கும் பணியும் தொடங்கியது.

ஒரு இணையத்தளத்திற்கு மற்றவர்களை மீண்டும் மீண்டும் வரவழைக்க, அதன் உள்ளடக்கம் நேர்த்தியாக இருக்கும் அதேபட்சத்தில் வடிவமைப்பு தரமாக இருக்க வேண்டும். எமது கல்லூரியின் நிறம் பச்சை, மஞ்சள் என்பதால் அதன் சாயலிலேயே அமைக்க வேண்டிய கட்டாயம். அத்துடன் அக்காலத்தில் எனக்கு தெரிந்த வகையில் நான் ஒரு பச்சை மஞ்சள் சேர்ந்த, செவ்வக வடிவங்களை கொண்ட தள வடிவத்தினை அதிபர் மற்றும் நித்தியானந்தம் சேர், பரமேஸ்வரன் சேருக்கு காட்டினேன். எனினும் அது ஒரு கண்ணை கவர்வதாக இல்லாத பட்சத்தில், எமது ஆஸ்தான சித்திர ஆசிரியர் அருள்பாஸ்கரன் அவர்களிடம் முழு உதவி பெறுவது என முடிவு செய்தோம்.

எமது வாழ்வாதாரத்தின் ஒரு பகுதியான வயலை எமது கல்லூரியின் இணையத்தளத்தின் முகப்பில் பயன்படுத்துவது என ஆசிரியர்கள் முடிவுசெய்ய, அருள்பாஸ்கரன் சேர் பக்கதில் இருந்து ஒவ்வொரு பகுதியாக சொல்ல சொல்ல, எனக்கு தெரிந்த miufiw photo shop 7 அறிவினை வைத்துக் கொண்டு முகப்பினை ஏறத்தாழ 4 மணி நேர பரீட்சார்த்த முயற்சிகளுக்கு பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்தோம். ஏனெனில் அப்போது (இப்போதும் தான்) நான் Creative Art இல் நான் மிக மட்டமான தரத்திலேயே இருந்தேன், எனினும் ஒரு ஆசானின் உதவியால் தான் எமது கல்லூரியின் இந்த அழகான தளம் அமைக்கப்பட்டது. உண்மையில் photo shop இல் இருந்த preview வசதி மிக உதவியது.

ஒரு மாதிரி ஆரம்ப கட்ட Design வேலைகள் முடிவுற இரண்டு கிழமைகள் ஓடிவிட்டது. இந்நிலையில் ஒவ்வொரு நாளும் காலை 9 மணிமுதல் பாடசாலை முடியும் 2 மணிவரை கல்லூரியின் கணணிகூடத்தில் இந்த வேலைகளுடன் எனது பொழுது போனது. பாடவிதான செயற்பாடுகளின் மத்தியிலும் Web Team சகோதரர்கள் தமது இடைவேளைகளிலும் வந்து வேலைகளை செவ்வனே செய்தனர். ஆசிரியர்களின் அன்பான விசாரிப்புகளில் பழைய மாணவனான எனக்கு மீண்டும் பாடசாலையில் கற்பது போன்ற உணர்வு மேலிட மேலும் உந்தப்பட்டேன். மதியபோசனம் வீட்டில் முடித்து விட்டு ஒரு குட்டித்தூக்கம் போட்டு விட்டு மீண்டும் கல்லூரிக்கு 4 மணியளவில் வந்து இரவு 9 மணிவரை மீண்டும் வடிவமைப்பு பணி தொடரும்.

ஒவ்வொரு நாளும் இரவு 9 மணி அல்லது 9.30 மணிக்கு, அதிபர், பிரதி அதிபர் ராஜரட்ணம் சேர், அருணகுமார் சேர் வந்து வேலையின் முன்னேற்றத்தினையும் முடிவுற்ற பக்கங்களையும் பார்த்து விட்டு குறை நிறைகளை சொல்லுவார். பின்பு அவற்றை குறிப்பெடுத்து நாம் சரி செய்தால், அடுத்த நாள் அவற்றை அதிபர் மறக்காமல் பார்ப்பது வழமை. கல்லூரிக் காலங்களில் பயம் காரணமாக அதிபருடன் கதைக்க ஒடி ஒளியும் எனக்கு அவருடன் சகஜமாக அருகிலிருந்து வேலை பார்க்க கிடைத்தது எனது பாக்கியமே. பல நிர்வாக வேலைகளுக்கு நடுவிலும் எமக்காக நேரம் ஒதுக்கி எமக்கு ஆலோசனை வழங்கியது அவரின் நிர்வாகத் திறமையையும் அர்ப்பணிபையும் கோடிட்டு காட்டியது. நாளாந்தம் நாம் புறப்படும் நேரம் ஏறத்தாழ இரவு 11மணி, பல நாட்கள் அதிபர் தனது அலுவலகத்தில் கடமையாற்றுவதை நான் கண்டுள்ளேன். இன்று வரை எனது கல்லூரிக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி இருப்பதற்கு நான் இந்த திட்டத்தில் வேலை செய்யும் போது படித்த பாடங்களே.

அப்போது எம்மிடம் USB Flash Drive / Thumb Drive இல்லாதமையால் ஒரு மீள்பயன்படுத்ததக்க குறுவட்டில் தகவல்களை பதிவேற்றி, அவற்றினை மீண்டும் எனது வீட்டு கணணியில் தரவேற்றி குறைந்தது அதிகாலை 3 மணிவரை வேலை செய்வது வழக்கம்.

இவ்வாறு எமது இணையத்தளம் வளர்ந்து வரும்போது, அதிபர் இணையத்தள ஆரம்ப விழாவினை ஆகஸ்ட் மாதம், 28 ஆம் நாள், 2003 ம் வருடம் எமது கல்லூரியில் வைக்க முடியுமா என கேட்டார். இன்னும் 10 நாட்கள் இருக்கும் போது இதை முடிக்க முடியுமா என்ற ஐயப்பாட்டுடன் வேலைகளை மேலும் தீவிரப்படுத்தினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சசிகுமார் சேர் பல தடவைகள் பார்வையிட்டு தனது ஊடக துறைசார்ந்த அனுபவங்கள் மூலம் தகவல்களில் நேர்த்தியை கொண்டுவர உதவினார். நூலகர் (எனக்கு அவரின் பெயர் சரியாக நினைவில் இல்லை) கூட தேவைப்பட்ட பழைய படங்களை தேடுவதற்கு உதவினார்.

இவ்வாறு அனைவரின் முயற்சியுடன் உருவான இணையத்தளத்தினை, வழங்கியில் Web Server இலே தரவேற்றம் செய்ய வேண்டியது மட்டுமே பாக்கி. அதற்கென நாம் தெரிவு செய்த தினம் திங்கட்கிழமை 25ம் திகதி. இன்னும் மூன்று நாட்களே இருந்த வேளை. ஒரு மூன்று மணித்தியாலத்தில் அனைத்து தரவுகளும் Web Server இற்கு ஏற்றப்பட்டு விடும் என்று எண்ணிணோம். உண்மையில் அனைவருக்கும் FTP என்பது ஒரு புது விடயம். அத்துடன் இன்றைய சூழலை போல இணைய வேகம் கூட அவ்வளவு பெரிது இல்லை. (15 KB). அத்துடன் இணைய இணைப்பும் பல தடவைகள் சீரற்று தடைப்பட்டு தடைப்பட்டு வந்தது. அன்று எதுவுமே முடியவில்லை. கனத்த மனதுடன் வீட்டிற்கு இரவு 12 மணிக்கு சென்றோம். வீட்டில் இணைய வசதி இல்லாததால் ஒரே யோசனையுடன் நித்திரைக்கு சென்று, மீண்டும் கல்லூரிக்கு காலை 7 மணிக்கு வந்து மீண்டும் முயற்சித்து விட்டு, இயலாமையின் காரணமாக எமக்கு வழங்கியை தந்த நிறுவனத்துடன் கதைத்த போது, இது வழமையான விடயம் என்றும், நாங்கள் மிக்க பொறுமையுடன் செயலாற்ற வேண்டும் என்றும் கூறினர். எனினும் பகலில் இணைய பயன்பாடு அதிகம் என்பதால் இரவு 12 மணிக்கு பின்பு முயற்சி செய்யும் படி சொன்னார்கள்.

விழாவிற்கான அழைப்பிதழ்களை கல்லூரி பழைய மாணவர், ஏனைய பாடசாலை அதிபர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள் போன்றோருக்கு அனுப்ப தொடங்கி விட்டது. என்ன செய்வது என்று தெரியாத நிலையில் உடனடியாக் தரவுகளினை மட்டுறுத்தும் செயற்பாட்டை ஆரம்பித்தோம். அவ்வகையில் மொத்த கொள்ளளவை 380MB இலிருந்து 61MB இற்கு குறைத்தோம். உண்மையில் எமக்கு இணைய பயன்பாட்டிற்கான படங்களை சீர் செய்யும் வழி அன்றே தெரிந்தது.

ஒருவாறு, அதிபருக்கு அனைத்து விடயங்களையும் தெரியப்படுத்திய பின்னர், நானும், பரமேஸ்வரன் சேர், நித்தி சேரும் இரவு 12 மணி முதல் தரவேற்றம் செய்வது என முடிவு செய்தோம். அதிபர், பிரதி அதிபர்கள் , புவனேந்திரம் சேர் இரவு 12 மணிக்கு வீடு திரும்ப, நாம் எமது தரவேற்றும் வேலையினை ஆரம்பித்தோம்.

அன்று எம்மிடம் ஒரு FTP Uploader இருக்கவில்லை, அத்துடன் இன்றைய நாட்களை போல் துறைசார் நிபுணர்கள் எம்மிடையே பரவி இருக்கவில்லை. எனவே மூன்று வேறு வேறு கணணியில் இணைய இணைப்பினை எடுத்து, Microsoft Windows Explorer மூலமாக சிறிது சிறிதாக தகவல்களை தரவேற்றம் செய்ய தொடங்கினேன். உண்மையில் படிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது கூட நான் 2 மணி என்பதை கண்டது கிடையாது. அத்துடன் இரவிரவாக தொடர்ந்து கணணியுடன் வேலை செய்வது கூட அன்று தான் எனக்கு முதல் அனுபவம், பரமேஸ்வரன் சேர், நித்தி சேரின் தொடர்ந்த உரையாடல்கள் ஒரு புறம், மெல்லிய இசை மறுபுறம் என அன்றைய இரவு வெற்றிகரமாக 50 MB ஏற்றப்பட்டதுடன் நிறைவு பெற்றது. காலை 7 மணிக்கு வீட்டிற்கு சென்று மீண்டும் 12 மணிக்கு வந்தால், நித்தி சேர் மிகுதியையும் முடித்து இருந்தார். ஒருவாறாக சுதாகரித்த போது, மீண்டும் சில மாற்றங்கள் மற்றும் புதிய தகவல்களை சேர்க்க வேண்டும் என்றனர். திரும்பவும் வேலையை தொடங்கி வழமைபோல் வீட்டிற்கு செல்ல இரவு 11 மணி.

இந்நிலையில் கல்லூரியின் படங்களை வைத்து மாணவர்கள் சிறிய சலனப்படம் ஒன்றினை பிண்ணனி இசையுடன் காட்சிப்படுத்தியது இன்றும் நினைவில் உள்ளது.

ஒருவாறாக, விழா நேரமும் வந்தது. பலருக்கு இணையத்தளம் என்பது ஒரு புதிய விடயமாக இருந்ததால், சில விளக்கங்களை அதிபர் வழங்க ஆகஸ்ட் மாதம், 28 ஆம் நாள், 2003 ம் வருடம் எமது கல்லூரி இணையம் திரு N. புவனேந்திரன் (Deputy Planning Director NECORD) அவர்களால், திருக்கோணமலையின் கல்விச்சமூகம் புடைசூழ உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் பலரின் உழைப்பு இருந்தாலும், கல்லூரி என் உழைப்பிற்கான பிரதி உபகாரமாக 128 MB Thumb Drive இனை இன்ப அதிர்ச்சியாக பரிசளித்தனர்.

உண்மையில் இன்று ஒரு மென்பொருள் துறையில் வேலைபார்க்கும் எனக்கு, ஆரம்பத்திலேயே அதிலிருந்த பல விடயங்களை அறிய இத்திட்டம் உதவியது. அத்துடன் ஒரு கல்லூரி சமூகத்துடனின் எதிர்பார்ப்பையும், சாதிக்கவேண்டும் என்ற வேகத்தினையும் அறிய கூடியதாக இருந்தது. இன்றுவரை இப்படிப்பட்ட ஒரு செயற்திட்டதில் பணிபுரிந்தமைக்காக பெருமைப்படும் அதே நேரம் அதில் நான் பணியாற்றிய அனைவருக்கும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். படிக்கும் காலத்தில் எனக்கு பல வழிகளில் வழி காட்டிய கல்லூரி, முடிந்த பின்னரும் எனது முதலாவது Industrial Experience இனை கூட தந்தது.

***கல்லூரி இணையத்தளத்தில் ஆகஸ்ட் மாதம், 28 ஆம் நாள், 2003 அன்று வெளியிடப்பட்ட நன்றி குறிப்பு :***

*எமது கல்லூரிக்கென தனித்துவமான இணையத்தளம் ஒன்றினை வடிவமைக்க வேண்டுமென்ற எமது நீண்டகால சிந்தனை இன்று செயல்வடிவம் பெற்றுள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் இணையத்தளத்தை உருவாக்க தமது நிறைவான பங்களிப்பை நல்கிய இணையக்குழுவுக்கு எமது பாராட்டுக்கள். இக்குழுவின் பிரதான வடிவமைப்பாளராக செயற்பட்ட எமது கல்லூரியின் பழைய மாணவரும், தற்போது மொறட்டுவ பல்கலைக்கழக கணனித்துறை பொறியியல் பீட மாணவருமான திரு.சரவணமுத்து கோணேஸ்வரன் அவர்கட்கு எமது நிறைவான நன்றிகள்.

இவரோடு இணைந்து பொறுப்போடு பணியாற்றிய எமது ஆசிரியர்கள் திரு. எஸ். நித்தியானந்தம் அவர்களுக்கும், திரு. எஸ். பரமேஸ்வரன் அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

இந்த இணையத் தளத்திற்கு வேண்டிய பல்வேறு துறை சார்ந்த தரவுகளையும், தகவல்களையும் சேகரித்து அவற்றை சிறப்பான முறையில் பதிவு செய்த எமது கல்லூரியின் மாணவர்களான செல்வன். இ.மயூரன், செல்வன்.சி.ஆரணியன், செல்வன். த.அருண்மாறன், செல்வன். ஜெ.கோகுலன், செல்வன். ஞா.போல்றொசான், செல்வன்.ம.சஞ்சீவ்நாத், செல்வன்.செ.வாமனன் ஆகியோருக்கு எமது பாராட்டுக்களும், நன்றிகளும்.

ஆக்கம்,<br>
எந்திரி. சரவணமுத்து கோணேஸ்வரன்,<br>
கணினித்துறை பொறியியலாளர்,<br>
2000ம் ஆண்டு உயர்தர கணிதப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வளம் பேணுவோம்

பரந்து விரிந்த இவ் உலகில் பற்பல வளங்கள் உள்ளன. அதற்கு உதாரணங்களாக வளி, நீர், மரங்கள் போன்றவற்றை குறிப்பிடலாம். இவற்றில் மிக முக்கியமானது நீர் ஆகும். நீர் தேவை என்பது அனைத்து உயிரினங்களுக்கும் அத்தியாவசியமானதாகும். நீருக்கு மணம், சுவை மற்றும் நிறம் எனும் ஒரு குணங்களும் கிடையாது. எனினும் உயிர்கள் இவ்வுலகில் வாழ்வதற்கு நீர் அவசியமாகிறது. தாவரத்தின் உயிர்ச்செயன்முறையான ஒளித் தொகுப்பிற்கும் நீர் தேவைப்படுகிறது. நீருக்கு வெப்பத்தைத் தணிக்கும் ஆற்றல் உள்ளது. அதனால் அதிக வெப்பகாலத்தில் நீரை அருந்துவதன் மூலம் தாகத்தை / உடல் வெப்பநிலையை தணித்துக் கொள்ளலாம். உலகில் எழுபதிற்கும் மேற்பட்ட சதவீதத்தில் நீர் காணப்படுகிறது.

" நீரின்றி அணுவும் அசையாது", " நீரின்றி அமையாது உலகு" எனும் வாசகத்தை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இதனைப் போலவே உலகில் எழுபது சதவீதத்திற்கும் அதிகமாக நீர் காணப்பட்டாலும், மனித தேவைக்கு ஏற்றவாறான நீரின் அளவு ஒரு சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்படுகிறது. எனினும் தற்போதைய மக்கள் நாகரீகம் வளர்ச்சி அடைந்து வருகிறது. இதனால் நீர்த்தேவையும் அதிகமாகிறது. இது ஒரு பக்கமிருக்க இதே நீர் இம்மனிதர்களாளேயே அசுத்தமாக்கப்படுகிறது. இறந்த விலங்குகளை நீரிலிடல், தொழிற்சாலை, வைத்தியசாலை கழிவுகளை நீரில் கலத்தல், வாகனத்தை நீரில் கழுவுதல், பொலித்தீன், பிளாத்திக்கு கழிவுகளை நீரில் கொட்டுதல் போன்ற இழிவான செயல்களின் மூலம் நீரினை பயன்படுத்த முடியா நிலைக்கு கொண்டு வருகிறான் இம் மனிதன். இதனைத் தடுப்பதற்காக அரசு எவ்வளவு வழி பண்ணியும் நாம் இதனை நிறுத்தவில்லை.

இவ்வாறான செயல்களின் மூலம் எம் எதிர்கால சந்ததியினருக்கு தான் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படக் கூடும். ஆகையால் இவ்வாறான செயல்களை தவிர்த்துக் கொள்வது எமது தலையாய கடமையாகும். காடுகளை அழித்தல், மரங்களை வெட்டுவதன் மூலமும் நீர்த்தட்டுப்பாடு ஏற்படுகிறது. மரங்களை வெட்டுவதனால் ஆவியுயிர்ப்பு குறைவடைந்து மழை பெய்வது தவிர்க்கப்படுகிறது. இதனால் நீர்த்தேவை கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. இதைப் போலவே இலங்கையை ஆண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனான மகா பராக்கிரமபாகு " மழையால் பெறும் ஒருதுளி நீரையேனையும் கடலுடன் சேர விடமாட்டான்" என்றான். அரசாங்கம் எமக்கு குடிநீர் வசதியையும் ஏற்படுத்தியுள்ளது. இதனை வீணாக்காது பயன்படுத்துவது எம் கடமை ஆகும். அரிய வளமான நீரை பேணிக்காத்து, எமது வாழ்வையும் பிற உயிரையும் பேணிக் காப்போம்.

"நீர்வளம் காப்போம்
பயன் பெறுவோம்"

உ.ரெலக்ஷன்
தரம் 6B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரைநூற்றாண்டின் பின் அணிகலன் சூடியது ; முப்பெரியார் விழா.

இராம கிருஷ்ண சங்கத்தின் தோற்றம் பல வித்தியாசாலைகளின் விரைவு வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாய் விளங்கிற்று. சுவாமி விவேகாநந்தரினால் 1897ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இச்சங்கமானது, இனமத பேதமற்ற தூயவாதக் கொள்கையினை கருவாகக் கொண்டது. முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் 1925ம் ஆண்டு சங்கத்தின் சார்பில் இந்துக் கல்லூரியை பொறுப்பேற்றார். 1897ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இந்துக்கல்லூரியின் தொடக்க காலமாகிய 28 வருடங்கள் ஸ்தாபகர்களின் முகாமைத்துவத்தின் கீழ் இயங்கியது. அதன்பின், 1925 ம் ஆண்டு தொடக்கம் 1961 ம் ஆண்டு வரை, இராம கிருஷ்ண சங்கத்தினால் இந்துக் கல்லூரி முகாமை செய்யப்பட்டது. 1962 ம் ஆண்டு அரசாங்கம் பாடசாலைகளை சுவீகரித்து.

இராமகிருஷ்ண பரமஹம்சர், அன்னை சாரதாதேவி மற்றும் சுவாமி விவேகாநந்தர் ஆகிய முப்பெரியார்கள் கல்வி வளர்ச்சிக்காக ஆற்றிய நற்பணியினை கருத்தில் கொண்டு, நன்றிக்கடன் செலுத்தும் முகமாக கல்லூரியில் சேவையாற்றிய நல்லாசான் இ.கணபதிபிள்ளை அவர்களினால், 1966 ம் ஆண்டு இவ்விழா தொடக்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து 1968ம் ஆண்டு வரை நடைபெற்ற இவ்விழா, அண்ணாரின் தொழில் இடமாற்றத்தின் பின் கைவிடப்பட்டது கவலைக்குரியதே. முப்பெரியார்களின் பிறந்ததினத்தினைக் கொண்டாடும் முகமாக ஒரு சிறப்பு தினம் தேர்ந்தெடுக்கப்பட்டு அத்தினத்தில் இப்பெரியார்களின் திருவுருவப்படங்கள் ஏந்திய ஊர்தி ஊர்வலமாக வந்து பின் சம்பந்தர் மண்டபத்தில் முப்பெரியார்களின் திருவுருவப் படங்கள் வைத்து, விழா சிறப்பாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. இவ்விழாவின் சிறப்புகள் அன்று வீரகேசரி வார இதழில் ஒரு பக்கத்தில் வெளிவருவது வழமையாக இருந்தது. பழைய மாணவர்களான திரு.கு.தயாநிதி மற்றும் ச.பாரதிநாதன் அவர்களின் கூட்டுமுனைப்பில் மீண்டும் இவ்விழா சுமார் ஐம்பத்திநான்கு ஆண்டுகளின் பின் இடம்பெற்றது கல்லூரிச் சமூகத்திற்கும் திருமலைச் சமூகத்திற்கும் பெரும் மதிப்பையும், சிறப்பையும் அளித்துள்ளது என்பது நிதர்சனம்.

முப்பெரியார்களுக்கு நன்றிக் கடன் செலுத்தும் நோக்குடன் தொடக்கப்பட்ட இவ்விழாவானது, மாணவர்களின் வாழ்வியல் நெறியில் நல்விளைவுகளை ஏற்படுத்தி, அவர்களை கலைகலாசார சமய விழுமியங்களின்பால் ஈர்க்கவும் வழிகோலியது. இராம கிருஷ்ண சங்கத்தின் முகாமையின் கீழ் பாடசாலையின் வளர்ச்சியானது. சுவாமி விபுலாநந்தர் மற்றும் நடராஜானந்தா சுவாமி அடிகளார்களின் நேரடிக் கண்காணிப்பிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டலிலும் மேலெழுந்து சென்றது என்பது வெள்ளிடைமலை. பாடசாலையின் விரைவு வளர்ச்சியில் இவ்விரு சுவாமிகளும் "இயக்கிய இருவர்" என அன்று அழைக்கப்பட்டனர். இனிவரும் காலங்களில் முப்பெரியார் விழாவுடன் இயக்கிய இருவர் விழாவினையும் இணைத்து இந்நிகழ்வுக்கு செயல் வடிவம் கொடுப்பது மிகச்சிறப்பாக அமையும் என்பது பழைய மாணவர்களாகிய எம் கருத்து. ஒவ்வொரு ஆடி மாதத்தில் வரும் முதல் பௌர்ணமி தினம் குருமார்களுக்கு நன்றிக்கடன் செலுத்த மிகவும் உன்னத தினமென வேதாகமத்தில் சுட்டப்பட்டள்ளது. இத்தினத்தினை "குருபூர்ணிமா தினம்" என அழைப்பர். எமது கல்லூரி இத்தினத்தில் மேற்சுட்டிய விழாவினை ஒவ்வொரு வருடமும் நிகழ்த்த வேண்டும் என்பது என் பணிவான வேண்டுகேள் என்பதுடன், கல்லூரியின் அனுமதியுடன் இவ்விழாவுக்கான நிதியுதவியினை அளிப்பதற்கும் நான் விருப்பம் கொணடுள்ளேன்.

கலை கலாசார சமய விழுமியங்களின் பால் மாணவர்களின் கவன ஈர்ப்புக்கு வழி சமைக்கும் இவ்வாறான நிகழ்வுகள், எதிர்கால நற்சமூக வளர்ச்சிக்கு வித்திடுவதுடன், தீயபழக்க வழக்கத்திற்கும் தீ வைக்கும் என்பதில் முறன் இல்லை. இந்துக்கல்லூரிக்கு என்று பல உன்னத மரபுகள் உள்ளது. நன்மதிபிற்குரிய அவை யாவும் கட்டிக் காக்கப்பட வேண்டும். பல கல்வி மகான்கள், சுவாமிகள் இதயசுத்தியோடும், அர்ப்பணிப்போடும் கட்டியெழுப்பிய கல்விக் கூடம் தான் இன்றைய இந்துக்கல்லூரி. மென்மேலும் உன்னத மரபுகளும், கல்விப் பெறுபெறுகளும் வான் கொண்ட வளர்பிறையாக, பல்லாயிரம் பௌர்ணமிகள் கண்டு வாழ வேண்டும் என மனமகிழ்வோடு வாழ்த்தி, என்னை ஆளாக்கிய என் கல்லூரியின் முன்நின்று மண்டியிட்டு சிரம்தாழ்த்தி வணாங்குகிறேன்.

**"வழங்க வழங்க வளரும் வளம் கொண்ட செல்வம்**
**கல்வி ஒன்றே"**

துரைலிங்கம் பவனகுமார்
மேனாள் தலைவர்
பழைய மாணவர் சங்கம்
பிரித்தானியா கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Environmental Issues

Environmental Issues mean problem with the planet system which have occurred human interference or mistreatment of the planet. Environmental Issue affect to the world, people are facing Environmental problem everyday and also affect to the eco system. It also make us to disaster, tragedies, present and future.

Some of the important Environmental Issues are climate change, global warming pollution, waste disposal, deforestation, ozone layer depletion.Today all over the world concer about the problem climate change. Green house gases are the major factor of climate change. This changes directly affect to the Environmental changes such as melting of glaciers, changes ion the season, epidemics, heavy flood and rise in the sea level.

Earth temperature gradually increases across the globe is known as burning warming Global warming made by burning of fossil fuels, emission of auto mobile and chloral flora carbons at the green house gases.Pollution is a substance or energy that gas undesired effect of usefulness of a resource. There are seven key types of pollution such as air, soil, water, noise, radio active, light and thermal.

In day to day life human activities direct and indirectly involve to the pollution. Air, water, sound, soil could be provided harmful effect to the living, non-living and Environment. All these pollution are inter connected and influence each other. Examples for pollution are plastic, polythene, heavy metal burning, industrial waste material, agriculture waste material, Smoking mix with air.

Human activities, Industrial activities, agriculture activities, Produce waste material in the environment. These are solid, liquid and gas. These waste materials do not have a harm full effect on the environment not only this but it has also increase of disease.

Deforestation is the depletion of trees and forests. Which has been a gradually change in the earth climate. Destruction of forest has led to the elimination of large number of spices, animals and living



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

organism and affect to the bio diversity. Deforestation also increases green house gas emission, disrupts the motor cycle increase, soil erosion and reduce natural beauty of environment.

Ozone layer is a layer of concentrated ozone gas. It Protect us from the sun's ultra violet rays. Due to the release of chloral flora carbon (CFC) in the environment the ozone layer is getting depleted at higher level of the atmosphere. The hole in the ozone layer leaves human and wild life expose to several skin disease to them.

Now that we can understand the environmental problem we face today. /There fore we have to potential to sold the problem immediately. Some are the common solution.

1. Reduce, Reuse, Recycle ()3R) are proper way do it.
2. Conserve water, fuel and electricity.
3. Environmental Friendly practice
4. Affordable and clean energy.
5. Green innovation
6. Proper waste management

Conserve above all factors individual organization,government, should be immediate action to keep environment safe.

R.Pavithiran
8"A"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்கல்லூரியில் பிரவாகமும் புத்தாக்கமும்

எமது பாடசாலையானது ஆரம்பத்திலிருந்து இன்றுவரை பல மாணவர்களை சமூகத்தில் வளர்த்தும் வழிகாட்டியும் உள்ளது. மாணவர்களின் கல்வியில் மாத்திரமின்றி இலணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் முன்னுதாரணமாக திகழ்கின்றது. அதன் அடிப்படையில் நான் அறிந்த மற்றும் அனுபவித்த சிலவற்றை பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன். கல்விப் பணியின் போது கிடைத்த ஒரு நண்பர் வயதிலே மூத்தவர் ஆனாலும் நண்பரைப் போல பழகுவார் வெளிநாட்டில் வசித்தாலும் எந்நேரமும் எமது ஊர் பாடசாலை என்று அக்கறையோடு கல்விப் பணி செய்பவர் 1984 காலத்தில் பாடசாலைக்கான விஞ்ஞானக்கண்காட்சியில் அவர்களது நண்பர்களுடன் சேர்ந்து செய்த புத்தாக்கம் பலராலும் பேசப்பட்டு பத்திரிகைகளிலும் இடம்பெற்ற விடயமாகும். அதிபர் சிவலோகநாதன் அவர்களின் காலத்தில் உயிர்வாயு (bio gas) இனை பயன்படுத்தி இ.ரமேஷ் குமார் மற்றும் அவர்களின் நண்பர்களினால் உருவாக்கப்பட்ட மகிழூந்து (CAR) ஆகும். அவர்கள் அப் புத்தாக்கத்திற்கான நிதியினை திரட்டுவதற்கு தொலைக்காட்சியில் படக்காட்சிகளை காட்டுவதன் மூலம் பெறப்பட்ட நிதியிலிருந்தே இச் செயற்திட்டத்தினை செய்தமை குறிப்பிடத்தக்கது. இ.ரமேஷ்குமாருடன் சேர்ந்து நண்பர்களான சி.ரட்னதீபன், து.உதயகுமார், மு.சகௌமாரன், கோ.வாசுதேவன் ஆகியோர் இணைந்து உருவாக்கிய அந்த மகிழூந்து அக்காலத்தில் அனைவராலும் பாராட்டு பெற்று பேசும்பொருளாக விளங்கியது. அக்காலத்திலே எமது பாடசாலை மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் அவர்களின் திறமையை எடுத்துக் காட்டுகின்றது.

அதற்குப் பின்னரும் எமது பாடசாலையில் தொடர்ச்சியாக நடைபெறும் பிரவாகம் கண்காட்சியும் மாணவர்களின் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது 2010 இல் நாங்கள் பாடசாலையில் கல்வி கற்ற காலத்தில் அதிபர் இராசரத்தினம் ஐயா தலைமையில் இடம்பெற்ற பிரபாகம் கண்காட்சியில் பல புத்தாக்கங்களை காணக்கூடியதாக இருந்தது. அண்மையில் மறைந்த எமது சித்திரபாட ஆசிரியர் அருள் பாஸ்கரன் அவர்களின் நெறிப்படுத்தலில் வரையப்பட்ட சித்திரங்கள் உருவாக்கப்பட்ட பல சிற்பங்கள் பலரினை வியப்பில் ஆழ்த்தியது. அத்தோடு பல விஞ்ஞான ரீதியிலான பல புத்தாக்கங்களை மாணவர்கள் உருவாக்கியதை காணமுடிந்தது. தொடர்ந்தும் இவ்வாறான புத்தாக்கங்கள் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் மென்மேலும் பாடசாலையில் வளர்க்கப்படுதல் வேண்டும். தற்போது எமது பழைய மாணவர் சங்கமானது மாணவர்களுக்கான பல உதவிகளை வழங்கி வருகின்றமை மகிழ்ச்சியளிக்கிறது.


**உதயராசா ஜீவதைன்**

**(2014 வர்த்தகம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1966 ஆம் ஆண்டின் கன்னி உள்ளக்கமலம் மலரிலிருந்து சில தகவல்கள்

1966 ம் ஆண்டு கல்லூரியின் இந்து மன்றம் வெளியிட்ட கன்னி உள்ளக்கமலம் மலருக்கு சுவாமி. நடராஜானந்தா மற்றும் நல்லாசான் பண்டிதர் செ.பூபாலபிள்ளை அவர்கள் அளித்த ஆக்கங்களில் இருந்து பெறப்பட்ட சில பெறுமதியான தகவல்கள் இங்கு மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. இக்கன்னி உள்ளக்கமலம் மலர் பலரின் கைகளுக்கு கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் இம்மீள் பதிப்பு இடம்பெறுகிறது. அன்று இந்துக்கல்லூரியின் வளர்ச்சிக்காய் அர்ப்பணிப்போடும், இதயசுத்தியோடும் சேவைகள் ஆற்றிய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் மற்றும் நல்லாசான்கள், இன்றுள்ள கல்லூரிச் சமூகத்தினால் நினைவு கூரப்பட்டு மதிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காக இம்மீள் பதிப்பு இடம்பெற்றுள்ளது.

## கிழக்கிலங்கையின் உதய ஞாயிறு

### விபுலானந்த அடிகளாரும் – கல்விப் பணியும்

### சுவாமி நடராஜானந்தா

இன்று விபுலானந்த அடிகளாரைப் பற்றி நாம் நினைவு கூறுகிறோம். அப்பெரியார் மட்டக்களப்பில் தோன்றியிராவிட்டால் கிழக்கிலங்கையின் சரித்திரப்போக்கே விபரீதமாய் இருந்திருக்கும். இன்று கல்வித்துறையிலுஞ் சரி, கலைத்துறையிலுஞ் சரி நாம் ஓரளவு முன்னேற்றப் பாதையில் செல்கின்றோமென்றால் அது அந்தப் பெரியார் தொடங்கி விட்டுச் சென்று பெரும் பணியின் பெறுபேறென்றே நாம் கூறுதல் வேண்டும். அறிவு ஆற்றல்களிற் சிறந்து விளங்கிய அடிகளார் அக்காலத்தில் அதியுயர்ந்த பதவிகள் வகித்திருக்கலாம் ஆனால் அவர் அவற்றை ஒரு பொருளாக மதிக்கவில்லை. "பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே" என்பது அடிகளாரின் சித்தாந்தம். தனது சகோதர மக்கள் கல்வி வாசனையின்றி, வறுமையுற்றுப் பிணியினால் பீடிக்கப்பட்டு, தாழ்வுற்று, ஈன தசைபடைந்து போய்க் கொண்டிருக்கும் பொழுதுதான் மட்டும் உயர்ந்த பதவியையும், சுக போகங்களையும் அனுபவிக்க அவருடைய தூய உள்ளம் இடங்கொடுக்கவில்லை. கீழ் மாகாண மக்கள் கீழ் நோக்கிப் போய் கொண்டிருப்பதை முதன் முதலாக உணர்ந்தவர் நமது அடிகளார் தான். ஆனால் அவர் அவ்வுணர்ச்சியோடு நின்றுவிடவில்லை. அந்நிலைமை மாறுவதற்கு உயர்தரக் கல்வியே சிறந்த சாதனமெனக் கண்டு அதைச் செயல்படுத்த முயன்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1925ம் ஆண்டு சித்திரைத் திங்களில் அடிகளார் ராமகிருஷ்ணமிஸன் கல்விப் பணியைத் திருக்கோணமலையில் ஆரம்பித்து வைத்தார். அங்குள்ள ஆங்கிலப் பாடசாலையாகிய இந்துக் கல்லூரியையும் கோணேஸ்வர வித்தியாலயம் என்னும் தமிழ்ப் பாடசாலையையும் கஜூவூலமாகக் கொண்டு அடிகளார் நிர்மாண வேலையில் ஈடுபட்டார்.

## பண்டிதர் செ.பூபாலபிள்ளை

உயர்தரத் தமிழ் நூல்களைக் கற்றுப் பண்டிதர் பரீட்சையிற் தேற வேண்டும் என்ற விருப்புடைய யாமும் கோணேசர் புண்ணிய பூமியில் அவருடன் சிறிது காலம் குரு குலத்து வாழும் பாக்கியம் பெற்றோம். இங்கு வந்துற்ற எங்கள் குருமணி ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கம் சார்பில் இந்துக் கல்லூரியைப் பொறுப்பேற்று நடத்திய ஆரம்பப் பொற்காலம் அது. அவரும் அவருடன் உறைந்து கற்பிப்போரும் கற்போருமாகிய நாங்களும் நல்ல உறைவிடந்தானும் இல்லாது தத்தளித்துத் தயங்கிய காலம் அது. ஆங்கில ஆசிரியருக்கு முழுச்சம்பளம் கொடுக்கவியலாது எங்கள் குருநாதன் குறைந்த அளவான அரசினர் நன்கொடையைப் பெற்றுத் தலைதடவிய காலம் அது. எங்கள் குருநாதன் அஞ்சா நெஞ்சு படைத்த ஒரு வீரத்துறவி. அவருக்கு அந்தக் காலத்து ஏற்பட்ட தொல்லைகள் அளப்பறிய. இராமகிருஷ்ண சங்க இலங்கைப் பாடசாலைகளின் பொது முகாமைக்காரரும், இந்துக் கல்லுஸரி அதிபரும், எங்கள் செந்தமிழ்ப் பெரும் பேராசிரியரும், பிரபல எழுத்தாளரும், பிரசங்கியுமாக அக்காலத்துத் தொண்டாற்றிய அவர் “என்கடன் பணி செய்து கிடைப்பதே” என்ற உயர்ந்த கொள்கையை உடையவர்.

